# MAYAN'S
# AINTIRAM

**With Tamil texts of Mayan, and paraphrasing with English translation by**

## DR.S.P.SABHARATHNAM

*Published by the*
Vaastu Vedic Research Foundation, Plot A1, H.I.G. Colony, New Beach Road, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.

*Released at the*
Second International Seminar on Mayonic Science and Technology from 25th to 28th January '97 at Thiruvananthapuram, Kerala, India.

VASTU DESIGN & CONSTRUCTION
31662 Highway 91 Hotchkiss, CO 81419-2550
PH. (970) 872-3689 FAX. (970) 872-3691
EMAIL: rvaastu@tds.net
www.vastudesignandconstruction.com

LOANED TO TARA

Published by the

**Vaastu Purusha Publishing House,**
VAASTU VEDIC RESEARCH FOUNDATION,
Thiruvalluvar Nagar, Madras-600 041, India.

*Copies can be had of from*

**Dr. V. Ganapathi Sthapati,**
Plot A1, H.I.G. Colony, New Beach Road,
Thiruvalluvar Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041. Tamilnadu, India.
Phone : (044) 4916563; 413987.

First Edition, January 1997

Copy right reserved @

**Price :Rs.750/-**

*Printed by*
**Sri.S.Krishnan**, Captain Press,
Madras-600 041.
Phone : 413674

*Type setted by*
**The Universal Computer System,**
Chennai - 600 041.

# AINTIRAM

## a cosmological science of Mayan

We have heard of the name of Aintira Vyakarana in our literary works. It is said to have been consulted by Paanini before he did his magnum opus-the Ashtadhyaayi. It is also found mentioned in the great grammatical work of the Tamils namely தொல்காப்பியம் Tholkappiam as "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்" "Aintiram Niraind a Tholkappiam" in the "பாயிரம்" "paayiram", preface to Tholkappiam, meaning that the Tholkappiam is filled with the principles of Aintiram. Another point of reference to Aintiram is that 'Hanuman is said to have acquired mastery over Aintira Viyakarana*. In all these references, I find the name of Aintiram occurring, thereby giving an impression that the work of Aintiram is of very great importance . Added to this, we are clued into its great antiquity. It would be surprising to scholars that there is a Vaastu shastra, known as Aintiram, often consulted by South Indian shilpis, particularly, the Tamils. It is not authored by Indra. What would be surprising all the more is that it is the only available Vaastu Shastra classifying the land spaces into five, namely, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் and பாலை - Kurinchi, Mullai, Marudam, Neidal and Palai - transliterated into Sanskrit as क्रौश्री, मुल्ला, मृदा, घृता and क्षीरा. This classification will remind the scholar of the existence of an epithet ஐந்நிலம் Ainilam, meaning five types of soil. This classification can be seen in the grammatical works of Tamil language also as Kurinchi, denoting the hill and hilly terrain, Mullai - forest and the land around the forest, Marudam - cultivable land, Neidal - sea shore and Paalai - the desert land. But, the Sanskrit texts on Vaastu has given a classification of four land-spaces based on the colour of the soil such as white, red, yellow and

---

* DLA News dated September '96 from the Dravidian Linguistic Association of India (Vol 20. No 9) from Thriuvananthapuram.

black. Later, in the Tamil literary works, we also find another epithet namely நானிலம் 'naanilam' meaning four divisions/ types, perhaps to go with the later day shastraic version. In this Paalai, the desert land is declared as a piece of land where the qualities of the first four Kurinchi, Mullai, Marudam, Neidal are mixed up or lost their individual identities.

Further, there is a reference to the deities worshipped in the five regions, Kurinchi, Mullai, etc. As such, Murugan (Subramanya) is worshipped in Kurinchi, Maayone (Vishnu) in Mullai, Indran in Marudam and Kottravai (Durga) in Paalai. But for Neidal land no specific deity is mentioned for the people to worship, on the land, instead, it is said that the back bone of a big fish is erected and worshipped as symbolic form of god. The last one symbolises the worship of 'Danda' 'Brahma Danda' - the central axis of human body which is according to Agama and Vaastu is Brahma Sutra or Thread of consciousness.

In this context, I would like the scholars to bring before their mind's eye the cluster of five monolithic rock temples of Mamallapuram. These monuments are now enjoying the prestegious status of 'world heritage' classified as such under one of the programmes of UNESCO. We have, in this group five typical temples of the regions noted above, locally known as 'Rathas' and dedicated to the Pancha Pandavas of the Mahabharata. Let us examine them closely and reveal the actual fact that has disappeared from the memory of the Tamils.

The first one called Draupadi Ratha is a hut like temple with a square base, with Kottravai image carved on the back wall of the cell with deer and lion sculptures flanking the central deity, Kottravai. Close to her feet, on both sides, can be found two males of the Paalai region, ready to sacrifice their heads to the deity. The posture is perfect. Just opposite to this shrine 'Simha Vahana', the vehicle of the deity, is carved out of a single piece of rock. The lion motif faces north, perhaps indicating the aspect of the temple and the deity. It would be interesting to note that this Kottravai-form is found repeated in various forms in Pallava temples, in almost all temples of the Pallava period.

The next temple is that of Arjuna Ratha, dedicated to Muruga or Subrahmanya. That this is the shrine of Subrahmanya has to be identified from the image on the rear side of the shrine wall, facing the sea (East) where he is represented as riding on an elephant, perhaps the Airavada. Other forms sculpted on the walls and the Vimana appear to be the sculptural representation of the people who must have lived in the mountainous region. There is no Vahana or the deity put up in the inner cell of the temple. The work is incomplete.

Then comes the Ratha of Nagula-Saha deva, erected on an apsidal plan, with a Vimana as in the Arjuna ratha. There is a massive and monolithic elephant sculpture close to the temple facing south, in correspondance with the orientation of the temple. This is described as Indra Vihara or a temple dedicated to Indra. The cell is carved but there is no deity carved as in Draupadi ratha, nor on the outer wall of the shrine. This shrine is called தூங்கானை மாடம் 'Toongaanai maadam' 'hastiprushta' in the Vaastu texts. From the local version this is a temple of Indra.([11] Why Indra should be worshipped here in the Tamil country?). He is known as Vendan வேந்தன் meaning the lord or king, in the Tamil tradition.

The third temple existing close to Arjuna Ratha, with a rectangular plan and roofed like that of a village cart is again a monolithic temple in the name of Bheema, of very elegant proportion. The temple faces West. This is carved but there is no deity in the cell (garbha griha). Yet there is a lump of rock, looking rectangular and adequate for sculpting the reclining posture of Vishnu (மாயோன்)*. There is no Vahana for this deity. The type of sikhara noticeable in this temple is repeated in myriad forms in Thanjavur district, not repeated outside this region. This is marudam land - agricultural and pastoral.

Finally, there is the tallest and biggest of the group, namely the Dharma raja ratha, which is a Shiva temple. This is also

---

* See Sthapati's book on Temples of space science where the concept of Vishnu image is scientifically interpreted.

[11] This is a word needing elaborate discussion according to Mayonic tradition and its history.

the most beautiful of the cluster, described so far. It is a feast for the eyes of shilpis. The deity to be worshipped here must be Lord SIVA, as evidenced by the sculptures on the walls. This is Pallaveswara griham, according to scholars. This is the temple that should have been worshipped on the sandy sea shore, as evident from the location of Shiva Temple, known as shore temple. The deity inside is Linga, whose ancient name is Danda, Thandu, Sthuna, Thanu, etc. as known in the past. There was no pedestal in the early days, only this 'naala' or 'thandu' representing, as I said earlier, the shaft of consciousness or awareness of animate beings, particularly man.

So, from the discussion, it must be clear, that the five shrines, known as Pancha Pandava rathas are not rathas at all, but five typical temples raised over different regions namely,

| | | | |
|---|---|---|---|
| Kurinchi | - | Muruga | (Subramanya) |
| Mullai | - | Mayon | (Vishnu) |
| Marudam | - | Vendan | (Indran) |
| Neidal | - | Siva | (Siva) |
| Paalai | - | Kottravai | (Durga) |

Why I am referring to good old concepts of temple forms as five, is that there is a kind of Pancha seela* - basic order of five - prevalent in the ancient culture of the Indian race with roots in the Tamil soil. These pentadic forces of the cosmos are taken note of and typical forms created and adored in the spiritual culture.

This pentadic scheme of things in Nature is the underlying theme in Aintiram or Aintira Vyakarana. The word Aintiram literally means 'five designs' 'five fold functions', ஐந்தொழில் Aintholil, meaning Pancha Kritya. In all the objects of nature, Viswakarma the creator of the universe, has implied only this pentadic system, as evident from Pancha bhuta, Panchendriya,

* See Sthapati's book "Vaastu Shastra", redefined, reinterpreted and illustrated released at the Second International Seminar on Mayonic Science and Technology '97 held in Thiruvananthapuram where the scientific significance of the pentadic quality of cosmic forces and creations are expalined.

Pancha loha, Panchakshra (அ,இ,உ,எ,ஒ) Pancha-swara, Pancha Graha (five plantes, since sun, moon and two chaaya grahas are not regarded as plantes). This kind of grouping the basic functions of nature and its creation can be further multiplied. This concept is the underlying predominent element in Aintiram. Etymologically 'Thiram' means power or skill or talent, and ஐந்து Aindu means, five. This may be called Panchaseela - the pentadic order-as found in the functions of the universal being. Hence the Dance of Nataraja is called Panchakritya Thandava or Prapancha Natana, signifying only the "fundamental mechanics-Space" (the pancha kritya).

Aintiram is a grammar of the astro mechanics. Hence it came to be designated as Aintira Vyakarana. My own personal interpretation is that Vyakarna is the correct word for Indian science, because in the Aintiram one can see the grammar of the universe and its spiritual functions in as much as we see in our Vyakarana the material functions of the mundane life. In other words our ancestors have established a harmony between the spiritual and material life on the Earth according to pentadic system.

So what this pentadic scheme of science is and how it is noticeable in the universe and how a replica of these basic functions was created by man, for man to live in harmony with Nature, of which he is part and parcel, must be clear now.

Now you would feel convinced that this Aintiram should have been the basic science of Cosmology, brought down to the level human science and turned into technology for the human mind and hand to creat utilitarian visual forms such as cities and villages buildings and tanks, furniture and vehicles for human wellbeing. These are based on this pentagic grammar or panchaseela. In Tamil it is called ஐந்தியல் Aintial. These are all visuals. On the aural side, the same scheme is brought into reality in the traditions of language, music and dance, collectively called முத்தமிழ் Muthamil, the threefold aspect of Tamil culture.

This Aintiram is the science of India, originated by Mayan, the greatest of scientists that mother India has ever produced.

He is the father of all sciences known to old world, though his name is associated only with art, architecture and townplanning. As a practising architect, builder and sculptor of Mayonic tradition, I would like to make a statement, that in the available Sanskrit works on Art, Architecture and Townplanning, Maya's concepts are expressed completely. What is further interesting is that in the Tamil Text of Aintiram one would find science and technology combined. The concept of Vaastu purusha mandala, on which the whole universe is anchored, is the discovery of Maya or Mayasura. The culture of India is indebted to Maya in all respects. After going into Aintiram, I am able to look upon the entire world, particularly the Indian subcontient as the land of the Mayas, whose name and fame have been sung in high terms by Veda Vyasa, Maharishi Valmiki and Elango, the prince of Chera Nadu, the present Kerala.

I may not be mistaken if I say that the culture of Indian race is confined to three major works of scientific nature. They are Vedas, Agamas and Vaastu shastras. For all these, I find the basic material or substance in Aintiram in full measure. To assess Aintiram and its worth, it is not possible for ordinary minds. It needs scientific temper and deep involvement in our Indian cultural ethos without which Aintiram would remain inaccessible.

My involvement in the practical aspects of Aintiram - the Vaastu shastras - has enabled me understand the super science of Mayan to a large extent, if not fully. Dr.S.P.Sabharathnam also belongs to the same tradition of Vaastu running parallel to another set of scientific work called Agamas. Vaastu and Agama may be described as the two eyes of Indian culture by which one could see the Atman. The emotional outburst of Dr.S.P.Sabharathnam can be well estimated in his prologue. He has translated echoing the spirit of the Mayonic science out of the most difficult Mayonic Tamil (மயத்தமிழ்) which remained unintelligible even to contemporary scholarship for many years. We both have planned further to split them into topics and elaborate in our own language. We also call upon the scientists to do the same against the background of the

knowledge of modern science and establish the unique science handed down to us by Mayan.

Ours will be both in Tamil and English.

I thank Dr.S.P.Sabharathnam for his untiring efforts to bring out the essence of Aintiram expressed in his introductory note and also presenting a readable text of Mayonic science. He deserves enormous support and award of the highest kind for this unique service to the promotion of science and technology of indegenous origin.

This was published in part in the first International Seminar in 1993, now it is a full fledged work, seeing the Second International Seminar at Thiruvananthapuram, where it is to be released.

It is with great pleasure I place this volume - the spiritual treasure of India in the sacred and searching hands of the scholars who have graced the seminar and participated actively in all its deliberations.

I thank the computer setter Sri.T.Jayagandhan of Madras and Sri.V.Krishnan, the Proprieter of Captain Press, Madras for their cooperation and hard work without which the Volume could not have come out in a short period of 15 days.

**— Dr.V.Ganapati Sthapati.**

# ON AINTIRAM

## (an expository introduction)

Dr. S. P. SABHARATHNAM

If at all there could be an ever-relevant and fruitful science capable of revealing the inner structure and inherent nature of a substance without breaking or disturbing its well-knit outer structure, that is the science of Vāstu. In virtue of this unique capacity, the science of Vastu turns into the science of creation and creative order related to both the macrocosmic and microcosmic plurality, and innumerability. It is the science of space and spatial designs, of time and timal designs. It is the science of mathematical order, which is in reality, the modified version of time and timal divisions. It is the science of harmony and hormonious designs, of rhythm and rhythm bound construct. It is the science of number and numerical order, of letters and orthography, of proportions and proportionate limbs/parts/constituents. It is the unique science which aims not only at creation, but also at meticulous preservation and maintenance. overcoming the possibility of destruction, it leads us to the point of eternal existence.

The originator as well as the expounder and enricher of such an effective and exalted science was Mayan, who was both Rsi of matchless spiritual vitality and a vijnanin

of unrivalled scientific and technical skill. As a Rsi he had known all the essential principles and subtleties of cosmic structure and worldy creations through deeply settled mentation and introvert penetrations. And as a vijnanin, he had set forth in detail all the scientific principles and technical processes. As the supreme Master-architect he beautified and embellished the whole stretch of earth with his wonderful creations and as the supreme master of Lingual science, he enriched both Tamil and Sanskrit with his original scriptural works, full of scintilating concepts and shimmering truths.

To the credit of Mayan, there are about 60 works in Tamil, as available now. Apart from Mayamata, there are some more works such as Mayāgama, Maya Vāstu, Silparatnakara, etc, all of them in Sanskrit, ascribed to Mayan.

The present work AINTIRAM which is aphoristic in character, and whose complete text is now rendered into English and presented for the first time, is by virtue of its subject matter and scientific contents, the fundamental KEY-WORK, inevitable and essential for the study of Mayonic order/science. It is the very basic scripture for the study of the entire range of Vastu Sastras.

**Aintiram - how it has been designed :**

This work consists of 892 aphorisms (sutras) all of them being in archaic style, indicative of its unquestionable antiquity. But these aphorisms are in continuity, not grouped according to the subject matter, nor variegated into distinct chapters. Perhaps, Mayan could have indited them in different systematic order and the present order might have been due to the process of transmission from the master to the disciple.

But this does not mean that the present work is unsystematic. Since each aphorism is a complete work in

itself due to its wealth of content, due to its brevity full of suggestions and implications, the reader can commence the study of Aintiram from any aphorism. But this much is certain : whether he starts from the very first sutra or from any other sutra, one single, peripheral reading is not enough to understand the exact purport and potentials of the sutra. Each sutra calles for repeated reading and rumination. And as far as the translation & paraphrase is concerned, it is only trying to indicate the content of the sutra; it does not provide any explanatory or expository note by Maya himself, launch to undertake the systematic study of this work.

The subject matter dealt with in this work could be stated through the words of Maya:

> "This work called Aintiram, has for its ultimate motive the delineation of the essential features of forms, after having scrutinised the fundamental concepts of space and time and diligently analysed the nature of the ultimate principle (mula) and light and impeccably realised the characteristics of cosmic structure and cosmic space" — A:32

> "This work is of the nature of expounding the characteristics of letter, word and the content (object); of systematically delineating the characteristics of structure and ornamentation" — A:36

> "This work known as Aintram purports to explain systematically the subtle principles of the creative basic sound 'OM'; it aims to offer more details on the intricacies of that basic sound; it addresses itself to present in a complete and comprehensive way the features of space, time, rhythm, form and the universe" — A:42

"This work Aintiram, deeply ponders over the feature of unmanifest and manifest sounds and analyses with deep insight the features of sound, space and the mutual relationship existing between them; it explains the characteristics of five aspects - space, time, rhythm, form and matter" — A:43

"Scholars have known the co-ordinated and correspondent role of consonants and vowels, forms and their intrinsic expressions, and they are capable of knowing the dynamic energy of Primal Space, and the rhythmic movements of time encased within the given form. Having understood that energy is inherent in the winds synchronising with time units, that are in orderly movement, they have known the features of 64 squares latent even in the movement of time. Following in their footsteps, having analysed the unified structure of body and having known how the five gross elements are related to the body and known the dynamism and energy of Primal space, I have explained in this work to some extent, the methods of creating body and form" — A:409

"Having scientifically sifted the nature of five gross elements and the interaction between them, having analysed both the right and left orders of existence, having realised the nature of Primal space — having realised the nature of pentadic manifestation based on fivefold substance, fivefold aspect and fivefold stream, the architect should understand the fundamental truth behind any construction.

In order to accomplish these I have expounded through a scientific way the proper method

> and system of applicable for creation and construction having realised them by my own inner vision and by my knowledge about the eight pronged directional gravitation" — A:428

To put it precisely the central themes, repeatedly explained from various perspectives in this work are: 1) Primal Space Source, 2) Time, 3) Rhythm, 4)Form/ Structure and 5)Matter. That is why this work has been named as 'AINTIRAM' meaning the five energetic creative factors.

Maya expatiates upon these five factors through the science and technology of four sided frame consisting of 64 squares, its central space, primal dot-centre of the central space, eight-unit dynamism, variant positions and modifications assumed by the frame of 64 squares, swift movement of time occurring at the central dot, operative process of time at the bordering spaces of the frame of 64 squares, creative function of space-time continuum, creative identity and inseparable relationship between sound energy and light energy, space and time and consequently between these and the frame of 64 squares, the effective participation of numbers and letters in each and every phase of creation and such other related principles.

The most important scientific theme ensouled and explained in this work is the concept of microbode, the basic space-cube which gives rise to the emergence and existence of Primal-Space, time, rhythm, form and matter. In relation to the microbode, Maya expounds an absolutely scientific theology centered on the imagic forms of Nataraja, Samaskanda and Daksinamurti. These forms are explained by Maya absolutely based on the science of manifestation and that of FORMS. This unique and original treatment, as enunciated by Maya leads and guides us to conclude that all other forms such as Gangadhara murti, Tripura-samhara murti, Sarabha murti, etc. are also essentially

based on the science of manifestation and of form, and they are not based on mythological fabrications. It is a matter of absorbing interest and inspiration to note that either in Aintiram or in any other works of Mayan, we do not find a single reference to mythological incidence or incarnation. Nataraja, Samaskanda and Dakshinamurti, as we find in the Aintiram are not religious Gods. They are the Lords of Supreme space-science who are introduced and explained in this work in terms of luminous energies. This is one of the substantial evidences to prove that Maya's Aintiram and other works are anterior to the emergence of the Vedas (as available now) Aranyakas and the Puranas.

A brief analysis of the subject matter dealt with in this work is presented here to provide a fitting background, sufficient guidelines and appropriate method of approach for a comprehensive understanding of the important principles enshrined here.

**Inner space and inner consciousness :**

The basic and vibrant point of emergence or manifestation is one's own inner space, inseperably associated with vibrant consciousness. It feels; it is in constant pulsation, it conceives, it wills to become manifold and to manifest. It is the radiant consciousness in which the heat and warmth of causal fire-source is always present. Maya frequently speaks of this fire of inner coscious space. This is the most basic and essential source of creation. By creating the same source in exact similitude in outer space, Maya sets forth the directions for the constructions of auto-vehicles, air-crafts, ships and so forth. The radiant and vibrant consciousness is the inexhaustible source of forms and structures. To the extent one realises the inner space of consciousness he could realise the energetic features of outer space and space fields.

**Maya states :**

> "The process of analysing the characteristics of space is, strictly speaking, seeing with pointed attention the efficacy of inner space in which all the manifestations and involutions of space cluster themselves" — A:54
>
> "Only those who possess the meritorious power of inner vibrant consciousness, become powerful in executing the task in an orderly way. Such persons would hold under their control not only the earth but also other worlds existing in space" — A:78
>
> "Only the inner vibrant consciousness which gushes from the depth of heart absorbed in mediation on a particular form, assumes the form of inner light and then manifests itself externally in a concrete form. Only the same inner vibrant consciousness bestows an everlasting excellence on that particular concrete form" —A:306

This inner consciousness is of the nature of effulgent light which evolves into supreme intelligence and imparts the potential states of distinct creative sources. (180)

The seed-space that is inner consciousness contains within itself the entire range and plethora of cosmic structures and substances. Whatever is present in the outer space is within the inner space. It is such simultaneous and identical existence that results in cosmic harmony and rhythm. The great sages, seers and yogins experience such identity and harmony. Equally so are the sthapatis who are spontaneously awakened to this kind of awareness of cosmic identity. Without this forceful identity, they cannot bring out charming and soul-inspiring creations. And it is the identity that kindles Maya to state:

> "The microcosmic structure is in total identity with macrocosmic structure" —A:150
>
> "The supreme space which is throbbing every moment to express itself out, has its distinct manifestation in the sculptors, mind" —A:80
>
> "Through the power of inner consciousness, the knower of Vastu should know about light aspects and sound aspects of OM, pertaining to both inner space and outer space" — A:191

Maya goes to the extent of saying that those who do not realise the creative dynamism of inner space cannot know the dynamism of outer space (195) (831). The working pattern of the squares of manduka mandala (64 squares) is the same as that of inner consciousness. This is the principle to be essentially kept in mind.

**The Pentadic scheme :**

Being a contemplative scientist of supreme order Maya conceives the entire cosmic structure as manifested through fivefold development (ain-neri). There are five sources of manifestation(ain-kalai); five kinds of basic materials for creation (aim-porul) ; five kinds of emergence (ain-tiram); five strata, each stratum consisting of five factors (ain-nilai); five basic sound energies (aiyoli); five basic luminous energies (aiyoli); five fold musical notes (aintisai)

There are five coverings for the soul; five instruments of action; five instruments of cognition; five subtle elements; five gross elements; five vital airs in the body; five supportive airs (upaprana); five kinds of time-units corresponding to the movement of cosmic sphere and the movement of inbreath and outbreath.

The correspondence between spatial dimensions is of five kinds.

Most of the sutras of Aintiram should be understood against the background of this pentadic scheme.

**Dynamism and role of eight in cosmic creation and structure :**

The pentadic scheme gradually leads to the effective operation of octo-process. Maya sees the structural dynamism of number eight in each and every plane of cosmic formation, in each and every existent of this world and other worlds. Every buildings/every sculpture is effected through the systematic observation and application of the dynamism of 8 units. Maya is of the view that every growth gets fulfilled by eight constituents, developed in five stages. This view is established by the table of space-measure and time measure

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | 8 paramanus | = | 1 chariot dust |
| 2 | - | 8 chariot dust | = | 1 immi (very minute grain) |
| 3 | - | 8 immis | = | 1 sesame - seed |
| 4 | - | 8 sesame seed | = | 1 paddy-grain |
| 5 | - | 8 paddy grains | = | 1 angula |

(It is in this way, angula becomes the fundamental unit)

Since each essential structure of cosmic order is manifested in terms of eight, Mayan declares:

> "Space is eight fold; earth is eightfold; energising factors of soul are eight in number; luminous elements of body are eight in number; souls are in eight groups; substances are in eight groups....." (872)

Based on his keen observation on and systematic analysis of the cosmic substances and structures, Maya propounds a unique concept, i.e., the concept of one single unitary substance with eight units of division, each unit divided into eight. This unitary substance is the very basic for any structure or construct. According to Maya this substance, being tridimensional, is with a self-spin resulting in variation or modification of its structural state. Because of this variation/modification the number of unit, i.e., 8, is increased by one without any increase in volume or mass of the substance. This variation effected by self-spin into the unitary substance is known as pranava (பிரணவம்). It is this variation due to spin that gives eternality to the substance. Innumerable designs are effected by this variation.

Due to the dynamism of space and to that of 8-unit substance, the form conceived in the inner space is expressed out with relevant rhythmic proportions (328). That is why, in all the Agamic and yogic scriptures, the inner space of heart has been described as to be in the form of eight petalled lotus.

One unitary substance associated with eight units is the exact formal expression of each divinity, according to the Agamas. If the unitary substance is equated with the primal deity, eight units are equated with its corresponding eight forms. For example, in the case of Siva temple, Siva is represented by the unitary substance and his eight forms- namely Bhava, Sarva, Ugra, Rudra, Mahadeva, Bhima, Isana and Pasupati are represented by eight units.

As a collective whole, Siva is one, his eight forms being unified with Him (one with eight).

As a distinctly manifest Divine, Siva is one surrounded of his eight forms. (one added with eight = 9)

Distinctly manifest Divine is, OM

That is why Maya propounds the theory that OM, i.e., Pranava is the variant state of eight that is, 9.

Since the same concept is applied to each divinity, especially at the time of installation (pratistha) it becomes obvious that, each substance and substantial source is associated with the dynamism of eight.

## The science and technology of manduka mandala (E8 x E8)

That dynamism of 8 units leads to the manifestation of four-sided frame consisting of 64 squares. In the science of Vastu, the frame of 64 squares is called manduka mandala (tavalai maneri - in Tamil). Because of its leaping character and because of its inseparable association with sound and light energies in one and the same plane, this frame of 64 squares is significantly called manduka (frog).

With all certitude, it could be reasonably maintained that Maya was the one and only scientific architect who expounded the scientific and technical principles of the manduka mandala and who established its fundamentality for all other mandalas from sakala to indrakanta.

To sum up the principles of the frame of 64 squares as expounded by Maya in this work :-

The frame of 64 squares is the graphic and atomic structure of the whole cosmos.

It is the basic design of inner space and outer space enclosed space and built space.

It is the modified version of pranava OM

The exact centre of the frame of 64 squares is called primal dot (mūlap-pulli).

This Primal dot, is actually, square in shape. Even within this squaric dot, there is the presence of 64 squares.

Within this squaric dot, there occurs the speedy gyration of time. This gyration spreads over the entire field of manduka mandala. The points at which time is in vertical movement are called the points of stable time (technically known as **marmas**) At the bordering lines of the frame, the gyration of time is in slow phases. Whereas the central squaric dot denotes the smallest unit of time, the boundary line of the frame denotes the greatest unit of time.

The squares lying around the central squaric dot are collectively called inner space (aka vin). (This inner space is technically known as **brahma sthāna**)

Like the central squaric dot, each square-space is associated with 64 squares, and squaric dot at its centre. In this way, we get 64 squaric dots, each dot having 64 minute squares within its minutest frame. This process of proliferation goes on for ever.

(The central squaric dot is also called bindu and bindu grha or garbha grha, in the Agamic treatises)

It is the bindu or primal squaric dot that gives rise to the emergence of FORM and structure.

Each squaric dot and each square-space gets identified spontaneously with appropriate luminous force and sound force. By luminous force and sound force, Maya actually means the relevant pada devata. Luminous force denotes the actual form of pada devata and the sound force denotes the exact name of the pada devata. In actual practice as far as a deity is concerned, its dhyana sloka is the luminous force and its mantra is the sound force.

Each squaric dot and each square space is associated with number and letter, with particular mathematical order and rhythm.

These are the factors to be taken. into consideration while building a construction.

The whole area of the frame of 64 squares becomes the field for the creative operation of both space and time.

It is the field for the operation of eight directional pulls.

The whole frame is, in an imperceptible way, with a spin or movement.

The position assumed by the frame after the spin is known as the direct'on of eternality and completeness. (then-in Tamil). This direction is non-relative, whereas other eight directions are relative. The frame of 64 squares is elevated to the frame of 81 squares due to the spontaneous spin.

The frame of 64 squares is also known as the unmanifest OM; and the frame of 81 squares is also known as the manifest OM.

Owing to the orderly process of amplification, the frame of 64 squares gets elevated upto the frame of 32x32 squares and owing to the systematic process of reduction, it descens down to the frame of sakala pada. All the vastu mandalas are governed and regulated by the presence of manduka mandala.

The frame of 64 squares, apart from being in perfect square shape, may assume any geometrical form. The forms being assumed by the manduka pada are as innumerable as the countless forms and structures with which the worlds are replete.

There is ever existing co-ordination between the frame of 64 squares, space and time.

All the existent and all the souls, either of this world or other worlds are ingrained with the frame of 64 squares (manduka mandala). It is of the nature of trans-cosmic penetration.

This frame serves as the fountain head of creative and performing sources and by virtue of this feature, it is the manifesting factor of sculpture, drawing, music, dance, orderly speech, languages, scriptures and so forth. Infact, it is called the primal letter (mutal eluthu).All the letters origninate from this. The perfect performance of any art or any work is due to the perfect squaric formation of this mandala of 64 squares in one's own inner space.

The Aintiram could be succintly described as the Veda, mainly dealing with the science and technology of manduka mandala.

**MICROBODE :**

In actual practice, the frame of 64 squares is applied by designing it horizontally. In truth, it is applied appropriately for the vertical elevations also. The frame is not only squaric, it is cubic as well. The minutest, condensed, cubic version of the frame of 64 squares is known as microbode (citravai - in Tamil, daharakasa in Sanskrit). It is of great wonder to know that Maya was the first and the only Silpa Rsi who introduced this microbode with all its scientific and technical profundity, to the world of image and forms, and to the world of humanity.

As Mayan has ascertained, the entire extent of space-field is filled up with microbodes. Microbode is the space-foetus which gives rise to the formation of the temple of man (manusyālaya) and to that of God (devālaya). Each

microbode is thickly packed with innumerable frames of 64 squares. The exact centre of the microbode is in constant vibrancy. The central thread passing through this centre is called luminous thread or thread of consciousness (oli nul or unar nul). This is what is technically called brahma sutra. The constant vibration of this luminous thread is conceived as the cosmic dance and the luminous thread is conceived as the cosmic Dancer (Nataraja; Ādavallan, or Ādalan according to Maya)

All the characteristic features and efficacies of the frame of 64 squares, as mentioned earlier are equally applicable to the microbode. **Everything is microbode which is the container of everything.** We cannot conceive one which is not present or contained in the microbode. The very existence and expansion of the universe and of space and spatial orders is due to the constant vibrations of the luminous thread of the Microbode. This vibration itself is the undivided wholeness of time and its frequencies result in innumerable time-measure and/or space-measure. The central luminous thread is the ultimate wielder of time. This principle is actually put into practice. We, as the traditional practitioners in the sacred activities of Siva Temples, adore Nataraja (the luminous thread of consciousness present in the microbode) as "Kalacakra Pravartakah" — meaning, the one who wields the clusters of time units and time divisions of various planes."

As we learn from the Aintiram, the Microbode, manduka mandala, Nataraja, OM-sound and OM-light, Space and Time should be viewed collectively, as co-present and co-operative, as co-existent and co-eval. All these and the associated factors are in one unit whole.

**Space :**

Mayan's views on space are most elucidative and informative. According to him, space is the most basic,

creative seed-source which is ever vibrant, which is inexhaustible and which is manifesting itself into space-fields and spatial forms. As far as the science of space and creation is concerned, we could reasonably maintain, based on the works of Mayan, that Tamil is the most scientific language. In fact, Mayan frequently uses the term Tamil to denote the language meant for blissful expressions, to denote the creative sound-source.

There are two words in Tamil to denote space- **veli** (வெளி) and **vin** (விண்). The etymological meaning of **veli** is to manifest, to emerge out, to be in purity and clarity. Vin means to be in vibrancy, to pulsate, to throb (விண்விண் எனத் துடித்தல் தெரித்தல் — frequent usage in Tamil). The Sanskrit equivalent 'akasa' is not so expressive of such meanings as veli or vin. The Tamil word (வியன்) 'viyan' means the vast expanse. Viyan is the equivalent of 'akasa'. In view of creative function and creative source Mayan uses 'veli' to denote the entire area of vastu mandala and **vin** to denote the constituent square.

The manduka mandala, conceivable with the greatest area possible, is the space; and the manduka mandala, conceivable with the minutest area possible is the microbode. Space is **peravai** and microbode is **citravai**.

Space is not only the source of creation and manifestation but also the life-sustaining source.

If seeds of a particular tree or plant are sown, we observe that some of the seeds are not sprouting. What is the reason? The Sarvajnanottara Agama states: "Each seed is associated with the aspects of earth, water, fire, air and space. That seed, in which the space-element is not present, does not sprout". This proves that space is the source of sprouting or creation. The plant or tree in which capilarity does not function well, does not grow well. This means, capilarity or space-tunnel is the source of growth and sustenance.

Space is inseparably associated with the frame of 64 squares. The design of manduka mandala of the space contained in a particular seed decides and defines the structural features of form sprouted from the seed.

The word 'mulam' very frequently occurring in the text, is synonymous with the word 'veli' or space.

**Time :**

Mayan defines Time as the vibration of space. In Mayonic science, space-measure is equal to time-measure. Space and Time are co-extensive, co-eval and co-present. Like sound and light, they always move hand in hand. The modern physics propounds the view that Time is the fourth dimension of the universe. This view is untenable to the science of Vastu. Because, the dimensions of any construction or any image are, indeed, the units of time.

The Tamil word for time is Kalam. Again, this is also a scientific term. The etymological meaning of the term 'kalam' is to put forth, to give rise. Since it is only the vibration of space that puts forth or gives rise, the vibration of space, is reasonably called 'kalam'.

In Mayonic order, 'imai' is the smallest unit of Time and ūli (ஊழி) is the greatest unit of Time. The dust raised by the movement of chariot-wheels which symbolises Sun and Moon, (by the movement of which we calculate time) denates the smallest unit of Time. The flag, which is the highest point of the chariot denotes the greatest unit of Time (ஊழி). This is the exact meaning, when Mayan speaks of the Time of chariot-dust (தேர்த்துகள் காலம்) and Time of chariot-flag (தேர்க்கொடிக் காலம்). That is why Mayan calls it Timal Chariot (காலத் தேர்). Each and every member of chariot denotes each and every manifestation of space and time.

As Aintiram explains, not only the chariot, all the images, forms and constructions as well denote the entire span of Time beginning from imai and ending with ūli (ஊழி). The central squaric dot of the mandala, upon which the image or building denotes the smallest unit of time.. The crown of the image or the finality of the buildings denotes the greatest unit of Time. So each structure or building is the modified version of undivided Time; each is a time-beam (காலத்தூண்). The central thread (brahma sutra) of the structure or building is a primal-beam (மூலத்தூண்). So the world is full of time-beams and primal-beams. Is it not the soul-inspiring unitive vision, attained by the yogins after a long period of continued meditation? But the Mayonic order enables us to attain this unitive vision, through the simplest means possible! This is the Mayonic Wonder.

**He extolls the greatness of Time-God :**

> "It is the Time that creates; it is the Time that maintains; it destroys; it conceals; it sets right the discordant and improportionate aspects and effects purity; it makes the fruits fructify; it stabilises; it assimilates; it provides an effective and great path; it brings into effect a supreme and sacred form" —A:815

As Aintiram puts it, it is the Time that functions in every living being as inbreath and outbreath. Time and wind are equated. Kal is the root-wood for kalam (time) and Katru (காற்று).

**Other details :**

Apart from the concepts explained above, Mayan very often speaks of number and numerical order, letters, orthography, sound and light aspects of letters, sound and light energies of audible and inaudible words, grammatical subtleties, the mellifluous and pleasing

efficacy of Tamil language in expressing the scientific and technical subtleties, the emergent pattern of Tamil language in five phases where the word Tamil is used in verbal form, science of phonemes, musicology, and musical subtleties, orthographic sculpture, musical sculpture, orthographic drawings, musical drawing, dance and its varieties, Cosmic Dance and the significant principles behind it, house designs, space-craft, ship-building and many such matters. Mayan makes mention of Kumari-continent, Mahendra mountain, Pahruli river etc.

Aintiram speaks of six energy-centres (ādhara cakaras) of human body and technique of breath.

There are many references to his earlier works such as Peru nata-cennul, Vinkala-cennul, Oviya-cennul, OM-marai, Aim-marai and so forth.

The Aintiram is the 'magnum opus' of Mayan. The subject-matter and the compact texture of the work impel me declare that this is the hymnal outpouring on the manduka mandala, microbode, space and time. In the domain of scriptures, I do not find any other equivalent to this wonderful work.

**Pre-requisite for the study of Aintiram; fruits of the study:**

Such a great work of unique significance and originality should be reverentially studied and systematically understood. Maya himself states how the reader should train himself in a befitting way to study this important work :

> "This work Aintiram is to be studied by a person who has already gone through varied works on multifarious themes and understood them without doubt and distortion and grasped the

> concrete exegenisis of those works and who has attained mastership over varied art-fields"
>
> — A:30

This means, the devoted study of Aintiram could be possible only for a person who has already attained basic knowledge of language, grammar, Scriptures dealings with the art of music, dance, sculpture, drawing, Scriptures dealings with the science and technology of building, of vehicles, and the Scriptures dealing with the science of imagic and graphic designs. It may be asked : if a person is already conversant with all these, then where is the need for the study of Aintiram? Yes, there does prevail the essential need for this study. Aintiram is the basic Key-Work which is capable of unravelling and demystifying the basic scientific and technological principles of these varied arts and sciences. It is the perfect work, which perfects our faculties in such a way as to perceive the imperceptibles, to know the unknowables, to hear the unheard and inaudibles and to see the unseen. The ultimate fruit of the slowly-phased and devoted study of Aintiram is to be rewarded with supreme cosmic consciousness, to transcend the inter-contradictory levels and layers and to station oneself at the point of unitive vision.

## With endearment and gratitude

I could have lost sight of very important and illuminative scriptural wealth, had I not been entrusted with the task of translating the Aintiram into English, by Vāstu Vijnani Dr. V. Ganapati Sthapati. He inspired me study the important works of Mayan. This study enabled me understand some of the subtle concepts enshrined in the Agamas; guided me realise the scientific background of the Agamic and Vāstu activities.

With dedicated spirit I offer the choicest words of endearment and gratitude to both the Maya Rishis - May, the originator and expounder of Vāstu Science and Dr. V. Ganapati Sthapati, in whose words, spirit and works I perceive Maya Rishi himself.

**Dr. S.P. SABHARATHNAM.**

# ஐந்திறம்

# AINTIRAM

## நூற்பா

(Verses in Sutra-form)

ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓம்என விளம்பற் பாற்றே (1)

மூல ஒளியாக விளங்கும் முழு முதற்பொருள், அனைத்திற்கும் அப்பாற்பட்டதான மூல வெளியிலிருந்து உண்டாக்கிய நுண் ஒலி, ஓசையாக எங்கும் வியாபித்து நிறைகிறது. அந்த மூல வெளியாகிய அறிவுப் பெருவெளிக்கு உரியதான ஒலியே 'ஓம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதற்கு உரியது.

The subtle sound created from the transcendental pure space by the Primal source of cosmic effulgence (light) pervades throughout the cosmos through its various phases of emergence. That subtle sound becomes characteristically and specifically known as "OM" which pervades throughout the conscious space.

நிறைமொலி நேரொலி வெளியொலி விண்மொழி
மறைமொலி ஓம்என வழுத்தற் பாற்றே (2)

எங்கும் நிறைகின்ற ஒலியாகவும், எங்கும் பொருந்துகின்ற ஒலியாகவும், பரமாகாச ஒலியாகவும், பூத ஆகாசத்தின் துணையால் உருவாகும் வாக்காகவும், மறைந்து விளங்கும் நுண்

பொருளை உள்ளடக்கி இருப்பதான வித்து ஒலியாகவும் (பீஜாக்ஷரமாகவும்) விளங்குவது ஓம் என்று போற்றி உரைக்கத் தகுந்த நிலையில் பிரணவம் விளங்குகிறது.

நிறை – நிறைதல், வியாபித்தல்
நேர் ஒலி – பொருந்துகின்ற ஒலி ; சிவனும் ஒலி

The pranava "OM" is in such a celebrated state as to be specifically described as all-pervasive sound (நிறைமொலி), all-reaching sound (நேர்ஒலி), the sound of transcendental space, articulated sound through the media of elemental space (விண்மொழி), and the seed-sound pregnant with hidden and subtle implications (மறை ஒலி).

மறைமுதல் ஒலி 'ஓம்' அறைதல் மரபே (3)

மறைபொருளை உள்ளடக்கி இருப்பனவாகிய நூல்களுக்கு மூலவாக்காக ஓம் என்பது விளங்குகிறது எனக்கூறுதல் தொன்று தொட்டு வரும் மரபாகும்.

The uninterrupted tradition holds that "OM" shines forth as the primal word-source for the sacred scriptures (replete with subtle truths).

மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே (4)

எல்லா மொழிகளுக்கும் மூல ஒலியாக ஓம் என்பது வழிளங்குகிறது எனக் கூறுதல் தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

According to the postulation held by the uninterrupted lineage of enlightened persons, "OM" exists as the primal sound-source of all languages (irrespective of spatial limitations)

அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம் (5)

மிக நுண்ணிய நிலையில் எழுந்த ஒலியே, அணுக்களின் திரட்சியால் உந்தப்பட்டு எழுத்தின் சிறப்போசையாகப் பரிணமிக்கிறது.

The sound which emanated in a very subtle form from the transcendental pure space, being impelled and brought down to the sphere of mundane world by the subtle (atomic) forces, evolves into a specific sound of a letter.

வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறும் குறியெழுத் தென்ப (6)

தூய்மையான அல்லது அதீதமான வெளியிலிருந்து இயல்பாகத் திரண்டு எழுந்த நாதமே தன் இயல்பாகவே உலகில் அந்த அந்த இடங்களின் இயல்புகளுக்கு ஏற்ற வகையில் பல்வேறு மொழிகளாகப் பரிணமித்து, ஒன்றைக் குறித்து எழும் வடிவெழுத்தாக உருக்கொள்கிறது.

The sound which emerged in a collective way from the pure space, evolves itself into variegated sound patterns of words and languages according to the nature of the world and assumes the symbolic forms of letters.

குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே (7)

ஒன்றைக் குறித்து எழுதல், அடையாளமாக எழுதல், வரையப்படும் நிலையில் உருப்பெறுதல் - என மூன்று நிலைகளில் புலனாகும் வண்ணம் எழுகின்ற காரணத்தால் எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லப்படும்.

Because it is emerging (rising) (i) to indicate a thing or substance, (ii) as a symbol and (iii) to assume the state of being indicated in a written form it is called *eluttu* (எழுத்து).

## NOTE

Here, Mayan speaks of three states of evolution of a letter and gives the meaning of the term eluttu (எழுத்து) in a very significant way, not to be seen in any other grammatical works in Tamil. He derives the term eluttu (எழுத்து) from the verb elu (எழு) — to rise up or to emerge.

He conceives three states in the process of rising or emerging - *kuri, kuriyidu* and *varaivu.*

Kuri denotes the process of indication;

Kuriyidu denotes the function of a symbol;

Varaivu denotes the form of a letter.

Since it rises up to indicate as a symbol in the form of a written letter, it is called eluttu (எழுத்து).

ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே (8)

ஒலிக்கும் இயலாகவும், குறித்த பயனை உளதாக்கும் இயலாகவும், வடிவத்தின் இயலாகவும், நிறத்தின் இயலாகவும், ஒளியின் இயலாகவும் ஆக ஐந்து நிலைகளில் எழுத்தின் இயல்பு விரித்துச் சொல்லப்படும்.

வரி – வரித்தல் = பயன் கொள்ளல்

உரு என்பதற்கு இங்கே நிறம் என்று பொருள்

ஒளி என்பது அந்த அந்த எழுத்தை நிலைக்களமாகக் கொண்டு செயல்படுத்தும் (அதிட்டித்து இருக்கும்) சக்தி (energy).

The characteristics of a letter are cognised and expressed through five states: sound, intended purpose, form, colour and light.

## NOTE

Here, vari (வரி) denotes varittal (வரித்தல்), i.e. to effect the intended purpose. *Vari* does not mean here line. What is meant by light here is the resplendent energy of each letter.

எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்தும் ஐந்தியல் முறைநெறி வழக்கே (9)

எழுத்து, எழுத்துக்களால் ஆகும் சொல், சொல்லால் உணர்த்தப்படும் பொருள், உருவாக்கப்படும் அமைப்பு அல்லது வடிவம், அதற்கு அமைய வேண்டிய அலங்காரம் எனப்படும் ஐந்து இயல்களும் போற்றப்படும் நிலையில் முறையாகவும் நெறியாகவும் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

## விளக்கம்

எழுத்து அக்ஷரம் என்று கூறப்படும். அக்ஷரம் என்றால் அழியாதது. மூலப் பொருளாகிய முழுமுதற் பரம்பொருளும் அழியாததே. எனவே எழுத்து, மூலத்தைக் குறிக்கிறது. எழுத்து சொல்லாக வடிவு கொள்வதற்குக் காலம் அவசியம். எனவே சொல், காலத்தைக் குறிக்கிறது. சொல் முறைமைப்படி அமைந்தால்தான் பொருள் விளங்கும். இந்த முறைமை என்பதே சீலம். எனவே பொருள் என்பது சீலத்தைக் குறிக்கிறது.

கட்டு என்பது கட்டப்படுவது ; உருவாக்கப்படுவது. கட்டுப் பாடுகளின் அடிப்படையில் எழுப்பப்படுவது ; கோலப்படுவது எனவே கட்டு என்பது கோலத்தைக் குறிக்கிறது.

அணி என்பது அண்ணி இருப்பது; அதாவது அது அதற்கேற்ற முறையில் பொருந்தி நின்று அழகு செய்வது. கட்டு என்பதற்கு அமைய வேண்டிய அணி, கோலத்திற்கு அழகு ஊட்டுவதன் மூலம், கோலங்களின் குவியலாகத் திகழும் ஞாலத்தையே அழகு செய்கிறது. எனவே அணி என்பது, அதனால் அழகு பெறுவதாகிய ஞாலத்தைக் குறிக்கிறது.

எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி எனப்படும் ஐந்திறங்கள் வாயிலாக மயன் மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் எனப்படும் அடிப்படையான ஐந்திறங்களையும் பெற வைக்கின்றான்.

கட்டு என்பது செய்யுள் இலக்கணத்தையும் அணி என்பது அணி இலக்கணத்தையும் குறிப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது.

Letter, word, substance, creations based on codifications and order, ornamentation pertaining to the creations - all these five aspects have been imparted from the age-old period by the uninterrupted lineage perfectly and methodically.

## NOTE

This is an important sutra of Mayan, in which we notice the unique concepts conceived by him.

Ornamentations applied to the creations render perennial beauty to the world itself. Hence ani or ornamentation denotes nalam (ஞாலம்).

ஐந்தியல் மொழியாய் எண்ணிலை எழுத்தாய்
வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம் (10)

எல்லாக் கலைகளின் நுட்பங்களையும் முறைப்பட அறிவிக்க முந்தும் செந்தமிழ் மரபு, மேற்கூறப்பட்ட ஐந்து இயல்களையும் உள்ளடக்கியதான மொழியாகவும், எண்ணின் நிலையாகவும் எழுத்தின் நிலையாகவும் பண்டைக் காலம் முதல் இடையீடு படாமல் வந்து கொண்டிருக்கும் மரபாகும்.

(வெறும் மொழி என்ற அளவில் மட்டும் மயன் தமிழை ஆராயவில்லை. மயனைப் பொறுத்தமட்டில் தமிழ் என்பது மூலம் முதல் ஞாலம் வரை உள்ள ஐந்து இயல்களையும் உள்ளடக்கியதே. மூலத்தின் இலக்கணத்தை மொழிவது மொழி ; அது தமிழ். எனவே தான் முந்து செந்தமிழ் என்று மயனால் சிறப்பித்துக் கூறப்படுகிறது).

In the form of language with specific characteristics of the above mentioned five aspects, in the form of number-pattern and in the form of letter pattern, the Tamil tradition, which is forever in a state of readiness to express the subtleties of all arts is flourishing from time immemorial, without any interruption.

## NOTE

The unique concepts enshrined by Mayan in his immortal works are five: mulam, kalam, silam, kolam and nalam (மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம்).

Letter, word, substance, creation and ornamentation denote by way of implication *mulam, kalam, silam, kolam* and *nalam* respectively.

Mayan does not deal with the grammar of language as such. With the consummate perfections of dexterity concerned with his profession, he exquisitely deals with

the grammar of *mula vastu* itself, which expresses itself through kalam, silam, kolam and nalam.

Eluttu denotes aksara which is a synonym for the Absolute. Hence, eluttu indirectly refers to mulam.

Word arises from letters through the interplay of time. So word denotes kalam.

If at all a word is to denote a substance or thing, it should be in an orderly form. So substance denotes order or silam.

Kattu or creation comes into existence with aesthetic values based on orderliness. Hence kattu or creation denotes kolam.

(As has already been said, Mayan does not conceive "Tamil" from the point of view of language alone. Tamil is all inclusive one - inclusive of all the five from mulam to nalam (ஞாலம்). Being in a state of readiness to come forward to express the inexpressible and the subtleties, Tamil is meant to examine and express the essential nature of mulam, i.e. mula vastu (மூலப் பரம்பொருள்). This is the view of Mayan. Only this view deserves to be called excellent, since it *excells* all other views on Tamil.)

எட்டியல் எழுத்தியல் நிலையுறும் திறமாய்
எட்டின் விரிவும் இயங்கல் வழக்கே (11)

எழுத்தின் இயல்பு, எட்டுக் கூறுகளாகப் பிரிந்தும் விரிந்தும் விளங்குவது. எட்டுக் கூறுகளாகப் பிரிந்து விளங்கும் எழுத்துக்களே நிலையான ஒலி ஆற்றலாக இருந்து கொண்டு அனைத்து மொழிகளாகவும் நூல்களாகவும் பரிணமித்து வருவதும் தொன்றுதொட்ட வழக்கமாகும்.

The nature of letter is to be in usage with eight fold division. The letters, which are grouped into eight, with their enduring sound potential, assume various forms of languages and scriptures. Such is the view held by the uninterrupted lineage.

## NOTE

The eight fold division of letters may be set forth here in two ways (i) according to the Tamil language tradition, and (ii) according to the Vastu tradition which employs *meta language.*

| | |
|---|---|
| Vowels, consonants, mute or inanimate (consonants - ஒற்றெழுத்து) | (3) |
| independent letters, dependent letters | (2) |
| consonants with harsh sound (வல்லினம்) | (1) |
| consonants with soft sound (மெல்லினம்) | (1) |
| consonants with medium sound (இடையினம்) | (1) |

— these are the eight groups according to the Tamil language tradition.

| | |
|---|---|
| vowels | (1) |
| ka varga | (2) |
| ca varga | (3) |
| ta varga | (4) |
| ta varga | (5) |
| pa varga | (6) |
| ya varga | (7) |
| sa varga | (8) |

— these are the eight groups according to the meta-language of Vastu tradition.

எழுத்தெண் ணியலே வழுத்தும் மூலமாம் (12)

எல்லோராலும் போற்றப்படும் மூலப் பரம்பொருளே எழுத்தின் இயலாகவும் எண்ணின் இயலாகவும் வடிவம் கொள்கிறது.

(எழுத்தின் இயலாலும் எண்ணின் இயலாலும் மூலம் ஒருவாறு உணரப்படுகிறது என்பது கருத்து).

The adorable Almighty (*mula Vastu*) manifests itself in the form of letter-characteristics and number - characteristics.

## NOTE

The sacred scriptures or the Revealed scriptures which serve as the basic sources for the attainment of the knowledge of Primal Existence (*mula vastu*) are constituted of letters, which are the gross forms of the basic subtle sound. This subtle sound is identified with *nada - brahman* which, in turn, is non-different from the primal existence.

The ennial (எண்ணியல்) of Tamil - Vastu tradition deserves to be expatiated here.

The table of *nedunkanakku* (நெடுங்கணக்கு) is very significant in that it denotes the number by symbolic terms other than the number-names. For example, the number ten crore is not denoted by the word "ten crore", but by the word *arbhutam* (அற்புதம்). Parardha (பரார்த்தம்) is the particular term which denotes the greatest number in numbering process; it is one with 19 zeros. (1,00,00,00,00,00,00,00,00,000).

There are specific terms which denote smaller fractions also.

Kil muntiri (கீழ் முந்திரி) $= \dfrac{1}{1,02,400}$

immi (இம்மி) $= \dfrac{1}{10,75,200}$

atisaram (அதிசாரம்) $= \dfrac{1}{18,38,400}$

*Mula-vastu* is greater than the greatest number parardha and smaller than the smallest fraction atisara. But yet, it manifests itself in these patterns.

The point to be observed here is that even enniyal (எண்ணியல்) is co-evel with *eluttiyal* (எழுத்தியல்).

கண்ணிமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்தும் காலக் கூறே (13)

இமை என்பது காலத்தின் கூறு (பாகுபாடு). இது கண்ணிமை, விண்ணிமை, மண்ணிமை, எண்ணிமை, பண்ணிமை என ஐந்து வகைகளாக விளங்கும்.

(குறிப்பு : கண்ணிமை என்பது கண்ணின் இமைப்பால் கொள்ளப்படும் காலக் கணக்கு அல்ல ; கண்ணுதல் - கருதுதல் கருத்தளவில் கொள்ளப்படும் இமைக் கணக்கு. காலத்தின் கூறுகளை மயன் ஆய்ந்துரைத்திருப்பது போன்று வேறு யாரும் கூறவில்லை).

Conceptual or ideational moment, celestial moment, terrestrial moment, intuitional moment and rhythmic moment - these five are held to be the divisions of Time.

## NOTE

Time is two-fold. One is called *laukika* and another is called *adhyatmika*. *Vinnimai* (விண்ணிமை) *mannimai* (மண்ணிமை) and *pannimai* belong to the *laukika* time; *kannimai* (கண்ணிமை) and *ennimai* (எண்ணிமை) belong to the *adhyatmika* time.

*Laukika kala* is recognised as *sthula kala*
*Adhyatmika kala* is known as *suksma kala*

What is meant by the conceptual time is the time calculated through mere ideations. The upward movement of *prana* is day; the downward movement of the vital air is night. Likewise there are so many ideations concerned with the process of yoga. For further details, see the Yoga section of the *KIRANAGAMA*.

*Vinnimai* means the divisions of time pertaining to the Divine world.

*Mannimai* means the divisions of time belonging to the human world. Since it is said that one terrestrial *year*

is equal to one celestial day, there is a relationship between *mannimai* and *vinnimai*.

*Ennimai* is concerned with intuition and incantation (*japa*)

*Pannimai* is concerned not only with music but also with every rhythmic structure.

Mayan speaks of these divisions frequently in the sequel.

கண்ணிமைக் கைந்நொடிக் காலமாத் திரையே (14)

காலத்தின் சிறிய கூறாகக் கொள்ளப்படும் மாத்திரை என்பது கண் இமைக்கும் நேரம் ; கையை நொடிக்கும் நேரம்.

Matra (மாத்திரை) is held to be the basic moment of time. It is the time taken for the twinkling of an eye or snapping of the finger.

காலம் இடம்பொருள் கவினுற விளக்கி
மூலம் விளக்கும் எண்ணெழுத் தியலே (15)

காலம், இடம், பொருள் என்பனவற்றைப் பற்றித் தெளிவாக விளக்கி, இவற்றின் அடிப்படையில் மூலப் பொருளின் அடிப்படையான இயல்புகளை விளக்கிக் காட்டுபவையே எண்ணின் இயலும் எழுத்தின் இயலும்.

(எண்ணெழுத்தியல் என்பதற்கு எண்ணாகிய எழுத்தின் இயல் என்றும் பொருள் கொள்ளலாம். காணி, கீழ் முந்திரி முதலான வழக்காறுகளைக் கவனிக்க).

The main function of number-scheme and letter-scheme is to set forth unambiguously the characteristics of time, space and creation and thereby, to explain the essentials of *mulam* or *mula-vastu*.

## NOTE

The throbbing or the forcible movement of the Primal space or Mulam in called time (*kala*).

The place where this throbbing or movement takes place is called space the (inner space called *ullam* உள்ளம்)

The form assumed through this throbbing or movement is called creation (Porul பொருள்).

Both the number-scheme and the letter-scheme explain the essential nature of *mula - vastu*, through the expositions on *time*, space and creation.

ஒளியொலி வடிவாய் ஓங்கும் எழுத்தே (16)

எழுத்தானது ஒளி வடிவத்திலும் ஒலி வடிவத்திலும் எப்பொழுதும் எழுந்து இயங்கிக் கொண்டே இருக்கும்.

Letter is ever rising and functioning in the form of both light and sound.

## NOTE

(This is another important characteristic of letter which seems to have been declared by Mayan alone. Mayan is always searching and analysing not at peripheral level but at the basic root-level where one is able to catch sight of the basic source itself. All the letters are functioning both in light form and sound form).

எழுத்தே முதல்சார் பென்றிரு வகைத்தே (17)

எழுத்து எனப்படுவது முதல் எழுத்து என்றும் சார்பு எழுத்து என்றும் இரண்டு வகைப்படும்.

What is called letter (varna) is of two kinds:

1. Independent or formative letter and
2. Dependent letter or assumed letter

வல்மெல் லிடையே மூவின வோசை (18)

மூவகைப்பட்டுத் திகழும் மெய்யெழுத்துக்களை உச்சரிப் பதால் எழும் ஓசை, வல்லோசை, மெல்லோசை, இடையோசை என மூன்று வகைப்படும்.

(மூவின 'எழுத்து' எனக் கூறாமல் மூவின ஓசை எனக் கூறுவது மயனின் தனிச் சிறப்பு. ஏனெனில் வல்லெழுத்துக்கள் கூட, முன்னும் பின்னும் வரும் எழுத்துக்களின் சூழலால் அல்லது சேர்க்கையால் சில இடங்களின் மென்மைப்பட்டுத்தான் ஒலிக்கும். உதாரணமாக, காட்சி என உச்சரிக்கும் போது 'க' எனும் வல்லெழுத்து பெறும் ஓசைக்கும், 'பூங்குயில்' என உச்சரிக்கும் போது 'கு' எனும் வல்லெழுத்து பெறும் ஓசைக்கும் வேறுபாடு உள்ளதைக் கவனிக்கலாம். பூங்குயில் என்று சொல்லும் போது வல்லோசை ஓரளவு மென்மைப்பட்டு விடுகிறது. எனவே ஓசைதான் முக்கியம்).

When the consonants forming three grohps are pronounced, the sound (of letter) is classified into three, viz. harsh, soft and medium.

## NOTE

The classification of the three groups is not based on the form or order of the letter as such, but strictly based on the nature of the sound of the letters when they are articulated. Mayan's classification, having a stress on 'sound' rather than on mere form or order seems highly cerebral. Because, even the so called "harsh consonants", sometimes seem to be soft or medium owing to their association with the preceding and the succeeding soft and medium letters (See the difference between the sound of ka, when words like காட்சி and பூங்குயில் are pronounced.)

This classification is entirely different from the threefold classification found in Sanskrit tradition which speaks of udatta, *anudatta* and *svara*.

*"udattascanudattasca, svaretasca trayah svarah"*

குறிலே . நெடிலென் றோசை இரண்டே (19)

எழுத்தின் ஓசையானது குறில் என்றும் நெடில் என்றும் இரண்டு வகையாகக் கொள்ளப்படும்.

Based hpon the nature of articulation, the sound of all letters is basically classified into two: short letter and long letter.

In Sanskrit tradition we have the classification of *hrasva* (short) and *dirgha* (long).

குறிலெழுத் தொன்றே நெடிலெழுத் திரண்டே
அறிநிலை அளவை மாத்திரை வழக்கே (20)

எல்லோராலும் அறியப்படும் நிலையில் எழுத்து உச்சரிக்கப் படும் காலத்தின் அளவைக் கூறாக, குறில் எழுத்துக்கு ஒரு மாத்திரை என்றும் நெடில் எழுத்துக்கு இரண்டு மாத்திரை என்றும் கொள்ளுதல் தொன்று தொட்டு வரும் வழக்காகும்.

According to the uninterrupted lineage, it is held that, as a basic time-measure for the letter when it is articulated so as to be heard by others, the duration for a short letter is one unit (matra) and the duration for a long letter is two units.

காலமும் இடமும் நுண்ணிதின் நோக்கி
மூலமும் பொருளும் ஆய்தல் மரபே (21)

காலத்தின் இயல்பையும் இடத்தின் இயல்பையும் மிகவும் நுண்மையாக (துல்லியமாக) ஆராய்ந்து, அறிந்து பின்னர் இவற்றின் அடிப்படையில் மூலம் என்பதன் இலக்கணத்தையும் பொருள் என்பதன் இலக்கணத்தையும் ஆராய்ந்து அறிய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து அறிவது தொன்று தொட்டு வரும் மரபாகும்.

Having meticulously realised the essential nature of time and space, one should proceed to analyse and recognise the essential characteristic of the *premordial vastu* and of the creation. This is the process adopted by the uninterrhpted tradition.

## NOTE

Mulam here denotes the Premordial Vastu and Porul denotes, not the things and substances but the whole of creation.

காலக் கூறே அளவியல் நுட்பம் (22)

அளவியலின் நுட்பம் காலத்தின் கூறுபாடுகளின் அடிப்படையில் அமைவதே.

The subtlety of perfect measurement (pramāna) is based on the division and fractions of time.

இமைநொடி அளவே எண்தரும் காலம் (23)

நம்மால் கருதப்படும் நிலையில் உருவாகும் காலம் – இமை, நொடி முதலான நுட்பமான அளவைக் கூறுகளை அடிப்படையாக உடையதாகும்.

Time which manifests itself so as to be comprehensible by the human mind, has its basic units called imai (twinkling of eye), noti (snapping of finger) etc.

விண்ணிமை மண்ணிமை நுண்ணிலைக் காலம் (24)

விண்ணிமை மண்ணிமை எனப்படும் இரண்டும் நுட்பமான நிலையில் உள்ள கால அளவைக் கூறுகளை உடையனவாகும்.

Both celestial time-units and terrestrial time-units have very subtle fractional units as their basis for the purpose of calculation.

## NOTE

(Subtlety noted in this aphorism is relative. The greater terrestrial time-units become comparatively subtle in relation to the celestial time-unit.)

பண்ணிமை கண்ணிமை எழுத்தியல் கூறே (25)

பண்-இமை, கண்-இமை என்னும் இரண்டும் எழுத்தியலின் கூறுகளாகவும் விளங்கும்.

Both the rhythmic time and conceptual time have their functional process through letter patterns.

## NOTE

What is meant here is that the functional aspect of both the rhythmic time and conceptual time is governed by the letters in the form of music and incantation.

உயிரும் உடலும் எழுத்தீர் இயலே (26)

உயிரெழுத்து உடலெழுத்து எனப்படும் இரண்டும் எழுத்தின் இரண்டு இயல்புகளாகும்.

குறிப்பு

உயிர்ப்பாக விளங்குவது உயிர் எழுத்து.

உடன்று எழுத்து தன் வன்மையால் பொருளைப் புலப்படுத்துவது உடல் எழுத்து (உடல் - உடலுதல்; ஆற்றலை வெளிப்படுத்தல்) அல்லது மெய்யெழுத்து.

Vowels and consonants are held to be the two main aspects of letters.

NOTE

Vowels are the vital indicators and impellers of all other letters. Those letters which, by virtue of their force of upsurge and existential nature indicate the things (in conjunction with the vowels) are called consonants.

எண்எழுத் தின்பெயர் உருவம் முறைபிறப்பு
எண்ணியல் நுட்பம் எழுத்தியல் வகையே (27)

கருதப்படுகின்ற எழுத்தின் பெயர், உருவம், அமையும் முறை, பிறக்கும் முறை — இவையே எண்ணியல் நுட்பமாகவும் எழுத்தியல் வகையாகவும் விளங்கும்.

Name, form, order, process of origination of the letters which are under analysis - only these aspects comprise the subtlety of number-pattern and the variety of letter-pattern.

NOTE

This is because, in the Mayonic tradition, even the numbers are denotable by letters. (for Examples, க denotes 1, உ denotes 2, அ denotes 8. It is significant to note that the primal letter அ which is frequently used by the seers

and the poets for a comprehensive comparison for the Almighty denotes the number 8 which is the foremost and dominant number in the Mayonic tradition.

அண்டமும் பிண்டமும் நிலையுறக் காட்டி
ஒளியும் ஒலியும் அமைவுறக் கூட்டி
பெயர்முறை உருவம் பிறப்பியல் மாத்திரை
உயர்வுற விளங்கும் எழுத்தின் இயல்பே (28)

எழுத்தின் இயல்பானது, அண்டமும் (பிரபஞ்சமும்) பிண்டமும் (தேகமும்) சமநிலைப்பட்டுப் பொருந்தி விளங்குமாறு காட்டுவது ; ஒளியும் ஒலியும் தன்னிடம் பொருந்தி விளங்குமாறு இரண்டையையும் சேர்த்துக் கொண்டு விளங்குவது ; பெயர், அமையும் முறை, வடிவம், பிறக்கும் முறை, ஒலிக்கும் கால அளவு எனப் பல்வேறு இயல்புகளை உடையதாய் உயர்வு பெற்று விளங்குவது.

## குறிப்பு

எழுத்தோசை, மிக நுட்பமான நிலையில் பிரபஞ்சம் எங்கிலும் வியாபித்துள்ளது ; அவ்வாறே ஒவ்வோர் உயிரின் தேகத்திலும் வியாபித்துள்ளது. பிரபஞ்சத்திற்கும் தேகத்திற்கும் எல்லா விதங்களாலும் ஒற்றுமை, அதாவது ஸாம்யம் என்பது உண்டு. அதனால்தான் அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ளது. புறத்தே உள்ள க்ஷேத்திரங்களும் புண்ணிய தீர்த்தங்களும் ஒவ்வொரு தேகத்திலும் சூக்கும நிலையில் உள்ளன. ஐம்பெரும் பூதங்களுள் பூமிக்கு லகாரமும், நீருக்கு வகாரமும் நெருப்புக்கு ரகாரமும், காற்றுக்கு யகாரமும் ஆகாசத்திற்கு உறகாரமும் அதை அதை இயக்கும் ஓசையாக உள்ளது. தேகமும் பஞ்சபூத மயமானதே. எனவே ஒவ்வொரு பூதத்தின் கூறுகளாகத் தேகத்தில் உள்ளனவற்றிற்கு அந்த அந்த பூதத்திற்குரிய எழுத்தே இயக்கும் ஓசையாக உள்ளது.

ஒவ்வோர் எழுத்திற்கும் ஒளியும் — (அதாவது நிறமும்) உண்டு; ஒலியும் உண்டு; பயனும் (விளைவும்) உண்டு.

உதாரணமாக, பூமிக்கு உரியதான லகாரம் வெளுத்த மஞ்சள் நிறம் உடையது. அதுதான் அதன் ஒளி. அசையாமல் இருக்கச் செய்யும் ஆற்றல் (ஸ்தம்பனம்) அதன் பயன்; விளைவு. இவ்வாறே இத்தகைய இயல்புகள் ஒவ்வோர் எழுத்திற்கும் உண்டு.

ஒவ்வோர் எழுத்தும் பெயர், இதற்குப் பிறகு இது என அமையும் முறை, வடிவம், அது பிறக்கும் (ஒலிக்கப்படும்) முறை. ஒலிக்கப்படும் கால அளவு முதலான பல்வேறு நிலைகளால் ஆராயப்படும்.

The specific characteristic of each letter is to effect continuous identification between the universe and the individual body; to remain in association with light (colour) and sound; and to exist always so as to be analysed from different aspects such as name, order, form, process of articulation, duration etc.

## NOTE

The sound of each letter, in its very subtle state, pervades the whole universe. The same pervades within each body. That there exists a total identity between the universe (anda) and a body (pinda) is the theory, frequently occurring in the texts of the Agamas and the Upanishads. Even according to a western dictum, "whichever is there, it is also here; whichever is not there, it is also not here". The western philosopher Nicolas Cuso has succinctly put it: "man is a little universe". All the sacred places and sacred rivers which exist outside, are also inside each and everybody.

Each gross element is energised by a particular letter and the same letter energises that particular elemental substances of a body.

Likewise, each letter is endowed with its own characteristic light, sound and effect.

"ukaro vastu daivatyam karsnam rajavasikaram"

"ukaro bhumi daivatyam syamam lokavasikaram" - states the Vatulagama.

According to the Matrakalaksana, the fast tempo of a svara is of red; the moderate tempo is of dark blue and the slow tempo is of white. (I : 11)

The letters are differentiated based on the process of origination or articulation.

Bharata's Natya Sastra classifies the letters into:

i) kanthastha (guttarals)

ii) talavya (paletals)

iii) murdhanya (cerebral)

iv) dantya (dentals)

v) osthya (lebrals)

vi) kanthosthya (throat-lebrals)

vii) kantha-talavya (throat-paletals)

The same sort of classification could be found in the Tamil works on grammar.

பல்திறப் பொருளைப் பாங்குற விளக்கி
சில்வகை எழுத்தில் திறநிலை காட்டித்
திட்பமும் நுட்பமும் செப்புவ நூற்பா (29)

நூற்பா (சூத்திரம்) என்பது பலதிறப்பட்ட கருத்துக்களையும் மனத்தில் ஆழப்பதியும் வகையில் முறைப்படி விளக்குவது; சில சொற்கள் மூலமாகவே, கூறப்படும் பொருள்களின் நிலைத்த தன்மையைக் காட்ட வல்லது; அதே சமயம், அப்பொருள்களின் திட்பத்தையும் நுட்பத்தையும் வெளிப்படையாக விளக்குவது.

## விளக்கம்

பாங்குற விளக்குதல் என்பது இன்ன கருத்தை முதலில் கூறிப் பிறகு இன்ன கருத்தைக் கூற வேண்டும் என வகுத்துக் கொள்ளும் முறைமை.

திறநிலை என்பது, கூறப்படும் பொருள் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாய் விளங்கும் உண்மைத் தன்மை.

திட்பம் — பயில்வோரின் சிந்தனையத் தூண்டும்ஆற்றல் உடைமை.

நுட்பம் — அவ்வாறு சிந்தித்த பிறகு ஏற்படும் தெளிவினால் புலப்படும் உட்கருத்து; மறைபொருள்.

An aphorism is one which expatiates manifold concepts and precepts in such a methodic way as to be easily grasped by the readers; which is capable of expounding the proposed theories through a very few words in such a way as to effect permanent value to the expounded theories; and which explains them in a thought-inspiring and subtle way.

## NOTE

The first line of this verse denotes the methodology to be adopted in inditing aphorisms.

What is meant by tiranilai is the perennial nature of the concepts, expounded with brevity.

The word 'titpam' denotes the thought-inspiring nature of the expounded theories; and 'nutpam' means the final truth comprehended by the reader after a stead fast rumination over the enshrined concepts.

பலநூல் ஆய்ந்தே நுட்பமும் ஓர்ந்தே
கலைபல உணர்ந்தோன் கற்பது, இந்நூலே (30)

பலதுறைப்பட்ட நூல்களையும் ஆராய்ந்து ஐயமும் திரியும் இல்லாமல் உணர்ந்து, பின்னர் அவற்றின் முடிவான உட்கருத்துக் களையும் உணர்ந்து, கலைகள் பலவற்றையும் மிகமிகத் தேர்ந்த நிலையில் நன்கு அறிந்திருக்கின்ற நிறையுளக் கலைஞனாலேயே ஐந்திறமாகிய இந்நூல் பயிலப்படும் நிலையில் உள்ளது.

This work AINTIRAM is to be studied only by a perfect person who has already gone through varied works on multifarious themes and understood them without doubt and distortion and grasped the concrete exegensis of the works and has attained mastership over varied creative fields.

## NOTE

This verse sets forth the essential pre-requisites of a person who is interested to study the work AINTIRAM.

Only a person of full-blossomed perfection - a perfection attained through a deep and undistorted studies of innumerable authentic works on different arts - is fit enough to undertake the study of the AINTIRAM. This indirectly suggests that those persons who have not qualified themselves by such deep studies, cannot understand the intricacies and technicalities of this particular work AINTIRAM.

எண்ணமும் உணர்வும் எழுதரும் ஆற்றலும்
திண்ணமும் நேர்மையும் சீர்மையும் உள்ளோர்
விள்ளும் இயலால் உண்மை உணர்வோர் (31)

உண்மையை உள்ளவாறு உணர வேண்டும் என்ற தீவிர எண்ணம்; அந்த எண்ணத்தால் தோன்றும் உணர்வு, அந்த உணர்வால் எழும் ஆற்றல், அவ்வாறு உண்டாகிய ஆற்றலை நிலை நிறுத்திக் கொள்ளும் உறுதிப்பாடு, அதனால் உணர்ந்து தெளிந்த கருத்தை மாசுபடுத்தாமலும் மாறுபடுத்தாமலும் உலகினர்க்கு உரைக்கும் நேர்மை, அவ்வாறு உரைப்பதில் உள்ள தெளிவு - இவை உள்ளோர் மேற்கூறப்பட்ட இயல்புகளின் அடிப்படையில் தோன்றும் தனித் தகுதியால் இந்நூலின் உண்மைப் பொருளை நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

An intense motive to realise the fundamentals as they are, a feeling of diligence arising out of that motive, power of mental faculty as a result of that diligence, to get himself established in that power, faithfulness and impartiality in transmitting the concepts without polluting and distorting, clarity and capacity in expounding those concepts - those who are endowed with these characteristics could recognise the fundamental concepts of this work, as a result of fitness that has blossomed out of those characteristics.

காலமும் இடமும் கருத்துற நோக்கி
மூலமும் ஒளியும் முயன்று இனிது ஆய்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்கி
கோலத் தமிழ்இயல் குறிக்கும் இந்நூலே. (32)

ஐந்திறம் எனப்படும் இந்நூல் காலம் இடம் என்பனவற்றை அவற்றின் உண்மை புலப்படுமாறு நுனித்துணர்ந்து, மூலம், ஒளி

என்பனவற்றின் தன்மைகளைச் சிறப்பான முறையில் முயன்று நன்கு ஆராய்ந்து, ஞாலம், விண் ஆகியவற்றின் இயல்புகளைக் குற்றமற நுணுகிக் கண்டு கோலத்தமிழின் இயல்புகளை வெளிப்படுத்துவதையே குறிக்கோளாக உடையது.

## குறிப்பு

கோலத்தமிழ் என்று, சீரான அணுக்களின் திரட்சியால் தோன்றும் பற்பல வடிவங்களைப் பற்றிக் கூறும் உருவ இலக்கணத் தமிழ்.

This work called AINTIRAM has for its ultimate motive the delineation of the essential features of forms,. after having scrutinised the fundamental concepts of time and space and diligently analysed the nature of the ultimate principle (mula) and light (oli) and impeccably realised the characteristics of cosmic structure and cosmic space.

Itam - here denotes the conditioned or limited space

vin - denotes the cosmic or elemental space

The main objective of the work is to expatiate the concepts on FORM (Kolat-tamil)

ஐந்தியல் தமிழே ஐந்திசை மூலமும்
செந்நூல் நெறியும் காலத்து ஆற்றலும்
முந்தும் உணர்கலை இடநிலை வண்மையும்
தந்தாறும் தமிழ்இயல் இந்நூல் நெறியே (33)

தமிழ் ஐந்து இயல்களை உடையது; இசைக்கு மூலமாக உள்ள நாதங்களும் ஐந்து; ஒரு நூல் செவ்விய நெறிப்படி அமைவதற்குரிய விதிமுறைகளும் ஐந்து; காலத்தின் ஆற்றலும் ஐந்து; யாவற்றிலும் சிறப்புடையனவாய் உணரப்படும் கலைகளும் ஐந்து; செழுமை மிக்க முறையில் அமைந்துள்ள நில வகைகளும் ஐந்தே. இவ்வாறு ஐந்து, ஐந்தாக விளங்கும் நுட்பங்களை யெல்லாம் தெரிவிக்கும் தமிழ் இயல் நெறியே இந்நூலின் நெறியாகும்.

Tamil consists of five aspects; the basic svaras (sound) for melodious music are five; for a systematic and methodic structure of an authentic book, rules are five; the functional energies of the primal Time are five; arts which are universaly recognised to be shpreme are five; the varieties of salubrious lands are five. This work called AINTIRAM addresses itself to set forth the characteristics of all those things classifiable as pentads.

## NOTE

The basic sounds, even for music, according to Mayan are only five.

A systematic work (book) should consists in itself a five fold relationship. Any work which is bereft of this fivefold relationship is liable to disown cogency and coherency. Relationship between words (1), between sentences (2),between verse or aphorisms (3), between the chapters (4) and between the contents - this is the fivefold relationship, essential for a systematic work.

The five functional energies of time are explained under another context.

The whole structure of the universe is of the nature of manifesting in pentadic-mode.

ஒளிநெறி ஆற்றலால் உளத்தியல் ஆய்ந்து
வெளிநெறிக் கலைநெறிச் செந்நெறி உணர்ந்தோர்
தெளிகலை ஆற்றல் செந்தமிழ் உணர்வால்
ஒளித்தமிழ் ஐந்தியல் ஓர்ந்துணர் வாரே. (34)

மூல ஒளியின் இயல்பை ஆராய்கின்ற நெறியின் ஆற்றலால் உளத்தின் இயல்பை ஆராய்ந்து, வெளிநெறி, கலைநெறி, செந்நெறி ஆகிய இம்மூன்றையும் உணர்ந்தவர்கள், தெளிந்த கலை ஆற்றலாலும் செந்தமிழ் உணர்வாலும் ஒளித்தமிழின் ஐந்து இயல்களையும் ஆராய்ந்து உணரும் பக்குவம் பெறுவார்கள்

## குறிப்பு

பரம்பொருளை மூல ஒளியாகக் காண்பதே மயன்மரபு. இந்த மூல ஒளியை உணர முற்படும் உள்ளம், அதாவது ஆன்மா, தன்னியல்பாகவே பக்குவப்பட்டுவிடுகிறது. அவ்வாறு பக்குவப்பட்ட உள்ளம் பரமாகாசமாகிய பெருவெளியையும், அப் பரமாகாசத்திலிருந்து தோன்றும் ஐந்து கலைகளையும் (செந்நெறி - ஒழுங்குபட்ட முறைமை) தெளிவாக உணரும் ஆற்றல் பெறுகிறது. இந்த ஆற்றலாலும், இதனால் மேலும் தோன்றும் கலை ஆற்றலாலும் ஒழுங்கு முறைக்கு உட்பட்ட அறிவியல் உணர்வாலும் (இதுவே செந்தமிழ் எனக் குறிக்கப்படுகிறது. இச்சொல் மொழியைக் குறிப்பதாகாது) மூல ஒளியின் பெருமையையும் இயல்பையும் கூறும் இத்தமிழ் நூலின் ஐந்து இயல்களையும் நன்கு ஆராய்ந்து உணரும் ஆற்றல் கிடைக்கும்.

Those who are capable of realising the orderliness of primal space, of the *kalas* arising from the primal face, and of the ordered structure of these *kalas* - through the mental virility attained through meditation on the primal source - light and the ability to realise the nature of one's own self (ullam) - could understand fivefold aspect of the eternal and divine light-source after attaining more knowledge on kalas and the perfect and undistorted scientific knowledge on one's own self.

முந்துசெந் தமிழை முறைநெறி ஆய்ந்து
வந்த தொல்கலை மரபு இனிது உணர்ந்து
ஐந்தவி ஆற்றலால் அக உணர்வு உற்றே
ஐந்தியல் தமிழ்இந் நூல்உணர் வாரே (35)

(உள்ளொளியால் உணரப்பெற்ற கலைநுட்பங்கள் அறிவியல் நுட்பங்கள் அனைத்தையும் உணர்த்துவதற்கு) முந்துவதாகிய செந்தமிழின் இலக்கண — இலக்கிய நெறிமுறைகளை நன்கு ஆராய்ந்தும், வழிவழியாய் மரபு மாறாமல் வரும் தொன்மை சான்ற கலைமரபுகளை நன்றாக உணர்ந்தும் முதிர்ந்த பேரறிவு பெற்று, ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் தவநெறியால், மிக உயர்ந்த அக உணர்வு பொருந்தப் பெற்றவராய், ஐந்து திறங்களைக் கூறுவதாகிய இத்தமிழ் நூலைத் தெளிவாக உணர்ந்து கொள்வர்.

Only those who have systematically studied the literary and grammatical traditions of Tamil (which is always in a state of readiness to express even the inexpressibles), who have acquired the direct knowledge and experience of the age-old traditional values of arts and who have attained spiritual virility through the power of channalising the potentials of the five senses could understand the intricacies of this Tamil work *AINTIRAM*.

எழுத்தும் சொல்லும் பொருளும் விளக்கி
வழுவிலாக் கட்டு, அணி வளம்உற வகுத்துச்
செழுமலர் ஐந்தமிழ் செம்மலர் என்ன
முழுத்தமிழ் ஐந்தியல் நூல்நெறி அன்றோ ! (36)

எழுத்து, சொல், பொருள் எனப்படும் மூன்றையும் விளக்கு வதாகவும், குற்றமற்ற கட்டமைப்பு அலங்காரம் என்னும் இரண்டையும் யாவரும் நிறைந்த பயன்பெறும் பொருட்டு முறைப்படி வகுத்துக் கூறுவதாகவும் — ஆக ஐந்து இயல்களை உடையதாக உள்ளது இந்நூல். ஐந்து இதழ்களை உடையதாகவும் நறுமணமும் தேனும் நிறைவுற விளங்குவதாகவும் திகழும் சிவந்த மலரைப் போன்று அமைந்துள்ளது இந்நூல். இத்தகைய நூல் முழுமை பெற்ற தமிழுக்கே இயல்பாக உரியதான நூல் நெறிப்படி அமைந்துள்ள ஒன்று அல்லவா?

This work is of the nature of expounding the characteristics of letter, word and object; of systematically delineating the characteristics of structure and ornamentation. These are expatiated in order that all those who are interested in knowing these aspects may immensely be benefitted. And this work, which speaks about five fold subject-matter would look like a full blossomed and five petalled pure flower of unfading fragrance and inexhaustible honey. Is not this shpreme work in strict accordance with the faultless features of a work, naturally belonging to the impeccable tradition of perfect Tamil language!

புள்ளிக்கோடே வரிவியல் உருவியல்
தெள்ளு தமிழ்இயல் எழுத்தியல் வகுத்து
விள்ளும் சொற்பொருள் கூட்டு, அணி வகையால்
உள்ளும் ஆற்றலை உரைப்பது இந்நூலே. (37)

புள்ளி, கோடு, வரி, வடிவம், தெளிந்த நாதம் — ஆகிய இவற்றின் அடிப்படையில் எழுத்துக்களின் இயல்புகளை விளக்கு வதாகவும், இத்தகைய எழுத்துக்களால் முழுமை பெற உருவாகும் சொல், சொல்லால் உணர்த்தப்படும் பொருள், பல்வகைப் பொருள்களையும் கூட்டி அமைக்கப்படும் கட்டு, அலங்காரம் — ஆகிய இவற்றை விளக்குவதாகவும் திகழ்வது இந்நூல். மேற்கூறப்பட்ட எழுத்து முதலான ஐந்து இயல்களின் அடிப்படையிலே ஆழ்ந்து சிந்திப்பதால் தோன்றும் ஆற்றலின் திறத்தை (மேம்பாட்டை) எடுத்துக் கூறுவதாகவும் இந்நூல் விளங்கும்.

This work systematically expounds the nature of letters based on point, straight line, curved line, form and audible sound. It further sets forth the details of words formed of letters, object denoted by the words, structure formed of varied combinations and ornamentation. If further expounds the efficacy of the potential power gained through a methodic rumination over the above mentioned five aspects.

மூவகைக் காலமும் முறைமையின் விளக்கி
பாவகைத் திறனும் பண்புறச் செறித்து
ஒவிலாது உழைப்போர் உளத்து உணர் நிறைந்து
மேவுறும் செந்தமிழ் ஐந்தியல் நூலே. (38)

எழுத்து முதலான ஐந்து இயல்களை விளக்கிக் கூறவதாகிய இச்செந்தமிழ் நூல் மூவகைக் காலங்களின் இயல்புகளையும் முறைப்படி விளக்குவது; வெவ்வேறு வகைப்பட்ட பாட்டு வகைகளின் திறத்தையும் முறைமைப்படி செறிவாகக் கூறுவது. இவ்வாறு முறைப்படி விளக்குவதாலும் செறிவாகக் கூறுவதாலும், இவ்வைந்து இயல்களையும் உள்ளவாறு உணர வேண்டும் என்ற நோக்கத்துடன் ஓய்வில்லாமல் உழைப்பவர்களின் உள்ளங்களில் இந்நூல் அறிவு மயமாக நின்று பிரகாசித்துப் பொருந்தும் (பாவகை — கட்டுகளின் வகை).

This impeccable Tamil work, which is of the nature of expounding the five aspects such as letter etc., systematically explains the threefold division of (empirical) time; it purports to set forth systematically and with

profundity the important features of varied compositions (of structure). As such, this important work would enshrine itself with all its wealth of informative effulgence in the minds of those who untiringly endeavour to realise the real nature of those five aspects.

மூவகைக் குற்றமும் முறைமையின் தவிர்த்தே
ஆவலால் கற்போர் ஐந்தியல் அறிவரே (39)

மூவகைப்பட்ட குற்றங்களையும் முறைமைப்படித் தவிர்த்து விட்டு, உண்மையை உள்ளவாறு உணர வேண்டும் என்ற ஆவலால் ஒரு நூலைப் பயிலும் ஆற்றல் உடையோரே ஐந்தியல் பற்றிப் பேசும் இந்நூலை நன்கு பயின்று அறிந்து கொள்வார்கள்.

## குறிப்பு

மூவகைக் குற்றம் :
1. சந்தேகத்தோடு பயிலுதல்
2. மாறுபடப் பொருள் கொண்டு பயிலுதல்
3. இதற்குப்பின் இது என்று முறையாய்ப் பயிலாமல் தொடர்ச்சி இன்றிப் பயிலுதல்

Only those who carefully avoid the threefold improper method of studying the scriptures and have eagerness in knowing the truth as it is enshrined in the scripture, can study well and understand the significance of this work which speaks about five aspects.

## NOTE

The threefold improper method of studying the scriptures:

1. Reading the scripture, with the mind obsessed with doubts.
2. Misunderstanding the subject-matter and holding distorted meanings.
3. Reading the scripture without continuity, i.e. what is called random-reading.

ஐந்தியல் செந்தமிழ் ஐந்திற நூலே (40)

ஐந்திற நூலாம் இது செந்தமிழ் மரபின் ஐந்து இயல்களையும் உள்ளடக்கியதாகும்.

## குறிப்பு

ஐந்தியல் என்பது, முன்னர் ஒன்பதாம் நூற்பாவில் குறிக்கப்பட்ட மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்னும் ஐந்தையும் குறிப்பதோடு, பிரபஞ்சம் முழுவதுமே ஐந்து ஐந்தாகப் பிரிந்து விளங்கும் முறைமையையும் குறிக்கும்.

The work called AINTIRAM includes in itself the five features pertaining to the perennial tradition of Tamil.

## NOTE

Aintiyal: This, not only refers to the five aspects, namely mulam, kalam, silam, kolam, nalam. (already referred to in the 9th aphorism) but also to the process of pentadism which governs and regularises the cosmic movements.

எண்ணெழுத் தியலே விண்தமிழ் ஆற்றல் (41)

விண்ணைப் போன்றதான தமிழின ஆற்றல் எண்ணின் இயலையும் எழுத்தின் இயலையும் உள்ளவாறு உணர்த்த வல்லதாகும்.

## குறிப்பு

ஐம்பெரும் பூதங்களுக்குள்ளே விண்ணைக் காட்டிலும் மேம்பட்ட ஒன்று இல்லாதது போன்று, மொழிக் கூட்டங்களுக் குள்ளே தமிழிலும் மேம்பட்ட ஒன்று இல்லை என்பதால் விண்தமிழ் எனக் கூறுகிறான் மயன். வெளி (space) என்பதைப் பற்றிய நுட்பங்களையெல்லாம் வெளியிடும் மொழி என்பதாலும் விண்தமிழ் எனக் கூறப்படுகிறது.

The efficacy of the space-like Tamil consists in expounding the real characteristics of number-patterns and letter-patterns.

## NOTE

There is no greater gross-element than the space. Likewise, there is no greater language than Tamil, as far as its efficacy in revealing the essentials and essence is concerned. This is how Mayan has conceived Tamil. Tamil speaks of the subtleties and secrets of space. Even for this reason, Mayan calis it Vin-Tamil.

மொழிமுதல் ஒலி ஓம் முறையின் உணர்த்தி
விழுமிய பொருளை விளக்கிச் செறித்தே
செழுந்தமிழ் மூலம் ஐந்தியல் கோலம்
முழுமை விளக்கும் ஐந்திற நூலே. (42)

ஐந்திறம் எனப்படுவதாகிய இந்நூல், மொழிக்கு முதல் ஒலியாக உள்ள ஓம் என்பதன் நுட்பங்களை முறைப்பட உணர்த்துவது; அதன் சிறப்பான கூறுகளையெல்லாம் விளக்கும் கருத்துக்கள் தன்னிடம் செறிவுற்று இருக்குமாறு விளங்குவது; தமிழின் மூலக் கூறுகளாக உள்ள ஐந்து இயல்களின் அமைப்பு வகைகளையெல்லாம் முழுமைபெற விளக்குவது.

This work known as AINTIRAM purports to explain systematically the subtleties of the basic sound "OM" which is considered to be the casual ground of language; it aims to offer more details on the intricacies of that basic sound; it addresses itself to present in a complete and comprehensive way the features of five aspects like mulam etc. which are the basic factors for the scientific value of the Tamil language.

ஒலியும் ஓசையும் உள்ளுவ ஓர்ந்தே
ஒளியும் வெளியும் முறையும் நோக்கித்
தெளிவுறும் உணர்வால் செந்தமிழ் ஐந்தி
ஒளிமிகும் ஐந்திறம் உரைப்பது இந்நூலே (43)

ஒளியின் உண்மைகளைக் கூறுவதால் ஒளிபெற்றுத் திகழும் ஐந்திறம் என்பதாகிய இந்நூல், ஆழ்ந்து சிந்தித்து உணரப்பட வேண்டியனவாகிய ஒலி, ஓசை என்பனவற்றைப் பற்றி ஆராய்ந்து கூறுவது; ஒளியின் இயல்பையும் வெளியின் இயல்பையும், இவ்விரண்டிற்கும் இடையே உள்ள இடையறாத் தொடர்பு

முறையையும் நுணுகி ஆராய்ந்து கூறுவது; தெளிவுடைய சிந்தனைத் திறத்தால் செந்தமிழில் மூலம் முதலாகிய ஐந்து திறங்களைப் பற்றியும் விளக்கிக் கூறுவது.

This work called AINTIRAM, endowed with resplendence owing to its systematic treatment of effulgent source, deeply ponders over the features of unmanifest and manifest sounds (namely oli and osai) which are the fittest subject-matter for deep analysis; this work analyses with deep insight the features of sound, space and the mutual relationship existing between them; it explains the five aspects like mulam etc. with a perfection of clarity attained through methodic meditation on them.

ஐந்திறம் ஆய்ந்தோர் தந்திறம் காண்பர் (44)

ஐந்திறம் என்பதாகிய இந்நூலை நன்கு ஆராய்ந்து உணர வல்லவர்கள், தம் ஆன்ம நிலையிலும் மூலம் முதலான ஐந்து இயல்கள் விளங்குவதை அனுபவ ரீதியாகவே அறிவார்கள்.

Those who study this work AINTIRAM in a systematic process (and realise the significance of the concepts enshrined in it) are sure to see and experience the five features like mulam etc. in their own existence.

ஒளிமுதற் கண்ட விளை தமிழ் ஓசை
வெளிவளர் ஓம்எனா விளம்பல் கேட்டே
தெளிதமிழ் மொழிஇயல் ஐந்தியல் வரம்பாய்
ஒளிவளர் ஐந்திறம் உரைத்தனன் நன்றே (45)

மூல ஒளிப் பொருளால் தோன்றிய மூலநாதமாகிய தமிழ் ஓசை மூலப் பெருவெளியில் தோன்றி எழும் ஓம் என்பதாகிய பிரணவத்தின் மாறுபாடாக, அதன் பரிணாமமாக, ஒலிக்கும் இயல்பினைச் செவியுணர்வால் நன்கு நுனித்துணர்ந்தேன். அவ்வாறு உணர்ந்ததனாலேயே தெளிந்த தமிழ்மொழியின் ஐந்தியல் வரம்பில் நின்று, ஒளிபொருந்திய இந்த ஐந்திற நூலை நூன்முறைப்படி உரைத்தேன்.

## குறிப்பு

இந்நூலின் முதல் நூற்பாவிற்குக் கூறப்பட்டுள்ள விளக்கம் இங்கே மீண்டும் நினைவு கூறத் தக்கது.

தமிழ் மொழியின் ஐந்தியல் வரம்பு என்பது யாப்பு இலக்கணத்துக்கு உரிய ஐந்து கூறுகளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அல்லது எட்டாம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள ஒலியியல் முதலான ஐந்து இயல்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

ஒளிவளர் ஐந்திறம் என்பதற்குரிய விளக்கம் 43 ஆம் நூற்பாவுக்குரிய உரையிலேயே இடம் பெற்றுள்ளது.

Having realised that the Tamil, which is of the nature of universal sound (nada), is nothing but the modified manifestation of pranava "OM" effected by the primal source of space and light, I speak on this effulgent AINTIRAM keeping myself strictly adhered to the fivefold codification of Tamil language.

## NOTE

Explanatory notes offered to the first aphorism of this work are to be recalled here.

Veli (வெளி) corresponds to the sanskrit terminology "kha" meaning sky which is the symbol of unobstructed expanse of consciousness (Cidakasa).

The fivefold codification referred to in this aphorism is pertaining to the rules of prosody; or, it may be taken to mean what has been said in the 8th aphorism.

உழைப்போர் உணர்வின் உள்ளொளித் திறனாய்
களைப்பைத் தவிர்த்தே கலைநிலை ஆய்ந்தே
விள்ளும் மாக்கலை மெய்த்திறக் கூற்றே
உள்ளுணர் ஐந்திறத்து இயல்நெறி நுட்பம் (46)

அவ்வக் கலைத்துறைக்கு உரிய நெறிமுறைப்படி உழைப்பவர்களின் உள்ளத்தில் தோன்றும் அறிவின் முதிர்ந்த

நிலையாகவும், அவ்வாறு உழைப்பதில் களைப்பினைத் தவிர்த்துவிட்டு மேன்மேலும் அவ்வக்கலையின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து விரிவாக எடுத்துரைக்கப்படுவனவாகவும் உள்ள, பெருமை பொருந்திய மெய்த்திறக் கூறுபாடுகளை இந்நூல் கொண்டுள்ளது. அகநோக்கால் உணரத்தகுந்த இவ் ஐந்திற நூலின்கண் இயல்பாக அமைந்திருக்கும் நுட்பம், அத்தகைய மெய்த்திறக் கூறுபாடுகளை உள்ளடக்கித் திகழ்வதேயாம்.

This work ANITIRAM which is to be realised through introvert ruminations, has naturally enshrined in itself a subtlety. This subtlety has manifested in this work as the consummate perfection of consciousness blossomed in the minds of those who toil in their respective art fields; and, as the existential truths elaborately explainable by those who, without being affected by tiresome feelings, have fully realised the richness and values of their respective art-fields.

எண்எழுத்து இயல்ஒலி மூல நுட்பமும்
விண்மண் மூலமும் ஒலிகுறிக் கும்மே (47)

எண்ணின் இயல்பான ஒலியின் மூல நுட்பத்தையும் எழுத்தின் இயல்பான ஒலியின் மூல நுட்பத்தையும், விண், மண் ஆகியவற்றின் மூல நுட்பத்தையும் ஒலியானது புலப்படுத்தும்.

## குறிப்பு

ஒலி மூல நுட்பத்தைப் புலப்படுத்தும் ஆற்றல் உடையது என்னும் பேருண்மையை இங்கே மயன் புலப்படுத்துகின்றான். மூல நுட்பத்தைக் குறித்தல் என்பது ஒவ்வோர் எண்ணையும் இயக்குதற்குரிய ஒலி இது என்றும் ஒவ்வோர் எழுத்தையும் இயக்கும் மூல ஒலி இது என்றும் விண், நிலம் முதலான வற்றையும் ஊடுருவி இயக்கும் மூல ஒலிக் கூறுகள் இவை என்றும் புலப்படுத்துதல். இந்நுட்பத்தை நன்கு அறிந்தவர்களே சிற்ப சாத்திரங்களும் ஆகம சாத்திரங்களும் அங்கங்கே இலைமறை காயாக மறைபொருளுடன் கூறும் பாடல்களின் உட்கருத்தை நன்கு விளங்கிக் கொள்ள முடியும். உதாரணமாக "எட்டாவது வர்க்கத்தில் இரண்டாவது எழுத்து, 6, நெருப்பு, பிந்து, நாதம் இவற்றுடன் கூடியது மூல மந்திரம்" எனக் குமாரதந்திரம் கூறும் கருத்தை, எண்இயல், எழுத்தியல் நுட்பம் அறியாதவர்களால்

உணர முடியாது. இவற்றுள் 6 என்பது "ஊ" எனும் எழுத்து. அதாவது 6 என்ற எண்ணை இயக்கும் மூல ஒலி ஊ. நெருப்பு என்ற பூதப் பொருளை இயக்கும் எழுத்து 'ர' எட்டாவது வர்க்கத்தில் இரண்டாம் எழுத்து என்பது ஸ. இவை பிந்து, நாதம் இவற்றோடு சேரும் போது ஸ்ரூம் என்னும் மூல ஒலியாகும். (பீஜாக்ஷரமாகும்). ஸ்ரூம் என்பதில் உள்ள எண், எழுத்து, பூதப் பொருள் ஆகியவற்றை ஒலியே குறிக்கின்றது.

சுருங்கக் கூறின், பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுக்கூறும் ஒலியால் இயக்கப்படுகிறது என்ற கருத்தே இந்நூற்பாவால் உணரத்தப்படுகிறது.

Sound (which gets variegated at different planes) aims at indicating the basic subtleties of number, letter, space and earth.

What is meant by "indicating the subtleties" is the indirect way of enunciating the minute and secret technicalities so that they remain un-understandable and mysterious to the novice or imperfect persons. Such type of technical method of enunciating the technical secrets is common to both the Agamas and the Silpa sastras.

Each number, each letter, each part of gross and subtle elements-all these are being energised and activated by a particular sound pattern. Only those who have a deep knowledge of this sort of sound-science can understand the secrets of the Vastu and Agama sastras.

*'Vinman'* of this aphorism denotes the other gross elements also like air, fire etc.

கட்புலன் நோக்கும் கருத்தே குழுமி
விட்புலன் ஆயும் மெய்நிலை அன்றோ (48)

அறிவுக் கருவிகள் (ஞான இந்திரியங்கள்) அனைத்தும் ஒருங்கு கூடிச் செயற்பட, அதனால் உள்ளத்தில் கருத்துக்கள் திரளும். அக்கருத்துக்களை விட்புலனால் ஆராய்ந்து அவற்றின் சாரத்தை உணரும் மெய்ந்நிலை கைகூடினால், முற்கூறப்பட்ட மூல நுட்பத்தை அறிய முடியும் அன்றோ !

## குறிப்பு

ஒவ்வொருவருக்கும் அமைந்துள்ள ஞான இந்திரியங்கள், உட்கரணங்கள் முதலான அனைத்திற்கும் மேலாக மயன் இங்கே விட்புலன் என்னும் ஓர் இந்திரியத்தை — ஒவ்வொரு மனிதனும் முயன்று அனுபவத்தில் சாதித்துக் கொள்ள வேண்டிய ஒரு கருவியை — முதன்முதலாக அறிமுகப்படுத்தி வைக்கின்றான்.

விட்புலன் என்பது அனுபூதி ஞானம் பெற்ற அருளாளர் களின் உள்ளத்தில் மலர்ந்திருக்கும் ஞான மலர்ச்சி நிலை.

There would arise confluence of thoughts, when all the conative and internal organs are set in one-pointed action. Thereupon, one should employ his space-organ to derive the quintessential knowledge of the thoughts, already accumulated in the mind. Only by this unfailing process one can understand the subtleties (mentioned in the preceding aphorism).

## NOTE

For the first time, Mayan introduces in this aphorism a supraphysical instrument or organ called space-organ (vitpulan). Spaceorgan is nothing but the state of mind atuned with the space of supreme consciousness.

ஒலிநிலை உணர்ந்தோர் உயிர்உணர்ந் தோரே (49)

ஒலிக்கூறுகளின் உண்மையான ஆற்றல் நிலையை உணர்ந்தவர்களே மூல உயிர்ப்பொருள், தனித்த உயிர்ப்பொருள் ஆகிய இரண்டின் இயல்புகள் அனைத்தையும் நன்கு உணர்ந்தவர்கள் ஆவர்.

## குறிப்பு

பிரபஞ்சம் முழுவதுமே நாத மயமாக இருப்பதாலும் மிகவும் நுண்ணியதான பறை என்னும் வாக்கினால் இறைநிலையும், தனித்த உயிரின் நிலையும் உணரப்படுவதாலும் இவ்வாறு கூறப்படுகிறது.

Those who are capable of realising the real and exact functional potency of sound (nada) and its varied

manifestations, are considered to have realised the real and exact nature of the cosmic soul and the individual soul.

## NOTE

Oli (ஒலி) denotes the heart beat of Reality, sounding the eternal of creative activity. The Sangita Ratnakara states: "Nada manifests letters; letters constitute the word, and words make a sentence; so the entire business of life is carried on, through language; and therefore the whole phenomenon is based on nada".

Hence, this assertion made by Mayan. There is an inseparable and concrete relationship between nada, cosmic soul and the individual soul.

ஐம்புலன் ஆற்றல் அமைவுறும் திறத்தால்
செம்மொழி இயல்திறம் உள்நிலை ஓர்ந்து
மெய்ம்மொழி ஓம்முதல் எழுத்தியல் நாடி
ஐவகை ஆய்தல் பெருங்கலைத் திறனே (50)

ஐந்து புலன்களின் ஆற்றல் அவ்வவர்க்கு ஏற்ப அமைந்திருக்கும் முறையால், செப்பம் உற அமைந்துள்ள மொழியின் இயல்பையும் திறத்தையும் உள்ளவாறு ஆய்ந்து ஆறிந்து (1) மெய்ம்மொழியாகிய ஓம் எனப்படும் முதல் எழுத்தின் இயல்பையும் அனுபவ ஞானத்தால் அறிந்து (2) இந்த இரண்டின் அடிப்படையிலும் மூலம் முதலான ஐந்து இயல்புகளை ஆய்வு செய்தலே பெருமைக்குரிய கலைத்திறமையாகும்.

First, one should recognise well the real nature and efficacy of a perfect language through the potentials of one's own organs of cognition (1); then he should proceed to understand experientially the nature of primal and eternal letter "OM" (2). Based on the virility of knowledge obtained through these two processes (i.e. attainment of general knowledge of a particular language and of specific knowledge of "OM") one should proceed to understand the five aspects of mulam etc. Only this process of analysing the five aspects is worthy of adoration as the true artistic skill.

காலம் அறிதலே கலைநெறி நுட்பம் (51)

கலைகளைப் பற்றிய நெறிமுறைகளின் நுட்பத்தை அறிதல் என்பது காலத்தின் இயக்க ஆற்றலைப் பற்றிய உண்மைகளை அறிதலே ஆகும்.

The process of knowing the minute details of varied arts is nothing but knowing the truths about the dynamic potentials of Time (i.e. Absolute time).

(The concept of inseparable correspondence between Time and varied manifestation of Arts is singularly significant as far as Mayonic Art is concerned.)

உள்ளும் உணர்வே உயர்கலை விரம் (52)

வாதப் பிரதிவாதங்களால் மறுக்க முடியாத வகையில் உயர்ந்து விளங்கும் கலைநுட்பம் என்பது, அனைத்தையும் உள்ளுணர்வால் அறியும் உள்ளத்தின் ஒடுக்கநிலையாகிய உணர்வு நிலையால் வெளிப்படுவதாகும்.

The basis and subtlety of art which remains unassailable by arguments and counter-arguments is manifested by the abstracted state of mind (Ullam) which is of the nature of knowing all the existential phenomena through deep-rooted contemplations.

பொருள் உணர்வு ஓங்கும் செஞ்சொல் தமிழே (53)

பொருளின் இயல்பினை உள்ளவாறு அறிவிக்கும் சொற்களை உடைய தமிழ்மொழியின் ஆற்றலால் பொருளே மயமாக விளங்கும் மூலப் பொருளாகிய உள்ளத்தின் உணர்வுநிலை ஓங்கி ஒளிரும்.

Through the efficacy of Tamil language which is naturally endowed with such a nice word-power as to reveal the characteristics of an object as they really are, the power of abstracted state of mind in which all types of manifestations and modifications occur, would get itself augmented.

உட்புலம் நோக்கல் விட்புலம் ஆய்தலே (54)

வெளி என்பதன் உண்மையான இயல்புகளை ஆய்தல் என்பது, பிரபஞ்சப் பொருள்கள் அனைத்தும் தோன்றி ஒடுங்குவதற்கு இடமாக உள்ள உள்ளத்தின் திறத்தை ஒருமுகப்பட்ட மனத்துடன் ஊன்றிக் காண்பதே ஆகும்.

The process of analysing the characteristics of space is, strictly speaking, seeing with pointed attention the efficacy of the mind, in which all the manifestations and involutions of space take place themselves.

அகஉணர்வு ஒன்றே அறிகலை நுணுக்கம் (55)

உள்ளத்தின் உணர்வு நிலையாகிய பெருநிலை ஒன்றே கலை நுணுக்கங்களை நன்றாக அறிந்து கொள்ளும் ஆற்றலை அளிக்கும்.

Only that exalted state of the abstracted mind could bestow on oneself the essential power to understand unmistakably the minute features of varied creative aspects.

உயிர்ப்பும் உணர்வும் ஒருவழி நிலையே (56)

உள்ளத்தின் ஒடுக்க நிலையாகிய உணர்வின் இயக்கமும் உயிர்ப்புக் காற்றின் இயக்கமும் ஒன்றனுக்கு ஒன்று ஆற்றல் தரும் வகையில் ஒரு தன்மைப்பட்டனவாய் இருக்கும்.

The dynamism of the abstracted state of mind and that of the natural respiratory process of the vital air, are of same nature, each one being a benefiting and regulating vibrant.

## NOTE

Previously, it has been stated by Mayan that Time is nothing but the vibrant and dynamic movement of mind (mulam). According to the concept of sidereal time, respirations serve as the units of time. Movement of mind and vital force are dependent on each other.

காலமும் களமும் மூலம் உணர்த்தும் (57)

காலம், இடம் எனப்படும் இரண்டும் மூலப் பொருளை உணர்த்தும்.

Both time and space will reveal the nature of the primal SPACE oı the primal absolute point of evolution or manifestation.

## NOTE

Any product or substance is the result of the interaction of both time and space. By analysing the design and substance of which a particular object is made, researchers arrive at 'such' time and at 'such' place. So also, time and space will reveal the nature of primal SPACE.

அகமும் புறமும் திணைஇரண் டாமே (58)

அகத்திணை, புறத்திணை எனத் திணை இரண்டு வகைப் படும்.

## குறிப்பு

– திணை – பொருள் வெளிப்படும் ஒழுங்குமுறை.

(இங்கே மயனால் குறிக்கப்படும் திணைப்பாகுபாடு, சங்க இலக்கியங்களில் காணப்படும் திணைப்பாகுபாடு அல்ல).

The process of universal phenomena is of two kinds: Internal and the External.

## NOTE

This classification, here stated by Mayan is not to be linked with the same kind of classification found in the Sangham literature. This phenomena denotes the rhythmic order of manifestation.

ஐந்திணை இயலே ஐந்தாறு மரபே (59)

மூலம் முதலாய ஐந்து திணைகளும் ஐயைந்தாக மாறுபட்டு வடிவு கொள்பவையாகும்.

## குறிப்பு

மூலமாகிய உள்ளத்தில் ஐந்து ஆற்றல்கள் (மூலம் முதலானவை) ஐந்து நிலைகளில் வெளிப்படுகின்றன. இவ்வெளிப் பாட்டினால், யாவும் ஐந்து ஐந்தாகவே உருக்கொள்ளும் என்பது மயன் கொள்கை. ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன், ஐங்கலை - என்பன போல.

The five aspects from mūlam to nālam always give rise to the manifestations of objects in pentadic process.

## NOTE

Five aspects like mulam etc, emerge in five states. Through this emergence, the pentadic manifestation takes place. Almost all of the universal objects are in pentadic manifestation.

கோட்டியல் வடிவும் புள்ளியும் குறியும்
நீட்டுறும் இயல்பாய் நிகழும் நெறியே (60)

'இப்படி ஆவது' எனக் குறத்து எழுவது, பிறகு புள்ளியாக உருப்பெறுவது; அதன் பிறகு பல எல்லைகளுக்கு அல்லது கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டுத் தோன்றும் வடிவு — எனக் கோலங்கள் நிகழும் நெறிமுறை இவ்வாறே நீண்டு அமையும்.

Within the primal space itself, first there occurs internally an urge as "let me become like this"; this urge turns into a point (dot); and thence occurs manifestation of forms conditioned by enclosures of lines, limitations etc. This is how the enduring process of manifestation of forms takes place.

வடிவியல் உருவியல் வரைவியல் ஆய்ந்தே
முடிநிலை எழுத்தியல் ஆய்ந்தறி திறனே (61)

வரைவியல், உரு இயல், வடிவு இயல் எனப்படும் மூன்று அடிப்படைகளாலும் எழுத்தின் முடிந்த நிலையை - அதாவது

உறுதிப்பட்ட நிலையை - ஆராய்ந்து அறியும் திறனே சிறப்புடையதாகும்.

## குறிப்பு

வரைவு இயல் என்பது ஒரு குறிப்பிட்ட எழுத்தை எழுதும் முறை; உரு இயல் என்பது அந்த எழுத்தின் ரூபம்; வடிவு இயல் என்பது எழுத்துக்கள் சொற்களாக வடிவு கொள்ளும் முறைமை. இந்தப் படிமுறை எழுத்து, ஓவியம், சிற்பம் ஆகிய அனைத்திற்கும் பொது.

ஓர் எழுத்தை எழுதுவதற்கும் குறிப்பிட்ட முறை உண்டு. அந்த எழுத்தை அந்த முறையால் அன்றி வேறு முறையால் எழுதுவது முறையும் அன்று; மரபும் அன்று.

.முடிநிலை என்பது முடிவான உறுதிப் பொருளைத் தெரியப்படுத்தும் நிலை.

The completeness of the inquiry on the nature of letter (or alphabets) could be effected on three-fold basis - process or procedure of scribing of word-form and of the cumulative and intended, the written form of letter. Only this inquiry would enable one to attain artistic skill of expression.

## NOTE

'To enunciate the exact process in a reverse order' - is one of traits peculiar to Mayan. Accordingly, the process expressed in this aphorism begins with 'varaivu iyal' (வரைவு இயல்). Varaivu iyal (வரைவு இயல்) - the exact manner of writing an alphabet. There is a particular process and rule for writing an alphabet. No alphabet could be written in arbitrary way. And this process carries with it a great significance.

*Uru iyal* ( உரு இயல் ) means the form of a particular letter. *Vedivu iyal* (வடிவு இயல்) means the cumulative and collective form of letters which make a word.

This three-fold basis is applicable not only to the letters but also to the art of drawing and of sculpture.

உயிர்நிறை முயற்சி உள்வளித் திறனே
செயிர்அற எழும்அணுத் திரளொலி ஆற்றல்
உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும்
வரவே இதழ்நாப் பல்வகைத் தொழிலாய்
வேறுவே றெழுத்தொலி யாய்வரல் நெறியே (62)

உயிர்ப்பினை நிறைவுறச் செய்வதாகிய முயற்சியால் உள்ளிருந்து எழும் பிராணனின் திறத்தால், சீரான முறையில் ஒலி அணுக்கள் தூண்டப்படும். அவ்வொலி மார்பு, கழுத்து, தலை, மூக்கு முதலான இடங்களில் பொருந்தி வெளிவரும். அவ்வாறு வெளிவரும் பொழுது உதடு, நாக்கு, பல் முதலான வற்றின் செயற்பாடுகளால் வேறுவேறு எழுத்தொலிகளாகப் பரிணமித்து ஒலிக்கும். இவ்வாறு வருவதுதான் நாதம் வெளிப்படும் நெறியாகும்.

## குறிப்பு

இதழ், நா, பல் முதலானவற்றின் செயற்பாடுகள் வெளிப்படையாகப் புலப்படுபவை.

ஒலி அணுக்கள் மார்பு முதலான இடங்களை பொருந்துவதால் நேரும் வேறுபாடுகள் வெளிப்படையாகப் புலனாகாதவை.

(In a particular self which is about to speak) the vital force is kindled owing to the perfect respiratory process. This vital force gives rise to the activisation of sound particles, which get variegated through their contact with chest, throat, cerebrum and nose; and owing to the functional impact of lips, tongue, teeth etc., the sound which arises internally assumes varied forms of articulated alphabets.

## NOTE

Mayan's theory of articulation holds good with almost all of the languages.

The Sangita Ratnakara (of Sarngadeva) speaks of the process of manifestation of sound in the human body (III: 3,4).

"Desirous of speech, the individuated being impels the mind, and the mind activates the soul-fire (i.e. force of creative energy) stationed in the body, which in its turn stimulates the vital force. The vital force stationed around the root of the navel, rising upwards gradually manifests sound (nada) in the navel, the heart, the throat, the cerebrum and the cavity of the mouth as it passes through them".

உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கிக்
கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற்பொருள் ஆகித்
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே (63)

தூய உள்ளம் ஆழ்ந்து சிந்திக்கும் செயலால், உணர்வுகள் ஓங்கும்; அதனால் கருத்துக்கள் மலரும். உடனே உள்ளம் அக்கருத்துக்களைப் புலப்படுத்த எண்ணும். அவ்வாறு புலப்படுத்த அது சொல்லும் சொல்லே, அச்சொல்லால் குறிக்கப்படும் பொருளாகவும் ஆகிறது. சொல்லே சொற்பொருளாகிறது என்பதான இந்த இரண்டற்ற நிலை தொன்றுதொட்டே வரும் ஒன்றாகும்.

## குறிப்பு

மொழி இலக்கண வல்லுநர்களிடையே, தீராத ஒரு போராட்டமாக இருந்து வரும் ஒரு கொள்கைக்கு மயன் அன்றே முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். முழுச் சிற்பியாக மட்டுமல்லாமல் மொழிச் சிற்பியாகவும் மயன் விளங்குவதை இங்கே காணலாம்.

சொல் வேறு, சொல்லால் குறிக்கப்படும் பொருள் வேறு என்பது ஒரு கொள்கை.

சொல்லுக்கும் அதனால் குறிக்கப்படும் பொருளுக்கும் இடையை பேதம் இல்லை; சொல்லே பொருளாகிறது என்பது மற்றொரு கொள்கை. மயன் இக்கொள்கையையே உறுதிப்படுத்து கிறான்.

கள்ளமில் உள்ளம்: ஒரு கருத்தைப் புலப்படுத்துவதற்கு முன்னர் வேறு எந்த உந்துதலுக்கும் சக்திக்கும் கோட்பாட்டிற்கும் ஆட்பட்டுவிடாமல் தன்னியல்பிலேயே விளங்கும் உள்ளமே இங்கு 'கள்ளமில் உள்ளம்' எனப்படுகிறது.

The mind, which remains in its own intrinsic nature, without being influenced by the external factors, begins to think; this gives rise to expressive urge which in its turn becomes the causal factor for the expression of thoughts. Thoughts are expressed through words which are articulated by the mind. In this process, the denoting word itself becomes the denoted object. This oneness of the denoter and the denoted is not anew. This is in accordance with the age-old uninterrupted tradition.

## NOTE

The established theory of Mayan is that the word itself becomes the meaning. Even now there exists prolonged and unending argument with regard to the identity of word and its meaning. Some grammarians are of the view that word is different from its meaning; some hold the view that "meaning itself is a word".

According to Mayan the word itself becomes the object denoted by it. Mayan, the greatest architect and sculptor, could not think that a word is different from its meaning. As the sculptor himself becomes the sculpture, the word itself becomes the object meant. 'Artham Padam'- says Aindra Vyakarana (Sanskrit).

எண்முத லாய்உறும் எண்ணியல் கலையே
எண்ணெண் கலைவிரி இயலல் வழக்கே (64)

எண்களை அடிப்படையாகக் கொண்ட எண்ணியல் அறுபத்து நான்கு கலைகளாகவும் விரிவடைகின்றது. இதுதான் தொன்று தொட்டு வரும் வழக்காகும்.

குறிப்பு

வளமான வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தும் நமது முன்னோர் மரபுப்படி எண்களின் அடிப்படையிலேயே உறுதி செய்யப்பட்டு வருகின்றன. ஆயாதி, யோனி முதலானவைகள் எண்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

Only the art of number system based on numbers gives rise for the emergence of sixty-four creative units. This view is being held by the uninterrupted lineage.

NOTE

The interplay of number in determining the congenial and salubrious structure and surroundings is very much evident in the Silpa sastras and the Agama sastras. Hence, the importance of number in any art field.

But this should not be confused with numerology.

மொழித்திறன் அறிந்தோர் விழிநிலை எய்தி
ஒளித்திறன் நுணுக்கம் உற்றறி வாரே (65)

மொழியின் நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்கள், அகநோக்கிற்கு இன்றியமையாத அறிவுக்கண் வாய்க்கப் பெற்று, ஒளிச்சக்தியின் நுணுக்கங்களையெல்லாம் அறியும் ஆற்றல் மிக்கவர்கள் ஆவார்கள்.

குறிப்பு

மொழியின் சூக்ஷ்ம நிலைக்கும், அது பருமைநிலை அடைவதற்கும் மூல ஒளிச் சக்தியே காரணமாகிறது. இக்கொள்கையைப் பற்றிய விரிவான விளக்கங்களை ஆகம நூல்களிலும் காணலாம்.

Those who are capable of realising the inexplicable subtleties of language would be endowed with the supreme power of gnostic-skill (intellectual virility) with which they could understand the properties and subtle potentials of

the primal light-source (which is the actual source of nada or sound).

## NOTE

Only the energy of primal light source becomes the casual factors for the subtle word and then for their subsequent modifications into grosser forms. This process is clearly explained in the Agamas and in the works of Abhinavagupta.

கண்ணும் கருத்தும் ஒன்றுவ போன்றே
எண்ணும் எழுத்தும் இயல்பில் திகழும் (66)

பார்க்கும் பார்வையில் கருத்து ஒன்றாது போனால் பொருள் புலப்படாது. எனவே பொருளைப் பார்க்கும் பொழுது கண்ணும் கருத்தும் ஒன்றி இருத்தல் போன்று எண்ணும் எழுத்தும் இயல்பாகவே ஒன்றி இருக்கும்.

## குறிப்பு

பிரணவத்தின் கலைகளால்தான் எண்ணம் செயல்படுகிறது. பிரணவத்தின் கலைகளே எழுத்துக்களாகப் பரிணமிக்கின்றன. எண்ணம் இன்றி எழுத்தோ, எழுத்தில்லாமல் எண்ணமோ செயல்படாது.

எண்ணம் – தொடர்ச்சியாகச் சிந்தித்தல்.

கருத்து – ஒரு பொருளில் மட்டும் ஊன்றி நோக்கல், தொடர்ச்சி இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

Just as the eye-sight and the mind are in complete union when looking at things, so also all the thought-force and alphabets are always intrinscially in union with one another.

## NOTE

An object cannot be seen or apprehended if the mind does not co-ordinate with the eye-sight. So also both letters

and thought force co-ordinate with each other. Each of our internal organ is impelled and energised by the constituents of the primal sound-source "OM".

In Tamil parlance, there is a difference between ennam எண்ணம் and karuthu (கருத்து).

In *ennam*, there prevails a continuous interaction between mind and the object.

But in *karuthu*, there need not prevail such a continuity. It is a finalised thought.

*ennam* is thought; but karuthu is the form developed out of karu (foetus) permeating the inner space.

ஒலிக்கு மூலம் ஒளி என்பது மயன் கண்டுபிடிப்பு. ஒலியானது ஒளியில் அடங்கி நின்று அல்லது கரைந்து ஒளிவடிவமாகி அகத்துக்குக் காட்சியாகிறது அல்லது உணர்வாகிறது என்பது மயன் கருத்து.

கதிரொளி வருமுன் எழுவோன் ஆகி
மதியொளி மலருளம் வாய்ப்பத் திகழ்ந்தே
உன்னும் திறனே ஓங்கிநற் குறிப்பால்
பன்னும் நூல்விரித் துரைக்கும் பாங்கால்
வரைவுறத் தீட்டலும் எழுதலும் குறித்தலும்
நிறைவுற இயற்றுவோன் அறிவன் ஆகுவனே. (67)

சூரியன் உதயம் ஆவதற்கு முன் விழித்து எழுபவன்; ஞான ஒளி மலர்ச்சி பெற்றிருக்கும் உள்ளம் வாய்க்கப் பெற்றவன்; சிந்திக்கும் ஆற்றல் மிகப் பெற்றவன்; (பலரும் பயன் பெற வேண்டும் எனும்) நல்ல குறிக்கோளுடன் பல பொருள்களையும் பேசும் நூல்களுக்கு விரிவான விளக்கம் கொடுக்க வல்லவன்; (1) இன்னவாறு எழுத வேண்டும் என முடிவு செய்து கொள்ளுதல் (2) எழுதல் (3) திட்டமிட்ட வண்ணம் முழுமைபெற விரிவாக வரைதல் — ஆகிய இம்மூன்று திறப்பாடுகளையும் நிறைவுறச் செய்பவன் — இவனே 'அறிவன்' எனச் சிறப்பாகக் குறிக்கப்படு வதற்கு உரியவன்.

One who is accustomed to wake up even before sunrise; whose mind is supercharged with intellectual

vigour; who is highly endowed with the capacity of penetrating rationalisation; who has good objectives; who is endowed with the expressive skill of offering elaborate exposition on the works dealing with varied subject matter; who is capable of effecting the threefold accomplishment comprising - i) a methodic plan of commenting on the subject ii) writing the proposed commentary and (iii) fulfilling the task undertaken without being affected by interruptions.

– Only such a person deserves to be designated as the *"Knower of the Essentials"* (ARIVAN)

மூவகைக் குற்றமும் முற்றுற நீங்கி
ஐவகைப் பொறிபுலன் இயல்நிலை அறிந்தே
செய்வகை மாறாத் திறத்தினன் ஆகி
உய்வகை செய்வினை உஞற்றுபேர் அறிவால்
முனைவன் ஆகி நூல்விளம் புவனே. (68)

மூன்று வகைப்பட்ட குற்றங்களும் அறவே நீங்கப் பெற்றவன்; (ஐயம், திரிபு, நூல்பொருளினின்று விலகல்); ஐவகைப்பட்ட பொறிகள் புலன்கள் ஆகியவற்றின் இயற்கையான ஆற்றலை அறிந்துள்ளவன்; 'இதனை இவ்வாறு செய்க' என முன்னோராலும் நூல்களாலும் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை விடாமல் பின்பற்றுபவன்; அனைத்து உயிர்களும் உய்யக் கூடிய முறையில் தன் செயல்களைச் செய்யக்கூடிய பேரறிவு வாய்ந்தவன் இத்தகைய இயல்புகள் மாறாமல் நிலைக்கப் பெற்றவனே 'முனைவன' என அழைக்கப்படுவதற்கு உரிய சிறப்பைப் பெறுகிறான். இத்தகையோனே, என்றும் நிலைக்கத்தக்க நூலை இயற்றும் ஆற்றல் பெற்றவனாகிறான்.

One who is completely devoid of three blemishes (doubt, distortion and diversion); who has recognised the functional efficacy of his cognitive and conative organs; who is unceasingly and diligently intent on following the rules and regulations enunciated by the great seers and enshrined in the scriptures, for accomplishing an act; who is endowed with supreme knowledge which directs him to do his works for the benefit of all beings—

- gets elevated to be called MUNAIVAN (முனைவன்) i.e. man of accomplishments.

Only such a man of exalted state could bring out a work of long lasting value.

மூவகைக் காலமும் மெய்ம்மையின் ஆய்ந்தே
ஓவிலா துழைத்தே உறுபொருள் நோக்கி
ஆவலாய்க் கலைத்திறம் நாட்டம்உற் றுணர்வோன்
மேவுறும் படைப்பியல் மெய்யறி வாளன் (69)

மூவகைப்பட்ட காலங்களின் ஆற்றல்களையும் உள்ளவாறே ஆய்ந்து ஓய்வில்லாமல் உழைப்பவனாகி (அல்லது விதிமுறை களிலிருந்து நீங்கிச் செல்லாமல் செயல்களைச் செய்பவனாகி), முடிவான உறுதிப்பொருள் இதுதான் என்பதை நுனித்துணர்ந்து, கலைத்திறத்தின் மீது கொண்டுள்ள ஆவலால் அதனை உள்ளவாறு அறியவேண்டும் என்னும் நாட்டம் கொண்டு, உண்மையை உணரவல்ல மெய்ஞ்ஞானியாவன். (மெய்ஞ்ஞானிக் குரிய இலக்கணங்கள் இவை).

(ஓவிலாது - ஓய்வில்லாது; ஓவுதல் - நீங்குதல்; விதிமுறை களிலிருந்து நீங்காமல் என்றும் பொருள் கொள்ளலாம்).

Having known the exact efficacy of the three-fold time, one,

- who toils without being affected by tiresome activities or violations.
- who knows the eternal and existential truth through one-pointed contemplation.
- who, being endowed with eagerness and affinity towards creative art and with the motive of realising the exact nature of that art, understand its ultimate significance.

becomes a seer, capable of knowing the secrets of creative skill (or creation) which comes down from time immemorial.

இயற்கை உணர்வால் எழுச்சியும் உணர்வும்
மயலறப் பொருந்தி கற்பனை திகழ்ந்தே
பற்பலர் புகழப் பாங்குறும் வகையில்
பொற்புறப் பாடுவோன் பாடவல் லவனே (70)

இயல்பாகவே எழும் ஓர் உந்துதல் உணர்வால், தெளிந்த நிலையில் எழுச்சி, உணர்வு முதலானவை வாய்க்கப் பெற்றவனாய், இவற்றின் காரணமாக உருவாகும் கற்பனைத்திறம் திகழப்பெற்று, அறிஞர் பலராலும் புகழப்படும் முறையில் பாங்காகவும் பொலிவாகவும் பாடும் ஆற்றல் உள்ளவனே பாடற்கலையில் வல்லவன் எனச் சிறப்புறக் கூறப்படுபவன் ஆவான்.

(பாடற்கலை என்பது பாட்டு இயற்றும் கலையை மட்டுமல்லாமல் பாடலை இசையோடு பாடும் இசைக்கலையையும் குறிக்கும்).

Only that person who is endowed with definitive urge and enthusiasm through spontaneous creative instincts,

- who has the expressive imagination manifested through them

- who has ability and skill to sing methodically and melodiously so as to be appreciated by the critics of arts becomes fit to be extolled as an expert in the field of composing or singing.

இனிமை எளிமை இன்பம் பயப்பதாய்
தனிமைச் சிறப்பும் சொற்பொருள் அழகும்
தோன்றாப் புதுப்பொருள் தோன்றக் காட்டித்
தோன்றும் நுட்பம் திட்பமும் விளக்கி
ஆன்றவிந்து அடங்குவோர் அகப்புறம் நாடி
ஏன்றுகொள் இயல்பில் எண்கலை திகழ
ஆய்தொறும் அணிபொருள் விளங்கத் தோன்றி
மூவாத் தன்மை முகிழ்பெற்று இலங்கிப்
பண்பைத் தெரிக்கும் செந்தமிழ்ப் பாடலே (71)

செந்தமிழ்ப் பாடல் என்பது

இனிமை, எளிமை, இன்பம் முதலிய நயங்களோடு கூடியதாகவும் தனிச்சிறப்பு வாய்ந்தாகவும்,

சொற்பொலிவும் பொருட்பொலிவும் பொருந்தப் பெற்றதாகவும்,

மற்றோரால் இதுவரை வெளிப்படுத்தப்படாத புதுப் பொருளை விளக்கமாகக் காட்டுவதாகவும்,

படிக்கும் தோறும் படிக்கும் தோறும் புலனாகக்கூடிய நுட்பமும் திட்பமும் விளங்குவதாகவும்,

பிண்டத்தின் இயல்பையும் அண்டத்தின் இயல்பையும் ஆய்ந்து புலனடக்கம் வாய்க்கப் பெற்றுள்ள நிறைஞானப் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும்,

ஆராயும் தோறும் எண்கலை திகழுமாறு உள்ள பல்வகை அணிகளும் (அலங்காரங்களும்) தோன்றி விளங்குவதாகவும்,

எக்காலத்துக்கும் பொருந்துமாறு உள்ள கருத்துவளம் மலர்ச்சி பெற்று விளங்குவதாகவும்,

முழுமைத் தன்மை என்பது இதுதான் என்பதைத் தெரிவிக்கக்கூடியதாகவும் திகழும்.

An impeccable Tamil song is one (Tamil means first emanated creative word)

- which is embellished with such characteristics as mellifluousness (sweetness), simplicity, bliss, etc.
- which manifests its own uniqueness
- which is associated with the brilliancy of words and content
- which is expressive of new concepts, not revealed so far
- which contains in itself subtlety and plausibility which reveal themselves as and when the poem is studied.

- which is acceptable to the great seers of perfect knowledge who have their self-control by means of the process of internal-external space identity
- which is associated with varied embellishments which reveal themselves as and when the poem is critically studied.
- which reveal the wealth of theories and concepts of eternal value

  and which suggestively reveals the characteristics of completeness or wholeness.

ஓர்அறி உயிர்முதல் ஆறறி உயிரும்
நேர்அறி தன்மை நிலவிய பண்பைச்
சீர்அறி வுற்றுத் தெள்ளிதின் உணர்ந்தே
ஞாலம், ஆழி, விண்மண், கோளம்
கோலச் செந்தீ புனல்காற்று இயலும்
ஒளிவெளி வெளித்திறன் ஓங்குற ஆய்ந்து
விளித்தியல் செய்ம்முறை விளக்குவோன் ஆகி
செய்ம்முறை செய்தே திறம்பல ஆக்குவன்
உய்ம்முறை ஞாலம் வாழ்நிலை செய்வன்
குறிதவ றாநிலை குறிப்பறிந்து இயற்றும்
அறிவியல் ஆய்வன் கலைத்திற லோனே. (72)

கலைத்திறம் முதிர்ந்த பேரறிவாளன் என்பவன் —

ஓர் அறிவுடைய உயிர்க் கூட்டம் முதல் ஆறறிவு உடைய உயிர்க் கூட்டம் வரை உள்ள அனைத்தும் பொருளை அறியக் கூடிய முறையை நன்கு அறிந்து தெளிவு பெற்றவன்;

உலகம், கடல், விண், பூமி, அண்டம் (உருவத்திற்கு அடிப்படையான) தீ, நீர், காற்று, ஒளி, பிரபஞ்ச மண்டலத்தில் இயங்கும் காற்றுமண்டலம், (பூத) ஆகாச மண்டலத்திற்கும் மேற்பட்டதான பராகாசம் ஆகிய இயவற்றின் இயல்புகளை நன்கு ஆய்ந்தவன்;

இவ்வாறு ஆய்ந்து கண்ட பொருளை ஞாலம் உய்யும் வகையில், உரியோர்க்ளை அழைத்து அறிவிக்க வேண்டிய முறையில் அனுபவ நெறி நின்று விளக்குபவன்; நிலைத்து விளங்கக்கூடிய குறிக்கோள் தவறாமல் ஒவ்வொரு வடிவத்தையும் (படைப்பையும்) அதனதன் முக்கிய பயனை அறிந்து படைக்க

வல்லவன்; அறிவு நெறிப்படி மேற்கூறப்பட்ட அனைத்தையும் ஆராயவல்லவன்.

A man of great erudition and creative skill is one-

- who has realised, in all clarity, the process of knowing adopted by all beings - beings ranging from those endowed with single faculty of knowing to those with six-faculties of knowing
- who analysed and realised the characteristics of world, ocean, elemental space, earth, macrocosm, fire, water, air, light, the air-plane dynamically existing in the cosmic space and the primal space.
- who, having known the characteristics of all those mentioned above, summons the deserving aspirants and systematically explains to them for the benefit of the world.
- who, having known the ultimate purpose of varied creations, creates them according to their eternal values and motives and who is capable of analysing all these details in a scientific way.

எண்கலை நூற்றியல் எண்முறை ஆய்ந்தே
விண்கலை நோக்கிக் கோளமும் நுணுகி
நுண்கலை நுகர்முறை ஆய்முறை தெரிந்தே
எண்கலை ஆய்வன் எண்ணறி வாளனே. (73)

எண்ணும் கலையின் அடிப்படையில் நூற்றின் மடங்குகளை எண்முறைப்படி ஆராய்ந்து, விண்ணில் இயங்கும் கோள்களின் நிலைமையும் நோக்கி அண்ட கோளத்தின் நுட்பங்களையும் சீரிய முறையில் கண்டு, நுண்கலை (ரம்யம்), நுகர்முறை (போகம்) ஆகிய இவற்றை ஆராய்ந்து அறியும் முறைமைகளை நன்கு தெரிந்து கொண்டு மேலும் மேலும் எண்கலையை ஆய்வு செய்பவனே, எண்ணின் இயல்புகளை உணர்ந்திருக்கும் அறிவாளன் ஆவன்.

The knowers of the number-pattern is one

- who has critically and systematically studied the magnifying process of hundred based on the characteristics of eight-fold formation

- who has correctly studied the movements of planets in space
- who has analysed exactly the subtleties of the spheroid
- who has known the process of analysing the nature of *ramya* and *bhoga*.

and who keeps himself always in analysing the nature of eight fold mandala.

கண்டமெய்ப் பொருளைக் கருத்துற ஆய்ந்தே
விண்டுறும் ஆற்றலான் பேரறி வாளனே. (74)

அனுபவ பூர்வமாக மூலமாகிய உள்ளத்தில் கண்டறிந்த மெய்ப் பொருளை மேலும் சிந்தித்து, அவ்வாறு சிந்தித்துத் தெளிந்த கருத்தைப் பிறர் உள்ளத்திலும் பதியுமாறு முறைப்படி வெளிப் படுத்தும் ஆற்றல் உடையவனே பேரறிவாளன் எனப் போற்றப் படுவதற்கு உரியவன்.

A man of great intellectual potential is one who meditates on the essential nature of the primal existence realised by him through his own intuition and who is capable of revealing the result of such meditations to the deserving aspirants.

கற்பன யாவும் உள்ளுளே உணர்ந்து
பொற்புறும் ஆற்றலால் ஐந்தியல் நோக்கிச்
சொற்பொருள் உண்மை திறமுறத் தெரிந்து
முற்றும் உணர்வால் மூலத்து இயலால்
நாடி நாடி நலமுறத் தெரிவோன்
ஈடில் அறிவனாய் எண்-எழுத்து உணர்வனே. (75)

தான் கற்றறிந்த மெய்ந்நூல்களின் கருத்துக்கள் அனைத்தையும் உள்ளத்தே சிந்தித்துத் தெளிந்து,

அதன் விளைவாக மலரும் திறமையால் ஐந்தியலை நுணுகிக் கண்டு, சொற்-பொருள் உண்மையைப் பிறழாமல் உணர்ந்து, அவ்வாறு உணர்ந்தவற்றைப் பரிபக்குவ முதிர்ச்சியால் மூலப்பொருளின் உண்மைக்கு மாறுபடாத வகையில் மேலும் மேலும் சிந்தித்து, உலகமெலாம் நன்மையடைய உணர்த்தும்

வகையை ஆராய்ந்து அறியவன் தன்னொப்பில்லாத அறிஞனாக விளங்குவதோடு எண்ணுக்கும் எழுத்துக்கும் உள்ள பிணைப்பையும் உணர்ந்தவனாகத் திகழ்வான்.

One who has obtained a clear knowledge of the truths enshrined in the scriptures through deep-rooted thinking

- who knows the nature of five aspects through the power gained by such deep thinking
- who faithfully understands the meaning of the text without doubt or distortion
- who more and more thinks over the concepts thus understood, without contradicting the truths of primal existence, and who knows, in an analytical way, the process of imparting these concepts for the benefit of the world—

would flower into an unrivalled man of wisdom; also, he would shine forth as a seer who has recognised the inseparable relationship between number and letter.

எண்ணிலை மூலம் எண்ணியல் கலையும்
எண்கலைத் திறனும் எண்முறை ஆற்றலும்
திண்ணமாய் உணர்ந்து செயல்புரி திறத்தால்
எண்வினை நுட்பத்து இயல்அறி வாளனே (76)

எண்நிலையின் மூலம், (மூல அளவு), எண்ணியல் கலை, எண்கலையின் ஆற்றல், எண்முறையின் ஆற்றல் — ஆகிய இவற்றை உறுதியாக உணர்ந்து கொண்டு, அவ்வாறு உணர்ந்ததன் அடிப்படையில் செயலாற்றும் திறம் (படைக்கும் திறம்) உடையவனாக விளங்குவதால், இவற்றை உணர்ந்தவன் (கருத்தூன்றி, தியானபாவமாகச் செய்யும்) (செயல்களின்) இயல்புகளை நன்கு அறிந்திருக்கும் பேரறிவாளனே ஆவன்.

Having undoubtedly and firmly known the basic unit of number-system, the mechanism of number-system, the efficacy of eight-fold art, and the dynamism of eight-fold process, a man of dexterity becomes efficacious in creative function. Because of such ability, he, the knower of the subtle characteristics of eight-fold pattern becomes the

knower of all the characteristics of the deeds executed through one-pointed concentration.

உணர்வின் திறமே பெருந்திறல் வலிமை (77)

அகநோக்கமாக ஆராயும் உணர்வின் திறமே பெருமைக்குரிய ஆற்றலும் வலிமையும் ஆகும்.

Only that power of knowing through ones own introvert thinking is to be considered as the meritorious power and strength.

உணர்வுற் றோரே உழைப்புறு மக்களாய்
உணர்வால் ஞாலம் விண்ணும் ஆள்வரே (78)

மேற்கூறப்பட்ட அக உணர்வுத்திறன் வாய்க்கப் பெற்றவர்களே முறைப்படிச் செயலாற்றும் ஆற்றல் மிக்கவர்களாவர். அத்தகைய அகஉணர்வுத் திறம் உடையவர்கள், ஞாலத்தை மட்டுமல்லாமல் விண்ணையும் ஆள்பவர்களாகத் திகழ்வார்கள்.

Only those who possess the meritorious power of introvert thinking becomes powerful in executing the task in an orderly way. Such persons would hold under their control not only the earth but also other worlds existing in space.

எண்கலை ஆய்தல் விண்கலை அளத்தல் (79)

எண்கலையின் நுட்பங்களைப்பற்றி ஆராய்தலே, விண்கலையின் நுட்பங்களை அளப்பதற்கு அடிப்படையாகும்.

Only the process of analysing the subtleties of number system is the basis for knowing the subtleties of space-aspects.

உணர்வால் கலைத்திறன் ஒருநொடி ஆயின்
உள்ளும் புறமும் நிறையுணர் வுற்றே
தெள்ளும் கலைத்திறன் சீருற இயங்கித்
துள்ளும் மாப்பொருள் விளக்கமாய் உறுமே (80)

மேற்கூறப்பட்ட அக உணர்வால் கலைத்திற நுட்பங்களையெல்லாம் சிறிதளவே ஆய்ந்தாலும், (அதன் பயனாக),

அகத்திலும் புறத்திலும் நிறைந்திருக்கும் ஞான ஒளியை உணரும் ஆற்றல் மலரும்;

தெளிந்த கலைத்திறன் சிறப்புறப் பொருந்தப் பெற்று, ஓர் இயக்கம் கொள்ளும் (அதனால்)

தன்னை வெளிப்படுத்திக்கொள்ள ஒவ்வொரு கணமும் துடித்துக் கொண்டிருக்கும் பரம்பொருளானது அவ்வுளத்தில் விளக்கமுற்றுத் திகழும்.

Even though the analysis of the minute details and characteristics of arts made through internal experiential process would be of very little duration (or measure), it would enable one to attain the power of realising the knowledge-effulfgence which is (always) in its completeness (or wholeness) both in and out of one's own existence. Thereupon, an unfailing creative power would dawn on him and have its functional dynamism. The supreme existence, which is throbbing every moment to expose itself, would have its distinct manifestation in his perfect mind.

அகத்துணர் வொன்றே மிகுத்துறும் பயனே (81)

அனைத்திற்கும் மேம்பட்டதும் உயர்வுடையதுமான பயனை அளிப்பது அகத்துணர்வு ஒன்றே ஆகும்.

Only the internal process of ideation would bestow upon oneself the ultimate effect which is in its most supreme state and excellence.

உள்ளொளி யன்றோ உணர்வியல் ஆற்றல் (82)

அகத்துணர்வியலின் இயல்பான ஆற்றல், மூலமாகிய உள்வெளியில் ஒளிரும் ஒளியின் சுழற்சியால் உருவாவதன்றோ!

Only through the self-centred rotation of the light source of internal-primal space, the intrinsic (or innate) dynamism of internal intellectual capacity is manifested.

பொருளை நாடிப் பொருளறிந்து இயலால்
முதலுறும் உணர்வும் தெள்ளொளித் திறனும்

காலமும் மூலமும் கடிதுற நோக்கிக்
கோலமும் சீலமும் நவையறப் புரிந்து
ஞாலம் காணும் நல்லறி வாளரே. (83)

மூலப்பொருளை நாடி, அதனை உள்ளவாறு அறிந்து, உள்ளுக்குள்ளே பொருந்தி இயங்கும் உணர்வாற்றலால், முதற்பொருளைப் பற்றி உண்டாகும் உணர்வும், தெளிந்த ஞான ஒளித்திறனும் பெற்று, காலம் மூலம் எனப்படும் இரண்டும் ஒரு திரட்சி பெற்று அமையுமாறு உள்ளத்தாற் கண்டு கோலம், சீலம் ஆகிய இவற்றையும் குற்றமற்ற வகையில் விளங்கிக் கொண்டு நல்லறிவாளர்கள் ஞாலம் முழுவதையும் உள்ளும் புறம்பும் காணவல்லவராவர்.

(கடிது - கனிபாவம் என்பர்: ரஸம் ஒரு வடிவாகத் திரண்டு அமைதல்)

The will to know the Primal substance would lead to the manifestation of the dynamic cognitive power. Through this power one should obtain the intuitional knowledge of the Primal existence and effulgent knowledge in all its clarity. Then he should proceed to see through his mind the solidified structure of kālam and mūlam; then he should understand in a flawless way the nature of kolam and silam. The men of erudition who follow this process are sure to see the whole universe inside and outside.

ஐந்தியல் தமிழே உணர்கலை ஆற்றல் (84)

உட்பொருளை உணரும் கலை ஆற்றல் என்பது ஐந்தியல் தமிழை ஆதாரமாகக் கொண்டதே.

The dynamism of art which is capable of imparting the truths of eternal existence is based on the five aspects of Tamil (i.e., the five-fold formation or evolution of the first manifestation)

உள்ளூறும் ஒளியே உணர்நிலைத் திறத்தால்
தெள்ளூறும் ஒளியாய் ஓசைத் திறமாய்
விள்ளூறும் சொற்பொருள் ஓங்கத் தெரிந்தே
தெள்ளூறும் மொழிநிலை கலைநிலை இயலே. (85)

உள்ளே பொருந்தி எழும் ஒளியே, உள்ளவாறு உணரும் ஆற்றலால் தெளிந்த ஒலியாகவும், ஓசைவகையாகவும், (பின்னர்) தெளிவாக வெளிப்படும் சொற்பொருளாகவும் பரிணமிக்கிறது. இவற்றை ஆராய்ந்து மொழிநிலையின் தெளிந்த நிலையைக் காண்பதே கலைத்திறத்தின் இலக்கணமாகும்.

Only the light that manifests from within assumes finer and clearer proportions through one's own intuitive power, and brings into effect the sound patterns. These, in their turn, assume word-forms that are clearly articulated. One should understand the real and clear stage of a language by sifting the characteristics of word-forms. This is the real mark for the manifestation of creative skill.

காலமும் கணக்கும் கடிதியல் அறிந்தே
ஞாலத்து இயலை உணர்வின் ஓர்ந்தே
மூலமும் பொருளும் முறைமையின் நோக்கிக்
கோலமும் சீலமும் குறிநிலை இயல்பே. (86)

இயல்பான ஆய்வு முறையாவது -

காலம், கணக்கு, காலமும் கணக்கும் திரண்டு அமையும் நிலை, ஞாலத்தின் இயல்பை அக உணர்வால் ஆய்தல், மூலம், பொருள் இவற்றை முறைப்படி ஆராய்ந்துணர்தல், கோலம், சீலம் - எனப்படும் இவற்றைக் குறக்கோளாகக் கொண்டது.

A methodic research which could be so natural and uninfluenced by external factors is one which has for its precise subject-matter the following:

Time, mathematical order, the concretised state formed of Time and calculation, the analysis of the nature of the world through internal mechanism, a systematic realisation of Primal existence and Substance, Forms and Rhythms.

அசையும் சீரும் அமைவுறத் தெரிந்தே
நசையின் நீக்கி நல்லவை தெளிந்தே
ஒலிமுறை எழுத்தின் உண்மை ஒளியை
நிலையுறக் காண்டல் நெறிக்கலை முறையே (87)

படைப்பு நெறி எனப்படும் கலையை உணரும் வழிமுறையாவது - அசை, சீர் என்பனவற்றைப் பொருத்தமுறத் தீர்மானம் செய்து அமங்களமானவற்றை நீக்கி மங்களமானவற்றை ஏற்றுக் கொண்டு, ஒலிக்கூட்டமாம் முறைமையை உடைய எழுத்தின் உண்மை ஒளியை (நிறத்தை) நிலைபேறு உடைய வகையில் காண்பதேயாகும்.

One should, at the outset, determine the mode of syllables and words in a fitting manner; then he should eliminate those which are inauspicious and employ those which are auspicious; he should see the constant and the essential effulgence of letters formed of sound-pattern. This is the exact process of attaining the power of creative art (of poem or structure).

உறுதியும் உண்மையும் உழைப்பு உணர்வும்
பெறுவகைக் கலைத்திறன் பெட்புற நல்குமே (88)

உறுதி, உண்மை, உழைப்பு, உணர்வு — இவை மேற்கூறப் பட்டவற்றைப் பெறுவதற்கான முறையில் கலைத்திறனை யாவரும் விரும்புமாறு கொடுக்கும்.

Steadfastness (in accomplishing the undertaken task), the real knowledge of that task, continued and orderly endeavour, the satisfactory feeling that what is undertaken is beneficial (to the world) - all these would yield the creative-skill so as to be cherished by all. These would also enable one to acquire the exact process (mentioned in the precious aphorism).

எழுத்து அசை சீர்தளை அடியென் றைந்தாய்
வழுத்தும் இயலால் தொடைநிலை நோக்கிச்
செழுநிலைப் பாலே சீர்உற்று ஓங்கும். (89)

கருத்துவளம் வாய்ந்த பாட்டு என்பது எழுத்து, அசை, சீர், தளை, அடி எனப்படும் ஐந்தின் அடிப்படையிலும், இவற்றால் இயல்புற அமையும் தொடை என்பதன் அடிப்படையிலும் சிறப்புற்று அமைந்து பெருமைபெறும்.

(இவ்வைந்து கூறுகளும் தொடை என்பதும் உருவக முறையில் கட்டிடம் முதலானவற்றிற்கும் பொருந்தும்).

A song pregnant with plentitude of thoughts would assume its form and popularity based on the exact selection of letter, syllables, word, binding linkage (தளை) and metre and on what is known as the structural embellishment (தொடை).

(By way of implication these features like letters, syllables etc., are equally applicable to an architectural structure).

பாவியல் உணர்ந்தோர் நாவியல் அறிவரே. (90)

பாட்டுக்களின் இயல்பான ஆற்றலை உணர்ந்தவர்கள் நாநலத்தின் தனி ஆற்றலை அறிந்தவர்களாவர்.

(வேறுபொருள் : வாஸ்து சக்தி பரவிநிற்கும் நிலையை உணர்ந்தவர்கள் மையப்புள்ளியின் தனி இயல்பையும் அறிந்தவர்களாவார்கள) - நா - நடு; நடுப்புள்ளி

Those who know the innate characteristics of songs (or the methodology of song) are sure to know the unique power of tongue (i.e. language)

(Those who know the ubiquitous nature of Vastu are sure to realise the unique power of the central and primal point.)

பாநெறி ஒன்றே தூ நெறி நுட்பம் (91)

தூய நெறியின் நுண்மை என்பது பாட்டுநெறி எனப்படும் ஒன்றைச் சார்ந்ததேயாகும்.

(பாநெறி என்பது வாஸ்துவை பதங்களாகப் பிரிக்கும் முறையையும் குறிக்கும்).

The subtlety of pure process consists in the exact method of composing.

(Paneri-may also be taken to denote the process of reticulation over the select plot (Vastu)

காலமும் களமும் கருத்துற்று ஆய்ந்தே
மூலம் நாடுவர் மூதறிவு உற்றோர் (92)

காலம், இடம் என்பனவற்றைத் திட்டவட்டமாக ஆராய்ந்து மூலப்பொருளின் தன்மைகளை உள்ளவாறு உறுதிபடுத்துவதைப் பற்றி ஆராய்வர், பழுத்த அறிவினை உடையவர்கள்.

The men of consummate knowledge, having analysed thoroughly the nature of Time and Space, would proceed to know about the Primal Existence.

கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிக் காலமும்
எண்ணியல் நெறியால் காலம் ஓர்ந்து
திண்ணிய உளமும் உழைப்புணர்வு உற்றே
நண்ணுவர் காலத்து இயல்அறி மக்கள் (93)

காலத்தின் இயல்பினை அறிந்தவர்கள், கண்ணிமைப் பொழுது, கைந்நொடிப் பொழுது முதலானவற்றைக் கணக்கிடும் வழிமுறையால் காலத்தின் ஆற்றலை நன்குணர்வர்; பிறகு, உறுதிப்பாடான உள்ளமும் உழைப்பும் உணர்வும் பொருந்தப் பெற்றவர்களாகி, உரிய முயற்சியை மேற்கொள்வார்கள்.

Those who have realised the nature of Time, would clearly understand the dynamism of Time through the calculation of time units such as twinkling of eye, snapping of finger etc., and they would be endowed with such characteristics as steadfastness, endeavour and enthusiasm, and then they would proceed to involve themselves into perfect activities.

எழுத்து முதல்ஐந்து இயல்நிலை தெளிந்தே
வழுத்து நெறிமுறை தூக்கும் தேர்ந்து
செழுங்கலைத் திறன்நிலை செய்யும் திறத்தால்
பழமைப் பண்பும் புதுமைச் சீர்நெறி
கிழமை நெறிநிலை கிளரொளி தூண்டத்
தோன்றும் கற்பனை சொற்பொருள் அணியாய்
மூன்றும் முகிழ்த்திடும் பாடல் செழுமி
மூலப் பொருளும் முகிழ்நிலை விரிவும்
சீலத் திறனும் சிறுபிரிவு ஆக்கமும்
கோலத் தன்மை குவிந்து நோக்குறும்
ஞாலமும் விண்ணும் நன்னிலை மிளிர
ஐந்தியல் நெறியாய் அகம்புறம் இரண்டாய்
வந்தசெந் தமிழ்நூல் வகுக்கப் படுமே (94)

ஒரு நூலை உருவாக்குவதற்கு முன் எழுத்து முதலான ஐந்தின் இயல்பான நிலையைத் தெளிவாக அறிய வேண்டும்; உள்ளுக்குள்ளே கிளர்ந்தெழும் ஒளியாற்றல் தூண்ட, கலையழகு, பழமைப் பண்பு, புதுமைப்பொலிவு ஆகிய இவையெல்லாம் ஒன்றனுக்கு ஒன்று நெருங்கிய தொடர்புடையனவாக விளங்குமாறு நூலை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு உருவாகும் நூல் கற்பனை, சொற்பொருள் அமைதி, அணிநலம் ஆகிய மூன்று நயங்களும் பொருந்தப் பெற்ற பாடல்களைக் கொண்டு விளங்கும்.

மூலப்பொருள், அதன் வெளிப்பாட்டிற்குரிய கலைகளின் விரிவு, சீலத்திறன், அதன் கூறுபாடுகள், கோலங்களின் (வடிவங்களின்) இயல்பு, உள்ளத்தை ஒருமுகப்படுத்திக் காண்பதால் புலனாகும், ஞாலத்தின் இயல்பு, விண்ணின் இயல்பு — ஆகிய இவை நன்கு விளங்குமாறு மூலம் முதலான ஐந்தியல் நெறியில் நூல் அமையும்.

இந்த ஐந்தியல் அக ஐந்தியல், புற ஐந்தியல் என இரண்டு வகைப்படும். இந்த இரண்டு வகைகளிலேயே தமிழ் நூல்கள் வழிவழியாக வகுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

Upon the knowledge of innate nature of the five essential aspects such as letter, word etc., one's own internal brilliance would get itself kindled; thereupon, a work of great merit would emerge in which the enduring artistic subtleties, the truthfulness of age-old tradition and the impact of novelty or innovation would relatedly find their place. That work would consist of verses endowed with finer qualities like fresh ideation, brevity and beauty of words, embellishment etc.

Such works would have their complete structure based on the following subjects: Primal existence, comprehensive arts through which it manifests itself, rhythm, its varieties, the nature of forms (artistic creations), the nature of world cognizable through one-pointed attention, the nature of space, etc. In this way, a work of great value would evolve based on the five aspects.

These are classified into two : i) abstract and ii) concrete. Traditionally, all the works of Tamil are classified in these two ways.

முப்பொருள் திறமும் முகிழ்க்கக் கூட்டினும்
செப்புறும் சீர்நெறி செறிவுற்று ஓங்கி
வண்ணமும் இசையும் வகுத்து இயல் பிரித்துப்
பொருள்நிறைவு. ஓங்கிப் பெருவனப்பு உற்றே
திருவுறும் பெருநூல் இலங்கும் மரபே (95)

கற்பனை, சொற்பொருள் அமைதி, அணிநலம் இம்மூன்றும் நன்கு அமைந்தாலும், சொல்லப்படும் பொருளை - சீராக - முறையாக விளக்கும் திறமையானது நன்கு பொருந்தி இருக்க வேண்டும். ஒழுகிசை முதலான வண்ணங்களும், இசைநயமும், 'இன்ன பகுதிக்கு இது பொருந்தும்' எனச் சீர்தூக்கிப் பார்த்து அமைக்கப்பட்டனவாகத் திகழ வேண்டும்; நிறைவான கருத்துக்களைப் புலப்படுத்த வேண்டும். இத்தனை சிறப்புகளும் ஒருங்கே திரண்டு அமைவதுதான் வனப்பு என்பது. இத்தகைய வனப்பு எனப்படும் பெரும் சிறப்பு வாய்ந்ததாக நூல் விளங்குதல் மரபாகும்.

Even if the authour brings out his work characterised with imagination, choicest words of thought content and embellishment, there should be an appealing process of setting forth the concepts in an orderly way. He should accurately determine that such and such matter should be expressed in such and such melodious way like *olugisai vannam* etc. His work should reveal a plethora of varied concepts. Only that great characteristic which includes in itself all these significant aspects is called *vanappu*. It is held by tradition that a meritorious work should shine forth endowed with such a significant characteristic called *vanappu*.

காலக் கூறும் நிலத்தியல் பிரித்து
ஞாலக் கோலம் நன்னெறி நோக்கி
மூலம் உரைத்தல் மெய்ந்நெறி வழக்கே. (96)

காலத்தின் கூறுகள், நிலத்தின் பாகுபாடுகள், ஞாலம், கோலம் ஆகிய இவற்றின் சுபமான (மங்களகரமான) அமைப்பு

முறைகளை நோக்கி மூலத்தின் வெளிப்பாட்டினைப் பற்றிக் கூறுவதே உண்மையான நெறிமுறையாகும்.

The effective and infallible way of expressing the nature of mulam is to set forth it by analysing the salient features of the divisions of land, the planetorial movements and forms manifested by mulam.

தொல்லை நெறிநிலை ஒளிநெறி நோக்கி
வல்ல திறத்தால் உள்ளும் புறமும்
விள்ளலும் ஆய்தலும் ஒளிநூல் வழக்கே. (97)

தொன்றுதொட்டு வரும் மரபுப்படி ஒளியின் நெறிமுறையை நுணுகிக் கண்டு, அதற்குப் பொருத்தமான வகையால் அகநிலையையும் புறநிலையையும் வெளிப்படுத்தலும் அவற்றை மேலும் ஆய்தலுமே ஒளிநூலின் குறிக்கோளாகும்.

It should be the main motive of a work dealing with the nature of light-energy i) to accurately and minutely know the power and function of light according to the age-old tradition (based on science), ii) to express its internal and external features based on already known facts and iii) to analyse further.

ஓம்உறும் ஒளியும் ஓம்உறும் ஒலியும்
காமுறக் கற்கும் கலைநிலை ஆக்கி
வாய்ப்பத் தீட்டல் நிறைமொழி நூலே (98)

நிறைமொழி நூல் என்பது —

ஓம் எனப்படும் பிரணவத்தின் ஒளிநிலையையும் ஒலி நிலையையும் எல்லோரும் ஈடுபாட்டுடன் கற்கும் வகையிலும் கற்பிக்கும் வகையிலும் பொருத்தமுற எடுத்து விளக்கிக் கூற வல்லதேயாம்.

An efficacious work composed of words (with fullness of meaning and purpose) is one which sets forth in a consistent way the light and sound features of pranava - 'OM'; it should enable one to study and explain it with deep involvement.

நூலின் நுண்பொருள் நுவலும் திறனால்
நூற்கலை சிறந்து ஒளிமொழி ஓங்கும் (99)

ஒரு நூல் தான் விளக்கக்கூடிய நுட்பொருளை விளக்கும் திறத்தினால், செந்நூல் எனப்படும் நிறைமொழி நூலின் தோற்றமுறை சிறப்புற்று ஓங்கும்; ஒலியைக் கடந்த ஒளிநிலையிலும் அந்நூல் நிலைபெற்று விளங்கும்.

The perfect way pertaining to an enduring good work would be strengthened and refreshed by the process of explanation of a particular subtle subject- matter taken up by that particular work. This would exist for ever, identical with light source, which transcends the sound potency.

அணுத்திரள் ஒலியாம் எழுத்தியல் ஓர்ந்தே
அணுக்கலை நுட்பம் ஒலியொளித் திண்மை
அணுக்கூறு இயலும் அணுமுதற் பொருளும்
அணுக்கலை நோக்கமும் அறிமுறைப் பயனும்
நிறைவுற ! ய்கும் அணுக்கலை நூலே (100)

அணுத்திரள் ஒலியாம் எழுத்தியலை ஆராய்ந்து, அதன் பயனாக அணுக்கலை நுட்பம், ஒலி - ஒளி இரண்டிற்கும் இடையே உள்ள உறுதிப்பாடான தொடர்பு (இணக்கம்), அணுக்கூறு இயல், அணுவாகிய முதற்பொருளின் நிலை, அணுக்கலையை நோக்கும் முறை, அறியும் முறை, பயன் - ஆகிய இவற்றை அணுக்கலையைப் பற்றிய நூலானது தெளிவாகவும் நிறைவாகவும் எடுத்துக் கூறும்.

A work dealing with nature of atom should furnish and clearly explain the following: the way of analysing the nature of the letters which are the collectives of articulated sound-atoms, the subtleties of atom, the unseverable relationship existing between sound and light, the nature of the parts of atom, the nature of Primal existence which itself manifests as an atom, the exact process of the study of atom, the process of knowing the manifested parts of atom and its ultimate purpose.

ஐயமும் திரிபும் நீங்கிய உணர்வால்
மெய்ப்பொருள் உரைத்தலும் ஆய்தலும் நெறியே (101)

ஐயம், திரிபு முதலான குற்றங்கள் நீங்கப்பெற்ற நிறையறிவாலே மெய்ப்பொருள் தொடர்பான இயல்புகளை உரைத்தலும் ஆய்வு செய்தலும் – அறிஞர்பெருமக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நெறியாகும்.

The method followed by the men of erudition is i) to set forth the characteristics of Eternal Existence as realised through their consummate knowledge free from doubt and error, and ii) to analyse them further.

எண்ணியல் கலையின் நோக்குறும் உணர்வால்
எண்ணமும் உணர்வும் இணையுறத் தெரிந்தே
ஒளிநிலைக் கலைத்திறன் ஒலிபெறத் தெரிந்தே
மெய்க்கலை ஆய்முறை வினைமுதற்று என்ப. (102)

எண்ணியலாகிய கலையின் அடிப்படையில் மெய்பொருளை நுனித்துக் காணும் அறிவு வேண்டும். அந்த அறிவால் உள்ளம் - உணர்வு இரண்டையும் மிகாமலும் குறையாமலும் பக்குவப்படுத்திக் கலைத்திற வெளிப்பாடுகளைப் பெறுவதற்கு அடிப்படையான ஒளிநிலையையும் ஒலிநிலையையும் நன்கு ஆராயவேண்டும். மெய்ப்பொருளைப் பற்றிய கலையை ஆராய்கின்ற சிறப்பான முறையே வினைமுதலாகிய கர்த்தாவால் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

First, one should acquire a knowledge that could penetrate, based on number-pattern, into the subtleties of Eternal Existence. Through the knowledge thus acquired, he should perfect his heart and mind and then analyse the substantiate nature of light and sound which is considered to be basic for the accomplishment of varied manifestations of creative orders.

Only this significant process of analysing Eternal Existence should be undertaken by an aspirant.

பொருள்உறும் திறனாய்ப் பொருள்நிலை விளக்கிப்
பெருந்திறல் ஆற்றலால் தொழில்நிலை இலங்கித்

தொழிற்பெயர் துலங்கும் தன்மைய தாகி
எழிலுறும் மொழியே இன்தமிழ் மொழியாம் (103)

பெயர்ச்சொல் என்பது ஒரு பொருளைச் சுட்டக் கூடிய தாகவும் அப்பொருளின் குணத்தை (நிலைமை) விளக்குவதாகவும், தன் பேராற்றலால் அப்பொருளின் செயல்நிலையைப் புலப்படுத்து வதாகவும் விளங்கும். அது தொழிற்பெயர் என்றே சிறப்பாகக் கொள்ளப்படும். பெயர்ச்சொல் வினையாற்றலைப் புலப்படுத்தும் தொன்மையான இயல்புடையதாகும். ஒரு மொழியின் பெயர்ச் சொல் இவ்வாறு அமைவதே அழகாகும். இத்தகைய அழகுச் சிறப்பை உடையதே இனிய தமிழ்மொழியாம்.

What is called a word (or name) is one

i) which should denote a particular substance

ii) which should express the qualities of the said substance and

iii) which should make known the functional aspect of the substance through its potentiality.

Such a word is usually known as verbal name.

A name consists in itself an eternal nature of expressing the functional power.

Only that language is to be considered as an effective and pleasing one whose words are of such characteristics. Tamil is one such pleasing language.

ஒளிமுதல் மொழியாய் ஒலிமுதல் திறனாய்
உள்ளொளித் திறன்உற உயிரொளி ஓங்கி
உள்ளிருந் தெழுதரும் உமிழ்தரும் ஒலியாய்
தெள்ளுறும் தமிழாய்த் திகழ்வொளி மொழியே (104)

ஒளியை ஆதாரமாகக் கொண்டு சொல் எழ, அது ஒலியை அடிப்படை ஆற்றலாகக் கொள்கிறது. பிறகு அச்சொல் அகவெளியாகிய உள்ளொளி, உயிர்ஒளி இவற்றின் இயக்கத்தால் இயங்குவதாகி, நாபித் தானத்தினின்றும் எழுந்து, இறுதியில், தொளிவாக வெளிப்படும் ஒலியாகிறது. எங்கும் ஒளிரும் ஒளியே மொழியாகி, சிறப்பு நிலையில் தமிழாகத் தெளிவு பெறுகிறது.

A word comes into effect based on light; having emerged, it attains the basic source of sound and begins to function through cumulative dynamism of internal space, which is non-different-from the primal light and the effulgence of one's own self. And then it manifests in an articulated form from the navel part of the body. The primal light alone, which shines forth everywhere, having assumed a specific stage, becomes the language of Tamil.

எண்எண் கலையின் இலங்குறும் புள்ளி
திண்ணியல் மூலம் சீர்பெறத் திகழ்ந்து
நிலைபெறும் விண்ணொளி ஒலிநிலை விளக்கிக்
கலைபெறும் மொழியே கவின்ஒளி மொழியாம் (105)

அறுபத்து நான்கு சதுரங்களின் மூலமாக விளங்கும் மையப் புள்ளியே உறுதியான நிலையை உடைய மூலமாம். அது சிறப்புற இயக்கம் கொண்டு மூலவெளியின் ஒளிநிலையையும் ஒலிநிலையையும் விளக்கும். இது பதினாறு கலைகளைக் கொண்ட பிரணவச் சொல். இது கவின்மிக்க ஒளிச்சொல்லாம்.

(கவின் — கவிதல் — சூழ்தல்)

An unassailable (or undisturbable) mulam is that point (dot) which is the source of sixtyfour energy-grids (kalas). Through its specific action is manifested the light and sound potential of the primal space. This point is not different from the pranava 'OM' which is associated with 16 kalas. This is what is known as comprehensive or all-inclusive word of resplendence.

ஒளிமொழித் தமிழாய் ஓங்கிய இயல்பால்
வெளிநிலை விண்ணளந்து இயலுறும் மொழியாய்
தெளிகலைத் தென்தமிழ் தென்புல மொழியாய்
அளியுற இயங்கும் அரும்தமிழ் மொழியே (106)

அருந்தமிழ் மொழியானது —

ஒளிமொழியின் பூரண முதிர்ச்சி நிலையாகி ஓங்கும் இயல்பினை உடையது. இந்த இயல்பு உடையதாக விளங்குவதால் அது வெளியின் நிலையையும் விண்ணையும் அளந்து காணும் தன்மை உடைய மொழியாகி விளங்குகிறது; தெளிவு பெற்ற

கலைகளுக்கு மூலமாகும் அறிவின் முழுமையாகவும் அழகுக் களமாகவும் அது விளங்குகிறது; எதனையும் புலப்படுத்த நெகிழ்ந்து கொடுக்கும் இயல்பு வாய்ந்ததாக அம்மொழி இயங்க வல்லது.

Tamil language is endowed with the following specific characteristics:

i) it has attained the consummate and complete stage of the sound aspect of light

ii) efficacious enough in measuring and revealing the real nature of Primal space and elemental space.

iii) capable of expressing the fullness of knowledge which is the source for perfect well-developed arts

iv) it remains as a vast field of aesthetical experience and

v) capable of functioning in such a flexible way as to express everything that seems inexpressible.

எண்எண் கலையால் இலங்குறும் மொழியாய்ப்
பண்ஒலி ஓசைப் பெருநிலை ஓங்கிக்
குறிநிலை மாறாக் குறிப்புறும் கலைதிகழ்
அறிவியல் விளக்கும் அருந்தமிழ் மொழியே 107)

மேலும், அருந்தமிழ் மொழி என்பது —

அறுபத்து நான்கு கலைகளாலும் விளங்கும் மொழியாகிப் பண்ணின் ஒலிநலமும் ஓசையின் பெருநிலையும் ஓங்கப்பெற்றது; குறித்த நிலையினின்றும் மாறாமல் ஒருநிலையையே குறிக்கோளாகக் கொண்டு, மேற்கூறப்பட்ட கலைகளால் திகழும் அறிவியலை விளக்கவல்லது.

Furthermore, it is the language

i) which is characterised by sixty-four (kalas) creative aspects

ii) in which mellifluousness of music and effective state of sound become increasingly manifest.

iii) which is associated with a single and unalterable motive without giving room for modification and

iv) which clearly explains the scientific truths underlying the above mentioned arts.

ஐந்தியல் அமைவுறும் அந்நிலை இலங்கி
ஐந்தெழுத்து இயல்உறும் ஆற்றலால் திகழும்
செந்தமிழ் உயிர்எழுத்து ஐந்திறத் தால்அறி
ஐந்திறத்து இயலை அறைவது இந்நூலே (108)

ஐந்தியல் பொருந்தப் பெற்று விளங்கும் சிறப்பான நிலை திகழப்பெற்று, ஐந்தெழுத்து இயலால் பொருந்திய சிறப்பான ஆற்றலால் திகழ்வது செந்தமிழ். இத்தமிழின் உயிரெழுத்து ஐந்தாலும் அறியப்படும் ஐந்தியல் இயல்பை விளக்குவதே இந்நூல்.

(Added to the special features mentioned before)

Tamil is one

i) which is endowed with a specific feature characterised by pentadism and

ii) which is associated with specific power expressible through five primal letters.

This work (Aintiram) has for its motive the explanation of the features of pentadism which could be known through the potentiality of five vowels of Tamil.

உள்ளொளி கண்ட உணர்வினன் ஆகித்
தெள்ளும் தமிழ்இயல் சீருறும் வண்ணம்
எண்ணியல் கலையின் இயல்நிலை தேர்ந்து
விண்ணொளி ஒலிஓம் நிலைமறை அறிந்து
ஐந்தியல் நெறிக்கலை மெய்த்திறம் விளங்க
ஐந்திறம் விளக்கும் ஐந்திற நூலே (109)

1. இந்நூலை விளக்குவோன் உள்ளொளியை அனுபவ ரீதியாகக் கண்டுணர்ந்த ஞான நிறைவு உடையவனாக இருக்கவேண்டும்.
2. தெளிந்த தமிழின் இயல் மேலும் சிறப்புறும் வண்ணம் எண்ணியலின் இயல்பான நிலைமையை ஆய்ந்து உணர்ந்திருக்க வேண்டும்.
3. விண்ணொளியாகவும் விண்ணொலியாகவும் திகழும் ஓம் என்பதன் தன்மையையும் அதனுள் மறைந்து விளங்கும் உட்பொருளையும் அறிந்து இருக்க வேண்டும்.
4. ஐந்தியல் நெறியின் அடிப்படையில் அமைந்த கலைகளின் மெய்த்திறம் விளங்க ஐந்திற நூல் கூறும் ஐந்து திறங்களையும் சிறப்பாக விளக்கிக் கூற வேண்டும்.

One who is to interpret this work, should possess the following requisites:

i) Having intuitionally experienced the internal effulgence, his knowledge should have attained its fullness.
ii) should have understood the innate characteristics of numerical phenomena in order that the clear knowledge of Tamil gets more illumined.
iii) Should have known the nature and content of Pranava 'OM' which shines forth as sound and light of space.

Having been endowed with the above features, he should specifically explain the five aspects enshrined in this Aintiram so that the true nature of creations based on the pentadic pattern gets more clarified.

எண்இயல் எண்முறை எண்கலை எண்ணி
எண்எண் இயல்திறன் புள்ளிக் கூற்றும்
விண்ணிலை மூலம் ஞாலத்து இயல்திறன்
எண்ணுற விளக்கும் எண்ணூல் வழக்கே (110)

எண்ணூலின் சிறப்புத் தன்மையாவது —

எண்ணியல், எண்முறை, எண்கலை இவற்றை முறைப்படி ஆழ்ந்து சிந்தித்து அறுபத்து நான்கு கலைகளாக (அதாவது,

பதங்களாக) அமைந்துள்ள திறத்தையும், அவற்றின் மையப் புள்ளியாகிய பகுதியையும் விளக்குவதாகி

விண்நிலையின் மூலத்தையும், ஞாலத்தின் இயல்பான திறத்தையும் கருத்தில் பதியும் வண்ணம் — எடுத்துக் கூறும் இயல்புடைமையாகும்.

It is the specific feature of the text dealing with number,

i) to deal systematically with numerical system, number pattern and the eightfold division.

ii) to explain the nature of the structural pattern as assumed by 64 kalas (energy-grids) and its central point and

iii) to explain the basis of spatial existence and the nature of the world in such a way as to be grasped by the mind giving room for further ruminations.

எண்ணின் நுட்பம் எளிதில் அறிந்தே
விண்ணளந்து அறியும் மெய்க்கலை ஓர்ந்து
மண்ணியல் ஞாலம் மரபறி செயலே
விண்ணொளி மூலம் காண்பதும் நெறியே (111)

விண்ணொளியின் மூலத்தை அறிதல் என்பது எண்ணின் நுட்பத்தை எளிதில் அளந்து, விண்ணின் வகைகளை அளந்து அறியும் உண்மைக்கலையின் ஆற்றலையும் ஓர்ந்து, மண்ணியல் ஞாலத்தின் மரபினை அறியும் செயலேயாம். இவ்வாறு கொள்வதே தொன்று தொட்டுவரும் நெறி.

(மண் அளத்தல் = விண் அளத்தல்)

The process of knowing the traditional truths about the terrestrial world, having gained a knowledge of the subtleties of numerical system and having analysed the efficacy of unfailing art of knowing the varieties of space-

is tantamount to knowing the basic facts about space-light. To know this sort of equation is according to

the age-old tradition. (To measure the earth is equal to measure the space)

காலத்து இயலைக் கணக்கறிந்து உணர்ந்தே
கண்ணிமை கைந்நொடி மாத்திரை அளவாய்
சீலத்து உன்னி ஒலிஇசை நெறியைக்
கோலக் கட்டியல் குறிப்பது மரபே (112)

கணக்கு முறைப்படிக் காலத்து இயலை உணர்ந்து, கண்ணிமை, கைந்நொடி, மாத்திரை முதலான கால அளவுக் கூறுகளைக் கொண்டு, சீலம் என்பதை உள்ளத்துள்ளே சிந்தித்துக் கண்டு, இசையளவாய் ஒலிக்கும் ஒலிநெறியை உணரவேண்டும். இதனையே கோலமாகிய கட்டு என்பதன் இயல்பாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வதும் தொன்று தொட்டு வரும் மரபாம்.

(கட்டிட நுட்பமும் இசைநுட்பமும் ஒன்றே)

Having realised the nature of Time through a systematic way of calculation and having realised the nature of rhythm (சீலம்) through various time-units such as *imai, noti, mathirai* etc, one should understand the process of sound conditioned by music and melody.

The realisation of musical process is identical with the knowledge of artistic (and architectural) creations (கோலம்). This concept is also according to the tradition.

Subtlety of architectural knowledge is equal to that of the knowledge of music.

உயிரெழுத்து ஆற்றலும் வடிவமும் தன்மையும்
செயிர்அறத் தீட்டும் முறைமை விளக்கியும்
நெட்டெழுத்து இயலும் எழுத்துருத் தோற்றமும்
நெட்டுறும் கோடு புள்ளி இயல்உறும்
கோ'.டுருத் திறனும் கோட்டியல் சீலமும்
தீட்டும் தமிழ்இயல் செப்புவ நெறியே (113)

தமிழ் இயலானது —

உயிரெழுத்துக்களின் ஆற்றல், வடிவம், தன்மை, குற்றமறத் தீட்டும் முறைமை — இவற்றை விளக்குவதாகத் திகழும்.

நெட்டெழுத்துக்களின் இயல்பு, அவ்வெழுத்துக்கள் வடிவம் கொள்ளும் முறை. நீண்டு விளங்கும் கோடு, புள்ளி, கோடுகளால் உருவாகும் வடிவங்களின் ஆற்றல், கோடுகளில் திகழும் சீலம் ஆகிய இவற்றை குறிப்பாகவும் விளக்கமாகவும் புலப்படுத்து வதாகத் திகழும்.

இவ்வாறு கொள்வதே தொன்றுதொட்டுவரும் நெறியாம்.

It is the main motive of Tamilology –

– to explain the efficacy, form, character, process of lining (so as to be free from defects) of the vowels, and to make known the explanation and implication of the nature of long letters, the process of form assumed by them, their lines, and dots, efficacy of various forms created through lines and the rhythm displayed through lines.

This view is according to the tradition.

புள்ளிக் கூற்றே பெருங்கலை உணர்த்தும் (114)

ஒவ்வோர் எழுத்தின் புள்ளிப்பகுதியும் தன்னிடத்திலிருந்து தொடர்ந்து உண்டாகும் பெரும் கலைகளை (கோட்டினால் புலப்படுத்த முடியாத ஓசை நுட்பங்களை) உணர்த்த வல்லதாகம்.

The dot-part of each letter is indicative of its own great kalas (i.e. subtle cosmic potentials) evolving from the dot.

வரிவியல் தன்மை மெய்வகை விளக்கும் (115)

ஒவ்வோர் எழுத்தின் வரிவடிவமும் உயிர்எழுத்துக்கு உடலாகும் முறைமையை நன்கு விளக்க வல்லதாகும்.

The written form of each letter is expressive of its nature of being a consonant (body) to the vowel (soul).

நெடிதுறும் கோட்டு நிலைஇயல் வண்ணம்
கடிஇயல் ஐந்தும் குறிப்பதும் இயல்பே (116)

நீண்டு அமையும் கோடுகளின் நிலை, இயல், வண்ணம், பயன், இயக்கம் ஆகிய ஐந்தையும் விளக்குவதைக் குறிக்கோளாக உடையதே எழுத்து நூலின் இயல்பாம்.

1. The stature of long lines. 2. their nature 3. their colour 4. intended effect and 5. the process of their usage.

It should be the motive of a critic to scrutinise these five.

Even this view is according to the tradition.

கோடும் குறியும் புள்ளியும் ஆய்ந்து
கோட்டியல் நீட்டியல் குறிப்பின் உணர்ந்து
நாடும் எழுத்துரு எழுத்தொலி செப்பல்
ஏடியல் அறிந்தே இயம்பும் மரபே (117)

கோடு, குறி, புள்ளி இவற்றை ஆராய்ந்து, கோட்டின் இயல், நெட்டெழுத்தியல் (நீளப்படுத்துதல்) ஆகிய இவற்றைக் குறிப்பால் உணர்ந்து ஒவ்வோர் எழுத்தின் வடிவம், ஒலி, ஒலிக்கும் முறை முதலானவற்றை நூல்மரபு அறிந்து விளக்குதலே முறையான செயலாகும்.

Having analysed the significance of line, symbol and dot and having recognised through implication the significance of the movement of line, of the lengthening of a letter, it is customary and pertinent (on the part of the critic) to explain the form, sound and the process of articulation of each letter in strict accordance with the scriptural tradition.

கல்லின் குறித்தல் ஏட்டின் எழுதல்
சொல்லும் பொருளும் உணர்ந்துறும் ஆற்றலே (118)

சொல், அதன் பொருள் இவற்றின் உண்மையான இயல்புகளை உணர்வதால் உறும் ஆற்றலானது கல்லில் குறிப்பது, ஏட்டில் எழுதுதல் என்ற இரண்டு நிலைகளிலும் வெளிப்படும்.

The efficacy gained through the realisation of the exact characteristics of word and its content would express itself in two ways - marking in (select) stones writing on sheet.

கோட்டுரு வண்ணம் குறிப்பின் உணர்ந்தே
நீட்டுரு நெறிநிலை நவிலல் வழக்கே (119)

கோட்டின் உரு, வண்ணம் இவற்றைக் குறிப்பால் உணர்ந்து அதனை ஒவ்வோர் அம்சமாக நீட்டி உருக்கொடுக்கும் நெறி முறையின் நிலைத்த தன்மையைச் சித்திர நூல் எடுத்து விளக்க வேண்டும். இவ்வாறு கொள்வதே தொன்று தொட்டுவரும் வழக்காகும்.

Having significantly understood the nature of the structure of line, its colour etc. one should set forth the details of creating forms by lengthening and measuring the line part by part. A text dealing with drawing and painting should explain these details, in accordance with the tradition.

சொற்பொருள் உணர்த்தும் மெய்ம்மை அறிந்தே
கற்பவை கற்றுக் கேட்பவை தெளிந்தே
உணர்வின் தெளிந்து நுகர்ச்சியின் ஆய்ந்து
பொருண்மை சுட்டுவ் இயல்நெறி மரபே (120)

சொற்பொருள் உணர்த்தும் உண்மையான பொருளை அறிந்து, கற்கவேண்டிய நூல்களை முறைப்படிக்கற்று, பிறகு தக்காரிடம் அவற்றைப் பற்றிக் கேட்டுத் தெளிவு பெற்று, அதனோடு அமையாமல் உள்ளத்தில் ஆழ்ந்து சிந்திக்கவும் வேண்டும். அவ்வாறு சிந்திப்பதால் மேலும் தெளிவு உண்டாகும். அவ்வாறு தெளிவாக அறிந்ததை அனுபவ ரீதியாக ஆராய்ந்துணர்ந்து அச்சொற் பொருளின் ஆழத்தைப் புலப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதும் தொன்றுதொட்டு வரும் மரபாகும்.

Having understood the exact symbolic sense of a word and having systematically studied the inevitable and important works (concerned with the subject undertaken), and then having a definite and deep knowledge of them through consulting with the fittest persons, one should attain clarity on those matters through the process of deep thinking; then he should experientially analyse those which are thus clearly known. Only then he should proceed to point out the depth of the meaning of the word.

These rules are also according to the tradition.

சுட்டும் பொருளும் நெறிகலை ஓர்ந்து
எட்டின் இயலுவ மாநெறி வழக்கே (121)

இன்ன பொருள் இது என்று நெறி, கலை இவற்றின் அடிப்படையில் அறியும் பொழுது, அது எட்டின் அடிப்படையில் தான் இயல்வதாக விளங்கும். இவ்வாறு கொள்வதே பெருமைக்குரிய மரபு நெறியாகும்.

When a particular substance is known based on appropriate methodology and (practical) applicability, it would become clear that the particular substance has its own dynamism based on the number eight(8). To hold this view is according to the great tradition.

உள்ளுவ உள்ளி உள்ளொளி தேர்ந்து
விள்ளுவ மொழித்திறன் மெய்க்கலை மூலம்
கொள்ளுவ கொண்டே பெருங்கணிப்பு ஆர்ந்தே
உள்ளல் எண்ணெழுத்து இயல்பின் நெறியே (122)

எண்ணெழுத்து இயல்பின் நெறியாவது —

சிந்திக்க வேண்டிய பொருளைச் சிந்தித்து, உள்ளிருந்து எழும் ஒலிநிலையை ஆய்ந்துணர்ந்து,

வெளிப்படுத்தப்படும் சொற்களின் திறத்தை மெய்க்கலை வழியாகக் கொள்ள வேண்டிய முறைப்படி கொண்டு, மிகவும் நன்றாக ஆழ்ந்து கணித்து, அதன் பொருத்தத்தை எண்ணி நிர்ணயிப்பதாகும்.

- i) having deeply thought over the subject which is to be essentially known,
- ii) having deciphered the subtle sound that erupts from within,
- iii) having known in a methodic and unchanging way the potency of the articulated words and
- iv) having deeply recognised and reckoned that potency, one should think over the applicability, of that potency.

This is the method pertaining to the science of numericals and of letters.

நீட்டல் குறுக்கல் முறைமையின் ஆர்த்தல்
தீட்டல் எழுத்தின் ஒலிமுறை ஒலிக்கே (123)

ஒலிக்க வேண்டிய முறைப்படி ஒலிக்கப்படும் எழுத்தின் ஒலிக்கு நீட்டல், குறுக்கல், முறைப்படி சுழித்தல், முழுமையாக வரைதல் என்பன படிமுறைகளாகும்.

(ஒலி எழுத்து, வரி எழுத்தாகும் முறை இது)

Lengthening, shortening, curving, and effecting a complete form- these are the important stages assumed by an alphabet when it is pronounced correctly.

(This is how a aural letter-form becomes a written form)

ஒலிமுறை மிகுந்தே உருநெறிக் கூட்டும்
ஒலித்திறன் அளவின் மிகுநிலை மரபே (124)

ஒலிக்கும் முறையானது மிகுதிப்படும் பொழுது, வரிவடிவ எழுத்திற்கும் கூட்டப்படும் ஒலிஅளவு, அந்த மிகுதிப்படும் அளவுக் கேற்றவாறு அளபெடையாக அமைவதும் மரபே ஆகும். (மிகுதிப்படும் அளவைக்காட்டுவது உயிரெழுத்தே).

When the process of articulation (of a particular alphabet) exceeds the stipulated duration, the sound power to be ascribed to a written alphabet also exceeds in due proportion. At this stage the same alphabet becomes associated with the preceding alphabet known as (அளபெடை).

(exceeding of duration is indicated only by the vowel pertaining to the particular letter)

மையறு புலமை செவ்விதின் பெறினும்
ஐயமும் திரியும் அமைவதும் இயல்பே (125)

குற்றமற்ற புலமைச் சிறப்பை நன்றாகப் பெற்றிருந்தாலும் ஒருவருக்கு ஐயமும் திரியும் ஏற்படுவதும் இயல்புதான்.

Even though a person is excellently endowed with impeccable knowledge, doubt and misconception may occur even to him. This is natural and unintentional.

வழக்கியல் அறிந்தோர் நுண்கலை தெறிவரே (126)

வழிவழியாக மாறுபடாமல் வரும் வழக்கு முறைமையை அறிந்தோர், கலைகளின் நுண்மைத் தன்மைகளை அறிவர்.

Those who have a thorough knowledge of the tradition that comes down through the ages without any modification or changes, are capable of knowing the subtleties of artistic creations.

எண்கலைத் திறனியல் எட்டெட்டு இயன்றே
நுண்கலை மூலம் புள்ளித் திறனாய்
ஐயைந்து இயலாய் மெய்க்கலை நுணுக்கம்
வைநெறி தெரிந்துணர் திட்பமும் ஓர்ந்தே
ஞாலம் இயலும் நெறிதலை ஆற்றல்
கோலமா நுட்பம் குறித்தியல் மெய்யே (127)

எண்விதக் கலைத்திறன் அடிப்படையில் அறுபத்து நான்கு பதங்கள் அமையும். அவற்றுக்கு நுண்கலையான மூலமானது புள்ளியாக அமையும். அதுவே பிறகு கோண திசைகளில் விழுந்து நான்கு புள்ளிகளால் சூழப்பட்டு ஐந்து புள்ளிகளாக உருக்கொள்ளும். இவ்வாறே மெய்க்கலை நுட்பமானது ஐயைந்தாக உருக்கொள்ளும். இம்மெய்க்கலையின் இயல்புகளாவன :

1. வையகத்து நெறியைத் தேர்ந்துணரும் திட்பத்தை ஓர்ந்துணர வைத்தல்.
2. ஞாலம் இயங்கும் நெறிமுறைகளில் உள்ள ஒழுங்குமுறையை அறியச் செய்தல்.
3. பிறகு கோலங்களின் சூக்குமமான நுட்பங்களை அறிவதில் குறிக்கோளாக இருக்கச் செய்தல்.

Sixty-four squares would be formed based on eight-fold division. The very subtle, known as mulam, would be like a bindu or dot. The same dot after reaching the intermediary directions, would manifest five dots. In this manner, the subtleness of Eternal Existence would manifest itself in pentadic form to penetrate into well-defined grid pattern capable of evaluating the movement of earth, to know the rhythm existing in the movement of earth and to be always motivated to know the subtleties of structures.

- these are the essential aspects of the enduring method of this art. (Traditionally, this is known as *pada-vinyasa kala*).

எண்ணெறி இயலல் விண்கலைத் திறனாய்
நுண்ணெறிப் புள்ளி நுவலலும் மூலமே (128)

எண்ணின் நெறிப்படி எதனையும் செய்தல் விண் தொடர்பான கலைத்திறனை அறிவதற்கு உறுதுணையாய் அமையும். இவ்வாறு இயற்றுவதில் நுண்மையான (நிஷ்களமான) வகையில் அமையும் மையப்புள்ளி குறிப்பாக புலப்படுத்துவதும் மூலப்பரம் பொருளையே.

A construction or composition according to number-patterns will be a guiding factor to understand the ordered patterns concerned with space. In this process of composition or construction, what is symbolically represented by the central point (bindu which is essentially formless) is the Primal Supreme Being.

புள்ளிப் பொருளே எழுத்துரு சிவனும் (129)

வாஸ்து மண்டலத்தின் நடுவிடமான புள்ளித் தானமே எழுந்து நிலைபெறும் வடிவமாகப் பொருந்தும்

(புள்ளியே எழுத்துவடிவத்தை அடைகிறது என்றும் பொருள் கொள்ளலாம்).

Only the central point (bindu of the Vastu mandala) assumes a well-defined structural form.

(Alternate meaning: only a point or dot assumes the form of a letter)

காலமும் பொழுதும் கணக்கியல் நெறியாய்
மூலமும் பொருளும் மெய்ப்பொருள் இயலாய்
கோலமும் சீலமும் குறித்துக் காட்டும்
ஞாலத்து இட்லின் நுண்ணுணர் கலையே (130)

காலம் என்பதும் பொழுது என்பதும் (பொழுது - காலத்தின் அம்சம்) கணக்கியல் நெறியாய் அமைய, மூலம் என்பதும் மூலத்தைத் தன் இருப்பினால் புலப்படுத்தும் வஸ்து

என்பதும் மெய்ப்பொருளைப் புலப்படுத்தும் நெறியாய் அமையும். இவ்வாறே கோலம் என்பதும் கோலம் அமைவதற்கு ஓர் உறுதுணையாக உள்ள சீலம் என்பதும் ஞாலத்து இயல்பின் நுட்பங்களை உணரவைக்கும் கலைக்கூறுகளாக விளங்கும்.

Both Time and its divisions (or seasons) constitute the process of accurate calculation. Both the Primal Existence (called mulam) and the Vastu which reflects through its own existence the Primal one constitute the process of manifesting the Eternal.

Both the creations (kolam) and rhythm which has its primal role in creation constitute the pattern of art which enables us to realise the nature and subtleties of the world.

எட்டெட் டியலால் இலங்கி மையம்
திட்பம் எட்டெட்டுமாய் நுட்பம் எட்டெட்டுமாய்க்
காலம் விளக்கும் கணக்கியல் நுண்மை
சீலம் ஐந்தைந்தும் தெளிந்துணர் நெறியின்
ஞாலம் சுழலும் காலம் அறிந்து
கால நுட்பம் கணித்து அறி மக்கள்
காலம் உணர்மதி நுண்ணியர் ஆவரே (131)

(தவளைமா நெறியில்) அறுபத்து நான்கு கூறுகளாக விளங்கி அதன் நடுவிடமான புள்ளித்தானமே அறுபத்துநான்கு வகைப்பட்ட திட்பக்கலைகளாகவும் அறுபத்து நான்கு வகைப்பட்ட நுட்பக் கலைகளாகவும் இயங்கிக் காலத்தின் வடிவைக் கொள்கிறது. நுட்பமான கணக்கியலின் அடிப்படையில் இக்காலம் விளக்கும் இருபத்தைந்து வகைப்பட்ட சீலங்களையும் நன்கு தெரிந்துணர வேண்டும். இவ்வாறு உணரும் முறையில், ஞாலத்தைச் சுழலவைக்கும் காலத்தின் ஆற்றலை அறிந்து, அத்தகைய காலத்தின் நுட்பங்களைக் கணித்து அறியக் கூடிய அறிஞர்கள், காலத்தின் உண்மையான இயல்பையும், ஆற்றலையும் உணரவல்ல அறிவுக் கூர்மையை உடையவர்கள் ஆவர்.

The manduka-vastu-pada consists of sixty four squares. The central point of this mandala functions in the capacity of sixty four concrete and firm kalas and of

sixty four subtle kalas. By way of this function it assumes the form of Time which manifests twenty-five forms of rhythmic order (silam) based on minute mathematical calculations. Those who are capable of clearly reckoning the subtleties of Time through clear understanding of all the above twenty five rhythmic orders and through knowing the potentiality of Time which makes the earth revolve become endowed with sharpness of intellect which could realise the real nature and potency of Time.

மூலப் பொருளே நிலையியல் நெறியாய்
கால நுட்பம் கருதரும் உளத்தால்
சீலம் இயற்றும் கோலத் திறனாய்
ஞாலம் ஆள்வதும் எட்டெட் டியலே (132)

மூலப்பொருள் என்பதே நிலைபெயரா நிலையில் (அதாவது மையப்புள்ளித் ஸ்தானத்தை விட்டு விலகாமல்) விளங்க, அதன் சுழற்சியால் ஏற்படுவது காலம். இந்தக் காலத்தின் நுட்பத்தை அறியவல்ல உள்ளத்திறம் ஒருவருக்கு வேண்டும். இத்தகைய ஆற்றலைக் கண்டு மூலத்தில் சுழற்சியால் விளங்கும் சீலம், அதனால் ஏற்படும் கோலம் ஆகியவற்றை ஆராய்பவர்கள், கோலங்களின் திரட்சியாக விளங்கும் ஞாலத்தின் இயலை அறியவல்லவர்கள் ஆவர். அடிப்படையாக நோக்கினால் ஞாலம் முழுவதையும் தன் வெளி (space) நுட்பத்தாலும் கால (time) நுட்பத்தாலும் ஆள்வது எட்டெட்டு இயலே என்பதே ஆகும்.

While the Primal Existence revolves itself without displacement from the central point (of the vastu mandala), Time evolves owing to this revolution. Those who are endowed with a mind that could realise the subtlety of Time will be able to analyse the rhythm involved in the revolution and the nature of forms or creations (kolam). Having analysed in this way, they could understand the nature of the world which is replete with multifarious forms (kolam). Viewed basically, that which regulates and controls the whole world though its subtlety of space and that of time is the mandala formed of sixty four squares.

உற்றுறும் எண்ணெண் உறும் கலைத் திறனாய்ப்
பெற்றுறும் எண்ணியல் கணக்கறிந்து ஆய்ந்தே
சிற்றவை நெறிநிலை காலச் சுழலும்
உற்றறி உணர்வினோர் ஞாலம் ஆள்வரே. (133)

முதலில் புள்ளியாய் உருப்பெற்று, பின்னர் மண்டலமாய் வடிவுகொள்ளும் தவளை மாநெறி 64 கலைத்திறன்களாக வெளிப்பட, அவற்றை எண்ணியல் கணக்கு முறைப்படி ஆராய்பவர்கள் சிற்றவை (சிற்றம்பலம்) நெறியின் நிலைத்த தன்மையையும் அதன் சுழற்சியாகிய காலத்தையும் ஆழ்ந்து சிந்திக்கும் நல்லறிவுடையோர்களாகி,

('ஞாலம் ஆள்வதும் எட்டெட் டியலே' ஆதலால்) ஞாலம் முழுவதையும் ஒழுங்கிற்கு உட்படுத்தும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்வார்கள்.

Having assumed a form of dot at the first stage, the great process of *manduka*, takes the form of *mandala* and manifests itself through 64 square patterns. Those who are capable of perusing the characteristics of 64 square grids on the basis of mathematical calculation would be able to think about deeply the eternal features of the microbode and of the time which is really the effect of revolution of the microbode. Upon this, they would be efficacious enough in bringing the whole cosmic structure under perfect rhythm and regulation.

(This is so because, as has already been declared, (verse 132), it is only the mandala formed of 64 square that regulates and controls the whole world).

ஐந்தொழில் மெய்த்திறன் அகமுற உணர்ந்தே
வந்துறும் காலம் வகுத்தறி செயலால்
எண்ணெண் பருநெறி எண்ணெண் நுண் நெறி
ஐந்தைந்து இயலும் குறித்திறன் ஓர்ந்து
வந்துறும் உணர்நிலை வழிகுறிக் கும்மே. (134)

மெய்ப்பொருளின் ஆற்றல்களாக வெளிப்படும் ஐந்தொழில் நுட்பங்களை உள்ளத்தில் பொருந்த உணர்ந்து, மெய்ப்பொருளின் சுழற்சியால் வந்து பொருந்தும் காலத்தைக் கூறுபடுத்திக் காணும்

செயலால் மண்டலத்தின் தூலநிலையையும் சூக்கும நிலையையும், இதனுள் பொருந்தும் ஐயைந்து இயலையும் குறித்து அறியும் நெறித்திறத்தால் உள்ளவாறு ஆராயும்பொழுது அதனால் ஏற்படும் ஞானநிலையானது மெய்ந்நிலையின் ஐந்தொழில் நெறியை அறிவதாக அமையும்.

Having realised the subtleties about the fivefold function which emerges as the dynamic expression of the energy of the Primal Existence, the knowers of Vastu should proceed to know the gross and subtle states of the mandala through the process of knowing the divisions of time manifested through the revolving of the Primal Dot. They should know the gross and subtle states of the mandala through the process by which they analyse the twenty-five aspects of the mandala. The supreme knowledge gained by them in this way would enable them realise the process of fivefold function of the Primal Existence.

எட்டெட் டுறுநிலை நாற்புறத்து இயலாய்
எட்டுறும் கலையாய் மூலப் பொருளாய்ப்
புள்ளி நுட்பம் பொருந்த அறிவார்
துள்ளும் உணர்வால் நுண்ணிலை அறிவரே (135)

அறுபத்து நான்கு கூறுகளாக அமையும் மண்டலம் நாற்புறத்து இயலாகவும் (சதுர அமைப்பாகவும்) எட்டெட்டாகப் பொருந்தும் கலைகளாகவும் மூலப்பொருளை நடுவிடத்து அடக்கியதாகவும் விளங்கும். இத்தகைய மண்டலத்தின் மையப் புள்ளியினது நுட்பத்தைப் பொருத்தமான வகையில் அறிய வேண்டிய முறைப்படி அறிபவர்கள் மின்னல் போன்று விரைந்து எழும் ஓர் ஆன்மத் துடிப்பால், அதன் நுண்மையான நிலைகளை மேலும் விளக்கமாகக் காண்பார்கள்.

The manduka mandala which is formed as a perfect square consisting of 64 square grids energised by 64 *kalas* shines forth as a structural unit holding the Primal Existence at its centre. Those persons capable of knowing the subtlety of the central and the primal dot of the *mandala* in a specific manner prescribed in the scriptures would be evidently lead to know more about the subtleties of the central dot when a throb surges within themselves like a flash of lightning.

உள்ளுறும் ஞாலத்து இயல்நிலை அறிந்தோர்
விள்ளுறும் எட்டெட்டு இனிது அறிவாரே (136)

உள்ளத்தால் பொருந்த உணரப்படும் ஞாலத்தின் இயலையும் நிலையையும் நன்கு ஐயமற உணர்ந்தவர்கள், படிப்படியாக வெளிப்படும் மண்டலத்தின் தன்மைகளை நன்கு அறியவல்லவர் ஆவார்.

The knowers of Vastu tradition who have perfectly realised the real nature and existence of the cosmic structure through introvert deep thinking, would know beyond doubt the features of mandala which gradually manifest externally.

சிற்றவை நுட்பச் சீர்குறித்து அறிந்தே
உற்ற காலத்து இயல்நிலைப் பெருவெளி
உற்றறி வாரே ஐந்தைந்து இயலை
உற்றுணர் வால்அறி உள்ளொளி காண்பரே (137)

சிற்றவை நுட்பத்தின் சிறப்பினை நன்குணர்ந்து அறிந்து கொண்டு அதன்கண் பொருந்தியுள்ள காலத்தின் இயல்பையும் பெருவெளியின் இயல்பையும் முறைப்படி உணரவல்லவாகளே ஐந்தைந்து இயலை உணர்வால் அறியக்கூடிய உள்ளொளித் திறத்தை உறுதியாக அடைவார்கள்.

Only those persons who are capable of realising the specific features of the Microbode and of realising the nature of time and space contained and enclosed in the Microbode would surely be endowed with the powerful inner effulgence which enables them to know the characteristics of the twenty-five aspects of the mandala.

எட்டெட் டியலால் நெறியறி ஒன்பான்
விட்டுறும் ஒன்றுறும் விரைவியல் நெறியே
நெட்டுறும் நாற்புறச் சுழலே காலம்
எட்டியல் வளைவே ஒன்பான் பிறழ்வே (138)

எட்டெட்டியலாகிய மண்டுக மண்டலத்தின் தன்மையால் வாஸ்து நெறியை அறிபவர்கள் ஒன்பதின் மடங்காகவும் பத்தின் மடங்காகவும் விரைந்து அமையும் மண்டலங்களின் இயல்பை அறிவதுடன், நாற்புறமாகிய சிற்றவையின் சுழற்சியே காலத்தை

உண்டாக்குகிறது என்றும் எட்டியல், வளைவு நெறி என்றும் ஒன்பதன் இயல் அதன் பிறழ்நெறி என்றும் உணர்ந்து கொள்வர்.

Those persons who are proficient enough in realising the process of Vastu through the basic features of the manduka mandala are capable of knowing the features of the mandala which are formed incessantly as the square of ninefold and tenfold; in addition to this, they would understand that only the revolution of the microbode gives rise to the emergence of time; and know that the eightfold pattern is oblong process (projection) and ninefold pattern is its multiple process.

எட்டின் அசைவே ஆடல் இயங்கலே
விட்டுறும் பிறழ்தல் மாஇயல் ஓங்கலாய்
நெட்டுறும் நிலைக்கலை நெறிமுறை ஆடலான்
எட்டுறும் இயலென இயலுரை இயலே (139)

எட்டின் அசைவே ஆடலாகும்; இயல்பான நிலையை விட்டு அடுத்த படிமுறையில் வேறொரு நிலையை மேற்கொள்வதாகிய பிறழ்தல் என்பது இயங்கலாகும். இவ்வாறு ஆடலாகவும் இயக்கமாகவும் படிமுறையாய் ஓங்கி உயர்வதே கலைநெறியின் முறைமையாகும். இதுவே ஆடவல்லானின் எட்டுறும் இயல் (எட்டு என்னும் எண்ணின் இயல்) என இயல்நூல்கள் இயல்பாக உரைக்கும்.

Cosmic dance is nothing but the rhythmic movement of the eightfold mandala. The process of assuming a successive state as different from its own essential state is what is known as the functional displacement. Thus it is to be known that the uniform process of creative order is only the gradual evolution through movement and displacement. Thus the scriptures dealing with the science of Vastu declare that this is the exact eightfold feature of the Cosmic Dancer.

உள்ளுற இலங்கும் ஒளிபெறு ஞாலம்
தெள்ளுறக் கருத்துறச் சீர்பெற ஆய்ந்தே
ஞாலம் படைக்கும் நற்றிற ஆற்றல்
சீலமாய் விளக்கும் மூதறிவு அன்றோ (140)

பிண்டத்துக்குள்ளே ஒளிபெற விளங்கும் ஞாலத்து இயலைத் தெளிவாகவும் சிறப்பாகவும் ஆராய்ந்தால், கோலங்களின் திரட்சியாக உள்ள ஞாலத்தைப் படைக்கும் நற்றிற ஆற்றல் அமையும். இத்தகைய ஆற்றல் படைப்புக்கு உறுதுணையாக உள்ள சீலத்தை உணர்த்தக் கூடிய பேரறிவின் விளைவே அன்றோ!

On deep analysis of the whole cosmic structure within one's own physical frame in a clear and specific way, the knower of the science of Vastu would be endowed with the commendable power of creation of the world which shines forth as the assemblage of *FORMS*. This specific power is nothing but the effect of supreme knowledge which enables the knower of Vastu to realise the significance of Rhythm which serves as the basic support for the process of creation.

ஓமுறும் ஒளியும் ஓமுறும் ஒலியும்
காமுறும் கருத்தில் உள்ளுற அறிந்தே
எட்டின் அடைவே பிறழ்வும் கண்டே
எட்டியல் அறுபான் நான்கறி வாரே (141)

ஓம்-ஒளி, ஓம்-ஒலி — இவற்றை ஆர்வத்தோடு உள்ளுக்குள் உணர்ந்து கண்டு, எட்டின் அமைப்புமுறை எட்டின் பிறழ்நிலை ஆகிய இவற்றை உள்ளவாறு உணர்ந்தவாகளே எட்டின் இயலாகிய அறுபத்து நான்கு கலைகள் பொருந்திய மண்டலத்தின் ஆற்றலை நன்கு அறியவர்களாவர்.

Only the knowers of the science of Vastu who realise through introvert mentation and with enthusiastic fervor the characteristics of OM-light and OM-sound and understand the formative characters of *eight* and its displacement process -

become capable of realising the potential of the manduka mandala which consists of sixty-four aspects based on the nature of *eight*.

அறுபான் நான்காம் சிற்றவை தெரிந்தோர்
உறுமுறை எண்ணியல் எண்கலை அறிந்தே

பெறுமுறை ஆடலான் பிறழ்கலை உணர்ந்தே
உறுநிலைக் காலம் விரைவறி வாரே (142)

அறுபத்து நான்கு கூறுகளை உள்ளடக்கியதாகிய சிற்றவையின் இயல்பை நன்கு உணர்ந்தவர்கள் எட்டின் இயல், எட்டின் கலை ஆகிய இவற்றையும் அறிந்து,

ஆடவல்லான் புடைபெயர்ந்து இயங்கும் பிறழ்நிலையையும் உணர்ந்தவர்களாகி,

பிறழ்நிலையில் தோன்றும் காலத்தின் வேகத்தையும் அறியக் கூடியவர்களாக ஆவார்கள்.

Those persons who have realised the essential nature of the Microbode which consists of sixty-four aspects are considered to be efficacious in knowing-

- the nature and aspect of the eightfold pattern
- the displacing-process of the Cosmic Dancer who changes his positions
- and the swiftness of Time-factor effected by the process of displacement.

காலத்து இயலைக் கணக்கறிந்து ஆய்ந்தே
சீலம் மூலம் கோலம்முற் றுணர்ந்தே
ஞாலம் தெரிவரே நற்றமிழ் ஓம் ஒளி
கோலத் தமிழால் குறித்தறி வாரே (143)

நற்றமிழாகிய ஓம் என்பதன் ஒளி இயலை, —

கோலங்களை அமைப்பதற்குரிய உருவக்கலைத் தமிழ் நெறியால் உணரவல்லவர்களே காலத்தின் இயல்பைக் கணித முறைப்படி ஆய்ந்து, சீலம், மூலம், கோலம் ஆகிய இவற்றையும் முறைப்படி உணர்ந்து ஞாலத்தையும் அளக்கவல்லவராவர் (அறிய வல்லவராவர்).

Only those persons capable of understanding the light-aspect of OM which is the expression of blissful manifestation (TAMIL), through the process of manifestation of FORMS, could know the nature of the entire Cosmic structure. They are able to know this by

analysing the nature of Time through the process of manifestation and by a systematic study of Rhythm, Primal Existence and Forms.

எண்ணெண் அளவை இலங்குறும் சிற்றவை
நுண்ணியல் புள்ளி மூலம் உணர்த்தி
மண்டும் காலச் சுழல்நிலை காட்டி
அண்டும் ஐந்தொழில் ஞாலம் காட்டுமே (144)

அறுபத்து நான்கு கூறுகள் விளங்கும் சிற்றவையே நுண்மையான இயல்புடைய புள்ளியின் வாயிலாக மூலத்தை உணர்த்தி, நெருங்கி அமையும் காலச்சுழற்சியின் நிலைமையையும் காட்டி, நன்னிலைக்குப் பொருந்துகின்ற ஐந்தொழிற்கு உட்படும் ஞாலத்தின் ஒழுங்கான அமைப்பையும் காட்டும்.

Only the Microbode in which sixty-four energies shine forth makes known through its subtle and central dot –

- the potentials of the Primal Existence
- the cyclic nature of the ever-emerging Time
- and the rhythmic structure of the world which is subjected to the fivefold function.

ஐந்திற இயலால் சிற்றவை நோக்கி
வந்துறும் ஐந்துஐந்து இயற்கலை ஓர்ந்தே
புள்ளி மூலம் பொருந்தக் கண்டே
தெள்ளுறும் ஓம்ஒலி ஓம்ஒளி நோக்கி
எட்டின் பிறழ்நிலை இனிதுற்று உணர்ந்தே
விட்டுறும் ஒன்பான் நிலைக்கலை ஓம்நெறி
செந்தமிழ் மூல முதலெழுத்து என்றே
வந்துறும் நெறியே வகைவிளக் கும்மே (145)

ஐவகைப்பட்ட திறங்களின் அடிப்படையில் சிற்றவையின் சிறப்பை நுனித்துணர்ந்து, ஐயைந்தாக விரிவுபடும் கலைகளின் இயல்பையும் ஓர்ந்து, புள்ளியாகிய மூலத்தின் நுண்மையையும் பொருத்தமுறக் கண்டு—

தெளிவான உள்ளத்தில் புலனாகும் ஓம்-ஒலியையும் ஓம் ஒளியையும் கண்டு, எட்டின் மடங்காம் பிறழ்நிலையைப் பொருத்தமுறக் கண்டு —

தன் இயல்பான நிலையை விட்டு வேறொரு நிலையைப் பொருந்தும் ஒன்பதன் பிறழ்நிலைக்கு ஓம் என்பது வித்தாக விளங்குகிறது எனவும், ஓம் என்பது நெறிமுறைக்கு உட்பட்ட செந்தமிழின் மூல முதலெழுத்து எனவும் வழிவழியாக வரும் நூன்மரபு இனிது விளக்கும்.

The scriptural tradition which comes down through the ages without any interruption-

- has very pointedly observed and realised the specific characteristics of the Microbode on the basis of fivefold aspect,
- analysed the nature of *kalas* which ever unfold in pentadic pattern
- consistently realised the subtlety of the central dot identical with Primal Existence
- known the nature of OM-sound and OM-light
- clearly realised the multiple process of the octave pattern
- ascertained that OM is the root-cause for the displacing process of the ninefold pattern which changes and leaves its own position and assumes another state
- and has declared that OM is the primal letter which symbolises the process of blissful expression and expansion.

சிற்றவை கணக்கியல் சீருறத் தெளிந்தோர்
உற்றஐந் தொழிலின் நுட்பமும் ஒளியும்
உற்றுறும் ஓம்ஒளி ஓம்ஒலி உணர்ந்தே
பெற்றுறும் திறவலி பேரியல் நெறியே (146)

சிற்றவையாகிய அறுபத்து நான்கின் கணக்கியலைச் சிறப்புறத் தெரிந்து கொண்டு தெளிவுபெற்றவர்கள் ஓம் என்பதன் ஒளியும் ஒலியுமே ஐவகைத் தொழிலின் நுட்பமாகவும் ஒளியாகவும் விளங்குகிறது என்பதை உணர்ந்து திறமைசால் ஆற்றலைப் பெற்றுச் சிறப்புநிலை அடைவர். இது பெருநிலை பொருந்திய நெறியாகும்.

Those persons who have attained clarity about the calculus of the sixty-four aspects which constitute the Microbode would realise that OM light and OM sound shine forth as the subtle potential and the light behind the fivefold function and attain power and efficacy with regard to creative order.

This is the impeccable and greatly impressive process.

எட்டெட் டியலை அறிமுறை அறிந்தே
எட்டின் ஆடல் இயல்கலை ஓர்ந்தே
விட்டுறும் ஒலிஓம் ஒளித்தமிழ் விண்தமிழ்
நெட்டெழுத் தியலே நெறியுணர்த் தும்மே (147)

அறுபான் நான்காம் சிற்றவையின் இயலை அறிமுறை அறிந்து அச்சிற்றவையில் எட்டின் ஆடல்கலையை நுணுகி ஆய்ந்தால் —

படிமுறையாகப் பரிணமிக்கும் மூலநாதமாகிய ஓம் எனும் நெட்டெழுத்து என்பது ஒளித்தமிழ், விண்தமிழ் ஆகிய இரண்டின் நெறிகளையும் உணர்த்தவல்லது என நன்கு உணரலாம்.

If a person, keen on knowing the Vastu, after knowing the essential nature of the Microbode consisting of sixty-four grids, through the exact process ordained for it, analyses the significance of Cosmic Dance of the octave pattern within the Microbode, he could well understand that the long sounding syllable OM, which is the gradual unfoldment of the primal sound, makes known the functional aspect of the light form and space form of the creative lingual order.

எழுத்தியல் நுணுக்கம் இயலுறத் தெரிந்தே
வழுத்தல் கலைநெறி மரபுறும் ஆக்கம் (148)

எழுத்தியலின் நுணுக்கங்களை உள்ளவாறு அறிந்து கொண்டு அவற்றை விதிமுறை வழுவாமல் காத்தலே கலை நெறிக்கு மரபுமுறையாக வரும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

The knowers of Vastu should know the subtleties of orthography as they really are and preserve it without

giving room for aberration. This method of preserving the traditional features of orthography would enrich the artistic tradition.

செந்தமிழ் எழுத்தே ஒளி ஒலித் திறனாய்
முந்துறும் உயர்இயல் முயங்குமா நெறியே (149)

செந்தமிழ் எழுத்து ஒளித்திறனாகவும் ஒலித்திறனாகவும் மேம்பட்டு முனைந்து நிற்கும். இவ்வாறு முனைந்து நிற்கும் தன்மையே அது உயிரியேலோடு ஒன்றிக்கலக்கும் பெருமைக்குரிய நெறியாகப் பொலிவு பெறுகிறது.

The letters belonging to the eternal tradition of creative lingual order keep to be always in pre-eminence both as light-potency and sound-potency. Only this significant character of pre-eminence shines forth as the commendable process which inseparably unites with one's own soul.

மாநெறி நுட்பம் மறைமொழி எண்ணெண்
தூநெறி கிளக்கும் ஐங்குறில் உயிரும்
எழுத்தால் இலங்கி எண்ணால் துலங்கி
வழுத்து மாநெறி நிலைக்கலை ஓங்கி
வையத் தன்மை நிலையுற விளக்குபு
ஐயைந்து இயல்நெறி பருநெறி நுண்திறன்
காலச் சுழலும் கடுகி விரையும்
கோலமும் சீலமும் குறிப்பின் உணர்ந்து
ஞாலம் காண்போர் மூலம் ஆய்ந்தே
உள்ளுறும் வையம் புறத்துறும் வையம்
தெள்ளுறும் கலைத்திறன் சீர்நிலை காண்பரே (150)

மேற்கூறப்பட்ட மாநெறியின் நுட்பம், மறைபொருளாகிய அறுபான் நான்கின் தூயநெறியை நன்கு வெளிப்படுத்தும். அ முதலான ஐந்து குறில் எழுத்துகளும் எழுத்தின் வகையால் விளங்கும் எண்ணின் வகையால் பொலிவுபெற்று, மாநெறியின் நிலைத்த கலைச்சிறப்பை ஓங்கச் செய்யும். இதன் அடிப்படையில் வையத்தின் தன்மையை நிலையாக விளக்குவதற்காக,—

ஐயைந்தாக இயங்கும் நெறியின் தூல நிலையையும் சூக்குமத் திறத்தையும் காலச் சுழற்சியையும், விரைந்து அமையும்

கோலச் சிறப்பையும் சீலச் சிற்பையும் குறிப்பால் உணரவேண்டும். இவ்வாறு உணர்ந்தே ஞாலத்தின் இயல்பைக் காணவேண்டும். இவ்வாறு காண்போர் மூலம் என்பதையும் ஆய்ந்து உண்மை உணர்ந்தவர்களாகி உள்ளுறும் பிரபஞ்சமும் வெளியே காணப்படும் பிரபஞ்சமும் சமன்வயப்பட்டு நிற்கும் சிறப்பு நிலையைத் தெளிந்த கலைத்திறத்தால் காண்பார்கள்.

The commendable and greatly impressive procéss mentioned earlier, clearly makes known the efficacy of the pure tradition of the cunnivant art of the manduka mandala constituted of sixty-four aspects (square). The five short letters beginning with A (அ), existing eternally both in the letter pattern and numerical pattern enhance and augment the artistic features of the praiseworthy path (process) of creation.

In order to explain the nature of the world based on this process, the knower of Vastu should realise the gross and subtle aspects of the pentadic process, the revolutional nature of Time, the supreme qualities of FORM and Rhythm. Only after knowing these, he should endeavour to know the essential features of the world-structure. The knower of these truths should also know about the nature of the Primal Existence (mulam). Then, with the supreme knowledge and efficacy related to the creative order, they would see that the microcosmic structure is in total identity with the macrocosmic structure.

மெய்க்கலை மெய் ஒலி திறனுறத் தோன்றி
உயிர்இயல் ஆகி ஒலிமுறை நெறியே (151)

எழுத்து என்பது உயிர்க்கலையே. அது உள்வளியின் முயற்சியால் மேலெழும் ஒலி ஒணுக்களின் திரட்சியாக அமையும் மெய்க்கலையுமாம். கூர்ந்து நோக்கினால், மெய்யெழுத்துக்குரிய ஒலியும் உயிரியலாகவே விளங்கும். ஒலிமுறை நெறி இதுவே.

What is known as orthographic form (letter) is really a manifestation of inner soul. It becomes a physical but realistic manifestation of the conglomeration of sound atoms due to the functions of vital air inside the physical

body. If perspectively viewed it would become evident that even articulated sound of the consonant is really the sound of vowels. This is the exact truth behind the process of articulation.

உயிர் ஐங்குறிலே ஓசை நிறைமொழி (152)

ஓசைவளம் நிறைந்த மொழியில் உயிர் எழுத்துக்களுள் ஐந்து குறில் எழுத்துக்கள் உண்டு.

In a specific language designed for blissful expression, endowed with plethora of sound potentials, there are five short letters belonging to the group of vowels.

ஐங்குறில் ஆக்கமே எழுநெடில் ஓசை (153)

எழுகின்ற (அல்லது ஏழு) நெடில் எழுத்துக்களின் ஓசையும் உண்மையில் ஐந்து குற்றெழுத்துக்களுக்கு உரிய கால எல்லையின் ஆக்கமே ஆகும். (ஆக்கம் - அதிகரிப்பு)

In reality, even the articulated sounds of the uprising long letters (which are seven in number) is only the augmented duration of articulation belonging to the five short vowels.

உயிர்பன் னிரண்டே ஒளிதரும் உருநிலை (154)

மூல ஒளி தரும் உருநிலை, குறில் ஐந்தும் நெடில் ஏழுமாகிய பன்னிரண்டு உயிரெழுத்துக்களே ஆகும்.

The existential nature of form brought about by the Primal Light is really the emergence of five short letters and seven long letters belonging to the group of vowels.

எழுத்தியல் இயக்கம் இயலுறத் தெரிந்தே
வழுத்தல் கலைநெறி மரபுறும் ஆக்கம் (155)

Repetition of the verse 148.

எண்ணெண் நாற்புறத்து இயலாய் விரிந்தே
அண்ணுறும் நாற்புற நடுவொன்று இயலாய்
எண்ணுறும் நாற்புற விரிவும் கூடி
எஞ்ஞான் ஐந் தியலாய் ஐந்நிலை கூறும் (156)

அறுபான் நான்காம் சிற்றலை எப்பொழுதும் நாற்றபுறத்து இயலாக விரிவடையும். நாற்புறத்தின் நடுவே ஒரு மையப்புள்ளி பொருந்த இந்தப் புள்ளியும் நாற்கோணமும் கூடி ஐந்து இயலாக அமையும். நாற்கோணத்தின் ஒவ்வொரு கோணமும் ஒரு கூறாக அமைய ஐந்து நாற்புறங்கள் அமையும். இது ஐந்து நிலைகளைப் புலப்படுத்தும்.

The microbode constituted of 64 squares gets expanded in quadrangular pattern. At thc centre of the quadrangle there would form a dot and this dot and the four angles assume the pentadic process. Each angle of the quadrangle, being in similitude with the central dot assume the same expanded form of pentadic design as assumed by the central dot. This would explain the five states of the Primal Existence.

நாற்புறத்து இயல்தோறும் ஐங்குறி யாகி
நாற்புறத்து எண்ணெண் இயல்கலை ஓங்கி
வலமுறும் ஆக்கம் வளிநிலை சுழன்று
நலமுறும் நிலைக்கலை நெறிமுதற்று என்ப (157)

நாற்புறத்து இயலாகிய சிற்றலை தோறும் ஐந்து குறிகள் அமைய, நாற்புறத்துள்ளும் 64 கட்டக்லைகள் சிறப்புற்று அமைய, காற்று வலமாகச் சுழன்று எழுவதுபோன்று மூலப்புள்ளி விசைகொண்டு சுழலும். இவ்வாறு சுழன்று வாஸ்துவிற்கு நலம்தரும் வகையில் நி.ालபெறும். இவ்வாறு நிலைபெறும் நெறியே முதன்மைத் தன்மை உடையதாகும்.

In each microbode, five points of space would take shape at each corner and sixty-four aspects or square grids would be housed at each corner. At the centre of the Microbode, the primal dot would revolve from right to left like the whirling wind, and stabilise itself so as to effect the potency and richness to the Vastu. Only this process of stabilisation is considered to be of the most dominating nature in the tradition of Vastu.

மாநெறி நுட்பம் மயக்கற உணர்ந்தே
தூநெறி உயிர்ஐங் குறில்நிலை நாடிச்
சீர்நெறி எழுத்தியல் அறுபான் நான்கும்
நேரியல் காண்டல் நெறிமுறை மரபே (158)

முதன்மைத் தன்மை உடையதாகிய மாநெறியாகவும் தூய நெறியாகவும் உள்ள இதன் நுட்பத்தைத் தெளிவாக உணர்ந்து —

சிற்றவை நடுவில் ஐந்து குறில் எழுத்துக்களும் அமையும் நிலையை நாடி உணர்ந்து—

சீர்மைபொருந்திய 64 கட்டங்களிலும் அமைய வேண்டிய எழுத்துக்களைப் பொருத்த முறையில் கண்டு அறிவதும் வழிவழி வரும் மரபாகும்.

The expert should understand the subtlety and the great and impeccable process of Vastu and perspectively know that the five short-letters get identified at the centre of the Microbode. He should also understand correctly the manner in which the alphabets are identified with all the sixty-four squares. The identification of letters with the square-grids is strictly a minute process in the Vastu lineage coming down traditionally.

எண்ணெண் இயலால் எண்நிலை ஆக்கி
எண்ணெண் நெறியால் நாற்புறத்து இயல்தொறும்
எண்குறித் திறனாய் ஐந்தியற் புள்ளி
எண்ணொளி மேவ நடுவியற் புள்ளி
எண்ணெண் நிலைச்சுழல் பிறழ்நிலை ஓர்ந்து
விண்ணொளி ஆடல் மெய் 'ஓம்' நிலையே (159)

அறுபான் நான்கியலாகிய சிற்றவை நுட்பத்தால் எட்டு நிலைகள் அமைவதை உணர வேண்டும். எட்டு எட்டாகப் பகுக்கும் நெறியால் நாற்புறத்து இயலாகிய சிற்றவை தோறும் எண்களைக் குறியிட வேண்டும். ஐந்தியற் புள்ளி மூல ஒளியுடன் பொருந்த, அவற்றுள் மையப்புள்ளி 64 கட்ட-நிலைகளிலும் வலமாகச் சுழன்று பிறழும் முறைமையை அறிய வேண்டும். அதன் அடிப்படையில் விண்ணொளி ஆடலானது மெய்யான ஓம் நிலையே என உணர வேண்டும்.

The knowers of Vastu should realise that eight stages of evolution occur due to the subtle state of the Microbode, constituted of sixty-four squares. He should correctly know the process of identifying the numerals with the squares of the Microbode through the method of dividing it into eight by eight. He should also understand the series of

operations undergone by the central dot in assuming the sixty-four squares by revolving from right to left. He should also understand that the resplendence Cosmic Dance of the Primal Existence is really that of the eternal OM.

அறுபான் நான்கும் அமைவுறக் கண்டே
அறுபான் நான்குறும் ஐந்தியல் ஆய்ந்தே
உறுநிலை எழுத்தியல் ஒளிமுறை தெளிந்தே
பெறுமுறை நாற்புறத்து இயல்தொறும் அமைத்து
அறுபான் நான்குஇயல் நிலையுறத் தேர்ந்தே
உறுகலை நாடல் உயிர்நெறித் திறனே (160)

அறுபான் நான்கு நிலைகளும் அமையும் முறையைக் கண்டு அறுபான் நான்கிலும் ஐந்து இயல் இயக்கத்தை ஆய்ந்து, அறுபான் நான்கிலும் அமையும் எழுத்துக்களின் ஒளிநிலையைத் தெளிவாக அறிந்து, அவற்றைப் பொருத்தமான முறையில் நாற்புறத்தியலாகிய சிற்றவை தோறும் அமைத்து, அறுபான் நான்கியலின் நிலைத்த தன்மையைத் தேர்ந்துணர்ந்து—

அடிப்படையாக அமையும் கலைநுட்பத்தை நாடி அறிதலே உயிர்ப்பு வாய்ந்த (அதாவது என்றும் நிலைத்திருக்கும்) திறனாகும்.

The knower of Vastu should perceive the significance of the formative process of the sixty-four aspects (of the square mandala) and know about the resplendent state of the alphabet which remains absorbed into the sixty four squares. In the constructional process, he should impute the corresponding alphabets over all the squares of the Microcode and there by perceive the stable and significant features of the sixty-four aspects. The ever-thriving potency is the art of knowing significantly the creative subtlety which is the basic for the ensuing structural aspects.

எண்ணியல் நாற்புறத்து இயல்தொறும் எழுத்தால்
நுண்ணுறும் ஒலியே நவையறத் தெரித்தே
விண்ணுறும் ஒளிநிலை மண்ணியல் கலைநிலை
எண்ணுற விளக்கும் எண்ணெண் ஆற்றலே (161)

வாஸ்துவின் அனுபவ அறிவு வாய்க்க விரும்புவோர் எட்டெட்டாக அமையும் நாற்புறத்தியலாகிய மண்டலம் தோறும்

எழுத்துமுறைப்படி அமையும் ஒலிநிலையைத் தெளிவாக அறிய வேண்டும். விண்ணின் ஒளிநிலையையும் மண்ணின் கலைநிலையையும் உள்ளத்தில் பொருந்துமாறு விளக்கின் 64-இன் ஆற்றலே ஆகும்.

Mandala is formed in eightfold pattern. The expert in the science of Vastu should know the energising sound presented according to the corresponding letter in each square of the quadrilateral mandala; he should know the light-energy of the elemental space in each square; should know the creative and sustaining force and potency of the earth confined by the mandala. It is the force of the sixty-four grids that makes known the afore mentioned aspects.

மூலம் அறிந்தோர் முப்பொருள் ஆய்ந்தே
சீலம் காலம் ஞாலத்து இயலால்
கோலம் காட்டும் குறிப்பின் உணர்ந்து
கூறுகூ றியலின் குறிநிலை ஓர்ந்தே
எழுத்தியல் அமைப்பால் நெறிக்கலை மூலம்
வழுத்தும் எண்ணியல் வகையுற விரித்தே
அறுபான் நான்கும் அமைவுற நோக்கி
உறுங்கலை மூலத்து ஐங்குறில் காண்பரே. (162)

மூலத்தின் உண்மைநிலை உணர்வோர் ஒளி, ஒலி, காலம் எனப்படும் மூன்றின் இயல்புகளையும் ஆராய்ந்து, கோலங்கள் வெளிப்படுத்தும் நிலைகளின் மூலம், சீலம், காலம், ஞாலம் இவற்றைக் குறிப்பால் உணரவேண்டும். பிறகு, மண்டலப்பரப்பில் கூறு கூறாக அமையும் கட்டங்கள் உணர்த்தும் உண்மையை ஓர்ந்து, அவற்றில் பொருந்தும் எழுத்தியலால் எட்டின் இயலை விரிவாக அறிய வேண்டும். இப்படி அறிவதன் வாயிலாகவே அறுபான் நான்கின் ஆற்றலைப் பொருத்தமாக உணர்ந்து, கலை மூலத்துக்குரிய ஐந்து குறில் ஒலிகளையும் உணரமுடியும்.

Those persons who have experientially understood the real nature of the Primal Existence

Could analyse the characteristics of sound, light and time; they could-

- know, suggestively, the nature of rhythm, effected by time and the world through the effected forms and constructions

- know the truth about the symbolic expression of the square grids
- perspectively understand the significance of eight through the corresponding letters identified with the square
- and know the significance of the formative force of sixty-fore and of the five short letters pertaining to the basic creative art.

ஐங்குறில் உயிரே அருங்கலை உணர்த்தும் (163)

உயிர் எழுத்துக்களாகிய ஐந்து குறில் எழுத்துக்களும் அரிய கலைகளை உணர்த்தும்.

The five short letters of the group of vowels are capable of providing complete knowledge about the artistic creations.

அஇ உஎ ஒ-ஐங் குறிலே (164)

ஐந்து குறில் எழுத்துக்கள் ஆவன — அ, இ, உ, எ, ஒ.

The enumerated five short letters are — a, i, u, e and o.

ஒளியுறும் தன்மையும் ஒலியுறும் வன்மையும்
வரிவடிவு இயலால் உருவியல் ஆகி
ஐந்தெழுத்து இயலே நெறிமுறை உயிரே (165)

ஒளி, ஒலி - இவற்றின் தன்மையையும் வன்மையையும் வரி, வடிவு ஆகிய இவற்றால் காணவேண்டும். வரி, வடிவு முதலானவற்றால் உருவம் பொருந்தும். இவ்வாறும் உருவம் பொருந்துவதற்கு, நெறிமுறையாய் அமையும் உயிரெழுத் துக்களுள் ஐந்து குறிலெழுத்துக்களின் இயல்பான தன்மையே அடிப்படையாகும்.

The potency and force of light and sound are present in lines and images. A figure or form is effected by lines and images. The basic factor for such methodic formation of figures is the force of the five short letters of the vowels

which emerge according to the natural order of the primal force.

மெய்யொலி உயிரொலி சிவணுதல் இயல்பே (166)

மெய்யெழுத்துக்குரிய ஒலியுடன் உயிரெழுத்தொலி பொருந்துதல் என்பது இயல்பாக அமைந்துள்ள நிலையே ஆகும்.

The union of the sound of consonant and that of vowel is but the natural process according to the inherent power of the alphabets.

எழுத்தெலாம் புள்ளி இயலல்மா நெறியே (167)

அனைத்து எழுத்துக்களும் புள்ளியை ஆதாரமாகக் கொண்டே இயக்கம் கொள்ளும். இவ்வாறு கருதுவதுதான் வாஸ்து மரபுக்கு ஒத்த நெறியாகும்.

All the alphabet have their energising function based only on the primal dot. This concept is in conformity with the traditional practice of the vastu - lineage.

எண்ணெண் கலைத்திறன் நுண்ணிதின் நோக்கி
எண்வகுத்து இயலால் இருகூறு ஆக்கி
எண்நிலை நாற்புறத்து இயலுற ஆய்ந்தே
விண்ணொளி ஓசை ஒலித்திறத்து எழுத்தாய்
தண்தமிழ் ஐங்குறில் தான்இயல் நெறியே (168)

வாஸ்து மரபறிவோர், அறுபான் நான்கின் கலைத்திற நுட்பத்தை உணரவேண்டும். எட்டெட்டாகப் பகுக்கும் முறையில் குறுக்குப் பகுதியையும் நெடுக்குப் பகுதியையும் பிரித்து, எவ்வெட்டாகப் பகுக்கப்பட்டிருக்கும் நிலையை நாற்புறத்து இயலில் பொருத்தமுற ஆய்ந்து அறிய வேண்டும். மூல வெளியிலிருந்து எழுந்த ஒளித்திறமும் ஒலித்திறமுமே எழுத்தின் வடிவாக — தண்தமிழ் ஐங்குறிலாக இயங்குகிறது என உணர்வதே வாஸ்து மரபுக்கு ஒத்த நெறிமுறையாகும்.

The expert should realise the significance and subtlety of the creative force contained in the sixty-four aspects. According to the features of the quadrilateral structure, he should analyse the eightfold division effected by horizonal and vertical lines. Thereupon, he should

realise that the potency and emerging force of the light erupted from the primal space assumes the letter-form and functions through the five short letters. Only this process of knowing is in correspondence with the age-old tradition.

குறிநிலை ஆய்ந்தோர் நெடிலுணர்ந் தாரே (169)

குற்றெழுத்துக்களின் இயல்பை ஆராய்ந்தவர்கள் நெட்டெழுத்துக்களின் இயல்பை உணர்ந்தவர்களாவர்.

Only those persons who have perspectively analysed the nature of short-letters are considered to be the knowers of the nature of long-letters.

ஐந்தியல் குறிப்பே ஐங்குறில் மூலம் (170)

மூலத்தின் ஐந்து இயலையும் குறிப்பாகப் புலப்படுத்துவனவே ஐந்து குறில் எழுத்துக்களும்.

The five short letters are capable of indicating the fivefold latent aspect of the Primal Existence.

மூல மூலம் முயலுறக் கண்டே
மூலப் புள்ளி நடுவண் இருத்தி
நாற்புறப் புள்ளி நவையறக் குறித்தே
ஆற்றுறும் நெறிக்கலை அகத்துணர்வு ஓங்கி
எட்டின் பிறழ்வே ஓம்என்று அறிந்தே
எட்டே எண்ணின் இயல்முடி பாகி
எட்டுறும் கலைத்திறன் மெய்யுணர்வு உற்றே
மூல முதலொலி ஒளியொலித் தமிழே
சீலம் இயங்கல் தெளிவுறும் சிறப்பே (171)

மூலத்தின் மூலத்திறனாக உள்ளது எதுவோ அது முதல் இயக்கமாகிய முயற்சியைக் கொள்ள, அதனை உணர்ந்து புலப்படுத்தும் வகையில் மூலப் புள்ளியை நடுவே அமைத்து, சுற்றிலும் நாற்புறங்களிலும் புள்ளிகளைக் குறித்துக்கொள்ள வேண்டும். முறைப்படி அமைந்த கலைகளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையால் அகத்துணர்வு முதிரப்பெற, எட்டின் பிறழ்வே ஓம் எனும் பிரணவம் என்பதை அறிந்து எட்டாகிய எண்ணே எண்ணியலின் முடிபுநிலை என்பதையும் உணர வேண்டும்.

எட்டுக் கலைகளின் திறத்தையும் மெய்யுணர்வால் உணர்ந்து கொண்டு, மூல முதல் ஒலியானது ஒளிச்சிறப்பும் ஒலிச்சிறப்பும் உடைய தமிழே என்றும் அதன் தெளிந்த சிறப்பு நிலையாவது, சீலத்தோடு இயங்கலே என்றும் உணர்வதுதான் சிறப்புக்குரிய நிலையாகும்.

That which exists as the basic force of the Primal existence assumes the first exertion (called movement)- To indicate this, a dot should be marked at the central point of the mandala; four dots should be marked at the four corners of the quadrilateral structure. Owing to the consciousness perfected by the continued thinking of the orderly formed *kalas*, the expert should realise that OM is nothing but the modification of EIGHT and know that only the number 8 is the final stage of the numerical pattern. He should also realise the potency of the eight kalas through his contemplative consciousness and know that only the primal and basic sound becomes the blissful expression of form associated with the specific features of sound and light. Its significant and unperturbed quality is to be always in rhythmic motion. This process of understanding leads to the supreme state.

மாத்திரை அளவே எண்நிலை அளவாய்
மாத்திரை இயல்நெறி காலக் கூறாய்
மாத்திரை ஒலியே எழுத்தாறும் அன்றே (172)

மாத்திரைக்குரிய அளவே எட்டுநிலைக்கும் அளவாக அமைந்துள்ளது என்றும் மாத்திரையின் இயல்நெறியே காலத்தின் கூறு என்றும் மாத்திரைக்குரிய ஒலிமுறையே எழுத்தாகவும் வடிவு பெற்றுள்ளது என்றும் உணரவேண்டும். இதுதான் மரபு முறை.

Conforming to the tradition, it is but essential to know that the duration of matra is the basic for the octave pattern and the duration of matra is the time-unit and the articulation through that duration becomes the letter-form.

அறுபான் நான்கும் எண்ணியல் வடிவாய்ப்
பெருநிலை எழுத்தியல் கலைநெறிச் சிறப்பே (173)

அறுபத்து நான்கு கட்டங்களும் எண்ணியல் வடிவாகவும் பெருநிலை பொருந்திய எழுத்தியல் வடிவாகவும் அமைவதே சிறப்புடைய கலைநெறியாகும்.

The creative process endowed with specific features is the emergent-formation of sixty-four squares as numerical pattern and letter pattern.

அறுபான் நான்கும் இருகூற்று ஆற்றலாய்
உறுகலைக் குறிப்பின் உட்கலை நுணுக்கம்
மூவின வகைநெறி முறைமையின் கிளக்கும் (174)

அறுபான் நான்கு (64) கூறுகளை உடைய மண்டலம் குறுக்குப் பகுதி நெடுக்குப்பகுதி ஆகிய இரண்டு கூறுகளை உடையதாக விளங்கும். அதன் உட்பொருளாகிய கலைநுணுக்கம் மூவின வகைகளின் நெறியைக் குறிப்பாக முறைப்படித் தெரிவிக்கும்.

(மூவினம் = ரஜ்ஜு, நாடி, வம்சம்)

All the sixty-four squares of the mandala would be subsumed into two groups - one consisting of horizontal parts and the other consisting of vertical parts-

In its state of implication, its artistic subtlety remaining as its core, would make known in an orderly way the formative process of three different groups - rajju, nadi and vamsa (identified with harsh - sounded letters (வல்லினம்), soft-sounded letters (மெல்லினம்) and medium-sounded letters (இடையினம்.)

நொடிநொடி மூலம் நெடிதுற நோக்கின்
நொடியும் இமையும் காலம் குறிக்கும் (175)

நொடி, நொடியின் மூலம் இவற்றை ஆழ்ந்து சிந்தித்தால் நொடி என்பதும் இமை என்பதும் காலக் கூறுகளைக் குறிப்பன என்று புலனாகும்.

Upon the deep contemplation of time-unit (known as noti) and its basic factor, it would become evident that the snapping of the finger (noti) and the twinkling of eye (imai) are the important time-units.

காலக் கூறே கணக்கியல் ஆகி
சீலம் குறிக்கும் எட்டெட் டியன்றே
மூலமும் ஞாமும் முறைமையின் விளக்குபு
எட்டியல் பெருக்கும் அளவை இயலே (176)

காலத்தின் சிறிய கூறுபாடே கணக்கியலுக்கு மூலமாக ஆகின்றது. அது சீலத்தால் எட்டு எட்டாக இயங்கி மூலத்தையும் ஞாலத்தையும் முறைப்படி விளக்கவல்லது. இவ்வாறு எட்டின் மடங்காக அமைவதே ஐந்திறத்தின் அளவை இயலாகும்.

The minute fraction of time-unit becomes the basis for mathematical calculations. Only the fraction of time-unit functions in eightfold pattern through rhythm and it becomes efficacious enough in explaining the nature of Primal Existence and the world of forms. In this way, the measure-process of fivefold aspect is nothing but the multiples and progressions of eight.

கால நுணுக்கம் கருத்துறக் கண்டோர்
மூலப் பொருளை முன்னி ஆய்ந்து
கோலம் காட்டும் அறுபான் நான்கில்
சீலம் இயலல் சிவணுறத் தெரிந்து
ஞாலத்து இயலால் மூவகை கிளக்குபு
வல்லினம் மெல்லினம் இடையினம் ஆய்வரல்
தொல்நெறி மரபின் பெருஞ்சிறப் பாகி
அறுபான் நான்கின் பெரும்கூற் றியலின்
உறுநிலைப் பருநெறி நுண்நெறி நோக்குபு
இனநெறி நுட்பமும் திட்பமும் ஓர்ந்தே
எழுத்தியல் ஆக்கம் நிறைவுறும் அன்றே (177)

கால நுணுக்கத்தைக் கருத்துற ஆராய்ந்தவர்கள் மூலப் பொருளின் ஆற்றலைச் சிந்தித்துத் தெளிந்து, கோலத்தை வெளிப்படுத்துவதான அறுபான் நான்காம் மண்டலத்தில் சீலத்தின் இயக்கம் சிறப்பாகப் பொருந்தி விளங்குவதை உணர வேண்டும். ஞாலத்து இயல்பின் காரணமாக வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாக ஒலிகள் அமைதல் தொன்மை வாய்ந்த மரபு நெறியே என்று உணர வேண்டும். அறுபான் நான்கின் பெருங்கூற்றுப் பகுதியின் பருமை நெறியையும் சிறுகூற்றுப் பகுதியின் நுண்மை நெறியையும் நோக்கி, வன்மை முதலான இனங்களின் நுட்பத்தையும் திட்பத்தையும்

ஆய்ந்து தெளிந்து அறுபான் நான்கில் (64 சதுரங்களில்) அமைத்தால் எழுத்தியலின் ஆக்கச் செயல் நிறைவு பெறும்.

Those persons who have analysed the subtle nature of TIME should contemplate the potency of the Primal Existence and realise the manifested movement of rhythm over the space of the mandala constituted of 64 squares which gives rise to the FORMS. They should realise that the three groups of lines (or letter conventionally exist according to the nature of the universe. They should analyse the visible process of the gross aspect of the mandala and the invisible process of its subtle aspect. They should analyse the subtlety and the immutable nature of the three groups of letters and identify them with 64 squares. Only by these workings, the creative energy of letters gets completely manifested (or effected).

எண்ணெண் இயலறி நாற்புறத்து இயலால்
தண்தமிழ் எழுத்தியல் தகைவுற நாடி
மூலப் பொருளும் முறைமையிற் குறித்தே
சீலம் காண்டல் திருநெறி அன்றோ (178)

அறுபத்துநான்கு இயல் அறியச் செய்யும் நாற்புறத்து இயலால் தமிழ் எழுத்துக்களின் இயல்பைப் பொருத்தமுற ஆராய்ந்து, மூலப் பொருளுக்கு இயைந்த வகையில் அவற்றை அறுபான்நான்கு கூறுகளில் அமைத்து ஓர் ஒழுங்குமுறையைக் காண்பதே திரு என்னும் சிறப்பு நிலைக்குரிய நெறியாகும்.

The commendable and specific mode of operation pertaining to the supreme state of manifestation consists in analysing consistently the nature and order of letter through the square design which is made known by 64 aspects and in realising the orderly pattern in the distribution of letters all over the square grids according to the nature of the Primal Existence.

நினைப்பே உணர்வே ஒளிநிலை திகழ்ந்தே
கனைப்பே மெய்யொலி முயற்சிய தாகி
சினைஇயல் உயிரொலி யாய்வரல் பிறப்பே (179)

உயிரின் நினைப்பாலும் உணர்வாலும் உயிரின் ஒளிநிலை (அறிவுநிலை) இயக்கம் கொள்ள, கனைப்பு என்பது மெய்யொலிக்குரிய முயற்சியாக அமைய, அதனால் மேலும் கிளர்ச்சியும் உந்துதலும் பெற்று உயிர் வெளிப்படுத்தும் ஒலியாக உருவெடுத்தலே எழுத்து பிறந்தொலிக்கும் முறையாகும்.

The supreme power of consciousness of the soul gets activised through contemplation and realisation. This consciousness enables the person to exert high-pitched sound in order to articulate the sounds of consonants. Next to this effort comes breath-rising and upward thrust (drive). Only by these efforts, a person articulates the sounds (audible). This is the exact process of articulation.

ஒளியே உணர்வே பேரறி வாகி
தெளிநிலைக் கலைத்திறன் உணர்த்தும் என்ப (180)

ஒளி, உணர்வு — இரண்டும் இயைந்து ஆன்மாவின் பேரறிவாகிக் கலைத்திறனின் தெளிந்த நிலையை நன்கு புலப்படுத்திக் காட்டும்.

Consciousness and knowledge join together and evolve into supreme consciousness of the soul. This supreme consciousness (of the soul) perfectly manifests the pellucid state of creative skill (potency).

எண்ணெண் கலைத்திறன் இயல்மொழி கூட்டி
விண்ணொளி நிலைகலை நெறியுறக் காட்டி
தண்தமிழ் ஐந்தியல் மூலம் விளக்கி
ஒண்தமிழ் ஐங்குறில் ஏழ்நெடில் தெரித்து
வல்லின மெல்லின இடையினம் தோற்றித்
தொல்மரபு இயல்உரை விளக்குறும் நெறியே (181)

இயல்பாகவே அமைந்திருக்கும் ஆற்றலுக்குரிய பெயர்களை அறுபத்து நான்கு கூறுகளிலும் அமைத்து, விண்ணொளியின் நிலையையும் கலையையும் நெறிமுறைப்படி அதில் காட்டி, தமிழ்நெறியாம் ஐந்தியல் முறையில் மூலத்தினையும் விளக்கி, ஒளித்தமிழுக்குரிய ஐந்து குறில் எழுத்துக்களையும் ஏழு நெடில் எழுத்துக்களையும் நன்கு புலப்படும்படி இணைத்து (ஐக்கியப்படுத்தி), வல்லின, மெல்லின, இடையின

எழுத்துக்களையும் பொருத்தமுற அமைத்துத் தொன்மைவாய்ந்த மரபுவழிப்பட்ட நூலானது, மண்டல நெறியை நன்கு விளக்கும்.

The scripture dealing with Vastu according to the age-old tradition would explain the process of mandala—

- by identifying the names of the energising (or animating) forces with all the sixty-four squares
- by imputing the light and kala aspects of the elemental space to the mandala-design in a traditional way
- by installing the presence of the Primal Existence at the centre of the mandala according to the fivefold blissful expression
- by identifying the five short letters and the seven long letters belonging to the resplendent expression of Supreme Bliss, with the square
- and by identifying the letters belonging to the three groups with it.

நெறியே அறுபான் நான்குறும் இயலால்
அறிநிலைக் கலையாய்க் கணக்கியல் தெரித்தே
குறிப்புறும் எழுத்தியல் ஒலிமுறை நோக்கி
அறிவுணர் நிலைகலை மாத்திரை விளக்கி
உயிர்இயல் ஒளியியல் ஒலிஇயல் இயைந்தே
செயிர்அறத் தெரிக்கும் திண்நிலைக் குறிப்பே (182)

முறைப்படி அறுபான் நான்கு இயலால் புலனாகக்கூடிய கலைநிலையால் கணக்கியலையும் தெரிவித்து, வாஸ்து சக்தியைப் புலப்படுத்தும் எழுத்துக்களை ஒலிஇயல் அடிப்படையில் ஐக்கியப் படுத்தி, ஒவ்வொரு கலையின் மாத்திரையையும் அறியக்கூடிய வகையில் தெளிவாக விளக்கி, இம்மண்டலமானது உயிர்இயல், ஒளிஇயல், ஒலி இயல் — இம்மூன்றும் இயைபுறும் வகையில் வாஸ்துவின் உள்ளே உறுதியான நிலையில் ஒடுங்கி இருக்கும் ஆற்றலின் நிலையை நன்கு புலப்படுத்துவதாகும்.

Having expressed the mathematical process through the visible energies of the sixty-four squares (kalas), —

- having unified the letters, expressive of the energies of the Vastu based on phonetics
- and having explained the time-measure of each grid

the square (manduka) mandala would clearly express the latent state of Vastu, effecting a co-ordination between the animating force, light force and the sound force.

புள்ளி ஆற்றல் பொருந்த உணர்ந்தே
தெள்ளிய கோடு வரிவியல் உருவியல்
உள்ளும் வடிவியல் ஒளிநிலை ஓர்ந்து
விள்ளும் கலைநிலை மெய்விளக் கும்மே (183)

உறுதிப் பொருளை உரைக்கும் நூல் —

மையப்புள்ளியின் ஆற்றலைப் பொருத்தமாக உணர்த்தி, கோடு, வரி, உரு, வடிவம், ஒளி ஆகியவற்றின் உண்மை நிலைகளை புலப்படுத்தி, மலர்ச்சி பெற்றிருக்கும் கலைநிலைகளை விரிவாக எடுத்துரைக்கும்.

The scripture .which purports to speak about the unfailing and eternal Existence would expatiate the fully manifested state of *kalas*

> by enabling the reader to realise correctly the force of the central and primal dot and by analysing the exact state of the curves, straight lines, outsketch, form and light.

எண்கலைத் திறமே இயல்நிலை மூலமாய்
எண்எழுத்து ஆற்றலின் இயல்பட விரித்து
ஐந்தியல் மூலம் அருங்கலை நுட்பம்
வந்துறும் மாநெறி வகுத்துணர் ஆற்றலாய்
முந்துறும் கலைநெறி முறைமையின் ஏற்றே
செந்தமிழ் ஒளி-ஒலி கணக்கியல் நெறியே (184)

இயல்பான நிலையில் உள்ள மூலத்தின் ஆற்றலாகவே எண்கலைத்திறத்தைக் காட்டி, எண், எழுத்து — இவைகளின் ஆற்றலின் அடிப்படையில் மூலப்பொருளைப் பொருந்துமாறு விளக்கி,—

ஐந்தியல் கொண்ட மூலத்தையும் அதன் கலை நுட்பத்தையும் மரபுமுறைப்படி வகுத்துக் காணும் அறிவுத்திறமாகக் கலையின் நெறிகளை முறையாக ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு—

ஒளிக்கணக்கு இயல், ஒலிக்கணக்கு இயல் இவற்றின் நெறிமுறையில் செந்தமிழானது எப்பொழுதும் முந்தி விளங்கும்.

The expressive art of blissful experience would be always in the lead based on the mathematical process dealing with sound and light

- by showing the efficacy of the numerical order as the force of the Primal Existence in its own essential state
- by explaining it based on the forces of number pattern and letter pattern
- and by accepting the process of expressive art as the power of consciousness which analyses in a traditional way the Primal Existence endowed with fivefold aspect and its creative subtle force.

கணக்கியல் எண்ணெண் கலையின தாகிப்
பிணக்கறும் எழுத்துறும் ஐங்குறில் மூலம்
உணர்வுறும் நெடிலேழ் எழுத்துறும் ஆற்றலும்
கணக்குறும் திட்பமும் கலையுறும் நுட்பமும்
ஐந்திறத் தன்மை அழகுற விளக்கி
ஐந்தும்ஐந் தியலாய்ப் புள்ளி மூலம்
அழகுற விளக்கும் ஓம்ஒலி ஓம்ஒளி
பழகுறும் ஒலிநிலை ஓசை ஆற்றலும்
மாநெறி பருநெறி நுண்நெறி ஓர்ந்தே
தூநெறி ஐந்திறம் துலங்கற் பாற்றே (185)

கணக்கியல் அறுபத்து நான்கு கலைகளைச் சார்ந்ததாகவே விளங்கும். ஒன்றோடொன்று இயைபுடைய எழுத்துக்களுள் மூலமாக உள்ளவை ஐந்து குற்றெழுத்துக்கள். இவற்றின் மூலத் தன்மை, அறிவினை மலர்த்தும் ஏழு நெட்டெழுத்துக்களின் ஆற்றல், கணக்கியலின் திட்பம், கலைகளில் அடங்கியுள்ள நுட்பம் — ஆகிய இவை ஐந்திறத் தன்மையை அழகாக விளக்கும்; மூலப் புள்ளியையும் 25 இயல்களையும் தெரிவிக்கும். மேற்கூறப்பட்ட ஐந்திறமானது ஓம் ஒலி, ஓம் ஒளி, ஒலியின்

பல்வேறு நிலைகள், ஓசையின் ஆற்றல் — இவற்றின் அடிப்படையில் மாநெறியாகவும், பருநெறியாகவும் நுண்நெறியாகவும் துலங்கும். இதனை நன்கு உணர்ந்தால்தான் தாநெறியாகிய ஐந்திறத்தின் இயல்பு, உள்ளவாறு விளங்கும்.

Mathematics is always dependent on the emerging forces of the sixty-four squares. Among the letters which are in relation with each other, five short letters (vowels) remain as their basis. The primal nature of the five short vowels, the creative force of the seven long vowels which enhance the power of knowledge, the unfailing nature of mathematics, and the subtlety of creative force - all these beautifully explain the nature of fivefold aspect and of the primal dot and twenty-five aspects. The aforementioned fivefold aspect shines forth as the unrivalled process, process related to grossness and the process related to subtlety, based on the varied states of OM light and OM sound and on the potency of unarticulated and articulated sound - Only upon a sharp analysis of these facts, the nature of the immaculate process of the fivefold aspect would be understood in its essential nature.

ஓசை ஒலிதிகழ் ஆற்றல் உணர்ந்தே
ஓசை ஒலிஒளி உருவடிவு ஓர்ந்து
வடிவியல் தோற்றல் உருவியல் ஆற்றல்
கடிதுறும் ஒலிநிலை ஒளிதிகழ் தேற்றம்
அறுபான் நான்கின் எண்கலை நுணுக்கம்
உறுகலை எண்கலை பிறழ்நிலை மாறி
ஓம்என ஒன்பான் திறமென ஒளிரும்
தாமொழி ஒலிநிலை செப்பற் பாற்றே (186)

ஓசை, ஒலி — ஆகிய இவற்றில் திகழும் ஆற்றல் உணர்ந்து — ஓசை, ஒலி, ஒளி, உரு, வடிவு ஆகியவற்றின் இயல்புகளை ஆராய்ந்து— 1) வடிவியலின் தோற்ற முறைமை, 2) உருவியலின் ஆற்றல் நிலை, 3) விரைவாகப் பரிணமித்து எழும் ஒலியைப்பற்றிய ஞானம், 4) அவ்வாறு எழும் ஒளியைப் பற்றிய ஞானம், 5) அறுபான் நான்கிலுள்ள எண்கலை நுணுக்கம், 6) அம்மண்டலத்தின் கலைகள், 7) எண்நிலை, 8) பிறழ்நிலை, 9) நிலைபிறழ்ந்து அமைவதால் உருவாகும் ஓம் — இவ்வாறு

ஒன்பான்திறமாக ஒளிரும் தூமொழியின் ஒளிநிலை மிகவும் விளக்கிக் கூறத் தக்கதாகும்.

Having realised the energies of inarticulated and articulated sound and having analysed the features of inarticulated and articulated sound, light, outsketch (உரு) and fully manifested form (வடிவு), the expert in Vastu should contemplate - 1) the emerging process of FORMS, 2) the force of the outsketch 3) knowledge about the uprising sound 4) knowledge about the erupting light 5) the subtlety of the octave pattern contained in the mandala 6) state of kalas activising the mandala 7) impact of numbers over the mandala 8) its displaced state and 9) the nature of OM effected through that displacement.

The characteristics of sound which shines forth in the above mentioned nine aspects and which belongs to pure realm should be elaborately discussed by the experts.

ஒளியே ஒலியே அலைஅலை நுணுக்கம்
ஒலியசை ஓசை விரிநூல் உரைக்கும் (187)

ஒளி, ஒலி — ஆகிய இவற்றின் அலைகள், அலைகளின் நுணுக்கம், ஒலியின் அசை (இடம் பெயரா இயக்கம்), ஓசை — ஆகிய இவற்றை வாஸ்து நூல்கள் விளக்கமாகக் கூறும்.

The scriptures dealing with Vastu elaborately speak about the features of the waves of light and sound, subtlety of the waves, movement of the wave of sound (without being displaced) and the nature of the inarticulated sound.

எண்நிலைக் கலையின் எழுத்தியல் ஓர்ந்தே
விண்நிலை ஒளிஒலி ஓம்கலை அறிந்தே
எண்ணுறும் காலத்து இமைப்பொழுது இயலை
நுண்ணுறும் மூலத் திண்பொருள் ஆய்ந்தே
எண்பொருள் எண்ணின் எண்ணமும் உணர்வும்
திண்கலை தெள்ளிதின் சீர்உறும் வகைத்தே (188)

எட்டு நிலைகளை உடைய கலைகளுக்குரிய எழுத்தியல் முறையை ஆராய்ந்து, விண்நிலைக்குரிய ஒளியையும் ஒலியையும் ஓம் என்பதன் கலைகளையும் அறிய வேண்டும். கணிக்கப்படும்

காலத்தின் அடிப்படை அளவான இமை முதலானவற்றின் இயல்பினால் நுணுகிய மூலத்தின் உறுதிப் பொருள் தன்மையை ஆராய்ந்து காண வேண்டும். இப்படி ஆராய்ந்து அறிவதால் புலனாகும் மூலப்பொருள், அதனைப்பற்றிச் சிந்திப்பதால் எழும் உணர்வு ஆகிய இரண்டும் உறுதிவாய்ந்த கலைகளின் கூறுகளாகத் தெளிவாக விளங்கும். கலை இத்தகைய சிறப்பினை உடையது.

The expert in Vastu should analyse the alphabet pertaining to the *kalas* endowed with eight states of evolution and should analyse the nature of light and sound of the elemental space and *kalas* of *OM*. He should realise the unfallible and immutable state of the Primal Existence through the characteristics of time-units such a imai etc. The Primal Existence known through such analysis and consciousness effected through the contemplation of the Primal Existence - these two would be viewed as the aspects of immutable *kalas*. Kala is with such an exalted state.

காலத்து இயல்பொழுது ஆம்முறை நோக்கி
கால நுண்கலை கைந்நொடி தேர்த்துகள்
மூலமும் அளவை முயன்றினி தாங்கு
மூலம் மூலத்து இயல்நெறி நுட்பமும்
கோலத் தன்மை குறிப்புறக் கிளக்குபு
சீலம் ஆய்வரல் பொருண்மை கூட்டிக்
கோடுறும் வரிவியல் குவிப்புறக் கூட்டி
நாடுறும் மெய்ப்பொருள் என்றிலை நெறியால்
வையம் கூட்டும் வளர்கலை ஆற்றல்
மெய்ப்பொருள் நுண்மை அறுபான் நான்கென
எண்ணெண் இயலால் எண்கலை நுண்ணிதாய்
எண்கலைப் பருநெறி பெருநெறி ஓர்ந்தியல்
நுண்ணிதின் நுட்பம் நுவன்றனன் ஆக
எண்ணிதின் ஒளிக்கலை உணர்வுறும் திறனே (189)

காலத்தின் கூறுகளாக இயங்கும் 'பொழுது' அமையும் முறையை நோக்கிக் காலத்தின் நுண்கலை, கைந்நொடி, தேர்த்துகள் இவற்றின் அடிப்படையில் அமையும் அளவைமுறை — ஆகிய இவற்றை முயன்று அறிந்து —

மூலம், மூலத்தால் இயங்கும் நெறியின் நுட்பம், கோலத்தன்மை ஆகிய இவற்றைக் குறிப்பாக விளக்கி;

சீலத்தின் காரணமாக உருவாகும் பொருள் தன்மையைக் குறிப்பாக எடுத்துக்காட்டி,

கோடு, வரி — இவற்றின் இயல்பைத் திரட்டிக் கூறி,

மெய்ப்பொருளானது எண் (8) நிலை நெறியால் வையத்தை உருவாக்கும் கலைத்திறத்தைப் புலப்படுத்துவதே மெய்ப் பொருளின் நுண்மையைக் காட்டும் அறுபான் நான்காம் மண்டலத்தின் இயல்பென அறிய வேண்டும்.

இவ்வாறு அறிந்து அறுபான் நான்கின் இயலால் எண் (8) கலைகள் நுண்மை நிலையிலும் பருமை நிலையிலும் பெருமை நிலையிலும் அமைவதை ஓர்ந்து அவற்றின் நுட்பத்தை எடுத்துக் கூறினேன்.

ஆழ்ந்து நோக்கின், ஒளிக்கலையானது ஒவ்வோர் ஆன்மாவின் ஞானத்திறனே ஆகும்.

Having observed the divisions of time units and known about the process of time-calculation based on the constituent parts of time, minute time and the nature of unit-time denoted by chariot-dust, I have suggestively explained the nature of Primal Existence and its functional process and the nature of FORM. I have indicated the nature of objectness manifested due to rhythm and I have collectively said about the features of curves and lines. Having known that it is the essential nature of square consistuted of 64 grids which reveal the subtlety of the Primal Existence - to make known the ever-growing potency of the Primal Existence in creating the world/chariot through octonarian process. Having observed the role of Eight in its subtle, gross and magnificent aspects I have explained their subtle concepts. Viewed deeply, it is to be understood that the power of primal light is indeed the power of consciousness in each and every soul.

உணர்வுறும் ஆற்றலும் உள்ளொளித் தோற்றமும்
உள்ளுறும் பெரும்செயல் விண்ணொலி நோக்குபு
தெள்ளுறும் அகவின் புறவின் திறமுறும் (190)

உணர்வில் பொருந்தும் ஆற்றல், உள்ளொளியில் எழும் அனுபவ ஞானம், அகமுகமாக நிகழும் செயல் முறைகள், விண்-ஒலி — ஆகிய இவற்றின் அடிப்படையில் அகவிண் நிலையை நுனித்து ஆராய்பவர்க்குப் புறவிண் பற்றிய அறிவாற்றலும் பொருந்தும்.

Complete knowledge about the external space would manifest itself in the minds of those experts who meticulously analyse the nature of internal space based on the potency of consciousness, intuitive knowledge effected in inner consciousness, the order of introvert activities and the sound energy of the elemental space.

அகவிண் புறவிண் ஒளிஒலி ஓம்நிலை
அகத்துணர் வால்அறி அறிவுறும் திறனே (191)

அகவிண், புறவிண் — இவற்றுக்குரிய ஒளிநிலை, ஒலிநிலை, ஓம்நிலை — இவற்றை அகத்துணர்வால் அறிக. மூலப்பொருளைப் பற்றிய அறிவு பொருந்தும் முறை இதுவே.

The knower of Vastu should know about the state of light, of sound and of OM pertaining to both the internal and external space, only through the power of inner consciousness. This is the exact process of knowing the nature of existence.

அறிவியல் அருளியல் தெருளுறக் காண்டல்
அகவிண் ஒளியுணர் மேல்நிலைத் திறனே (192)

அறிவினைக் கொண்டு அறிதல், அருளைக்கொண்டு அறிதல், இவ்வாறு அறிவதால் தெளிவான சாரத்தைக் காணல் — இவையே அகவிண்ணுக்குரிய ஒளியை உணரும் மேன்மை மிக்க திறமையாகும்.

1) Knowing through empirical knowledge

2) Knowing through introvert mentation and contemplation and

3) Through the knowledge gained in this way, knowing the quintessence of the existence.

— only these are considered to be most effective in realising the effulgence of the internal space.

மிகுகலை மூலம் பொருள் உணர் வீந்து
எண்கலை இயல்திறன் முழுமதி நல்கும் (193)

மூலத்தால் மிகும் கலை, பொருளைப் பற்றிய உணர்வினை (ஞானத்தை) வழங்கும் ; எண் (8) கலையின் இயல்பான திறத்தை அறியக்கூடிய நிறை ஞானத்தைக் கொடுக்கும்.

The kalas effected in plenitude by the Primal Existence would bring into effect a thorough knowledge about the existent; would yield a complete knowledge which enables the knower of Vastu to know about the innate energy of the octave pattern.

அகவிண் ஒளியே அறிகலை மூலம் (194)

அறிவதற்கு உறுதுணையாக விளங்கும் கலைகளுக்கு மூலமாக விளங்குவது அகவிண்ணொளியே.

Only the lustrousness of the internal space shines forth as the basic source for the *kalas* which help in knowing the nature of the existents.

அகம்அறி யாதார் புறம்அறி யாரே (195)

அகவிண்ணின் திறத்தை அறியாதவர்கள் புறவிண்திறத்தையும் அறியமாட்டாதாரே ஆவர்.

Those persons who have not known the real potency of the internal space, cannot know even the potency of the external space.

உள்ளொளித் திறனாய் உற்றுணர்வு ஓங்கி
விள்ளுறும் விண்ஒளி நோக்குறு மெய்த்திறன்
அண்ட மூலமும் பிண்ட மூலமும்
தண்தமிழ் மூலமும் விண்கலை மூலமும்
என்றிலைப் பிறழ்வின் நெறிநிலை மூலமும்
தெண்கலைப் புள்ளி மூலமும் சிறக்குமே (196)

உள்ளொளித் திறனாய் உறும் ஞானம் மிகப்பெற்று விண்ணொளியின் மூல இயல்பைக் காணவல்ல உண்மையான ஆற்றல்—

அண்ட மூலம், பிண்ட மூலம், தமிழ் மூலம், விண்கலை மூலம், எண் (8) நிலை பிறழ்ந்து அமையும் நெறியின் மூலம், தெளிந்த கலைக்கு வித்தாக விளங்கும் புள்ளி மூலம் — ஆகிய இவற்றை உணர்த்துவதாகச் சிறந்து விளங்கும்.

Having gained extensive knowledge through introvert mentation and deep thinking, the knower of Vastu would attain the real spiritual efficacy which could make known the basic and true nature of the light of the elemental space.

This spiritual efficacy would remain in an exalted state as the force which could impart the knowledge about-

1) the basic element of macrocosm
2) the basic element of microcosm
3) the basic element of the blissful and expressive designs
4) the basic element of the kalas of the elemental space
5) the basic force for the process of orderly displacement of the octave pattern and
6) the basic element of the primal dot which remains as seed for the refined and mature artistic creations.

மூலம் அறிந்தார் ஐந்நெறி காண்பரே (197)

மூலநெறி உணர்ந்தோர் ஐவகைப்பட்ட நெறிகளையும் உணரவல்லவராவர்.

The knowers of the emerging process of the primal existence would be able to understand the nature of the fivefold process related to the whole universe.

சொல்லும் பொருளும் துகளறத் தெரிந்தே
வெல்லும் பொருளே ஐந்துறும் நடுவண்
எழுத்தும் சொல்லும் கூட்டணி ஆகி
வழுத்தும் இருபுறம் வகுத்துச் சூழப்
பொருள்ஒளி ஆற்றல் புலப்பட நோக்குழித்
திருவுறும் கலைநிலை தெள்ளிதின் கூடுமே (198)

சொல், சொல்லால் உணர்த்தப்படும் பொருள் — இவற்றின் இயல்புகளைக் குற்றமற உணரவேண்டும். ஐந்து திறங்களுள் வீறுடையதாக விளங்குவது பொருளே. ஒருபுறம் எழுத்து, சொல் எனும் இரண்டும் விளங்க, மறுபுறம் கூட்டு (கட்டு, யாப்பு), அணி எனும் இரண்டும் விளங்க நடுவே விளங்குவது பொருள். அப்பொருளின் ஒலியையும் ஆற்றலையும் அறிவுக்குப் பொருந்த ஆய்ந்து காணும்போது, திருமிக்க கலைநிலை தெளிவாகத் தானாகவே வந்து பொருந்தும்.

The knower of Vastu should understand clearly and blemishlessly the nature of the word and its referent. Among the five aspects, existent is considered to be the dominating aspect.

Having the aspects of letter and word on its one side, and the aspects of creation and embellishment on its other side, the existent (substance) shines forth notably in the middle. In an artist, the charming and innovative artistic skill would manifest of its own accord, upon a deep analysis of the light and force of the existent (substance).

பொருளே உணர்த்தும் பொருள்மொழி ஆகிப்
பொருளுறும் சொல்லாய்ப் பூந்தமிழ் விளங்கும் (199)

பொருளே, பொருளை உணர்த்தும் பொருள்மொழியாகவும் (பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகவும்) மாறுகிறது. தமிழின் சிறப்பு இத்தகைய பொருள் மொழிகளாகப் பரிணமித்து இருப்பதே யாகும்.

The referent itself assumes the form of the referential word which indicates the existence. The specific feature of the language meant for the expression of the design evolved

from the inner space is its evolution in the pattern of such referential words.

இயற்கைநுண் அறிவால் எழுநிலை ஆய்ந்தே
மயல்அறும் கலையுணர் மதியொளி நுகர்வால்
இயலறி கலைநிலை அறிவியல் கலையே (200)

இயற்கையைப் பற்றியதான நுண்ணிய அறிவுத்திறத்தால் பல்வகையாக எழும் பொருள் நிலைகளை ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்வதால் தெளிவான கலையுணர்வும், அறிவு பூர்வமான அனுபவமும் வாய்க்கும். இவ்விரண்டினாலும் ஒவ்வொரு பொருளின் இயல்பையும் உள்ளவாறு அறியக்கூடிய கலை ஆற்றல் வாய்க்கும். இதுவே அறிவியல் கலை.

Though the sharp and subtle knowledge about the natural visible world, the knower of Vastu should analyse various states of existents effected by varied processes. Through this analysis, he could gain deep knowledge about arts and experiential knowledge and fruitful experience. Through the deep knowledge and experience, he could gain the creative ability and efficacy to know the real nature of each existence. This is what is known as the science of Vastu.

உள்ளுவ உன்னுவ நோக்குவ நுவல்திறன்
விள்ளுவ நுகருவ வகைநிலை யாகி
உழைப்புறும் முயல்வே ஊழினை நீக்கும் (201)

உள்ளப்படுபவை, உன்னப்படுபவை, நோக்கப்படுபவை, அனுபவத்தை வெளிப்படுத்தும் முறையில் நுகரப்படுபவை – என இத்தகைய வகைகளாகப் பொருள்கள் விளங்க, அப்பொருள்களை உணரக்கூடிய இடையறாத முயற்சியானது, இயற்கையாக விளங்கும் வடிவங்களுக்கு உரிய இலக்கண விதிகளையும் கடக்கும்.

There are various groups of objects - objects conceivable, objects contemplatables, objects analysable, object experienceable and so forth. The uninterrupted endeavor to realise them as they really are, would induce the knower of Vastu to excell the prescribed natural and innate lineaments of the naturally existing/effected object

நூற்றிறன் பொருள்நிலை மெய்த்திறன் நாடுபு
ஐந்தியல் உண்மை அகம்உணர் திட்பம்
வந்துறும் புறத்தியல் மாக்கலை இயலும்
எழுத்தே சொற்பொருள் கட்டும் அணியும்
வழுத்தும் ஒளிஒலி மூலமா நெறியும்
எட்டின் பிறழ்வே இயல்நிலை ஓங்கி
விட்டுறும் ஓம்கலை வியனுறு மொழிநிலை
ஒளிமொழி முதல்எழுத்து இயற்கலை நுட்பம்
தெளிவுறும் திண்மை எண்மை சிறப்புறும்
ஐந்நெறி ஆக்கமும் ஐங்கலை நோக்கமும்
செந்நெறி மூலத் திருநெறி யாய்உறும்
எண்ணுறும் மூலம் விண்ணுறும் கோலம்
நண்ணுறும் காலம் நவையிலாச் சீலம்
விண்டுறும் ஞாலம் ஐவகை விளக்கி
தண்தமிழ் ஐந்தியல் சாற்றினன் நெறியே (202)

எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி ஆகிய ஐந்து கூறுகளுக்கும் அடிப்படையாக உள்ள ஒளி, ஒலி, மூலநெறி ஆகிய அனைத்தும் எட்டின் பிறழ்வாகவே இயங்குகின்றன. இது எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயக்கமாகும். வெவ்வேறு பதங்களில் பொருந்தும் ஓம்கலை, பெருமை பொருந்திய மொழிநிலை, ஒளிமொழியாகிய முதலெழுத்து, இதன்கண் பொருந்தும் கலைநுட்பம், திண்மை, எளிமை ஆகிய இவையெல்லாம் சிறப்புற அமையும்வண்ணம் வாஸ்துநெறி மூலமானது, ஐந்நெறி ஆக்கமாகவும் ஐங்கலைகளைப் பற்றிய ஆய்வாகவும் உள்ள திருநெறியாக விளங்கும்.

நூலின் பொருளை விளக்கும் சீரிய முறை, நுவலப்படும் பொருள்களின் அமைப்புமுறை, அவற்றின் நிலைத்த தன்மை — இவற்றைக் கருத்திற்கொண்டு ஐந்தியல் நுண்மை அமையுமாறும், உள்ளத்துணர்வால் அறியக்கூடிய திட்பம் அமையுமாறும், வெளி இந்திரியங்களால் அறியக்கூடிய கலைநுட்பங்கள் பொருந்துமாறும்

மூலம், வெளியில் பொருந்தும் கோலம், காலம், சீலம், இவற்றால் மலர்ச்சி பெறும் ஞாலம் — ஆகிய ஐவகைகளையும் விளக்கி, இவையே தமிழின் ஐந்தியல் என முறைப்படிக் கூறியுள்ளேன்.

Light, sound and the emerging phenomenon of the primal existence which are the bases for the celebrated

five aspects (letter, word, referent, composition and embellishment) continuously function through the orderly variations of Eight, as an ever-growing phenomenon. The impeccable basic phenomenon of Primal-Existence as the actualisation of fivefold forces and its penetration in such a way that the evolving process of OM which stations in various squares, the potency of the energetic word-system, the primal-letters identical with the basic light-sound and the artistic subtlety, immutability (standardness), flexibility etc. are effected properly.

Having understood all these theories and having realised the exalted way of a treatise in explaining the content (FORM); the way in which forms get actualised, their nature of stability, I have set forth in detail the basic five aspects like letter, word and so forth. I have told them in such a specific way that the treatise enshrines in itself the truths about the subtleties of fivefold aspects about its enduring features which could be recognised by inner consciousness and about the artistic excellences (subtleties) which could be recognised by sense organs (external knowledge though perception etc).

காலத் திண்மை கணக்கியல் அறிந்தே
கால நுட்பமும் ஓசைமாத் திரையால்
கணக்கறி நுட்பம் வழுத்து மாநெறியே (203)

போற்றப்படும் இம்மாநெறியானது காலத் திண்மையின் அடிப்படையில் அமையும் கணக்கியலை விளக்கி, அதன் மூலம் கலைநுட்பத்தையும், ஓசை மாத்திரையால் கணக்கினை அறியும் நுட்பத்தையும் புலப்படுத்தும்.

The great and praiseworthy phenomenon of the Primal Existence is capable of explaining the mathematical process which evolves based on the impenetrable and eternal Time, subtlety of Time and the subtlety of the method of mathematical calculation through the properties of sound (acoustics).

விண்ணளந்து அறியும் எண்ணின் நுட்பம்
எண்ணுற்று உணர்ந்தே எழுத்துறத் தேர்ந்தே

எண்ணே மூலமாய் இயலுறும் ஆற்றல்
விண்ணுறும் ஒளியால் விளங்குற விளங்கி
அகவெளித் திறத்தால் புறவெளி ஓர்ந்து
அகத்துணர் மெய்த்திறக் கலைநிலை கூறுமே (204)

விண்ணின் இயல்பையும் புலப்படுத்தக்கூடிய எண்ணின் நுட்பத்தைக் கருத்துற ஆய்ந்துணர்ந்து, எண்ணின் தன்மையை எழுத்தின் தன்மையோடு இயைத்து உணரவேண்டும். மேலும் இயக்க ஆற்றலானது எண்ணே மூலமாக விண்ணில் பொருந்தும் ஒளியால் விளங்கப்பெற, அதனால் அகவெளித் திறத்தை ஆராய வேண்டும். பின்னர், புறவெளித் திறத்தை ஆராயவேண்டும். எனவே அகத்துணர்வுதான் மெய்ப்பொருள் பற்றிய கலையின் உண்மையான நிலையைப் புலப்படுத்தும்.

The knower of Vastu should comprehensively analyse the subtle potency of number which makes known the characteristics of space. He should realise the nature of number by unifying it with the nature of letter (alphabet). He should understand in a proper way that the force which is in operation through number gets actualised by space-light. Having analysed in this way, he should recognise the potencies of the inner space and consequently those of the outer space.

Therefore one should understand that it is only the inner consciousness that makes evident the real and the essential nature of the existential and enduring creative art.

நூற்புறம் அறிந்தே நூல்நெறி நோக்கி
நூற்பா நுண்பொருள் நோக்குவது இயல்பே (205)

குறிப்பிட்ட ஒரு நூலுக்குப் புறம்பாக உள்ள கருத்துக் களையும் ஒப்பிட்டு அறிந்து, நூலில் கருத்துக்கள் சொல்லப் பட்டிருக்கும் நெறிமுறைகளையும் நோக்கி, நூற்பாவில் அடங்கியுள்ள நுண்மையான கருத்துக்களை நுனித்துணர் வதுதான், இயல்பான பயிற்சி முறையாகும்.

The effective method of deep study of a text is to know comparatively the concepts outside the scope of the text and to peruse and analyse the concepts couched in

the aphorisms of the text, having a clear idea about the exact process of presentation of the concepts in that particular text.

உள்ளகத்து எழும்பும் தெள்ளுறும் உணர்வால்
விள்ளுறும் மொழிமுதல் முயற்சிமா வலியால்
மெய்ம்முதல் தோற்றம் உயிர்உறும் தேற்றம்
எழுத்தொலி ஓங்கி இயலல் மரபே (206)

உள்ளத்தெழும் தெளிந்த உணர்வுத் துடிப்பால் மொழிக்கு முதலாகச் சொல்லப்படும் ஓசை ஏழ, அது பல்வேறு வலிமையான முயற்சிகளால், தோற்றச் சிறப்புடைய மெய்யெழுத்தாகவும் தெளிவுச் சிறப்புடைய உயிரெழுத்தாகவும் எழுத்தொலி பிறக்கும். இவ்வாறு எழுத்தொலி வருதல் தொன்றுதொட்டு வரும் மரபாகும்.

Due to the effective throb of consciousness arising within one's own self, the basic and seed sound would emerge and this sound gets articulated as consonants associated with distinctness. This is the traditional theory about the process of articulation of sound.

உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற் கண்ட ஆய்வுணர்வு ஓங்கித்
தெளிகலை செப்பல் ஐந்தியல் ஆகி
ஐந்திறத்து உண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே (207)

அகமும் புறமும் ஒருங்கே இணக்கம் கொண்டு விளங்க, அதனால் எழும் தெளிந்த உணர்வால், செப்பமான முறையில் அமைந்துள்ள மொழியின் இயல்பான சிறப்பிற்கு ஆதாரமான ஒளிமுதலைக் காணக்கூடிய ஆராய்ச்சி உணர்வு மிகப்பெற வேண்டும். அதனை விளக்கும் முறை ஐந்தியலாக அமைய, ஐந்து திறங்களின் உண்மைகளையும் (நுட்பங்களையும்) தமிழின் தனித்திறம் தோன்ற விளக்குவதே இந்த ஐந்திற நூல்.

Upon the distinct consciousness effected by the unified working of both internal and external penetrations, a deep sense of inquiry into the basic light-energy which becomes the casual source of words would increase. Process of explanation about these aspects of this inquiry

would assume a form of fivefold aspect. This work AINTIRAM has for its motive the declaration of the truths about fivefold aspects in such a way as to maintain the uniqueness of expressive language meant for describing the blissful experience.

ஐந்திணை செந்தமிழ் வாழ்வியல் நெறியே (208)

செந்தமிழ் மரபின் ஐந்திணை விளக்கமானது, உயிர்க் கூட்டங்களின் வாழ்வியல் நெறியைப்பற்றிய விளக்கமே.

The expatiation concerned with fivefold phenomenon pertaining to the expressive language of blissful experience is, truly speaking, the explanation about the life-pattern and style of all living begins.

மாநெறித் திட்பமும் நுட்பமும் ஓர்ந்தே
தாநெறி கூறுகூறு இயல்நிலை நோக்கே (209)

முற்கூறப்பட்ட மாநெறியின் திட்பத்தையும் நுட்பத்தையும் ஓர்ந்து, அந்நெறியின் பல்வேறு கூறுகளை முறைப்படி விளக்கிக் கூறும் நிலையே நோக்கு என்பதாகும்.

(நோக்கு – பல கூறுபாடுகளையும் ஒருங்கிணைத்துக் காண்பதால் பெறப்படும் முடிவான கருத்து)

The penetrating insight is the way of analysing and realising the everlasting values and subtleties of the exalted and impeccable process of mandala mentioned earlier and explaining their varied aspects in due order.

வல்லின மெல்லினத்து இடையினது ஆற்றல்
தொல்நெறி விளக்குபு சொற்பொருள் விளக்கி
இடையுறக் கிளத்தல் இயைபுறு மரபே (210)

வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இவற்றின் ஆற்றலைத் தொன்மையான மரபுப்படியே விளக்கி, அதன் மூலம் சொற்பொருளையும் விளக்கி, பல்வேறு நயங்களும் (நுட்பங்களும்) இடையே பொருந்துமாறு நூற்பொருளை வெளிப்படுத்துதலும் தொன்றுதொட்டுவரும் மரபாகும்.

It is the age-old tradition to set forth the central core of the text by explaining the efficacy of harsh, soft

and medium sounded words and the nature of the referent, enshrining and employing varied embellishments of expression and subtleties in a consistent way.

நினைவறல் இல்லா நெறிநிலை ஓங்குபு
முனைவுறும் ஆற்றல் ஒளிஒலி ஓங்கும் (211)

நினைப்பும் மறப்பும் இல்லாத நெறிநிலை ஓங்கப்பெற, அதனால் முனைந்து தீவிரமாகப் பொருந்தும் ஆற்றலால் ஒளியை அறியும் ஆற்றலும் ஒலியை அறியும் ஆற்றலும் ஓங்கும்.

The knower of Vastu should develop an enduring state of consciousness free from disturbed recollection and forgetfulness. Owing to this enduring state an acute and impetuous power of consciousness would arise in him and thereby the power of knowing the nature of light and sound would get invigorated.

உள்ளகத்து உறுதியும் உணர்வெழும் திறனும்
விண்ணுறும் நினைவுறல் மிகுவலி கூட்டும் (212)

உள்ளகத்துறும் உறுதியும் உணர்வால் எழும் அறிவுத்திறனும் மூலவெளியைப் பற்றிய ஆழ்ந்த நினைவை உறுமாறு செய்து அந்த நினைவுக்குரிய ஆற்றலை வளர்க்கும்.

Both the unsurpassable state of the mind and the power of inner consciousness would enable the knower of Vastu to be in possession of deep mentation about the Primal Existence and would increase the power of mentation.

கருநிலை மூலக் கருத்துறும் ஆற்றல் (213)

கருநிலை என்பது மாறுபடாத மூலநிலைக்குரிய ஆற்றலை உள்ளடக்கி இருப்பது.

The foetus-state is that which contains within itself the eternal force of the Primal source.

எழுத்தின் ஐந்தியல் வழுத்தாற நோக்கிச்
செழுங்கலை ஒளியால் செந்நிலை சிவணிச்
செந்நெறி ஐந்தியல் மூலம் ஆயும்
செந்தமிழ் நெறிமுறை தேற்றென்று உணர்த்தும் (214)

செந்தமிழ் நெறிமுறையாவது —

எழுத்தின் ஐந்து இயல்களையும் பொருந்த நோக்கி, அந்த எழுத்தின் கலையாலும் ஒளியாலும் முதிர்ந்த நிலை பெற்று விளங்கும் செந்நெறியின் ஐந்தியல் மூலத்தை ஆராயும் நெறிமுறைகளைத் தெளிவாக உணர்த்துவதேயாகும்.

The exact functional process of the expressive language of blissful experience is to comprehensively grasp the fivefold nature of letters and to impart the varied methods of analysing the nature of Primal Existence associated with fivefold aspect through expressive power and the light energy of letters.

உற்ற பொருண்மை உள்ளுற உணர்ந்தே
உயிரொளி ஒலித்திறன் நிலையுறக் காண்டல்
செயிர்தீர் சொற்பொருள் எழுத்தியல் ஆயலே (215)

ஒரு நூற்பாவில் பொதிந்துள்ள பொருளின் தன்மையை உள்ளுற உணர்ந்து, பிரபஞ்ச முழுமைக்கும் உயிராக உள்ள ஒளி-ஒலி ஆகியவற்றின் நிலைகளைப் பொருத்தமுற அறிதலே, சொற்பொருளையும் எழுத்தியலையும் ஆராய்வதன் பயனாகும்.

The ultimate result of analysing the referent of words and of nature of letters is to realise the exact import enshrined in each aphorism of the text and to know consistently the states of light and sound which remain as the vital force for the emergence and existence of the whole cosmos.

சொற்பொருள் முதலே துலங்க அறிந்தோர்
கற்றறி திறனே கணக்கில் எய்துவரே (216)

சொற்பொருளின் அடிப்படைத் தன்மையை (இயல்பை) நன்றாக அறிந்தவர்கள் அனைத்தையும் கற்று அறியவல்ல ஆற்றலை, அடையவேண்டிய முறைப்படி அடைவார்கள்.

Those experts who have clearly known the fundamental nature of word and its referent would attain in due order an efficacy by which they would be able to learn and know everything (the contents of all the scriptures)

எண்பொருள் இயலே இலங்குறும் பிறழ்வால்
நுண்பொருள் ஓம்என நிலைநல மொழியால்
விண்பொருள் ஒளிநிலை விளங்கக் கண்டுழி
எண்ணியல் தமிழ்நிலை இனிதின் காண்பரே (217)

எண் (8) பொருள் இயல்பில் உண்டாகும் பிறழ்வினால் நுண்பொருளாகிய ஓம் எழ, அந்த மூலமொழியால் விண் முதலான பொருள்களின் ஒளி நிலையை விளக்கமுற அறியும் பொழுது, எண் (8) நிலையாகிய தமிழின் நிலையை இனிதே அறிவார்கள்.

Upon the spontaneous displacement (variation) of octonary, the subtle and causal sound OM arises. When the knower of Vastu perspectively realises the states of light energy of various elements (objects) like elemental space etc., they could understand the blissful expressive phenomenon of octonary.

அசைப்பொருள் சீர்நிலை ஆய்நிலை காண்டுழி
நசைப்பொருள் நீங்கலும் நன்னிலை நெறியே (218)

அசைப் பொருளின் (அசைச்சொல்லின்) நிலையை, அதாவது அது சீருக்காக அமைந்துள்ளது என்ற நிலையை ஆராய்ந்து காணும்பொழுது, நிலையற்றவையும் புலன் இன்பத்திற்காக உள்ளவையுமான பொருள்களைப் பற்றிய உணர்வு நீங்கிவிடும். நன்மை மிகுந்த நிலையான நெறி இதுவே.

When the traditional practitioner of Vastu analyses the feature of metrical syllable (phase of the primal existence) and understands that it exits for the purpose of regulation and order, then naturally there would arise a state of beatitude and beneficence in which all the objects meant for ephemeral and sensual pleasures get effaced.

காலப் பொழுதைக் கணக்குற ஆய்ந்தே
கருத்துறும் செஞ்சொல் பொருள்உறும் நுணுக்கம்
ஒருபொருள் பல்பொருள் பெரும்பொருள் நுண்பொருள்
பருப்பொருள் கருப்பொருள் விழுப்பொருள் நோக்குழி
பொருள்உறும் திறனே புகல்நிலை என்ப (219)

காலப்பொழுதின் தன்மையைக் கணக்கு முறைப்படி ஆராய்ந்து, கருத்துவளம் பொருந்திய சொற்களின் பொருளையும்

நுனித்துணர வேண்டும். அப்பொருளின் நுணுக்கம் ஒருபொருள், பல்பொருள், நுண்பொருள், பருப்பொருள், கருப்பொருள், விழுப்பொருள் எனப் பல்வேறு நிலைகளாகப் பரிணமிக்கும் திறனுடையது. இந்த நுட்பத்தை உணரும்போது, அப்பொருளில் பொதிந்துள்ள ஆற்றலே நிலைபேற்றுத் தன்மையை உடையதாகும் எனக் கூறுவர்.

Having analysed the features of Time divisions according to the mathematical calculations, the knower of Vastu should conspicuously realise the referents of words pregnant with vitality of sense. It is only the subtle sense-vitality of words that evolves into single object, manifold object, grotesque object, subtle object, object of extreme grossness, causal objects, object of excellence etc. When he understands these evolutions, he would realise that the static energy of object is of eternal and enduring nature.

பல்பொருள் கிளவியும் ஒருபொருள் கிளவியும்
தொல்மரபு இயலுறும் தொகைநிலை ஆய்ந்தே
கிளக்குறும் சொற்பொருள் ஒளிமொழித் திறனாய்
வளர்கலைப் பொருளுரைத் தொழிற்பொருள் என்ப (220)

பல்பொருட் கிளவி, ஒருபொருட் கிளவி, தொகைச் சொல் — இவற்றையெல்லாம் ஆராய்ந்து சொல்லப்படும் சொல்லின் பொருள் ஒளிமொழித் திறனாக அமைந்து கலைப்பொருளைத் தெரிவிக்கும் தொழிற்பெயரே எனக் கூறுவர், மரபறிந்தோர். (அனைத்தும் தொழிற்பெயர் வடிவமே).

The experts in the science of Vastu, having analysed the nature of varied words- such as multi-referent word, single referent word, collective word etc., ascertain the fact that the referent of an articulated word, being a receptacle of light-energy is (and indicative of the manifested form) only the verbal noun (functional noun). (i.e all words are indicative of their referents and their respective functions).

பொருள்மொழி யாகி உயிர்மொழி ஓசை
தெருள்மொழிச் சொற்பொருள் சீர்பெற விளக்குபு
ஒளிமொழி ஒலிமொழி ஓசை நிலையுறும்
வெளிமொழி செந்தமிழ் விளம்பல் நெறியே (221)

பொருளைத் தெரிவிக்கும் மொழியாகவும், உயிர்மொழியாகவும், ஓசை தெளிந்த மொழியாகவும், சொற்பொருளைச் சீருற விளக்கும் ஒளிமொழியாகவும், ஒலிமொழியாகவும், ஓசை நிலைபெற்று விளங்கும் வெளிமொழியாகவும் விளங்குவது செந்தமிழ் எனக் கூறுவது, தொன்றுதொட்டுவரும் மரபாகும்.

It is according to the age-old tradition to hold the view that the expressive language of blissful experience shines forth as the word indicative of referent, as animating word, word with clearly articulated sound, word of light indicative of the referent, word of acoustic significance and space-word endowed with eternal sound potency.

குறித்தியல் பொருளே மொழிஒலிப் பொருளாய்
குறிநிலைக் கலைத்திறன் தொழிற்பொருள் விளக்கி
நெறியும் ஓசையும் நிலைபெறும் அளவையால்
குறியா வகைநிலை குறித்துறும் மரபால்
அளவின் ஆற்றலும் வெளிநிலை இயலே (222)

ஒரு பயனைக் குறிக்கும் பொருளே, சொல்லின் பொருளாகவும் ஆகிறது. தன் குறியாலும் ஒலியாலும் தொழில் விளக்கும் காரணத்தால் தொழிற்பெயராகி விளங்குகிறது. ஒலியளவுத் தொடர்பான அளவை முறையிலும், ஒன்றின் நிலையைக் குறிக்கும் முறையிலும் இயங்குதலே வெளிநிலையின் இயல்பாகும்.

The referent itself, motivated towards an effect, becomes the meaning of an articulated word. Being as a symbol associated with a state of existence, it shines forth as the functional noun. It is the innate nature of space to function in a specific and restricted (measurable) way in which the evolving phenomenon and sound have their role and in a specifically restricted way in which the process of indication and implication have their role.

தென்மொழி தென்சொல் தென்புலம் தென்னிலம்
தென்கலை இயலாய் மக்கள் மொழியும்
நன்மொழி செந்தமிழ் விண்தமிழ் ஒளியாய்த்
தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே (223)

தென்மொழியாகிய முதன்மொழி, தென்சொல், தென்புலம், தென் நிலம், தென்கலை எனபடும் இயல்களாகவும், மக்களின் எளிய மொழியாக விளங்கும் நன்மொழி, செந்தமிழ், விண்தமிழ், ஒளி என்பதாகவும் விளங்குகிறது. இவ்வாறு சிறப்பித்துக் கூறுதல் தொன்றுதொட்டு வரும் மரபாகும்.

It is traditional to hold the view that the primal expressive language shines forth in varied ways as the word of blissful referent, as organs fit for blissful experience, field for the blissful experience, blissful creative aspect, language of light, language of auspiciousness, language of transcendental purity and of space.

தண்தமிழ் மொழியே ஐந்தியல் மொழியாய்
விண்டுறும் கலைத்தொழில் விளக்குறும் தொன்னெறி
மரபியல் செறித்தும் எண்கலை நிலைத்திறன்
வரம்புறும் இயலே ஐந்திற மெய்ந்நூல் (224)

தமிழ் மொழியே ஐந்தியலை விளக்கும் மொழியாக விளங்குகிறது. மலர்ச்சி பெறும் கலைத்தொழிலை விளக்கும் தொன்னெறி மரபினை உணர்ந்து அம்மரபியலைச் செறித்தும், எண் (8) கலையின் நிலையும் திறமும் விதிமுறைப்படி அமையுமாறும் தமிழ் மொழி மூலம் இயல்பெற விளக்குவது ஐந்திற மெய்ந்நூல்.

Only the expressive language of blissful experience functions as a language which could explain the basic fivefold aspect of the universe. Upon the basic understanding of the age-old tradition which reveals the ever-flourising creative function, this work AINTIRAM, enshrining in itself the traditional truths, elaborates through the expressive language the significant aspect and state of eight according to the traditional rules.

இயற்கைப் பொருண்மை எளிதில் காண்டல்
இயல்நெறிப் பொருண்மை அரிதின் நோக்கல்
மயலறும் உணர்வால் மாணுற நோக்குபு
இயல்தமிழ் இயங்கல் கலைத்தொழில் துலங்கல்
பொருண்மை நிலைப்பொருள் மருண்மை தவிர்த்தே
தெருண்மை கிளக்கும் ஐந்திறச் சீர்நூல் (225)

ஒரு பொருளின் இயல்பான தன்மையை எளிதில் காண இயலும். ஆனால் கலை நுணுக்க இயலுடன் அப்பொருள் இவ்வாறு இருக்க வேண்டும் என அகத்துணர்வால் நோக்குதல் அரிய செயலாகும். மயக்கமற்ற உணர்வால் பொருளின் கலையழகுத் தன்மையைத் திறம்பட உணர்ந்து, இயல்தமிழின் இயக்கம், கலைத் தொழிலின் விளக்கம், பொருளின் தன்மை, அதன் நிலையான கலையழகு, தெளிவு — இம்முறையில் ஐந்திற நூல், கருத்துக்களை விளக்கும். (இயல்தமிழ் இயக்கம் முதல் தெளிவு வரை ஐந்து லக்ஷணங்கள்).

It is very common and easy to look at the apparent and external nature of an object. But it is a unique and supreme faculty to view with an artistic acumen and insight an object as what it should be and how it should be associated with artistic embellishments. Having perspectively realised the artistic beauty of an object, without giving room for distorted thought, this work AINTIRAM aims at explaining the theories of the functional way of expressive language, artistic workings, nature of object, its enduring beauty and clarity which could efface the confusions.

நீர்நிலம் நெருப்பே வான்காற்று ஐந்தும்
தேர்நிலைக் கலைத்திறன் சீர்நெறி முடிபே (226)

தேர்நிலையின், நிலைத்த கலைத்திற அமைப்புகள் நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் இயற்கையை ஒட்டியே அமைந்திருக்கும்.

The enduring parts of embellishments pertaining to a chariot would always be based on the natural features of five gross elements - earth, water, fire, air and elemental space.

கண்முதல் ஐம்புலன் கருத்துறும் நெறியாய்
விண்முதல் ஒளிநிலை விளக்குபு மெய்த்திறன்
எண்முதல் கலையாய் இயன்றவை நெறியறிந்து
திண்கலை தேர்ந்தே மண்முதல் ஆய்தல்
தண்தமிழ்ச் சொற்பொருள் கலைமொழித் திறனாய்
ஒண்தமிழ் ஐந்திறம் உரைத்தனன் நன்றே (227)

கண்முதலான ஐம்புலன்கள் வழியாகவும் புலப்படும் நெறியையும், விண் ஒலி என்பது முதலான தூல பூத – சூக்கும பூதத் தொடர்பு நிலையையும் விளக்கி எண் கலைப்படி இயன்ற மெய்த்திற நுட்பங்களை அறிந்து, நிலைத்த கலைத்திறத்தைத் தேர்ந்து, இவற்றின் பின்னணியில் மண் முதலான பூதப் பொருள்களை ஆராய்தலே தமிழ்ச் சொற்பொருள் இயலின் சிறப்பு. இதனை உணர்ந்து கலைமொழித் திறம் நிறைந்த தமிழில் அக்கருத்துக்களை நன்கு எடுத்துரைக்கிறேன்.

1) Having explained the phenomenon discernible through five sense-organs such as eye, ear and so forth, and the relation between the gross and subtle elements in terms of elemental space and sound,

2) Having known the subtleties of the potency of Primal Existence based on numbers and

3) Having perspectively understood the infallible and eternal creative-fields,

- it is worthwhile to analyse the nature of gross elements like earth, water and so forth. Following the same method I now explain those theories through expressive and effulgent language endowed with artistic excellences.

உணர்வொளித் திறன்நிலை உரைத்தல் நோக்குபு
உணரல் உணர்த்தல் உணரப் படுநிலை
உணர்மொழி நிலைக்கலை உணர்த்து வித்தல்
உணர்மொழிச் சொற்பொருள் நிலையறி திறமே (228)

அனுபவ ஞானமாகிய ஆன்ம ஒளிநிலை இன்னது என்று கூறப்புகின், அது உணர்தல், உணர்த்தல், உணரப்படும் நிலை, உணர்வதற்குக் கருவியாகிய மொழிநிலையின் கலைத்திறன், உணர்த்துவித்தல் — என்ற வகைகளில் வெளிப்படுவதாகும். உணரும் மொழியின் சொற்பொருளானது உணரவேண்டிய மெய்ந்நிலையை அறிவிக்கும் திறத்தை உடையதாகும்.

If the real state of intuitive knowledge which is one's own state of brilliance is to be explained, it is the state which reveals itself through realisation, instruction, state of being realised, the artistic excellence of language which

is instrumental for such realisation and making the instructional process to flourish. The exact sense-referent of a word of congnisable language is associated with the efficacy of revealing the true nature of existence which remains to be realised essentially.

ஒளியால் உணர்கலை ஓங்குறும் நெறிகலை
வெளிமொழி விண்கலை எண்கலை மொழித்திறன்
தெளிநிலைச் சீர்மதி செய்நிலை தொழிற்கலை
விளிமுறைத் தெருள்நிலை விளக்கல் இயல்பே (229)

ஒளியால் உணரப்படும் கலை, அது ஓங்கும் நெறிமுறை, வெளியின் தொடர்பான மொழி, விண்கலை, எண்கலை, மொழித்திறன், தெளிந்த அறிவுநிலை, செய்ந்நிலை, தொழிற்கலை, தகுதியுடையார்க்கு அறிவித்துத் தெளிவுபடுத்தும் நிலை — என இவற்றை (முன் நூற்பாவில் கூறப்பட்ட) சொற்பொருள் நிலை இயல்பாகவே விளக்கவல்லது.

It is but the essential nature of referent - word to explain - 1) creative - field realised through the source of light, 2) its state of ever-growing phenomenon 3) space-word 4) aspects of elemental space 5) feature of number 6) efficacy of language 7) perfect state of inner consciousness 8) functional process 9) aspects of function and 10) instructions to the qualified person, effecting clarity.

எண்ணெண் கலைஇயல் நிலையுறும் நுட்பம்
எண்ணிலை எண்ணி இயலுற நோக்குபு
விண்மொழித் தமிழ்இயல் ஐந்துறும் மூலமும்
ஒண்மொழிச் சொற்பொருள் உரைநிலை கூடும் (230)

எண்ணெண்கலை இயலாகிய மண்டலத்தில் பொருந்தும் நுட்பத்தை எண் நிலைப்படி எண்ணி, அதனைப் பொருத்தமான வகையில் நோக்கி உணர்ந்து, விண்மொழியாகிய தமிழின் ஐந்து இயல்கள் வாயிலாக வாஸ்துவைப் பற்றிய அறியவல்லோர் ஒளிநிலை வாய்ந்த சொற்பொருளின் நுட்பங்களை விளக்க வைக்கும் ஆற்றலைப் பெறுவர்.

Having comprehensively thought over the subtleties of mandala constituted of 64 squares and having consistently understood its features, the knower of Vastu would gain the power of expressing in shimmering words through the fivefold aspect of expressive language which is the foremost embodiment of the elemental space-words.

ஒளியொளிர் மூலம் ஒண்நிலைக் கலைநிலை
களியுறும் எண்திறன் எண்ணெண் சீர்நெறி
விண்நிலை சுழல்நிலை விரைவுறும் திண்நிலை
அணிகலைத் திறனால் ஆக்குற நோக்குபு
வலமிட முறைநெறி தென்-நிலச் சூழல்
நலமுறச் சுழல்நிலை ஞாலத் திண்இயல்
கால நுணுக்கம் காட்டுபு தேர்க்கலை
மூலப் பொழுதியல் மூலப் பொருளும்
சீலம் தேர்ந்துழி கால நுண்பொருள்
கோலத்து இயலால் குறித்துறும் பொருள்நிலை
எண்ணுற எண்ணிப் பருநிலை நுண்கலை
விண்ணுறும் ஆற்றல் வியநிலைக் கலைத்திறன்
எண்ணெண் இயலே எட்டின் பிறழ்வால்
திண்ணுறும் ஓம்ஒலி மூலத்து இயலாய்
எழுந்த யாத்தமிழ் எழுச்சி உறுநிலை
விழும்ஒலி உமிழொலி தமிழொலி மெய்க்கலை
கண்கருத்து இயன்றே எண்ணெழுத்து இயைந்தே
நுண்ணிதின் நோக்குபு எண்ணெண் நெறித்திறன்
விண்மொழி தமிழென ஓசை ஒளித்திறன்
பண்மொழி ஒலிநிலை அளவை மாத்திரை
எண்ணியல் மொழியால் எழுத்தியல் ஆக்கம்
திண்ணுறும் குறில்நெடில் சீர்நிலை அசைஎன
நண்ணுறும் மொழிக்கலை நெறிமுதல் ஆக்கம்
எண்ணுறும் தொழிற்கலை மொழித்திறன் இலங்குமே (231)

ஒளியின் மூலப்பொருள், கலைகளோடு கூடிய அதன் அடுத்த ஒளிநிலை, களிப்பினை மிகுதிப்படுத்தும் எண் (8) திறன், 64 கலைகளாகும் சீரிய நெறி, விண்நிலை, அது சுழலும் நிலை, அவ்வாறு சுழல்வதில் உள்ள விரைவும் உறுதியும் — ஆகிய இவற்றைக் கலைத்திறங்களால் ஆக்கம்பெற நோக்க வேண்டும். வலம் இடமாக நெறிமுறையே அமைந்திருக்கும் தென்னிலச் சூழல், அது சுழலும் நிலை, ஞாலத்தின் உறுதிநிலை, காலநுணுக்கத்தைக் காட்டும் தேர்க்கலை, மூலப்பொழுது,

மூலப்பொருள், சீலத்தின் மூலம் தேர்ந்துணரப்படும் காலநுண்மை, கோலங்களின் இயல்பால் பெறப்படும் பொருள்நிலைமை — இவற்றையெல்லாம் முறைப்படிச் சிந்திக்க வேண்டும். பருநிலை, நுண்நிலை, விண்ணில் பொருந்தும் ஆற்றல், விரிவான கலைத்திறன், 64 இயலே எட்டின் பிறழ்வு எனும் உண்மை ஆகிய இவற்றையும் உணர வேண்டும். ஓம் என்பதன் மூலத்து இயலாகத் தமிழ் வெளிப்படும்போது அதுவே விழும் ஒலி, உமிழ் ஒலி, தமிழ் ஒலி எனக் கண்ணையும் கருத்தையும் பிணைத்து மெய்க்கலையாய் எண்ணாகவும் எழுத்தாகவும் இயைகின்றது என உணர வேண்டும். இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தால், 64 நெறித்திறனே விண்மொழித் தமிழாகவும் ஓசையாகவும் ஒலியாகவும் பண்ணாகவும் ஒலிநிலையை அளக்கும் அளவையாகவும், மாத்திரை, எண்ணின் முறைப்படி அமையும் எழுத்தின் ஆக்கம், குறில், நெடில், சீர், அசை என்பனவாகவும் மொழிக்கலையாகப் பொருந்துகிறது என நன்கு விளங்கும். எனவே மொழித்திறனே, நெறிமுதல் ஆக்கமாக, தொழிற்கலையாக விளங்குகிறது என அறிய வேண்டும்.

The knower of Vastu, with the beautiful artistic acumen, should keenly observe the casual source of light, its subsequent lustrous states, exhilarating potency of octonary, the rhythmic phenomenon of 64 squares, the nature of space, its revolving process, the swiftness and steadiness in its rotation; he should methodically think over the casual background which itself is formed in a clock-wise pattern, its revolving state, the stability of the world constituted by the created objects, aspects of chariot which reveals the subtlety of Time, Primal Time, Primal Existence, subtlety of Time recognised through rhythm, and the nature of objects as gleaned from the Forms; he should also understand that stages of grossness and subtlety, energy contained in space, elaborating aspects of creation and the formation of 64 as the multiple of 8. When the expressive language of blissfull experience gets manifested as the basic expression of OM, it gets variegated as the sound of descending force, sound of emitting force, sound of mellowing (levelling or standardising) force and being the unifying force which draws the attention of eye and mind, emerges as letter and numbers.

If the facts stated above are considered in due manner, it would become evident that only the potency of the phenomenon of 64 squares emerges as the expressive language of blissful experience in inner space, sound energy, light energy, melody, knowledge about the units of melody, time-unit, potency of letters based on number, short-letter, long-letter, metrical feet and metrical syllable.

Therefore it should be known that only the potency of words (language) becomes the basis for all creative phenomenon and the aspects of creative functions.

சொல்லும் பொருளும் தொன்மைய தாகிச்
சொற்பொருள் மூலம் தொழில்நிலைக் கலைநிறை
மூலத்து இயல்ஒலி எழுநிலை எழுத்தாய்க்
காலமும் இடமும் கடிதின் நோக்கிச்
சீலத் திண்பொருள் செறிவுற உணர்த்தி
ஞாலத்து இயல்நடை நண்ணுறும் திறனாய்ச்
சொற்பொருள் நெறிக்கலை குறிக்கலை மொழியாய்க்
கற்றறி மக்கள் கருத்துறும் திட்பம்
உற்றறி மக்கள் உயர்அறி நுட்பம்
சொற்றிறம் உறுவார் பொருள்திற மூலம்
தொல்மரபு இயலுறும் ஓசை ஒலிமொழி
வல்ல மாக்கலை வளர்கலை மதித்திறன்
ஐந்தியல் அருங்கலை நுண்கலை விண்நெறி
வந்துறும் எண்கலை மூலம் கூட்டும்
மெய்ந்நிலை அறிந்தே மெய்ப்பொருள் விளக்குபு
எய்துறும் எண்ணெழுத்து இயல்நிலை விரிநெறி
கல்லும் சொல்லும் வில்லும் காட்டும்
நெல்லும் எள்ளும் விரற்கலை அளவை
காலத்து இயல்நெறி காட்டும் மாநெறி
சீலத்து இயலால் செப்புறும் இயல்பே (232)

சொல்லும் பொருளும் தொன்மைச் சிறப்பு உடையவை. (சொல் தோன்றிய பொழுதே பொருளும் தோன்றியுள்ளது), சொற்பொருள் மூலம் தொழில் நிலையினது கலைத்தன்மையின் நிறைவு தெரியும். அது மூலத்து இயல்ஒலி. அதுவே பல்வேறு நிலைகளில் எழுகின்ற எழுத்தாகிறது. காலம், இடம் இவற்றை இலக்கண முறைப்படிப் பொருத்தமுறப் பார்த்து, சீலப் பொருளைச் செறிவுற உணர்த்துகிறது. சீலமே ஞாலத்து

நடைபொருந்தும் நயத்திறனாகிறது. மேலும் சொற்பொருள் நெறிக்கலையையும் குறிக்கலையையும் உடைய மொழியாக விளங்குகிறது. அறிஞர்களின் கருத்துத்திட்பம், அனுபவ ஞானிகளின் அறிவு நுட்பம் இரண்டும் இணைய, ஒருவர் சொற்றிறம் பெறுவர்; மூலப்பொருளின் திறத்தை அறிவர். அதனால் தொன்மரபான ஓசை, ஒலி இரண்டும் உடைய மொழிவாயிலாகக் கலைகளை வளர்க்கும் ஆற்றல், அறிவாற்றல், ஐந்தியல்கலை, நுண்கலை, விண்நெறி, எண்கலை ஆகிய இவற்றை மூலப்பொருள் கூட்டுவிக்கும். இந்த மெய்ந்நிலையை அறிந்து மெய்ப்பொருளை விளக்கப் பொருந்துவதே எண் இயல்நிலையும் எழுத்தியல் நிலையும் ஆகும். இவற்றின் விரிந்த நெறிகளாகக் கல் அளவை, சொல் அளவை, வில் அளவை அவற்றுக்கு அடிப்படையான நெல் அளவு, எள் அளவு, விரல் அளவு — இவற்றின் அடிப்படையில் காலத்து இயல் நெறியானது சீலத்து இயலால் மாநெறியைக் காட்டும். தொன்மைசால் மரபானது இவ்வாறு எடுத்துரைக்கும்.

Both the word and its referent are beginningless. The culmination of functional state could be known through word and its referent. The word itself is a manifold sound-form of primal existence which gets variegated into different letters and which reveals the rhythmic aspect though Time and Space. The rhythm itself becomes the excellence of worldly phenomenon. Further more, the word and its referent become the expression of phenomenal art and symbolism. A person would become skilled in word-power and know the efficacy of the Primal Existence upon the unification of the power of thought and consciousness. The Primal substance would bring into effect the dexterity in making the creations flourish through the conventional language endowed with melodies of sound; it would bring into effect the power of consciousness, fivefold aspect, knowledge about the creative art, about the space-phenomenon, and about the octonary. Both the science of number and that of letter have emerged only to explain the subsisting state of the eternal substance. The extensive fields of the science of number and that of letters are - unit of measurement with respect to stone and word, unit of measurement in terms of bow, paddy, sesamum and

finger. The phenomenon of Time would reveal the phenomenon of Primal Existence through the phenomenon of Rhythm. The uninterrupted tradition upholds all the views stated above.

இயல்பே இயலல் இயற்கைச் செந்நெறி
இயலுறும் நெறிமுறை தெரிவுற விளக்குபு
இயற்கைப் பொருள்மேல் நுண்மை சுட்டுபு
இயற்கை நெறிஇயல் கலைநெறி எண்திறன்
எண்ணெண் நிலைசேர் நண்ணிய காட்டுறும்
திண்ணுறும் கணக்கியல் மொழிநிலை நுட்பமே (233)

மூலம் (மூலப்பொருள்) இயல்பாகத் தனது நிலையில் இருத்தல், இயங்கல், இயங்கலில் உள்ள ஒழுங்குமுறை, இயங்கலில் உள்ள நெறிமுறைமை — இவற்றையெல்லாம் அனைவரும் தெளிவாக உணரும் முறையில் விளக்கித் தனது நுட்பங்களை எடுத்துக்காட்டும். இயற்கை நெறியே, இயல்பான முறையில் பொருந்தும் கலைநெறியாகும். அது எண்ணின் திறத்தைக் காட்டுவதே. மொழிநிலை நுட்பமானது 64 நிலைகளைச் சேர்ந்து பொருந்தியுள்ள கூறுகளை (தெய்வீக ஆற்றல்களை)க் காட்டுவதற்காகப் பொருந்தும் உறுதியான கணக்கியலே ஆகும்.

The Primal Substance always reveals its own existential state of static existence, its dynamic state, the rhythm and the orderly phenomenon in its movement, and its various subtleties so as to be realised by the wise men. The artistic pattern or phenomenon is really the natural phenomenon. It is indicative of the power of number. The subtlety of language in indeed the infallible mathematical calculation which makes known the divinities and potencies of 64 squares.

தொன்மை எண்ணிலை எண்கலை எண்ணே
ஒன்பது நிலைநெறி உற்றறி விண்ணே (234)

தொன்மையான எட்டின் நிலையானது எண்கலைக்கு அடிப்படையாக அமைந்து இயங்குவதேயாகும். அதனை நன்கு ஆராய்ந்து காண்பதால் அனுபவ ரீதியாக உணரப்படும் வெளிநிலை (விண்ணின் நுட்பம்) ஒன்பது நிலைகளை உடையதாகும்.

The age-old (or beginningless) efficacious state of Eight is the basis concerned with numerical designs and patterns. The nature of space recognised by the intuitional analysis of the octave phenomenon consists of nine stages of developments (or variations).

பொருண்மை சுட்டிய தெரிநிலைக் கிளவி
பொருளுறும் தொழிற்பெயர் நிலைநெறி நோக்கிப்
பொருள்மொழி நுட்பம் கலைத்தொழில் ஒட்பம்
தெருண்மை தோன்றச் செப்புவது இயலே (235)

பொருளின் தன்மையை எடுத்துக்காட்டும் சொல் அப்பொருளை உள்ளடக்கியுள்ள தொழிற்பெயரே ஆகும். இயல்நூலின் இலக்கணம் என்பது அப்பொருள் மொழியின் நுட்பத்தையும் அதனால் வெளிப்படுத்தப்படும் கலைத்தொழிலின் ஒளிபொருந்திய தன்மையையும் தெளிவுபடக் கூறுதலேயாகும்.

A word which indicates the nature of referent is basically the functional name (noun) which contains in itself the referent (sense or object). The methodology of a treatise is to set forth in clear terms the subtlety of word and its inseparable referent and the prudence of creative excellence revealed by the referential word.

பொருள்மொழி ஓர்தல் கலைத்திறன் நுணுக்கம் (236)

கலைத்திறத்தின் நுணுக்கமானது, பொருளை உள்ளடக்கியுள்ள சொற்களை முறைப்படி ஆராய்தலே யாகும்.

The subtlety of creative excellence is to analyse methodically the words pregnant with perspective referents. (objects)

எண்மை இயற்கலை விண்மை முயங்கல்
எண்கலைத் திறமுறும் இயல்மொழி இயலல்
இயற்கைப் பொருண்மை மெய்பெறச் சுட்டி
இயல்நெறி ஆய்ந்துணர் நெறிமுறை நுட்பமே (237)

எண்ணின் இயற்கையான கலைத்தன்மை, விண்ணின் தன்மையோடு கலத்தலாகும். எண் (8) கலைகளின் திறம் பொருந்தப் பெற்று, இயல்பான சொற்களால் சுட்டப்பெறுதல்,

இயற்கையான பொருளின் தன்மையை உண்மைபொருந்தக் காட்டல், இயல்பான நெறிமுறையை ஆய்ந்துணரல் — இவையே இயற்கையை ஆய்ந்துணரும் நெறிமுறைகளாகும்.

The innate characteristic of Number is to be in union with the nature of space. To indicate through the consistent referential words associated with features of Eight, to set forth the characteristic of natural object according to its structure and to analyse the natural process and phenomenon - these are the aspects of methodological examination of Nature.

ஒளிஒலி உயிரியல் வெளிமுறை ஆய்ந்தே
களித்தமிழ் காண்பர் கற்றுவல் லோரே (238)

கற்றுவல்ல அறிஞர்கள் ஒளி இயல், ஒலி இயல், உயிர் இயல், வெளி இயல் — இவற்றை உள்ளவாறு ஆய்ந்து, களிப்புமிக்க தமிழ் நிலையை உணரவல்லவராவர்.

The men of erudition are capable of intuitionally realising the blissful manifestation of FORMS, having analysed the features of light, sound , animating force and space.

கற்றல் ஆய்தல் உணர்தல் நோக்கல்
சொற்றிறம் பொருளுறும் தொன்மை அணிநிலை
இயலுறத் தெரித்தல் விழுப்பொருள் உணர்த்தல்
மயலறத் தெரித்தல் மாண்நிலை விளக்கல்
அறிவியல் ஆற்றல் அணிபெறச் சுட்டிக்
குறிபெற நிறுத்திக் குறிப்பின் உணர்த்திப்
பொருண்மை சுட்டித் தெருண்மை விளக்குவர்
பருப்பொருள் ஆயும் விழுப்பொருள் மேலோர் (239)

பருப்பொருள்களின் இயல்பை ஆராயவல்ல, — விழுப் பொருள் பற்றிய அறிவுமிக்க சான்றோர், கற்றல், ஆராய்தல், உணர்தல், முடிவுகாணல், சொற்பொருளின் ஆற்றலால் அதன் நிலைத்த அழுகுத் தன்மையை இயல்பாக எடுத்துரைத்தல், விழுப்பொருளை உணர்த்தல், கற்போரின் மனமயக்கம் நீங்கும் வகையில் புலப்படுத்தல், அதன் பெருமை நிலையை விளக்கல் — அறிவியல் ஆற்றலால் அழகும் பொருத்தமும் உறக் குறிகளின்

மூலம் சிறப்பாக உணர்த்தல் — இத்தகைய செயல்களை மேற்கொண்டு பொருளின் தன்மையை வெளிப்படுத்தி, அதன் முடிவான தெளிந்த நிலையையும் விளக்கிக் கூறுவார்கள்.

The wise men, endowed with knowledge about the supreme one, who could analyse the true nature of visible objects, would undertake efforts such as deep study, inquiry, realising the purport, arriving at the conclusion, revealing its enduring excellence through words and its referent, revealing the nature of Supreme One, revealing its greatness to dissipate confusion and doubt, and indicating it through symbols. Having carried out all such efforts, they would reveal the real nature of existence and explain its final and unique state.

மொழிமுதற் பொருள்நிலை முன்னுற நோக்கி
எழுத்தியல் சொல்இயல் இயைநிலைக் கலைத்திறன்
வழுத்துறும் பொருளே வளர்கலை நுட்பம்
பழுத்தபேர் அறிவால் பகர்பொருள் சொற்கலை
விழுப்பொருள் எண்பொருள் விளங்கக் கண்டுழிச்
செழுமொழித் திறனும் ஐந்தியல் விளங்கும்
அளபின் ஆக்கமும் அசைநிலை நோக்கமும்
வளர்நெறி அளபெழுந்து இசைநிலை மாத்திரை
செஞ்சொல் திறனுறும் சீர்நெறித் திறனே
விஞ்சு யாநெறி மாமொழி விளக்குறும்
எண்பொருள் திட்பமும் நுண்பொருள் நுவலரும்
பண்பொருள் இசைத்திறன் பேரளபு இயல்திறன்
கண்டுறும் ஆற்றலால் ஐந்திசை ஐந்தியல்
விண்டுறும் நெறிக்கலை குறிநெறித் திறனாய்
குறிகுறி யீடெனும் வரைவினா தாகி
அறிநிலை எழுத்தென அளந்தனன் ஆகி
எழுமுற எழுச்சியும் கிளர்நிலை உணர்ச்சியும்
எழுத்துறும் இயல்நெறி உருநிலை ஓர்ந்து
எழுத்தியல் மூலம் இயலுற அறிந்தோர்
வழுத்தும் ஐந்தியல் வகையுற நுணுகி
ஐந்திறந் தால்அறி அருங்கலை நுட்பம்
தந்திறம் விளங்கித் தாய்உற காண்பரே (240)

மொழிமுதலாகிய ஓம் என்பதால் உணர்த்தப்படும் பொருளை நோக்கி எழுத்தியல், சொல்லியல், இவைஇயைபும் சீரின்

இயல், தூலப் பொருள்இயல், கலைநுட்பம், பேரறிவால் விளக்கப்படும் நுண் பொருள்நிலை, சொல்லால் வெளிப்படுத்தப்படும் ஆற்றல், விழுப்பொருள் ஆகிய எட்டுத் திறன்களையும் காணும்பொழுது, மொழியின் ஆற்றலால் ஐந்தியலும் விளங்கும். மிகுதியாக ஒலிக்கும் ஒலி, அதன் அசைநிலை, அளபின் ஒலியளவு — இவை சொல்லின் சிறப்பு ஆற்றல்களாகும். அனைத்திலும் மேம்பட்டதாகிய நெறிமுறைப்படி மாமொழி விளக்கும் எண்பொருளின் திட்பத்தையும், நுண்பொருள், பண், இசை, இவற்றின் அளவியல் ஆகிய இவற்றையும் காணும் அறிவாற்றலே ஐந்திசையையும் ஐந்தியலையும் நன்கு வெளிப்படுத்தும் குறியீட்டுத்திறனாகும். குறி, குறியீடு, வரைவு என்னும் நிலைகளில் அறியப்படுவது எழுத்து என அளந்து,

எழுச்சி, உணர்ச்சி, எழுத்தியலால் பொருந்தும் உருநிலை இவற்றை ஓர்ந்து எழுத்தியல் மூலம் இயல்பான பொருள் நிலையை அறிந்தவர்கள், ஐந்தியல் வகைகளை நுணுக்கமாகக் கண்டு ஐந்திறத்தால் விளங்கும் கலை நுட்பங்கள் நன்குவிளங்கக் காண்பார்கள்.

Having grasped the real nature of existencc of OM which is the basic sound of language, the researcher should realise the truths about orthography, semantics, metrical syllables, nature of visible and invisible objects, artistic subtletics, power of expression through words and the nature of Supreme Existence.

Upon the realisation of these eight aspects, he could understand the fivefold phenomenon through the power of language. The lengthening of sound beyond the ordained measure, metric syllable, its duration of sound - all these are the potentials of word. Only the power of consciousness which penetrates into the steady nature of the afore mentioned eight aspects, the nature of subtle object, melody, music and their duration — is considered to be the power behind symbolism which reveals fivefold music and fivefold phenomenon. Those persons who know the symbol, import of the symbol and its expression and who could realise the inner upsurge and feelings and the formative features effected through orthography and who

know the real nature of existence through it, would be able to see minutely the varieties of fivefold phenomenon and understand well the creative excellence of fivefold aspects.

ஆறறி நுணுக்கம் ஐந்தியல் நுட்பம்
ஊறறி யாத்திறன் ஒழுக்கத் திட்பம்
வேறுவேறு இயலும் வெளிநிலைக் கலையும்
கூறுகூற் றியலுறும் அறுபான் நான்கின்
மாறிலா எண்ணிலை எழுத்தியல் நோக்கி
ஈறிலா ஐந்தும்ஐந்து இயல்நிலைச் சுழலல்
ஐந்தும்ஐந்து இயலால் நாற்புற நடுவண்
ஐந்தும் புள்ளி மெய்க்கலைத் திறன்உற
சுழலால் விரைவே சுற்றுறும் திறனாய்ச்
சுழலல் விரைவே காலக் கூற்றாய்
உந்துறும் காலத் தியலறி வாற்றல்
தெள்ளுற நொடிநொடி சிறுநொடி அறிந்தே
விள்ளுவர் காலத் தியலறி மாண்பாயத்
துள்ளு கலைத்திறன் எட்டின் பிறழ்வால்
ஓம்ஒலி ஓம்ஒளி ஒருங்குறக் காண்டலும்
ஓம்கலை முதல்திறன் ஒருமொழித் திறனுற
விண்மொழி நுட்பம் அகவிண் ஆய்ந்தே
எண்மொழிக் கலைத்திறன் புறவிண் நோக்குபு
விண்கலை எண்கலை நுண்கலை முயலல்
தெண்கலை அறுபான் நான்கின் இயல்பே (241)

வேறுவேறாக இயங்கும் வெளிநிலையின் கலைகளையும், கூறுகூறாக அமைந்துள்ள அறுபான்நான்கில் பொருந்தியுள்ள எண்நிலையையும் எழுத்து நிலையையும் நோக்கி, ஐந்து புள்ளிகளிலும் ஐந்து இயல் வெளிப்படும் வண்ணம் சுழற்சி ஏற்படுவதைக் காணவேண்டும். ஐந்து புள்ளிகளிலும் ஐந்தியல் முறையால் சதுரநடுவே பொருந்தியுள்ள மெய்க்கலைத் திறனானது வெளிப்பட, சுழற்சியும், சுழற்சியை ஏற்படுத்தும் விரைவான ஆற்றலும் காலத்தின் கூறுகளை ஏற்படுத்தும். இங்ஙனம் உந்தி எழும் காலத்தின் இயல்பை அறியும் ஆற்றலால் நொடியின் கூறு, நொடி — இவற்றை விரைவில் அறிந்து காலத்தின் இயல்பை விளக்கிக் கூற வேண்டும். விரைவாகத் துடித்தெழும் கலைத்திறனில் எட்டின் பிறழல்வால் ஓம் ஒலியும் ஓம் ஒளியும் ஒருங்கே பொருந்துவதைக் காணவேண்டும்.

ஓம்கலையின் அடிப்படைத்திறனும் அந்த ஓம் மொழியின் திறனும் பொருந்த விண்மொழி நுட்பத்தை அகவெளித்திறத்தால் ஆராய்ந்து, எண்வகையாகப் பகுக்கப்படும் எழுத்துக்களின் ஆற்றலைப் புறவெளியிலும் கண்டு, விண்கலை, எண்கலை, நுண்கலை — ஆகிய மூன்றையும் முயன்று அறியச் செய்தலே, தெளிந்த கலையாகிய அறுபான் நான்கின் இயல்பான ஆற்றலாகும்.

Those persons desirous of knowing the Vastu, having observed the creative energies of space functioning in different ways and the process of octonary operating in 64 squares and the corresponding letters should see the revolutions occurring on the plane of five dots giving rise to fivefold phenomenon. The creative force of the Primal Existence at the centre of the square mandala would distribute itself over the five dots. The revolutions and the forcible energy created by those revolutions would manifest the Time-units. Through the power of knowing the nature of upsurging Time, they should understand quickly the fractions of Time and explain the true nature of Time. They should observe that both OM-sound and OM-light are conjointly present in the first upsurge of Time through the movement of octave process. Through the creative aspects of OM and its sound pattern, they should analyse the subtle nature of space-sound with the power of inner space. They should observe the power of letter which gets variegated into eight groups, even in the external space. The innate power of creation concerned with 64 squares is to enable them to know the aspects of space, aspects of Eight (Number) and their subtle potencies.

விண்பொருள் விழுப்பம் உணர்ந்தோ ராகி
எண்பொருள் எண்ணி இயலுற நிற்பர்
தண்தமிழ் நூல்உணர் கலையுறும் மேலோர் (242)

தமிழ் நூல்களின் நுட்பங்களை உணரும் கலையாற்றல் வாய்ந்தோர், விண்ணாகிய மூலப் பொருளின் மேன்மை உணர்ந்தவர்களாகி, எண்வகைப்பட்ட பாகுபாடுகளையும் சிந்தித்து, அவற்றின் இயல்பை அறிந்தவர்களாவர்.

Those persons who are endowed with the artistic skill of realising the subtleties of the works concerned with the emergence of Blissful FORMS,would become the knowers of the supremacy of the Primal Existence which is pure space. They would be able to think about the eightfold classification and its features.

காலமும் களமும் கருத்திற் கொண்டே
நூலுணர் விரிவுரை நுவலுவ ராகி
ஞாலமும் விண்ணும் நவையறத் தெரிப்பர்
சீலம் சிறக்கும் செந்திமிழ் மேலோர். (243)

செந்தமிழ் அறிவு நுட்பம் வாய்ந்த மேலோர், காலம், குறிப்பிட்ட இடம் இவற்றைக் கருதில் கொண்டு, நூல்களின் விரிவான கருத்துக்களையும் எடுத்துக்கூறுபவர்களாகி, ஞாலத்தின் இயல்பையும் விண்ணின் இயல்பையும் குற்றமறப் புலப்படுத்துவார்கள்.

Furthermore, the wise men endowed with deep knowledge about the expressive language of blissful phenomenon, would be able to explain the theories enshrined in those works, keeping in their mind the fitness of time and space. They would reveal without any defects the characteristics of universe and space.

எண்ணத்து இயலால் வண்ணம் ஓர்ந்தே
விண்கலை நெறியால் எண்ணிலை நுணுக்கம்
எண்ணுற நோக்கி உருவத்து இயலைத்
திண்ணுற வரையும் சீர்நெறி ஆய்ந்தே
எழுத்தியல் குறியும் நெறியும் குறிக்கும்
வழுத்து மாநெறி உருநிலை ஆக்கம் (244)

சிந்திக்கும் ஆற்றலால் பொருளின் இயல்பான வண்ணத்தை ஓர்ந்து, விண்கலை நெறிப்படி எண்நிலையின் நுணுக்கத்தை ஆழ்ந்து கண்டுணர்ந்து, உருவத்தை இலக்கணம் பொருந்த வரையும் சிறப்பான நெறியை ஆராய்ந்து. எழுத்தியலே குறியாகவும் நெறியாகவும் சிறப்பான முறையில் விளங்குகிறது என உணரவேண்டும். இதன் அடிப்படையில் அமைவதே உருவக்கலையின் சிறப்பு (மேம்பாடு) ஆகும்.

The knowers of Vastu should analyse the nature of colour pertaining to a particular natural existent; should understand deeply the subtle nature of Number according to the nature of space and based upon this they should understand the process of drawing the outlines of a FORM. Also, they should realise that only the science of letters shines forth revealing the nature of letter as a symbol and its process of reference in a significant way as extolled in the Scriptures. The uniqueness of FORM is based only on the science of Letter and Number.

முப்பொருள் முக்கலை ஐந்நெறி ஐந்தியல்
செப்பும் ஐந்திறம் செந்தமிழ் நெறியால்
சிற்பம் ஓவியம் கணக்கியல் வரைவியல்
உற்றறி விண்நெறி காலமா இயலும்
தெற்றுற விளக்கிச் சீர்சால் நுட்பம்
பெற்றுறின் விண்மொழி தொழிற்கலைத் தமிழாய்
விளங்குறும் தன்மை விளங்கக் கண்டே
வளர்கலை ஐந்தியல் வண்தமிழ் ஆய்வரே (245)

ஐந்தியலாகிய தமிழின் நிலையை ஆராய்பவர்கள் — முப்பொருள், முக்கலை, ஐந்நெறி, ஐந்தியல் ஆகிய இவற்றை உணர்த்தும் ஐந்திற நெறியால் சிற்பம், ஓவியம், கணக்கியல், வரைவியல், விண்நெறி, கலைஇயல் — இவற்றைத் தெளிவாக அறிந்து நுட்ப உணர்வு பெற்று விளங்கினால் விண்மொழியே தொழிற்கலைத் தமிழாய் விளங்கும் தன்மையை நன்கு விளக்குமுறக் காணலாம்.

Those persons who sift the nature of blissful expression in its fivefold phenomenon would clearly explain the characteristics of sculpture, drawing, mathematics, sketch-art, the dynamic aspect of space and time. They would do this through the process of fivefold aspect which reveals the nature of trinity (i.e., objects with form, object with form and formless nature and objects without form), threefold aspect, fivefold process and fivefold phenomenon. If they attain inquisitive and penetrating knowledge about these, they would clearly see that only the space-sound expresses itself as the functional aspect of expressive language.

உள்ளுறும் உணர்வே ஊழை வென்று
தெள்ளுறும் முதிர்கலைத் தீந்தமிழ் இயல்நெறி
கால நுட்பமும் கருத்துறும் செயலும்
சீலமும் கோலமும் சிறப்புற நல்கி
ஞாலமும் அளிக்கும் நற்றிறம் அன்றோ (246)

அகத்தே உறும் ஞானமே ஊழை வெல்லும் முறையால் தெளிவுபெறும். முதிர்ந்த கலையாகியே தமிழ்இயல் நெறியே காலத்தின் நுட்பம், காலத்தால் வெளிப்படும் செயல், சீலம், கோலம் — இவற்றை நன்கு அறியும்படிச் செய்து ஞாலத்தையும் படைக்கக் கூடிய நற்றிறமாக அமையும். இதில் ஐயமில்லை.

Only the consciousness manifested in one's own inner space would attain a culmination in such a way as to surpass the time limit. Only the phenomenon of expressive pattern which is mature and perfect art makes known the subtleties of Time, actions taking place in time, Rhythm and FORM. It is only the expressive pattern that shines forth as the manifesting force which could create even the whole universe. There is no doubt about this.

முந்துறக் கிளத்தல் விண்நெறி எண்ணே. (247)

விண்நெறியில் அமைவுறும் எண்ணே முந்துறக் கூறப்படும்.

Only the Number, naturally in union with space would be revealed and explained at the first stage.

பிந்துறக் கிளத்தல் விண்ணுருத் திறனே (248)

விண்ணில் பொருந்தும் உருவ ஆற்றல் (எண்ணின் அடிப்படையில்) அடுத்து விளக்கப்படும்.

Contiguously, the imagic potency associated with space would be revealed and explained based on Number.

உள்ளுறும் விண்நெறி எண்ணெண் திறத்தால்
தெள்ளுறக் கண்டோர் சீர்நெறி நோக்கி
வையத்து அசைவும் விண்ணொளி இயலும்
உய்யக் கண்டே ஒளித்தமிழ் உணர்வரே (249)

அகத்தே பொருந்தும் விண்ணின் நெறியை 64 கலைத் திறனால் தெளிவாக உணர்ந்தவர்கள், அதன் சீர்நெறியைக் கண்டு

வையத்து அசைவையும், விண்ணின் ஒளி இயலையும் கண்டு ஒளித்தமிழை அனுபவத்தில் காண்பார்கள்.

Those experts who have clearly understood the phenomenon of inner space through the pattern of 64 squares could see the pattern of motion of planet (chariot) and the nature of space-light. They could intuitively realise the brilliance of expressive language. Their experience in this field would benefit the whole world.

நொடிப்பொழுது இயல்நிலை நெடிதுறக் கண்டே
கடிதுறும் கால வரைநிலை ஓர்ந்து
காலத்து இயலல் எண்நெறிக் கூற்றென
மூலத் திண்மை நன்குணர்ந்து உன்னி
உள்ளுறும் ஆற்றலால் உள்ளுவ உள்ளித்
தெள்ளுறும் சீர்நிலை நேரசை ஆய்ந்தே
விள்ளல் தேர்த்துகள் காலம தறிந்தே
துள்ளல் தேர்க்கொடி இயல்நிலை ஓர்ந்தே
காலமா நெறிநிலை கருதுதல் மரபே (250)

நொடிப்பொழுதின் இயல்பை ஆழ்ந்துகண்டு, காலத்தின் பேரெல்லையையும் ஓர்ந்து, காலக் கணக்குப்படி இயங்குதலே எண்நெறியின் ஓர் இயல்பு என மூலத்திண்மையால் நன்கு சிந்தித்து உணரவேண்டும். அகத்தே பொருந்தும் அறிவாற்றலால் மேலும் முறைப்படி சிந்தித்து சீர், அசை இவற்றைத் தெளிவுற ஆய்ந்து, தேர்த்துகள் காலம், தேர்க்கொடிக் காலம் ஆகிய இவற்றின் இயல்பையும் உணர்ந்து காலத்தின் பெருநெறியின் நிலையை ஆழ்ந்து உணர வேண்டும். இவ்வாறு எண்ணிப்பார்த்தல், மரபு நெறிப்பட்ட முறையாகும்.

The experts should deeply analyse the nature of time-unit and the highest limit of Time; they should understand through the immutable nature of the Primal Existence that it is an aspect of numerical pattern to function according to time-measures. They should contemplate and know about metrical feet, metrical syllable and analyse the units of time such as the time-unit denoted by chariot-dust, time-unit denoted by chariot-flag etc., They should contemplate the all-comprising (greatest) process of Time. These activities are in conformity with the tradition.

உள்ளூறும் எண்ணெண் கலைநிலை ஓர்ந்து
உள்ளூறும் சுழல்நிலை மெய்ந்நிலை தேர்ந்தே
வையம் விரைவுறும் கால மாஇயல்
உய்வுறத் தெரிந்தே உணர்கலை தேர்ந்து
உணர்வொளி நிலையுறும் கலைநிலை ஆய்வர்
உணர்நெறி தண்டமிழ்க் கலைநெறி மேலோர் (251)

தமிழ்நெறி அறியும் மேலோர், மண்டலத்தின் உள்ளே பொருந்திச் சுழலும் 64 கலைகளை உணர்ந்து, தேர் இயக்கம், கால இயல் ஆகியவற்றை அறிந்து, உணர்வாகிய ஒளி அமையும் வகையில் வெளிப்படும் உருவ அமைப்பை ஆய்பவராவர்.

Those experts deeply rooted in the process of creating the blissful forms, would be able to realise 64 creative aspects spiralling within their respective squares, moving phases of (cosmic) chariot related to time measure, role of time, order of creation and analyse the formative phase of construction which nestles in itself its conscious light-energy.

காலத் துடிப்பே கலையுணர் வோங்க
மூலத் தெழுமியல் முன்னெறி வகுக்கும் (252)

காலத்தின் துடிப்புகள் வெளிப்பாட்டு நிலைக்குரிய உணர்வுக்கு இடம் கொடுக்க, மூலநிலையில் எழும் துடிப்பானது, உருவ அமைப்பிற்குத் தகுதிமிக்க இடத்தைக் கொடுக்கும்.

The vibrations of Time would give rise to consciousness pertaining to manifestation. The vibrations which arise from the central dot would yield the most fitting place (space) for the manifestation.

மெய்யுணர் திறனால் ஒளிநிலை யோர்ந்து
ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி ஆய்ந்தே
காலத் தியலைக் கடிதின் உணர்ந்தே
மூலம் உறுநிலை திறமுறத் தெரிவர்
எண்கலைத் திறனை இனிதுணர் வோரே (253)

ஒளிநிலை, ஐந்தியல், ஐங்கலை, ஐந்நெறி, காலத்து இயல் — இவற்றை விதிப்படி உணர்ந்து மூலம் கொள்ளக் கூடிய நிலையை அறியவல்லவர் எண்வகை ஆற்றலை நன்குணர்வர்.

The source of light energy, fivefold aspect, fivefold creation and fivefold order - having understood all these in an orderly way, those who contemplate the form to be assumed by the Primal Substance, would be able to understand the potentialities of octo-pattern.

காலப் பொருளைக் கடிதுற உணர்த்தி
சீலத் தியலால் இடைநிலை தெரிந்தே
ஒளிநிலை உள்ளும் புறமுற உணர்த்தி
வெளிநிலை ஓம்ஒலி ஓம்ஒளி கூட்டும்
கால நுணுக்கம் உயிரியல் உணர்வால்
மூலமா வியலால் முயன்றினி தாய்ந்தே
சிறுபொழு தோர்ந்தே பெரும்பொழு தெண்ணி
உறுபொழு தாங்குறின் உவப்புடன் உன்னி
காலம் ஒன்றே கலைபல உணர்த்தும்
மூலம் எண்ணிலை மறைமொழி ஓர்ந்து
உள்ளுறும் வையம் புறமுறும் வையம்
விள்ளுறும் திறத்தால் விரைவின் ஆற்றல்
காலஞ் சுழல்நிலை உட்கலை தெரித்தே
காலத் தணுவும் ஞாலத் தணுவும்
அணுஅணு ஒலியும் அணுஅணு ஒளியும்
நுணுக்க மாயொளிர் நொடித்திறன் நோக்கி
காலங் கூட்டும் இடைநிலை தேர்ந்து
சீலந் தெரிந்துணர் செந்நெறி உள்ளி
ஞாலம் கோலம் மூலமுத் திறனும்
காலத் தாலறி நூலறி வாளர்
உள்ளொளித் திறனுற ஓங்குறி உணர்நெறி
விள்ளும் அறுபான் நான்கியல் தெரித்தே
சிற்றவை எண்ணிலை எழுத்தியல் ஒலிநிலை
உற்றுறும் உணர்வால் மெய்த்திற னோர்ந்து
எட்டின் பிறழ்நிலை இனிதுற உணர்ந்தே
விட்டுறும் நிலைகலை விள்ளுறும் திறத்தால்
ஓமெனும் திறத்தியல் ஒளியுற் றுணர்ந்தே
தோமில் ஆடலான் இயல்நெறி கூட்டும்
காலம் இயக்கும் பெருந்திற லாற்றல்
காலத் துடிப்பே நன்கினி தாட்டும்
சிறுநொடிக் காலம் திருவுற் றுணர்ந்தோர்
உறுநிலைக் காலத் தியல்நிலை அறிவரே (254)

காலப்பொருள், சீலத்தால் எற்படும் கணுநிலைகள், அகப்புற ஒளிநிலை, வெளிநிலை — இவற்றை ஓம் ஒலியும் ஓம் ஒளியும் உணர்த்தும். உயிர்ப்பாலும் மூல இயக்கத்தாலும் விளங்குவது காலநுணுக்கம். காலமாகிய ஒரு பொருளே படைப்பு வகைகளை உணர்த்தும். எனவே சிறுபொழுது, பெரும்பொழுது ஆகியவற்றின் இயல்பை ஆய்ந்து தகுந்த காலம் காணவேண்டும். மூலம், எண்வகைநிலை, அக வையம், புற வையம், காலச் சுழலில் உள்ள விரைவு, கால அணு, ஞால அணு, அணுவின் ஒலியணு, அணுவின் ஒளியணு, காலத்தால் உணரப்படும் இடநிலை, சீலத்தை வெளிப்படுத்தும் நெறி, ஆகிய இவற்றை உணர்பவரே கால அறிஞர். ஞாலநிலை, கோலநிலை இவற்றை 64 இயலால் உணர்ந்து சிற்றவையின் எண், எழுத்து, ஒலி, உணர்வு — இவற்றை உணர்ந்து, எட்டின் பிறழ்ச்சி நிலை, விட்டு விட்டு அமையும் நிலை, ஆடலான் இயலால் புலப்படும் காலத்துடிப்பு — இவற்றை உணர்பவர் கால அறிஞர்.

The category of Time, intermediary phases that occur in rhythmic structural growth, internal and external luminosity, presence of spatial aspects — these are revealed by the sound and light of OM. The subtlety of Time is indicated by the animating movement of the Primal Substance. Only the Time reveals varied phases of creation. Therefore one should identify a fitting time by sifting the nature of smaller and greater units of Time. The expert in the science of Time should know the number-oriented octo pattern, internal and external cosmic forms, the speedy gyration of Time factor, timal atom, cosmic atom, light and sound particle of atom, nature of particular place (space) knowable through time and fitting order which reveals rhythm. He should also understand varied causal phases of cosmic structure and form through 64-formation and other matter such as letter, number, sound, rays etc, related to microbode, manifestation and leaping of octo-pattern and vibration of time, realisable through Nataraja's dance.

காலம் வகுக்கும் இடமும் பொருளும்
கோலத் தெண்ணிலை குறிப்பின் தெரித்தே
மூலப் புள்ளி முன்னிலை கூட்டும்

சீலம் உணர்ந்தே தெள்ளிதின் நாடி
வகுத்தியல் காலம் வகையுற வுணர்ந்தே
வகுத்தியல் நெறிமுறை திருவினை புரிவோர்
ஊழை வென்று உள்ளொளி காண்பரே (255)

காலநிலையால் குறிக்கப்படும் இடம், பொருள், கோலத்தின் எண் நிலைகள், மூலப்புள்ளி உணர்த்தும் சீலம், வகுத்து உணரப்படும் காலவகை — இவற்றை உணர்ந்து, வகுத்தியல் நெறி எனப்படும் ஆயாதி கணிதமுறைப்படி செயலாற்றுவோர் ஊழையும் வெல்வர்; உள்ளொளி காண்பர்.

Having realised the essential nature of place and materials as indicated by Time, eight stages of FORM, rhythm as expressed by the central core and differentiated time-factors — those who execute their creative works through divisional process involving āya etc. could surpass even the providential course of events and perceptually see the light-energy.

காலத் தாலறி நுட்பமும் திட்பமும்
ஞாலங் கூட்டும் நெறிமுறைத் திறனே (256)

ஞாலத் தொடர்பான நெறிமுறைகளை உணரும் திறத்தைக் காலத் தொடர்பான நுட்பங்களை அறிவதால் பெறலாம்.

Through the knowledge related to the subtleties of time-factor, one could gain the capacity to understand the orderly phenomenon of the universe.

காலஞ் சுழல்நிலை விரைவுறும் திறனறி
சீல நுணுக்கச் செயலறி மக்கள்
மூலம் உணர்ந்தே முன்னுவ எய்துவர் (257)

காலச்சுழல், அதன் விரைவுத்திறன், சீலநுணுக்கம், செயல் முறை — இவற்றை உணரவல்லோர், மூலத்தையும் உணர்ந்து தாம் எண்ணியதை முடிப்பர்.

Cyclic movement of time, its swiftness, rhythm which is present even in a minute substance, process of creation — those who could understand these, would be able to see even the nucleus of the Primal Existence and accomplish their goal.

காலஞ் சுழல்நிலைக் கணக்கியல் வகுத்தே
மூலத் தொளிநிலை முன்னியாங் கோர்ந்தே
சீலத் தெண்ணியல் எண்கலை நுட்பம்
கால விரைவியல் வரைவியல் தெரிவரே (258)

காலத்தின் விரைவுநிலை; காலத்தின் வரைவுநிலை — இந்த இரண்டையும், காலச்சுழல் தொடர்பான கணக்கு, மூலத்தின் ஒளிநிலை, சீலத்தின் எட்டு இயல் — இவற்றால் அறியலாம்.

The swiftness of Time and the designing of Time - these could be known through the knowledge related to the calculation of fast cyclic movements of Time, luminous point of Primal Existence and the eight stages of FORM.

சிற்றவை யொளிரும் ஐந்தைந் தியலும்
உற்றறி வாலறி நுண்ணறி வோர்ந்தே
கற்றறி வுணர்கலை நெறியுணர் திறனால்
பெற்றுறும் பேரறி வுற்றுக் கிளர்ந்தே
அறுபான் நான்கியல் அமைவுறத் தெரிந்தே
உறுமுறை விழுமதி யாற்றல் ஓங்கி
எண்ணே எண்ணிலை எண்கலை எட்டின்
விண்ணிலை கூட்டும் மெய்க்கலை ஒளிர
அசைவின் திறமுணர் ஆற்ற லுணர்ந்தே
நசையிலாக் காலம் நெடிதுணர் வாரே (259)

சிற்றவையில் ஒளிரும் 25 இயலை நன்கு உணர்ந்து அதன் அடிப்படையில் 64 இயல் அமைப்பையும், அதன் எல்லைக்குள் பொருந்தும் 8 நிலை, 8 கலை, 8 விண்நிலை ஆகியவற்றையும் உணர வேண்டும். ஆடலானின் அசைவுத் திறத்தை உணர்ந்தால் காலத்தின் தூயநிலையை (மாறுபடா நிலையை) உணரலாம்.

The expert in the science of Vastu should know the 25 aspects manifest within microbode and based on this, they should know the efficacy of 64 squares within the structure of microbode. They should also know the eightfold stage, eightfold creative process and the eightfold spatial stage. If one is able to know the rhythmic spin, effected by Nataraja, he could understand the nature of all encompassing pure Time.

கால முணர்ந்தே கருத்துறும் அறிவர்
மூலப் புள்ளி முற்றினி தோர்ந்தே
எண்ணெண் இயலுறும் அசைநிலைத் திறத்தால்
விண்மண் நிலையறி விரைவினி துணர்ந்தே
எண்ணுறுந் திறனும் எழுத்தறி நுட்பமும்
கண்ணுங் கருத்துமாய்க் கலைநுகர் வாரே (260)

மூலப்புள்ளிளை ஒட்டியே 64 இயல்களின் அசைவும் அமையும். இந்த அசைவே விண்நிலையையும் மண்நிலையையும் உணர்த்தும். இதனை உணர்வோர் எண்ணின் திறத்தையும் எழுத்தின் நுட்பத்தையும் அறிவர்.

The spin of 64 energies would occur, depending on the Central dot. This spin is indicative of the nucleus of space field and that of earth field. Those who know this, could understand the efficacy of numbers and the subtleties of letters.

அயனெறித் திறத்தா லாயினுங் காணார்
மயனெறித் திறத்தால் மதிஒளி காண்பரே (261)

படைப்பு நுட்பங்களை அயன்நெறியாலும் காண இயலாதவர்கள் மயன் நெறியால் நன்கு உணர்ந்து அறிவுவளம் பெறுவர்.

Those who cannot understand the intricacies of creative process, even through the creative order maintained by Brahma, could evidently understand them through the Mayonic Order and gain abundant knowledge and skill.

செய்முறைத் திறவலி உய்முறை வகுக்கும் (262)

விதிமுறைப்படிச் செய்யும் திறமானது, உரிய பொலிவுடன் வடிவ அமைப்பை வெளிப்பட வைக்கும்.

The efficacy in executing a process in strict accordance with codified rules, would manifest a construct in all its splendour and charm.

பொழுதறி காலம் எழுத்துணர் வித்து
வழுவிலா மதியும் வளமுறும் எண்ணியல்

எழுதலும் குறித்தலும் வரைதலும் தீட்டலும்
செழுநிலை கலையுறத் தெரித்தலும் இயல்பே (263)

காலஞானம் என்பது எழுத்தியல் எண்ணியல் தொடர்பான நுட்பத்தையும், குறியால் குறித்தல், வரைதல் என்பனவற்றுக்குரிய வடிவ நுட்பத்தையும் உணர்த்தும்.

The science of Time is capable of revealing the secrets of letter and number and the subtleties of FORM, effected by the relevant marks and sketches.

எண்ணெண் கலையின் இயலுறுங் கூற்றியல்
திண்மதித் திறத்தால் சீருறத் தெளிந்தோர்
கூறுகூ றியலால் குறித்துறும் நுட்பம்
வேறுவே றியலொலி எழுத்தில் வகுத்தும்
மாறுமா றியலால் சுழல்நிலை தெரித்தும்
ஏறுறும் விண்நிலை மண்நிலை உணர்த்தி
எட்டின் இயலால் இயங்குறும் முயல்நிலை
முட்டின் றுணர்த்தி முறைநெறி வகுக்கும் (264)

64 கலைக்கூறுகளின் ஆற்றலை நன்கு உணர்ந்தவர்களின் கூற்று — எழுத்தியல், சுழல்நிலை, விண்நிலை, மண்நிலை, எட்டின் திறத்தால் இயக்கம் கொள்ளும் முயல்நிலை ஆகியவற்றை முழுமையாகத் தெரிவிக்கும்.

The statements of those who have realised the potencies of 64 square grids would comprehensively reveal the nature of letters, spins of Time, space-field, earth-field and the upward force effected and activised by the octo-pattern.

அறுபான் நான்கியல் மெய்க்கலைக் கூறே
உறுநிலை ஐந்தியல் ஒளிநிலை கூட்டி
ஐந்தைந் தியலா யகப்புற முணர்த்தி
வந்துறும் நெறிமுறை வலமுறச் சுழலல்
காலத் தியல்நெறி விரைவா யுறுநிலை
சீலந் தெரிவோர் எண்ணிலை உணர்வரே (265)

அறுபத்து நான்கு கூறுகளில் பொருந்தும் ஐந்தியல், ஒளிநிலை, அகநிலையையும் புறநிலையையும் உணர்த்தும் 25 இயல், வலச்சுழற்சி, கால இயக்கத்தின் முறை, சீலம் — இவற்றை

உணர்வோர் எட்டின் நிலை தொடர்பான உண்மைகளை உணர்வர்.

Those who understand the fivefold aspect, light energy, 25 aspects indicative of both internal and external structure, the clock-wise gyration, the orderly movement of Time, rhythm — all present within the frame of 64 squares, could know the basic truths related to the eightfold essential state.

உட்கலைத் திறனே மெய்யுணர் விந்து
விட்புலத் தொளிர்ஒளி வியனிலை காட்டும் (266)

உள்வெளியில் வெளிப்படும் வடிவ அமைப்பே, உணர் வொளியைக் கூட்டி, சதுரப்பரப்பையும், அதன் சதுரக் கூறுகளையும் வெளிப்படுத்துகிறது.

It is the causal FORM appearing within one's own inner space that brings into effect the square mandala and its constituent squares, instilling consciousness of luminosity into them.

நொடிநொடிப் பொழுதும் ஐந்தொழில் இயங்கும் (267)

நொடிதோறும் நொடிதோறும் ஐந்தொழில் இயக்கம் உண்டு.

At each and every moment, there is the occurrence of fivefold action.

கண்ணிமை ஊழிக் கலையுணர் காலம் (268)

கண்ணிமை, ஊழி — இரண்டிற்கும் இடைப்பட்டது படைப்புமுறை என்பதால், ஒவ்வொரு படைப்பும் தனக்குரிய இமைக்காலத்தையும் ஊழிக்காலத்தையும் உணர்த்தும்.

The process of creation gets fulfilled between two points of time - the smallest unit of time (imai) and the greatest unit of time (aeon). So each creation, each structure, denotes these two points of time, in respect of its own position.

முற்றுறும் வினைத்திறன் முடிபொரு ளுணர்த்தும் (269)

முற்று நிலையைக் கொடுக்கும் செயல்திறம், உறுதிப் பொருளாகிய முதற்பொருளை உணர்த்தும்.

The dexterity of execution, culminating in perfect finality, is indicative of the idestructible Primordial Substance.

வினைத்திறன் இயல்நிலை தொழிலுணர் நிலையால்
நினைப்புறுந் திறமே நெறிமுறை யாகி
காலக் கூறே கருத்துறத் தோற்றி
கோலமும் குறிப்பும் குறிப்பின் உணர்த்தி
மூலத் தொளிரும் மெய்ந்நிலை கூட்டும்
கால விரைவின் கடிதுறும் ஆக்கம் (270)

செயல்முறை தொடர்பான ஆழ்ந்த சிந்தனை கொண்டு, காலக் கூறுகளைப் பொருத்தமாக இணைத்து மூலத்தின் நிலையை ஒவ்வொரு கோலத்திலும் புலப்படுத்த வேண்டும்.

Having deeply contemplated the efficient process and unified the relevant units of time, the expert in the field of creative Vastu, should reveal the presence of Primal Existence in each and every FORM.

எண்வகை விரிவே விண்விரிவு ஆற்றல் (271)

(ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய) விண்ணினது விரிவும் ஆற்றலும் எட்டாகிய வகையின் விரிவே ஆகும். (எட்டின் விரிவினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதே ஆகும்).

(விண் என்பது வாஸ்து மண்டலத்தின் அடங்கியுள்ள பதத்தைக் குறிக்கும். வாஸ்து மண்டலத்தின் முழுமையான அமைப்பை வெளி என்ற சொல்லாலும், அதில் உள்ள ஒவ்வொரு சதுரத்தையும் விண் என்ற சொல்லாலும் மயன் குறிக்கின்றான்)

The expansion and efficacy of the elemental space is based on the multiples and rhythmic variations of eight (aspects).

நுண்ணறிதின் எண்வகை நுவலற நுவன்றே
திண்மதிச் சீர்நெறி பயனுறத் தெரிந்தே
ஒடுக்கத் திறம்அறி உள்ளுணர் காலை
இடுக்கண் நீங்கி இயல்நிலை தெரிக்கும் (272)

எட்டின் வகை பற்றிய நுணுக்கங்களைக் குறைவில்லாமல் நன்கு பயின்று உணர வேண்டும்; குழப்பத்திற்கு இடம் இல்லாமல் உறுதியாக அறிவுத்திறம் வாய்த்தோர் பயன்கொள்ளும்முறையில் எடுத்துரைக்க வேண்டும். இத்தகைய ஆற்றலானது, தோன்றிய பொருள் தோன்றியவாறே தத்தம் காரணத்தில் ஒடுங்கும் முறைப்பாட்டை உணர வைக்கும். இடர்ப்பாடான சூழ்நிலையைத் தவிர்த்து இயல்பாக அமைகின்ற இன்ப நிலையை அவ்வாற்றல் புலப்படுத்தும்.

One should gain an elaborate and sharp knowledge about the abstruseness of the category of eight in such a way that nothing is left unknown. Then he should gain the certitude of that knowledge through experience so that the knowledge thus gained becomes fruitful and effective. He should understand the process in which all the evolved objects are gradually absorbed into their casual factors.

This understanding would make him know the unperturbed and rhythmic movement of the universe.

ஒழிவில் ஒடுக்கம் பழுதறத் தெரிந்தே
விழுமிகு பொருள்உணர் திறனறி கூற்றால்
பொருள்அறி மூலம் பயனுறத் தெரித்தே
தெருளுணர் கலைநெறி எண்நிலை கழறி
விழுப்பொருள் செம்பொருள் கலைநெறி பயக்கும் (273)

இது தகுதியானது என்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் அறுபத்துநான்கு கலைக்கூறுகள் ஒன்றுபட்டு அமையும் நிலையைக் குற்றமற உணரவேண்டும். சிறப்புமிகும் பொருளை உணர்த்துகின்ற ஆற்றல் பொருந்திய கூறுகளால் (சதுர அமைப்புகளால்), பொருளை அறியச் செய்யும் மூலத்தைப் பற்றிப் பல்லோரும் பயன்பெறும் வகையில் ஆய்ந்து அறிய வேண்டும்; தெளிவாக உணரப்படும் கலைகளின் இயக்க முறையில் 8-இன் நிலையைப்பற்றி விளக்க வேண்டும். செம்பொருளைப் பற்றிய கலைநெறியானது பிரபஞ்ச நிலையக் கண்கூடாக்க காணும் வகையில் வெளிப்படுத்திக் காட்டும்.

The creative process concerned with the immutable primal existence enables the architect to know accurately

the orderly formation of 64 squares on the select ground; it makes him know fully about the primal vastu which expresses itself beneficially through the squares which are efficacious in revealing the significant structure of the universe; and it would explain clearly the nature of eight as the basic cause for the expression of objects and would manifest them in a visible form.

காலச் சுழலுறும் தென்திசை நிலையே
கால மூலம் தென்நிலை கண்டே
எண்ணெண் கலைஇயல் வலமிடச் சூழலை
திண்ணறிவு உணர்த்தும் மெய்க்கலை நுட்பம் (274)

நிலையான கலைநுட்பமானது காலம் சுழற்சி கொள்ளும் தென்திசை நிலையையும், காலத்தினது மூலத்தின் அடிப்படை நிலையையும் உணரவைக்கும் ; அறுபத்து நான்கு சதுரக் கூறுகளில் அது வலமிடமாகச் சுழலும் சுழற்சியை நம் அறிவு கொள்ளுமாறு உறுதிபட உணர்த்தும்.

The subtlety of existential aspect would enable one to know the intrinsic nature of the direction SOUTH in which the Time takes gyrations, to know the pleasing and expressing aspect of the undivided Time and unfold firmly the clock-wise gyration taking place over the squares which are 64 in number.

எண்நெறி நுணுக்கம் எண்கலை இயக்கம்
நுண்நெறித் திறனுற நுவலுறுத் தெரித்தே
திண்நெறிக் கலைத்திறம் ஐந்திறத் துண்மை
எண்எழுத்து இயலல் அறுபான் நான்கே (275)

எட்டு எனப்படும் எண்ணானது நெறியின் நுணுக்கம், அதன் இயக்கம் - இவற்றை நுட்பமான நெறிமுறையில் திறம்படவும் விளக்கமாகவும் ஆய்ந்துணரச் செய்து, கலைத் திறன்களை உள்ளடக்கியுள்ள ஐந்திறத்து உண்மைகளை அறுபத்து நான்கு சதுரக்கூறுகளைப் பற்றிய அறிவியல் பூர்வமான ஆராய்ச்சியானது எண்ணாலும் எழுத்தாலும் புலப்படுத்தும்.

The science of 64 squares would reveal elaborately and acurately through numbers and letters the subtle

aspects of the number 8 and its moving pattern and the concepts about the fivefold aspect which contains with in itself the creative efficacy - the efficacy which reveals itself in a firm and unfailing way.

நாற்புறத்து இயல்நெறி சுழலலும் ஐந்தே
ஆற்றுறும் ஆற்றலால் இயங்குறும் இயக்கம்
தோற்றுறும் வலித்திறத்து இயலுறும் முயக்கம்
ஏற்றுறும் எட்டின் பிறழ்நிலை ஆடலான்
தேற்ற மாய்ஒளிர் நிலைகலை நுட்பம்
வீற்றுறும் திறனே ஊன்றுறும் திட்பம்
சுழலல் வீசல் திறன்உறும் நெறியாய்
ஆடலான் நெறிநிலை அறிகலை உணர்வே (276)

நாற்புறமாகிய சதுர எல்லையின் மையத்தில் மூல விசை சுழலும்;அச்சுழற்சியால் ஐந்தொழில் செய்யும் ஆற்றலோடு பொருந்திய இயக்கம் ஏற்படும். இயக்கத்திற்கு அடுத்த நிலை முயக்கம் என்பது. இது ஆகாசம் முதலான ஐம்பெரும் பூதங்களைத் தோற்றுவிக்கும் வன்மை உடையது. இம் முயக்கத்தின் மேல் பொருந்துவதே எட்டின் பிறழ்நிலை. (பிறழ்தல் - அதிகரித்தல்; மாறுபட்டு அமைதல்) ஆடவல்லானின் தெளிவான கலைநுட்பம் எட்டின் பிறழ்நிலையால் ஒளிர்வதே. கலைநுட்பம், வீறுபெற அமையும் ஆற்றல், முயக்கத்தைக் கட்டுபடுத்தும் முறையில் ஊன்றி நிற்கும் நிலையில் உள்ள உறுதிப்பாடு, சுழலும் நிலை, வீசும் நிலை (ஆடவல்லானின் வீசுகரம்) — இவை அனைத்தும் பொருந்தி அமைவதாக ஆடவல்லானின் நெறியை உணர்வதே, அனைத்தையும் அறிய வல்ல கலை உணர்வாகும்.

(மயன் கூறும் முயக்கம் என்பது, ஆடவல்லானின் வலது பாதத்தால் அழுத்தப்படும் முயலகனையே குறிக்கும். முயலகம் என்பது அகத்தின், உள்ளத்தின் மேல்நோக்கு எழுச்சி. மயன் கண்ட விஞ்ஞானக் கடவுளே ஆடவல்லான் முயலகனை, அசுரனாகவும் அவனை ஆடவல்லான் அழுத்தி மிதிப்பதாகவும் கூறுவது புராணம். இதன் உட்பொருளை மயன்நெறி, அடிப்படையில் விளங்கிக்கொள்ள வேண்டும்).

As soon as the Primal Force takes its gyration at the centre of the *mandala*, a manifestation capable of effecting the fivefold action occurs. Only that kind of knowledge is held to be supreme and peerless which makes the architect realise

- the upward exertion of the *Vastu* capable of evolving the gross elements.
- the rhythmic dance of the Cosmic Dancer, the dance which is performed upon the plane of (upward) exertion and based on the rhythmic variations of the category eight.
- the subtlety of the dance
- the nature of unassailable force of the dance,
- the steadiness of the (downward) pressure upon the (upward) exertion
- the nature of gyration

and - the nature of oscilating aspect.

முயக்கமும் இயக்கமும் முயங்கலும் உணர்ந்தோர்
இயக்கும் ஐந்தொழில் நுட்பமாய் அறிவர் (277)

மேலே எழும் சக்தியாகிய முயக்கம், மூலத்தின் சுழற்சி, இவ்விரண்டாலும் ஏற்படும் வாஸ்துவின் இயக்கம் — ஆகிய இவற்றை உணர்ந்தவர்கள், மூலத்தின் சுழற்சியால் ஏற்படும் ஐந்தொழில்களையும் அறியவல்லவர்கள் ஆவர்.

Those persons who have realised the upward exertion and the movement of the primal existence and the movement of the *Vastu* could evidently know the five functions behind the movement of the primal existence.

எண்ணெண் கலைநெறி விண்நெறி அறிந்தோர்
நுண்ணுறும் ஐந்தொழில் நுணுக்கம் ஆய்வரே (278)

அறுபத்து நான்கு சதுரக் கூறுகளின் நெறிமுறையால் விண்ணின் நெறியை (தோற்றத்திற்கு இடம் கொடுக்கும் முறையை) அறிந்தவர்கள் நுணுக்கமாகவும், பல்வகை உட்பிரிவுகளுடனும் நிகழும் ஐந்தொழில்களைப் பற்றிய நுண்மையான கருத்தை ஆராய வல்லவராவர்.

Those architects who have realised the nature of elemental space through the creative pattern of 64 squares could analyse the ingenious nature of the five functions performed in a subtle way.

ஐந்தொழில் நுட்பம் எண்ணெண் கலையாய்
ஐந்தியல் மொழியால் நெறிமுறை அமைத்து
ஐயைந்து இயலாய் அறுபான் நான்கின்
உய்வுறக் காணும் உயிரொளிக் கலையே (279)

ஐந்தொழில்களைப் பற்றிய நுட்பம் அறுபத்துநான்கு சதுரக் கூறுகளைப் பற்றியதாகவும், ஐந்து மூல ஒலிகளால் நெறிமுறைப்படி இயற்றப்படும் இருபத்தைந்து இயல்களாகவும் அமைவதே. உயிர்க்கும் (மூச்சுவிடும்) மூல ஒளிக்கலை அறுபத்துநான்கு சதுரக் கூறுகளாலும் மங்களகரமான சிறப்புநிலை உருவாகும் படிச் செய்யும்.

The subtlety about the five functions is concerned with 64 squares of the *Vastu mandala*. The five functions performed in an orderly way through the efficacy of the five primal sounds are distinguished into 25 aspects. The subtlety of the five sounds and of five functions is indeed an aspect of the *Breathing Light* which gives rise to the auspicious and supra-mundane state through the formation of 64 squares.

உந்துறும் உணர்வொளி ஒளிக்கலை உணர்த்தி
முந்துறும் விண்ணொளிச் செந்தமிழ் ஓம்ஒலி
வந்துறும் ஓம்ஒளி வகைபெறக் கண்டோர்
உந்தல் உந்திச் சுழிநிறை ஆய்ந்தே
தந்துறும் அகவெளி அகவிண் ஆய்ந்தே
முந்துசெந் தமிழொலி பிறப்பியல் ஆய்ந்துணர்
கலைநெறித் தமிழ்ஒலி உமிழ்ஒலி ஓசை
நிலைநெறி இயல்கலை விண்ஒளி ஆற்றல்
ஒளிமொழித் தமிழ்என ஓங்குபு நோக்கி
வெளிநிலைச் சிற்றவை எண்கலை ஆயலே (280)

உந்தி எழும் உணர்வொளியையும் (அனுபவபூர்வமான ஞானத்தையும்) ஒளியின் கலைநிலையையும் உணர்த்தி, அனைத்திற்கும் முந்தித் தோன்றும் பூதாகாச ஒளிநிலையில் எழும் ஓம் ஒலியையும் ஓம் ஒளியையும் வகைப்படுத்தி அறிந்தவர்கள், உந்துதலுக்கு உட்பட்டு எழும் ஒலிநிலையையும், அது எழுதற்கு இடமாகிய நாபிக் கமல நிலையையும் ஆராய்ந்து, உள்வெளி, அக விண் ஆகிய இவற்றையும் ஆய்ந்து,

— முந்தி எழும் மூல ஒலி, ஓசைப் பிறப்பினைப் புலப்படுத்தும் மூல ஒலியின் கலைநெறி, பொருளை வெளிப்படுத்துவதாகிய ஒலி (உமிழ்தல் – வெளிப்படுத்தல்), ஓசை நிலைபெற்று உள்ள நெறியாகிய இயக்க சக்தி, விண் ஒளியின் ஆற்றல் ஆகிய இவை அனைத்தும் ஒளி மூலத்தின் வெளிப்பாடுதான் என யோக நெறியால் உயர்ந்து சென்று உணர்ந்து,

— மூலவெளி நிலையாகிய சிற்றவையையும் அதற்குரிய எண் (8) கலையையும் ஆய்ந்துணர வேண்டும்.

There are eminent persons who have knowledge about various aspects of the intrinsic nature of light source, of the truths about the effulgence of the elemental space and of *OM*-sound and *OM*-light. They should analyse the nature of forward thrust and of the force at the navel region, and analyse the nature of inner space and mind. They should analyse the nature of the evolution of sound concerned with the external manifestation of the inner blissful experience and the process of articulation of that sound, and analyse the nature of external objects and the nature of the luminaries of the space. Having analysed in this way, they should understand that these are all the expressions of the effulgent sound source. Having thus understood, they should analyse the eightfold pattern of the primal space in the form of microbode. It is indeed this analysis that becomes the experiential knowledge which enkindles the soul.

சிற்றவை அமைப்பியல் எழுத்தியல் காண்டலும்
உற்ற மூவினம் ஒருங்குற நோக்கலும்
தெற்ற வைந்தெழுத்தும் உயிர்க்கலை எழுத்தும்
முந்துறும் மெய்யுயிர் கலைநிறை எழுத்தும்
எண்ணுற் றெண்ணி எழுத்துற ஆய்ந்தே
திண்ணுறும் சீர்ச்செயல் அண்ணித் தியலால்
எண்ணெழுத் தியற்கலை அறுபான் நான்கில்
விண்ணொளித் தமிழால் வெளியுற முயங்கலும்
ஓம்ஒலி ஓம்ஒளி முதல்நிலைத் தமிழாய்
ஓமுற அமையும் இயல்பிற் றன்றே (281)

சிற்றவையின் அமைப்பில் முறையே எழுத்துக்களின் அமைப்பியலைக் காணவேண்டும். அவ்வாறு அமையும் எழுத்துக்களின் மூவினத்தையும் நோக்க வேண்டும் (ஆண்வகை எழுத்து; பெண்வகை எழுத்து; அலிவகை எழுத்து). ஐந்தெழுத்து, உயிர்க்லை எழுத்து, உயிர்க்கலை நிறைந்து பொங்கும் மெய்யெழுத்து – இவற்றை எண்ணியலோடு நன்கு சிந்தித்து, எழுத்தியலோடு பொருந்திய ஆற்றல் சிற்றவையில் பொருந்துமாறு செய்ய வேண்டும். அறுபத்துநான்கு சதுரங்களிலும் இவ்வாறு எண்கலையும் எழுத்துக்கலையும் பேரவைக்கு ஏற்ற வகையில் உள்ளார்ந்த ஒளி அனுபவத்தால் பொருத்திவைக்க வேண்டும். இவ்வாறு காண்பதும், நோக்குவதும், பொருத்துவதும் ஒலித்திறனும் ஒளித்திறனும் ஒருங்குறப்பெற்ற ஓம் எழுத்தின் அம்சங்களாக விளங்கும் இயல்புடையவை ஆகும்.

Within the frame of microbode, the architect should identify the alphabets according to the prescribed manner. He should take into consideration the threefold division of the letters (i.e. the division as masculine, femenine and neuter). He should deeply think about the nature of the five primal letters, vowels associated with animating force, consonants filled with the force of the vowels, and the nature of the number pattern. He should impute all these potentials into the field of microbode. Through his own blissful experience of the Inner light he should identify the associated force, numbers and letters with 64 squares of the microbode so as to be in similarity with the macrobode. All these activities are concerned with the aspects of *OM* associated with sound and light.

எண்நிலை எண்கலை இயல்நெறித் திறனாய்
எண்மொழி இயற்கலை தெள்ளிதின் உணர்ந்தே
விண்நெறி விளக்குபு மெய்க்கலை உணர்வால்
நுண்ணிதின் உணரும் அறிமதி வலியால்
காலச் சுழலைக் கருத்தறிந்து உணர்ந்தே
மூலப் பொருள்நெறி முழுதியல் தெரிந்தே
அறுபான் நான்குறும் அரும்பொருள் நோக்கி
உறுகலை நெறித்திறன் உற்றிவண் ஓர்ந்து
பெறுநிலை எண்நிலை பிறழ்நிலை நோக்கி
உறுமதி ஆற்றலால் உள்ளூற்று உணர்ந்தே

உள்ளூறும் விண்ணொளி புறவிண் ணொளியும்
விண்ணுறும் விழிக்கலை நோக்குற் றிலங்கி
ஐந்தும்ஐந்து இயலுறும் அருங்கலை நுட்பம்
முந்துறும் விண்நெறி நவையற நோக்குழிக்
காலத் தியல்தரு கோலமும் சீலமும்
மூல முற்றியல் முழுப்பொருள் தோற்றி
எண்ணெழுத் தியல்தரும் நறும்பொருள் ஓர்ந்தே
நண்ணுறும் ஐந்தொழில் நிலைக்கலை ஆயல்
ஒளியாய் உயிராய் உணர்வாய்க் காண்போர்
தெளிவுறும் ஐந்திறச் சீர்நெறித் திறமே (282)

எட்டின் நிலையும் எட்டின் கலையும் இயல்பான நெறித்திறனாக அமைய எண்வகைப்பட்ட அமைப்புகளுக்கு உரிய கலைகளைத் தெளிவாக உணர்ந்து கொண்டு; விண்ணின் (சதுரக்கூற்றின்) நிலையை விளக்கவல்ல கலை உணர்வாலும், கூர்மையான அறிவுத்திறத்தாலும் காலத்தின் சுழற்சியை நன்கு சிந்தித்துஉணர்ந்து; மூலப்பொருளின் மாறா இயல்புகள் அனைத்தையும் ஆராய்ந்து கண்டு, (அதாவது, நிஷ்கள நிலையைக் கண்டு); அறுபத்துநான்கு கூறுகளிலும் பிரிந்து அமையும் மூலப்பொருளின் சகுண நிலையையும் கண்டு; எட்டின் நிலையும் கலைகளும் முறைப்படி அவைகளில் பிறழ்ந்து அமையும் நிலையையும் உணர்ந்து; அகவிண்ணொளி, புறவிண்ணொளி ஆகிய இரண்டையும் காணவல்ல அகக்கண்நிலை, புறக்கண்நிலை இரண்டும் வாய்க்கப்பெற்று; இருபத்தைந்து அம்சங்களாகப் பிரிந்து அமையும் நுட்பமே எட்டின் கலை ஆற்றல் எனக்கண்டு; ஞாலத்தின் உறுதியான நெறி, காலம், கோலம், சீலம், மூலம் – ஆகியவற்றின் அடிப்படை அமைப்பினை உள்ளவாறு உணர்ந்து; எண்ணாலும் எழுத்தாலும் பெறுப்படும் உறுதிப்பொருளை அராய்ந்துணர்ந்து, – இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஐந்தொழிற்கலையின் உண்மையை ஆராய்வதே, ஞாலத் தோற்றங்களை ஒளியாகவும் உயிராகவும் உணர்வாகவும் காணவல்ல கலைஞர்களின் தெளிந்த ஐந்திற நெறித்திறமாகும்.

Based on the natural order of the structure of number 8 and its associated aspects, there evolves an eightfold formation. The architect should know the intrinsic energies of these eight formations. He should deeply think about the cycles of Time which could be realised only through one's own experiential knowledge of creative process and

sharpness of intellect. This experiential knowledge is capable of revealing the nature of elemental space and the primal space. And the sharpness of knowledge is capable of revealing the subtleties of creation. He should analyse and understand completely the nature of the primal existence as it is and the nature of the primal existence as it gets distributed over 64 squares. He should understand the variable formations of number pattern and energy pattern distributed over the same field. He should accurately know the effulgent structure of the internal and external space, through his mind and eye respectively. He should realise that the variegated structure of 25 forms is nothing but the eightfold energy.

He should understand the basic structure of the universe, Time, creation, Rhythm and the Primal Existence. He should know the nature of the eternal substance which could be gained through the number-pattern and the letter-pattern. He should analyse the motive behind the five functions performed by the Primal one.

This is the fivefold way in its clarity followed by the eminent persons who recognise everything as luminous, animated and energised.

காலமும் இடமும் கண்ணெறி தேற்றம்
மூலப் புள்ளி முன்னெறி கூட்டி
சீலம் விளக்கும் கோலம் கிளக்குபு
ஞாலத் தியல்நெறி நன்னிலை யறிதலே (283)

மூலப்புள்ளியை முன்னிறுத்தி அதன் பின்னணியில் காலம், இடம் என்பனவற்றின் இயல்பை அறிவுக்கண்ணால் தெளிவாகக் கண்டு, சீலம், கோலம் என்பனவற்றை விளக்குவதன் மூலம் ஞாலத்தின் இயற்கையான நெறியை அறிவதே, மங்களகரமான நிலையை அறியும் நெறியாகும்.

Against the background of the primal point (i.e. the central point of the *vastu mandala*), the architect should know the nature of Time and Space (Limited). Then he should proceed to explain about the universe, Rhythm

and creations. To know the nature of the universe in this manner is to know the auspicious and transcendental state.

உள்ளுவ உள்ளி உணர்வால் தெரிந்தே
தெள்ளுநற் றமிழின் ஐந்திறச் சீரே (284)

சிந்திக்கும் முறைப்படி சிந்தித்து, அனுபவத்தால் உணர்ந்து பின்னர் வெளிப்படுத்துவதே, தெளிந்த தமிழின் ஐந்திறங்களான சிறப்பாகும்.

(குறிப்பு: இங்கே தமிழ் என்பது மொழியைக் குறித்தன்று. உருவத்தைப் படைப்பதற்கு முன் சிற்பக்கலைஞனின் உள்ளார்ந்த உருவ அனுபவ முதிர்ச்சி, உணர்வாய்த் திரண்டு வெளிப்படும் நிலையையே, மயன் தமிழ் என்ற சொல்லால் குறிப்பிடுகிறான், சீர் என்பதும் செய்யுளுக்குரிய நால்வகைச் சீர்களைக் குறிக்காது. வனப்பு முதலான ஐவகைச் சிறப்புகளையே குறிக்கும்)

Having contemplated the basic structures in the prescribed method and having realised their nature intuitionally, the architect should give expression to his own experiential knowledge. This is the significant nature of the fivefold aspect belonging to the manifestation of one's own blissful substratum.

ஒளிதரும் உணர்வே கலைநெறித் தேற்றம் (285)

மூல ஒளியால் ஏற்படும் உள்ளார்ந்த அனுபவமே கலைநெறியைப் பற்றிய தெளிவான அறிவுநிலை ஆகும்.

The clear and pure knowledge about creative process is nothing but the intuitional knowledge which occurs due to the efficacy of the primal light source.

மாநெறி நுட்பம் மயக்கறக் கண்டே
தா நெறித் திட்பமும் துலங்க உணர்ந்தே
எண்கலைக் பெருக்கம் நுண்கலை உணர்த்த
விண்கலை இயல்வெளி ஒளிஒலி தெரித்தே
எண்ணெண் நாற்புறத்து இயல்வெளி யூடும்
நுண்ணரும் திறனுற நுணுக்குறத் தேர்ந்தே
ஐந்துமைந்து இயலாய் இயங்குறும் மெய்த்திறன்

முந்துற்று உணர்செறி முழுமதிச் செழுங்கலை
ஐந்தியல் பொருளியல் அருங்கலை ஆக்கம்
ஐந்திறத்து இயல்நெறி நூலுணர் நெறியே (286)

வாஸ்து நெறியின் நுட்பத்தை, குறிப்பிட்ட ஒரு நூலின் அடிப்படையிலேயே (நூற்கலப்புக் குற்றம் எனப்படும் ஸங்க்ரம தோஷம் இல்லாமல்) தெளிவாக உணர்ந்து, தூய பெருவெளித் திட்பத்தை (வாஸ்து மண்டல முழு அமைப்பை) நன்கு உணர்ந்து, எட்டின் கலைப்பொருக்கம் உணர்த்திக் காட்டும் நுண்மையின் அடிப்படையில் விண், வெளி, ஒளி, ஒலி – இவற்றை ஆராய்ந்து அறுபத்து நான்கு சதுரக் கூறுகள் அமைந்த மண்டலத்தின் நாற்புறங்களிலும் நுண்ணிய நிலையில் பொருந்தும் மூல சக்தியை நுண்மையாக உணர்ந்து கண்டு, இருபத்தைந்து அம்சங்களாக அமையும் மெய்த்திறத்தை உணரவல்ல முழுமையான அறிவுத் திறத்தாலும், ஐந்திற முறைகளாலும் ஐந்தியலையும் பொருள் இயலையும் கலை இயலையும் எடுத்துரைப்பதே நூல் உணர்த்தும் முறையாகும்.

The architect should know the subtlety of the *Vastu-process* without any bewilderment. He should clearly understand the immutable nature of the pure macrocosmic space. He should analyse the nature of elemental space, primal space, light and sound in order to expound the subtle nature of the eightfold variations of forms. He should evidently realise the abstruse force manifesting around the four sides of the *mandala* consisting of 64 squares. By these understanding and realisation, he would gain perfect knowledge which makes him realise the real efficacy of the central point (of the *mandala*) which assumes 25 forms. The method set forth in the scriptures is to reveal the nature of fivefold aspect, pure substance and objects through the perfect knowledge thus gained.

மொழிஇயல் கலைநெறி முறைமையின் முன்னி
எழுதரும் இயலால் அறிவியல் எண்இயல்
ஒளிஒலி வடிவுரு நிலைதெளித்து இயலாய்க்
களிநிலை வகுக்கும் ஐந்திறத்து இயலே (287).

மொழி இயலில் பொருந்தியுள்ள கலைகளை முறைப்படிச் சிந்தித்து, அக் கலைகளினின்று எழும் தன்மையால் (இயலால்)

அறிவின் இயல், எண் இயல், ஒளி, ஒலி வடிவம், நிறம், நிலை (ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதன் இருப்பு) ஆகிய இவற்றைப் புலப்படுத்திச் சிற்பக் கலைஞன் ஐந்திறத்து இயலால் இன்பகரமான நிலையை அனைத்துயிர்க்கும் வகைப்படுத்தி வழங்குவான்.

The architect should consider in a proper method and understand the associated energies of the alphabets and their nature. The celebrated five aspects would reveal systematically the nature of intutional knowledge, of numbers, light, sound, form, colour and the state of existence in a particular place and would finally reveal the blissful state (to be attained by all the living beings).

கலைமொழிப் பொருளே நிலைமொழி மரபில்
தலைமொழிச் சிறப்பில் தான்உறும் என்ப (288)

கலைகளோடு கூடிய மொழியின் பொருளே நிலைத்த மொழிமரபில் முதலில் சொல்லக் கூடிய தலைமொழி என்னும் சிறப்பு நிலையில் பொருந்தும்.

(வட மொழியில் பீஜாட்சரம் என்பதையே, மயன் தலைமொழி என்று குறிப்பிடுகின்றான்)

Only the content of a word associated with energising aspects *(kalas)* and according to the unchanging tradition of the language, attains the status of the primal word to be uttered first.

கால நுணுக்கம் கருதரும் தேற்றம்
சீலத் தியல்நெறி கலையுணர் வோங்கி
எண்முறைக் கலையின் இனிதுறும் ஆய்வால்
விண்ணெறி ஆற்றல் வியப்புறும் துணிவே
மூலம் காண்டல் முன்னிய முன்னி
ஞாலத்து இயல்நெறி நவில்வதும் மரபே (289)

கால நுணுக்கத்தைப் பற்றிய தெளிவு நிலையும், சீலத்தின் இயல்பை அறியும் கலையுணர்வும் ஓங்கப்பெற்று எட்டின் இயலைப்பற்றி ஆராய்வதால், விண்ணின் ஆற்றலைப் பற்றிய தெளிவான முடிவுகள் புலனாகும். இந்த முடிவுகளின்

அடிப்படையில மூலப்பொருளைக் காண்பதும், முறைப்படி சிந்தித்து ஞாலத்தின் இயற்கையான நெறிமுறையை எடுத்துரைப்பதும் மரபுவழிப்பட்ட செயலாகும்.

The architect should gain supreme knowledge about the subtleties of Time and attain aesthetic experience and the knowledge of Rhythm. He should analyse the nature of number-pattern and gain an established concept about the efficacy of the space. Based upon these experiences, he should know about the Primal Existence and explain the nature of the manifested universe. This is the process adopted by the uninterrupted tradition.

கலைநெறி இயலின் கருத்துறும் ஆற்றல்
நிலைநெறி அறுபான் நான்கின் நெறியே (290)

எழுத்துக்களோடும் எண்களோடும் பொருந்தியுள்ள கலைகளின் நெறியில் பொருந்தியுள்ள ஆற்றலே, நிலையாகப் பொருந்திய 64 சதுரக் கூறுகளில் அடங்கியுள்ள வெளிப்பாட்டு முறையாகும்.

The efficacy of the energising force (*kalas*) associated with alphabets and number is the basic cause for the process of manifestation contained in 64 squares of the *vastu mandala*.

எண்நிலை எண்நெறி விண்நிலை மூலம்
எண்ணுள ஆற்றல் எழுங்கலை தருமே (291)

எட்டின் நிலையும் எட்டின் நெறியும் விண்நிலையின் மூலமாகும். எண்ணில் அடங்கியுள்ள ஆற்றற்கலையே, மலர்ந்து எழும் கலைகளை (உலக நன்மையின் பொருட்டு) வெளிப்படுத்தும்.

The basis for understanding the nature of space (i.e. mandala) is the nature and state of number eight and its process of variation. The efficacy contained in the number would manifest the varied artistic forms which are in the state of readiness to evolve.

எழுங்கலை உணர்வொளி எண்கலை தருமே (292)

(உலக நன்மையின் பொருட்டு) மலர்ந்து எழுந்துள்ள கலைகளைப் பற்றிய உணர்வும் அறிவும் எண்ணைப் பற்றிய கலை ஆற்றலின் மறைபொருளைப் புலப்படுத்தும்.

The experience and knowledge about the varied artistic forms thus evolved would reveal the secret of the energising factor (*kala*), associated with numbers.

எண்கலை நுட்பம் இயல்புறத் தெரிந்தே
நுண்கலை மூலம் எண்ணெண் இயல்அறி
நுணுக்கம் தேர்ந்தே நாற்புறத்து இயலுறும்
அணுக்கத் தாற்றல் நடுவண் தோன்றும்
ஐந்தாய் இயலும் சுழல்விரைவு ஆற்றல்
ஐயைந் தைந்தாய் வலம்இடத்து உறுமே
கால விரைவின் கடிதுறு நோக்கம்
மூலப் புள்ளி இயல்நிலை மாறாது
ஏற்றமும் தோற்றமும் ஏற்றுறும் ஆற்றல்
காற்றுநீர் நிலம்தீ வானுறும் ஐந்தாய்
எண்நிலை வையம் நவையறக் கண்டே
புறத்துறும் ஞாலம் பொருந்த நோக்குபு
திறத்துறும் செழுமை எழுத்தியல் ஆய்ந்தே
அறுபான் நான்கும் எழுத்துறும் தன்மை
உறுபுறம் எண்நிலை உயர்அறி வுற்றே
திருந்த நோக்குபு சீருறும் விளக்கம்
பொருந்தக் கண்டுழி புலமுறும் ஆற்றலே (293)

எட்டின் கலை நுட்பத்தை உள்ளவாறு உணரவேண்டும், நுண்ணிய கலையோடு திகழும் மூலத்தின் காரணமாக அமையும் 64 இயல்களையும் நுணுக்கமாக ஆராய வேண்டும்.

வாஸ்து மண்டலத்தின் நாற்புறங்களிலும் அணுக்கள் திரண்டு அமையும் அமைப்பின் ஆற்றலே, நடுவிடமாகிய நிஷ்கள பதத்தில் தோன்றுகிறது என உணரவேண்டும்.

மூலத்தின் சுழற்சியில் உள்ள விரைவாற்றலே ஐந்து விளைவுகளைக் கொடுப்பதாக விளங்கும்; அதுவே வலம் – இடமாக ஐந்து ஐந்தாகப் பிரிந்து அமையும்.

காலத்தின் விரைவான இயக்கத்தின் நோக்கம், மூலப் புள்ளியின் இயல்பான நிலைக்கு மாறாகாமல் அமையும். அவ்விரைவின் ஏற்றம், அதனால் ஏற்படும் தோற்றம், தோற்றத்தில்

பொருந்தும் ஆற்றல் - இவையே வானம், காற்று முதலான ஐம்பெரும் பூதங்களின் குணங்களாகவும் வெளிப்படும். இவ்வுண்மையின் அடிப்படையில் எட்டின் மூல ஆற்றலை உறுதியாக அறிய வேண்டும். நுண்ணிய நிலையில் பிண்டத்தே பொருந்தியுள்ள பிரபஞ்ச நிலையைக் குற்றமறக் கண்டு, புறத்தே காணப்படும் பிரபஞ்ச நிலை அதற்கேற்பப் பொருந்தி அமைந்திருப்பதை நுணுக்கமாக்க காண வேண்டும். பல்வகைத் திறங்களை உள்ளடக்கியுள்ள செழுமை வாய்ந்த எழுத்தியலை அறிந்து, 64 சதுரக் கூறுகளிலும் எழுத்து அகமாகவும் எண் புறமாகவும் அமையும் நிலையைச் சிறப்பாக அறிய வேண்டும். இவ்வாறு சீருற அறிவதால் பெறப்படும் விளக்கமானது, பேராற்றலை அனுபவத்தில் உணர்த்துவதாகவே (வெளிப் படுத்துவதாகவே) விளங்கும்.

(குறிப்பு: நுண்நிலை *வையம்* நவையறக் கண்டு என்பதில் *வையம்* எனும் சொல், தேரினைக் குறிப்பதாகவும் கொள்ளலாம், அகப் பிரபஞ்சம், புறப்பிரபஞ்சம் இரண்டுமே தேரின் அமைப்பை ஒத்து விளங்குபவை ஆகும்)

The architect should realise exactly the abstruseness of the energy of number 8. He should grasp the subtle aspect which makes him know the sixty-four aspects of the primal existence. He should understand that a primal force emerges from the central point of the *mandala* owing to the convergence of atoms taking lace in an orderly way along the four sides of the *mandala*. He should be able to know that the gyration of the primal force gives rise to five effects. He should understand that the five effects, distributing themselves over the square plane from right to left (i.e. in clock-wise direction) become differentiated into 25 aspects. He should also know that the motive behind the speedy flux of Time is in accordance with the nature of the central point of the *mandala* at which the primal force emerges.

He should understand that only the attributes of the gross elements – space, air , fire, water and earth – are given expression in terms of the gradual increase in the flux of Time creations (forms) brought about through Time and the Energy associated with these creations (forms).

Having firmly known the basic state of number eight and having clearly realised the subtle existential state of the universe with in one's own body, he should see the universe, which is externally visible according to the microcosmic structure.

He should know the powerful nature of the letters which contain in themselves varied energies.

He should know systematically and in a significant way, how the letters and numbers are identified with the interior and exterior planes of 64 squares respectively.

He could experientially realise the immense force of the primal existence when he analyses all the significant intricacies of the square *mandala*.

எண்நிலை எண்இயல் இயல்நிலை ஓர்ந்தே
எண்முக ஈர்ப்பியல் எளிதுறக் கண்டே
விண்ணகத்து இயல்கலை வெளியிடைத் தோன்ற
உள்ளகத்து உறுநெறி உவப்புறத் தெரிந்தே
உள்ளுறும் எண்முகத்து ஈர்ப்பியல் நுணுகி
விள்ளுறும் நுணுக்கம் விளம்பற் பாற்றே (294)

எட்டின் நிலை, எட்டின் இயல் — இவற்றின் இயல்பான அமைப்பினை ஓர்ந்து, எட்டுப் பக்கங்களிலும் (திசைளிலும்) அமைந்துள்ள ஈர்ப்பு விசையை நன்குணர வேண்டும். மண்டுக பதத்தின் கலைநிலை வெளிப்புறத்தே நன்கு புலப்பட, அப்பதத்தின் உட்புறத்தில் அமைக்கப்படும் நிலைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். மண்டுக பதத்தின் உள்ளேயும் எண்முக ஈர்ப்பு விசையை நுணுக்கமாகக் கண்டுணர வேண்டும். அந்த ஈர்ப்பு விசையால் புலப்படும் நுணுக்கங்கள், — *சீரிய* கோட்பாடுகள் - நன்முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

Having systematically analysed the inherent nature of the existential and evolving patterns of the number 8, the architect should realise the force of attraction (pull) functioning in all the eight directions. He should know the force to be imputed internally into the squares of the *vastu mandala* according to the manner prescribed in the scriptures. And he should impute them in such a way

that the forces become visible through concrete forms over the *mandala*.

He should also evidently know the force of attraction (pull) of the eight directions functioning even in the interior of the *mandala*.

The abstruse findings about the eightfold force of attraction are to be revealed explicitly.

உட்கலை எண்நிலை எண்கலை சுழலல்
நுட்பம் நுண்ணிதின் நன்குறத் தேர்ந்தே
திட்பச் சீர்செறி ஐந்தியல் ஆக்கம்
எட்டே நிலையுறும் விரைவுறும் சுழற்சி
வளைநெறி யாக்குறி வந்துறும் திறன்நிலை
திளைத்துறும் காலம் சீர்குறிக் கும்மே. (295)

மண்டுக பதத்தினுள் பொருந்தும் எட்டின் நிலை, எட்டின் கலை — இவற்றின் சுழற்சியில் உள்ள நுட்பத்தை நுணுக்கமாகத் தேர்ந்துணர்ந்து, உறுதிநிலை வாய்ந்த ஐந்தியலின் ஆக்கம் எட்டின் கலை அடிப்படையிலேயே அமைகிறது என உணரவேண்டும். மூலத்தின் விரைவான சுழற்சி, வலம்புரிச் சங்கின் நெறியாக அமைய (வலமிடமாக அமைய), அச்சுழற்சியானது, கோலம், கோலம் பொருந்தும் திறத்தின் நிலை, கோலம் உருவாவதற்குரிய காலத்தின் சிறப்பு ஆகிய இவைகளின் நேர்த்தியைக் குறிப்பாகப் புலப்படுத்துவதாக விளங்கும்.

Having understood the abstruseness of the gyration of existence and energy of the octo-pattern which exactly fits within the frame of the *mandala*, the architect should know that the firmness of fivefold effect is due to the octo-progression. The speedy gyration of the central point of the *mandala* is in the pattern of conch with clock-wise spiral curves. (i.e. revolving is from right to left). Owing to this gyration, a particular form evolves. The nature and state of this form indicates the efficacy of the Time factor which is the real cause for the evolution of that particular form.

சீரறி நுட்பம் பேரறி வுணர்த்தும் (296)

பதங்களின் (சதுரங்களின்) சிறப்பினை அறியவல்ல நுட்பமானது பேறிவுத் திறத்தைப் புலப்படுத்தும்.

(சிறப்புப் பொருந்திய சிற்றவையின் நுட்பம், பேரவை என்பதைப்பற்றிய அறிவினைக் கொடுக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்)

The sharpness of intellect by which an architect knows the efficacy of squares of the mandala, would lead him to attain the pervasive and all-knowing consciousness.

குறிகுறித்து இயலும் குறிப்புறும் நோக்கம்
குறியால் குறிகுறி இயல்நிலை நோக்கிக்
குறித்தறி யாநிலை குறிப்பினிது உணர்த்தும்
நெறிமுதல் எண்கலை நிலைபெற நிறுத்துபு
ஒளியே உருவில் தோன்றுறும் ஆற்றல்
ஒளியே ஒளிநிலை காட்டுறும் தோற்றம்
தெளிவுறத் தேர்ந்தே சீர்நெறி நோக்குழி
ஒளி ஒலி நுட்பம் உண்மை இயங்கல்
ஒளியுள் உருவம் ஒலிநிலை ஒளியும்
அளிநிலை ஆய்தல் அறிநிலை விளக்கும் (297)

படிமம், படிமம் குறிப்பாகப் புலப்படுத்தும் மெய்ப்பொருள் (தத்துவம்), பல்வேறு அளவுகளுக்குரிய புள்ளிகளால் படிமமும் படிமத்தின் இயல்பான நிலையும் புலப்படும் நெறி – ஆகிய இவற்றை நன்குணர வேண்டும். அளவுக்குரிய புள்ளிகளால் உணர்ந்து கொள்ள இயலாத நுட்பங்களைக் குறிப்பாக உணர்த்தும் முறைக்கு அடிப்படையாக விளங்குவது எட்டின் கலையே என உணர்ந்து, அதனால் படிமத்தை நிலைபெற நிறுத்த வேண்டும்

ஒளியே உருவில் தோன்றும் ஆற்றல் என்றும் ஒளியே ஒளிநிலையைப் புலப்படுத்தும் உருவம் என்றும் தெளிவாக உணர்ந்து கொண்டு, சீரிய நெறியில் படிமக்கலையை ஆராய வேண்டும். இத்தகைய ஆய்வு ஒளி நுட்பம், ஒலி நுட்பம், படிமத்தின் இயல்பு, படிமத்தின் இயக்கம் (படிமத்தின் இயக்கம்: படிமம் நிலையாக ஓர் இடத்தில் இருந்தாலும் அப்படிமத்தில், அதன் மையத் தானத்தை நிலைக்களமாகக் கொண்டு ஓர் இயக்கம் உள்ளது என்பது சிற்பநூல் உணர்த்தும் உண்மை),

ஒளிக்குள் பொருந்தியுள்ள உருவம், உருவத்தின் ஒலிநிலை, உருவத்தின் ஒளிநிலை - ஆகிய இவை அனைத்தையும் ஆய்ந்துணரவல்ல அறிவு நுட்பநிலையை வெளிப்படுத்திக்காட்டும்.

The architect should understand the significance and nature of a form or an image by studying that symbolic image, aspect of the primal existence as represented by that image and various marks of measurement made according to iconometry. The aspects which are not to be explicitly known by the marks and lineaments of the figure are indicated by a process for which 8 is the basic number. Having comprehended clearly, he should analyse the form firmly based on the manifested property of number 8. He should clearly understand that only the light expresses itself as the energy of the form.

The process of such an analysis would make him attain an intellectual capacity by which he could further explore and reveal the truths about the subtleties of light, sound, significant meaning of the image, movement of the image and the form contained in the light source as indicated by the meaning and movement of the image.

மாநெறி தேர்ந்துணர் மெய்க்கலை நுட்பம்
பாநெறிப் பெருங்கலை எழுத்தியல் ஒலிசேர்
கலையொளி எழுத்தெலாம் காட்டுறும் திறன்நிலை
நிலையொளி எண்நிலை நிறுத்துபு நிறீஇ
எண்ணியல் மருங்குறும் எழுத்தொலி நாற்புறத்து
எண்ணியல் நடுவண் இயங்குறும் நுணுக்கப்
புள்ளி புள்ளியல் மூலத்து ஆர்த்துறும்
தெள்ளுறும் சீர்த்திறன் சீருற நோக்கின்
விள்ளுறும் கலைத்திறன் விளங்குறும் எண்மை
தெள்ளுறும் இயல்மொழி ஓம்இயல் நெறியாய்
ஒலியே உணர்க்குறும் ஒலிப்பொருள் உணர்த்திலும்
ஒளியே உருவம் காட்டல் உண்மையே (298)

வாஸ்து நெறியை ஆராய்ந்துணரும் உண்மையான கலைநுட்பம், பாநெறிக் கலையின் எழுத்தியல், ஒலிவளம்

ஒளிவளம் வாய்ந்த எழுத்துக்களையெல்லாம் வெளிப்படுத்தும் திறத்தின் நிலை, நிலைபெற்ற ஒளி, எட்டின் நிலையான சக்தி – இவற்றையெல்லாம் முறைப்படி ஆராய்ந்து, எட்டின் இயல், அதனிடமாகப் பொருந்தும் எழுத்தொலி, மண்டலத்தின் நான்கு புறங்களிலும் சூழ்ந்துள்ள எட்டு அம்சங்களின் நடுவண் இயக்கம் கொள்ளும் நுண்மையான மூலப் புள்ளி, புள்ளியில் பொருந்தும் மூலத்தினின்று கிளர்ந்தெழும் சீரான சக்தி – ஆகிய இவற்றையும் ஆராய்ந்தால் கலைத்திறமுறைமை வெளிப்படும். இத்தகைய கலைத்திறன், இதற்கு அடிப்படையான எட்டின் ஆற்றல் ஆகிய இரண்டும் சீராகவும் இயல்பாகவும் திகழும் ஓம் என்பதன் அம்சங்களாகவே விளங்கும். ஒலி, ஒலிக்குரிய பொருளை உணர்த்துவது போன்றே ஒளியே தன்னுள் ஒளிரும் உருவத்தைக் காட்டும். இதுவே அடிப்படை உண்மை.

- The celebrated process pertaining to the subtleness of an unfailing art,
- The nature of letters pertaining to the art of prosody,
- The efficacious process which makes known the letters pregnant with sound and light source,
- The ever-lasting light, and the nature of octo-pattern

– having analysed all these, in a proper way, the architect should proceed to know about the nature of octo-sequence, sound of letters associated with octo-sequence, the central and minute point of the *mandala* which revolves amidst eightfold energy around the four sides of the square (*mandala*) and the significant potency which arises with all force from the central point.

Upon this, he would understand that both the creative skill and the nature of octo-pattern are the aspects of the evolving process of *OM*.

In the same way as the sound indicates its meaning, so the light indicates the form.

This is the essential truth.

ஒலிநிலை ஓசையால் மொழிப்பொருள் உணர்த்தி
ஒளிநிலை அகம் உறும் உருவம் காட்டும்
ஓம் உறும் ஒலிநிலை உரைக்கும் காலை
ஓம் ஒளி அகத்துணர் உருவெடுத்து இயங்கும் (299)

ஒலி நிலையானது தன் ஓசைத் திறத்தால் தனக்குரிய பொருளை உணர்த்தும். ஒளி நிலையானது உள்ளத்தே எழும் உருவத்தை (கோலத்தை)க் காட்டும். உண்மையாக நோக்கினால், ஓம் என்பதன் ஒலிநிலை ஓம் என்பதன் ஒளியைப் புலப்படுத்தி உள்ளத்தால் உணரப்படும் உருவநிலையாவே இயங்கும்.

(மூலப் பொருளின் ஒலிமயமான திருமேனி – இங்கே உணர்த்தப்படுகிறது).

The articulated sound would indicate its consistent meaning due to the efficacy of its energetic source. So also, the energy of light would manifest a form which evolves from within one's own inner space.

To put it precisely, the *OM* sound indicates the *OM* light and ultimately the form which is actually experienced within the heart space.

ஒலிதரும் ஒளியே ஒளிதரும் உருவே
ஒளிநிலை மூலம் உய்த்துணர் தேற்றம் (300)

ஒளிநிலையின் மூலநிலையை உய்த்துணர்வதால் தெளிவாகப் புலப்படும் உண்மை யாதெனில், ஒலி ஒளியைத்தரும் : பின்னர் உருவையும் கொடுக்கும் என்பதே. (ஒலி ஒளியை உணர்த்த, ஒளி உருவை உணர்த்தும்).

The truth to be known through the realisation of the basic characteristic of the light source is that the sound energy manifests light energy and the light - energy manifests the forms.

எழுத்தொலி ஓசை இயைபுறத் தெரிந்தோர்
வழுத்தொலி ஒளித்திறன் வகையுற ஓர்வர் (301)

எழுத்தின் ஒலி இணக்கத்தை நன்கு உணர்பவர்கள் வழிபடப்படும் உருவத்திற்குரிய ஒளித்திற வகைகளை உணரவல்லவராவர்.

Those persons who have known accurately the creative sound potency of letters are fit enough to analyse in different ways the creative potency of light pertaining to the divine syllable set for extolling the greatness of the Primal Existence.

ஒலியுறும் திறனும் ஒளியுறும் உருவமும்
கலையுறக் காட்டல் எழுத்தியல் ஆக்கம் (302)

எழுத்தியலின் ஆக்க பூர்வமான சிறப்பான தன்மை, ஒலியில் பொருந்தும் ஆற்றலையும் ஒளியில் பொருந்தும் உருவத்தையும் கலைநயம் பொருந்த வெளிப்படுத்துவதாகும்.

The significant nature of letters is to bring about with all artistic excellences the potency contained in the sound-energy and the form contained in the light energy.

ஒலியுறும் ஓசை ஒளியுறும் மெய்ந்நிலை
தெளிவுறக் காட்டும் சீர்ப்பொருள் ஆகி
அண்டமும் பிண்டமும் இயல்பெற நிறுத்திக்
கண்டோர் உண்மை கலைபெறக் காட்டித்
தெற்றுற விளக்கும் சிற்பத் திறனே (303)

ஒலியில் உள்ள ஓசையையும் ஒளியில் பொருந்தும் நிலைத்த தன்மையையும் தெளிவுபொருந்தக் காட்டும் சிறப்பான பொருளாக விளங்கி, அண்டத்தையும் பிண்டத்தையும் தன் தோற்றத்தால் இயைபுபடுத்திக் காட்டி, மூலப்பொருளின் பல்வேறு நிலைகளைப் பற்றிய உண்மையைக் கலைநயம் படத் தெளிவாக விளக்குவது சிற்பத் திறனாகும்.

The ultimate effect of sculptural art is to reveal with all clarity the potency of articulated sound and the eternal aspect of the light source.

- to unify the macrocosmic and microcosmic aspects through its own structure
- and to symbolise and indicate the ontological truths and concepts associatcd with the sculpture in a pleasant artistic way.

கண்டவை கருத்தில் கலைபெற நிறுத்தி
விண்டுறும் ஒளிநிலை உருவம் தோற்றி
வனப்பு, எழில் வண்ணம் நிலைப்பினினின் ஓர்ந்தே
கனைப்புறத் தீட்டல் ஒவியத் திறனே (304)

நேரில் இயற்கையில் கண்ட பொருள்களை, அவற்றின் சிறப்பான கூறுகளெல்லாம் உள்ளத்தில் நிலைபெற வைத்துக்கொண்டு, மையத்தில் கிளர்ந்தெழும் ஒளியின் நிலையால் (ஒளிப் பின்னணியில்) உருவத்தைப் புலப்படுத்தி, வனப்பு, எழில், வண்ணம் ஆகிய இவற்றை ஒருமுகப்பட்ட ஆய்வுணர்வால் நன்கு ஆராய்ந்து கண்ட பல்வகைச் சிறப்புகளும் செறிவாக அமையுமாறு தீட்டப்படும் நிலையே, சிறந்த ஒவியத்தின் திறனாகும்.

The excellent status of the art of drawing depends upon-

1. comprehending and upholding the essential and specific characteristics of the objects perceived in Nature
2. creating the desired form against the background of appropriate lustrous manifestation of light
3. understanding the varied aspects of the desired form such as cumulative excellence, beauty, colour and so forth.

The excellence of drawing, drawn so as to appear with varied specific and significant aspects is based upon the above mentioned activities.

ஒலிநிலை இயலால் உண்மை ஓர்ந்தே
ஒளிநிலை இயலால் உருவம் காண்டலால்
ஒளியளி ஒளியும் ஒளிதரும் ஒலியும்
ஒலியின் மூலம் ஒளிநிலை மூலம்

ஒளியின் மூலம் ஒளிநெறி மூலம்
தெளிவுற உணர்தல் சீர் அறி திறனே (305)

சிற்பம் (அ) வடிவம் புலப்படுத்தும் உண்மையை ஒலி நிலையால் உணர்ந்துகொண்டு, நிலைத்த ஒளியின் இயலால் வடிவத்தின் முழுமைத் தன்மையை உணரமுடிவதால், மூல ஒளியால் பெறப்படும் பூத ஒளியையும் மூல ஒளியால் பெறப்படும் பூத ஒலியையும் ஒலியின் மூலம், ஒளிநிலையின் மூலம், ஒளியின் மூலம், ஒளிநெறியின் மூலம் எனப்படும் இவற்றையும் தெளிவாக உணரவைப்பதே சிறப்பான அறிவுத் திறமையாகும்.

An artist should gain supreme knowledge about image and form by

- realising the unchanging significance and relevance of a particular form through the sound-syllable pertaining to that form
- realising the complete structure of that form through the basic light-source
- and understanding clearly the nature of manifested light which emerges from the primal light source, the nature of sound energy manifested through the light source and the nature of the primal existence manifested in the cubits of light (i.e each pada of the *vastu mandala*)

அகத்துறும் உணர்வே அகத்துறும் ஒளியாய்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும் (306)

ஒரு வடிவத்தைப் பற்றிய ஆழ்ந்த தியான நிலையில், உள்ளத்தின் ஆழ்நிலையினின்று எழும் உணர்வுதான், அந்த உள்ளத்தே எழும் ஒளியாகிப், பிறகு புறத்தே வெளிப்படும் உருவமாகி அந்த உருவத்திற்கு நிலைத்த கலையழகைக் கொடுக்கும்.

Only the inner experience which gushes from the depth of heart absorbed in deep meditation on a particular image assumes the form of inner light and then manifests itself externally in a concrete form. Only the same inner experience bestows a permanent artistic excellence on that particular concrete form.

ஒளியில் உருவம் ஒலியில் ஓசை
தெளிநிலை ஆற்றல் களிகலை நுட்பம் (307)

ஒளியில் அடங்கியுள்ள உருவத்தையும் ஒலியில் அடங்கியுள்ள சந்தம் மிக்க ஒலி அலைகளையும் தெளிவாக உணரும் நிலையில் உள்ள ஆற்றலே மனமகிழ்ச்சியை உண்டாக்கும் கலைகளின் நுட்பமாகும்.

The subtle aspect of arts which creates aesthetical bliss is based upon the efficacy of realising the exact nature of form contained in the light source and the exact nature of rhythmic sound waves contained in the sound source.

எண்ணெண் கலையே நுண்ணுணர் வாற்றல் (308)

நுண்ணுணர்வைப் பற்றிய ஆற்றலானது அறுபத்துநான்கு கலைகளை (பதத்தின் கூறுகளை - சதுரவடிவங்களை) அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

The efficacy concerned with the finest experiential knowledge (about arts) is based on the aspects (padas) which are 64 in number.

நுண்கலைத் திறனே விண்கலை நோக்கம் (309)

நுண்ணுணர்வு தொடர்பான ஆற்றலே பூத ஆகாசத்தின் அம்சங்களை (அ) பதத்தில் அடங்கியுள்ள கூறுகளின் சக்தித் திறத்தை நோக்கி அறிய வைக்கும்.

Only the efficacy concerned with the finest experiential knowledge (about arts) would make an artist know the fragmentary special functions of each square of the *vastu mandala*

எண்ணியல் மருங்கின் எழுத்தொலி இயைபாய்
விண்ணியல் ஆர்ப்பின் உள்ளுறத் தேர்ந்தே
எண்முகத்து ஈர்ப்பியல் திண்ணமும் நெறியும்
எண்ணுறும் ஆற்றல் இயல்நெறித் திறனாய்
விண்கலை விண்ணுறும் எண்முகத்து ஈர்ப்பியல்
திண்ணம் செப்பும் சீர்நெறி ஆய்ந்து
உள்ளுறும் எண்முகத்து ஈர்ப்பியல் ஆற்றலும்

தெள்ளூறும் விண்ணிலை எண்முகத்து ஈர்ப்பும்
கருதிக் கருதிக் கலைநிலை உற்றே
பொருந்த நோக்குபு விண்கலைத் தேற்றம் (310)

எண்ணின் தொடர்பாக இயங்கும் எழுத்தொலி பொருந்த விண் இயலின், அதாவது மண்டுக பத அமைப்பின் தீவிரமான இயக்கத் திறத்தை உள்ளத்தே நன்கு ஆராய்ந்து அறிந்து, எட்டுத் திசைகளிலும் பொருந்தும் ஈர்ப்பியலின் உறுதியும் முறையும் எண்ணுக்குரிய ஆற்றலின் அடிப்படையில் அமைவனவே என ஓர்ந்துணர்ந்து, வாஸ்து பதங்களின் நிலை, அங்கே பொருந்தும் எண்முகப்பட்ட ஈர்ப்பாற்றல் ஆகிய இவற்றைச் சிறப்பான முறையை ஆராய்ந்து உள்ளகத்தெழும் எண்முக ஈர்ப்பியல் ஆற்றலையும் வாஸ்துபதத்தில் அமையும் எண்முக ஈர்ப்பாற்றலையும் பொருத்தமுற இணைத்து ஆராய்ந்து, இவ்வாறு உணர்வதாலும் ஆராய்வதாலும் பெறப்பட்ட உண்மைகளைக் கலையாற்றல் பொருந்தக் கலைஞன் விளக்க வேண்டும். வாஸ்து பதங்களைப் பற்றிய தெளிவான ஞானத்தை இத்தகைய விளக்கங்களை ஆராய்வதாலேயே பெற முடியும்.

- Having analysed the (invisible and) forcible movement of the square - (grid) which is associated with the energising number and letter
- having understood that the firmness and order of the force of attraction (pull) functioning in eight directions is based on the energising nature of number pattern
- having understood the nature and force of each grid and force of attraction in eight directions working on the grid and
- having equated and identified the eight directional attraction occurring in the inner space with that occuring on the squares of the *vastu mandala*

the artist should enunciate the creative forms in an artistic and excellent way.

The infallible knowledge about the square - space of the *vastu mandala* is based on the analysis of such enunciations.

எழுத்தியல் நெறியே இயலும் மாக்கலை
வழுத்துறும் அறுபான் நான்கியல் வரைவால்
பழுத்த நிறைமொழி மறைமொழி ஒலியாய்ச்
செழுமைச் சீர்நெறி சிறந்துறும் சிறப்பே
மறைமொழி நிறைமொழி மாநெறித் திறனாய்
நிறைமொழி ஓம்நெறி யுள்நிலை உற்றே
அறைதரும் அறுபான் நான்கியல் ஆக்கம்
நிறைதரும் ஒலி'ஓம்' மறைமொழித் திறனே. (311)

எழுத்து இயலின் நெறிதான், கலைமுறைப்படி பொருந்தும் அறுபத்து நான்கு சதுரங்களின் வரைவு முறையால், நிறைமொழி ஒலியாகவும், மறைமொழி ஒலியாகவும் சீரிய நெறிப்படி சிறப்புடன் பொருந்தும். இந்த எழுத்தியல் நெறியே, மறைமொழித் திறனாகவும் நிறைமொழித் திறனாகவும் எங்கும் வியாபித்திருக்கும் ஓங்கார நெறிக்குள் நிலைபெற்று அமையும். உண்மையில் அறுபத்து நான்கு சதுரங்களின் ஆக்கம், எங்கும் நிறைகின்ற ஒலியாகிய ஓம் எனப்படும் மறைமொழியின் ஆற்றலே ஆகும்.

The pattern of letters evolves into an effective and all pervasive sound through the design of 64 squares and evolves into word form which contains in itself the truths concerned with creation etc.

This evolution takes place in a perfect order. The same pattern gets eternalised in the phenomenon of OM which pervades everywhere as the potency of scriptural statement and eternal truth. Strictly speaking the energy and efficacy of 64 squares is only that of all pervasive eternal sound known as OM.

எட்டால் இயல்நிலை நிலைநெறிக் கலையாய்
எட்டின் பிறழ்வால் எண்கலை அசைவால்
விட்டுறும் வலிநிலை விளங்கக் காண்குபு
தொட்டுறும் முயக்கம் மூலம் தோன்றுபு
ஓம்நெறிக் கலைத்திறன் ஒளிருற நோக்கிக்
காமுறக் காண்டல் கலைநெறி ஆற்றல்
தோமில் ஆடலான் திருநெறி இயலே
தாமுற உள்ளுணர்ந்து இயலுறும் ஆற்றல்
அகமும் புறமும் உணர்வுறத் தெளிந்தே
மிகையறும் ஒளிக்கலை மெய்யுணர்த் தும்மே (312)

எட்டால் இயங்கும் கலை நிலைத்த நெறியுடைய கலையாகும். எட்டின் பிறழ்வாலும் எட்டின் அசைவாலும் வெவ்வேறு மண்டலநிலை அமையும். அம்மண்டல நிலைகளை முதலில் விளக்கமுறக் காணவேண்டும். மிகவும் நுண்மையாகவும், வெளிப்படப் புலப்படாத வகையிலும் திகழும் முயக்கத்தின்மேல் மூலப்பொருள் வெளிப்பட, ஓம் நெறியின் கலைத்திறன் அதில் சுடர்விட்டுப் பிரகாசிப்பதை உணர்வால் காணவேண்டும். அவ்வாறு காண்பதே கலை ஆற்றல். அதுவே குற்றமற்ற ஆடவல்லானின் திருநெறித் தன்மை. இதனை, அனுபவ உணர்வுடையோர் தம் உள்ளத்தில் உணரும்போது எழும் ஆற்றலானது, மூல இயக்கம் அகத்திலும் புறத்திலும் ஒன்றுபட்டு அமைந்திருப்பதை உணர்த்தும்; பின்னர், அதனைப்பற்றிய தெளிவு நிலையைக் கொடுக்கும். தனக்கு மேம்பட்டதொன்று இல்லாததான ஒளிக்கலை இவ்வுண்மையை உணர்த்தும்.

The creative art which functions based on octonary is an everlasting one. Various designs (Mandalas) would be effected through the variations and progressions of octonary. The wise men should, at the first stage, perspectively understand the features of these mandalas. They should intuitively observe with consciousness the effulgence of creative potencies of OM, when the Primal Existence expresses itself upon the upward force which manifests in the most subtle and indistinct way. The commendable artistic skill is indeed to observe keenly the efficacious phenomenon of Om. It is indeed the beatific and blissful dance of Nataraja. When they intuitively realise this, they attain spiritual virility. This would reveal the secret that the functional process of the Primal Existence is manifested alike both in the internal and external spheres and effect a clear and deep knowledge about it. The unexcellable lustrous phenomenon of Om would reveal this truth.

மெய்யுயிர் உண்மை விளங்கக் காண்டல்
மெய்ம்மொழிக் கலைத்திறன் நேர்நிலை விளக்கும் (313)

மெய்யின் உண்மையையும் உயிரின் உண்மையையும் விளங்க உணர்தலானது —

மெய்ப்பொருளை உணர்த்தவல்ல மொழியின் கலைத் திறத்தை உள்ளவாறு புலப்படுத்திக்காட்டும்.

The deep cognizance of the truths about ensouled or animated matter and the animating factor would reveal the creative efficacy in its essential state, which is capable of enabling the artists to know the nature of Primal Existence.

ஒலியின் மூலம் ஒளிநெறித் திறனாய்
ஒளிநிலை ஆற்றல் ஒளிக்கலை இயலல்
உயிர்மொழித் திறனாய் மெய்ம்மொழி ஏற்றல்
உயிர்மெய் ஆக்கம் உய்த்துணர் நெறியே (314)

ஒலியின் மூலமானது ஒளிநெறித் திறனாகவும் ஒளிநிலை ஆற்றலாகவும் ஒளிக்கலையின் இயக்கமாகவும் விளங்கும். அவ்வொலி உயிரொலியாகத் திறன்பெற்று எழும்போது அதனை மெய்யெழுத்து ஏற்றுக் கொள்வதை உணர்தலே உயிரின் இயல்பையும் மெய்யின் இயல்பையும் உய்த்துணரக்கூடிய நெறியாகும்.

The Primal state of sound manifests itself as the potency of light - phenomenon, energy of light-planes and the function of light-aspects. When that sound emerges up as the vowel sound it gets united with consonant - sound. To know this process is to know inferentially the nature of animating factor and of the animated matter.

உயிரொலி தோன்றுமுன் மெய்யியல் தோன்றும் (315)

உயிரொலி தோன்றுவதற்கு முன்னரேயே அவ்வொலியைப் பிறப்பிக்கக்கூடிய, என்றும் நிலைத்திருப்பதான ஓர் இடம் தோன்றும்.

Even before the emergence of vowel-sound, there manifests a source-place which is eternal and gives rise to such emergence.

மெய்யியல் முயலல் இயல்நிலை கூட்டும். (316)

அத்தகைய இடத்தின் செயற்பாட்டினை மூலப்பொருளின் இயல்பான நிலையானது தோற்றுவிக்கும்.

The functional state of that source-place is effected by the natural and inseparable potency of the Primal Existence.

உயிரொலி எழுத்துரு ஓங்கி நிற்றல்
உயிரொளித் திறனே உண்மை விளக்கும் (317)

உயிரொலியானது எழுத்தின் வடிவு பெற்றுச் சிறப்புற்று நிற்பதை எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஒளித்திறனானது உண்மைபொருந்த விளக்கிக் காட்டும்.

The eternal potentiality of light-source would perspectively reveal the excellent form of letter as assumed by the vowel sound (animating sound).

உயிரொலி ஓசை உள்ளகத் தெழும்கால்
செயிரறு முயற்சி மெய்யியல் ஒலியே (318)

வெளிப்படும் உயிரொலியானது – உள்ளகத்தே நாதம் முனைந்து எழ முறைப்பாடான (குற்றமற்ற) முயற்சியை உடலின் தன்மை கொள்ளும்பொழுது தோன்றும் ஒலியேயாகும்.

The emerging sound of vowel is indeed the sound effected when the basic and primal sound surges up from the inner space/navel and when the instruments of body take flawless efforts in due manner to articulate the sound.

கண்ணிமை நொடிக்கலைக் கால யாத்திரை
நுண்ணறிதின் உணர்ந்தோர் நுண்மதி யுற்றே
கண்ணிமை கூட்டும் காலத்து இயலால்
எண்தரு கலைபல இயல் விளக்கும்மே (319)

கண்ணிமைக் காலம், நொடி எனப்படும் காலக்கூறுகளை நுண்மையாக உணர்ந்தவர்கள் கூர்மையான அறிவாற்றல் பெறுவர்; அவ்வாற்றல் கண்ணிமைப் பொழுதாகிய சிறிய கால அளவைக் குள்ளேயே எண்ணிக்கை மிகுந்த பல கலை ஆற்றலைப் பெறும் தன்மையை விளக்கும்.

Those persons who have known the minute details concerned with the units of Time such as eye-twinkling or snapping of finger, would attain sharpness of knowledge

potential. This potency would explain the nature of attaining innumerable powers of creative process within the smallest duration.

கண்ணிமை கைந்நொடிப் பொழுதே ஊழியாய்
விண்ணிமைப் பொழுதும் மண்ணிமை ஆற்றலும்
நுண்ணிதின் உணர்ந்தே நுவலரும் ஆற்றல்
எண்கலை உணர்த்தும் இயல்பிற்று என்ப (320)

கண்ணிமைப் பொழுது, கைந்நொடிப் பொழுது ஆகிய சிறிய காலக் கூறுகளே ஊழி எனப்படும் பெருங்கால எல்லையை அடைகின்றன. விண்ணிமை, மண்ணிமை ஆகிய இவற்றின் ஆற்றலையும் நுண்மையாக உணர, அவ்வுணர்வு சொலற்கரிய ஆற்றலைப் பெறவைக்கும். அதுவே எட்டின் கலையை உணர்த்தும் இயல்பினை உடையதாகும்.

Only the smallest units of Time such as eye-twinkling/snapping of finger attain the greatest measure of Time such as the period of great deluge. The deep knowledge about the efficacy of celestial time, terrestrial time, etc., would enable the artist to attain an inexpressible highest efficacy / power. It is of the nature of revealing the creative rays (aspects) of eight (the octonary).

விண்ணே எட்டே எண்ணம் உணர்த்தும் (321)

விண்ணின் நிலையும் எட்டின் நிலையும் உள்ளகத்து இருக்கும் நிலையைப் புலப்படுத்தும்.

The intricacies of space and those of octonary would reveal one's own inner predisposition or volition towards creation.

அசைநிலை அறிதலும் சீர்நிலை தேற்றலும்
நசையற உணர்ந்தே நாடலும் நாடி
கோடலும் கோடிக் குறிப்பின் உணர்ந்தே
தேடல் ஆய்வர் சீர்நெறி ஆய்வோர் (322)

சிறப்புப் பொருந்திய கலைநெறியை ஆய்வோர் —

அசைகின்ற நிலையை உணர்தல்,

சீராக (நேராக) இருக்கும் நிலையை உணர்தல் என்ற வகையில் இரண்டுநிலைகளையும் குறைவற உணர்ந்து, இவற்றுக்குரிய இலக்கணங்களை ஆய்ந்து, உருவத்தைக் காண வேண்டிய முறைப்படிக் கண்டு, உருவத்தின் தத்துவத்தைக் குறிப்பால் உணர்ந்து, மற்றைய அம்சங்களையும் முனைந்து கண்டு ஆய்வர்.

Those wise men who proceed to analyse the exalted process of creative expression should wholly understand the features of two states (i) state of movement (dynamic) and (ii) the state of being in its own place of existence. They should analyse the lineaments pertaining to these and conceive the nature of form according to the specifically revealed injunctions. They should also know the symbolic message revealed by the FORM and analyse diligently its other features.

உற்றுறும் கலையும் உணர்வொளித் திறனும்
முற்றுற ஆய்தல் மெய்ம்மொழி உணர்த்தும்
தெற்றுறும் கலைத்திறன் சீர்நெறி எண்ணியல்
முற்றுறும் எழுத்தியல் முழுதொருங்கு உணர்த்தும் (323)

ஒவ்வொன்றிலும் ஆழப்பதியும் கலை, உணர்வாகிய ஒளித்திறன் எனப்படும் இரண்டையும் முழுமையாக ஆய்தலை மெய்ம்மொழி புலப்படுத்தும். தெளிவாக அமைந்துள்ள கலைத் திறன், எட்டின் இயல் — ஆகிய இரண்டையும், முழுமையாக அமந்துள்ள எழுத்தியல் குறைவற உணர்த்தும்.

The eternal work OM would induce the process of analysing (1) the creative element/fact or which is deeply rooted in the mandala-design and (2) the brilliant state of consciousness. The complete structure of letter pattern would reveal the facts about creative efficay and the process of octonary, without anything being left out unexplained.

காலமும் களமும் கருத்துற நோக்கி
சீலமும் தோற்றமும் தெரிந்துளார் நெறியால்
மூலமும் ஞாலமும் முயன்றினிது ஆயக்
கோலம் குறித்தல் குறிப்புறும் திறனே (324)

காலம், இடம் — இவற்றைப் பொருத்தமாகக் கண்டு, சீலம், தெளிவு — இவற்றைத் தெளிவாக அறியும் முறையால், மூலம், ஞாலம் ஆகிய இரண்டையும் முயன்று ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து உருவத்தை அமைத்தலே அந்த உருவத்துக்குரிய தத்துவம் அந்த உருவில் பொருந்தும் திறனாம்.

The expert in Vastu should scrutinise the features of the Primal Existence and of the universe, having consistently realised the nature of Time and Space and that of Rhythm and the state of perfection. Only the creation of FORM based upon such scrutinisation would make it possible for the relevant symbolic message to get identified with that FORM.

எழுத்தியல் சீர்நெறி அசைநிலை ஓசை
வழுத்து மாத்திறன் மெய்க்கலை இயலாய்ப்
பழுத்தபேர் அறிவால் பண்புறக் காண்டல்
விழுப்பொருள் செம்பொருள் நுண்ணறி திறனே (325)

எழுத்து, அசை, சீர் முதலானவற்றின் ஓசை, உண்மையில் மூலப்பொருளைப் போற்றுதற்குரிய — மூலப்பொருள் வடிவான - சொல்லின் கலைகளாகப் பரிணமிக்கும். முதிர்ந்த அனுபவ அறிவால் இதன் உண்மையான இயல்பை உணர்தல், வடிவப்பொருளையும், வடிவம் உணர்த்தும் செம்பொருளையும் அறியவைக்கும் ஆற்றலாகும்.

The articulated sound of letter, metrical syllable and metrical feet would evolve into the effective patterns of words, fit enough for realising the greatness of the Primal Existence and for assuming the form of the Primal Existence. To recognise the true nature of sound through the continued and mature intuitive consciousness is indeed the efficacy that would make known the substance of FORM and its conspicuous and consistent symbolic message.

ஒலி இயல் நுட்பம் ஒளிதரும் திட்பம்
கலைநிலை நெறியாய்க் கருத்துறும் நெறியே (326)

ஒலி இயலின் நுட்பம் என்பது, ஒளிப்பொருள் தரும் உறுதிநிலையே. இதுவே பிரபஞ்சத்தின் வெவ்வேறு நிலைகளில்

பொருந்தும் கலைநிலைகளாகும். இவ்வாறு கலைகளாகப் பொருந்தும் நெறியே, உண்மைக்குப் பொருந்தும் நெறியாகும்.

The subtlety of sound-phenomenon is indeed the steadiness effected by the Light substance. The subtlety of sound phenomenon assumes different expressive modes which get rooted in different planes of the universe. The process of such assumption of expressive modes is the process in conformity with the nature of the primal existence.

உள்ளகத்து எழுதரும் ஒருபெரும் முயற்சி
விள்ளுறும் ஓசை ஒலிமுதல் ஆகி
மெய்யொலி கிளர்த்தும் மெய்ப்பொருள் நோக்கி
மெய்யுணர் எழுத்தொலி உயிரொலி இயலே (327)

உள்ளகத்தே எழும் பெரு முயற்சியே, தனித்தனியே பிரிந்து எழும் ஓசையாகியும் ஒலியாகியும் மெய்யொலியாகிய ஆற்றல் மொழியை வெளிப்படுத்தும். அவ்வாற்றல் மொழியால் மெய்ப்பொருளை நோக்கித் தத்துவ நுட்பத்தை உணரவேண்டும். எனவே எழுத்தொலியே, உயிராக இயங்கும் மூல ஒலியாகும்.

Only the great articulating effort which surges from within, manifests the efficacious word which sounds both as consonant and vowel. The 'expert should realise the symbolic message of FORM, by analysing the nature of the Primal Existence through the articulated efficacious word. Therefore, it is only the sound of letter that functions as the animating and invigorating primal sound.

ஒளியே வளர்தல் ஓசை கிளர்தல்
ஒளிநிலை மூலம் ஒலித்திறன் ஓசை
ஒளிநிலை இயலும் நிறைநிலை நவிலல்
கலைநிலை ஆய்தல் கருத்துறும் நெறியே (328)

ஒளி படிப்படியாக வளரும் முறை, ஓசை படிப்படியாக வளரும் முறை, ஒளிநிலையின் மூலம், சொற்களின் ஓசைத்திறன், ஒளிநிலையின் தன்மைகள் — ஆகிய இவை பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் நிலை — இவற்றைப்பற்றி விரிவாகப் பயிலுதலும், கலைநிலைகளை ஆய்தலும், உண்மைக்குப் பொருந்தும் நெறியாகும்.

The gradual evolution or development in light source and the gradual evolution/development in sound source, the fundamental state of light form, sound Potency of word, varied stages of manifestations of light form — all these pervade throughout the whole universe. Elaborate study of these aspects and detailed analysis of these expressive phenomena are in conformity with truth and tradition.

புள்ளிக் குறிநிலை பொருந்த அறிந்தே
தெள்ளும் நாற்புறத்து இயல்அறிவு ஆற்றல்
விள்ளுறும் ஐந்தாய் வெளிஇயல் சுழலல்
தெள்ளுறும் கலைநிலை விரைவுறும் ஆற்றல்
நுண்ணிதின் உணர்ந்தே நவையறத் தெரியின்
விண்கலை நாட்டம் வியன்உற விளங்கும் (329)

மண்டலத்தின் நடுவே புள்ளியாகிய நிஷ்களபதம் அமைவதைப் பொருத்தமுற அறிந்து, தெளிவாக அமைந்துள்ள நாற்புறத்திலும், இயற்கையான மூலத்தின் ஞான ஆற்றல் ஐந்து நிலைகளில் வெளிப்பட்டு மண்டலத்தில் சுழற்சி கொள்ளுதல், ஒவ்வொரு சதுரத்தில் அமைந்துள்ள கலையும் விரைவாக இயங்கும் ஆற்றல் — இவற்றை நுண்மையாக உணர்ந்து ஆராய்ந்தால் விண்கலையைப் பற்றிய ஞானம் விளங்க வேண்டிய முறைப்படி விளங்கும்.

The expert should know consistently the formation of formless point (*niskala pada*) at the centre of the manduka mandala. Then he should precisely understand — 1) the revolution on the plane of the space of supreme consciousness in which form the Primal Existence exhibits itself and which manifests in the plane of the mandala in fivefold stage along its four sides and 2) the energy which makes the power of each square to take it swift movements. If he analyses these two aspects without giving room for any doubt and distortion, he could gradually attain the supreme knowledge about the creative power of the space.

இமையா நோக்கே அமைவுறும் காலம்
காலமும் பொழுதும் கணக்கியல் நெறியாய்
மூலம் துலங்க மெய்க்கலை உணர்நிலை

சிறுபொழுது இயலும் பெரும்பொழுது ஆற்றல்
உறுநிலை குறித்துஆங்கு உணர்வன உணர்ந்தே
நொடித்திறன் ஆக்கம் நுண்ணிதின் ஓர்ந்து
கொடித்திற வலியியல் கூர்மதி நோக்கி
தேர்த்துகட் பொழுதே ஆர்ப்புற ஆய்ந்து
கைவிரல் பொழுதியல் கலைநிலை நோக்கி
மெய்யுணர்ந்து அறிதல் மேலோர் இயல்பே (330)

இமையா நோக்கு என்பதே பிரிவுபடா நிலையில் அமையும் மூலகாலமாகும். காலத்தின் பெருநிலை, அதன் சிறுநிலையாகிய பொழுது — இவை கணக்கியல் நெறியில் அமைய, மூலத்தின் உண்மைநிலையை விளங்கிக்கொள்ளும் முறையில் மெய்க்கலையை உணர்கின்ற நிலை — சிறுபொழுது, பெரும்பொழுது இவை பொருந்தும் நிலை — இவற்றைப்பற்றி உணரவேண்டியவற்றை உணர்ந்து, நொடியாகிய காலக்கூறு பொருளை வெளிப்படுத்தும் ஆற்றலை நுட்பமாக ஓர்ந்து, தேர்க்கொடி, தேர்த்துகள் எனப்படும் கணக்கில் அமையும் காலக்கூறுகளை ஆய்ந்து, கைந்நொடிக் காலத்தின் கலை நிலைகளை நோக்கி மெய்யுணர்ந்து அறிதலே, கலைஞானம் வாய்க்கப் பெற்ற மேலோர் இயல்பாகும்.

The absolute Time which does not give room for divisions and classification is nothing but the pointed vision devoid of twinkling. The expert should know the essentials about the external art by which he would be able to cognise the real nature of the Primal Existence, when greater divisions and smaller division of time are formed in a mathematical way. He should also know about the characteristics of greater and smaller divisions of Time; should perspectively analyse the way in which cosmic energy is gradually discharged right from the basic unit of time; should precisely know the divisions of Time such as chariot-Flag, Chariot-dust etc and the power of emanation taking place through the smaller units of time such as snapping of finger. Based upon these he should realise the basic truths about the Primal Existence. This is the process being naturally adopted by the wise men of tradition.

விண்கலை அறிந்தோர் மெய்ந்நிலை மேலோர் (331)

விண்ணின் (மண்டலபதத்தின்) கலைநுட்பங்களை அறிந்தவர்களே மெய்ந்நிலையை உள்ளவாறு உணர்ந்திருக்கும் மேலோர் ஆவர்.

Only those persons who have known the subtleties of creative power (Kala) of each square of Mandala are considered to have known the real nature of the Primal Existence.

எண்கலை யுட்கலை இயல்நிலை ஓர்ந்தோர்
விண்கலை ஆயும் மெய்த்தகு சான்றோர் (332)

எட்டுக் கலைகளிலும் நுணுக்கமாகப் பொருந்தி இருக்கும் கலைக்கூறுகளின் இயல்நிலையை ஆய்ந்து உணர்ந்தவர்களே விண்ணின் கலைநிலையை ஆராயவல்ல, நிலைத்த பெருமைக்குரிய சான்றோர் ஆவர்.

Only those persons who have analysed and perspectively known the aspects of creative powers which are densely charged within the frame of octonary pattern are considered to be the wise men of great and everlasting excellence, being capable of analysing the powers of the plane of the *mandala*.

உள்ளூறும் அறுபான் நான்கியல் விரைவே
தெள்ளூறும் ஞாலத்து இயல்நிலை காட்டும் (333)

மண்டலத்தின் உட்புறம் பொருந்தியுள்ள 64 சதுரக் கூறுகளில் ஏற்படும் விரைவான ஆற்றலே, பக்குவப்பட்ட (முதிர்ந்த) நிலையில் பொருந்தியுள்ள ஞாலத்தின் இயல்பான நிலையை உணர்த்தும்.

Only the energy which is swiftly brought into effect in all through 64 squares formed within the frame of the *Manduka Mandala*, could reveal the natural features of the universe which is in its definite and defectless structural pattern.

தோன்றும் இடத்தே சார்ந்துறும் ஒலிபோல்
ஏன்றுறும் ஒளித்திறன் இயல்நிலை ஓர்ந்தே
ஆன்றுறும் மெய்த்திறன் கலையறிந்து அறிவோர்
ஊன்றுறும் முயக்கம் உய்த்துணர் வாரே (334)

அங்கங்கே தோன்றும் புவனத்தில் பொருந்தும் ஒலியைப் போல் அங்கங்கே பொருந்தும் ஒளித்திறனையும் இயல்பாகக் கண்டு, அது நிறைந்து வியாபித்து அமையும் உண்மையான ஆற்றலையும், காலநிலையையும் அறிந்து ஒளியின் ஆற்றலை அறிவோர், ஊன்றப்பெறும் முயக்கத்தின் நுட்பத்தை உய்த்துணர வல்லவராவர்.

The manifestation of Light energy occurs in the same way as the manifestation of sound in the worlds existing at different levels of space. The experts should understand the real nature of such occurence of light. They should know the all-pervading and all-penetrating power of light and its creative features. Those who realise the light energy based upon this process could deduce the subtlety of upward force of vastu (earth) which is kept pressed down by the force of Primal Existence.

குறியால் குறித்து நெறியால் விளக்கும்
குறிகுறி யாவகை ஒலிஒளித் தன்மை
நெறிபெற முயங்கின் நீடுறும் தோற்றம்
அறிகலை உணர்வே எண்நிலை விளக்கும் (335)

அளவுக்குரிய புள்ளிகளால் குறித்துக்கொண்டு, நெறிப்பட விளக்கப்படும் அத்தகைய புள்ளிகளால், புலப்படுத்த இயலாத வடிவத்தின் ஒலித்தன்மை, ஒளித்தன்மை — இவற்றைத் தழுவி வடிவத்தின் தோற்றம் அமையும். இதனை அறியப்படுத்தும் கலையுணர்வு எட்டின் நிலையை விளக்கும்.

Firstly, the silpin should mark out the dots purposeful for proper measurements. These dots would make known the latent form of an image (sculpture) associated with both sound and light features. The intended image would be formed based upon these. The creative consciousness which realises the nature of image would explain the functional state of octonary.

நேர்க்கோட்டு இயலே நெறி எழுத்து ஆக்கம். (336)

முறைப்படி எழும் உருவத்தின் சிறப்பு, நேர்க்கோட்டின் (பிரம்ம சூத்திரத்தின்) இயலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

The well-designed and pleasing form of an image is based on the position of main vertical line (lamba or brahma sutra)

நேர்க்கோட்டு இயல்நெறி ஐந்நிலை உணர்த்தும் (337)

நேர்க்கோட்டின் (பிரம்ம சூத்திரத்தின்) இயல்பான அமைப்பு உருவத்தின் ஐந்து நிலைகளையும் உணர்த்தும்.

The vertical line (brahma-sutra) in its natural position is indicative of the five states of an image or sculpture.

எண்நிலை எழுத்தாய் எண்இயற் பொருளாய்
அண்ணுறும் கலைத்திறன் அறிவுறும் ஆக்கம் (338)

எட்டின் குறிப்பு நிலைக்குரிய எழுத்தாகவும், எட்டின் இயல்புநிலைக்குரிய பொருளாகவும் பொருந்தும் கலைத்திறனே அறிவைப் பெருக்கும் பெருநிலையாகும்.

The creative efficacy effected by letters pertaining to the symbol of eight and object (content) of the natural state of eight is a worthy state which could amplify the knowledge potency.

எண்இயல் பொருள்உறும் இலங்குறும் திறனே
விண்ணுறும் நிலைக்கலை நெறிமுறை ஆற்றல்
திண்ணிதின் உணர்ந்து நுண்ணிதின் நோக்கி
எண்ணெழுத்து இயலால் ஒளிக்கலை ஓங்கும் (339)

எட்டின் இயலால் அமையும் பொருளில் விளங்கும் ஆற்றல், ஒவ்வொரு சதுரத்திலும் (பதத்திலும்) பொருந்தும் கலையின் நெறிமுறையான ஆற்றல் — இவ்விரண்டையும் உறுதியாகவும் நுட்பமாகவும் உணரவேண்டும். இவ்வாறு உணரும் உணர்வாலும், எண்ணின் இயலாலும் எழுத்தின் இயலாலும்,

ஒளிபொருந்தும் உருவக்கலை சிறக்கும்.

The expert should precisely and comprehensively understand 1) the efficacy which is effected in an object formed of octonary and (2) the efficacy of creative power which is sprouting from each square of the mandala.

Through an understanding of these and of the nature of numerical symbolism and phonematic symbolism, the art of sculpture which is effulgent in its nature, attains supremacy.

குறிநிலைக் காலம் குறித்துறும் இயலால்
அறிபொழுது இயல்நிலை விரைவுறும் திறன்நிலை
குறித்துஇயல் காலம் குறிப்புற நோக்கி
நுண்கலைத் திறத்தால் நுண்ணிதின் உணர்தல்
எண்கலைத் திறம்உறும் இயல்நெறி ஆற்றலே (340)

குறியின் நிலைக்குரிய காலத்தைக் காரணமாகக் கொண்டு அமையும் இயலால், பொழுதின் கூறு விரைவுற அமையும் நிலை, உருவத்தைக் குறித்து இயலும் காலம் — இவற்றைக் குறிப்பால் உணர்ந்து, நுட்பமான கலைத்திறத்தால் உருவ நுட்பத்தை உணர்தல் என்பது எட்டின் கலைத்திறத்தால் பொருந்தும் இயல்பான ஆற்றலால் அமையும்.

The units of smaller Time get effected based on absolute Time pertaining to the and motive of vastu. Having understood by means of implications these smaller units and the time which functions in respect of image, the expert should know the subtleties of image through his deep knowledge of construction. The process of knowing in this way is due to the natural and innate creative - potency of octonary

காலக் கூறே நாள்இரவு ஆகி
கோலம் காட்டும் குறிப்பிற்று என்ப (314)

காலத்தின் பாகுபாடே நாள் (பகல்), இரவு எனப் பிரிந்து, தன்தன் நிலையில் கோலத்தைப் புலப்படுத்தும் தன்மை உடையதாகும்.

Only the division of Time, becoming mainly known as day and might, and being in its own essential state is of the nature of revealing the FORM.

இரவுறும் அறிவும் நாள்உறும் உழைப்பும்
கரவாப் பயன்தரும் கலைநிலைக் கூறாய்
எண்எழுத்து இயல்நிலை நெறிமுறை ஓர்ந்தே
திண்ணுறும் பொழுதியல் செப்பும்மா நெறியே (342)

பொருத்தமான, பெருமைக்குரிய நெறியானது,

கால இயல் (1), இரவினால் பெறும் அறிவு (2), பகலினால் பெறும் முயற்சி அல்லது உழைப்பு (3) — ஆகிய இம்மூன்றும் முழுமைப்பயன்தரும் கலைக்கூறுகளாக விளங்குவதைப் புலப்படுத்தி, எண்இயல், எழுத்தியல் ஆகிய இவற்றின் நெறிமுறையை ஆராயச் செய்து, உறுதிப் பயனைப் பெறவைக்கும்.

The pertinent and worthy process (concerned with creation) would make known the fact that 1) the phenomenon of time, 2) knowledge gained by night-time and 3) efforts undertaken during daytime - all these three are of nature of being the aspects of creative power which brings into effect the desired end in its full measure; and it enables the knowers to analyse the phenomenon of numerical pattern and letter pattern and to achieve the unfolding eternal result.

காலம் இயற்றும் கலைநிலை ஓர்ந்தே
காலம் காட்டும் இடநிலை தேர்ந்தே
மூல நுண்பொருள் முயன்றுறும் ஆக்கம்
சீலத் தெளிவால் தேர்ந்துறும் அறிவியல்
கோலக் குறிப்பின் குறிநிலை காட்டும்
ஞாலத் திண்மை நவிலல் நெறியே (343)

காலம் தோற்றுவிக்கும் கலைநிலைகளை (சக்திக் கூறுகளை) ஓர்ந்து, காலம் சேர்த்துவைக்கும் இடத்தின் தன்மையை ஆய்ந்து, மூலமாகிய நுண்பொருளின் வெளிப்பாட்டினை அதன் சீலத் தெளிவால் ஆராயக்கூடிய அறிவின்தன்மை, கோலம் கொள்ளும் அடிப்படை உண்மையை வெளிப்படுத்திக்காட்டும். ஞாலத்தின் உறுதிநிலையை இதன் அடிப்படையில் கூறலே மரபு நெறியாகும்.

Based on the analysis of the aspects of creative power *effected by Time* and of the nature of spatial dimension *integrated by Time*, the essential efficacy of knowledge which is capable of analysing the manifesting process of Primal Existence through its settled Rhythm - would reveal the basic truth and motive assumed by FORM. To explain the unfailing reality of the universe based on such knowledge is the supreme method conforming to the tradition.

ஓங்கலும் ஒடுங்கலும் நாள்இரவு ஆக்கம் (344)

நாளின் (பகலின்) ஆக்கம் ஓங்கல் என்பது. இரவின் ஆக்கம் ஒடுக்கம் என்பது.

The ultimate and purposeful effect of day is the ever-growing manifestation (evolution) and that of night is ever functioning involution (withdrawal)

ஒடுக்கம் உணர்ந்தோர் இடுக்கண் தீர்வார்
நாட்பொழுது ஓங்கி நவையெலாம் நீங்கி
கூட்டுறும் காலக் கூற்றுஇயல் அறிவரே (345)

ஒவ்வொரு பொருளும் மூலகாரணத்தில் ஒடுங்கக்கூடிய காலத்தின் தன்மையை உணர்ந்தவர்கள் துன்பத்தினின்றும் நீங்குவார்கள். நாள், பொழுது முதலான அளவைகளையும் கடந்து, மாறுபாடு, ஒடுக்கம் முதலான குற்றங்களிலிருந்து நீங்கி அனைத்தையும் தோற்றுவிக்கும் மூலகாலத்தின் கூறுகளை உள்ளவாறு அறிவார்கள்.

Those persons who have realised the nature of time in the duration of which each existent gets absorbed (or involuted) into the primal cause would be free from miseries. Having transcended the temporal limitations such as day, night, etc., and become free from the modifications such as transformation, involution etc they would know about time in its real nature — the time which is capable of exteriorising in visible forms the aspects of Primal Existence.

இரவுறும் உணர்வே நிறைகலை ஆகி
கரவா நெறியுறும் மெய்ப்பயன் நல்கி
ஒடுக்க நுண்மையும் ஓங்குறும் எண்மையும்
வடுவியல் காலம் வளநிலை ஆற்றலும்
காலத் திண்மை நுண்மை நோக்கி
சீலம் காண்டல் மெய்த்திறன் நெறியே (346)

மெய்த்திறன் பொருந்திய நெறி எனப்படுவது, இரவின் தன்மையைப் பற்றி அறிவதே. ஒடுக்க காலமாகிய இரவில் ஏற்படும் உணர்வே நிறைவுதரும் கலையுணர்வாகி, என்றும் மறையாத நெறியால் பொருந்தும் மெய்ப்பயனை வழங்கும். இத்தகைய

ஒடுக்கத்தின் நுண்மை, மிகவும் சிறப்பு நிலையில் விளங்கும் எட்டின் தன்மை ஆகிய இவற்றை, அறிந்து ஒவ்வொரு நிலைக்கும் அடையாளத்தைக் கொடுக்கும் காலம் புலப்படுத்தும் வளப்பான நிலையையும், காலத்தின் ஒடுங்கா நிலையையும் நோக்கிச் சீலத்தை அறிதலே மெய்த்திற நெறி.

The efficacious and unfailing process is to know the real nature of the duration called Night. Night is the division of Time, known as the time of involution or absorption. Consciousness which gets refined during the time of being in absorption, evolves into complete and perfect knowledge about creation and is capable of yielding the enduring purpose according to the phenomenon in continuum. Having known the subtlety of the nature of involution, the phenomenon of octonary etc., the wise men should scrutinise the state of plenitude revealed by Time which invests a befitting symptom and imprint to each developmental stage and the nature of Absolute Time, which is eternal. Having done so, they should know the nature of Rhythm. This is indeed, the process which is efficacious and unfailing.

செஞ்ஞா யிற்றின் சீரெழு வண்ணமே
உஞற்றும் எழுநாள் காலக் கூறே (347)

சூரியனிலிருந்து சீராக எழும் ஏழு வண்ணங்களே ஏழு நாள்களாக அமையும் காலக் கூறுகளாகும்.

Only the seven colours which get manifested by the rising sun become the seven days (of weeks) which are the divisions of Time.

கால மெய்வலி கடிதினில் உணர்ந்து:
சீலக் குறிப்பின் தெரிமுறை தேர்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்குபு
கோலத்து எண்எழுத்து இயல்அறி வாரே (348)

கட்டிட - சிற்பக்கலை வல்லுநர்,

காலத்தின் உண்மையான வலிமையை உணர்ந்து, சீலக் குறிப்பையும் முறைப்படி ஆராய்ந்தறிந்து, ஞாலத்தின் (நிலத்தின்)

நிலையையும், விண்ணின் (பதத்தின்) நிலையையும் நோக்கிக் கோலத்தின் எண் இயலையும் எழுத்து இயலையும் அறிவார்கள்.

Those who are experienced in architecture and sculpture would be able to know the functional phenomenon of number and letter pertaining to a FORM

i) on realising the real potency of time

ii) on analysing the indications of Rhythm and

iii) on determining with great accuracy the nature of land and *mandala*

ஒழிவில் ஒடுக்கத்து உண்மை தெரிந்தோர்
எழுதரும் கலைதெரி இயல்உறும் அறிவரே (349)

பிரளயகாலத்தில் நிகழும் ஒடுக்கத்தின் உண்மையைத் தெரிந்தவர்கள், கிளர்ந்தெழும் கலைகளின் இயல்புகளை ஆராய்ந்து அறிய வல்லவராவர்.

Those persons who have known the truth about the process of involution which takes place at the time of great deluge, are capable of analysing and knowing the nature of creative powers which emerge again at the time of *re-creation.*

எண்ணுறும் காலம் இயைபுறும் ஆற்றல்
எண்ணுறும் திறத்தால் இயற்கையது ஆகி
நுண்ணுறும் மூலம் நூன்முறை ஆய்வோர்
எண்கலை நுட்பம் இயல்நிலை அறிவரே (350)

கணிக்கப்படும் காலம், அதன் ஆற்றல், 'இது இப்படி உருக்கொள்ள வேண்டும்' என்னும் சங்கல்பத்தால் நுண்மையாக இயங்கும் மூலம் — இவற்றை சாத்திர முறைப்படி ஆராய்பவர்கள், எட்டின் கலைநுட்பத்தை அதன் இயல்புநிலையை உள்ளவாறு அறிவார்கள்.

Those persons who are able to analyse according to the scriptural instructions i) calculable time ii) its efficacy (energy), and iii) the nature of Primal Existence which functions due to its own volition and will in the mode

such and such object shall be effected in such and such a way" could know the subtlety of octonary, as it really is.

ஓரெழுத்து ஒருமொழி ஒண்பொருள் ஆய்ந்தே
தேர்க்கலை நுட்பம் பொழுதியல் கூர்ந்தே
காலக் கூற்றே கணக்கியல் மூலம்
கோலக் குறிப்புறும் எழுத்துணர்ந்து இயைபால்
சீலம் தெரிக்கும் செறிநிலை ஓர்ந்தே
மூலம் அறிவர் மொழிநிலை தெரிவரே (351)

மொழிநிலையைப்பற்றி ஆய்ந்து அறிவோர் —

ஓரெழுத்து ஒருமொழியாகிய 'அ' என்பதன் பொருளை ஆய்ந்து, தேர்க்லை நுட்பத்தால் பொழுதின் தன்மையைக் கூர்ந்து உணர்ந்து, காலக்கூறே கணக்கியலின் அடிப்படை என்பதையும் உணர்ந்து, கோலத்தின் அமைப்பில் பொருந்தும் எழுத்துக்களை உணர்ந்து, சீலம் உணர்த்தும் செறிவான நிலையை ஆராய்ந்து மூலத்தின் இயல்பை அறிவார்கள்.

Those persons who are intent on comprehensively knowing the efficacy of Language are capable of knowing the essential nature of Primal Existence,

- having analysed the content potency of the first letter *A* which is a single lettered word
- having minutely observed the nature of Time through the subtle aspects concerned with chariot (which is the semblance of the universe)
- having realised the truth that only the divisions of time constitute the science of calculation (mathematics)
- having understood the letter identified with FORM and having known the compact stature of existence revealed by Rhythm.

உள்ளுறும் உட்கலை ஓங்குறும் நுட்பம்
தெள்ளிதின் உணர்ந்தே சீர்நிலை நோக்கி
தெள்ளுசெந் தமிழ்நிலை எண்ணியல் அளவை
விள்ளுறத் தெரிந்தோர் வினைஇயல் ஆய்ந்து

கலைத்தொழில் மூலம் பொருள்நிலை கூர்ந்து
நிலைமொழி இயலை நெடிது உணர்வாரே (352)

மேலும் அவர்கள் —

கோலத்தின் உள்ளார்ந்த மெய்ப்பாடுகள் உட்கலைகளால் வெளிப்படும் நுட்பத்தைத் தெளிவாக உணர்ந்து, அம்மெய்ப்பாடுகளுக்கேற்ற நிலையையும் நோக்கி, தெளிவான இன்பவெளிப்பாட்டு நிலை தெரிவிக்கும் அளவை முறையில் கோலத்தின் செயல் முறைகளை ஆய்ந்து, கலைத்தொழில் மூலமாக உட்பொருள் நிலையைக் கூர்ந்துணர்ந்து என்றும் நிலைபெற்றதான நாத இயலைத் தீர்க்கமாக (அனுபவ பூர்வமாக) உணர்வார்கள்.

Furthermore, they would realise the subtle process in which the intended expressions of FORM are revealed through its artistic features; would realise

- various states according to the intended expressions,
- the functional process of FORM based on the calculations as revealed by the beatific appearance of the FORM and
- penetratingly observe the internal structure of FORM through their art and they could realise experientially the eternal stature of Primal sound.

புள்ளி கூட்டும் பொருள்நிலை உணர்ந்தோர்
தெள்ளுறும் செந்தமிழ் மெய்ந்நிலை ஆய்ந்தே
உயிர்மெய் ஆற்றல் ஓங்குறும் உண்மை
செயிர்அறத் தெரித்தே சீர்நிலை அறிவரே (353)

மையப்புள்ளி (அ) அளவுப் புள்ளிகள் உருவாக்கும் உருவத்தின் தத்துவத்தை உணர்ந்தோர் — அவ்வுருவத்தால் பெறப்படும் தெளிந்த கலை இன்பத்தின் உண்மை அனுபவத்தை ஆய்ந்து, சிற்ப உருவத்தின் உயிர்த்துடிப்பு, வடிவம் இவற்றின் ஆற்றலால் வெளிப்படும் உண்மையைக் குற்றமற ஆராய்ந்து, சிறப்பான நிலையை அறிவார்கள்.

Those persons who have understood the symbolic message expressed by an image or sculpture formed of

points indicative of proper proportions, would be able to analyse the nature of aesthetic experience derived from seeing that FORM, would be able to sift the truth revealed by the very breath of that sculpture and its structural features and they could know the specific characteristics of that FORM.

மூலமும் பொருளும் புள்ளியும் ஓர்ந்தே
காலமும் இடமும் பொருளும் வகுத்தே
கோலக் குறிப்பின் இயல்நிலைச் சீலம்
ஞாலத் திண்மை நயந்து காண்போர்
ஒளிக்கலை மாண்பை உய்த்துணர் வாரே (354)

மூலம், மூலம் கொள்ளும் வடிவம், மூலப்புள்ளி — இவற்றை ஆய்ந்து, காலம், இடம் இவற்றுக்கு ஏற்ற வகையில் அமைய வேண்டிய வடிவம் — இவற்றைக் கணக்கின் அடிப்படையில் வகுத்து அமைத்துக் கொண்டு, கோலத்தில் இயல்பாக நிலைத்திருக்கும் சீலம், கோலம் ஊன்றி நிற்கும் ஞாலத்தின் உறுதிப்பாடு இவற்றை உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் காண்பவர்கள் (உணர்பவர்கள்) ஒளியின் கலைகளின் மாண்பை உய்த்துணர வல்லவராவர்.

1. Analysing the nature of Primal Existence, form assumed by It and the primal dot.
2. Determining (or ascertaining) the Proper time, space, particular form to be created in accordance with time and space based on mathematical calculation.
3. Understanding the nature of Rhythm infused with the FORM and the enduring and steady state of the universe in which form gets firmly established.

— Those persons who have undertaken the aforementioned efforts are efficacious in discerning and understanding the creative powers of the light source.

கிளவி ஆக்கம் மெய்ப்பொருள் குறித்தே (355)

ஓரெழுத்து ஒருமொழியாகிய சொல்லின் திறன் மெய்ப் பொருளை அடிப்படையாகக் கொண்டதே.

The potency of a word, which is a single lettered OM is based on the symbolic unfoldment of the Primal Existence.

ஓம்எழுத்து இலங்கும் ஒருபொருள் மொழியாய்
ஓம்கலை இயல்தரும் நெறிமுறைத் திறனாய்
ஒளியும் ஒலியும் வெளிதரும் நோக்கே
களியுறும் கலைத்திறன் வான்இயல் ஓசை
மொழிமுதற் பொருளாய் முதலெழுத்து ஓங்கி
செழுங்கலை தரும்ஒலிச் செந்தமிழ் என்ப (356)

மூலப்பொருள் பிரபஞ்சமாக வெளிப்படும் நிலையைக் குறிப்பதாகிய இன்பநிலை (தமிழ்) என்பது,

ஓம் எனப்படும் ஓரெழுத்தில் விளங்கும் ஒப்பற்ற பொருளை உள்ளடக்கிய சொல்லாக விளங்கும்.

அதுவே, ஓம் என்பதற்குரிய கலைகளில் முறைப்படி அடங்கியுள்ள ஆற்றலால் பரவெளியினின்று எழும் ஒளியும் ஒலியுமாகி மன இன்பத்தை அடையச்செய்யும்; அதுவே கலையாற்றலை உடைய வானியல் ஓசையாகி, மொழிக்கு முதற்பொருளாகிய முதல் எழுத்தாகவும் ஓங்கி, வளமிக்க கலைகளுக்கு அடிப்படையான ஒலியாற்றலாக விளங்கும் எனக் கூறுவர்.

The blissful state which indicates the unfoldment of Primal Existence in the form of universe - shines forth basically as a word which contains in itself as its content (referent) the unexcellable substance contained in the Primal sound OM. The same blissful state having emanated as light and sound emerging from the Primal space through the potency of creative aspects of OM, would gladden the viewer's heart. The wise men ascertain the fact that the same blissful state becomes the energetic sound related to the elemental space and the first and basic letter of a language and shines forth as sound potency which is the very basic for the creation of form.

ஓம்மொழி எண்கலை இயற்பொருள் ஆகி
ஓம்எழுத்து உருநிலை ஒளிக்கலைத் திறனாய்
எண்ணியல் நிலைதெரி இலங்குறும் ஆற்றல்

விண்மொழி ஓசை ஒலியென உணர்த்துபு
எட்டின் பிறழ்நிலை இயல்என ஓங்குபு
விட்டுறும் நிலைக்கலை உய்த்துணர் நெறியே (357)

ஓம்-மொழி எட்டிற்குரிய கலைகளில் இயங்கும் பொருளாக அமையும்; ஓம் எழுத்தின் உருநிலையே ஒளிக்கலையின் ஆற்றலாக அமையும். எட்டின் இயல்நிலையில் தெரிவுற விளங்கும் ஆற்றல், விண்ணின் காரியத்தால் எழும் ஓசையாகவும் ஒலியாகவும் உணரப்படும் நிலையில் வரும். எட்டின் பிறழ்நிலை இயல்பான நிலையாக ஓங்கும் என்றும், சதுரம் சதுரமாக விட்டுவிட்டு அமையும் நிலையினை உடையது என்றும் நெறிப்படி உய்த்துணர வேண்டும்.

The Primal sound - om - shines forth as the force functioning in the octonaric phenomenon. The formal state om becomes the energy of light aspects. The potency to be realised in the octonaric phenomenon gradually manifests as the indistinct and distinct sounds related to the elemental space. It should be understood in due order that the varying process of eight fold pattern is of the nature of evolution in its continuum and of the nature of alternatively assuming the form of perfect square.

உணர்தலும் இயற்றலும் ஒளிக்கலை ஆற்றலே (358)

ஒளிக்கலை ஆற்றல் இரண்டுவகை. உணர்தல் (அனுபவம்) என்பது ஒன்று; இயற்றல் (வெளிப்பாடு) என்பது மற்றொன்று.

The potency of light source is of two kinds — one is to be realised in actual experience and the other is external and impelling manifestation.

ஐவகைக் கோடும் மெய்வகைப் புள்ளியும்
உய்வகைத் திறவலி உண்மை உணர்த்தும் (359)

ஐவகைக் கோடுகளும், மெய்ப்பொருளை உணர்த்தும் புள்ளியும் உயிர்க்கூட்டம் உய்யும் வகைத்திறத்தை உள்ளவாறு உணர்த்தும்.

The five kinds of line and the primal dot which indicate the formless aspect of Primal Existence are suggestive of the effective way by which all the beings could attain divine perfection.

நேர்க்கோட்டு எழுத்தியல் நிலைநெறி கூட்டினும்
வளைக்கோட்டு இயலே வடிவெழில் கூட்டும் (360)

நேர்க்கோடும் அதற்குரிய எழுத்தும் உருவத்தின் நேரான நிலையைப் புலப்படுத்தும். வளைக் கோட்டின் தன்மை, வடிவத்தின் அழகை மிகுதிப்படுத்துதலாகும்.

The straight line and the letter pertaining to it would reveal the upright features of FORM. The nature of curved line is to enhance the beauty of the FORM.

ஓம்உறும் வளைவுஎழில் உள்ளுறும் உணர்வால்
தாம்நனி உணர்ந்தோர் தகைமையின் தேர்ந்தே
எட்டின் பிறழ்வுறும் இயல்நிலை நுணுக்கம்
விட்டுறும் நிலைக்கலை முயக்கத்து ஆற்றலும்
வளைவியல் நெறிக்லை வனப்பெழில் மொழித்திறன்
நெளிவியல் நெறியால் நெகிழ்வும் தேற்றமும்
ஆடலான் கலைநெறி அமைவுறத் தெரிவரே (361)

ஓம் - எழுத்தின் வளைவின் எழிலை உள்ளார்ந்த அனுபவத்தால் நன்கு உணர்ந்தவர்கள், பொருத்தமான முறைப்படி ஆராய்ந்து, எட்டின் பிறழ்வில் உள்ள இயல்பான நுணுக்கத்தையும், எட்டு விட்டுவிட்டுப் பிறழ்ந்து அமையும் முயக்கத்தின் ஆற்றலையும் உணர்ந்து, வளைவாக அமையும்நிலை, பல்வேறு அங்கங்கள் பொருத்தமுற அழகாக அமையும் நிலை, அவற்றுக்குரிய எழுத்தின் அமைப்பு, நெளிவு, நெகிழ்வு, வடிவத்தின் தெளிவு அனைத்தும் ஆடலானின் கலைநெறியில் திகழ்வதைப் பொருத்தமுற உணர்வார்கள்.

Those persons who have experientially realised well the beauty of curved form of OM letter, would analyse further and realise the inseparable subtlety in the variations of octonary and recognise the efficacy in the upward force effected by the alternate displacement process of the octonary. Having recognised this they would realise that the significance of the curved line, the structural features by which different limbs of body are given external form, letters pertaining to it, wrigglings and flirtings, flexibility, the state of perfection attained by the form — all these features could be visible in the artistic features of Nataraja.

விண்ணொளி மொழியாய் மொழிமுதற் பொருளாய்
எண்ணிய இலங்கி எழுத்துறும் வடிவம்
'நுண்ணிதின் உணர்ந்தே நுதலிப் புகுதல்'
எண்மொழிப் பொருள்திறன் இயல்உணர்ந்து அறிதல்
செந்தமிழ் இயல்திறன் நெறிமுறைக் குறியே (362)

மூலப்பொருள் தன் ஆனந்தநிலையில் பிரபஞ்சமாக வெளிப்படும் நெறியல் அமைந்திருக்கும் உட்பொருளை அறிய வேண்டும்.

சங்கல்பித்த உருவைக் கொடுக்கும் ஆற்றல் திகழப்பெற்று இருப்பது மூலப்பொருள். அந்த ஆற்றல் விண்ணொளியாகவும் மொழிமுதலாகவும் உள்ள ஓம் என்பதன் வடிவத்தைப் பொருந்தி, நுண்மையாகத் தன் நிலையை உணர்ந்து "இவ்வாறு வெளிப்டுவேன்" (let me become many) என எண்ணம் கொண்டு, வெளிப்படும். அதனை எண்ணுக்கும் சொல்லுக்கும் உள்ள பொருள் திறத்தால் இயல்பாக உணர்ந்து அறிதலே செந்தமிழ் நெறிக்கு இயல்பாகும்.

The expert should know the motive and inner sense of the process by which the universe comes into existence, when the Primal existence is in its blissful state. The Primal Existence shines forth with an energy of effecting a form as conceived by it. The energy assumes the form of OM which exists as space light and as basic of language and emerges out, under its own self-will to become many. The proper method pertaining to the analysis of beatific structure is to know well the nature of that energy, through the natural correspondent between *number* and *letter*.

எண்கலை இயல்தெரி தண்தமிழ் நெறியால்
பண்டுறும் இயல்அறி பெருங்கலைத் திறனாய்
எண்ணெண் கலையுறும் நிறைநிலை ஆற்றல்
விண்டுறும் பொருட்கலை விளங்குறத் தெரிந்தே
எண்ணெழுத்து இயல்அறி மெய்க்கலைப் பயனும்
நண்ணுவ நாடி நற்றமிழ் ஆயலே (363)

எண், எழுத்து, மெய்க்கலைப்பயன் முதலாக உள்ளவற்றின் உண்மையை உணர நாட வேண்டியவற்றை நாடி நற்றமிழை ஆய்தல் என்பது —

எண்கலையின் இயல்பை அறிவிக்கும் தமிழ்நெறியால் தொன்றுதொட்டே மரபுவழியாக வரும் பெருங்கலைத்திறனாகவும் 64 சதுரங்களிலும் நிறைந்த நிலையில் இயங்கும் ஆற்றலாகவும் மலர்ந்து விளங்கும் உருவ அமைப்பின் உண்மையை விளக்கமுறப் புலப்படுத்துதலே ஆகும்.

Having obtained all the essential informations the way of analysing the language meant for blissful expression in order to know the truths about number, letter and purpose of eternal and expressive art is to elaborately reveal the basic motive (message) of sculpture or Formal structure which has emerged based on the unfailing creative pattern which comes down through the ages revealing the characteristics of numerical pattern and based on the functional energy which has pervaded and filled in all the sixty four squares of the mandala.

எண்கலை மூலத்து இயல்அறிவு உற்றே
விண்ஒலி ஆற்றல் மேவுறும் கலைத்திறன்
அறுபான் நான்குறும் மெய்யியல் ஓர்ந்து
உறுவகை நுட்பம் ஒல்லையிற் கிளந்து
சுழல்இயல் கூற்றே விரைவுறும் பெருநெறி
எழல்உறும் காலத் திண்ணிலை இயலாய்
நுட்பத்து இயல்நிலை நுணுக்க மாய்இயல்
அணுஅணுத் திறனும் ஆய்வுற ஆய்ந்தே
மெய்க்கலை உண்மை விளம்பற் பாலதே (364)

எட்டின் கலைக்குரிய மூலத்தைப்பற்றிய உண்மையை அறிந்து, விண்ணின் ஒலியாற்றல் பொருந்தும் கலைத்திறனாகிய 64 சதுரங்களிலும் பொருந்தும் மெய்ப்பொருள் தன்மையை ஆராய்ந்து, அதன்கண் பொருந்தும் நுட்பத்தை (நோக்கத்தை)ப் பொருத்தமுற விளங்கிக்கொள்ள வேண்டும். மூலப்பொருள் சுழலும் நிலை, விரைவுறும் பெருநிலை, மேல்நோக்கி எழும் உந்துதலின் (exertion) செயற்பாட்டின்போது அதனை ஊன்றும் உறுதிநிலை, நுட்பநிலை, நுணுக்கமாக இயலும் நிலை, அணுவுக்கும் அணுவாகப் பொருந்தும் நிலை — இவற்றை ஆராய வேண்டிய முறைப்படி ஆராய்ந்து மெய்க்கலை பற்றிய உண்மைகள் எடுத்து விளக்கத்தக்கவையாகும்.

The experts should perspectively understand the subtlety of the mandala, having known the fact about the

basis of octonary and known the eternal features embedded in all the sixty four squares. The creative powers associated with the energy of space sound are also established in those squares. After a complete and methodical analysis, all the findings and truths about the revolving state of Primal Existence, the inconceivable state of its swiftness of revolution, its subtle and steady potency of thrusting down the upward exertion, its subtle state of movement and about the state of assuming the form of *paramanu* even inside an atom.

எண்மையும் நுண்மையும் இனிதுற ஓர்ந்தே
திண்மையும் சீர்நெறிச் செவ்விதின் கிளந்தே
எண்ணெண் கலைஇயல் புறத்தியல்நுணுகி
நண்ணுறும் கலைத்திறன் நாடுவ நாடலே (365)

எட்டின் தன்மையையும் நுண்மையையும் இனிதாக ஆராய்ந்து, அதன் திண்மை, சீரியநெறி இயவற்றைச் செவ்வனே விளங்கிக் கொண்டு, 64 சதுரங்களின் அக இயல், புற இயல் இவற்றை நுணுக்கமாகக் கண்டு, கலையாற்றலை நாடவேண்டிய நெறியில் நாடி அறிந்துணர வேண்டும்.

Having analysed the nature and subtlety of octonary having perspectively understood its compactness and orderly process, having scrutinised the internal and external feature of sixty four squares, the expert should understand the efficacy of creative art in d··e manner.

ஐங்குறித் தன்மை அகத்துள் உணர்ந்தே
பெருக்கமும் சுருக்கமும் பெரிதும் நாடி
பருநெறி நுண்ணெறி உணர்முறை தெளிந்து
நோக்குணர் நோக்கால் நுவல்வன நுதலி
அறிதல் மெய்க்கலை உணர்வொளி மூலமே (366)

ஐம்புள்ளிகளின் அல்லது ஐந்து அங்கங்களின் தன்மையை உள்ளத்துள் தியானபூர்வமாக உணரவேண்டும். உத்தம உத்தம அளவையும் அதம அதம அளவைநிலையையும் கணக்கியல் முறைப்படி உணர வேண்டும். பருமைத் தோற்றம், நுண்மைத் தத்துவம் — இவற்றை முறைப்படி உணர்ந்து தெளிவுபெற வேண்டும். இத்தகைய பயிற்சிகளால், ஊடுருவி உணரவல்ல

நோக்கம் பெற்று, அந் நோக்கின் திறத்தால் வெளிப்படுத்தப்பட வேண்டிய கருத்துக்களை (Themes) வெளிப்படுத்தி, சிற்பக்கலை நுண்மையை அறியவும் வேண்டும்; அறியச் செய்யவும் வேண்டும். இவையாவும் மெய்க்கலை பற்றிய அனுபவ அறிவு வாயிலாகவே நிகழும்.

The expert should contemplatively understand the characteristics of five primal dots or five primal parts. He should calculate both the foremost type of measurement and inferior most measurement according to the scriptural instructions. He should understand the features of external and gross form and the symbolic and subtle message as expressed by the form. Based on these experience, he should gain a penetrating acumen and through that he should know the concepts concerned with the art of sculpture. Further more, he should expound these in a perfect way. Only through the experiential knowledge concerned with creative art and existential art he should know the above mentioned concepts.

மூலம் நோக்கலும் முப்பொருள் ஆய்தலும்
காலத்து உணர்தலும் கருதரும் செயலால்
சீலம் குறித்தலும் கோலம் நோக்கலும்
ஞாலத் திண்மையால் நயப்புற நயத்தலும்
விண்ணொளிக் கலையின் மேவுறும் ஆற்றலால்
உண்முகம் நோக்கி உள்ளொளிர் தோற்றமும்
எண்முகத்து ஈர்ப்பே இயைபுறும் ஆற்றலாய்
நண்ணுறும் நுட்பம் நவையறத் தேர்ந்து
அறுபான் நான்குறும் ஐங்கலை இயலும்
உறுநிலை ஐயைந்து இயல்நெறித் தேர்வும்
காலம் கருதிக் கருத்துற நோக்கி
மூலத் திண்மை மெய்யுற விளக்கும் (367)

மூலத்தின் திண்மை நிலையைப்பற்றிய அடிப்படைக் கருத்தானது,

மூலத்தின் தன்மையை நோக்கலும், அதன் முப்பொருள் (உத்தம, மத்திம, அதமப்பொருள்; ஆண், பெண், அலி) நிலையை ஆய்தலும் ஆகும். மேலும், —

உரிய காலத்தை உணர்தல், அரிய செயல்திறத்தால் மூலத்தை உணர்தல், கோலத்தை அமைக்கும் முறையை உணர்தல், ஞாலத்திண்மையைக் குறிக்கோளாகக் கொண்டு கோலத்தை அமைத்தல் — இவற்றை விண்ணொளிக் கலையைப் பற்றிய ஆய்வால் பெற்ற ஆற்றலால் தியானபூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டும்;

கோலத்தின் உள்ளே ஒளிர்கின்ற தோற்றம், எண்முகமான ஈர்ப்பாற்றல், அதனோடு பொருந்தியுள்ள நுட்பம் — இவற்றைக் குற்றமற உணர்ந்து, 64 சதுரங்களிலும் பொருந்தியுள்ள ஐங்கலை இயல், அது 25 என்ற கணக்கில் வெவ்வேறு நிலைகளில் வெளிப்படல் — இவற்றைக் காலத்தின் அடிப்படையில் உள்ளவாறு உணர்தலும் மூலத்திண்மை நிலையைப் புலப்படுத்தும்.

The exact view on the compact nature of Primal Existence is to look at the essential state of Primal Existence and to analyse its three kinds of modal variations (foremost, intermediate, and lower or male, female and neuter).

1. To calculate the fitting time
2. To realise the potency of Primal Existence through strenuous efforts
3. To determine the exact process of bringing out form

and 4. to create it, keeping in view the nature of all comprising universe. All these should be attained by an expert through contemplative and analytical thought about the energy of space light.

Having realised, the symbolic message of the desired FORM, the force of attraction exerted in eight directions, the subtle principle associated with this gravitational pull, the expert should take efforts to realise the features of space and time. The efforts on the part of expert to realise, based on the principle of time, the real nature of the five fold phenomenon in sixty four squares and its varied

functions and formation keeping itself in twenty five points would also reveal the compact state of Primal Existence.

ஒண்மையின் எண்மை ஒளிருற நோக்கி
நுண்மையின் ஒடுக்கம் நுவலுறத் தெளிந்தே
எண்கலை மேவி எண்ணெண் இயலால்
நண்ணுறும் அறுபான் நான்குறும் திறன்நெறி
அறுபான் நான்கின் அகவியல் ஐந்தே (368)

ஒளிப்பொருளின் எண்வகைப்பட்ட நிலையை நோக்கி, நுண்மைநிலையின் ஒடுக்கநிலையை உலகினர்க்கும் புலப்படுத்தும் வகையில் தெளிவாக உணர்ந்து, எட்டுக்கலைகளும் பொருந்த, 64 தன்மைகளால் 64 சதுரங்களிலும் மூலம் பொருந்தும் நெறியைத் தெளிந்து 64 கலையாற்றலுக்குரிய அக இயல் (internal and innate force) இது என உணர்வதே ஐந்தியல் நெறியாகும்.

The nature of five fold process is

- to visualise the eightfold state of the effulgent substance,
- to realise the state of absorption of the subtle state of Primal Existence in such a way as to expound its functions,
- to gain clarity about the immanent state of Primal existence in all the sixty four squares through its sixty four attributes and in association with eightfold aspect and to realise the internal and innate force of the sixty four creative powers of the Primal Existence.

உறுநெறி எழுத்தியல் ஒளித்திறன் உய்ந்தே
மாநெறித் திட்பம் மயக்கற நோக்கி
பாநெறி இயலால் பேரறிவு உற்றே
சீர்அறி யும்கலைப் பொருண்மை தேர்ந்தே
நேர்அறி வுற்றே நிகழ்நிலை ஆயல்
கால நுட்பம் காட்டுபு காட்டி
விரைவுறும் விசல் வியன்நிலை தெளிந்தே
ஆடலான் நிலைநெறி அமைவுறத் தேர்ந்தே
நாடற் பொருள்நிலை நற்குறி நண்ணிக்

குறிப்புணர் குறியால் குறிநிலை குறித்தே
நெறிநிலைப் பொருண்மை தெரிநிலைக் கிள'வியாய்ப்
பொருண்மை ஆய்தல் புலன்நெறி வழக்கம்
மருண்மை தவிர்த்தே மாநெறி ஆயலே (369)

எழுத்தியலின் ஒளித்திறத்தை உணர்ந்து, மாநெறியாகிய வாஸ்து மண்டலத்தின் திட்பநிலையைத் தெளிவாக அறிய வேண்டும்; அதன் சதுரக் கூறுகளைப்பற்றிய (பாநெறி) பேரறிவு வாய்க்கப் பெற்றுக் (கட்டிடம், சிற்பம் முதலான) கலைப் பொருள்களின் தன்மையை உணர்ந்து, அனுபவ அறிவு வாய்க்கப் பெற வேண்டும். பின்னர், மேற்கொண்டு நிகழ உள்ள நிலைகளை ஆய்ந்து கால நுட்பத்தை முறைப்படிக் காட்டி, விரைவாக இயங்கும் (ஆடவல்லானின்) வீசுகரத்தின் பெருமைநிலையை உணர வேண்டும். ஆடலானின் நெறிநிலையைப் பொருத்தமுறத் தேர்ந்துணர்ந்து, பொருள், நற்குறி, குறிப்பை உணர்த்தும் உருவப் புள்ளிகள் இவற்றையும் குறித்துக்கொள்ள வேண்டும். நெறியின் தத்துவத்தை விளக்கும் மொழியாக உள்ள ஓம் என்பதன் பொருள்நிலையை, இவ்வாறு ஆய்வதே மரபுநெறிப்பட்ட புலன்நெறி வழக்கமாகும். மருண்மையைத் தவிர்த்து, (வாஸ்து) மண்டல நெறியை இவ்வாறு ஆராய வேண்டும்.

The expert should realise the light aspect (apart from the sound aspect) of letters and the compact and comprehensive state of *vastu mandala*. Having gained vast knowledge about the squares of the mandala and having realised the nature of architectural structures, he should gain experiential knowledge, in the sphere of vastu. Consequently, having determined the on-coming course and the suitability of time in due manner, he should realise the greatness and symbolic message of the transverse hand (*dola hasta*) of Nataraja. Having consistently analysed and realised the cosmic phenomenon of Nataraja, he should notice the importance of object, its symbolic message and its various points which indirectly reveal this symbolic message. The traditional and cerebral process is to analyse the content and import of OM which shines forth as the Primal word, expressive of the exact meaning and message of the sculptural art. The expert having carefully avoided the state of delusion and distortion should analyse the process of *vastu mandala* in this manner.

சுட்டும் பொருளும் தெரிநிலைக் கிளவியும்
விட்டுறும் இயலும் பிறழ்வின் ஆற்றலும்
ஓம்உறும் பொருளால் மெய்ந்நிலை ஓர்ந்தே
காமுற உணர்வர் சுற்றறி மேலோர் (370)

சுற்றுவல்ல பெரியோர் —

குறிப்பால் உணர்த்தும் நிலை, வெளிப்பட உணர்த்தும் சொல், விட்டுவிட்டு அமையும் தாண்டுநிலை, பிறழ்வின் ஆற்றல் — இவற்றின் மெய்ம்மை நிலையை ஓம் என்பதன் பொருள் நிலையால் ஆர்வம் உற உணர்வார்கள்.

The men of erudition would whole heartedly realise, with a deep involvement, the following :

- the symbolic meaning as expressed by word
- the evidently articulated word
- the leaping pattern

and - the efficacious state of variations. They would know about these based on the contential potency of the Primal sound OM.

உணர்வின் உணர்தலும் உணர்த்தலும் நோக்கலும்
உணர்வொளித் திறனால் மெய்யியல் நோக்கி
அகவொளி நிலைநெறித் திண்ணெறிக் கலையால்
மிகுத்துறும் மீநெறி மெய்ந்நிலை தேர்ந்தே
விண்ணொளித் திறனாய் இலங்குறும் நற்கலை
எண்ணெண் இயலே நெறிப்படுத்து இயக்கும் (371)

உள் அனுபவத்தால் உணர்தலும், உணர்த்துதலும், உள்ளார்ந்த அனுபவ அடிப்படையில் படைப்புக்குரிய பொருளை (கட்டிடம், சிற்பம் — இவற்றை) நோக்குவதும், இக்கலையின் படிமுறைகளாகும்.

உணர்வு, அறிவு — இரண்டின் அடிப்படையில் மெய்ப் பொருள் இயலை நோக்கச் செய்து, அகவொளியின் வெளிப்பாட்டுத் திறத்தால் அனைத்தினும் மேம்பட்டதாகிய மெய்ந்நிலையைத் தேர்ந்துணரவைத்து, விண்ணொளித் திறனாக இலங்கும் நற்கலையை 64 சதுர இயல் நெறிப்படுத்தி இயக்கும்.

The developmental stages of creative art are - 1) realisation through one's own intuition 2) instructions on this realisation and 3) viewing the objects meant for creation with an experiential knowledge. Having enabled the expert to see the nature of Primal Existence on the basis of consciousness and knowledge and to scrutinize the unexcellable state of Primal Existence through the emergence of internal force of consciousness, the phenomenon of sixty-four square mandala would effect an orderly movement in the auspicious aspect of the energy of the space-light.

நேர்க்கோட்டு இயலே நெடிதுற நினைந்து
சீர்நெறி எண்ணெண் கலைத்திறன் உற்றே
சீர்நிலை நுண்பொருள் செவ்விதின் ஓர்ந்து
நேர்க்கோட்டு இயலின் ஒண்முறை ஓர்ந்தே
கோட்டுறும் குறிநிலைப் புள்ளிக் குறுக்கம்
நீட்டுறும் இயல்நெறி நெறியுற நோக்கி
எழுத்தியல் எண்நிலை இலங்குறத் தேர்ந்தே
வழுத்தும் ஐந்தியல் மரபியல் வழக்கே (372)

பிரம்ம சூத்திரமாகிய நேர்க்கோட்டு இயலை நன்கு ஆய்ந்து அறிந்து, சீரிய நெறியில் 64 கலையாற்றல்களைக் கண்டு, நுண்பொருள் நிலையைத் தெளிவாக அறிந்துணரவேண்டும். பிறகு, பிரம்ம சூத்திரத்தின் ஒளிநிலையை ஆய்ந்து, கோடு, குறிநிலை, புள்ளி, குறுக்கம் — இவைகளால் அமையும் உருவத்தைக்கண்டு, அதற்குரிய எழுத்து, எண் இவற்றையும் தேர்ந்து ஐந்தியல் மரபானது சிறப்புற எடுத்துரைக்கும்.

Having perspectively analysed and known the nature of vertical line (brahma sutra) and having perfectly realised the nature of creative powers which are sixty-four in number, the artist should clearly know the state of subtlety existing in *Vastu.* The tradition associated with fivefold phenomenon, having visualised the desired FORM based on the analysis of the light aspect of vertical line (*brahma sutra*), various horizontal and directional lines, the exact position of the FORM, corresponding dots and modifications to be effected at different planes and having

determined the corresponding letters and numbers, would explain elaborately the perfect state of FORM.

நுதலிப் புகுதல் நுவல்வோன் திறனே (373)

உருவக்கலை பயிலும் கலைஞனின் செயல் —

'இன்னது இன்னபடி செய்வேன்' என சங்கல்பித்துக் கொண்டு செயலில் ஈடுபடுதலேயாகும்.

The exact performance of an artist (sculptor) dealing with Images and FORMS is to hold a firm resolution about the intended FORM, to visualise it and to engage himself in that particular action.

நுவலல் நுதலல் ஒருபொருட் கிளவி (374)

அறிவால் கூறுதலும், 'இன்னது செய்வேன்' என்று உணர்வோடு செய்கைக்காகச் சங்கல்பித்தலும் பொருள் நிலையில் ஒன்றே.

1) To declare a particular FORM with a definite knowledge and

2) to hold a resolve with the certitude of consciousness as to the form to be sculpted — both are of one and the same effect (motive).

நூலொளிர் நுண்பொருள் நூற்பாப் பருப்பொருள்
நூல்உரை விழுப்பொருள் நூற்பா நுணுக்கம்
நூலே நுவல்வோன் காலமும் களமும்
நூலோர் ஆய்வின் நெறிமுதல் குறித்தே (375)

நூலில் குறிப்பாகப் புலனாகும் மையக் கருத்து, நூற்பாவின் வெளிப்படைக் கருத்து, நூலின் உரையால் புலனாகும் சிறப்புப் பொருள், நூற்பாவின் நுணுக்கம், நூல், நுவல்வோன், காலம், இடம் — இவை நூலை ஆய்வோர்க்குரிய அடிப்படை நெறிமுறையாகும்.

(இது கட்டிட-சிற்பக்கலைப் படைப்புகட்கும் பொருந்தும்)

(நூல் = வாஸ்து மண்டலம்; சிற்பம்)

1) The central theme (of the scripture) which is to be understood through implications

2) the evidently declared concept of the work

3) the additional and specific message of the work to be known through its commentaries

4) the subtle themes couched in aphoristic forms

5) the intended work

6) its author

and 7) time and place in which the author sets forth his doctrines — all these are basically needed for those who proceed to perspectively analyse a scripture. (This view is applicable for both the scriptural work and the architectural work)

*nul* = Vastu mandala; sculpture; treatise.

பாவி நடத்தலின் பாட்டெனல் இயல்பே (376)

பரவிப் பரவி இயல்வதால் சிற்ப உருவை அல்லது கட்டிடத்தைப் பாட்டு என்று கூறுவதும் பொருத்தமேயாம்.

Owing to its nature of extention and variation. it is compatible to say that any sculptural or architectural work is a song or verse.

பாட்டும் பொருளும் பகர்நெறிப் பொருளும்
ஏட்டின் இயலும் தூக்கும் நோக்குபு
பாட்டுறும் மெய்ம்மை நிலைப்பொருள் நிறீஇ
அருந்தமிழ் ஐந்தியல் பொருந்துறும் கலையாய்க்
கருத்துற நோக்கல் கலைநெறி வழக்கே (377)

பாட்டு, பாட்டின்பொருள். அதனை விளக்குதற்குரிய நெறிகளுக்குரிய அமைப்பு, பாட்டு அமைவதற்குரிய ஏட்டின் (கல்லின்) இயல்பு, பாட்டிற்குரிய தூக்கு என்னும் அழகு,– இவற்றைக் கண்டு – பாட்டின் மையப் பொருளான உண்மையை நிலைநிறுத்தி, சிற்பக்கலையை அல்லது பாட்டுக்கலையைத் தமிழின் ஐந்தியலும் பொருந்தும் கலையாக ஊன்றி ஆராய்தலே கலைநெறி வழக்காகும்.

Song or verse, its content, its compact nature, giving room for elaborated explanation, the nature of substance (medium) in which the song is to be inscribed, the melody of the song or the sonic body- having analysed all these, the expert should set forth and declare the central theme of the verse. It is the artistic convention to analyse the sculptural art or poetic art as associated with fivefold phenomenon of blissful expression.

முறைநெறி வைப்பே முன்னிய கிளக்கும் (378)

முறைப்பட, அனைத்தையும் அமைத்து உருவாக்கினால் நினைத்த கருத்தை (வடிவத்தை)ப் படைப்பானது புலப்படுத்தும்.

If all the constituent members are arranged according to the declared pattern, the created song or sculpture would certainly reveal the exact message as intended by the creator (sculptor).

நெறிமுறை அறிந்தோர் நினைவுறத் திகழ்ந்து
குறிமுறை அறிந்தோர் குறிப்பினுக்கு அணியாய்
அறிகலை ஆற்றல் அருந்தமிழ்த் திறனே
நெறிமுறை கிளக்கும் நிலை இயல் நெறியாய்ப்
பெறுமுறை வகுத்தனர் பேரறிவு உற்றோர் (379)

பேரறிவு வாய்ந்த ஞானப் பெரியோர், –

நெறிமுறை, குறிமுறை இவற்றை அறிந்தோராக விளங்கி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டு, –

குறிப்பாகப் புலப்படுத்த வேண்டிய கருத்திற்கு அழகாக அமைய வேண்டியவற்றை அறிகின்ற கலையாற்றல் வாய்க்கப் பெற்றோராகி, தமிழ்த்திறன் என்பதே நெறியாகவும் இயல்பாகவும் வெளிப்படும் நெறிமுறைகளை உலகம் பெறுமாறு வகைப்படுத்திக் கூறினர்.

The men of great erudition, being the knowers of the significant functional phenomenon and of the art of marking the points according to the prescribed measurements and keeping themselves in deep contemplation - become endowed with artistic efficacy by which they could know the essentials needs for beautifying

the message to be symbolically expressed; and they set forth, under various categories, the theories concerned with the process and phenomenon through which the blissful expression reveals itself spontaneously and orderly.

கண்முதல் ஐந்தும் கருத்துறக் காத்து
விண்முதல் ஐந்தும் விளங்குற நோக்குபு
எண்கலை மூலம் எண்ணெண் இயலும்
நண்ணுறும் நற்கலை நனிவிளக் கும்மே (380)

பொருந்திய நற்கலையானது (சிற்பமானது) —

கண் முதலான ஐந்தையும் கருத்துற இயக்கும்; விண் முதலான ஐந்தையும் விளக்கம் பெற நோக்க வைக்கும்; எட்டின் கலை மூலத்தையும் 64 இயல்களையும் தெளிவாகப் புலப்படுத்திக் காட்டும்.

The intended and beautiful FORM or Image is capable of setting at work both the mind and the five senses of the viewer. It would enable him to know elaborately about the five gross elements - from space to earth and it would clearly reveal the characteristics of octonary and creative powers of the sixty-four squares.

ஓம் உறும் வடிவம் ஒளிர்உற நோக்கி
ஒளியும் ஒலியும் இயல்நிலை தேர்ந்து
ஓம் உறும் விண்ணெறி எண்ணெறி நோக்குபு
ஓம்முதல் நெறிநிலைக் கலையியல் ஆய்ந்தே
மாநெறிக் கலைத்திறன் மெய்யுணர்வு ஓங்கித்
தாநெறித் தமிழியல் துலங்குறும் இயலே (381)

'ஓம்' கொள்ளும் வடிவத்தை அறிவு பூர்வமாக நோக்கி ஒளி, ஒலி இவற்றின் இயல்பான அடிப்படை நிலைகளைத் தேர்ந்துணர வேண்டும். 'ஓம்'அடிப்படையில் அமையும் விண்-நெறி, எட்டின் நெறி, — இவற்றை நோக்கி, ஓம்-நெறியில் பொருந்தியுள்ள கலைகளின் இயல்புகளை ஆய்ந்து. மண்டலங்களைப் பற்றிய மெய்யுணர்வு ஓங்கப்பெற்று விளங்க வேண்டும். தாயநெறியாகிய தமிழியல் விளங்கும் முறைப்பாடு இதுவே.

The expert should know in an illuminative way the form as assumed by OM and understand the basic features

of light and sound. Having observed pertinently the phenomenon of space and that of octonary based on the characteristics of OM and having analysed the nature of creative powers associated with varied phases of OM, the expert should attain a high standard of existential knowledge about Vastu mandalas. Only this is the process of manifestation of pure and absolute blissful expression.

நீர்மையும் சீர்மையும் நெறிவிளக்கும்மே (382)

பொருள்களின் தன்மையும், அவை அமைவதில் உள்ள ஒழுங்கு முறையும் கலைஞருக்குரிய நெறியை விளக்கும்.

The features of object and the invariable order in which these features are associated with FORMS would set forth a definite and faultless way for the expression of artistic beauty.

எண்முறை வைப்பே எண்கலை இலங்கி
எண்ணெழுத் தியலுறும் மூலத் திறனாய்
விண்ணெறி நாட்டி எண்குறித் தோற்றம்
தண்தமிழ்க் கலைத்திறன் மூலத்து இயலே (383)

எட்டின் முறையில் அமைந்திருக்கும் ஆஸனநிலைகள் (பீடநிலைகள்) எண் கலையால் விளங்கும். இவை எண்ணாலும் எழுத்தாலும் இயங்கும் மூலத்திறனாகும். தமிழ்க்கலைத்திறன் மூலத்தின் இயல்பை விண்ணின் நெறியயோடு பொருந்தவைத்து எட்டின் குறியீடுகளின் தோற்றமாகவே விளக்கிக்காட்டும்.

The varied pedestals (seats) based on the process of octonary would shine forth with eight kalas, which function as the energies of Primal Existence through Number and Letter. The artistic efficacy of blissful expression would explain the nature of Primal Existence by uniting with spatial phenomenon and explain it as the appearance or expression of symbols belonging to the process of octonary.

ஒலி இயல் நுட்பம் ஒளிக்கலை நுட்பம்
கலைநெறி நோக்குபு கவினுறக் கண்டே
நிலை நெறி உணர்வால் எண்ணெண் கலைத்திறன்
மலைவற நிற்றல் மாநெறி வழக்கே. (384)

ஒலியியல் நுட்பத்தையும் ஒளிக்கலை நுட்பத்தையும் கலைநெறியைக் குறிக்கோளாகக் கொண்டு, அழகுநலம் பொருந்தக் கண்டு, என்றும் மாறாத நெறிமுறை உணர்வால் 64 சதுரக் கூறுகளிலும் பொருந்தியுள்ள ஆற்றலை உணர்வதில் மலைவறநிற்றல், வாஸ்துமண்டல் வழக்காகும்.

It is the conventional process concerned with Vastu to observe the subtlety of sound phenomenon and that of light energy, motivated towards artistic patterns and to be firm and steady in realising — through the unchanging procedures and consciousness — the potency (energy) encased by all through the sixty-four squares.

மாநெறிச் சீர்நெறி மயக்கற உணர்ந்தே
தூநெறி ஐந்தியல் சொற்பொருள் தேர்ந்தே
ஐங்குறி நெறியால் அருங்கலை எண்ணியல்
விண்ணெறி ஆக்கம் விளங்குபு நோக்கி
எண்ணெண் இயற்கலை விரைவுறும் காலம்
நுண்ணிதின் உணர்ந்தோர் காலம் ஆள்வரே (385)

வாஸ்துமண்டலநெறி, சதுரத்தை (பதத்தை) அமைத்தல் - இவற்றை மயக்கமற உணர்ந்து, தூயநெறியாகிய உருவக்கலையின் (சிற்பக்கலையின்) ஐந்தியலையும், பதம் - பதத்தின் உட்பொருள் ஆகிய இவற்றையும் தேர்ந்து உணர வேண்டும். ஐங்குறி இயலால் எண் (8) இயல், விண்நெறியின் ஆக்கம் (வெளிப்பாடு) ஆகிய இவற்றை விளக்குமுற ஆராய்ந்து, 64 கலைகளில் காலம் விரைவு கொண்டு சுழல்வதை நுண்மையாக உணர்ந்தவர்கள், காலத்தையும் ஆளவல்லவராவர்.

Having understood without doubt and distortion the exact process of Vastu mandala and the reticulation of the surface area, the expert should comprehensively understand the fivefold aspect of sculpture, the square and its intended purpose. Having perspectively sifted the process of octonary and the emergence of spatial manifestation through fivefold phenomenon, those persons who have discerned the rapid revolutions of Time in all the sixty-four squares would be able to have the Time under their control. (They would be able to rule over Time even).

காலமும் பொருளும் இடம்உறத் தேர்ந்தே
மூலம் காண்டல் நெறிமரபு இயலாய்
கோலம் குறித்தே குறிப்புறும் நிலையாய்க்
காலம் காண்பர் கருத்துணர்ந் தோரே (386)

உருவக்கலையைப்பற்றிய கருத்துணர்ந்தோர், காலம், பொருள், இடம் - இவற்றை முறைப்படித் தேர்ந்து மூலத்தைக் காண்பதே மரபான நெறி என்று அறிந்து, கோலம் அமைவதைக் குறித்துக் கொண்டு, அதன் குறிப்பு (கோலத்தின் உட்பொருள்தத்துவம்) பொருந்தும் நிலையின் அடிப்படையில் காலத்தைக் காண்பார்கள்.

Those persons who have understood the concepts related to sculpture, having realised the fact that it is the conventional process to see the nature of Primal Existence through a methodic analysis of Time, object and space, should first conceive the exact nature of the intended FORM or Image. Based on the symbolic message as expressed by the FORM or Image. they would realise the essential nature of Time.

ஒலியே ஒளி இயல் ஒலி இசை நெறியும்
ஒலியிறந்து இசைக்கும் அளபெடை நெறியும்
ஒலி இயல் ஓசை ஒலிக்கலைத் திறனாய்
நிலையுற விளக்கல் ஐந்தியல் நெறியே (387)

ஒலி, ஒளி இயல், ஒலி இசை, உரிய ஒலி அளவைக் கடந்து ஒலிக்கும் அளபெடை, ஒலியின் ஓசை, ஒலியின் கலைகளில் உள்ள ஆற்றல் — இவற்றை ஐந்தியல்நெறி முக்காலத்துக்கும் பொருந்த உணர்த்தும்.

Sound, acoustic properties, melodies of sound, lengthening of articulation in excess of the ordained duration of a particular syllable, sounded word, the creative power (kala) of sound - all these are explained by the fivefold phenomenon so as to be applicable for all the ages. (applicable for ever).

மாத்திரை அளவே ஓசை குறித்து
மாக்கலை நிலையின் நெறிமுதற் பொருளாய்

அளவியல் ஓசை அளவுறத் தெரித்தே
அளவியல் நெறியால் அறைந்தனன் நன்றே (388)

மாத்திரை அளவையையும் ஓசையையும் குறியாகக் கொண்டு, வாஸ்து மண்டலக் கலையின் அடிப்படைப் பொருளாகவிளங்கும் அளவியல் அடிப்படையிலான, ஓசையின் அளவுமுறைகளைத் தெரிந்து, அளவியல் முறைப்படி நன்கு கூறினேன்.

Keeping the duration of matra and its sound (mode of articulation) as the basic factors and having known the acoustic counts based on the mathematical calculation pertaining to Vastu mandala, I have set forth the process of measurement in a befitting way in this text.

எழுத்தொலி ஓசை இலங்குற ஒலித்தல்
வழுத்துமாத் தொழிலென விளம்பல் இயல்பே (389)

எழுத்துக்களை ஓசை இலக்கணத்திற்குப் பொருந்த ஒலித்தலே மூலப்பொருளைப் போற்றுதற்கு அமைந்த சொற்றொடர்களைக் கூறும் முறை. இதுவே இயல்பான முறை.

Only the exact process of articulation of letter according to phonematic rules is the process of pronouncing the specifically designed group of words meant for extolling the greatness of the Primal Existence. This is the self-born and natural process.

உச்சியும் உரமும் கண்டமும் மூக்கும்
எயிறுறும் நிலையும் நாக்குறும் திறனும்
ஒலியிசை கிளத்தல் உற்றுணர் கலையே (390)

உச்சி, மார்பு, கழுத்து, மூக்கு, பல் - இவற்றின் திறத்தாலும் நாக்கின் திறத்தாலும் ஒலியை (எழுத்துக்களை) ஒலித்தலே, உணர்வால் உணரப்படும் கலைநுட்பமாகும்.

The artistic subtlety/excellence realised by one's own consciousness is indeed the skill to articulate the letters through the relevant efforts exerted in crest, chest, neck, nose, teeth and tounge.

உறுப்பியல் நோக்கி அளவியல் ஓங்கும் (391)

உறுப்புக்களின் மிகச் சிறப்பான அழகான அமைப்பைக் குறிக்கொண்டே அளவியல் சிறப்பான முறையில் அமையும்.

The process of measurement is designed perfectly with the sole motive of designing the most perfect and charming structure.

எண்நிலை இயலாய் எண்கலை நெறிக்கூர்
விண்ணியல் மூலம் விளங்குற நோக்கி
எண்ணெண் திறனாய் இலங்குறும் மாநெறி
எண்எழுத்து இயற்கலை அளவியல் கூற்றே (392)

இந்த அளவியல் கூறு —

எட்டின் நிலை, எட்டின்கலை — இவற்றை விண்ணியல் மூலமாக விளக்கமாகக் கண்டு, 64 திறன்களால் விளங்கும் வாஸ்துமண்டல இயல்பை எண் இயலாலும் எழுத்து இயலாலும் புலப்படுத்தும்.

The aspect of the process of measurement perspectively takes into account the state of octonary and its creative powers and reveals the perspectives of the Vastu mandala illuminated by sixty-four squares through numerical pattern and letter pattern.

ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி நோக்கி
ஐங்குறி ஐங்குறில் ஆய்ந்துணர் நோக்கால்
ஐயைந்து இயலும் அறுபான் நான்கின்
மெய்க்கலை நுண்பொருள் மெய்யுற்று உணர்ந்தே
ஐயமும் திரிபும் களைந்துறும் ஆற்றலால்
மெய்ப்பொருள் எண்ணும் எண்கலை விளங்கும் (393)

ஐந்தியல், ஐங்கலை, ஐந்நெறி, ஐங்குறி, ஐங்குறில் எழுத்து — இவற்றை ஆய்ந்துணரும் நோக்கினால், 25 அம்சங்களையும் (இயல்களையும்) 64 சதுரங்களில் நுட்பமாகப் பொருந்தியுள்ள மெய்க்கலைகளையும் அனுபவ அறிவால் அறியும்நிலை உண்டாகி ஐயமும் திரிவுணர்ச்சியும் நீங்கியுள்ள ஆற்றலால் மெய்ப் பொருளுக்குரிய எண்ணும் எண்கலையும் விளங்கும்.

He who is interested in Vastu should attain the ability to look at the perspectives of fivefold nature, fivefold art, fivefold process, fivefold point and five letters of short sound. He should acquire the power of knowledge to experientially know the 25 aspects and the creative powers rooted in all the sixty-four squares. By this ability and knowledge, he would attain efficacy, not impaired by doubt and distortion and he would understand the nature of number and letter pertaining to the Primal Existence.

இடமும் காலமும் பொருள்நிலை துலங்க
இடத்துறும் பயனும் காலத்து ஆற்றலும்
பொருள்உறும் சிறப்பும் பொருந்த நோக்கி
திருவினை ஆற்றல் அறிவர் நெறியே (394)

அறிவர்க்குரிய நெறியானது —

இடம், காலம், பொருள்நிலை இவை அனைத்தும் துலங்க, இடத்தில் பொருந்தும் பயனையும், காலத்தின் ஆற்றலையும், பொருளால் பொருந்தும் சிறப்பையும் நோக்கி, அழகுக்குரிய உருவக்கலைத்தொழிலைச் செய்தலேயாகும்.

There are three factors to be observed - Space, Time and the nature of the material. Having keenly observed the resultant effect of a particular place selected, the potency of Time and the refined and supreme state effected by the object, the artist should undertake the work of sculpting in order to bring into effect its beauty. This is the process being adopted by the experts in this field.

குறித்தியல் நெறியே குறிப்புணர் ஆக்கம் (395)

ஒரு பயனைக்குறித்து இயலும் நெறியே குறிப்பை உணரும் ஆக்கம் ஆகும்.

குறிப்பு — உருவத்தின் உட்பொருள்

ஆக்கம் — ஆகும் செயல்.

Only the phenomenon oriented towards an enduring purpose is the unfailing efficacy which makes known the symbolic message of the FORM.

ஒலியொளித் திறனே ஒண்தமிழ் ஆற்றல் (396)

ஒண்தமிழின் ஆற்றல் ஒலித்திறன், ஒளித்திறன் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதே.

The efficacy of the illuminative and blissful expression consists of both the sound-energy and light-energy.

ஐந்தொழில் அறிந்து மெய்யுணர்வு உற்றோர்
முந்துறும் காலம் இடம்பொருள் ஓர்ந்தே
காலமும் மூலமும் சீலக் கோலமாய்
ஞாலத் திறனும் நவையறத் தெரிந்தே
நுட்பம் காண்பர் நுண்ணுணர் வோரே (397)

ஐந்தொழில் நுட்பத்தை உணர்ந்து மெய்ஞ்ஞானம் பெற்றோர் — படைப்புக்குமுன் தோன்றும் காலம், இடம், பொருள் இவற்றை ஓர்ந்து காலம், மூலம், சீலம், கோலம், ஞாலத்திறன் இவற்றைக் குற்றமறத் தெரிவோரே ஆவர். அவர்களே நுட்பத்தைக் காண்பவர்கள், அவர்களே நுண்ணுணர்வு பெற்றவர்களாவர்.

Those persons who have attained supreme knowledge about the Absolute and Primal Existence through the realisation of the subtlety of fivefold function could understand the nature of Time that existed even before the creation of the Universe, Space and object and could become the knowers of the exact nature of Time, Primal Existence, Rhythm, Form and Universe. Only such persons could realise their subtleties. Only such persons are considered to be the persons of supreme consciousness.

மொழிமுதற் பொருள் அறிந்து இயல்நெறி நோக்கித்
தொழிற்கலை மொழி இயல் தாநெறி நுட்பம்
விழுமிய மெய்ப்பொருள் விரைவுறத் தெரிந்தே
செழுமொழி வளம்திகழ் செந்தமிழ்த் திறனாய்
உற்றுறும் நோக்கே உளத்தினில் உன்னி
உற்றறி உணர்வும் முற்றுறத் திகழ்ந்தே
மெய்க்கலைத் திகழ்நிலை உணர்வுறும் திறத்தால்
மையறு தொழிற்பெயர் வகையுற விரித்தே
காண்முறை காண்டல் கருதுபு நோக்கல்

ஈண்டிய பொருள்நிலை இயல்பின் ஆய்தல்
ஐந்திறம் நல்கும் செந்தமிழ் இயலே (398)

மொழிமுதற் பொருளாகிய ஓம் என்பதன் பொருளை அறிந்து, இயல் நெறியை நோக்கி, தொழிற்கலை, மொழி இயல், தாநெறி நுட்பம், மெய்ப்பொருள் ஆகிய இவற்றை அறியவேண்டும். வளம்மிக்க நாதமே செந்தமிழாக உருப்பொருவதை உளத்தினிற்கண்டு, அனுபவ அறிவை முழுமையாகப் பெற்று, மெய்க்கலை நுட்பம் உணர்வில் பொருந்தும் ஆற்றலால் தொழிற்பெயரை வகைபெற விரித்து, காணவேண்டிய முறைப்படிக்கண்டு ஊன்றி உணர்ந்து, பொருள்களின் நிலையை இயல்பாக ஆய்தலே, செந்தமிழ் இயல் வழங்கும் ஐந்திறமாகும்.

Having keenly understood the significant features of OM, the primal sound of language and observed the natural phenomenon, the expert should know about the functional art, science of language, subtlety of mandala-process and of the Primal Existence. He should intuitively realise that only the potential and primal sound evolves into the language of blissful expression and attain perfect experiential knowledge. Through the efficacy by which the subtlety of the Primal Existence becomes revealed in consciousness, he should know the varieties of functional words and observe their referents in due manner. Having contemplated these aspects, he should analyse the compact nature of objects. This is the process of fivefold aspect pertaining to the blissful expression.

காண்டல் கருதல் கருத்துற நோக்கல்
ஈண்டிய குவித்தல் இயல்புறும் நிலைநெறி
எண்ணெண் கலைத்திறன் ஐந்தியல் நோக்கி
நுண்பொருள் விழுப்பொருள் செம்பொருள் பருப்பொருள்
கருப்பொருள் கலைப்பொருள் கருத்துற்று ஓங்கி
பெரும்பொருட் சொற்கள் அருந்தமிழ்த் திறனால்
மொழிக்கலை நோக்கி மொழிவரே மேலோர் (399)

ஞான ஆற்றல் மிகுந்த மேலோர் —

காண்டல், கருதல் (அனுமானம்), கருத்துறநோக்கல் கிடைக்கும் விவரங்களை ஒருங்கே தொகுத்தல், அவற்றைப்

பொருத்தமுற ஒருங்குபடுத்தி உண்மைகாணல், 64 கலைத்திறன், ஐந்தியல் — அகிய இவற்றைக் கடைப்பிடித்து மொழிக்கலையின் இயல்பை நோக்குவர். நுண்பொருள், விழுப்பொருள், செம்பொருள், பருப்பொருள், கருப்பொருள், கலைப்பொருள் ஆகிய இவற்றைப் பற்றிய விளக்கத்தை உணர்வால் பெற்று, பெரும்பொருளாகிய (பிரம்ம வஸ்துவாகிய) மூலதை சிறப்பு வாய்ந்த தமிழ்த்திறனால் விளக்கிக்கூறுவார்கள்.

Those persons endowed with supreme wisdom would be able to observe the real nature of scientific language based on- i) perception ii) inference,, iii) contemplation, iv) assimilation of all the relevant data v) finding the truth by thoroughly analysing them, vi) creative powers (kalas) of the sixty-four squares and vii) the fivefold aspect. Having attained vast knowledge about subtle object, self-manifested object, eternal object, visible object, casual object, created object etc., they would be able to explain the nature of the real and great substance known as the Primal Existence through the language of blissful expression.

நூற்பொருள் நுதலிய ஐம்பொருள் நெறியும்
நூற்றிறம் விளக்கும் ஐந்தியல் ஐந்திணை
நூற்பாப் பொருள்திறன் நுண்ணிதின் ஓர்ந்தே
நூற்பொருள் ஆயல் நெறியோர் மரபே (400)

நெறியோர் மரபாவது — நூல் நுவல எடுத்துக் கொண்ட பொருள், அப்பொருளைப் பற்றிய ஐம்பொருள் நெறி, நூற்றிறம் விளக்கும் ஐந்தியல், ஐந்திணை, நூற்பாவின் ஆழ்ந்தபொருள் — ஆகிய இவற்றை நுட்பமாக ஆராய்ந்து நூற்பொருளின் சிறப்புத்தன்மையை நெறிப்படி ஆய்தலே ஆகும்.

The exact method adopted by the experts in the field of architecture and sculpture is

- to meticulously analyse the subject-matter or theme or design of the work undertaken

- to analyse the fivefold process related to that work

- to analyse the fivefold aspect to be explained by the scriptural tradition

- to analyse the mode of fivefold regulation (திணை)

- and to analyse the core and kernel of the work.

The uniqueness of the subject-matter/design of the work should be analysed only in this way.

ஐம்பொருள் செம்பொருள் மெய்ப்பொருள் ஓர்ந்தே
ஐந்நெறி ஐந்தியல் ஐங்குறித் திறனாய்
ஐயைந் தியலும அறுபான் நான்கின்
மெய்முதற் பொருட்டிறம் நுண்ணிலை தெரிந்தே
புள்ளி மூலப் பொருள்மெய் யாய்ந்துணர்
தெள்ளுரும் சீர்நெறி எண்ணிலை விளக்குபு
எண்ணெண் ணியல்நிலை மூலத் திறத்தால்
விண்ணுறும் நெறிமுதற் பொருள்நிலை விளங்கி
உண்முகம் நோக்கும் உணர்வுறுந் திறத்தால்
எண்முகத் தீர்ப்பியல் இயல்நிலை துலங்க
எட்டியல் நிலைநெறி கலைநெறி யுணர்ந்தே
விட்டுறும் மெய்நிலை மெய்ப்பொரு ளுணர்த்தும் (401)

ஐம்பொருள் வகைகளையும், வஸ்துவாகிய பொருளின் மூலநிலையையும் ஆய்ந்து, 25 இயல் வாய்ந்த வெளிப்பாடுகள் ஐங்குறிகளால் 64 கட்டங்களில் அமையும் முறையை உணர்ந்து, மூலப்பொருளே எண்ணின் திறத்தையும் 64 கட்டங்களால் வெளிப்படும் விண்ணின் திறத்தையும் புலப்படுத்துகிறது என்பதை அறிய வேண்டும். எண்வகைப்பட்ட செயல்முறையே எண் திசைகளிலும் நிறைந்து, எண்திசைகளின் ஈர்ப்பாற்றலால் படைப்புக்குரிய திறத்தை, உறுதிப்படுத்துகிறது என உணரவேண்டும். அதுவே எட்டியல் வாய்ந்த மண்டுக நெறி பிறழ்ந்தும் மாறியும் செயற்படும் நெறிமுறையையும் புலப்படுத்துகிறது.

The architect/sculptor should analyse, on scientific basis, the formation of five contents-subtle sense, direct sense, gross sense, core-sense and the aesthetic - and the exact purport of these contents. He should realise that only the subtle manifestation of the Primal Existence in 64 squares makes known the real potentiality of five dots and of 25 aspects manifested through them. The distinct and infallible way of realising the nature of Primal Existence

is capable of explaining the nature of Number and the existential nature of supreme space represented by 64 squares. The process of Octonary which pervades all directions and which always shines forth in its own essential nature would make it possible to know the everlasting process of artistic creations and that of art. It enables one to know the basic truth behind the leaping process of octave - pattern. (leaving behind one state and assuming another state).

ஒளிநிலைக் கலையுணர்ந் தியலுறும் ஆற்றல்
வெளிநில விண்ணெறி மெய்ப்பொருள் உணர்த்துறும்
உள்ளுணர் திறத்தறி எண்ணெண் ணியலும்
தெள்ளுற நோக்கிக் காலத் தியல்நெறி
விரைவுறும் சுழல்நிலை விளங்குற விளங்கி
திறமறிந் தாய்வர் சீரறி வோரே (402)

ஒளிநிலைக் கலையை உணர்வதால் விளங்கும் ஆற்றல் வெளியில் உள்ள பல்வேறு நிலைகளையும் விண்நெறியின் மெய்த்திறத்தையும் தெளிவாக உணர்த்தும். இவ்வுண்மையை கட்டிட - சிற்பக் கலையில் தேர்ச்சி பெற்றவர் நன்கு அறிய வேண்டும். அவ்வாறு அறிபவர்கள், உள்ளார்ந்த அனுபவத்தால் அறியப்படும் 64 இயல்களின் சிறப்பையும் தெளிவாக நோக்கி, அவற்றில் காலம் என்பது (ஆதிபௌதிகமாக) எவ்வாறு அமைகிறது என்பதையும் பொருத்தமாக விளங்கிக்கொண்டு, அவற்றின் திறங்களையும் அறிந்துகொண்டு செயல்முறைகளை ஆராயவல்லவராவர்.

Those who realise the specific features of architectural and sculptural field should know that the potency evolved through the knowledge of the inherent power of light-source is capable of making know the multifarious states of space and the exact value/power of the science of space. Those who know this fact, could evidently see the uniqueness of 64 squares - the uniqueness which could be experientially realised. They could also know how the Time - factor is installed there with its cyclic features. Having compatibly understood these features and having known their extra-ordinary

efficacies, they become equipped enough to analyse the functional and applicational aspects of those features.

காலை நுட்பங் கடிதின் உணர்ந்தே
மூலத் தியலறி முப்பொருள் தெளிந்தே
கலைநெறி ஓர்தல் நிலைநெறி மரபே (403)

காலத்தின் நுட்பத்தை மிகவும் நன்றாக உணர்ந்து கொண்டு, மூலத்தின் இயலை அறியவைக்கும் முப்பொருள்களைப் பற்றியும் (ஆண், பெண், அலி எனப்படும் மூன்று வகைப்பட்ட பொருள்களைக் பற்றியும்) தெளிவாக உணர்ந்து, அப்பொருள்களால் ஏற்படும் கலைநெறிகளை ஆராய்தல் என்பது தொன்று தொட்டு வரும் மரபு நெறியாகும்.

Having comprehensively understood the subtle nature of time and the nature of three existents (masculine, feminine and neutral kind) which reveal the nature of Primal Existence, the architect should analyse the patterns of creation, evolved through those existents. This kind of analysis is according to the old tradition.

நெறிநிலை விளக்கும் குறிமுதற் கலையாய்
அறிகலை யியலறி யாற்றலுற் றோங்கி
விரிதரும் எண்ணெண் கலைத்திற மூலம்
கரியா யிலங்கிக் கலைநிலைத் தேற்றம்
எண்ணியல் மொழியே ஒளியொலித் திறனொலி
நண்ணுறும் நாட்டம் மெய்கலைத் திறனாய்
உள்ளுணர் வுற்றே உறுப்பொரு ளோர்ந்தே
தெள்ளிய நுகர்வால் சீருறத் தெரித்தே
இயல்நெறி மாறா எண்முறை விளங்க
மயலறத் தெளிந்து விண்ணொளி நோக்கி
எட்கலைத் திறனால் மொழிநிலை யாய்ந்து
எட்டியல் மூலம் இயம்புவ நெறியே (404)

உரிய நெறிமுறைப்படி புள்ளிகளைக் குறித்துக் கொள்ளும் செயல் சிற்ப நெறியின் மேன்மைத் தன்மையை விளக்கும். குறியீடு செய்யும் கலையை அறியும் ஆற்றல் ஓங்கப்பெற்று ஒருவர் விளங்கவேண்டும். 64 கலைகளின் மூலத்தன்மையானது வெளிப்படாவகையில் (latent state) நுண்மையாகவும் அடிப்படையாகவும் விளங்க, அந்த மூலத்தன்மையால்

கலைவடிவம் தெளிவுபெற வடிவுகொள்ளும். எண்வகைகளாகப் பிரிவுபட்டிருக்கும் மொழியே ஒளியாகவும் ஒலியாகவும் உள்ள நாதயாக மூலநிலையில் விளங்குகிறது. அதன் உண்மைத் தன்மையை உணரவல்ல ஆற்றலே மெய்க்கலைத்திறத்திற்கு அடிப்படை. இந்த ஆற்றலே உள்ளனுபவம் பெறுவதற்கு வழி. உள்ளனுபவத்தால் பொருளின் உண்மைநிலையை உள்ளவாறு ஆராய்ந்து அந்த உண்மைநிலை செயல்முறை அனுபவத்தால் எப்படி வெளிப்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். எண்ணின் முறைகளை ஐயமற விளங்கிக் கொண்டு மூல ஒளிநிலையைப் பொருத்திப்பார்த்து எண்கலைத்திறத்தால் மொழிநிலையை ஆராய்ந்து தெளிய வேண்டும். இவ்வாறு ஆராய்வோர்க்கு எட்டியல் மூலமாகச் சிற்பமரபானது ஒளி - ஒலி நுட்பங்களைப் புலப்படுத்தும்.

Making of the points (dots) according to the rules of proportion would give rise to the perfect state of a sculpture. The nature of art would enable one to know the art of fixing the points. One's proficiency in that art should be developped more and more. The pattern of 64 squares (kala) is the most penetrative and basic and the artistic form is exceedingly concretised by the subtle and primal feature of 64 squares. Language, variegated into eight groups shines forth (operators) as both light and sound at the emerging state of Primal Existence. Only that power of knowledge which is capable of realising the exact nature of light and sound - potency of Primal Existence is the basic for the true and eternal art. Only that acumen is a channel for intuitive experience. Through his own intuitive experience, the expert should analyse nature of Existence in its own state and clearly understand how this innate and eternal nature expresses itself through experience. Having known the pattern of number, he should identify it with the effulgent Primal Existence. He should analyse the nature of language through the octave patterns. To him, the tradition of sculpture would reveal the subtle powers of sound and light through octonary.

மூலத் திறனே முப்பொரு ளாக்கம் (405)

முப்பொருள்களால் வரும் ஆக்கமானது மூலப் பொருளின் ஆற்றலே ஆகும்.

All the manifested patterns of threefold substance is, indeed, the manifesting power of the Primal Existence.

மூலங் குறிக்கும் முப்பொரு ளியலும்
கோலத் தியலறி குறிப்பி னோர்ந்து
ஐந்தியல் தேற்றம் அகவொளி நுணுக்கம்
ஐங்குறி மருங்கின் சுழல்நிலை யாற்றல்
தந்துறு மொடுக்கம் ஒடுக்கத் துண்மை
முந்துறும் நெறியால் முறையுறக் கிளத்தி
வந்தமாப் பயன் வகையுறத் தெரித்தே
செந்தமி ழொளிநிலை யியலுறத் தேர்ந்தே
ஐங்கலை யைந்திறன் அணுகுறும் நுணுக்கம்
தந்தமுந் நெறியால் அணுஅணு வோர்ந்து
அணுவணுத் திரளே மெய்க்கலை மூலம்
நுணுக்குற நோக்கி நுவலரும் மொழியால்
தேர்ந்துணர் மெய்ந்நிலை எண்ணெண் நெறித்திறன்
ஓர்ந்துணர் மதியோர் உணருவ திறனே (406)

மூலப் புள்ளியால் குறிப்பாகப் புலப்படுத்தப்படும் (தோற்றம் நிலைபேறு, ஒடுக்கம் என்னும்) முப்பெரும் நிலைகளையும் கோலங்களின் (உருவங்களின்) அடிப்படையில் அறியும் முறையை ஆசான் காட்டிய வழியில் ஆராய்தல் —

ஐந்தியல், அகவொளி, ஐம்புள்ளிகளைச் சார்ந்து சுழலும் வீச்சின் ஆற்றல், அந்த வீச்சில் நிகழும் ஒடுக்கம், அந்த ஒடுக்கத்தில் உள்ள விஞ்ஞான நுட்பம் - ஆகிய இவற்றை முதன்மையான வாஸ்து நெறியால் முறைப்பட விளங்கிக் கொள்ளல் —

தமிழின் ஒளிநிலையை உள்ளவாறு விளங்கிக்கொள்ளல்

ஐங்கலை, ஐந்திறன் — இவற்றின் நுட்பங்களையும் அணுவின் அணுத்தன்மையையும் மேற்கூறப்பட்ட மூன்று நெறிமுறைகளால் ஆராய்தல் —

இந்நான்கு செயல்களையும் மேற்கொள்ளும் அறிஞர்கள் அணுவில் உள்ள அணுத்தன்மையின் திரட்சியே மெய்க்கலைக்கு அடிப்படை என உணர்ந்து, சொற்களால் வெளிப்படுத்த இயலாத மெய்ந்நிலையை 64 சதுரங்களால் ஓர்ந்துணரக் கூடிய ஆற்றலைப் பெற்று பிரபஞ்ச ரகசியங்களை நன்கு உணர வல்லவர்களாவர்.

The primal dot (central point) is indicative of the three states of each existent (emergence, duration and dissolution). These three states are to be investigated based on the features of images/forms as directed by the perfect masters (gurus).

The pentadic state, inner consciousness, energy of the circular movements dependent on five dots, process of absorption in that circular movement, scientific significance in that absorption - all these are to be analysed through the most effective scientific way.

The eternal features of the effulgency of the self-propelling urge should be comprehended.

By doing the afore mentioned three studies, the architect should examine the subtle features and atomness contained in fivefold art and fivefold potency.

Those whose examine in this way realise that only the aggregate atomness of atom is the basis for the eternal FORM and ART; and they would gain the power of realising the ineffable state of Eternal Existence through the knowledge about 64 squares; only those would know well the secrets of the universe.

எண்ணியல் திறனால் எண்கலை யோர்ந்தே
எண்ணெண் நெறித்திறன் இயல்பட விரித்தே
ஒளியொழித் திறனால் ஓங்குறும் பெருநெறி (407)

எண்ணின் முறைப்படி எட்டுக் கலைகளையும் ஆராய்ந்து 64 நெறித்திறனை முறைப்படவிளக்கி, மயன் நெறியானது மற்றைய அனைத்து நெறிகளைக் காட்டிலும் ஒளிமொழித் திறத்தால் உயர்வாக விளங்கும்.

Analysing the eightfold aspect (unit) according to the number-pattern and explaining the functional process of 64 squares in a systematic way, the Mayonic science shines forth, excelling all other sciences.

வெளிமொழி ஓம்ஒலி மூலத் தியலாய்
மூல யாப்பொருள் புள்ளிக் கூற்றே

மூல நுட்பம் முறையுற நோக்குபு
காலமுங் கனியும் கருத்துறும் ஒளிநிலை
ஞாலத் தியல்நெறி நுண்ணுற நாடி
ஐம்பெருந் திறனா யகத்துணர் வோங்கச்
செம்மை மாநெறிச் சீர்சால் கலைநெறி
ஒளிநெறித் திகழ்ந்தே ஓங்குறும் எண்ணியல்
தெளிந்துணர் நிலைக்கலை செப்புவ மாநெறி
நெறிமுதற் குறியாய் நிலைபொரு ளோங்கி
குறித்துணர் பொருளைக் குறிப்பின் குறித்தே
குறியாக் குறியால் குறிகுறி யீட்டால்
நெறிமுத லோர்ந்து நிலையியல் நாடி
கலைத்திறன் காண்போர் கருத்துற விளக்கி
நிலைத்திறன் மொழியால் நவிலுமிவ் வியலே (408)

ஓம் என்பது மூலாகாச மொழி, அதுவே மூலத்தின் இயல். மூலப்பொருள் புள்ளியாகக் காட்டப்படும் நிலையும் இதுவே. இந்த மூல நுட்பத்தை முறையாக நோக்கிக் காலம், ஒளி, ஞாலம்- இவற்றை ஒருங்கிணைத்து ஆய்ந்துகாண வேண்டும். இந்த ஆய்வால் அனுபவ உணர்வு ஓங்கப்பெற்ற நிலையிலேயே மயன்நெறி செம்மை நெறியாகப் பொருந்தும். மயன்நெறியானது கலைநெறி, ஒளிநெறி, எண்ணியல், நிலைக்கலை (நிலைத்த உருவங்களை உருவாக்கும் கலை) — இவற்றை விளக்கும் நெறியாக விளங்குகின்றது. மூலப்புள்ளி இந்த நெறிக்கு முதற்குறியாகப் பொருந்தி, பொருள் நயத்தோடு ஓங்கி, ஒரு வடிவத்தால் (கோலத்தால்) உணர்த்த வேண்டிய கருத்துக்களைக் குறிப்பாக உணர்த்தும் வகையில் விளங்குகிறது. மூலப்புள்ளி, அந்த அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளப்படும் குறிகள். வரையறுத்துக் கூறப்படாத குறிகள். மாற்றத்திற்கு உள்ளாகாமல் முக்கியமாகக் குறிக்கப்படும் குறியீடுகள் — இவற்றின் அடிப்படையில் மயன்நெறியின் முதன்மைத் தன்மையை ஆராயவேண்டும். இந்த மயன் நூல், நிலைபேற்றை நாடிக் கலைத்திறனைக் காண்போரின் கருத்தில் பதியுமாறு முரண்படாத வாக்கியங்களால் கொள்கைகளை எடுத்துக் கூறும்.

The co-eval nature of Primal Existence is exactly the OM-sound erupted from the Primal Space. This is exactly the state of Primal Existence as symbolised by the central and Primal dot. One should know the subtlety of this

Primal Existence in an orderly way and should understand the co-ordinated role of Time, sound and world. Upon this understanding, his knowledge of cosmos gets more and more vitalised and only at this stage Mayonic Science would be an impeccable discipline for him. For him, Mayonic Science becomes an Order/a system that illustrates the science of creation, light, number, sculpture and so forth. The central dot is the basic symbol for this science and it symbolically express all the features depictable through images and forms. The unique nature of Mayonic Science should be analysed based on central dot, points marked according the sculptural lineaments, points of outsketch, unalterable points (brahma nadi). This Mayonic Work (Aintiram) would reveal the concepts through unequivocal and uncontradictory statements so as to be deeply pegged into the minds of those who analyse the values of Arts, aiming at eternity.

ஓங்குறு முணர்வால் உடலொளி யுயிரொளி
ஆங்குறு மியைபே யசைநிலை யாற்றல்
காற்றுறும் கலைநிலைக் கணக்கியல் தெரித்தே
ஆற்றுறு மாற்றல் அறியதி யோர்ந்தே
எண்ணெண் கலைத்திறன் இயல்புற் றிலங்கி
திண்ணமு முணர்வும் சீர்நிலைத் தேர்ந்தே
நாடுவ நாடி நன்னிலை யறிவர்
கூடுவ குடியின் குடிநிலை யோர்ந்தே
ஐம்பெருங் குடியின் செந்நிலை தேர்ந்தே
செம்பொருள் மூலத் திறனறி யாற்றல்
மெய்ப்பொரு ளுணர்வால் கண்டன ளாகி
செய்முறை விளக்கம் சிறிதியம் பினனே (409)

அறிஞர்கள் முதிர்ந்த அனுபவ அறிவால் உடலொளியையும் (மெய்யெழுத்தையும்) உயிரொளியை யும் (உயிரெழுத்தையும்) இயைபுபடுத்திக்கண்டு, மூல இயக்கத்தில் உள்ள அசைவாகிய ஆற்றலையும், அந்த இயக்கத்தில் காற்று (உடலின் வாயுக்கள்) கலை நிலைப்படி கணக்காக அமைந்திருக்கும் இயல்பையும் நன்கு உணர்வர். ஒழுங்கு முறையில் இயங்கும் காற்றில் பொருந்தும் ஆற்றலை ஓர்ந்து அதிலும் 64 கலைத்திறன் பொருந்தி விளங்குவதைக் கண்டு உறுதிநிலை, உணர்வுநிலை இரண்டையும்

இணைத்துப் பார்த்து நுட்பங்களை ஆராய்ந்து ஒழுங்கான அமைப்பை அறிவர். அந்த அறிஞர்களின் வழியேயானும் சென்று, மூலப்பொருள் கூட்டுவிக்கக் கூடும் உடலின் கட்டமைப்பை ஆய்ந்து, உடலின் ஐம்பெரும் பூதங்கள் இடம் பெற்றிருக்கும் செம்மை நிலையையும் நுனித்துணர்ந்து மூலப்பொருளின் திறத்தையும் ஆற்றலையும் மெய்ப்பொருள் உணர்வால் உணர்ந்தவனாகி, உடலையும் உருவத்தையும் செய்யும் முறையைப் பற்றிய விளக்கத்தை ஓரளவு இங்கே கூறியுள்ளேன்.

Scholars have known the co-ordinated and correspondent role of consonants and vowels- forms and their living expression - and they are capable of knowing the dynamic energy of the Primal Existence and the rhythmic movements of the wind encased within the given form. Having understood that energy is inherent in the winds that are in orderly movement, they know that the features of 64 squares are latent even in the movement of the wind. They co-ordinate both the concrete state and expressive state and know their subtleties and rhythmic structures. Following in their footsteps, having analysed the unified structure of body and having known how the five gross elements are related to the body and known the dynamism and energy of the Primal Existence, I have explained, to some extent, the methods of creating the body and form.

உற்றுறு முணர்வால் பெற்ற மாநெறி
சொற்றிறத் தாலறி நுட்ப மாக்கலை
எண்ணெண் ணியல்திறன் இனிதுற வோர்ந்தே
எண்ணியல் மூலத் தெழுபொரு ளாய்ந்து
எழும்பொருள் மூலத் தியல்நிலை யோர்ந்து
செழும்பொருள் நோக்கிச் சீர்நிலை தேர்ந்தே
இடையிடை யிடைவெளி எண்ணுறத் தேர்ந்தே
கடைமுத லிடையும் கணக்கியல் தெரிந்தே
அடைவுறத் தெரிந்துணர் மிடைபடா நோக்கே
உடலுயிர்க் கலைத்திறன் உள்ளுவ வுணர்ந்தே
உயிர்செறி மூலம் ஒளிக்கலை யுன்னிச்
செயிரற நோக்கித் தீயொளி யோர்ந்து
உன்னுறுந் திறத்தால் தகைபெற வோர்ந்து

செந்நெறி முந்நெறி சீருறத் தேர்ந்தே
இந்நிலை யந்நிலை யியல்பினில் சுட்டி
நிலையுறுங் கலைத்திறன் நெறியுறத் திகழ்ந்தே
கலைமொழித் தமிழொளி காண்டகு நெறியே (410)

அனுபவ அறிவால் முழுமை பெற்றுள்ள மயன்நெறியாகிய நுட்பக் கலையை 64- கலைத்திறத்தால் நன்கு ஆராய்ந்து -

எண்ணியலின் மூல நிலையில் உருக்கொள்ளும் பொருளை ஆராய்ந்து —

பொருள்களையும் உலகத்தையும் உருவாக்கும் முதற்காரண நிலையை ஆரய்ந்து —

இடையிடையே பொருந்தும் ஆகாச (சூனிய) நிலையையும் ஆய்ந்து —

தோற்றம், நிலைபேறு, இறுதி - இந்த நிலைகளின் ஒழுங்கினையும் கண்டு —

முறையாக அறியவல்ல ஆற்றலே உடல்-உயிர் தொடர்பான கலைத்திறனாகும். இப்படி முறையாக ஆராய்ந்து, உயிர் செறிகின்ற மூல ஒளிக்கலையை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்து, பொருள் வெளிப்பாட்டில் தீயின் பங்கையும் ஆராய்ந்துணர்ந்து, நூலறிவாலும் அனுபவ அறிவாலும் தெளிவுகண்டு, செந்நெறியையும் முந்நெறியையும் சிறப்பாக உணர்ந்துகொண்டு, அண்ட-பிண்ட இயல்புகளைத் தெளிவாக அறிந்து கொண்டு -

கலைஞன் நிலைத்த கலைத்திறனும் முறையான ஆற்றலும் திகழ்பவனாக விளங்க வேண்டும். இத்தகைய கலைஞனால காணத்தகுந்த நெறியே, கலைத்திறன்களை வெளிப்படுத்தும் தமிழ்ஒளியாகிப மயன்நெறியாகும்.

Mayonic Science is replete with experiential and intuitive knowledge and this is the science which is known through word-power. This should be understood against the background of the study of 64 squares. The architect should know the existent that emerges from the casual and seed-state of number-pattern. He should analyse the efficient first cause which gives rise to the emergence of worlds and objects. He should know about the intermediary

sentences. Having studied the essential scriptures replete with such word, the architect should retain in his mind the exact essence of them. The aspect of self-effulgent and self-propelling art (olittamil) is that which shines forth as the expressive art of imparting that essential knowledge, as the eternal existence and as the scientific art that flourishes through the science of existent. The supreme power is that which makes one concordantly see that eternal truth through the knowledge of language-structure.

கருத்திற் கருதும் கருப்பொரு ளோர்ந்தே
பருப்பொருள் நுண்ணியல் பொருள்நிலை தெரிந்தே
பொருளறி திறத்தால் விழுப்பொரு ளாய்ந்து
தெருளுணர் வுற்றுக் கோடல் சீர்நெறி
அறிநிலைக் கலையா லாய்முறை யாய்ந்தே
செறிநிலைப் பொருண்மை செப்புவ தியலே (413)

கருப்பொருளை ஆராய்ந்து பொருளின் பருமைநிலை, நுண்மைநிலை இவற்றைக் கண்டு, இவ்விரண்டு நிலைகளின் அடிப்படையிலும் பொருளைப் பற்றிய உண்மையை உணர வேண்டும். பருமைநிலை, நுண்மைநிலை இரண்டையும் தழுவியுள்ள மூலப் பொருள்நிலையை அறிந்து, தெளிவான உணர்வைக் கொள்ளுதலே சிறப்பான நெறியாகும். முறையான கலைநெறியால் இவற்றை ஆராய்ந்து பொருண்மையின் செறிவுநிலையை எடுத்துக் கூறுதலே சாரமான கலைநூலின் திறமாம்.

Having known the core and nexus of the substance and known its two states - gross and subtle - one should know the essential nature of that substance based on the knowledge of the two states.

Having understood the innate nature of the Primal Existence which enfolds within itself both the gross state and the subtle state, he should have a clear knowledge about the substance. It is the celebrated standard of a scripture of Art to express the concrete structure of the substance, having analysed the aforementioned features.

பொருண்மை சுட்டியும் வினையிய லுணர்த்தி
மருண்மை தவிர்த்து மெய்ம்மொழிக் கலையால்
ஐந்நிலை யைந்நெறி யகவொளி யாற்றல்
செந்நெறித் திறத்தால் நோக்குவ தியல்பே (414)

பொருண்மை நிலையைக் குறிப்பால் உணர்த்தியும், அதன் செயல்திறத்தை உணர்த்தியும், மருண்மையைத் தவிர்த்தும் —

தேர்ந்த மொழித்திறத்தாலும், தூயநெறியாலும் ஐந்நெறி, ஐந்நிலை அகவொளி ஆற்றல் — இவற்றை ஆராய்ந்து உண்மைகளை எடுத்துரைப்பதும் கலைநூலின் இயல்பாம்.

It is the nature of the scripture on Art/ Architecture to reveal the eternal concepts, having analysed the science of fivefold path, fivefold flow and the potency of inner consciousness, through ever applicable grace of language and in an uncontradictory way. Having avoided the equivocal ways, it should suggestively impart the structure of a substance and its dynamism.

மரபுறுங் கிளவி மெய்ம்மொழி யாக்கம்
திறனுறத் தேர்ந்தே செய்ந்நிலைக் கலைத்திறன்
சொற்பொருள் மூலம் தெரிந்துணர் நோக்கே
கற்றறி எழுத்தியல் கலைமுத லோர்ந்தே
தெற்றுறு முணர்வால் சீர்நெறி யாய்ந்து
தொன்மை துலங்கத் தூநெறி யணுகி
மென்மையும் வன்மையும் மெய்யுற நாடி
பன்னருந் திறத்தால் பைந்தமிழ் நெறியால்
உன்னி யுன்னி யுணர்நெறிக் கலையே (415)

சொல் தோன்று தொட்டு வழங்கும் முறையையும், சொல் உருவாகும் முறையையும் திறம்படக் காணவேண்டும். செயல்திறன் என்பது சொற்பொருள் மூலம் தெரிந்து உணரும் கூரிய பார்வையை (insight) அடிப்படையாகக் கொண்டதே ஆகும். எழுத்தியல் கலையின் அடிப்படை இவற்றை ஓர்ந்து, சீரிய நெறியை ஆராய்ந்து, தொன்மையான மரபுக்கு மாறுபடாத வகையில் தூயநெறியை அணுகி, மென்மைநிலையையும் வன்மை நிலையையும் உள்ளவாறு கண்டு, உயர்ந்த திறத்தாலும் தமிழ்நெறியாலும் சிந்தித்து உணர்தலே மரபுவழிப்பட்ட கலைத்திறனாகும்.

One should penetrate into and know the patterns of the usage of word that naturally comes down through the ages and the process of word-construct. The potency related to action is indeed the realization of the flexible and non-flexible states of a structure based on the analysis of letters, basic structural pattern of art and on proper approach which does not contradict the traditional way;it should be based on deep rumination through self-expressive language and effective way.

கலையுங் கருத்தும் நிலைமொழித் தலைமொழி
நிலையுறு முணர்வும் நெறிமுறை நோக்கும்
தலைமொழித் தமிழால் தன்னிக ரற்றே
கலைமொழி யொளிமொழி யொலியியல் நோக்கி
நிலைபெறுந் தொழில்திறன் எண்ணெணி ணியல்திறன்
கலையுணர் மிக்குக் கருத்துணர் வோங்கி
நுண்ணறித் திறத்தால் நுவலுவ தேர்ந்தே
எண்ணெறி யெண்திறன் எண்கலை நுட்பம்
கருப்பொருள் மூலம் காண்டல் நெறியாய்
பருப்பொருள் ளுணர்ந்தே பார்நிலை தேர்ந்தே
விழுப்பொருள் விண்பொருள் ஒளிநிலை யாய்தல்
செழும்பொருள் மாநெறிச் செந்தமிழ் வழக்கே (416)

கலையும் கருத்தும் நிலபெற்றிருக்கும் சொல், முதன்மைத் தன்மை உடைய மூலநாதமாகும். இதனை வெளிப்படுத்துவது தமிழ். நிலைத்த உணர்வு, முறையான நோக்கு — இவற்றைத் தமிழால் தன்னிகரற்ற முறையில் வெளிப்படுத்த வேண்டும்.

தொழில்திறன், 64-இயல்திறன் — இவற்றால் கலையுணர்வு மிகப்பெற்று, கருத்தும் உணர்வும் ஓங்கப்பெற்று, பல நூல்களைப் பயின்று ஆராய்ந்து, எட்டின் நெறி, எட்டின் திறன், எண்கலை நுட்பம், கருப்பொருள், மூலம் — இவற்றை உணர்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, பருப்பொருளை உணர்ந்து, பார்நிலையையும் தேர்ந்து, சிறப்பு நிலையையும் (விழுப்பொருள்), விண்நிலையையும் (விண்பொருள்) ஒளிநிலையையும் ஆராய்தலே, மாநெறியாகிய தமிழ்வழக்கின் இயல்பு.

The primal sound-source is the efficacious word manifested by the self-expressive language. The artist/ architect should express eternal truths and methodic

process through this language in a most effective way. Language should be approached through the study of art, sound and light. The regular streaming of the language of self-expression which makes known the perfect and pure state includes the following steps:- functional power, nature of 64 squares, well unfolded knowledge effected by the scriptural studies, the process and efficacy of octonary, subtlety of number-pattern, the seed-state and primal existence, knowledge about the manifested and visible form, nature of the enclosed ground, and analysis of the state of excellency, space, and effulgence.

நெறிமுறை வழக்கே நிலையுற நோக்கிக்
குறிகுறித் தியலும் குறிப்புறுந் திறனும்
நோக்குறும் திறன்மதி வாக்குறு மொளியும்
ஆக்குறுஞ் செயல்திறன் அருங்கலை மூலம்
ஒளிநிலை யோர்ந்தே மூலத் தியலெழும்
வெளிமொழிச் செந்நெறி விளம்பலும் மரபே (417)

தொன்றுதொட்டு வரும் உலகியல் வழக்கின் நிலைத்த தன்மையைக் கலைஞன் நெறிப்படியும் பொருத்தமாகவும் காணவேண்டும். புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அமையும் இயலையும், குறிப்புப் பொருள் பொருந்தி அமையும் திறத்தையும் உணரவல்ல அறிவாற்றலால் எழுத்தில் பொருந்தும் ஒளி, அதன் ஆக்கத்திறன், கலைமூலம், மூலத்தின் ஒளிநிலை ஆகிய இவற்றை ஆராய்ந்துணர வேண்டும். அந்த மூலத்தின் இயலால் உண்டாகும் வெளியைப் பற்றித் தெளிவாகக் கலைஞன் விளக்கிக் கூறுதலும் தொன்று தொட்டுவரும் மரபாகும்.

The architect should agreeably know the eternal nature of empirical course that comes down through the ages. He should know the general pattern effected by dots, marked out in different ways according to the sculptural tradition and the symbolic meaning enshrined in that pattern. Thereupon, he should analyse the conscious power of letters, their creative aspect and their role as casual factor in creation and the light aspect of the Primal Existence. He should explain the nature of space manifested through the functional mode of the Primal

Existence. Such sort of explanation and exposition by the artists is according to the Tradition.

அகவெளிப் புறவெளி இருநிலைத் திறத்தால்
அகத்துறு முணர்வொளி அருந்திற லாற்றல்
உணர்வாற் றிகழ்ந்து ஒளிபெற நோக்கின்
புணர்நிலை மெய்க்கலை பொருந்துவ நோக்கி
உயிரொளி நுட்பம் உணர்வொளித் திட்பம்
செயிரற நோக்கின் ஆண்பெண் ணியல்பால்
ஒன்றே நிலையெனும் மெய்ந்நிலை தேர்ந்தே
நன்றே யறிந்தனம் நவில்நிலை யொளியே (418)

அகவெளி - புறவெளி — இரண்டையும் உணர்வதால் அகத்தே பொருந்தும் உணர்வாகிய ஒளி, அந்த ஒளியின் ஆற்றல் — இவற்றை ஆழ்ந்து சிந்தித்து ஒளிபெறக் காண வேண்டும். இவ்வாறு காண்பதால் அகவெளியும் புறவெளியும் கலந்து பொருந்தும் நிலையைப் பற்றி நன்கு உணர முடியும். இக் கலப்பு நிலையை மெய்க்கலை முறைப்படிப் பொருத்தமாகக் கண்டு உயிரொளி, உணர்வொளி இவற்றைத் தெளிவாக உணர்ந்தால் பிரபஞ்சம் முழுமையும் ஆண்கூறும் பெண்கூறும் இணைந்த ஒன்றின் நிலையே என்னும் உண்மை புலப்படும். இவ்வாறு சொல்லப்படும் ஒளிநிலையை நலம்பெற நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.

If the illumination blossmed in the mind based on the internal and external spaces and the potency of that illumination are meditated well, one could fully realise the nature of a significant state in which both internal and external spaces get unitively established. This state of identity of spaces is to be known in a systematic way. If the conscious power of soul and concreteness of thought are comprehensively analysed, he could understand that the whole universe is a structure in which the factors of both maleness and femaleness coalesce. We have perfectly known this effulgent state.

மெய்க்கலை யுணர்வொளி நண்ணுறுந் திறத்தால்
மெய்யுயிர் நெறித்திற னியல்பினிற் றெரித்தே
தெரிநிலை விளங்கும் இயலுறு மாற்றலால்
விரிவுற நோக்கி விண்ணிலை யாய்ந்து

விண்ணொளி ஒலிநிலை மெய்யுற விளங்குபு
எண்ணொளிக் கலையின் எழிலுறுந் திறத்தால்
ஆற்ற லைந்தியல் ஐந்நெறி நோக்கித்
தேற்றமும் தோற்றமும் பொலிவுற நோக்கி
மூலத் தியலெழும் முப்பொருள் தேற்றி
மூல வைம்பொருள் ஐங்குடித் திறனாய்
நெறிமுறை யோர்ந்து நிலைக்கலைத் திறத்தால்
குறிகுறித் தியலும் உண்மை யாய்ந்துணர்
மரபே யியலெனும் மெய்ம்மை யுணர்ந்தே
மரபியல் வழுத்தினன் மெய்ம்மொழி தேர்ந்தே (419)

மெய்க்கலையைப் பற்றிய அறிவைப்பெற்று, மெய்-உயிர் இரண்டின் உண்மையான இயல்புகளைக் கலைஞன் நன்கு உணர வேண்டும். இதன் அடிப்படையில் உருவாகும் ஆற்றலால் விண்ணின் ஒளி-ஒலி நிலைகளை உள்ளவாறு உணர்ந்து எண்கலையின் அடிப்படையிலும் ஒளிக்கலையின் அடிப் படையிலும் ஐந்தியலையும் ஐந்நெறியையும் உணரவேண்டும். கோலத்தின் தோற்றநிலை, தெளிவுநிலை இரண்டையும் முழுமையாகக் கண்டுணர்ந்து மூலத்திலிருந்து தோன்றும் ஐம்பொருள், ஐங்குடித் திறனாக மாறும் முறையைச் சீரிய நெறியில் ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்துணரும் மரபுதான் இயல்பான மரபு என்னும் உண்மையை உணர்ந்து, மெய்ம்மொழியை ஆராய்ந்து, இம்மரபினை மிகவும் போற்றி எழுதுகின்றேன்.

The artist should realise the exact creative process of both the consonant-aspect and vowel-aspect, through a thorough knowledge about the science of Existence. This realisation gives rise to a power by which he analyses the structure of space, its effulgence and its sound. Based upon this, he should understand the nature of fivefold aspect and fivefold stream. He should clearly know the originating state and crystalised state of a FORM and know how the fivefold substance transforms into fivefold belt in the expansion of space. Only this traditional way of analysing these aspects is known as the natural or spontaneous tradition. Having realised this fact, I reverentially write about this spontaneous tradition, having analysed it systematically.

மொழிப்பொரு ளுண்மை விழியுணர் வோங்கி
செழுங்கலைத் திறமுறும் செந்நெறித் திறத்தால்
புனையா ஓவியம் பொருள்தெரி யாற்றல்
வனைநெறி வண்ணம் எழுங்கலை வனப்பே
திறமுறத் தெரிந்தே செவ்வணத் திறத்தால்
புறமுறும் ஐவணம் நிலையுறத் தேர்ந்தே
வண்ணத் தியலும் வனப்பும் எழிலும்
எண்ணத் துணர்வும் எழுதரும் நோக்கமும்
வரைதல் நெறியே வரைவுறத் தீட்டு
நிறைநிரல் நோக்கி நெறியணி யாக்கி
குறிநெறிக் குறித்தல் புறப்புறந் தேர்ந்து
அறநெறித் திறந்தால் அகப்புற மாய்ந்து
அகமும் புறமும் மிகுமெனத் தேர்ந்தே
அகவொளி யாற்றலால் வண்மை உணர்ந்தே
ஓவிய நெறிமுறை ஓமெழுத் துற்றே
ஓமியல் நெறிக்கலை ஒள்ளிதி னுணர்ந்தே
எழுத்துறும் நிலைவெறி யோவியக் கலைநெறி
வழுத்தினன் சிறிதே ஒளிநிறைத் தமிழால்
உரைத்தன னாகி உவந்தனன் நன்றே (420)

பொருளைப் பற்றிய ஞான உணர்வு ஓங்கப் பெற்று, புனையா ஓவியம், அதன் உட்பொருளை அறியும் ஆற்றல், வண்ணம், கலை வனப்பு — ஆகிய இவற்றைக் கலைஞன் உணரவேண்டும். ஐவகை வண்ணங்களையும் நன்கு தெரிந்து கொண்டு வண்ணத்து இயல், வனப்பு, எழில், எண்ணம், உணர்வு, நோக்கம் — இவற்றின் அடிப்படையில் ஓவியம் வரைதலே மரபுநெறியாகும். தீட்டுதல், உருவம் முழுமை பெறுதல், அலங்காரம் — இவை நன்முறையில் அமைய வேண்டும். புள்ளிகளைக் குறிப்பதன் மூலம் அங்க வளைவு, நீட்சி ஆகியவற்றுக்கான வெளிப்புற அளவுகளைக் குறித்துக் கொண்டு கலைநெறிப்படி உருவம் (புறம்) அதன் மெய்ப்பாடு (அகம்) இவற்றை ஆராய்ந்துணர்ந்து ஓவியத்தை வரைய வேண்டும். எங்கும் எதிலும் அகமும் புறமும் ஒன்றித்த நிலையே அடிப்படையாகப் பொருந்தும் என்ற உண்மையைப் புரிந்து, ஓவிய நெறிமுறையும் 'ஓம்' எழுத்தினின்று தோன்றிய ஒன்றே என்று உணர்ந்து கொண்டு ஓவியக் கலைநெறியைத் தமிழால் சிறிதே போற்றினேன். இவ்வாறு உலகத்தோர்க்கு உரைத்தவனாகி மிகவும் மகிழ்ச்சி பெற்றேன்.

An artist, being endowed with the power of consciousness related to word-content, should know the outsketch process of understanding its intended purpose, perfect colourfulness and the aggregate beauty. Having properly understood the nature and effect of five colours, according to the art of painting, he should draw the portrait on the basis of colour-correspondence, aggregate beauty, the imposing appearance and its main theme and purpose. Drawing of the lines, gradual manifestation of the intended form through those lines, ornamentation etc - are to be fittingly decided. Having properly designed by marking out the points, the curvings and the stretch of bodily features and having a knowledge about the external features (lineaments) and the expression of inner feeling of the intended form, the artist should draw the portrait. Having understood the fact that always and everywhere only the unified state of both the outer and inner aspects serves as the basis for all drawings and having realised the worthiness of the fully evolved figure and having known that the exact process and pattern of drawing is evolved only from 'OM', I endearingly praise the art of drawing/painting. I derive happiness by imparting this knowledge to the world.

நன்றும் தீதும் நலனுறத் தெரிந்தே
பொன்றாப் புகழும் பொருளும் நோக்கி
குன்றுறும் மெய்வலி குன்றெனத் திகழ்ந்தே
நன்றுறு மியல்பின் நாடுறும் நாட்டம்
உணர்வொளித் திறனு மோங்குறும் மெய்யுயிர்
உணர்நெறி யியலால் செய்வினை யாற்றுபு
வினைத்திற முயற்சியும் வென்றியும் மெய்மையும்
நினைப்புறுந் திறனும் நவிலலும் நோக்கலும்
உயிரொளி யுணர்வின் செயிரறும் திருவினை
அயிர்ப்பற நோக்கி யாளல் நெறியாய்
நெறிமதி யாளர் நிலையுறக் காண்பரே (421)

நன்மை, தீமை — இவற்றைத் தனக்காக மட்டுமன்றி உலக நன்மையின் பொருட்டும் தெரிந்து கொண்டு, 'புகழும் பொருளும் பெறும்நிலையைக் குறிக்கோளாகக் கொண்டு, நாளுக்கு நாள்

குன்றிவிடும் இயல்புடைய உடலைக் குன்றுபோல் ஆக்கிக் கொள்ளும் வழிமுறையை உணர்ந்து கொண்டு கலைஞன் சிறப்புற விளங்க வேண்டும். உணர்வொளித்திறன் ஓங்கும் வகையில் உடலையும் உயிரையும் உணர்கின்ற நெறிமுறைப்படி செயல்களைச் செய்ய வேண்டும். வினைக்கேற்ற முயற்சி, முயற்சியில் வெற்றி, மெய்ம்மை, சிந்திக்கும் ஆற்றல், எடுத்துரைக்கும் ஆற்றல், குறிக்கோள் ஒன்றை ஏற்றுக் கொள்ளல் — இவையே அறிவொளியும் உணர்வும் மிக்க உயிரின் செயல்களாகும் என ஐயமறத் தெரிந்து கொண்டு, தெளிவு பெற்று, என்றைக்கும் பொருந்தும் நிலையான உண்மைகளை, மாநெறிக்கு உரியோர் காண்பார்கள்.

Having known the goodness and the badness, not only for his own sake but also for the welfare of the world and aiming at fame and wealth, and having known the perfect way of making the perishable body to be imperishable, the artist should be steadfast in his own pursuit. He should perform his concerned activities in a way by which he could realise the nature of body and soul, and by which his power of consciousness gets more and more enlightened. He should understand that the sincere efforts pertaining to the work undertaken, success in those efforts, truthfulness, deep thinking, expressive faculty and the principal aim - these six are the characteristics of the soul. Having gained clarity in these concepts, those belonging to the great path of Mayan, being endowed with scientific knowledge would always envision the external truth.

எண்ணே யியல்தெரிக் கணக்கிய லாற்றல்
உண்ணோர் நோக்கி யொளியுறுந் திறத்தால்
மண்ணியல் பறிந்தே மண்கலை தேர்ந்தே
எண்ணிலை யோங்கி யெண்ணமு முணர்வும்
நண்ணுறும் ஆறு பத்துபத் தாறாய்
எண்ணியற் கணக்கின் எழிலுறு மாற்றல்
மண்ணியல் பறிந்தோர் மதியொளித் திறத்தால்
எண்ணுறுங் கால நிலையியல் பறிந்து
திண்ணமுங் குறிப்பும் செழுங்கலைத் திறமும்
ஒண்ணிதின் நோக்கி யொன்பது மாய்ந்து

நன்றுறும் நலனெறி மெய்க்கலை யாற்றல்
ஒன்றுறும் ஒளித்திறம் மெய்க்கலை மொழியே
பார்நிலை யாற்றல் காலமு மறிந்து
தேர்நிலைக் கலைநெறிச் செப்புவ தோர்ந்தே
விண்ணும் மீனும் நுண்ணிதின் நோக்கி
எண்ணுறுங் காலத் தியலறி வுற்றே
பார்நிலை யாய்ந்தறிப் பெருங்கலை யெண்ணியல்
'சீ'ரறி வுற்றோர் செப்புமா நெறியே (422)

எண் இயல் தெரிவிக்கும் கணக்கியல் ஆற்றலால் உள்ளத்தை ஒருமுகப்படுத்திக் கண்டு உள்ளொளி பெற வேண்டும். உள்ளொளியைப் பெறுவதால் மண்ணியல், மண்கலை இவற்றை அறிந்து கொண்டு இவற்றை ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் 32 இன் அடிப்படைக் கணக்கில் எழுச்சிபெறும் ஆற்றலை உணரமுடியும். மண்ணியல் அறிந்தோர் காலநிலையின் இயல்பினை அறிந்து கொண்டு திண்மைநிலை, குறிப்பு, கலைத்திறம் இவற்றை நன்கு ஆராய்ந்து, ஒன்பது வகைப்பட்ட ஆயாதி முதலான கணக்குகளையும் ஆய்ந்து, நலம்மிகும் வகையில் உருவாக்குவதே மெய்க்கலை. இந்த மெய்கலை ஆற்றலின் அடிப்படையில் ஒளித்திறம், மொழி, பார்நிலை, அதன் ஆற்றல், காலம் — இவற்றை அறிந்துகொண்டு தேர்நிலைக்கலை புலப்படுத்தும் உண்மைகளைக் கருத்தில் கொண்டு, விண்நிலை, விண்மீன் நிலை இவற்றையும் பொருத்தமுறக் கண்டு, காலத்தைப் பற்றிய முழுமையான அறிவு பெற்றுப் பார்நிலையை ஆராய்ந்து அறியும் கலையே, எண்ணியல் பற்றிய அறிவு உடையோர் கூறும் மாநெறியாகும்.

The artist should have intuitive consciousness, having entered his mind through the calculations of number pattern. Through that consciousness, he should know the nature of the enclosed ground, earth's creative factors, and become capable of thinking about the basic functional mode of 32 padas. Those who know the nature of earth, should also know the nature of selected time, stability, factors indicated by earth and time, artistic skill and the ninefold determination (derivation) such as aya and so forth. They should analyse them in a beneficial way. This indeed, is the efficacy of eternal and enduring art. Based on the nature of true art, he should know the effective mode of light, sound(language), earth's rotation

effect of time etc. He should think about the facts indicated by the position of chariot, position of space and asterisms and the role of time. Thereupon, he should determine the position of the selected ground. Only this process is the one enunciated by the scholars of number pattern.

ஒளிநிலை மெய்ந்நெறிப் பெருங்கலைத் திறத்தால்
வெளியும் மண்ணும் விளைநிலை யறிந்தே
கருத்துறுங் கருப்பொருள் கருத்துறத் துலங்கி
பருப்பொருள் பார்நிலை விழுப்பொருள் நோக்கி
உருப்பொருள் தோன்றா உணர்வினிற் றிகழ்ந்து
அருங்கலைச் செழும்பொருள் விண்ணொளித் திகழ
உண்முகம் நோக்கி அகவொளித் திறத்தால்
எண்முகத் தீர்ப்பியல் நண்ணுவ நெறியே (423)

ஒளிநிலையாகிய மெய்ந்நெறிக் கலையால் வெளிமுதல் மண் ஈறான பூதங்கள் தோன்றும் முறைகளை அறிந்து,

கருப்பொருள் பற்றிய உண்மைகள் நன்கு விளங்கப் பெற்று,

மூலப்பொருள் பருப்பொருளையும் பார்நிலையையும் வியாபித்திருக்கும் நிலையை ஆழ்ந்து சிந்தித்து,

வெளியே உருவாக்கப்பட்டுள்ள வடிவத்தைப் பற்றிய கோட்பாடு உள்ளத்துள்ளும் திகழப்பெற்று,

கலைப்பொருளின் நிலையையும் விண்ணொளியின் நிலையையும் உண்முகமாக நோக்கிக் கண்டு, எல்லாத் திசைகளிலும் பொருந்தியுள்ள ஈர்ப்பியல் நிலைபற்றிய உண்மையை அறிஞர் நெறிப்படி உணரவேண்டும்.

The artist should know the evolutionary process of gross elements from space to earth - through the science of absolute Truth otherwise known as Existential light. He should well understand the essential concepts concerned with the basic laws of *Vaastu* and penetratively think about the pervasiveness of the Primal Existence over both the gross and visible structures and the earth. He should have his mind well stored with the theories related to the forms depicted. Being his mind turned inward, he should analyse and understand the state of causal factors and the state of space. He should know the truth related

to the gravitational pull that is actively present in all directions. The knowledge able persons should be endowed with these penetrations.

சர்ப்பும் வேர்ப்பும் இணையிய லறிந்தே
சர்ப்பியல் நெறியால் மெய்ந்நிலை தேர்ந்தே
விண்கலை யாற்றல் நுண்ணிதி னோர்ந்தே
எண்கலை முடிவே இயற்றுவ நெறியே (424)

சர்ப்பியல் நிலையும் கோலங்கள் வேர்விட்டுக் கிளைத்திருக்கும் நிலையும் இயைபுற்றிருக்கும் தன்மையை அறிந்து, சர்ப்பியல் நெறியால் மெய்ந்நிலையை உள்ளவாறு உணர்ந்து, விண்கலையின் ஆற்றலை நுட்பமாக உணர்ந்து எண்கலைத் தொடர்பான கோட்பாடுகளின்படி கலைஞர்கள் கோலங்களை உருவாக்குவார்கள்.

Having known the correspondence between the state of irresistible pull exerted in all directions and the well-rooted and branched out state of forms and having known the existential state exactly as it is through the force of directional pull and having known even the minute aspects of the power of space-science, the artist would make the forms according to the corresponding number-pattern.

அரும்பொருள் மெய்ந்நெறி யருங்கலை யுணர்ந்தே
வரும்பொருட் காலம் இடநெறித் தேர்ந்தே
முப்பொருள் முந்நெறி முக்கலை நோக்கி
செப்புவ தியல்நெறி யைந்தியல் மூலம்
ஐங்கலை மெய்த்திறன் நெறிநிலை யோர்ந்தே
தங்குறும் பொருளியல் சாற்றுமா நெறியே (425)

உணர்தற்கரிய 'வஸ்து' என்பதன் தொடர்பான கலைநுட்பங்களை உணர்ந்து கொண்டு, வடிவுபெற வரும் பொருள், காலம், இடம் இவற்றை ஆராய்ந்து, முப்பொருள், முந்நெறி, முக்கலை — இவற்றை நுட்பமாகக் கண்டு, தெளிவுபெற்ற நிலையுடையோர்க்கு ஐந்தியலுக்குரிய மூலநிலையானது இயல்பான நெறியை விளக்கும். வாஸ்து மாநெறியானது, ஐங்கலையின் மெய்த்திறத்தையும் நெறிகளின் தன்மையையும் ஆய்ந்து அவற்றின் அடிப்படையில் உருவாகும் கோலத்தின் சிறப்பை விரிவாகக் கூறும்.

Having known the artistic subtleties related to Vaastu and having scrutinised the nature of substance from which form is to be made, nature of time and space, — and

- having studied the nature of Triple substance, Triple Path, and Triple Art, the artist should understand the features of the Primal state belonging to the Pentadic system, that could explain the spontaneous way of Vaastu. The great path, known as Mayonic Science, is capable of explaining the uniqueness of forms, having analysed the exact potential state of fivefold system and its varied stages.

பெருங்குடிச் சிறுகுடிப் பெட்புற நோக்கி
ஒருநெறிப் பொருளும் உருநெறித் திறனும்
ஒருமொழி யுணர்வால் பெரும்பொரு ளாய்ந்தே
ஒருமொழி ஓமென வுணரறி வுற்றே
மெய்க்கலை மெய்யொளி மெய்யுறத் திகழ்ந்தே
உய்முறை ஒலிநிலை யுணர்வினிற் றிகழ்ந்தே
ஆற்றும் ஆற்றல் அகவொளி நோக்கி
தேற்றம் தேர்தல் செய்முறைக் குறியாய்
அறிநிலை மெய்ப்பொருள் அகத்துணர் வுற்றே
குறிமுறை யுணர்த்தல் எண்ணிலை யியலே (426)

பெரிய அமைப்புக்கேற்ற வாஸ்து மண்டலத்தையும் சிறிய அமைப்புக்கேற்ற வாஸ்து மண்டலத்தையும் உள்ளவாறு உணர்ந்து, பெரும்பொருளாகிய மூலத்தின் வெளிப்பாட்டிற்கு ஏற்ற முறையில் கோலத்திற்குரிய பொருளையும் வடிவ அமைப்புக்குரிய நெறிமுறையும் 'ஓம்' உணர்வால் ஆராய்ந்து காணவேண்டும்.

"ஒரு மொழி" என்பது ஓம் என்பதே எனும் உண்மையை உணர்ந்து, மெய்க்கலை, மெய்யொளி — இரண்டின் உண்மையும் நன்கு விளங்கப்பெற்று, நினைத்த வடிவத்தைப் பரிபூரணமாக அமைப்பதற்கேற்றவாறு ஒலிநிலையைப் பற்றிய விளக்கம் உணர்வில் திகழப் பெற வேண்டும்.

அனைத்தையும் உருவாக்க வல்ல ஆற்றலைப் பற்றி அகவொளியால் அறிந்து "தெளிவான நிலையை உணர்தலே பயிற்சிக்குரிய குறிக்கோளாகும்" என உணர்ந்துகொண்டு உண்மை காண வேண்டும்.

கோலத்தால் அறியப்படும் மெய்ப்பொருள் பற்றிய உணர்வு வாய்க்கப்பெற்று, குறிகளை முறைமையாக வெளிப்படுத்தலே எண்ணிலையின் தனிச்சிறப்பாகும்.

The artist/architect should exactly know the features of Vastu Mandala as applicable to larger and smaller constructions. He should analyse the nature of objects fit for defecting or sculpting the forms and the proper methods of creating those forms, through the science of OM. He should examine these aspects, according to the orderly expression of the Primal Existence and should be keen in knowing the Truths. Further, he should realise the fact that the single and unique word is nothing but OM. He should have clear knowledge about the nature of both existential science and Light. He should have a well-designed knowledge about acoustics in order to depict/ sculpt the desired form in an excellent way. He should think about the unfailing basic power capable of effecting all the forms desired. He should understand that the goal of apprenticeship is the realisation of crystalised and ultimate state of form. Having gained inner experience through form and its symbolism, he should methodically reveal the relevant symbols. The unique feature of number - pattern is to reveal the role of symbols.

எண்ணிலைக் கலைத்திறன் எண்ணெண் திறனாய்
விண்ணொளி மேவும் மெய்ப்பொருள் குறித்தே
எண்ணெண் கலைதரும் ஒளிநிலைக் கலைதெரி
திண்ணமு முணர்வும் நண்ணுறுங் குறிப்பால்
மூலத் தெழுங்கலை இயல்புற நோக்கிக்
காலமுய் பொருளுங் கருத்துறக் கண்டே
இடமுறுந் திறத்துண ரெண்ணியற் கணக்கும்
அடலா லியற்றி யறிவா லறிந்தே
உணர்வினின் நோக்கி ஒருபெருந் திறத்தால்
உணர்நிலைக் கலையா யுரைத்தல்மா நெறியே (427)

எண்ணியலை அடிப்படையாகக் கொண்ட கலைத்திறன் 64 திறன்களாக விண்ணொளியைப் பொருந்தும் முறையைப் பற்றி ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும் பொழுது 64 கலைகளால் உருவாகும் ஒளிநிலைக் கலைகளை உணரத் துணைநிற்கும்

உறுதிப்பாடு, உணர்வு இவற்றைப் பெற வேண்டும். மூலப்புள்ளி யிலிருந்து தோன்றும் கலைகளை உள்ளவாறு கண்டுணர்ந்து, காலத்தையும் இடத்தையும் இயைபுபடுத்தி, வாஸ்து மண்டலத்தில் செய்ய வேண்டிய எண்ணியற் கணக்குகளை முறைப்படச் செய்து, அதன் உறுதியான நிலையை அறிய வேண்டும். அதனை அனுபவத்திறத்தால் மேலும் உறுதிப்படுத்திக்கொண்டு, இவையனைத்தின் விளைவாகவும் வரும் பயனை அனைவர்க்கும் விளங்கும் வகையில் எடுத்துரைப்பதே வாஸ்து மாநெறி.

The architect should investigate the process by which the efficacy of science based on number pattern gets identified with the space-light through 64 square. In that pursuit he should have stability and consciousness, in analysing the causal factors of light source effected by 64 squares. And consequently, having perceived the manifesting factors arising from the Primal Dot, he should co-ordinate both time and space and make the essential calculations (derivations) related to vastu mandala and determine the aspects such as stability and longevity. He should ascertain these facts through his own prior experience. The traditional science related to Vastu is capable of revealing with great insight and penetration, the cumulative effect of these calculations so as the benefit the whole world.

நிலம்நீர் நெருப்பே காற்றும் வெளியும்
புலமுற நோக்கிப் பொருந்திய லாய்ந்து
வலமிடம் தெரிந்தே வருங்கலை யுணர்வால்
புலநெறி சான்ற மெய்ப்பொருள் நோக்கி
ஐம்பொரு ளைங்கலை யைந்நெறித் திறத்தால்
ஐயைந் தியலை நெறியுறத் தெரிந்தே
நோக்கு நுண்மதி நுட்பமுந் தேர்ந்தே
நோக்கல் விண்ணொளி அகவொளித் திறனாய்க்
காண்டல் கருதல் கருத்துற நோக்குபு
வேண்டிய வைந்தொழில் விரைவி னியற்றல்
ஐந்நெறித் திறனால் அறிவுறு மெய்க்கலைச்
செந்நெறி யுணர்வால் மாநெறித் திறனுறும்
உண்முகம் நோக்கி உணர்வி லுரைத்தனன்
எண்முக ஈர்ப்பின் இயல்நிலை யறிந்தே (428)

நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி — இவற்றின் தன்மைகளை ஆராய்ந்து, இவற்றுக்கு இடையே உள்ள இணக்க நிலையை ஆராய்ந்து. வலப்புற அமைப்பையும் இடப்புற அமைப்பையும் நுணுகிக் காண வேண்டும். அனுபவ நெறியாலும் அறிவு நெறியாலும் மெய்ப்பொருளின் இயல்பை உணர்ந்து. ஐம்பொருள், ஐங்கலை, ஐந்நெறி இவற்றின் அடிப்படையில் 25 இயலை முறைப்படி உணர்ந்து, நோக்கி, மதிநுட்பம் இரண்டையும் பெற்று அடிப்படை உண்மைகளை உணர்தல் —

பரமாகாச ஒளியாற்றலே தனது அகவொளித்திறனாக அமையப்பெற்று, காட்சி, அனுமானம், ஆகமப்பிரமாணம் மூன்றின் அடிப்படையிலும் உண்மைகளை உறுதிசெய்தல்—

உயிர்க்கூட்டம் பேரொளிப் பெருநிலை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு மூலப்பொருள் செய்யும் ஐந்தொழிலைப் பற்றிய உண்மைகளை ஐந்நெறித் திறத்தாலும் செந்நெறி உணர்வாலும் நன்கு அறிதல்—

ஆகிய இவற்றைச் செய்து, அகமுகமாக உணர்ந்து, எண்முகமாக ஈர்ப்பின் இயக்கநிலையை அறிந்து அவற்றை உரைத்தேன்.

Having scientifically sifted the nature of five gross elements and the interaction between them having analysed the features of both right and left orders of existence, having realised the nature of Primal Existence through his own inner experience,

having realised, in due manner, the nature of pentadism based on fivefold substance, fivefold aspect and fivefold stream (flow),

and having acquired deep insight and sharpness of knowledge, the architect should understand the fundamental truth (behind any construction). He should ascertain the truth based on perception, inference and scriptural authority, his consciousness being of the nature of vast, supreme space.

In order to accomplish these I have expounded through a scientific way, the proper method and system, having well-understood the truth about fivefold function

of Primal Existence and having realised them by my own inner vision and by my knowledge about the eight-pronged directional pull.

உற்றறி திறனும் ஊர்ந்தறி வலியும்
கற்றுறுந் திறனும் கலையொளித் திறனால்
ஓரறி வுயிர்நிலை மெய்க்கலைத் தேற்றம்
ஈரறி யியல்நிலை மூவியற் றிறனாய்
சீரறி வுற்றும் ஈரீ றியல்நிலை
நேரறி வுற்றே ஐயியல் நோக்கி
ஆறறித் திறனா யைங்கலை நுணுக்கம்
சீரறிந் தியலால் பேரறி வுற்றே
நேரறிக் கலையொளி நுண்ணிதின் நோக்கி
உணர்நிலை திகழ்ந்தே ஒளிநிலை யோங்கி
உணர்வா லறிந்தே அறிவுயி ராற்றல்
உயிரறித் திறனை உயர்வுற நோக்கிச்
செயிரறச் செப்பல் மாநெறிக் கலையே (429)

ஓர்அறிவு உயிர்முதல் ஆறுஅறிவு உயிர்வரை உள்ள உயிர்க்கூட்டத்து இயல்பை நூலறிவு, அனுபவம், சிந்தனை இவற்றாலும் ஐங்கலை பற்றிய அறிவாற்றலாலும் அறிந்து—

கலைகளைப்பற்றிய உணர்வுநிலையும் ஒளிநிலையும் ஓங்கப் பெற்று—

உயிர்களின் உணர்வாற்றலையும் அறிவாற்றலையும் உணர்வாலும் அறிவாலும் அறிந்து,

உயிர்க்கூட்டம் சிறப்புநிலை அடையும் பொருட்டுத் தெளிவுபடக் கூறுதலே மாநெறியாகும்.

Through the scriptural knowledge, experience and deep rumination and through the knowledge about fivefold science, the architect should understand the characteristics of the souls endowed with one faculty to six faculities, being endowed with the subtle knowledge about the science of forms, consciousness and brilliance, he should know the conscious-potency and knowledge - potency of the souls. The great traditional order of science aims at imparting these truths, in order to effect the exalted state of the souls.

வளியெழுந் திசைக்கும் உள்ளுறு மாற்றல்
வெளிமுத லைந்தும் விளங்குற நோக்கித்
தெளிநிலை யுணர்வால் வளிவெளி மாத்திறன்
ஒளிநிலை யியற்றிறன் உள்ளுற வுணர்ந்தே
காற்றுறும் மூச்சாய்க் காலங் காட்டுபு
ஆற்றுறு மாற்றல் சிறுநொடிப் பெருநொடி
நொடிநொடிப் பொழுதின் நுண்ணிமை யாற்றல்
கடிதுறுங் காலப் பொருள்நிலை நோக்கி
நெடிதுறு முயிரொளி நீள நினைந்தே
வினைபுரி திறனால் மெய்க்கலை யுணர்ந்தே
நினைவு முணர்வும் நெறியின தாகி
குறித்துறுங் குறிப்பே குறிநிலைக் கலையாய்.
அறிகலை யுணர்வின் ஆற்றல் மிக்கே
நசையறக் காண்டும் நன்னெறி நோக்குபு
இசைநெறித் திறனும் இயலியற் றிறனும்
காற்றுறும் மூச்சால் கணக்கியல் நோக்கி
ஆற்றல் கூறும் வடிவுறுங் காலம்
தேற்றமும் தோற்றமும் செவ்விதின் நோக்கி
நூற்றுறை தெளிந்த நுண்ணிய வுணர்வால்
அகவொளி யுணர்திறன் ஒளிக்கலை மாண்பே
அகத்துணர் நோக்கி அறைந்தனன் மாநெறி (430)

உடலில் உள்ள வாயுக்கள் தொழிற்பட அதனால் உடலின் உள்ளே எழும் ஆற்றலால் வெளி முதலான பூதங்களின் தன்மையை விளங்கிக் கொள்ளல்—

வளித்திறன், வெளித்திறன், ஒளிநிலை, இயக்கம் — இவற்றை உள்ளனுபவத்தால் உணர்தல்—

மூச்சுக்காற்றாகப் பொருந்துவதே காலப்பாகுபாட்டைக் காட்ட, சிறுநொடி, பெருநொடி முதலான அளவில் காலமாப் பொருளின் நிலையை ஆராய்ந்து அதனால் எழும் உயிரின் ஒளியாற்றலை ஆழ்ந்து சிந்தித்துணரல்—

கலையாற்றல் மிகப்பெற்று நடுநிலைநின்று நன்னெறியைக் காணல்—

இசை, இயல் முதலானவை மூச்சுக்காற்றுக் கணக்கியல் அடிப்படையில் அமைவதைக் காணல்,

வடிவங்களுக்குக் காரணமாகப் பொருந்தும் காலத்தின் தோற்றநிலை, பயன்பாட்டு நிலை இவற்றைத் தெளிவாகக் காணல்,

— ஆகிய இச்செயல்களைச் செய்து, பலநூல் அறிவுபெற்று அகவொளியால் உணரும் திறத்தையும் ஒளிக்கலை மாண்பையும் பக்குவநிலை உடையோர்க்கு இந்த மாநெறி மூலம் விளக்கிக் கூறினேன்.

Through this great Traditional science I have explained the process of recognising the greatness of the science of light and the process of realising through versatility and inner consciousness. I have explained these for the benefit of the perfect minded seekers -

- having realised well the nature of five elements and airs
- having experientially and intellectually realised the power of air, space, light and their functional aspects
- having calculated the subtle and gross units of Time through inbreath and outbreath which are identical with Time
- having realised the swift movements of time and the power of soul's light energy identical with inner consciousness.
- having perceived the unfailing way placing myself in the right path, and being endowed with the power of scientific indepth augmented by artistic skill and acumen
- having perceived the truth that both speech and melody take *form* based on inbreath and outbreath,

and - having perceived the origin, function and manifestation of time which is the causal factor for FORM.

காலச் செவ்விக் கலைநிலை யுணர்த்தும்
மூலச் செவ்வி முப்பொரு ளியக்கும்
காலமும் மூலமும் கடிதுற நோக்கிக்
கால நுட்பம் கருந்திய லாக்கம்
மூலப் பொருள்நிலை யைந்தறித் தியங்கல்
ஐயைந் தியலால் விரைவுறுங் காலம்
மெய்யுணர் திறத்தால் காலப் பொழுதியல்
நொடிநொடி நோக்கி இமைநிலை யறிந்து
நொடியாற் காலச் செவ்வி நோக்குவோர்
படிமிசை யெண்ணெண் கலைதரு நுட்பம்
குடியுறக் காண்டலும் குறித்தல்மா நெறியே (431)

கலைநிலையை உணர்த்தும் காலத்தையும் மூவகைப்பட்ட பொருளையும் இயக்கும் மூலத்தையும் கட்டுக்கோப்பாக உணர வேண்டும்; காலநுட்பம், மூலப்பொருளின் இயக்கமுறை, 25 நெறிகளில் சுழலும் காலத்தின் இயல்பு, காலத்தின் பாகுபாடுகள் — இவற்றை நன்கு உணர்ந்து கொண்டு காலத்தின் செயற்பாட்டு நிலையை அறிபவர்கள், 64 கலைகளின் நுட்பத்தையும் மரபு நெறிக்கு ஏற்ற முறையில் காண்பார்கள்.

The ripened state of time is indicative of the factor of manifestation; the Primal Existence is capable of putting the threefold object into operation. The architect-scientist should collectively and comprehensively know about time and Primal Existence. Those who train themselves to know the subtlety of time, the functional mode of Primal Existence, the nature of time which is in cyclic operation through 25 modes and realise the actual operative system of time, become capable of knowing the efficacies of 64 squares according to the traditional process.

தன்னிலை பெருக்கித் தருமெண் ணாற்றல்
நன்னிலை மாநெறி மெய்க்கலை யுணர்ந்தே
ஓங்குறு முணர்வால் எண்கலை விண்கலை
ஆங்குற நோக்கி யகத்துணர் வுற்றே
மெய்ந்நிலைக் காண்டல் மெய்ப்பொரு ளுணர்தல்
செய்ந்நிலைக் கணக்கியல் சீர்த்திற மாய்தல்
எண்ணெண் கலைதரு மியற்றிற நெறியே (432)

தனக்கென உள்ள நிலையைப் பிரபஞ்ச நிமித்தம் பெருக்கிக் கொள்ளும் எண்-ஆற்றலாகிய மெய்க்கலையை உணரவேண்டும். பக்குவமும் முதிர்ச்சியும் வாய்ந்த அறிவுத்திறத்தால் எண்கலையையும் விண்கலையையும் உள்ளவாறு உணர்ந்து அனுபவம் பெறவேண்டும். மெய்ந்நிலையைக் காண்பது, மெய்ப்பொருளை உணர்வது, செயல் திறத்திற்கு ஏற்றதான கணக்கியலின் சிறப்புத் தன்மையை ஆராய்தல் — இவை அனைத்தும் 64 கலைகளைப் பொருளாகக் (subject matter) கொண்ட மயன்நெறியை உணர்வதற்குத் துணைசெய்யும்.

The Vastu - Scientist should know the eternal science of number pattern which amplifies its own state for the sake of cosmic evolution; he should exactly understand the compatibility of both the number pattern and space units and gain inner experience.

To perceive the existential state, to realise the existential substance and to analyse the unique nature of mathematical science that is applicable to the practical field - all these are the benefits rendered by the Mayonic order, for which the nucleus subject-matter is the science of 64 squares.

வாயில் முன்றில் வரைவியல் நோக்கி
ஆய்தலும் நெறிமுறை யெண்கலைத் திறனால்
நோக்குறும் நோக்கால் பார்நிலை நோக்கி
ஆக்குறு மிடம்தெரி மெய்யுயிர் நோக்கிக்
கணக்கியல் நெறியே கருதரு மாற்றல்
கணக்கியல் தெரிக்கும் எண்ணெண் ணியலே (433)

எண்கலைத் திறத்தாலேயே, வாயில், முன்றில் முதலான கட்டிட அமைப்பு முறைகள் ஆராயப்படுகின்றன. கணிக்க வேண்டிய முறைப்படிக் கணித்து, நிலத்தின் அமைப்பு நிலையை நோக்கி, கட்டிடம் அமைப்பதற்குரிய இடத்தைத் தேர்ந்து, அக்கட்டிடத்தின் நீண்ட ஆயுளைக் கருத்திற் கொண்டு அமைக்கக் கணக்கியல் நெறியே மிகுந்த ஆற்றல் உடையதாக விளங்குகிறது. இக்கணக்கியலின் நுட்பத்தைப் புலப்படுத்துவது எண்எண் இயலே.

All the details of the structural pattern of a building are examined through the science of number. To calculate methodically all the features, to examine the ground formation, and to select a fitting place for the building keeping in view the longevity of the building, only the science of number, ie, mathematics shinesforth as endowed with befitting great force. It is the science of 64 squares that reveals even the subtleties of mathematics.

இடமும் பொருளும் காலமும் நோக்கி
இடமுறுந் திறத்தால் வலித்திற னோர்ந்து
பொருளறி திறத்தால் மெய்யியல் நுணுக்கம்
கருத்துறத் தேர்ந்தே கணக்கியல் நோக்கிக்
காலத் தியலால் நெறிமுறை பெருக்கி
ஞாலத் தியல்நெறி நன்னிலைத் தேர்நெறி
விளக்குற நோக்கி ஐங்கூர்ப் பெருக்கும்
எண்ணெண் நிலைத்திறன் கலைத்திற னொலியால்
எண்ணிலை யியலால் இயம்புமா நெறியே (434)

கட்ட வேண்டிய இடம், கட்டிட அமைப்பு, காலம் — இவற்றை முறைப்படி உறுதி செய்து, இடத்தின் அடிப்படையில் கட்டிடத்தின் வன்மையை ஆய்ந்து, கட்டிடத்தின் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு, கட்டிடத்தை உருவாக்க வேண்டும். கணக்கியலாலும் காலத்து இயலாலும் கட்டிட நெறிமுறைகளை விரிவாகக் காணவேண்டும். இவ்வாறு காணும் முறையையும் ஞாலநெறி, தேர்நெறி ஆகியவற்றையும் ஐம்பெரும் நிலை, 64 சதுரக் கூறுகளின் நிலைத்தின் கலைத்திறன் ஆகியவற்றையும் மயன்நெறியானது எண் (8) நிலை இயலால் விளக்கிக் கூறும்.

The architect should construct a building, having determined a proper place for the building, structural form of all building, and appropriate time, and having examined the strength of the buildings based on the selected ground and having examined its longevity based on the structural design. He should elaborately analyse the building features based on mathematics and the science of time. The Mayonic order explains these ways and expounds the features and functional ways of cosmic structure and

cosmic chariot together with the truths of fivefold state, and the eternal force and creative force of the 64 squares through the science of octo-state.

காற்றறி நுட்பம் காலக் கூறாய்
நூற்றெறி பான்மை மெய்யுற நோக்குபு
காற்றுறும் மூச்சே கடுகி விரைவுறும்
ஆற்றலு முணர்வுங் கலையியற் காலம்
காற்றுறும் வரவுங் கரப்புஞ் செலவும்
தோற்றமும் நோக்கித் தெள்ளிதி னுணர்ந்து
பெருநொடிச் சிறுநொடிக் குறுநொடிக் காலம்
ஒருநொடி யியல்பி னுள்ளுறு முணர்வே
ஊழிக் காலத் தியல்பென நோக்கி
ஆழ்நிலை யுணர்வால் கடுகுறுங் காலம்
கடிதும் நெடிதுங் கருத்துற நோக்கி
முடிபுற் றுணர்தல் மூவகை நோக்கி
ஐவகை யியலும் அறுவகைத் திறனும்
மெய்வகை யுயிர்நிலை யிலங்குறுந் தன்மை
கருத்துற நோக்குபு காலங் கண்டுழி
உருத்தெரி தோற்றம் உள்ளுற நோக்கி
யுயிரொளி யுணர்வா லுண்மை காண்டல்
செயிரறச் செப்பினன் காற்றியற் கணக்கே (435)

காற்றின் தன்மையை அறியவல்ல நுட்பக்கலையே காலக் கூறுகளையும் அறியவைக்கும். காற்றாகப் பொருந்தும் மூச்சே விரைவாலும் செயலாலும் காலமாகப் பெருகி அமைகிறது. காற்றால் ஏற்படும் நிலைமாற்றங்களைத் தெளிவாக உணர்ந்து நொடியில் தொடங்கி ஊழியில் முடியும் காலத்தின் பாகுபாடுகளை உணர்ந்து கட்டிடத்திற்குரிய கட்டுக்கோப்பான அமைப்பு, நீண்ட ஆயுள் ஆகியவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மூவகை நிலை, ஐவகை இயல், அறுவகைத் திறன் (ஆயாதி), நிலைபேற்றுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டிடத் தோற்றநிலையை உள்ளுறக் கண்டு உண்மைநிலையை உறுதிசெய்வதே சிறப்பான செயல். இதனை உணர்த்த வேண்டிக் காற்றியற் கணக்கைக் குற்றமறக் கூறினேன்.

Only that subtle science capable of knowing the nature of air-element would reveal the factors of time. Only the air, which takes the forms of inbreath and outbreath and expresses itself as swiftness and action

transform itself into time. Having clearly understood the differences in states, effected by air element, and the divisions of time beginning with fraction of a second and ending with aeon, one should ascertain the comprehensive structure and longevity of a building. Having known the true nature of time and accordingly the triple state, fivefold aspect, sixfold calculation, longevity etc, he should visualise the final appearance of the building and perceive its true characteristics. This is the exalted action. In order to impart this, I set forth here the calculation related to aerial science, without any blemish.

எண்ணெண் ணியலால் எண்கலை யோர்ந்தே
எண்முறை யெண்ண மெண்ணுணர் வுற்றே
எண்ணி லெண்ணா லியைபுற நோக்கி
எண்ணிலாக் குறிநிலை எண்பொரு ளுணர்த்தி
எண்ணு மெண்ணியல் எண்கலை யுணர்வால்
எண்ணிலை யோங்கல் இயல்பெண் றோர்ந்து
எண்முறை யெண்ணே எட்டை யியலாய்
எண்கலை யுணர்ந்தே இயல்புறு நெறியே (436)

எண்ணெண் இயலால் எண்கலை தொடர்பான நுட்பங்களைத் தெளிவாக உணரவேண்டும். எண் தொடர்பான அறிவும் உணர்வும் வாய்க்கப் பெற்று, எட்டின் அடிப்படையில் ஆய்ந்து, புள்ளிநிலைகளால் எண்பொருளாகிய மூலப்பொருளின் வெளிப்பாட்டு நிலையை உணரவேண்டும். எண்களின் இயல்பான ஆக்க நிலையை உணர்ந்து எட்டின் சிறப்புக் கூறுகளைத் தெளிவாக அறிந்து கொண்டு வாஸ்து மாநெறிப்படிச் செயல் வகைகளை மேற்கொள்ள வேண்டும்.

The architect should clearly understand the subtle truths related to the science of numbers through the features of 64 squares. Having attained knowledge and experience related to number through his mental potency, and analysed based on the octave-pattern, he should realise, the manifesting phase of the primal existence which is in eight fold form or of space, through the formation of innumerable points. Having realised the inherent potentiality of the number and having known the specific

features of the number eight or octo-system he should undertake all the activities in accordance with the tradition of vastu.

எண்ணிலைக் கலையே இலங்குறுந் திறனாய்
விண்ணிலை விண்ணியல் மேவுறு மாற்றல்
எண்ணெண் கலைத்திற னைந்தியல் நோக்கி
நுண்கலை நுண்ணிதின் முதற்பொரு ளறிந்தே
பொருளறிந் தியங்கும் மெய்ப்பொரு ளுண்மை
பொருளுறுங் கலைதெரி மெய்த்திறக் கலையாய்
ஐயைந் தியல்தெரி யாற்றலும் நுட்பமும்
ஐந்தியல் நெறியே மெய்க்கலை நிலைக்குறி
எண்முறை யாற்றல் இலங்கக் காண்டுழி
நுட்ப மறிந்தே நுணுகியு மணுகியும்
ஓங்குறு முணர்வால் உளத்தொளி நோக்கி
ஆங்குறும் நிகழ்வே ஈங்குறு முண்மை
ஓங்குறு முணர்வா லுரைத்தனன் நன்றே (437)

எண்-நிலைக் கலையே இயல்பான திறனாக வெளிப்பட்டு விண் நிலையாகவும் விண் இயலாகவும் விளங்குகிறது. 64-கலைத்திறன், ஐந்தியல் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் நுண்மையை உணர்ந்து முதற்பொருளை அறியவேண்டும். அந்த அந்தப் பொருளின் நிலைக்கேற்றவாறு செயற்படும் முதற் பொருளின் சக்திக் கூறுகளை அறிவதே மெய்த்திறம். ஐஐயைந்தியல், ஐந்தியல் நெறி, குறி, எண்முறை ஆற்றல் ஆகியவற்றின் செய்பாட்டுத் திறத்தால் வாஸ்துமாநெறியானது 64 கலைக் கூறுகளை உருவாக்குகிறது. இதனை நுட்பமாக உணர்ந்து உள்ளத்தின் ஒளிநிலையை நோக்க வேண்டும். உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சியே புறஉலகில் வடிவுடைப் பொருளாக ஆகின்றது. என் உணர்வுத் திறத்தால் இதனை உணர்ந்து கூறினேன்.

It is only the science of numerical structure that manifests as the spontaneous energy of everything and shines forth as the stages and aspects of space. One should know the Primordial Substance, based on the subtle truths known through the science of 64 squares and fivefold aspect. The true potential is nothing but knowing the energy aspects of the Primal Substance which functions according to the multifarious states of one and the same

object. The Great Path of Vastu brings into existence the totality of 64 squares through the functional power of 25 aspects, fivefold technique, symbols, and the power of numerical order. Having deeply understood this fact, the architect should observe the enlightened state of his mind. Only the movement or throbbing event that takes place in such an enlightened mind manifests externally as the formables and the Nameables. I have set forth this point having understood through my power of conciousness.

செம்பொருள் மெய்த்திறன் சீர்நெறி நோக்கி
ஐம்பொருட் கலையே நெறிமுறைத் திறனாய்
உணர்வால் உந்துறும் ஒருமுறைப் பொருளாய்
உணர்கலை வடிவா யுருவங் காட்டுபு
செய்முறைச் செய்ந்நிலைத் தெற்றென விளக்கி
ஐவகை யியலா லெண்ணிலை யாய்தல்
எண்ணே மூலம் எழும்பொரு ளாய்ந்து
திண்ணிய வுணர்வால் செப்புமைந் தியலும்
நண்ணிய மூலத் தியலெழு மாற்றல்
உண்ணோர் விளங்கி யுணர்வுறக் கண்டே
நண்ணி யுரைத்தனன் நவையறுங் கலையே (438)

செம்பொருளுக்குரிய நிலையான திறத்தால் ஐம்பொருட் கலையே ஒழுங்கிற்கும் சீலத்திற்கும் உட்பட்ட, திறன்மிக்க பொருளாக ஆகிறது; அவ்வாறு ஆகி கலைவடிவாக உருவம் காட்டுகிறது. அந்த உருவத்தைச் செய்யும் முறையையும் நிலையையும் உணர்ந்து, ஐவகை இயலை உடைய எண்-நிலையை ஆய்ந்து எண்ணமே மூலத்தின் தோற்றம் என, மூலத்தின் ஆற்றலால் அனுபவ பூர்வமாக உணர்ந்து, பக்குவ நிலையை அடைந்து இக்கலை நூலை விளக்கிக் கூறினேன்.

Through the everlasting potency of the immutable Primal Substance, the creative phase of the fivefold substance itself becomes the object endowed with energy subjected to uniformity and rhythm. Having become so, it expresses as a form full of artistic beauty. Having understood the method and stages of Creating that FORM and having analysed the numerical structure associated with fivefold feature and having practically recognised the

fact that the external manifestation of the Primal Source is nothing but our own mind and having attained perfection, I have written this book elaborately.

பாடலு மாடலும் கலைதரு நோக்கால்
நேடலும் நீடலும் நிலையுணர் வுயத்தே
எண்டரு மியலால் இசைநிலை யோர்ந்தே
எண்ணியல் முறையி லாடலு மாய்ந்தே
நுண்ணறி வாற்றல் விண்ணறி நோக்கால்
எண்ணறி யிசையலை ஓசை யாய்ந்து
நண்ணுறு மாடல் வளைவியற் கூற்றே
எண்ணுறுங் கலைத்திற னியல்பிற் பெருக்கி
காலமும் விரிவும் காட்டுந் திறனும்
கோலமும் சீலமுங் குறிப்பிற் கொண்டே
ஞாலத் தியல்தெரிப் பாடல் ஆடல்
காலக் கணக்குறக் கருந்துறும் நெறியால்
நோக்குற நோக்கி நுவன்றனன் நன்றே (439)

பாடற்கலை, ஆடற்கலை — இவற்றைக் கலை உணர்வால் ஆராய்ந்து உண்மைகளை உணர்ந்தும்,

நுண்ணிய அறிவாற்றலாலும் விண்-நிலையை அறியவல்ல நோக்காலும் எண்ணின் ஆற்றலால் அறியப்படும் இசையின் ஒலிநயங்களை ஆராய்ந்தும் பாடற்கலையை விளக்கிக் கூறினேன். ஆடற்கலையானது வளைவியல், எண்திறன், ஆகியவற்றால் பெருக்கம் அடைந்து, காலம், கோலம், சீலம் ஆகியவற்றை அபிநயங்களால் வெளிப்படுத்த வல்லது. ஞாலத்தின் தன்மையை விளக்கும் பாடலும் ஆடலும் காலக் கணக்குப்படி அமைகின்ற நுட்பநிலையை உள்ளவாறு உணர்ந்து ஆடற்கலையை விளக்கிக் கூறினேன்.

Having understood the basic facts through a deep analysis of music and dance as guided by the consciousness rooted into arts, having sifted the elegance of the melodies of music cogniscible through the potency of number, through the sharpness of knowledge and deep insight related to space, I have explained the nature of the art of music. The art of Dance flourishes through the features of curves and the science of number and it is capable of expressing the movement of Time, Form and

Rhythm through hand gestures. Having realised as it is, the subtle process of the evolution of music and dance which, being regulated by time, are capable of throwing light on the cosmic structure, I have explained the Art of Dance.

எண்கலை விண்கலை நுண்ணிதி னோர்ந்தே
எண்ணிய லொளிதிகழ் நெறிமுறைக் கூற்றாய்
எண்கலை நெறியே ஒளிநிலை மூலம்
எண்ணெண் ணியல்தெரி மாநெறிக் கலையாய்
நண்ணுறும் மெய்ப்பொருள் கலைநெறி முதற்றே (440)

எண்கலை, விண்கலை — இவற்றை நுண்மையாக உணர்ந்து ஒளிநெறியின் அம்சமாக எண்ணியல் விளங்குகிறது என உணர்ந்து: அந்த எண்ணியலே 64 இயல்களை உள்ளடக்கிய வாஸ்துநெறிக் கலையாகப் பொருந்துகிறது என்பதை உணர வேண்டும். இந்தநெறி மெய்ப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.

Having realised the subtleties of the science of number and of space and understood the fact that numerical pattern is an integrated part of light-pattern, the artist should know that the science of number associates itself with the scientific order of Vastu which includes in itself the great science of 64 squares. This scientific order has the Primal Substance for its basic source.

நினைப்புறும் திறனே நெறிநிலை யியலாய்
முனைப்புறும் ஆற்றல் முகிழ்நிலை உணர்வாய்
உணர்வே ஒளியாய் உற்றுறும் திறனெறி
உணர்கலை யாற்றல் உழைப்புறும் மெய்த்திறன்
செவ்வியின் ஓர்ந்தே திருவினை யாற்றல்
அவ்வயின் வென்றி ஆங்குறும் நிலையாய்
உணர்வொளி ஒன்றே உறுதுணை யாற்றல்
உணர்நிலை உயிர்த்திறன் மெய்யிய லாய்ந்தே
செந்நெறித் திறத்தால் சீரறி வுற்றே
மெய்நெறி அறிதல் கலைநெறிப் பண்பே (441)

வாஸ்து நெறிக்குரிய நிலையான இயல்பு, "இது இப்படி வெளிப்படுவதாக" என எண்ணம் கொள்வதே, இந்த எண்ணமே செயல் நிலையில் ஆற்றலாகின்றது. உள்ளத்து உணர்வே ஒளிநெறி. உணர்வின் ஆற்றலாலும் உழைப்பின் திறத்தாலுமே, சிறப்புடைச் செயல் முழுமைபெற்றுப் பயன்தருவதாகின்றது. உணர்வாகிய ஒளியே நிலையான உறுதுணை. உணர்வு நிலை, உயிர்ப்பு நிலை ஆகிய இரண்டையும் ஆய்ந்து சீரறிவு வாய்க்கப் பெற்று மெய்ந்நெறியை உணர்தலே கலைநெறிக்குரிய பண்பாகும்.

The inherent and perennial nature of the scientific order of Vastu is to conceive or to will spontaneously as "let this be in this pattern". When this thought or willing comes into actuality, it is turned into energy. The functioning process of light source is nothing but the actuality of the inner consciousness. The exalted deed attains perfection and becomes fruitful only through the potency of consciousness and the efficacious order of working pattern. The unfailing and befitting guide is nothing but the resplendent light that is consciousness. It is the inherent nature of the science of creation to know the nature of Eternal Order through a reasoned analysis of both the nature of consciousness and of the evergoing vibrations.

உலையா முயற்சி பெருவலித் திறனெண்
ணிலைபெறும் உணர்வால் நெறியுற நின்றே
உண்முக நோக்கி ஒலியியல் ஆய்ந்தே
விண்முக நிலைத்திறம் வேட்டுபு வேண்டி
நோக்குறும் நோக்கால் எண்ணெண் கலைத்திறன்
ஆக்குறும் திருவினை அறிகலை அறிந்தே
உய்த்துணர் நெறியா லுழைப்பிய லுற்றே
செந்நிலை யியற்றல் நெறிநிலைப் பண்பே (442)

எண்வழிப்பட்ட உணர்வு நெறியில் நின்று, உண்முகமாகக் கண்டு ஒலியியலை ஆய்ந்து, கட்டிடத்தின் உள்ளே இடம்பெற வேண்டும் வெளியின் அளவுகளையும் முறைப்படி அமைத்துக் கொண்டு, முறைப்படி 64 கலைத்திறன்களையும் கணக்கிட்டு, கட்டிடத் தொழிலின் நுணுக்கங்களை உணர்ந்து நன்முறையில் கட்டிடம் அமைத்தல், மரபுநெறிப்பட்ட நிலையான பண்பாகும்.

(1) Being in the path of consciousness regulated by the number-pattern, (2) Visualising internally the inner sphere, (3) analysing the acoustics, (4) determining the purportions of space to be enclosed within the walls. (5) calculating the potentials of 64 squares in the ordained way and (6) realising the subtle techniques of the architectural constructions - these are the recommended aspects of raising a building, according to the eternal tradition of Vastu.

ஒலிஒளி யியல்நிலை ஓங்குற உணர்ந்தே
ஒலியியல் ஓசை இசைக்கலை ஆய்ந்து
ஒளிமுதற் பொருளுறும் மெய்நிலைக் கலையால்
ஒலியிசை நுட்பம் உரைக்கப் படுமே (443)

ஒலி இயலையும் ஒளி இயலையும் ஆழ்ந்து உணர்ந்து, ஒலி இயல் அடிப்படையில் இசைக்கலையை ஆய்ந்து, ஒளியாகிய முதற்பொருளைப் பற்றிய கலைஞானத்தின் அடிப்படையில் ஒலி இசையின் நுட்பம் விளக்கிக் கூறப்படும்.

Having deeply understood the aspects of light and sound and having analysed the science of melodious music based on the science of sound, the subtlety of melodious sound would be explained based on the knowledge related to the Primal Substance which is identical with primal light source.

ஐம்பொரு ளைந்நெறி யியல்பி னோர்ந்து
செம்பொருட் சீர்நெறி தெரிநிலைத் திறத்தால்
உள்ளுறும் விண்ணொளி ஒளியியல் நுட்பம்
விள்ளுறுந் திறநிலை விரித்துறும் ஆற்றல்
மெய்மொழி அருங்கலை யுணர்வியற் கலையாய்
மெய்ப்பொருள் நுகர்நெறி வாழ்விய லாய்வோர்
ஒளியுட லொளியுயிர் சீர்பெற நோக்கித்
தெளிவுறுங் கலைநெறித் திண்மையி னோர்ந்தே
ஒளிக்கலை மூலம் ஓங்குறும் நுட்பம்
நிலைபெறக் கண்டே நெடிதுணர் வாரே (444)

முதற்பொருள் தொடர்பான நெறியை, ஐம்பொருள், ஐந்நெறி இரண்டையும் உணர்வதால் அறிய வேண்டும். உள்ளத்துள்ளே

துடிக்கும் விண்-ஒளி, அந்த ஒளியின் நுட்பம், அது வடிவமாக வெளிப்படத் தொடங்கும் நிலை, முழுமையாக வெளிப்பட்ட நிலை, ஆகியவற்றை உணர வேண்டும். மெய்ப்பொருள் தொடர்பான மொழியும் உணர்வொளியின் வெளிப்பாடே. மெய்ப்பொருளை வடிவம் வாயிலாக அனுபவிக்கும் உளப்பக்குவம் வாய்ந்தோர் ஒளிமயமான உடல், ஒளிமயமான உயிர் ஆகிய இரண்டையும் சிறப்பாகக் காண்பவராவர்; மேலும் ஒளிக்கலை மூலமாக என்றைக்கும் நிலைத்துள்ளனவான கலைநுட்பங்களை உணர்பவராவர்.

By knowing the features of fivefold substance and fivefold order, one should know the eternal order related to the Primal Substance. The spatial light which is always throbbing inside the inner space, the subtlety of that light, the beginning phase of its visible manifestation and the full manifestation - all these he should know. Even the articulated sounds in the form of language are, in reality, the manifestation of conscious light. Those who are trained enough to experience the Primal Substance through the manifested form could specifically see the luminous body and luminous self; furthermore, they could know the unchanging subtleties of creation through the creative light source.

பார்நிலை யியலா லிடத்தியல் நிலைதெரிச்
சீர்நிலை நோக்கே தெள்ளிதின் நோக்கி
நிலத்தியல் மாண்பே வாழ்கலை நுட்பம்
புலத்தியல் திட்பம் பொருந்த வுணர்ந்தே
மண்விழிக் காலம் யாக்கலை யுணர்ந்தே
விண்விழி யியலறி விளக்கமுந் தேர்ந்தே
கண்விழி நோக்காற் கருத்துற நோக்கி
எண்விழி யொளியி னெழுத்தறி வாரே (445)

பொதுவான குணங்களின் அடிப்படையில் பெரிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில், குறிப்பிட்ட இடத்தின் சிறப்பு நிலையைத் தேர்ந்து, அதன் எல்லைகளைத் தெளிவாகக் குறித்துக் கொண்டு, நிலத்தின் மாண்பே நல்வாழ்க்கைக்கு அடிப்படை என்னும் நுட்பத்தைக் கருத்தில் கொண்டு, வாஸ்து புருஷன் விழிக்கும் காலத்தை நன்கு உணர்ந்து கொண்டு, சூரியனின் இயக்கத்தால் திசைகளின் விளக்கத்தைத் தேர்ந்து,

மிகவும் துல்லியமாக எல்லைகளை வகுத்துக் கொண்டு எண்ணின் அடிப்படையில் எழுத்தையும் அறிவார்கள்.

First, having selected a common ground/area of larger extent based on the common features (as recommended in the Vastu Sastras), a particular area associated with specific qualities is to be identified for the purpose of building construction. He should mark the boundaries. Keeping in the mind the truth that the basis for good and healthy life is the auspicious and exalted state of the selected ground, and having determined the specific time in which Vastu Purusha opens his eyes (i.e. when latent energy becomes patent) and meticulously determined the cardinal points through the movement of the sun and having drawn the boundaries of the building, the architects would know the letters to be identified with the construction based on the number pattern.

எழுத்து மெண்ணும் வழுத்துந் திறனாய்ப்
பழுதில் நெறியைப் பொருளுறக் கூட்டிப்
புனையா ஓவியம் பொருள்முறை தெரித்தே
நினைவுறு முணர்வால் நெறிமுறை யறிந்தே
தினைத்துணை நோக்குறுஞ் சீர்மை யறிந்தே
முளைப்புறும் முந்நெறி முன்னுவ நெறியே (446)

எழுத்தியல் திறத்தாலும் எண்ணியல் திறத்தாலும் முதற்பொருளின் உண்மையை உணர்ந்து, புனையா ஓவியத்தின் குறிப்புப்பொருள் நன்கு புலப்படுமாறு செய்து, தினையை ஒத்த சிறிய அளவையும் கவனமாகக் கருத்தில் கொண்டு, சிற்ப நெறியானது முந்நெறி உண்மைகளைப் புலப்படுத்தும்.

Having realised the eternal facts about the Primal Substance through the powers of the science of letters and that of numbers and having brought out the significant and intendant purpose behind the drawn outsketch and having carefully observed even the minutest measure, so small as the lintel seed, the Sculptural tradition becomes capable of revealing the basic truths related to the threefold order.

எண்ணெறி பெருக்கி விண்ணெறி சுருக்கி
உண்ணெறி நோக்கல் ஒளிநிலைக் கலையாய்
விரித்துறு மாற்றல் வேண்டுறுந் திறத்தால்
தெரிநிலை விளங்கச் சீர்நெறி தெரிந்தே
எண்ணெண் கலைத்திறன் இயலுற நோக்கி
நுண்மைப் புள்ளி நுணுக்குற வாய்ந்தே
திண்மை நாற்புறத் தியலறி வாற்றல்
உண்மை பொளிநிலை யோங்குற் றாய்ந்தே
எண்மை யெண்ணிலை யெண்ணிய லெண்கலை
நுண்மை நோக்கி நுவலரும் பொருளாய்
எட்டின் பிறழ்நிலை யிலங்குறு மியக்கம்
விட்டுறுங் கலைநிலை மெய்ந்நிலை யுணர்ந்தே
முயக்க முணர்ந்தே யியக்க மறிந்தோர்
எண்ணெண் கலைத்திறன் இனிதுண ரறிவரே (447)

எண்களுக்குரிய பதங்களையும், விண்ணுக்குரிய பிரம்ம பதத்தையும் அவற்றில் ஒளிநிலைக் கலைகள் பொருந்தும் முறையையும் வாஸ்து நெறிப்படிச் சிறப்பான முறையில் உணரவேண்டும்; அவற்றில் 64 கலைகளின் ஆற்றலும் மூலப்புள்ளியின் ஆற்றலை மையமாகக் கொண்டு இயங்குவதை நுட்பமாக உணர வேண்டும்; நாற்புறத்திலும் சுழன்றெழும் கலை அமைப்புகளை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் எட்டின் தன்மை, எட்டின் நிலை, எண் இயல், எண்கலை ஆகியவற்றின் நுட்பங்களை உணர்ந்து கொண்டு, மூலப்பொருள் எட்டின் பிறழ்வாகவும் விட்டுவிட்டு இயங்கும் இயக்கமாகவும் விளங்குவதை உணர்ந்து முயக்க நிலையையும் இயக்க நிலையையும் உணரவேண்டும். 64 சதுர நுட்பங்களை உணர்ந்தவர்கள் இவற்றை உணர்வர்.

The architect should specifically understand according to the tradition of Vastu, the distribution of squares to be identified with numbers (and letters) and the framing of Central square to be identified with Space, in a vastu mandala. He should understand the subtle truth about the forcible cyclic movements of the forces of the 64 squares around the central and primal dot. ; he should clearly know the stable forces that arise as if an eddy from all directions. He should realise the minute forces held in the eightfold state, efficacy of the octo

process, eightfold aspect, eightfold creative force etc. He should understand the fact that the Primal substance shines forth as the multitude of Eight and the leaping of eight. He should also know the nature of upward force and propelling thrust contained in the ground. Those who have understood the subtleties of the 64 squares could know these facts.

ஐயைந் தியலா லறியு மாநெறி
ஐந்நெறிச் சீர்மை எண்ணியல் நோக்கிச்
செந்நெறிச் சுழலல் சீர்மை யாய்ந்தே
மெய்ந்நெறிப் பொருளுரை மெய்க்கலை மெய்த்திறன்
உய்முறை யாய்வோர் ஓம்தெரி யாற்றல்
நிலையுறக் கண்டே நெறியுற வுணர்ந்தே
கலையுறத் தெளிவர் கருத்துணர்ந் தோரே (448)

25 இயல்களால் அறிவதற்குரிய மாநெறியையும், ஐந்நெறிச் சிறப்பையும் எண்ணியல் அடிப்படையில் காண வேண்டும். அவை லயக்கணக்குப்படி சுழலும் சீர்மையை ஆராய வேண்டும்; மெய்ந்நெறி, மெய்க்கலை, மெய்த்திறன் இவற்றை உணரவல்லவர்கள் ஓம் என்பதன் நுட்பத்தை முறைப்படி உணரும் ஆற்றல் பெற்றவராவர்.

Based on the science of numbers, one should see the efficacy of the Mayonic Order, to be known through 25 aspects, and the uniqueness of the fivefold order/path (pentadic system). He should analyse the specific and orderly process in which these aspects and system are in rhythmic rotatory movements. Those who are capable of knowing the order, creative force and the potency of the Existential Substance, could be endowed with such a power as to understand the subtle truths behind "OM".

கற்கும் பொருளைக் காட்டும் பொருளாய்
நிற்கும் பொருளை நெறியுறத் தோற்றி
உற்றறி வுணர்வும் ஒருங்குறக் கூட்டி
தெற்றெனும் இசைநிலை செவ்விதி னுணர்த்திச்
செயிர றுமுயிர்ப்பாய்த் தேற்றந் தோற்றி
உயிர்ப்பொரு ளுண்மை உவப்புறக் காட்டிச்
சிறப்புறங் கலைப்பொருள் சிற்பம் என்ப (449)

நூல்களைக் கற்றுணர்ந்த தத்துவங்களை உருவத்தில் காட்டும் பொருள் எனவும்,

வடிவுடைப் பொருளின் நிலையான நுட்பங்களைப் புலப்படுத்தும் பொருள் எனவும்,

உற்று அறிகின்ற உணர்வை வடிவத்திற்குக் கூட்டிவைப்பது எனவும் இசைநயமான சீலத்தை உணர்த்தவல்லதாகவும்,

உயிர்ப்புடைய பொருளாகத் தோன்றச் செய்வதாகவும்,

ஜீவனுள்ள பொருளாகவும்,

சிறப்புடைக் கலைப் பொருளாகிய சிற்பம் விளங்கும் என மேலோர் கூறுவர்.

Those who are well versed in the Scriptures maintain the view that a Sculpture, which is an artistic creation with excelling features, shines forth as

1. an object which depicts the scriptural principles through relevant form.
2. object which reveals the unchanging subtle qualities of the manifested form
3. an object which embodies in itself the feelings that could be actually perceived through senses
4. the static form which reveals the melodious rhythm
5. the breathing and feeling substance

and 6. that which presents itself as the inspirited Experient.

ஓவியஞ் சிற்பம் ஒருபொரு ளுணர்த்தும்
மேவுறுங் கலைத்திறன் மெய்யொளி தோற்றித்
திளைப்புறுந் திறத்தாற் சிற்பமென் றாகி
நினைப்புறுந் திறத்தால் ஓவியக் கூறாய்
உணர்செழு ஒலித்திறன் ஒளித்திற னோங்கி
உணர்நிலைச் சிற்பம் மெய்க்கலை கூட்டும் (450)

ஓவியமும் சிற்பமும் ஜீவனுள்ள வடிவத்தையே புலப்படுத்தும். அவற்றில் பொருந்தும் கலைத்திறன் அவற்றிற்கு மெய்யொளியைக் கூட்டுவிக்கும். முழுவடிவத்திலும் உள்ளத்தைத் திளைக்கச் செய்யும் திறத்தால் சிற்பம் என்றும், தோற்றத்தில் மட்டும் திளைக்கச் செய்து முழுவடிவத்தை நினைக்கச் செய்வதால் ஓவியம் என்றும் கூறப்படுகிறது. ஒலித்திறனும் ஒளித் திறனும் வாய்க்கப்பெற்று உணர்வுநிலையுடன் விளங்கும் சிற்பம், உண்மையான கலை இன்பத்தைக் கூட்டுவிக்கும்.

Both drawing and sculpture represent animated and breathing FORM only. Various lineaments associated with them endow eternal brilliancy to them. It is called Silpa because of its efficacy in making the mind merged with the Complete Form or fullness of form. It is called OVIYAM (drawing) because of its efficacy in enabling the mind conceive the full dimensions of the figure. The Sculpture that shines forth with the elegant presence of sound and light, is capable of yielding the real aesthetic beatitude.

கண்ணுற நோக்கிக் காணுறு முற்பொருள்
எண்ணுறு முணர்வால் உள்நிலை நோக்கி
உள்ளுறு முணர்வின் நெறிவழித் தோற்றும்
தெள்ளுறுஞ் சீர்நெறிப் புனைந்துறுந் தொழிலாய்
ஓவியத் தோற்றம் ஒளிநிலை யோச்சி
மேவுறுங் கலைத்திறன் விளங்கலு மியல்பே (451)

கண்பார்வையை ஈர்க்கவல்லதும் ஈடுபட்டுக் காணத் தகுந்ததும் ஆகிச் சிறப்புடைப் பொருளாக விளங்குவது ஓவியம்; உட்பொருள் நிலையைக் கருத்திற் கொண்டு, உணர்வின் வழியாகத் தோன்றிப் புனைதல் எனப்படும் தொழிலால் உருக்கொள்வது ஓவியம். அது ஒளிநிலை ஓங்கப் பெற்றும் கலைத்திறன் வாய்க்கப் பெற்றும் விளங்குவது என மேலோர் சிறப்பித்துக் கூறுவார்.

The art of drawing/painting shines forth in an exalted state capable of arresting our vision and deserving to be seen with deep involvement. It is accomplished through the act of sketching, this sketching being done keeping the main content and context of the drawing. It also evolves directly from the inner space - consciousness of the artist.

Great men speak highly of this art as invested with brilliance and artistic dexterity.

எண்ணுறு மியலா லிசைநிலை யிடைநிலை
நண்ணுறு மோசை ஒலியிடைக் காலம்
விண்ணுறுந் திறமொளிர் நுண்ணுறு மொலிநிலை
நுண்மையி னோக்கி நுவலுறுங் காலை
எண்ணியற் கலையி னியலுறும் நுட்பம்
நுண்ணிசைக் கலைநெறி நுவலல் வழக்கே (452)

அடிப்படையான எண்ணின் இயலால் இசைநிலை சிறப்புறும். இசையில் இடையிடையே தோன்றும் இடையீடும் — அந்த இடையீடு காலக் கணக்கிற்கு உட்படுவதால் — நுண்மையான முதலாகிய வெளியின் ஒலிநிலையைக் காட்டுவதாகும். இதனை நுண்மையாகக் கண்டுணர்ந்தால், எண் இயலில் பொருந்தியுள்ள நுட்பமே நுட்பமான இசைக்கலை நெறியாக விளங்குகிறது என்பது புலப்படும்.

The art of music gets refined and raised to the acme of perfection, when it is based on the science of number. Even the mediating void, characterised as soundless state, occuring in music, indeed is indicative of the sound aspect of supreme space, since that void also is subjected to the force of number. If this is understood clearly, it could easily be seen that only the subtlety of number-pattern manifests as the subtle stream/flow of melodies. This is the traditional view.

பாடல் இசைநெறிப் பண்புற நோக்கி
நாடல் மெலிதல் நலித்தற் படுத்தல்
ஓங்கல் ஒடுங்கல் நிலையுறும் நெறியாய்
ஓங்குறு மிசைநெறி நுட்ப முணர்ந்தே
ஐந்திசை நுட்பம் செந்தமிழ்த் திட்பம்
முந்துறுஞ் சிற்ப முகட்டை யாய்ந்தே
உண்மை யுறுபொருள் ஒருங்குறத் தேர்ந்தே
நுண்மை நோக்குநர் நுண்ணிசை யறிவரே (453)

இசைநெறியானது மெலித்தல், நலித்தல், படுத்தல் ஓங்கல், ஒடுங்கல் எனப்படும் நிலைகள் பொருந்தப் பெற்றது. இவ்வாறு பலநிலைகளால் ஓங்கும் இசைநெறியின் நுட்பத்தை உணர்ந்து

ஐந்திசை நுட்பம், தமிழின் திட்பம், ஆகியவற்றை சிற்பத்தின் பழுத்த சிறப்பு நிலையின் அடிப்படையில் அனுபவித்து, அவற்றின் மெய்ப்பொருளைத் தேர்ந்து உணர்பவர்களே நுட்பமான இசைத்திறத்தை உணர்ந்தவராவர்.

The musical order is associated with five states effecting a low pitch, descendency, evenflow, raising to high pitch and total absorption. Having realised the varied states by which music is enriched and refined, one should experience the subtlety of fiveflod melody and the sturdiness of the self-expressive creative sound. This experience should be based on the consummate perfection associated with image (FORM). He should recognise the external blissful existence embedded in that flow of music. Only those who experience in this way are said to have realised the indescribable power of music.

எழுமிசை யொலியா லேற்பன வறிந்தே
எழுமொலி யேற்றல் படுத்தல் நலித்தல்
ஓங்க லெழுப்பலு மிசைநெறித் திறனாய்
ஓங்குற வோங்கி ஒலிதரு மிசையால்
மெய்ப்பொருள் கூட்டி மெய்யுணர் வோங்கி
மெய்ந்நிலைக் கலையால் மெய்ந்நிலை மாறா
இசையொருங் குணர்ந்தே இன்னிசை முழக்கல்
நசையறுஞ் செந்தமிழ் நெறியினி துணர்த்தும் (454)

செந்தமிழானது, உள்ளிருந்து எழும் இசை ஒலிகளை ஏற்றல், படுத்தல், நலித்தல், ஓங்கல், எழுப்பல் முதலான செயல்வகைகளால் ஓங்கி இசைக்க வைப்பது; அவற்றில் மெய்ப்பொருளின் இன்பநிலையைக் கூட்டவல்லது; மெய்யுணர்வு ஓங்கப் பெற்றுத்திகழ்வது; மெய்ந்நிலையினின்று எப்பொழுதும் மாறுபடாமல் இருக்கும் இசையை முழுமையாகத் துய்க்க வைப்பது; இன்னிசைக்குரிய நெறிமுறைகளை இனிதே உணர்த்தவல்லது.

The self-expressive blissful stream of creative sound-construct is capable of effecting the melodious tuning of musical waves that upsurge from the inner space, through the fivefold state (mentioned earlier): it is capable of inducing the blissful state of the eternal Vastu in that

flow of music. It shines forth, being endowed with creative consciousness. It enables to experience, in full measure, the music that is always in tune with the eternal beam; It is capable of revealing the exact process of the unfoldment of sweet melodies.

இருவிழி நோக்கால் புருவதுண் ணெளிவால்
கருவிழி நோக்குறக் கருமணி கருத்துறும்
இசையும் எண்ணும் ஏற்புடைத் தாக்கி
வசைதீர் ஒலியின் வயங்குறத் தெரிந்து
தாள்நிலை யூன்றலும் தனிநிலை யோர்ந்துணர்
தாள்நிலை மாற்றலும் ஏற்றலும் வீசலும்
நொடிநொடி நோக்கி நுவப்புற் றியங்கல்
கொடியிடை யாடல் குறித்துறு மியலாய்
ஓடிநிலைத் துவள்நிலை யொசிப்பும் நொசிப்பும்
கடிநிலைக் காலம் எண்ணும் நோக்கி
இன்னிசைக் கலைநெறி இயங்கலும் நோக்கி
துன்னிய ஆடல் நெறிவிளக் கும்மே (455)

இருவிழிகளின் பார்வை, புருவங்களின் நெளிவு, கண்களின் மூலம் புலப்படுத்தப்படும் பாவம், இசை, தாளக் கணக்கு — இவற்றால் சிறப்புறும் கலை; இசைக்கு ஏற்றவாறு தாள்களின் பதிவு, தாள்களின் மாற்றம், உயர்த்தல், வீசல், சொற்பொருளுக்கு ஏற்ப பாவம் பொருந்த இடம் பெயர்தல், இடையின் அசைவு — இவை பொருந்தும் கலை; ஓடிநிலை, துவள்நிலை, ஒசிப்பு, நொசிப்பு ஆகிய செயல்களுக்கேற்ற காலத்தையும் கருத்தையும் நோக்குவதாகவும் இசைநெறிப்படி இயக்கம் கொள்வதாகவும் விளங்கும் கலை - எனப் பல்வேறு சிறப்பு நிலைகளை உள்ளடக்கியது ஆடல்நெறி.

The order of Dance is the one that is enriched by the looks, knitting of the eye-brows, impression (bhava) expressed through eyes, music, number, beat and so forth. It is the art associated with feet movement. according to the musical notes, and altering the steps according to the specific modes of music, raising and waving of the feet, changes in positions, according to the content of the song, movement of waist etc. It is the art aiming at the time and the content involving various positions such as bending,

curving, limping etc., It is the art that assumes movement according the flow of musical notes and melodies.

ஆடல் பாடல் அருந்தமிழ் நெறியே (456)

ஆடற்கலையும் படற்கலையும் தமிழ்நெறிக்குரிய வைகளாகும்.

Both Dance and Music belong to the order of self-expressive creative sound called Tamil.

அகமும் புறமும் வாழ்வியற் கலையே (457)

அக உணர்வுக்குரிய எண்ணும் புறவெளிப்பாட்டிற்குரிய எழுத்தும் வாழ்வியற்கலைகளாகும்.

The number pertaining to the inner consciousness and the sound - form (letter) belonging to the external manifestation are considered as the impelling forces of life-pattern.

ஐந்தியல் முறைதெரி யைந்தவி யான்றோர்
செந்தமி ழிசைநெறிச் சிற்ப யோவியம்
முந்துறுங் கலைநெறி முறைமையி னுணர்ந்தே
செந்தமி ழியலால் தெரிந்துறு மாற்றல்
உணர்வொளி யோங்கி உள்ளுந் திறத்தால்
உணர்நெறி யாற்றல் ஓங்குற் றிலங்கி
அவைக்களங் கண்டோர் அருங்கலை யாய்வராய்
ஒண்மை யொளிர்கலை உணர்வுற் றோங்கி
நுண்மை தெரிந்தே நோக்குறும் நோக்கின்
உட்கலை நிலைத்திறன் ஒருங்குற வுணர்ந்தே
எட்டியல் நெறித்திறன் எண்முறை மருங்கின்
இயல்நெறி முயக்கம் இயங்கலும் நோக்கி
இயக்கத் தியலும் எட்டியல் மாற்றமும்
பேரறி வுற்றும் பெட்புற நோக்கிச்
சீரறி வாற்றல் தெரிநிலைக் கலையே (458)

ஐந்தியல் முறைகளைத் தெரிந்தவர்களாகவும், இசை, சிற்பம், ஒவியம் ஆகிய கலைநெறிகளை முறையாக உணர்ந்தவர்களாகவும், உணர்வொளித்திறனும் கலைநுட்பங்களை உணரும்திறனும் வாய்ந்தவர்களாகவும், அவைக்களம் அமைத்துக்

கலைநெறிகளை ஆராயவல்லவர்களாகவும், ஐம்புல அடக்கம் மிக்க ஆன்றோர்திகழ்வர். அவர்கள் — கலைநுட்பங்களை உணரவல்லவர்களாகி, அகக்கலையின் திறத்தை உணர்ந்து அதன் அடிப்படையில் எட்டியலின் நெறித்திறத்தையும் எண்ணியல் தொடர்பான முயக்கம் என்பதன் இயக்கத்திறத்தையும் எட்டின் பிறழ்ச்சி முறையையும் உணரவல்லவர்களாவர். மிகவும் சிறப்பான அறிவுத்திறத்திற்கு, இத்தகைய உணர்வுகளே அடிப்படை.

The men of erudition who kept their senses under control are the knowers of the pentadic order and the vital process of arts such as music, sculpture, drawings etc., They are endowed with the power of inner consciousness and the power of knowing the artistic subtleties. They are capable of analysing the artistic patterns and art fields in various foundations and assemblages. They are capable of realising the power of eight fold order and the power of creative movement of upward force related to numerical order based on their experiential knowledge related to manifestation and inner-space. They are capable of knowing the moulds of eight fold pattern. These capacities are the basis for the exalted power of wisdom.

எண்ணிலை யைந்தியல் நாற்புறத் தியலாய்
எண்ணெண் திறமுற எண்ணொளி வீசி
விண்ணொளிர் நுட்பம் விளங்குறத் தோற்றி
நண்ணுறு மறுபான் நான்குறும் மெய்ந்நிலை
உள்ளுற் றுணர்ந்தே ஓங்குறு மாற்றல்
விள்ளுறு மைந்தைந் தியல்நெறி தெரிந்தே
காலச் சுழல்நிலை விரைவி னியக்கம்
மூலப் புள்ளி முற்றுந் தோற்றி
எண்ணிலை விளக்கம் இயல்பெறக் காண்டலே (459)

எட்டு நிலைகளும் ஐந்தியலும் நாற்புற எல்லைக்குள் செயற்பட வாஸ்து நிலையானது 64 திறங்களும் பொருந்த எண்வகை ஒளிகளை வீசிப் பரமாகாசமாகிய மூலவெளியின் நுட்பம் வெளிப்படச் செய்யும்; அவ்வாறு செய்து 64 சதுரங்களிலும் பொருந்தும். இதனை உணர்ந்து கொண்டு. 25 இயல்களை விளங்கிக் கொண்டு, மூலப்புள்ளியிலிருந்து எழும் காலத்தின் சுழற்சியாகிய இயக்கத்தையும் எண்ணிலை விளக்கத்தையும் முழுமையாக அறிந்து கொள்வதே வாஸ்து அறிஞர்களின் செயலாகும்.

As the eight states and five aspects (of manifesting process) function within the boundary of square, the vastu mandala would stream forth eight light beams, giving room for the presence of 64 causal units, and would reveal the subtlety of the primal space; consequently it would occupy all the 64 squares. Having realised this and understood the mode of 25 aspects, to perceive completely the cyclic movements of time arising from the central dot-space and to realise fully the role of numbers in them, is indeed, the main activity of the scholars of vastu tradition.

முப்பொரு ளைந்நெறி முழுது முணர்ந்தே
செப்புறும் ஐந்தியல் சீர்நெறி நோக்கி
அறுபான் நான்கின் அமைவுறு மாற்றல்
உறுபயன் வெளிநிலை யுண்மை யுணர்ந்தே
அகவெளி நோக்கம் புறவிண் ணாக்கம்
மிகுமொளித் திறனாய் மேவுறு முள்ளொலி
உணர்வே ஆற்றல் உட்கலை யோங்கி
உணர்நெறித் திறனால் மெய்க்கலை விளக்கி
எண்ணுறும் எண்திறன் இயலல் காண்டுழி
நுண்கலை மூலம் ஒளிசிறக் குய்மே (460)

முப்பொருள், ஐந்நெறி, ஐந்தியலின் நெறிமுறை, 64 சதுரங்களிலும் பொருந்தும் ஆற்றல், அவற்றின் பயன் — இவற்றை நன்கு உணரவேண்டும்; அகவெளியைக் காணும் திறன், புறவெளியைக் காணும் ஆற்றல், உள்ளொளி, உணர்வாற்றலின் எழுச்சி அகியவை வாய்க்கப் பெற்று, மெய்க்கலை தொடர்பான உண்மைகளை உணர்ந்து கொண்டு, எண்ணியலின் திறத்தையும் இயக்கத்தையும் நன்கு உணரும் போது, மூல ஒளியின் தனிச் சிறப்பும் ஆற்றலும் நன்கு புலப்படும்.

One should have a complete knowledge about the triple substances, fivefold order, functioning modes of fivefold aspect, the power that contained in the 64 squares etc. Being endowed with the power of seeing the inner space, that of external space, power inner consciousness, upsurge of the efficacy of inner feelings, he should understand the truths related to the eternal creative power. The specific nature and power of the primal creative light

would be easy to understand, when he exactly realises the power and function of numerical order.:

எழுத்துஞ் சொல்லும் பொருளு மோர்ந்தே
செழுங்கலைத் திறனுறும் கட்டணி யாய்ந்து
ஐம்பொருள் விளங்கி யகத்துணர் வுற்றே
செம்பொருள் ஒளிநிலைச் சீர்நெறி நோக்கி
அகப்புறத் திண்மை மெய்மையின் நோக்கி
அகத்துணர் வுள்ளுறும் ஆற்ற லியங்கி
கலைநெறி இயக்கம் எண்ணெண் கலைத்திறன்
நிலையுறும் எண்ணே நெறிமுதற் பொருளாய்
நோக்குழி யறுபான் நான்குறும் இயல்நெறி
தேக்குறும் ஐந்தைந் தியல்நெறி தெரிந்தே
ஒன்றுறும் ஒளிநிலை உவப்புறத் தெரிந்தே
நன்றுறுங் கலைநெறி நண்ணுறுத் திறனால்
எண்ணெண் மூலம் இலங்கித் தோன்ற
விண்ணெண் கலைத்திறன் விளங்குபு விளக்கும் (461)

எழுத்து சொல், பொருள், கட்டு, அணி — இவ்வைந்தையும் ஆய்ந்து ஐவகைப் பொருள்களையும் நன்கு விளங்கிக் கொண்டு, அகத்துணர்வு மிகப்பெற்று, மூலப்பொருளின் ஒளியினது இயக்க முறைமையை நன்கு உணர வேண்டும்; அகத்திண்மை, புறத்திண்மை இரண்டையும் உணர்ந்து, முதற்பொருளின் அடிப்படையில் கலை இயக்கம் 64 சதுரங்களின் திறம் இவற்றை ஆய்ந்து, 25 இயல்களையும் விளங்கிக் கொண்டு, அவற்றில் பொருந்தும் ஒளித்திறன்களையும் உணர்ந்துகொண்டு, விண்கலைத் திறத்திலும் எண்கலைத் திறத்திலும் 64 சதுரங்களின் மூல ஆற்றல் வெளிப்படுவதைக் கலைஅறிவு மிக்கோர் விளக்கிக் கூறுவர்.

Having a complete knowledge about letter, word, content (meaning) structure and ornamentation, and his inner consciousness getting vitalised, he should understand the functional order of the light of Vastu. Having realised both the internal and external concreteness, and having analysed the function of creative mode and the efficacy of 64 squares and 25 aspect, the knowers of vastu mandala should have a knowledge about the light-potencies associated with 25 aspects. Based on

this knowledge they would explain the manifestation of primal energy in the causal units of both the space and number.

நூற்பா நுதலிய பொருள்நெறி நோக்கினும்
நூற்பா நுண்பொருள் ஆய்ந்துணர் வுறினும்
கேட்டவை கண்டவை கிளர்ச்சியின் நோக்கி
நாட்டமுள் ளுணர்வால் நாடுவ தியல்பே (462)

நூற்பாவில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ள பொருள் நன்கு அறிந்து கொண்டாலும், குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ள நுட்பத்தை நன்கு உணர்ந்து ஆய்ந்து அறிவுவளம் பெற்றாலும். அனுபவம் மிக்கோரின் வாய்மொழியாகக் கேட்டவை, அனுபவபூர்வமாகக் கண்டவை ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் பொருத்தத்தை உணர்ந்து கொண்டு, உள்ளுணர்வுத் திறத்தால் அடிப்படை உண்மையை உணர்ந்து கொள்வதே, இயல்பான கலைத்திறன் ஆகும்.

Even if one understands the explicit and implicit meaning of the cryptic statements and gains abundance of knowledge he should know the compatibility and applicability of those aphorisms by listening to the instructions and explanations given by the great people of the lineage and by his own experience and thereby he should understand the exact import of those aphorisms. This is the mark of true skill.

நிறைமொழி யோசை நெறிதின் கிளந்தே
மறைமொழி யோசை மெய்மொலி திகழ்ந்தே
ஒமுறும் இயல்நிலை ஒண்பொரு ளாய்ந்தே
ஓம்ஒலி ஒய்ஒளி நெறிமுறை யோர்ந்து
இமிழ்மொலி யோசை இன்னிசை நிரல்நிறை
உமிழ்மொலி யாக்க முறுபொருள் தேர்ந்தே
தமிழ்மொலி யோசை இசைநெறி யாயல்
அமைவுறு முணர்வா லாய்ந்துணர் நெறிக்கலை
ஒய்முகற் பொருளா மொருமொழித் திறனாய்
காமுறுங் கருத்தால் கற்றறி நோக்கி
உணர்வொளித் திறனா யோங்குறு மாற்றல்

மெய்க்கலை யுணர்வொளி மூல மறிந்தே
விண்ணொளித் தமிழாய் விளங்குறு முண்மை
எண்ணொளித் திறனுறும் எண்விளக் கும்மே (463)

மொழியின் ஓசைநிலை, ஓசையின் உட்பொருள், ஓம் என்பதன் உட்பொருள், ஓம் ஒலி, ஓம்நெறி — இவற்றின் பரிணாம முறை, இமிழ் ஒலி, உமிழ் ஒலி ஆகியவற்றின் ஆக்கத்திறம், உட்பொருள் ஆகியவற்றின் உணர்வு வாய்க்கப் பெற்று, தமிழின் ஒலி, ஓசை இசை ஆகியவற்றின் நெறியால் உணர்வுவளம் பெற்றுப் பக்குவம் அடைய வேண்டும். இந்தப்பயிற்சியின் அடிப்படையில் மூலப்பொருள ஆய்ந்து. அதுவே ஓம் எனும் முதற்பொருளாகவும முதன்மொழியாகவும் விளங்குகிறது என்பதை உணரவேண்டும். அதுவே உணர்வொளித் திறளாகவும், விண்ணொளித் தமிழாகவும் விளங்குகிறது. இவ்வுண்மைகளை எண்வகை ஒளித்திறன் பொருந்தும் எண்ணியற்கலையானது விளக்கும்.

Having gained infallible knowledge about the sound potency of word, its causal significance, exact import of om, the evolving process of Om sound and om-order, the causal potency of inarticulate and articulate sounds, and having gained consciousness through the distinct and indistinct musical waves of self-expressive causal word, one should gain perfection. Based on this he should analyse the state of Primal substances and understand that the same Primal Substance shines forth in the form OM, the Primal sound. The same Primal Substance shines forth as the conscious-energy and sound energy of the luminous space. These are the truths revealed by the science of number.

களமுங் காலமுங் கருத்துறு மாற்றலும்
உளமு முணர்வு மொருநெறி யுற்றோர்
ஐந்தியல் நெறியால் செந்தமி ழாய்வரே (464)

இடம், காலம் — இவற்றைப் பற்றிய நுட்பமான அறிவாற்றல் உள்ளுணர்வுத் தெளிவு ஆகியவற்றை ஒரு நெறியாக வாய்க்கப் பெற்றவர்கள் ஐந்தியல் நெறிக்குரிய மூலம், செந்தமிழ் நிலை ஆகியவற்றை உள்ளவாறு அறியவல்லவராவர்.

Those men of erudition who have the co-ordinated role of intellectual vigour related to space and time, mind and consciousness are capable of analysing and knowing the basic state of fivefold order and of the self-expressive causal sound.

நொடிநிலைப் பொழுதே நுட்பம் நுவலும் (465)

காலத்தின் நொடிநிலை என்பதே பல அரிய நுட்பங்களைப் புலப்படுத்தும்.

The minute unite of Time characterised by the duration equal to the flapping of finger would reveal manifold subtleties (of space and time).

உடலு முயிரு மொருநிலைப் பொருளாய்
அடலுறுங் கலையா லறிநிலை யுணர்ந்தே
இடம்பொருட் காலம் நோக்குறு மாற்றலால்
உடலுயி ராற்ற லொருங்குணர்ந் துன்னி
ஆய்ந்துணர் நெறியா லகவுணர் வோங்கி
நோக்குறும் மெய்த்திற னொளிநிலைக் கலையால்
சீர்மை விளக்கிச் செறிநிலை கூட்டும் (466)

உடலும் உயிரும் ஒருநிலைப்பட்டு விளங்கும் நிலையை உணர்ந்து இடம், பொருள், காலம் — இவற்றைக் கணிக்கும் ஆற்றலால் உடலின் ஆற்றலையும் உயிரின் ஆற்றலையும் ஒருங்கே சிந்திக்க வேண்டும். இவற்றை உணரும் திறத்தால் அகவுணர்வு பக்குவம் பெறும்போது மூலப் பொருளானது ஒளிநிலைக் கலையின் மூலம் வடிவத்தின் சீர்மையை விளக்கிக் காட்டும்.

Having understood the unified state of both the body and its inspiriting element, one should contemplate the potency of both the body and the spirit, being guided by the knowledge that could evaluate the nature of space, substance and time. When the inner consciousness get perfected by this contemplation, the Primal Substance would reveal to him the significance of FORM through varied luminous states.

உயிரொளி யுணர்வே ஒருமொழிப் பொருளே (467)

ஒருமொழியாகிய ஓம் என்பதன் உட்பொருள், உயிர்ப்புடைய (ஜீவத்தன்மைமிக்க) ஒளியைப்பற்றிய உணர்வைக் கூட்டுவிக்கும்.

The hidden content of OM, the Primal word known for its singularity, is capable of effecting the consciousness related to light associated with breaths and throbs.

அணுத்திர ளொலித்திறன் மெய்ந்நிலை யறிந்தே
அணுவணுக் கூற்றி னாய்நிலை தேர்ந்தே
எழுத்தொலி நெறிமுறை இயல்பி னுணர்ந்து
வழுத்து மோசை மாத்திரை யுணர்ந்தே
நெறிப்படக் கிளந்து குறிநிலை குறித்து
அறிநிலை எழுதலின் எழுத்துரு வோங்கி
அணுத்திர ளாக்கம் மெய்ம்மைப் பொருள்நிலை
நுணுக்குற நோக்கி நுவலுறும் நுட்பம்
எழுத்துறு மாக்கம் இயல்நிலை யறிந்தே
எழுமணுத் திரளொலி நுட்பந் தெரிந்தே
எழுத்தியல் நெறியே இயம்புதல் மரபே (468)

குறிப்பிட்ட பொருளைப் புலப்படுத்த எழுதலின் எழுத்து என வடிவுபெற்று அணுத்திரட்சி காரியமாக வெளிப்படும் நிலையை நுண்மையாகக் கண்டு, ஒலித்திறன், அணுக்கூறுகள் காரியமாக வெளிப்படும்நிலை, எழுத்தொலியின் நெறிமுறை, ஓசையின் உச்சரிப்பு எல்லை — இவற்றைத் தேர்ந்துணர்ந்து. உணர்வு வளம் பெறவேண்டும். பொருளைப்புலப்படுத்தும் நுட்பமான ஆற்றல் பொருந்தியுள்ள எழுத்தின் ஆக்கநிலையை அறிந்துகொண்டு, நாபியிலிருந்து எழும் ஒலி அணுக்களின் நுட்ப அடிப்படையில் எழுத்தியல் நெறியை விளக்குதலே, மரபுநெறி.

One should closely observe the state in which the cluster of sound atoms manifest as the effect. The effected state is called eluttu (எழுத்து) the raised one, since it rises above to indicate the intended object. He should anlyse the potency of sound, the state in which the atoms manifest as effect, the pattern of word-sound, the duration of articulation etc., Having understood the manifesting power of letter, endowed with the subtle power of indicating, one should explain the pattern and order of letters based on the subtlities of sound atoms rising from navel. This is the traditional way of explaining the letters.

எழுத்தறிந் தோரே இழுக்கின் நீங்கி
முழுப்பொரு ளுணர்ந்து செம்பொருள் தேர்ந்து
விழுப்பொரு ளாய்வர் மெய்ம்மை காண்பரே (469)

எழுத்துக்களின் நுட்பத்தை உணர்ந்தவர்களே அறியாமையிலிருந்து விடுபட்டு, முழுமையான வகையில் உள்ள படைப்பியற் பொருள்களை உணர்ந்து, காரணமாக உள்ள மூலப்பொருளின் இயல்பைத் தேர்ந்து விழுப்பொருளை ஆராயவல்லவராவர். அவர்களே மெய்ம்மையைக் காண்பவர்கள்.

Only those who have realised the subtle aspects of letter being free from the ignorant state, could really understand the nature of created substances that are complete and perfect. They could analyse the supreme state of existence, having known the characteristics of the Primal substance. Only those persons could perceive the truth as it is.

ஒளிமுதற் காண்டல் மெய்ம்மைப் பொருளே (470)

மெய்ப்பொருளைக் காணுதல் என்பது, ஒளியாகிய முதற்பொருளின் இயல்பை உணர்தலே.

To perceive the eternal existence is to realise the nature of the Primal substance in its light form.

உள்ளொளி நோக்குநர் வெளியொளி காண்பரே (471)

உள்ளொளி ஆற்றலை நோக்கி உணர்பவர்களே வெளியொளியின் ஆற்றலையும் உணரவல்லவராவர்.

Those who experience the potencies of inner luminous consciousness, are capable of realising the potency of space-light

எண்ணிலைக் கலைநெறி ஐந்தியல் தெரிந்தே
எண்ணிய லெண்முறை எண்ணுணர் திறனாய்
நெறிமுறைக் காலத்திறன் நிலைபெற நிறீஇ
அறிகலை இயலா லைந்துமைந் தியலாய்
ஒள்ளொளித் திகழும் ஒருநிலைப் புள்ளி
விள்ளுறும் நாற்புறத் தியல்நிலை மேவி

அறுபான் நான்கி னியலுறும் மூலம்
உறுநெறிக் காலத் தியல்நெறி விரைவே
வையம் விண்ணும் வரையுறத் தெரித்தே
ஐயம் நீக்குபு மெய்க்கலை யுணர்ந்தே
அகவிண் ணாற்றல் நனிதெரிந் துணர்ந்தே
அகத்துணர் வொளியால் பெறலருங் கலைத்திறன்
நுண்ணிதி னோர்ந்தே திண்ணிதி னாய்ந்தே
எண்ணியற் கலைத்திறன் எண்ணெண் ணியல்முறை
உணர்வொளித் திறத்தால் சிற்றவை நோக்கி
உணர்நிலைக் கலையியல் ஓங்குறு மாற்றல்
மூன்றுநூற் றிரண்டுபத் தியல்நிலை யாகி
ஏன்றுறுங் கலையொளி எண்ணுந் திறத்தால்
அறுபான் நான்கியல் ஐந்நெறி யோர்ந்தே
ஒருநிலை எண்ணியல் உரைத்தனன் விரித்தே (472)

எண்ணியல் அடிப்படையில் ஐந்தியலை ஆய்ந்து எட்டின் செயற்பாட்டுத் திறனை அறிய வேண்டும். ஐந்து நிலைகளும் ஐந்து இயல்களாக மூலப் புள்ளியில் அமைய, மூலப்புள்ளியால் பிரம்மபதமான சதுரம் அமைவதை உணரவேண்டும். 64 சதுரக் கூறுகளிலும் காலத்தின் விரைவான இயக்கத்தால் வையமும் விண்ணும் எல்லைக்கு உட்பட்டு அமைவதை உறுதிபட உணர வேண்டும். அகவிண்ணின் ஆற்றலாலும் அகத்து உணர்வாகிய ஒளியாலும் எண்ணியல் ஆற்றல், 64 கலைகளின் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் சிற்றவையின் தனிச்சிறப்பை அறிய வேண்டும். சிற்றவையில் கலையின் ஆற்றலானது 320 (64 X 5) கலைக்கூறுகள் உடையதாய் விளங்குவதை உணரவேண்டும். 320 இயல் விளக்கத்தை நான் எண்ணியல் அடிப்படையில் விரிவாகக் கூறினேன்.

Having analysed fivefold aspect based on the science of number, one should know the functional capacity of octo-form. The five states occupy the central dot in the form of five aspects and at this stage, there occurs square design through that dot. The swift movement of time occurs in all the 64 squares and through that movement both the terrestrial and celestial spheres get circumscribed. Having know this, and being guided by the knowledge related to inner space and light of inner consciousness, potency of number and of 64 squares, he should know

that within the microbode, the efficient power of causal energy manifests associated with 320 energy-units. I have explained the nature of 320 energy-units, based on the science of number.

ஐந்நெறி ஐந்தியல் ஐங்கலை நுட்பம்
செந்நெறி யுணர்வால் சீரறி வுற்றே
ஓம்நெறி மெய்ப்பொருள் உள்ளுற வோர்ந்தே
ஓம்கலை ஓம்மொழி ஒருமொழித் திறனாய்
ஓம்ஒளி ஓம்ஒலி இயல்பி னுணர்ந்தே
ஓமுறும் நிலையறி மெய்ப்பொருள் திறத்தால்
ஓம்முதற் பொருளே செம்மொழி யாகி
மெய்ம்மொழிப் பொருண்மை மெய்ந்நிலை துலக்கி
மெய்ப்பொருள் மூலம் ஒளிநிலை தோன்ற
விளக்குறு முண்மை விரிநிலைத் திறனாய்
துளக்கற வுணர்த்தும் தாநெறி யுணர்ந்தே
எட்டின் பிறழ்நிலை முட்டறத் தேர்ந்தே
விட்டுறு மிடைநிலை மெய்ப்பொரு ளோர்ந்தே
ஆடலான் கலைநிலை யாடுறு மாடல்
நாடுறும் வையச் சுழல்நிலை யோர்ந்தே
காலத் தியலறி விரைவுறு மாற்றல்
மூலப் பொருளால் முன்னிய முன்னி
எண்ணிலை யறுபான் நான்குறும் திறத்தால்
உண்ணோர் விளங்கி விண்ணே நோக்கி
விண்முகத் தியலால் எண்முகத் தீர்ப்பும்
உண்முகத் தொளிதரும் மெய்ந்நிலை யோர்ந்தே
தெண்முகம் நோக்கிச் சீர்நெறி துலக்கும்
நன்னிலை மெய்த்திறன் நவையற வுணர்ந்தே
தொன்னிலைக் கலைநிலை எண்ணியல் மரபென
உன்னி யுன்னி உள்ளுறுந் திறத்தால்
பன்னிப் பன்னிப் பகர்நிலை யாய்ந்தே
வென்றி யாத்திறன் மெய்க்கலை யுணர்வால்
நன்றுறும் திறனிலை ஒளியிய லோர்ந்தே
இன்றுறும் நாளை நெருநலு மோர்ந்தே
பொன்றாக் காலம் பொருந்த வுணர்ந்தே
கண்ணிமைக் கைந்நொடிக் காலங் கருதி
எண்ணுறந் திறத்தால் ஏற்பவை ஏற்று
விண்ணொளித் திறத்தால் ஏற்பவை ஏற்று
விண்ணொளித் திறத்தா லூழியாப் பொருளும்

மண்ணுறு மியல்நிலை மாக்கலை தேர்ந்தே
உள்வெளிப் புறவெளி இயல்நிலை நோக்கி
உள்ளொளி யுணர்வால் ஓம்நிலை நோக்கி
மூலத் துறுநிலை முன்னுந் திறத்தால்
காலத் தியல்நிலை விரைவுறு மாற்றல்
எட்டி னியலால் நிலையுறத் தெரிந்தே
முட்டறு மொழிக்கலை முன்னி யுணர்ந்தே
வானிய லொலித்திறன் வகையுறக் கிளந்தே
வான்நெறி யோர்ந்து மெய்ம்மொழி கிளத்தல்
முதற்பொரு ளாயுறும் ஓம்நிலை மொழியே
முதன்மைப் பொருண்மை ஒளித்திறன் நோக்கி
ஐந்தவி யான்றோர் அகத்துற வுணர்ந்தே
முந்துறும் மெய்ப்பொருள் உரைநவில் திறமே (473)

ஐந்நெறி, ஐந்தியல், ஐங்கலை — இவற்றின் நுட்பங்களை அறிந்து, ஓம்நெறி, ஓம்கலை, ஓம்மொழி, ஓம் ஒளி, ஓம் ஒலி — என உள்ள திறன்களை உள்ளவாறுணர்ந்து, ஓம் என்பதே செம்மொழியாகிய பரிணாமத்தை அடைந்து மெய்ப்பொருளைக் காட்டும் நிலையை அடைகின்றது என்பதை விளக்க வேண்டும். மெய்ப்பொருள்நிலைமூலம் ஒளிநிலைகளின் உண்மையை உணர்ந்து எட்டின் பிறழ்ச்சியையும் விட்டு அமையும் நிலையையும் ஓர்ந்து ஆடலானின் ஆடல்நிலையயும் அதனால் வையத்தின் சுழல்நிலையையும் ஆராயவேண்டும்.

மூலப்பொருளால் காலத்தில் எழும் விரைவின் ஆற்றலை, முன்னோர்வழியே சிந்தித்துணர்ந்து, எட்டின்நிலை 64 சதுரங்களிலும் பொருந்தும் நெறியால் உள்ளாகாச நிலையை நன்கு காண்க; உள்ளாகாசத்து உணர்வால் எண்முகமான ஈர்ப்பாற்றலையும உள்ளொளிரும் மெய்ந்நிலையையும் அறிந்து, ஆடலானின் உருவம் தென்திசை நோக்கி இருக்கும் சீர்நெறித்திறத்தை உணர்ந்து, எண்ணியலையும் ஒளிஇயலையும் உணர்ந்து இன்று, நாளை, நேற்று என உள்ள காலக் கூறுபாடுகளையும் இவற்றுக்கு அதீதமான பொன்றாக் காலத்தையும் உணர்ந்து, பொன்றும் தன்மை உடையதான காலத்தின் கூறுகளான கண்ணிமை, கைந்நொடி — இவற்றையும், ஊழிக்கால எல்லையையும் கணக்கிடவேண்டும். வாஸ்துவில் உள்ள கலைக் கூறுகளையும், உள்வெளி புறவெளிகளின் இயக்க நிலையையும், எட்டின் இயலால் புலனாகும் காலத்தின் ஆற்றலையும் மொழிவகை, ஓசைவகை, வெளிநெறி

ஆகியவற்றையும் — ஓம் என்பதன் தனிமுதன்மைத் தன்மையையும் ஒளித்திறனையும் உள்ளுறக் கண்ட சான்றோர் விரித்துக் கூறுவர்.

By knowing the subtleties of fivefold order, fivefold aspect and fivefold energy and various aspects of the Primal sound OM he has to explain the fact that OM, evolved into a specific sound related to the central line called brahma sutra, becomes capable of revealing the nature of eternal substance. By knowing the subtleties of luminous states and analysing the convertibility and leaping process of octo-form, he should understand the nature of Dancing Lord and the corresponding movement/revolutions of cosmic structure. Knowing the potency of the swiftness of time effected by vastu and based on the knowledge about the manifestation of octo form in all the 64 squares, he should understand the nature of inner-space, eight-sided gravitational pull, and the nature of vastu eternally embedded within. The exact significance of the Dancing Lord always facing south, concepts related to the science of number and light, varied units and divisions of Time, eternal Time beyond the process of division, the greater limits of aeon- having known all these, the efficient persons would explain the efficacy of energy units contained in vastu, functional mode of both inner space and outer space, time-potency knowable through octo-from, varied facets of sounds and words, space-order, pre-eminence of OM, and so forth.

எண்ணியல் மொழியே இலங்குறும் மெய்க்கலை
நண்ணி யுணர்ந்தே நெறிக்கலை நாடி
எண்மொழித் திறனா யெண்ணுற நோக்கி
விண்மொழி நோக்கல் மெய்ப்பொரு ளுறுமே (474)

வளமான வகையில் கருத்தை வெளிப்படுத்தும் மொழியே மெய்க்கலையைப் புலப்படுத்த வல்லது. இக்கலையை நன்குணர்ந்து மரபுவழிப்பட்ட கலையின் அமைப்பையும் ஆய்ந்துணர்ந்து எண்வகைப்பட்ட எழுத்துக்களின் ஆற்றலையும் விண்மொழியாகிய ஓம்-மொழியின் ஆற்றலையும் உணரும் திறமே மெய்ப்பொருளாகிய வஸ்துவின் உண்மையை உணரச் செய்யும்.

Only that word, capable of revealing the inner thought/content is efficacious in making known the energy-source of the Primal substance. The efficacy of realising the potency of eight fold letter and OM-sound based on the complete knowledge about the eternal energy-source would enable one realise the nature of eternal Vastu.

செவ்வி யறிந்தே சீர்நிலை யோர்ந்து
செவ்வித் திறனாய் மெய்யிய லாக்கும்
மெய்ப்பொருள் ஒளிக்லை மெய்யுற வுணர்ந்தே
ஐயம் நீக்கிய மெய்யுளம் பொருந்தி
உணர்வி னோக்கி அறிவா லறிந்து
உணர்த்து மெய்க்கலை நெறிமுறைத் திறனே (475)

உருவம் அமைப்பதற்குப் பயன்படும் பொருளின் பக்குவநிலையை அறிந்து, அதன் சிறப்புநிலையை (தாளமானம்) ஓர்ந்து, பரவஸ்துவின் ஆக்கநிலை, மெய்ந்நிலை, ஒளிக்கலை ஆகியவற்றை உள்ளவாறுணர்ந்து, உண்மைநிலையை உணரவல்ல உளத்திறம் பெற்று, உணர்வாலும் அறிவாலும் அறிந்து, மெய்க்கலையை உணர்த்த வேண்டும்.

Having known the mature and perfect state of the material fit for sculpturing/constructing a form and its fitting variety of tala-mana, and having known the causal power, eternality and luminosity of vastu and having attained the power of inner consciousness to grasp the truth, one should proceed to explain the nature of creative energy.

ஒளிக்கதிர் நோக்கி ஒண்கலை யுணர்ந்தே
வெளிவளித் திறனிலை மூலம் ஆய்ந்தே
ஒளியின் இயலுறும் ஒண்மை யுணர்ந்தே
ஒளிக்கலை நூலுரை மெய்ம்மை போ தர
விரித்துண ராற்றல் ஒளிநிலைக் கலையே (476)

ஒளிக்கதிர்களின் ஆற்றல் வாயிலாகப் படைப்பாற்றலை உணர்ந்து, வெளி - வளி இரண்டின் மூலநிலையை ஆய்ந்து, ஒளி இயலில் பொருந்தும் பிரகாசப்படுத்தும் தன்மை (ஒண்மை)யை உணர்ந்து, ஒளிக்கலையின் நுட்பங்களைத் தெரிவிக்கும் நூல்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை விளங்கிக்

கொள்ள வேண்டும். இக்கருத்துக்களை ஒளிநிலைக் கலையானது நேரடியாக விளக்கிக் காட்டும்.

Having realised the nature of creative power through the source of light rays and having analysed the basic state of both space-factor and air-factor, and known the illuminating power of light, one should understood the subtle concepts put forth by the scriptures dealing with light energy. Various states of light energy would directly reveal these concepts.

பொருண்மை சுட்டித் தெருண்மை விளக்கி
மருண்மை நீக்க லொளிக்கலைத் திறனே (477)

பொருளின் தன்மையைக் குறிப்பாகப் புலப்படுத்தி, அதன் சாரமான நிலையைத் தெளிவாக விளக்கி, மருட்சியை நீக்க வல்லதே ஒலைக்கலை ஞானம்.

The knowledge related to light-energy would reveal implicitly the nature of source - substance (material) and clearly indicate its essential state. It would ward off all the indistinct perceptions.

நுண்ணுணர் வோங்கின் விண்ணுணர் வோங்கும் (478)

நுட்பமான உணர்வாற்றல் சிறந்து விளங்கும் அளவிற்கு மூலவெளியைப் பற்றிய ஞானமும் சிறந்து விளங்கும்.

To the extent of the abundance and sharpness of subtle inner consciousness the knowledge related to the Primal (Supreme) space would be abundant and great.

ஒளிக்கதிர் நிலைதெரி ஒளிநிலை யறிவால்
ஒளிதரும் நுட்பம் ஒலிதரும் இயலும்
வெளிநிலைக் கலையும் மெய்யுற வுணர்ந்தே
ஒளிநிலை நுட்பக் கதிருறுங் கீற்றும்
தெற்றென வுணர்ந்தே தெரிநிலை யாய்ந்துபு
உற்றறி யுணர்வா லுன்னி யுன்னி
தோன்று மியலும் தோன்றா நெறியும்
ஒன்றுறும் பொருள்நிலை யிலங்கத் தெரிந்தே
செய்முறை காண்டல் தெளிவுற நோக்கல்

உய்த்துண ரறிவா லுழைப்பியல் நெறியால்
ஒளிக்கலை யாய்தல் மெய்ப்பயன் தருமே (479)

ஒளிக்கதிரின் நிலையை உணர்த்தக் கூடிய ஒளியின் நுட்பம், ஒளியின் இயக்கம், பரமாகாசத்தின் வெளிப்பாட்டுத் திறன் — இவற்றை உணரும் திறன்,

ஒளிக்கதிரின் சிதறல்களின் (கீற்றுகளின்) இயல்பு, உருவ அமைப்பிற்கென அமைந்துள்ள பொருளின் வெளிப்படையான தன்மைகள், வெளிப்படப் புலனாகாத தன்மைகள் ஆகியவற்றை உருவத்தின் நிலைக்கேற்பத் தெரிதல்,

செய்முறை காணல், தெளிவுபட ஆய்தல், யுக்தி, அனுபவம் ஆகியவற்றால் ஒளிக்கலைகளை ஆய்தல் —

இவை நிலைத்த பயனைக் கொடுக்கும்.

The power of knowing the subtlety and functional mode of light source and the manifesting power of supreme space, the process of knowing the nature of refracting and scattering of light rays, the distinct and the indistinct features of a particular material selected for sculpturing/creating a form, and the analysis of the energy-units of light based on the understanding of the exact practical ways, applicational skill and experience — these would bring forth everlasting benefits.

செங்கதிர்ச் செவ்வொளித் திறனுற நோக்கிச்
சேய்மை யண்மை நோக்கிற் றெரிந்தே
ஆங்குறும் ஒளிநிலை ஏழ்நிலை யாய்ந்தே
ஓங்குறும் திறத்தால் வண்ணத் தியலும்
மெய்ம்மை யறிந்தே மெய்ப்பொருள் நோக்கி
உய்யும் ஒளிநிலை உன்னுந் திறத்தால்
வண்ணம் ஓவியம் வனப்புறும் எழிலும்
நண்ணுங் கலைத்திறம் நாடுவ நாடி
கதிர்வர வுறுநிலைக் கவினிலை யாய்ந்தே
கதிரொளிக் கீற்றின் மெய்மை யுணர்ந்தே
எழுநிலை வண்ணம் இயல்பின் உணர்வோர்
பழுதறு மோவிய மெய்ப்பொரு ளுணர்ந்தே
கண்ணுங் கருத்தும் கவின்பெறத் துலங்கி
எண்ணமு முணர்வு மிணைபெற் றிலங்கி

கைவினைத் திறனும் மெய்வினை யாற்றல்
செய்வினை யோங்கிச் சிறப்புறுத் திறமே (480)

சூரிய ஒளியால் சங்குவின் சேய்மைநிலை, அண்மைநிலை ஆகியவற்றைக் குறித்துக் கொண்டு, ஒளியின் ஏழுநிலைகளை ஆய்ந்து. அதன் வண்ணங்களின் ஆற்றலையும் உணர்ந்து ஒளிபற்றிய சிந்தனையால் வண்ணம், ஓவியம், எழில், கலைத்திறம் ஆகியவற்றை உணர்ந்து, சூரியன் உதிக்கும் திசைநிலை, ஒளிக்கீற்றின் தன்மை ஆகியவற்றை உணர்ந்து, வண்ணங்கள் தொடர்பான நுட்பஞானம் பெற்றவர்கள் கண், கருத்து, மெய்ப்பொருள் - இம்மூன்றின் இணக்கத்தை வெளிப்படுத்தவல்ல கைவினைக் கலையாற்றல் வாய்ந்தவர்களாக விளங்குவர்.

Having marked various shadow-points of gnomon through the movement of sun, having analysed the nature of seven rays and their colours and having realised the process of colouring, painting, consummate beauty, artistic skill etc. and having realised the position of direction in which the sun rises and the nature of sun's rays, one should gain deep knowledge related to colour. Those who are endowed with such knowledge, could have dextrous skill that could reveal the harmonious identity between eyes, through and the Primal Existence.

ஓவியத் திறனுறும் ஒண்மை தெரிந்தே
நாவிய லாற்றல் நயனுற வோர்ந்தே
ஓவிலா துழைத்தல் உணர்நிலை யாற்றல்
மேவுறும் பொருண்மை மெய்ப்பொருள் சிறந்தே
ஆவலாய் நாடி யரும்பொரு ளாக்கும்
மேவக் கண்டே வடிவும் உருவும்
எழிலும் வனப்பும் இயைபுறத் தோற்றி
ஒழிவில் முயற்சியும் உன்னுந் திறனும்
அமைவுறும் நோக்கும் அகத்துணர் வுற்றே
இமையா நாட்டம் இயல்புறப் பொருந்தி
உணர்வுறுந் திறனா லொளிபெறத் தீட்டி
உணர்நிலை தெரிக்க நிலையுறுக் காட்டல்
ஓவிய இயலென மெய்ப்பொரு ளுரைக்கும் (481)

ஓவியக்கலையில் பொருந்தும் ஒளிநிலையை (real message, truth)த் தேர்ந்து அதில் வெளிப்படும் இசைவாகிய இணக்க

நிலையை (harmony) ஓர்ந்து, இடையறாது உழைத்தலே மெய்ப்பொருளை உணர்தற்குரிய ஆற்றலைத் தரும். பொருண்மையில் மெய்ப்பொருள் வெளிப்படும் நிலையை ஆய்ந்து அப்பொருண்மை ஓவியத்தால் மேலும் ஆக்கம் பெறும் நெறியை உணர்ந்து, வடிவு, உரு, எழில், வனப்பு — இவற்றைப் பொருத்தமுற அமைக்க வேண்டும். இடையறாத முயற்சியாலும் ஆழ்ந்து சிந்திக்கும் திறத்தாலும் அகத்துணர்வு சிறக்கப்பெற்று, விழியின் அமைப்பு இயல்பாகப் பொருந்துமாறு அமைத்து, அனுபவ உணர்வால் ஒளிபெற வரைந்து பொருண்மை நிலையை வெளிப்படுத்தலே ஓவிய இயல் என மெய்ப்பொருள்நூல் கூறும்.

Having understood the exact message couched in the drawing and harmony expressed in it, to toil continuously is the way to gain the power of understanding the real nature of the Primal Existence. Vastu manifests itself in the object and objectness and this objectness gets refined in the art of drawing. Having understood this, one should bring into effect form, image, beauty and the consummate charming appearance. The scripteness dealing with the Primal Existence maintains that the motive of drawing is to reveal the real state of objectness through drawing of the exact form of eye, this drawing being accomplished by perfect inner consciousness.

நாடும் நோக்கும் நுண்ணிய வுணர்வும்
கோடும் குறுக்கும் புள்ளியுந் தோற்றுபு
நாற்புறத் தியல்நெறி நன்னிலை தெரித்தே
ஏற்றுறும் எண்ணியல் நெறிமுறை யோர்ந்தே
குறுக்கும் புள்ளிக் கோட்டின் வரிவியல்
குறுநிலை யுருவும் மெய்ந்நிலை யார்ந்து
தெற்றெனத் தெளிதல் எண்ணிலை மூலம்
பெருங்கலைச் சுழியா யுவப்புற நோக்கிக்
கருத்தறிந் தாய்தல் எண்ணிலைக் கலையாய்
எண்ணுற நோக்கி யியலுற வுணர்ந்தோர்
நுண்ணிதின் நுட்பம் நுவலுவ தேர்ந்தே
எண்முறை நெறியென் றியம்பல் வழக்கே (482)

நோக்கு என்பது முடிந்த முடிபான நிலையை உணர்வதே. இந்த நோக்காகிய நுட்ப உணர்வால் கோடு, குறுக்கு, புள்ளி — இவற்றின் இயல்புகளை ஆராய்ந்து, சதுரத்தின் சிறப்பு நிலையை

உணர வேண்டும், அதில் பொருந்தும் எண்ணியல் நெறிமுறையை ஓர்ந்து, குறுக்கம், புள்ளி, கோடு, வரி — இவற்றால் மேலெழுந்த வாரியாகத் தெரியும் உருவம் என்பதன் மெய்ந்நிலையை விளங்கிக் கொண்டு தெளிவுபெறுதலும் (1), எண்ணியல் மூலமாகப் பெருங்கலைச் சுழி ( திருவாசி) அமைவதைக் கருத்துற ஆய்தலும் (2) எண்முறை நெறிகளாகும் என எண்கலையின் நுட்பத்தை உணர்ந்தோர் கூறுவர்.

A keen insight is the one capable of knowing the final and perfect stage. Through this insight, one should study the nature of horizontal and vertical lines, diagonals, dot, etc, and know the unique state of perfect square in which the numbers have their perfect role. To see clearly the form that is peripherally known through cross-lines, bent-lines, dots, straight lines etc and to analyse the features of the effulgent curve of creative process (prabha) through the science of number - are the process related to the order of number. Those who know the subtleties of numerical science maintain this view.

அலையும் மலையும் அகத்து ளுணர்ந்தே
கலைதெரி விண்ணிலைக் கருத்துறுத் தேர்ந்தே
செங்கதி ரொளிநிலை யுணர்நிலை யாற்றலால்
தங்குறும் ஒளிக்கலைத் தன்னிய லாய்ந்தே
கல்லியல் நிலையும் மண்ணியற் செறிவும்
நல்லியல் நெறியால் நண்ணுவ நாடி
ஆங்குறுங் கலைநிலை யியற்பொருள் நோக்கித்
தேங்குறும் அறிவியல் செப்பல் மரபே (483)

கடல்சார்ந்த நிலத்தின் தன்மை, மலைசார்பான நிலத்தின் தன்மை, விண்ணின் நிலை, சூரியனின் கதியை அடிப்படையாகக் கொண்ட ஒளியின் ஆற்றல், கல்லியல், மண்ணியல் — இவற்றைச் சிற்பநூல் முறைப்படிப் பொருத்தமுற ஆய்ந்து அவற்றின் செறிவான கலை அழகின் வெளிப்பாட்டு நிலையை விளக்கமுறக் கூறுவதே அறிவியல் மரபாகும்.

The quality of land adjacent to sea, adjacent to mountain and that of elemental space, power of light based on the movement of sun, the examination of the nature of stone and soil - one should analyse these according to the

directions set forth in the silpa sastra. The tradition, well-rooted in science, would explain the power of manifestation of energy in all these.

ஒளியியல் நுட்பம் ஓங்குற வுணர்ந்தே
ஒளியின் ஒளிநிலை உள்ளுறு மாற்றல்
ஒளிக்கலை மூலத் தியல்நிலை யோர்ந்தே
ஒளியா ஒளிநிலை ஒளிதரும் ஒளியாய்
ஒளியுள் ஒளியும் உட்பொரு ளாய்ந்தே
ஒளிநிலை மூலக் கலைநெறி யாற்றல்
ஒளிநூ லுரைக்கும் இயல்பின தாகி
ஒளியுணர் வோங்கி வெளிப்படுந் திறனாய்
ஒளிக்கலை நுட்பம் உணர்ந்துறு மாற்றல்
ஒளிநிலை யியலே மெய்க்கலைப் பயனாய்
ஒளிநிலை யுருவங் காட்டல் நெறியென
ஒளியே உருவும் உணர்த்த லியல்பாய்
ஒளிநிலை மூலத் தியல்தெரி யாற்றல்
தெளிவுற வுணர்ந்தே ஆய்தல் நெறியே (484)

ஒளியியல் நுட்பத்தை ஆழ்ந்துணர்ந்து நிலையான ஒளியின் ஆற்றல், ஒளிக்கலையின் அடிப்படை, பூதவொளிக்கும் ஒளிவழங்கும் மூல ஒளி, ஒளிநிலையாகிய மூலக்கலையின் நெறிமுறை ஆகியவற்றை உரைக்கும் இயல்புடையது ஒளிநூல். அந்நூல் உணர்த்தும் ஒளிக்கலை உண்மைகளை அனுபவத்தால் கண்டு, மெய்க்கலைப் பயனாக ஒளியே உருவத்தையும் புலப்படுத்துகிறது என்பதைத் தெளிவாக உணர்தலே முறையான ஆய்வுநெறியாகும்.

The scripture dealing with light-energy is of the nature of explaining the potentials of external light, the basis for the light-energy, the nature of primal light, the functional order of the Primal Energy, identical with that light. Its features should be experientially known. The methodic research process is, indeed, to understand the truth that only the light manifests as Forms and reveals their intrinsic features.

ஒளியணுத் திரளும் ஒலியணுத் திரளும்
ஒளிருற நோக்கி ஒளிநிலை யுணர்ந்தே
ஒளியே மூலம் ஒளிக்கலை யாய்ந்தே

வெளியுறும் நிலைதெரி ஒலியணு வாய்ந்தே
ஒளிஒலி நுட்பம் மெய்ப்பொரு ளுணர்ந்தே
தெளிவுறக் காண்டல் ஒலிநிலை யோர்தல்
ஒலிப்பொருள் மூலத் தெரிநிலை யாய்தல்
ஒலிஒளித் திறனா யோங்குறும் நிலையால்
உணர்ந்துறு மாற்றல் உணர்த்துறும் நிலைக்கலை
உணர்வுற வோங்கிச் செய்முறை யாய்ந்தே
நோக்குறும் நோக்கும் இயற்றுந் திறனும்
ஆக்குறும் ஆற்றல் மெய்க்கலைத் திறனே (485)

ஒளி அணுத்திரள், ஒலி அணுத்திரள் — இரண்டின் அடிப்படையிலும் ஒளிநிலையை உணரவேண்டும். ஒளியின் மூலநிலை, அதன் கலைக் கூறுகள் — இவற்றை ஆராய்ந்து, பூத வெளியின் ஒலியணுக்களை ஆய்ந்து ஒளியின் நுட்பத்தையும் ஒலியின் நுட்பத்தையும் உணரவேண்டும். இவ்வாறு உணர்தலும், ஒலிக்கூறுகளை உள்ளடக்கிய மூலப்பொருளின் தன்மையை உணர்தலும் கலைஞனின் கடமைகளாகும். இவற்றின் அடிப்படையில் ஒலித்திறனாகவும் ஒளித்திறனாகவும் விளங்கும் மூலப்பொருள் உணர்த்தும் கோலநிலைகளை ஆய்ந்து, வடிவ உண்மைகளைக் காணும் நோக்கமும் வடிவங்களை அமைக்கும் ஆற்றலுமே மெய்க்கலைத் திறனாகும்.

The exact state of light should be understood based on the stream of light atoms and sound atoms. Having analysed the causal state of light, its energy-unit, the sound atoms of space, one should know the subtleties of light and sound. It is the incumbent duty of the builder to understand the subtle nature of the Primal Substance which is associated with sound aspect. Based on this knowledge he should analyse the characteristics of varied Forms, manifested by the Primal Substance, which is in reality, the unified state of light energy and sound energy. Upon this analysis, he should understand the real significance of the form and he should attain the power of creating the form. This is, indeed, the true creative skill.

பொருண்மை சுட்டியும் பொருளுறத் தேர்ந்தும்
பொருளறி பொருளும் பொருள்நிலைப் பொருளும்
பொருளுணர் வாலறி மெய்ப்பொரு ளென்ப (486)

பொருளின் தன்மையை அடையாளங்களால் குறிப்பாகப் புலப்படுத்துவது, அந்தப் பொருள்வகையில் சிறப்பானதைத் தேர்ந்தெடுக்க உணர்த்துவது. பொருளின் தன்மைகளை வெளிப்படச் செய்யும் மூலப்பொருள், பொருளில் நிலைத்திருக்கும் இயல்பு — ஆகியவற்றை விளக்குவது — இவை பொருளறிவு பற்றிய மெய்ந்நூலின் ஆற்றல்கள்.

The efficacious features of scripture dealing with the creative materials are—

to reveal the quality of a substance through relevant insignia

to show the process of selecting the suitable variety of that substance

and to explain the nature of the Primal substance which manifests the qualities of the material and the explain the everlasting features of that material.

கருதரும் பொருளும் கலைநெறிப் பொருளும்
அரும்பொரு ளாக்கும் விழுப்பொருள் நோக்கிக்
கருப்பொருள் மூலம் கருத்தி லுணர்ந்தே
பருப்பொருள் முறைதெரிப் பான்மை யாய்ந்தே
விழுப்பொரு ளுணர்த்திச் செம்பொருள் காண்டல்
செழும்பொருட் கலைநெறி நுணுக்கமா நெறியே (487)

எண்ணுதற்கு அரியதாகவும் கலைச்சிறப்பு வாய்ந்ததாகவும் உள்ள பொருளின் சிறப்புத் தன்மையை உணர்ந்து,

கருவை உள்ளடக்கியுள்ள மூலத்தை நன்கு உணர்ந்து,

அதற்கேற்பப் பருப் பொருள்களின் அமைப்பு முறையை ஆய்ந்து,

அவற்றின் விழுமிய பொருண்மையை உணர்த்திச் செம்பொருளைக் காணுமாறு செய்தல், ஐந்திற நூலின் நுணுக்கநெறியாகும்.

Having realised the unique quality of a substance which is beyond the grasp of thought and which is associated with creative features,

having realised the nature of vastu which nestles within itself the foetus of cosmic structure and having analysed the formative factors of the visible substances according to the cosmic structural pattern,

it is the minute process of the work named Aintiram to enable us see the vastu, by showing the exalted objectness of those substances.

அணுவணு வாயந்தே அணுப்பொருள் தேர்ந்தே
அணுவணு மூலக் கலைதெரி யாற்றல்
அணுவுள் ளணுவறி யருங்கலை நுட்பம்
அணுக்கலை நுணுக்கம் கணுக்கமு மாய்ந்தே
நுணுக்கத் தியலறி பான்மை யறிந்தே
அணுநெறி யாய்தல் அருங்கலை யியலே (488)

அணுவின் அணுத்தன்மையை ஆய்ந்து, அணுவால் ஆகும் பொருளின் தன்மையைத் தேர்ந்து, அணுவின் மூலக் கலை அமைப்பை அறியும் ஆற்றலே, மிகவும் சிறந்தது. அணுவுள் அணுவாக இருக்கும் மூலப் பொருளை அறியும் கலைநுட்பம், அக்கலையின் நுணுக்கம், கணுக்கம் (படிநிலை படிநிலையாகச் செறிந்திருத்தல்) — இவற்றை ஆய்ந்து, நுண்மை உணரும் உணர்வால் அணுநெறியை ஆய்தலே அரிய கலை இயலாகும்.

Having analysed the sub-atomic nature of an atom and analysed the nature of a substance formed of that atom one should have the capacity to know the basic structural pattern of an atom. Only this capacity is considered to be most powerful. The deep insight capable of knowing the nature of Primal substance, the gradual stages of growth and inspiriting process — having analysed these, he should study the atomic order related to evolution. This is scientific skill, difficult to attain.

ஓங்குறு மொளியா லுணர்நிலை யறிந்தே
தேங்குறு முயிரொளிச் சீர்நிலைக் கலையால்
ஆங்குறு மெய்ன்னொன் கலைத்திறன் நோக்கி
ஈங்குறும் நெறிமுறை இவண்நிலை சுட்டி
ஊங்குறுந் தனித்திற னொண்மை யறிந்தே
சுட்டுப் பொருளும் சுட்டாப் பொருளும்

முட்டறத் தேர்ந்தே ஒளிநிலை மூலம்
புள்ளி யியலாய்ப் பொருந்தக் கண்டே
தெள்ளுறு முணர்வாற் சீர்நிலை யறிதல்
ஒளிநிலை மூலத் தியலறி நெறியே (489)

எங்கும் வியாபித்துள்ள ஒளியால் வாஸ்துநிலையை உள்ளவாறு அறிந்து, உயிர்ப்பாக விளங்கும் ஒளித்திறத்தால் 64 கலைத்திறன்களையும் கண்டு, குறிப்பிட்ட வாஸ்துவை (நிலப்பரப்பை)ச் சிறப்பாகக் கண்டு அதில் பொருந்தியுள்ள தூல நிலைகளையும் சூக்கும நிலைகளையும் உணர்ந்து செயல்படவேண்டும். ஒளியின் மூலத்தன்மை மூலப்புள்ளியாக அமைவதை அறிதலே, ஒளிநிலையின் மூலத்தை இயல்பாக அறியும் முறையாகும்.

Having known the nature of Vastu through all pervasive light source and having identified the 64-energy units through the animating potency of light, and having selectively seen a particular extent of land, one should know the gross and subtle potencies of the land and undertake activities according to them. The process of knowing the real luminous state of Primal Existence is to know the process by which the basic quality of light-energy assumes the position of central dot.

எண்ணியல் நெறித்திற னைந்தியல் மூலம்
எண்கலை எண்ணெறி எண்முறை இயலாய்
ஒருங்குறு முணர்வா லுள்ளொளி நோக்கி
யருங்குறும் அகவின் ணொளிக்கலை யியலாய்
உன்னுவ உன்னி உள்ளுவ தோர்ந்தே
துன்னுஞ் சுழல்நிலை மெய்க்கலை மூலம்
நிலையறி திறத்தால் நேருணர் வுற்றே
கலையறி திறத்தால் கணக்கிய லாய்ந்துணர்
ஐந்திய லைந்நெறி மெய்யியற் றிறமும்
ஐங்கலைத் திறனா லியல்பட நிறீஇ
செந்தமி ழொளிநிலைச் சீரறி வுற்றே
மூந்துறும் மூச்சுறும் முந்நெறி நோக்கி
மூலத் திறனா லொளிநிலை யாய்ந்தே
காலத் தியலும் விரைவுறும் மெய்ந்நிலை
உணர்வின் திகழ்ந்து ஒளிநிலை யியலால்
புணர்நெறித் திறனும் பொருந்துவ நோக்கி

ஐங்குடில் முத்தீப் பேரொளி காண்டுபு
செங்குடிச் சிறுகுடிப் பைங்குடி யியலே
ஒன்றினி னொன்றாய் உறுநிலை நோக்கி
ஒன்றினின் னொன்றே ஒளியிய லாக்கம்
மேலெழுந் தியம்பும் மெய்க்கலை நோக்கிக்
காலெழுந் திறனுறுங் கணக்கிய லாய்ந்தே
அகவின் னொளிர்தரு மொளிஒலிச் சுடரும்
மிகுமுறை நோக்கி மெய்யுணர் திறத்தால்
விண்ணொளி தோன்றி மண்ணுறப் பொருந்தி
விண்ணொளிக் கூடும் விண்ணினை எய்தும்
விண்ணில் தோன்றும் ஒளிமண் ணென்றே
விண்ணுறுந் திறனும் ஒளிநிலை யாற்றல்
நுண்ணுணர் திறனால் நெறியிய லாய்ந்தே
ஐங்குடி யாக்கம் ஐம்புலன் நெறியும்
தங்குறும் நிலைநெறி அகப்புற மாய்ந்தே
நோக்குவ நோக்கி ஆய்நிலை யாய்ந்து
ஆக்குறுந் திறமுறும் வண்மை தெளிந்தே
செய்முறை யியற்றல் தெளிந்தோ ரியல்பே (490)

எண்ணியலை உள்ளடக்கிய மூலத்தின் ஐந்தியலானது எண்கலை, எண்நெறி (flow), எண்முறை ஆகிய மூன்றாக வெளிப்படும். இதனை அனுபவ வாயிலாக உணர்ந்து அகவின் ஒளியின் நுட்பத்தையும் மூலம் சுழற்சி கொள்ளும் நிலையையும் கணக்கியல் நெறியாலும் உணர்வாலும் உணர வேண்டும். ஐந்தியல், ஐந்நெறி - இவற்றையும், மூலப்பொருள் வெளிப்படும் நிலைகளையும் அறியவேண்டும். மூவகையாக இயங்கும் மூச்சின் நிலைகளுக்கு ஏற்ப மூலத்திறன், ஒளிநிலை, காலத்து இயல் ஆகியவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இம் மூன்றுக்கும் உள்ள இணக்கத்தை உணரவேண்டும். வாஸ்துவின் முயக்கம் (மேல் எழும் ஆற்றல்), காலம், கணக்கியல் ஆகியவற்றின் அடிப்படையில் விண்தொடர்பான ஒளி-ஒலித்திறங்களை உணரவேண்டும். விண்ணொளியை மண்ணில் பொருத்தினால் விண்ணொளி கூடும்: விண்ணை அடையலாம் என்பதையும் உண்மையில் மண் (வாஸ்து) விண்ணில் தோன்றும் ஒளியே என்பதையும் உணரவேண்டும். விண்நிலை, ஒளிநிலை இவற்றின் ஆற்றலால் ஐங்குடி ஆக்கம் (five fold level of manifestation) ஐயபுலன்நெறி — இரண்டிற்கும் உள்ள இணக்கத்தையும், அகம் - புறம் இணக்கத்தையும் முறையாக உணர்ந்து செயல்படுதலே மரபறிந்தோர் இயல்பாகும்.

The fiveflod aspect of Primal Existence involving numerical patterns, reveals itself in three ways, eightflod energy, eightfold flow and eightfold order. Knowing this, one should understand the subtleties of light of inner space and the revolving state of Primal Existence. He should know the five aspects, five processes and the five states by which the Primal Existence reveals itself.He should know the potency of the Primal Existence at each level and the states of luminous source, and the role of time in accordance with the flow of three kinds of breath, and should know the inseparable relationship between one's breath and the time-flux; he should know the five states assumed by the Primal Existence and the nature of supreme space, elementel space and the inner space. He should understand the inter-dependency between them and know the potency of light and sound related to space based on the upward thrust of Vastu time and the mathematical order. He should understand that it is possible to install the luminosity of space on the earth and to attain the state of supreme space, and that the earth is, in reality, nothing but the light, manifested from the space. Through the potency of space and light states, he should understand the harmony between the five levels of manifestation and the corresponding five levels of consciousness, and the harmony between the inner and outer structures. It is the nature of a true scientist to involve himself in the creative work, based on the methodical understanding of the above principles.

கட்புலன் தோன்றுங் கருவிழி இருவிழி
விட்புலத் தீபவொளி ஒளிநிலைச் சுடராய்த்
தெரிநிலை தோன்ற எரிநிலை மெய்யொளி
விரிவுறுந் திறத்தால் விண்ணொளி நோக்கால்
பரிவுறும் உணர்வால் பெருநிலை நோக்கி
விரிவுறுங் கலைத்திறன் எண்ணெண் ணியல்தெரி
புள்ளியிற் புள்ளி பொருந்த நோக்கி
புள்ளித் திறனே இயங்கலும் இயக்கலும்
இயங்குறுந் தன்மை இனிதி னோர்ந்து
உள்ளிருந் தெழுதரும் ஒலியலை அலையிசை

தெள்ளுறும் திறனொலி ஒலியலை இயலாய்
ஒலிஒளி யாற்றல் ஓங்குறத் தெரிந்தே
ஒலிமுதற் பொருளுறும் ஓசை யறிந்தே
ஓசை யியற்றிறன் உன்னுறுந் திறத்தால்
ஓசை மெய்யொலி இயல்பினிற் றிகழ்ந்தே
அணுத்திரள் ஒலியின் அணுக்கூ றியலும்
அணுவணுக் கூறியல் நுட்ப மாய்ந்தே
ஒலியியல் நுட்பம் ஒழுங்குறு மாக்கும்
ஒலியியற் றிறநெறி மெய்யுணர் கூட்டும்
சீரொலி நேரொலி தெளிபொலி நிறையொலி
ஓரொலி யாற்றல் ஓமெனத் தேர்ந்தே
ஒமுறும் உருவம் உள்ளுணர் வாய்ந்து
ஓமுறும் ஒலியியல் கேட்டுறும் ஆற்றலால்
ஓம்ஒளி ஓம்ஒலி விண்மொழித் திறனாய்
ஓமிய லாற்ற லகவெளிப் புறவெளி
வெளியியற் றிறனும். விண்ணுறும் மூலம்
ஒளிமுதற் பொருளெனத் தெளிநிலை யியல்பே (491)

இமுகளுக்கும் விண்ணொளி உதவுவதையும், அந்த விண்ணொளி எரிமயமான மெய்யொளியின் விரிவு என்பதையும் உணரவேண்டும் அந்த ஒளியின் நிலையே 64 இயலாக வெளிப்பட்டு மூலப் புள்ளியாகப் பொருந்துகிறது. அந்தப் புள்ளித்திறனே இயங்கும் திறனும் இயக்கும் திறனுமாகும். நம் உள்ளிருந்தெழும் ஒலியலையே ஒளியாற்றல் உடையதாகவும் விளங்குகிறது. சீரொலி, நேரொலி, தெளியொலி, நிறையொலி, ஓரொலி - என்பவை ஓம் என்பதன் ஆற்றல்வகைகளே. ஓம் என்பதில் பொருந்தும் உருவம் ஓம் ஒளியே. ஒளிமுதற்பொருளே ஓம்-வாயிலாக அகவெளி, புறவெளி வெளித்திறன் என வெளிப்படுகிறது.

One should know that the light of space is helpful to the eyes and it is effected by the incandescent Primal light. The same manifests as the central dot and as 64 squares. The central dot is of nature of moving around itself and of making others to move around. Sound wave that rises above is associated with the potency of light waves also. Rhythmic sound, harmonious sound, distinct sound, pervasive sound, unique sound — these are indeed the potential effects of OM-sound. The form of OM is

nothing but OM-light. Only the Primal luminous substance manifests itself as inner space, outer space and space energy.

ஒருகலை இருநிலை முத்திறன் நாற்புறம்
பெருநிலை யைந்தா யொளியியல் நோக்கி
மூலத் திண்மை முயற்சியி னோக்கிக்
கோலத் தியலாற் குறித்துறு மாற்றல்
கண்ணொளிக் கதிரொளி விண்ணொளிக் கதிரொளி
எண்ணுறுந் திறனு மியைபுறுந் திறனும்
தெண்ணிதின் நோக்கி நுண்ணிதின் ஆய்ந்தே
ஒண்ணிதின் கலையொளி ஒக்கப் பொருத்தி
ஒருங்குறக் கண்டே மிக்குறுந் திறத்தால்
பெருக்கத் தியல்நெறிக் கட்புலம் மேவும்
விட்புலத் துள்ளொளிக் கட்புலம் கூடும்
திட்பமும் நுட்பமும் செறிநிலை யுணர்வால்
உணர்ந்துறு மாற்ற லொளிநிலை யோங்கிப்
புணர்நிலை இயலறிப் பொருந்த நோக்கி
விண்ணொளிக் கண்ணொளிப் புணர்நிலை யாய்ந்தே
எண்ணுறும் உணர்வா லெண்ணெண் கலைத்திறன்
நுண்ணுணர் வாலறி நுட்பமும் பெற்றே
கண்ணொளி நோக்குநர் கலைதெரி யறிவரே (492)

தனக்கு அன்னியமாக வேறொன்று இல்லாதது; இயங்காமல் செயற்பட்டும் இயங்கிச் செயற்பட்டும் விளங்குவது; ஆக்கல் முதலான மூன்று ஆற்றல் பெற்றிருப்பது; சதுரமாக இருப்பது; ஐந்து பெருநிலைகளாக விரிவடைவது— இவ்வாறு இருப்பது மூல ஒளி; இதன் இயலையும் மூலத்தின் திண்மையையும் முயன்று அறிக. கோலமாக வெளிப்படும் ஆற்றலே கண்ணொளி - மூலக்கதிரொளி இணைப்பையும், விண்ஒளி - மூலக்கதிரொளி இணைப்பையும் ஏற்படுத்துகிறது; மூலக்கலையொளியே கண்ணொளி, பெருவெளி, விண்புலம், உள்ளொளி எனப் பொருந்துகிறது. உணர்வாற்றலால் ஒளிநிலை ஓங்கப்பெற்று விண்ஒளியும் கண்ஒளியும் இணைகின்ற நிலையை ஆய்ந்து 64 கலைத்திறன்களை நுட்பமாக அறிந்து கண் இந்திரியத்தின் ஒளித்தன்மையை அறியவல்லவரே கலைகளை உள்ளவாறு ஆராய வல்லவராவர்.

One without a second apart from it; capable of functioning without any movement and with movement;

always energetic with three forces of creation, sustenance and dissolution; square in shape; capable of expanding in five spacious states — these are the characteristics of the Primal Light Energy. One should, with all efforts, should know about its nature and the concreteness of the Primal Vastu. The force which manifests as form effects the interaction between the luminosity of eye and the primal light and between the space light and the Primal light. It is luminosity of Primal Energy that manifests as the luminosity of eye, vast space, space-field, inner space etc. Only those who could analyse the unitive process of luminosity of space and eye are capable of realising the exact nature of creative energy.

ஊழி இமைநொடி பொழுதியல் ஓர்வோர்
ஊழை வென்றறி திறனுறு வாரே (493)

ஊழியாகிய பேரெல்லையையும், இமை, நொடி என உள்ள சிற்றெல்லையையும் ஆய்ந்து தெளிவோரே, ஊழையும் வெல்லும் ஆற்றலைப் பெறுவர்.

Only those who have clear knowledge about the greatest limits of Time such as aeon, etc., and the shortest limits of time such as twinkling of eye etc., could attain the power transcending the providential course of events.

கால நுண்மைக் கருத்துணர் வோங்கி
மூலப் பொருளை முன்னி யாயந்தே
காலம் நல்கும் கருவினைத் திறனிலை
மூலம் கூட்டும் பெருவினை ஆற்றல்
காலத் தியலறிக் கலையை யுணர்ந்து
காலங் காண்டல் மெய்யுணர் வோர்தல்
காலப் பொழுதியல் கண்டுணர் நெறியால்
ஞாலங் கருதி நெறியுணர் வுற்றே
குறியுணர் வோங்கிக் குறித்துறும் நிலைநெறி
நெறிநிலை யியங்கும் நெறிமுதற் பொருள்நிலை
நினைப்பின் நினைந்து உள்ளுறு முணர்வால்
முனைப்பின் மாறா மூதுணர் வோங்கிக்
கனைப்பி னியற்றுங் கடுவினை ஒன்றே
முனைப்பி னோங்கும் பெருந்திரல் நல்கும்

காலம் நுணுகுங் களியதித் திறனால்
காலத் தியலறி மெய்நிலை கூட்டி
எண்கலை மூலம் இயலுற வோர்ந்தே
விண்வலை நற்றிறன் மேவுறும் ஆற்றல்
இமைப்பொழு தியல்நிலை எண்நிலை ஆய்ந்து
இமையா நோக்கின் இயல்பின வாகி
நொடிநிலைப் பொழுதின் நுட்ப மறிந்து
காலப் பல்துளி கண்டுறு முணர்வால்
காலக் கூற்றியல் முற்றறி உணர்வே
காலம் பொழுதே நாளிர வாகி
காலை உச்சி மாலை நுட்பம்
கோலத் திரவின் குறிப்பும் நோக்கி
மூலப் பொருள்நிலை முன்னி யுன்னி
கதிரொளி நாள்நிலை உழைப்புறும் ஆற்றல்
மதியொளி இரவில் அறிவுறும் ஆற்றல்
நாட்பொழு துழைத்து நன்னிய நாடி
நாட்டமும் நோக்கமும் நன்னிய துழைப்பே
இரவுறும் பொழுதில் உள்ளூற் றோர்ந்து
உரவுறும் அறிவுணர் நெறிகலை ஆய்தல்
ஓய்வறி யாநிலை உழைப்பின் திறத்தின்
ஆய்வுறும் நோக்கே மெய்நிலை மெய்க்கலை
காலக் கூற்றியல் கால வினையியல்
கால மியற்றுங் கருந்திறன் மெய்வினை
ஓர்ந்து தெரிந்து உறுபய னோக்கி
ஆர்ந்த காலத் தியல்நெறி நுட்பம்
உணர்யதி ஆற்ற லொளிபெற் றோங்கி
உணர்வுறும் மெய்நெறி நாடுவ நாடி
காலங் காண்டல் காலம் நோக்கல்
காலத் துழைப்பே மெய்ப்பயன் நல்கும்
எண்ணிலை திறனுறக் காலம் நோக்கி
கால மெய்யியல் நுணுக்கி ஓர்ந்து
காலங் குறிக்கும் பொருள்நிலை உணர்ந்து
குறிநிலைக் காலம் குறிநெறி நின்று
அறிகலை இயலா லாய்ந்து தெளிந்து
காலம் அறிந்தோர் மெய்ப்பயன் பெறுவரே (494)

காலநுண்மையையும் மூலப்பொருளையும் இணைத்துப் பார்த்துக் காலத்தால் பெறப்படுவதும் கருவறை அமைப்போடு தொடர்புடையதும் ஆன மூலத்திறத்தை உரிய இடத்தில்

கூட்டுவிப்பது பெரிய செயலாற்றலாகும். காலத்தைக் காணும் நெறியால் மெய்ப்பொருள் நெறியையும் ஞாலநெறியையும் உணர்ந்து கொண்டு, குறிகளால் பெறப்படும் வடிவஅமைப்பைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துச் செயற்படும் முறையே பெரும்திறத்தை வெளிப்படுத்தும். காலத்தை நுணுக்கமாகக் கணித்து, மெய்ந்நிலை உணர்ந்து, எண்கலை, விண்கலை, எண்நிலை ஆகியவற்றை ஆய்ந்து அளவுக்கு உட்படாத காலத்தையும், நாள், இரவு, காலை, உச்சி, மாலை முதலான காலக் கூறுகளையும் இணைத்து நோக்கி மூலப்பொருள் நிலையைக் காண வேண்டும். கதிரொளி (பகல்) உழைப்புக்குரிய ஆற்றலையும் மதியொளி (இரவு) அறிவுக்குரிய ஆற்றலையும் வளர்ப்பது என உணர்ந்து உழைப்பையும் அறிவையும் பெருக்கிக் கொள்ளும் வகையில் மெய்க்கலையை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். செயல்வகைச் சிறப்பைக் காலக் கணிப்பால் பெறவேண்டும். காலத்தைப் பொதுவகையாகக் காணல், சிறப்புவகையாக நோக்கல், காலத்தில் மேற்கொள்ளப்படும் செயல் — இவையே நிலைத்த பயனைக் கொடுக்கும். கால இயலையும் காலம் குறிக்கும் பொருள் நிலையையும் உணர்ந்து, நெறிப்படி செயற்பட்டு, முறைப்படிக் காலத்தை அறிபவர்களே மெய்ப்பயனைப் பெறுவார்கள்.

By co-ordinating the Time factors and the states of Primal substance, to infuse the potency of the Primal state into a particular place related to the nucleus (brahma sthana) of the built space, is indeed a great accomplishment. Having deeply thought over the creative order of the Primal Substance and the functional order of earth-space and the formative structures, if one proceeds to carry out the relevant activities, a creation with great force could be manifested. He should understand the real state of the Primal substance by co-ordinating various factors such as subtle time, numerical role, space order, eightflod state, time beyond measures and the calculable time and time units. He should systematise the process of creating the form and of the eternal creative energy and know the fruitful features of practical process. Only that action regulated based on time would yield everlasting benefits. Only those who systematically know the exact role and efficacy of time in the process of creation, could achieve best results.

ஐயமுந் திரிபும் நீங்கிய உளத்தால்
வையமும் மையமும் வகையுற வோர்ந்தே
மையத் தியல்நிலை நூலறித் திறனும்
வையமும் விண்ணும் வளர்நிலை நுட்பம்
நுண்ணிதின் உணர்ந்து நோக்குற நோக்கி
எண்ணுறுந் திறத்தா லியல்பினின் ஆய்ந்து
ஞால மாநெறி நடுவுறுந் திறனும்
கோல மூலம் குறித்துக் காண்டுழி
காலமும் மூலமும் கருத்தினின் ஓர்ந்தே
காலத் திடைவெளி மூலங் கருதி
நோக்குற நோக்குபு நுண்மதி யாய்வின்
ஆக்குறுந் திறனா லறிநிலை யோர்ந்து
அறிகலை யுணர்விய லகமுறத் தேர்ந்து
குறியாற் குறித்து நெறியால் நிலைத்தே
காலத் தூண்நிலைக் கருதிக் கருதி
மூலத் தூணியல் முன்னியு முணர்ந்தும்
எண்கலைத் திறனுறு மியல்நெறி யாற்றல்
எண்ணெண் ணியற்றிறன் இனிதி னோர்ந்தே
வையமும் மையமும் வகையெளி தாக்கி
மெய்ந்நிலை பொருந்த நூலறி திறனால்
எண்ணிலை மாறா மியல்நெறி யோர்ந்தே
உண்ணிலைத் திறத்தா லுணர்வினா லாய்ந்தே
நன்றுறுங் காலத் தூணியல் நுட்பம்
ஒன்றுறும் மூலத் தூணியல் ஒட்பம்
பெட்புறுந் திறத்தால் பேரறி வுற்றே
திட்பம் நோக்கிச் சீரறித் திறனால்
கலைநெறிக் கழறும் நிலைநெறி நோக்கும்
தலைநெறி சாற்றும் மெய்ம்மை யுணர்ந்தே
உள்ளுறுந் திறனுறும் ஓங்குமெய்க் கலையே (495)

தெளிவார்ந்த உள்ளத்தால் வையத்தையும் மையத்தையும் வகைப்பட உணரவேண்டும். மையத்து இயல்புப்படி நூல்களை பொருத்தி, ஞாலநெறி, மையத்திறன், கோலமூலம், காலத்து இடைவெளி (intermission) – இவை அனைத்திலும் மூலத்தின் வியாபகம் உள்ளது என்பதை உணர்ந்து காலத்தூண் நிலையையும், அதற்கேற்றவாறு மூலமாக உள்ள மூலத்தூண் நிலையையும் உணரவேண்டும். எண்கலை, 64கலை இயல், வையம், மையம் – இவற்றின் இணக்கம் கண்டு நன்மையை மிகுவிக்கும் காலத்தூண் நுட்பத்தையும் கண்டுணர்வதே பேரறிவுத்

திறன். இப்பேரறிவு வாய்க்கப் பெற்று, சிற்பநெறியின் உண்மை உணர்ந்து செயற்படுவதன் மூலம் மெய்க்கலை வளம் பெறும்.

One should clearly know the nature of earth sphere and the central dot-field. Having fixed various threads according to the nature of central space, he should know that the moving order of earth, potential state of the central dot, basic state of form and time intervals are under the force of Primal energy. He should know about the Time-pillar and the corresponding Primal Pillar and the concordance between octo-energy of creation, 64 squares, earth and central space. Intellectual greatness lies in exactly knowing the Time-pillar and the Prime-pillar. If activities are carried out based on such knowledge and understanding silpa texts, art of creation would be flourishing.

கற்பன கற்றுக் காண்பன நோக்கி
சிற்பம் ஓவியம் செவ்விசை யோர்ந்தே
எண்கலை நுண்கலை இயலுறத் தேர்ந்தே
விண்கலை நெறிமுதல் வேவுவ தோர்ந்தே
ஒளிக்கலை ஒலிக்கலை ஓர்ந்து தெளிந்தே
வெளியியல் வளியியல் விரைவின் ஆய்ந்து
காலமும் மூலமுங் கருத்திற் குறித்தே
கோலமும் சீலமும் குறிப்பி னாய்ந்தே
ஞாலம் ஆக்கும் நெறிநிலை யாய்வோர்
சீலத் தெண்ணியல் எண்ணெண் கலைத்திறன்
நோக்குற நோக்கி நோக்குற் றிலங்கி
எண்ணிய லறிவர் கலைதெரி விரிவும்
விரிவாற் றுலங்கும் மெய்க்கலைப் பொருளும்
தெரிநிலைப் பொருளும் தோன்றாப் பொருளும்
தோன்றும் பொருள்நிலை இயல்நிலை யுணர்வும்
என்றுறும் பொருள்நிலை இயல்நிலைத் திறமும்
எண்ணெண் கலைத்திறன் நிலைவிளக் கும்மே (496)

கற்றும், கண்டும், சிற்பம், ஓவியம், இசை இவற்றை ஓர்ந்தும் எண்கலை, விண்கலை, ஒளிக்கலை, ஒலிக்கலை – இவற்றைத் தேர்ந்தும் வெளி இயல், வளி இயல் – இவற்றை ஆய்ந்தும், காலம், மூலம், கோலம், சீலம், ஞாலம் ஆகியவற்றின் நெறிமுறைகளை ஆராய்வோர் – சீலத்தின் அடிப்படையில்

அமைந்த 64 கலைத்திறன்களையும் எண்ணியலையும் அறிய வல்லவராவர். 64 கலைத்திற இயல் தொடர்பான அறிவே – மெய்க்கலைப் பொருள், தூலப்பொருள் இயல்பு, நுட்பப்பொருள் இயல்பு, புலப்படும் பொருளின் திறம், புலப்படாப் பொருளின் திறம் முதலானவற்றை உணர்த்த வல்லது.

Being well-trained in the study of sculpture, drawing, music, science of number, space, light and sound, space-sphere and aero sphere, those who analyse the features of Time, Primal Existence, Form, Rhythm and Universe could know in detail the significant features of 64 squares and numerical measures. Only the knowledge related to 64 squares is capable of revealing the truth about the eternal creative energy, gross and subtle materials, visible and invisible materials etc.

அலைபடும் பொருளும் கலைபடும் பொருளும்
நிலைபடும் பொருளும் மலைபடும் பொருளும்
நெறியுற நோக்கிக் குறியுறக் கண்டே
அறிவுற வுணர்வோர் அகத்துண ரொளியால்
காண்டலுங் காண்டுழிக் கலைத்திற நோக்கால்
ஈண்டிய வியல்நிலை நிலைபெறுந் திறத்தால்
ஒளிநிலைத் திறனா லோங்குவ தியல்பே (497)

கடலில் உண்டாகும் பொருள், ஆற்றில் உண்டாகும் பொருள், நிலத்தில் உண்டாகும் பொருள், மலையில் உண்டாகும் பொருள் — இவற்றைப் பொருத்தமுற உரிய அடையாளங் களால் தேர்ந்தெடுத்து, வாஸ்து நூற்படி ஆராய்வோர் அகத்துணர்வுத் திறத்தால் அவற்றைக் கலைநிலைக் கேற்பப் பொருத்திப் பார்த்து, வடிவங்களுக்கு நிலைபேற்றுத்தன்மை உண்டாகும் வண்ணம் ஒளித்திற அடிப்படையில் உருவாக்க வேண்டும்.

Having selected the relevant materials, available from sea, river, earth and mountain, those who examine them according to the directions of vastu sastra, should carefully analyse those materials and construct the forms based on the principles of light energy so as to effect eternality to the created forms/constructs.

ஒளிக்கலை இயல்தெரிப் பெருங்கலை நுட்பம்
வெளிக்கலை நெறியென மெய்ந்நிலை யோர்ந்தே

வெளியின் ஒளியால் மேவுறுந் திறனிலை
ஒளியின் வெளியால் ஆக்குறுங் கலைத்திறன்
ஒளிக்கதி ரொளிநிலை யியல்பிற் றிகழ்ந்தே
ஒளிநிலை மூலக் கருக்கதி ராய்ந்தே
கதிரொளி யியல்நிலை ஒளிக்கதிர்த் துணுக்கால்
கதிரொளிக் கீற்றின் சீரியல் நுட்பமே (498)

ஒளிக்கலையின் தன்மையை உணரவைக்கும் கலைநுட்பமே வெளிக்கலைக்குரிய நுட்பநெறி என்றுணர்ந்து, வெளியின் ஒளியாலும் ஒளியின் வெளியாலும் திறன்பொருந்துமாறு உருவத்தை அமைத்து, ஒளிநிலைக்குரிய மூலக்கருவாகிய கதிரின் திறத்தை ஆய்ந்து ஒளிக்கதிராகிய துணுக்கம் (split) என விளங்கும் ஒளியமான சதுரப் பேழையின் நுட்பத்தைக் காண வேண்டும்.

Only that subtlety of energy, capable of revealing the nature of light energy, turns into a subtle order pertaining to the space field. There is light field belonging to space and space field pertaining to light. Having known these facts, one should create a form. Having studied the qualities of primal foetus of luminous source, he should observe the subtlety of luminous square box (microbode) that shines forth as a thin light split.

ஓர்ந்துண ராற்றல் ஒள்ளிதின் பெருக்கி
தேர்ந்துண றறிவர் சீரொளி கண்டுழி
தேற்றம் ஏற்றம் தெரிநிலை கூர்ந்தே
தோற்றும் ஒளிநிலை ஒலிநிலை யாய்ந்து
எண்ணெண் கலைத்திறன் இயல்பினின் ஆய்ந்து
நுண்ணிலை யியலால் எட்டும் ஆய்தல்
உணர்வோர் கலைத்திறன் ஒளிமுதல் ஆய்திறன்
உணரறிக் கலையே ஓங்குறும் நெறியே
எண்ணின் நெறியால் இலங்கல் மரபே (499)

ஓர்ந்தும் தேர்ந்தும் சீரிய ஒளித்திறத்தைக் கண்டு, தேற்றநிலை, ஏற்றநிலை, ஒளிநிலை, ஒலிநிலை — இவற்றை ஆய்ந்து, 64 கலைத்திற இயல்பையும் உணர்ந்து நுட்பமான நிலைகளைக் குறிக்கவல்ல எண்நிலைகளையும் ஆய்தலே கலை ஆய்வுக்குரிய உண்மைத் திறன். இது எண்ணின் நெறியால் மரபுவழிப்பட்டு விளங்குகிறது.

Having observed the inherent potencies of the luminous source, and having examined varied states of finality, light and sound, one should know the creative energy of 64 squares and octo-forms that are indicative of subtle states. This is the true and effective process pertaining to research on the science of Vastu.

எழும்ஒளி எழும்ஒலி எழுங்கலை யெழுந்திறன்
எழுமுறை நோக்கி எழுநிலை மாடம்
எழுமுணர் திறத்தால் உழைப்புறும் நெறியே
எழுமிய லுற்றே ஆர்த்தலும் நோக்கலும்
கூர்மதி யாளர் குறிப்பின் உணர்ந்தே
நேர்மதி வல்லோர் நினைப்பிற் றிகழ்ந்தே
உள்ளுறுங் கருநிலை உன்னுவ தோர்ந்தே
உள்ளுறும் உணர்வால் மாடக் கருநிலை
எழுநிலை மாடம் இயல்புறும் உண்மை
எழுமுணர் வாலறி நிலைக்கலை யாய்ந்தே
கட்டுறும் இயக்கம் கலைநெறிக் கலைதிகழ்
கட்டிடய் இயல்நெறிக் கலைநெறி மரபே (500)

மேல்நோக்கி எழும் ஒளி, ஒலி, திறன், முறை — இவற்றை நோக்கி, எழுநிலைமாடம் முதலானவற்றை எழுப்புகின்ற திறத்தையும் செயல் நெறியையும் அறிவாளர்கள் பல்வேறு குறிப்புகளால் உணரவேண்டும். அமைப்புக்குரிய கருநிலையை உள்வெளியில் நன்கு தீர்மானித்துக்கொண்டு (concept) மாடத்திற்குரிய கருநிலையையும் (actuality) கண்டு, அதற்குரிய அமைப்புக் கூறுகளையும் ஆய்ந்து, அதனைக் கட்டும் முறையே, கட்டிட இயலுக்குரிய கலைநெறி மரபாகும்.

Having observed the upward energy factors of light and sound, the wise men in the field of vastu should observe those varied indications and know the effective process of raising a multi storeyed building. Firstly, they should determine the foetus-cell (brahma-sthana) in their ideation (inner space); consequently they should identify the foetus-cell belonging to the multi-storeyed building and examine the essential features of the proposed construction. This is the traditional way of construction based on the science of buildings.

ஒலியிசை நுட்பம் ஒல்லையில் உணர்வோர்
ஒளியிசை நுட்பம் தெள்ளித் னோர்ந்து
ஒளிஒலி இயற்றிறன் நுட்பமு மாய்ந்து
ஒளிஒலி நுணுக்கம் மெய்ந்நிலை யாய்ந்தே
ஒலியிசை நுட்பத் தியலறி வாற்றல்
ஒளிக்கலை மூலம் நுட்பம் தேக்கி
விண்ணொளி யியலால் பொருள்நிலை மேவும்
கண்ணொளி யியலால் கலையுணர் வோங்கி
ஒலியிசை பெருகி ஒளியிசை இவர்ந்தே
ஒளிஒலி நுட்பம் ஆய்தலும் நெறியே (501)

ஒலிஇசை நுட்பத்தை உணரவல்லவரே ஒளிஇசை நுட்பத்தையும் தெளிவாக உணர்வர்; ஒளி-ஒலி இணக்கத்தின் திறத்தையும் நுணுக்கத்தையும் ஆய்ந்து, ஒலிஇசையாலும் ஒளிக்கலையாலும் அமையும் நுட்பம் காணவல்லவர்; அவர்களே விண்-ஒளியால் பொருந்தும் பொருள்நிலை உணர்வும் கண்-ஒளியால் அமையும் கலையுணர்வும் பெற்று ஒளி ஒலி நுட்பத்தை நெறிப்படிக் காண்பர்.

Only those who could understand the subtleties of the melodies of sound are capable of knowing the melodies related to light aspect. Having analysed the combined operation of both light and sound and its efficacy, they could know the subtle state evolved by the melodies of sound and creative force of light. Being endowed with the consciousness related to substance formed of space-light and related to the creative order, they could observe the subtle function of both light and sound in an orderly way.

எட்டே நிலைக்கலை எட்டே இயலாய்
எட்டுறும் எட்டில் நிலைப்பயன் ஓர்ந்தே
முட்டின் றுணர்ந்து முழுத்திற னாய்ந்தே
சுட்டும் பொருண்மைச் சுட்டாத் தெருண்மை
முப்பொருள் நோக்கி முக்கலை தேக்கி
செப்புறும் சீரறி வுற்றுத் திகழ்ந்தே
நேரறி வுற்று நிலையறி திறத்தால்
கூரறி வோங்கும் குறிப்பி னுணர்ந்தே
எண்ணெண் கலைநிலை விண்ணளந் தறிதல்
திண்ணுறும் நெறியெனச் சீர்நெறி நோக்கி

மூலத் தெட்டின் விளிம்புறு மாற்றல்
காலத் தெட்டின் கலைநிலைத் தேற்றம்
நிலைக்குறி யுண்மை நிலைநெறித் தேற்றம்
நிலையறி வாலுணர் நெறியறி யுணர்வோர்
நிலையெழு மாடம் நெறியினின் நோக்கி
நிலைக்கலை யுணர்ந்தே நெறிவகுப் பாரே (502)

நின்ற கோலத்திற்குரிய நிலைகள் எட்டு. ஒவ்வொன்றும் எட்டுக் கூறுகளாக அமைய 64 கூறுகள் வெளிப்படும். இவற்றால் புலனாகும் பொருள்நிலை உணர்ந்து, முப்பொருள், முக்கலை ஆகியவை தொடர்பான உண்மை அறிந்து, இரண்டின் கலப்பு நிலையை அனுபவ பூர்வமாக அறிந்து உணர்வாற்றல் பெறவேண்டும். 64 கலைகளை உணரும் நெறியே விண்ணளந் தறியும் சீரியநெறி. மூலத்தின் வெளிவரிசையின் எட்டு நிலைகளில் பொருந்தும் ஆற்றலையும் காலத்தின் எட்டு நிலைகளில் பொருந்தும் சுழற்சி நிலையையும் தெளிவாக உணர வேண்டும். இவ்வாறு குறிகளாலும் நெறிகளாலும் உணர்பவர்கள் எழுநிலைமாடம் முதலானவற்றை நிலைபேறு அமையும் முறைப்படி உருவாக்குவர்.

There are eight stages pertaining to a standing form. Each stage is eightfold and therefore there emerge 64 units. Having understood the real aspect of substance through these 64 units and having known the truths related to threefold substance and threefold evolution and having experientially understood the combined operation of these two, one should gain the power of inner consciousness. The effective process of measuring the space is the realisation of the efficacy of 64 units. He should know the potency contained bordering in the eight stage of the mula mandala and the cyclic force effected by the eight modes of Time. Those who understand these through relevant characteristic marks and relevant order, could effectively construct multistoryed buildings that could exist for ever.

எழுநிலை எண்ணிலை இயல்பை யறிந்தோர்
எழுங்கலை யொளிநிலை நெறியறிந் தோரே (503)

எழுகின்ற நிலையான அமைப்புகளுக்குரிய எண்-நிலை (8) இயல்பை அறிந்தவர்கள், மூலப்புள்ளியிலிருந்து எழும் ஒளிமிக்க கலைகளை நன்கு அறிந்தவர்களாக ஆவர்.

Those who know the real characteristics of eight stages pertaining to arising constructions, could become the knowers of luminous creative forces that emanate from the primal and central dot.

எழுநிலை மூலம் எண்ணிலைக் கோலம்
எழுங்கலை யுணர்வால் செழுங்கலைத் திறனுறும்
எழுமுணர் வாலறி நேரறி வுற்று
எழுமதித் திறனால் சீரறி வாரே (504)

எழுகின்ற உருவ அமைப்புக்கு உரியதும் எண்ணின் அடிப்படையில் அமைவதுமான கோலத்தின் சீரிய நிலைகளைக் கலையுணர்வாலும் கலைத்திற அனுபவத்தாலும் நன்கு அறிய முடியும்.

Through creative consciousness and efficacious experience one could know the orderly and rhythmic formation of lines and curves of FORM, effected by numerical measures.

அகவொளிப் புறவொளி அகத்துண ரொளிநிலை
மிகுமொளித் திறனால் மெய்க்கலை யோர்ந்தே
அகப்புற வாற்றல் புறப்புறத் தியலும்
அகவொளி நிலைதிகழ் புறவொளிச் சீரும்
ஓங்குறும் உணர்வால் மெய்க்கலை யுணர்வோர்
ஆங்குறும் ஈங்குறும் ஊங்குறும் சுட்டின்
தேங்குறும் மெய்ப்பொருள் தெரிநிலை காண்பரே (505)

அகவொளி, புறவொளி — இவற்றைப் பற்றிய ஆழ்ந்த உணர்வால் மெய்க்கலையை உணரவேண்டும்; அகத்தின் புற ஆற்றல், புறத்தின் புற ஆற்றல், இவற்றுக்குரிய அகவொளி, புறவொளி — ஆகிய இவற்றை உணர்பவர்கள், அங்கு, இங்கு, உங்கு எனக் குறிக்கப்படும் நிலைகளில் திரண்டுள்ள பொருள்கூறுகளைத் தெளிவுறக் காண்பார்கள்.

One should know about the principles of Vastu through the refined consciousness related to inner space and outer space. There exist an interiorising light related to the manifesting power of inner space and exteriorising light related to the external power of the manifested thing.

Those who realise this, can evidently see the features of things existing in three spatial points - distant, near and mediatory.

சிறுகண் பெருங்கண் சீர்நிலை யாய்ந்தே
குறுங்கண் நிலைக்கண் மெய்ந்நிலை யோர்ந்தே
நெடுங்கண் நெறிக்கண் இயல்பினி துணர்ந்தே
ஏர்க்கண் சேர்க்கண் எழில்நிலை தேர்ந்தே
புருவம் நெற்றிப் பொறிப்பின் ஆய்ந்தே
உருவத் தியல்தெரி மெய்ந்நிலை யாற்றல்
ஓவிய மூலம் ஓள்ளித முாக்கம்
ஓவியத் துயிராய் நிலைபெறும் நெறியே (506)

கண்ணின் சிறுமை, பெருமை, குறுமை, நெடுமை முதலான பல்வேறு நிலைகளை உணர்ந்து, புருவம், நெற்றி, இதழ் — இவற்றின் அமைப்பியலை அறிந்து, இவற்றின் அடிப்படையில் உருவத்தின் மெய்யான நிலையை அறியும் ஆற்றல் ஓவியக்கலைக்கு அடிப்படையாகவும் ஓவியத்து உயிராகவும் விளங்கும். இதுவே மரபுநெறிப்பட்ட கொள்கை.

One should keenly observe various features of eyes such as smallness, vastness, thinness, length etc. and those of eye-brows, fore-head, lips and so forth. Through this observation, the power of knowing the exact and true state of a particular form could be gained. This power is the basic requisite for the art of drawing and the sustaining factor for it. This is the traditional concept related to drawing.

நெற்றி புருவம் கண்விழி யாய்ந்தோர்
கற்றறி முகநிலை உற்றறிந் தோரே (507)

நெற்றி, புருவம், கண், கண்விழி — இவற்றின் அமைப் பியலை ஆய்பவர், முகத்தின் அமைப்பு நிலையை நன்கு அறிந்தவராவர்.

Those who effectively analyse the formative features of fore-head, eye-brows, eye and the pupil of the eye are considered as those who have clearly known the formative features of face.

முகமறிந் தோரே உறுப்பிய லறிவர் (508)

முகத்தின் நிலையை நன்கு அறிந்தவர்களே, உறுப்பியலை அறிவர்.

Only those who have clearly known the exact features of facial structure (of FORM) could know the exact features of all other limbs/parts of that form in its completed stage.

உறுப்பியல் எண்ணிலை எண்ணியல் அளவே (509)

உறுப்பியலானது என்நிலை (8) அளவாகவும் எண்இயல் அளவாகவும் அமையும்.

The study related to the formative features of parts/ limbs is based on the octo-pattern and the numerical measurement.

உடலியல் எட்டின் கலைநிலை காட்டும் (510)

உடலியலானது, எட்டு கலைநிலைகளைக் காட்டும்.

The formative characteristics of main FORM would reveal the existence of eight energy centres.

உயிரியல் ஐந்தின் நெறிநிலை கூட்டும் (511)

உயிர் இயலானது ஐந்தின் நெறிகளை உணர்த்தும்.

The science related to the source of animation would reveal the nature of fivefold order.

எண்கூ றியலால் கண்கூ றறிவோர்
பெண்கூ றாண்கூ றியலறி வாரே (512)

எண்ணின் அடிப்படையில் கண்ணின் நுட்பநிலையை உணர்பவர்கள் பெண்-கூறு, ஆண்-கூறு இயல்பினை நன்கு அறிபவராவர்.

Those who understand the subtle features of eyes based on numerical units, could clearly understand the exact features of female form and male form.

வேல்விழிச் சேல்விழிக் கூரறி நுட்பம்
வாள்விழி மான்விழிச் சீரறி நுட்பம்
விழிக்கலை வல்லார் விழுமிய பொருளால்
மொழிக்கலை நாணும் ஓவியத் தெரிவால்
நீட்டுறும் நெறியால் நெறிநிலை நவில்வரே (513)

விழியின் வேல்போன்ற அமைப்பு, மற்றும் மீன், வாள், மான் இவற்றைப் போன்ற அமைப்பு — ஆகியவற்றின் நுட்பத்தை அறிய வல்லவர், மொழிக்கலையையும் நாணச் செய்யும் ஓவியத் தேர்ச்சி பெற்று, ஓவியம் தீட்டும் நெறிமுறையை விளக்க வல்லவராவர்.

Those who are able to observe the subtle features of the appearance of eye, which is in the likeness of lance, fish, sword, deer, etc. would gain supreme skill in the art of drawing, that could excell even the expressive efficacy of language and would be able to explain the accurate process of drawing.

எண்கலை இயல்தரும் நுண்ணறி வாற்றல்
நுண்கலை நெறியுறும் விண்கலை ஓர்ந்தே
ஒளிமுதற் பொருளுறும் நெறிநிலை யாய்ந்து
ஒளியிய லொலியியல் ஓங்குற வுணர்ந்தே
அகவொளி நுட்பத் தியல்தரு மாற்றல்
மிகுமொளிக் கலைதிகழ் மெய்ம்மை விரித்தே
நூலறி வாற்றல் நுட்பத் திறனாய்
நூலுணர் நெறியால் மெய்ந்நிலை மூலம்
உள்ளுள் ளறிந்தே உறுபயன் நோக்கி
விள்ளுறும் மூலக் கலைநிலை யாற்றல்
தெள்ளிதி னுணர்ந்தோர் சீரறி வுற்று
ஒள்ளிய ஒளிக்கலை இயல்பறி வாரே (514)

எட்டின் நிலைகளுக்குரிய கலைகளைப்பற்றிய நுட்ப அறிவால் விண்கலைகளையும் பொருளின் ஒளிநிலையையும் நன்கு உணர்ந்து கலைகளின் நுட்பங்களைக் கூறும் நூல்களின் நெறிப்படி மூலத்தின் காரண நிலையையும் (நுண்மை) காரிய நிலையையும் (பருமை) ஆய்ந்து அதன் பல்வேறு கலை நிலைகளை உணர்ந்தவர்கள் ஒளிக்கலையின் இயல்புகளை நன்கு அறிபவராவர்.

Having observed the creative force of space and the luminous state of substance and having analysed the subtle and gross states (unmanifested and manifested states) of the primal substance, those who realise the multifarious causal states related to the primal substance, could know well the nature of light energy.

தேர்க்கொடித் தேர்த்துகள் பொழுதியல் விரைவும்
தேர்க்கலை நிலையும் தேர்மொழி யியலும்
தேருருத் தோற்றம் தேரொளித் தேற்றம்
நேருரும் உணர்வால் நிலையுறக் கண்டே
காலம் ஓர்ந்தே கலையியல் உன்னி
மூலப் பொருள்நிலை முன்னியும் ஓர்ந்தும்
அண்டமும் பிண்டமும் ஆய்பொருள் உணர்ந்தே
விண்ணும் மண்ணும் விரைவுறக் குறித்தே
எண்ணும் விண்ணும் இயைபுற நோக்கிக்
கண்ணும் விண்ணுங் காணப் பெறுவோர்
மூலம் ஐந்தியல் முற்றும் உணர்ந்தே
ஞாலம் உணர்தலும் சீரறி வாரே (515)

தேர்க்கொடி, தேர்த்துகள், தேர்க்கலை, தேர்மொழி, தேர்உரு, தேர் ஒளி — இவற்றை நன்கு உணர்ந்து காலத்தின் இயல்பை ஆராய்ந்து மூலப்பொருள் நிலையையும் உணர்ந்து, அண்டம்-பிண்டம்; விண்-மண்; எண்-விண்; கண்-விண் — இவற்றுக்கிடையே உள்ள இணக்கத்தைக் காண்பவர்கள் மூலத்தின் ஐந்தியல்களையும் முழுமையாக உணர்ந்து ஞாலம் முழுவதையும் உணரும் சிறப்புநிலையைப் பெறுவர்.

Having realised the system of units related to the cosmic chariot, such as car-flag, car-dust, car-digit, car-syllable, car-form, car-light, etc. and realised the essential nature of Time and Primal Existence, those who observe through it the inseparable concordance between macrocosm and microcosm, space and earth, number and space, segmented space and complete space could fully realise the fivefold aspect of Primal Existence and attain supreme skill in observing the universe in its totality.

தேர்க்கலை யாயின் சீர்க்கலை கூடும் (516)

தேர்க்கலையைப் பற்றிய ஆய்வு, சீரிய கலை ஞானத்தைக் கூட்டுவிக்கும்.

A deep analysis on the units of car would result in the attainment of systematic knowledge related to the creative order.

தேர்க்கலை நுட்பம் காலமா நெறியாய்
தேர்த்துகட் பொழுதியல் தேர்கொடிக் காலம்
சீர்மதி யுற்றுத் தெளிவுற் றாய்வர்
நேர்மதி யுற்று நிலையுணர் பெறுவரே (517)

தேர்க்கலை நுட்பமே காலமாநெறியை உணர்த்தும். தேர்த்துகள் காலம், தேர்க்கொடிக் காலம் — இவற்றைத் தெளிவாக அறிபவர்கள் முழுமையான ஞானநிலையைப் பெறுவர்; அனைத்தின் நிலைகளையும் உணரும் ஆற்றலைப் பெறுவர்.

(தேர்த்துகள் – காலத்தின் சிற்றெல்லை; தேர்க்கொடி – அதன் பேரெல்லை)

The subtle concept related to the units of car would reveal the significance of the eternal order of Time. Those who clearly understand the time-fractions denoted by car-dust, car-flag, etc., would attain perfect and all comprehensive knowledge; they would be able to gain the power of knowing the real state of all the existents.

(Car dust denotes the lowest limit of time; car flag denotes the highest limit of time.)

நாட்கூ றியலை நண்ணி யுணர்ந்து
வாட்கூ றியலை வகையுறத் தெரிந்தே
நாளும் வாளும் கால முணர்த்தும்
கோளறு பொழுதே குறிப்பின் உணர்த்தும்
நாளும் இரவும் ஒருநிலைத் தாகி
நாளே காலம் மூல முணர்த்தும்
காலங் காட்டும் மெய்ப்பொரு ளோர்ந்து
வாளொளி நாளொளி வகையுறத் தெரிந்தே
வாளொளி மெய்யொளி வகையறி வாரே (518)

நாள்நிலையால் (நக்ஷத்திரத்தால்) அமையும் கால இயலையும், சூரியன் முதலானவற்றால் அமையும் கால இயலையும் நன்கு உணரவேண்டும். நாளும் (நக்ஷத்திரமும்) வாளும் (சூரியன்) சேர்ந்து உணர்த்தும் காலமே சுபமான காலம் என உணர்ந்து, பகலும் இரவும் ஆகிய (solar) நாளே காலத்தின் மூலத்தை உணர்த்துவது என்பதையும் காலமே மெய்ப் பொருளைக் காட்டவல்லது என்பதையும் உணரவேண்டும். வாளொளி, நாளொளி — இவற்றின் வகைகளை நன்கு அறிபவரே நூலறிவு, மெய்யறிவு — இரண்டையும் முழுமையாக அடைவர்.

One should know the nature of time related to star, sun and other luminaries. That time is auspicious which is characteristically indicated by both star and sun. Solar day consisting of day time and night time is indicative of the primal state of Time. It is the Time that indicates the real nature of Primal Substance. Having understood these facts, those who know the varied factors of luminosity of sun and star, would gain complete knowledge of scriptures and Eternal existence.

கோலும் நூலும் குறிக்கும் உண்மை
காலமும் பொழுதும் காட்டியல் வண்மை
வேலும் வாளும் விளக்குறும் மெய்ந்நெறி
யாலற வுணர்ந்தோர் உணர்வொளித் தெரிவரே (519)

கோல் - நூல்;

காலம் - பொழுது;

வேல் - வாள்

— இவை புலப்படுத்தும் உண்மையையும் மெய்ந்நெறியை யும் தெளிவாக உணர்பவர்கள் ஒளித்தெளிவு பெறுவர்.

Those who clearly understand the truths about eternal order revealed by the twin factors - staff and chord, Time and time-unit, major luminary and minor luminary etc. would attain consciousness characterised by brilliance.

உணர்வொளி யொன்றே யுறுதுணை யாகி
உணர்கலைத் தெரிநிலை மெய்க்கலை பொருந்தப்
புணர்கலைப் புணர்மொழிப் பெருநிலை யாய்ந்தே

புணரிய லாற்றல் பொருளியல் கூட்டி
மொழிநிலைச் சொற்பொருள் பொருள்நிலை யுணர்த்தி
மொழியும் மொழியே சொல்லென உணர்த்தி
சொல்நிலை மூலம் பொருளெனத் தேற்றிச்
சொற்பொருள் மொழியின் தாநெறி யறிந்தோர்
முற்றறித் திறனுற மெய்ந்நிலை யறிவரே (520)

உணர்வாகிய ஒளியாலேயே குறிப்பாக அறிதல், விரிவாகவும் தெளிவாகவும் அறிதல் என்பது அமையும். சொற்கள் விதிப்படி பொருளைப் புலப்படுத்தும். ஒரு சொல் என்பது பொருள் நிலையை உணர்த்துவதாக அமைவதே. சொல்நெறி, பொருள்நெறி — இவற்றின் அடிப்படையில் மொழிநெறியை நன்கு அறிபவரே மெய்ந்நிலையை உள்ளவாறு அறிபவராவர்.

Knowing implicitly and knowing extensively - these could be possible through the light of consciousness only. Words which are in order according to the grammatical rule, indicate the relevant content (object). A word is indeed, indicative of its exact nature of the content. Only those who know the order of word-patterns based on the word-order and object-order could understand the real nature of Eternal existence.

ஒளியியல் திறனிலை உணர்வுற் றறிந்தே
வெளியியல் பொருள்நிலை மெய்யியல் ஓர்ந்தே
விண்ணியல் பொருள்தெரி இயல்நிலை வினையால்
எண்ணிய லுற்றே ஒளிநிலை காண்டலும்
எண்கலை நிலைதிகழ் உணர்வுற் றிலங்கி
எண்ணிலைத் தமிழ்நிலை உயிர்மெய் யாய்தல்
திண்ணிய மாந்தரின் சீர்நெறி யியலே (521)

ஒளி இயலின் திறத்தை அறிந்து, வெளி இயலே பொருள்நிலைக்கு ஆதாரம் என்பதை உணரவேண்டும். விண்-இயல் அடிப்படையில் எண்-இயல், ஒலிநிலை ஆகியவற்றைக் கண்டு, எண்கலைதொடர்பான உணர்வுடன் எண்நிலைப்பட்ட தமிழின் உயிர்-மெய் இயல்புகளை ஆராய்தலே, திண்ணிய மாந்தரின் சிறப்பான நெறிமுறை.

Through the awareness of the science of light, one should know that only the space-field is the basis for the

existential state of a substance. It is the methodic process of strong minded persons to analyse the characteristics of vowels and consonants of an effective creative language that functions in eight modes. This analysis is based on the science of space, number, light and on the consciousness related to numerical operation.

உயிர்நிலை உயிர்க்கரு உயிரொளிப் பொருள்நிலை
உயிர்நெறி முதலாய் ஓங்குறுத் திறனறி
உயிர்க்கலை யியலே மெய்ப்பொருள் நெறியென
உய்த்துணர் நெறியால் ஓர்ந்துண ராற்றலும்
உயிர்நிலை மூலம் உயிரொளிக் கோலம்
உயிர்க்கரு மூலம் உயிர்மொழி யியலாய்
செயிரறத் தோற்றும் செந்தமிழ் மொழியே (522)

உயிர்நிலை, உயரிக்கரு, உயிர்ஒளி, உயர்ப்பொருள், உயிர்நெறி — இவ்வைந்தையும் உள்ளடக்கியது உயிர்க்கலை. இதனை அறியும் நெறியே மெய்ப்பொருள் நெறி. இதனை முறைப்படி அறிந்து உயிர்நிலைக்குரிய மூலம், உயிர் ஒளிக்குரிய கோலம், உயிர்க்கரு மூலம் — இவற்றை அறிய வேண்டும். இவற்றையே உயிர்மொழியின் இயல்புகளாகத் தமிழ்மொழி கொண்டிருக்கும்.

The stage of animating force, its foetus state, its luminosity, its objectness and order - these constitute the operative process of life (soul). The process of knowing the Eternal Existence is nothing but process of knowing this truth. Having perfectly known this, one should know the causal state of inspiriting factor, the form related to the effulgence of inspiriting agent and the causal foetus. In fact, these are the characteristic features of vowels of an effective creative language.

நீர்நிலம் நெருப்பும் காற்றும் வானும்
தேர்நிலைக் கலைத்திறன் செப்புறும் திறனும்
ஓர்நிலை யுணர்வால் ஒள்ளிதி னோர்ந்து
சீர்நிலை மக்கள் உடலும் உயிரும்
நேர்நிலை இயலறி நெடிதுணர் வோங்கிக்
கூரறி வுற்றுக் குறிப்புற நோக்கிச்
சீரறித் திறத்தால் தெள்ளிதின் ஆயின்

வையமும் விண்ணும் சிற்பமும் உயிரும்
மெய்ப்பொருள் நிலையெனக் கலைநிறை வோங்கி
உணர்வால் அறிந்துறும் எண்ணிலை திகழ்ந்து
உணர்கலை ஆற்றல் ஓங்குறும் நெறியே (523)

நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் — இவற்றையும், இவற்றைத் தேர்நிலை புலப்படுத்தும் திறத்தையும் நன்கு உணர்க; உடலும் உயிலும் பொருந்தி இயங்கும் முறையைப் பற்றிய உணர்வு மிகப்பெற்று, வையம், விண், சிற்பம், உயிர் — இவை நான்கும் மெய்ப்பொருளை உணர்த்துவனவே என உணர்க; இவ்வாறு உணர்பவர் எட்டின் நிலைகளை நன்கு அறிவர்களாகி வையம் முதலானவற்றையும் வஸ்துவையும் இணைத்துக் காண்பர்.

Know the operative potency of five elements - earth, water, fire, air and space, and the process by which the structural pattern of chariot reveals the real nature of these elements. Having gained knowledge over the operative process of both body and soul (Image and FORM), know the truth that the Universe, Space, Image and soul (animating form) - all these four reveal the nature of Existential substance. Those who realise this, would evidently know the nature of the stages pertaining to number 8 and consequently observe the universe, space, etc. in terms of Vāstu.

எண்ணியல் நெறித்திறன் மெய்க்கலைப் பொருளாய்
எண்ணியல் நிலைநெறி மெய்யியல் நுட்பம்
திகழ்தரும் உண்மைப் பொருண்மை தெரிந்தே
அகவொளி நோக்கி ஒளிநிலைக் கலைத்திறன்
அகத்துணர் மெய்ம்மை ஐந்நிலை நிறீஇ
குடிநிலை குறித்தே குறிப்பொரு ளாய்ந்தே
குடியறுங் கலைநிலைக் கடிதின் நோக்கி
முக்குடி முப்பொருள் முறைமையிற் றேர்ந்தே
ஐங்குடிச் சிறப்பால் அரும்பொரு ளாய்ந்தே
குடியுறும் ஒளிநிலை விண்ணிலை மெய்யொளி
நெடிதின் ஓர்ந்தே நெறிமுறைத் திகழ
ஐங்குடி யாயும் அருங்கலை யோங்கித்
தங்குறும் ஐந்தியற் செந்நெறி முந்நெறி

எண்ணெண் கலையால் இயலுற நோக்கி
நுண்ணறி வுற்று விண்ணறி வோங்கி
எண்ணறித் திறத்தால் இயல்நிலை நோக்கி
ஆய்வுறும் ஆய்வால் அமைவுற வாய்ந்தே
அருங்கலை நிலைமுறைச் செம்முறை தெரிந்தே
ஓர்ந்துணர் நெறிக்கலை உணர்வொளித் திறத்தால்
தேர்ந்துணர் நெறியே செய்மையின் எய்தி
நேரறி வுற்று நிலைபெறக் காண்போர்
சீரறி மெய்ந்நிலை தெரிந்துணர் வாரே (524)

எண்ணியல், மெய்யியல் நுட்பத்தை விளக்குவது. உள்ளொளித் திறத்தால் அமையும் ஐந்நிலை, ஐந்நிலையால் உணரப்படும் குடிநிலை, முக்குடி, முப்பொருள் — இவற்றை அறிய வேண்டும். ஐங்குடி நிலையில் பொருந்தும் ஒளிநிலை, விண்நிலை, மெய்யொளி — இவற்றை உணர்க. ஐந்தியல் நெறியும் முந்நெறியும் 64 கலைநெறியால் வாஸ்துவில் பொருந்துவதை நோக்கி, விண் அறிவாலும் எண் அறிவாலும் கலையின் வெளிப்பாட்டு முறையை உணர்பவர்கள், மெய்ந்நிலையை உணர்பவராவர்.

The science of number is of the nature of explaining the subtleties of existents and Eternal substance. One should know the truth about five stages, five zones, three zones, and threefold substance. Know the factors of light, outer space and spontaneous radiance, that are present in the five zones. Know the process by which fivefold order and threefold order find place in Vastu through 64 squares and through the knowledge of space and number, know the process of manifestation of Primal unit. Only those who know these are capable of realising the nature of Existential Substance.

எண்ணியல் எண்கலை எண்நெறி எண்முறை
எண்திறன் ஐந்தின் இயல்நிலை ஓர்ந்து
நண்ணுறும் மூலப் பொருள்நிலை தெளிந்தே
நவையறு நாற்புறத் திறலுருக் கண்டே
உள்ளுள் ளொளிர்தரும் மெய்நெறி தேர்ந்தே
தெள்ளறி வுற்றே சீர்நிலைக் கணக்கியல்
நாடித் தாநெறி யாநெறி ஆற்றலால்

நாடுறும் ஐந்தியல் ஐந்துறும் நெறியும்
ஐயைந் தியல்நெறி வலமிடச் சூழல்
மெய்யுணர் வகையியல் மெய்பெறத் தெரிந்து
மெய்யுயிர்க் கலைநிலை உண்மை விளங்கி
வெளியொலி யியல்நிலை விளக்க மாய்ந்தோ
ஒளிஒலி ஒலிஒளி நுட்பம் கூர்ந்து
ஒளிஒலி யாய்நிறை ஒலிஒளி ஆக்கம்
தெள்ளத் தெரிந்தே மூலத் தியனிலை
விள்ளுறும் ஆற்றல் விளங்கிக் காண்டுழி
மூலப் பொருள்நிலை முன்னி ஓர்ந்து
ஞாலம் காலம் கோலமும் நண்ணி
புள்ளித் திறன்வலி பொருந்த வுணர்ந்தே
ஐந்தியல் நுட்பம் அகமுணர் திறத்தால்
வந்துறும் காலத் தியல்நிலை ஓர்ந்தே
காலம் அறிதல் பொருங்கலைத் திறனாய்
காலம் உணர்தல் தொலைநோக் கியலாய்
கால மியல்தெரிப் பொருள்நிலை ஆய்ந்தே
காலத் தணுநிலை அணுவணுத் தேர்ந்தே
கருத்துறும் இடநிலை மெய்ம்மை அறிந்தே
கால மூலம் கருத்தில் நிறுத்தி
தேர்த்துகள் பொழுதின் சீர்நிலை அறிந்தே
ஓர்ந்துறும் எட்டின் ஒருநிலை கூர்ந்து
அணுவணு வுள்ளுறும் நுட்பம் கூர்ந்தே
கணுவுறும் நுட்பமும் கடிதில் தெளிந்தே
ஒண்ணிலை காலத் தியல்நிலை ஓர்ந்து
எண்ணிலைப் பொருளியல் நெறிமுறைக் கலைத்திறன்
ஒளிமுதற் பொருள்நிலை ஐந்துறும் நிலைகலை
ஒளிஒளி யியல்புறும் எண்ணெண் கலைத்திறன்
நோக்குபு நோக்கி நுண்ணறி வுற்று
ஆக்குவ கலைநெறி இயல்நிலை மூலம்
ஒன்றினின் றொன்றே உருவெடுத் திலங்கி
தென்றிசை நிலைகலை சீர்சூழல் ஆக்கம்
பொன்றாக் காலம் பொருந்த உணர்ந்தே
உண்மை நிலைநெறி ஒருங்கியல் தேற்றம்
எண்மை யியல்நிலை இலங்குறும் நன்றே (525)

எண்இயல், எண்கலை, எண்நெறி, எண்முறை, எண்திறன் — இவ்வைந்து நிலைகளையும் ஆய்ந்துணர்க; மூலப்பொருள் நாற்புற வடிவம் கொள்ளும் நிலையைத் தெளிந்து, ஐந்தியல்

முறையில் வலமிடமாகச் சுழன்று 25 இயல்களாக விரிவுபடுவதை உணர வேண்டும். வெளியொலி நுட்பம், ஒளியின் ஒலிநுட்பம், ஒலியின் ஒளிநுட்பம், ஒளிஒலி இணக்கம் ஒலிஒளி இணக்கமாக மாறும் முறை — இவற்றை உணரவேண்டும். மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் — இவற்றின் வெளிப்பாட்டு முறையை உணர்ந்து புள்ளித் திறத்தையும் காலத் திறத்தையும் அறிய வேண்டும். காலத்தின் அணுநிலையையும் இடநிலையையும் அறிந்து தேர்த்துகள் பொழுது எட்டு எட்டாகப் பெருகும் நுட்பத்தை உணர வேண்டும். காலம், பொருள், ஒளி, 64 கலைத்திறன், உருவம் வெளிப்படும் முறைமை — இவற்றையும், தென்திசை முகமாக நின்று சுழல்வதையும் பொன்றாக் காலத்தையும் உணர்ந்து எட்டின் இயல்நிலையை ஒருங்கிணைத்துக் காண வேண்டும்.

Analyse and know the five characteristics of number - i.e., aspect, unit, order, process and potency related to the eightfold pattern. The Primal Substance always assumes squaric form and revolves itself from right to left and gets amplified into 25 aspects. Having known these, one should understand the following: subtlety of sound emerging from prime space, sound aspect of light, light aspect of sound, process by which the union of light and sound (light dominated) turns into that of sound and light (sound dominated), the process of manifestation of Prime Energy, Time, Rhythm, Form and Universe, the energetic state of primal dot and time, the atomic state and spatial state of time, the order in which the unit of time denoted by chariot dust increases by eight, nature of time, substance, light, 64 squares manifesting process of Form, the rotatory movement of Primal Energy being south-faced, Eternal Time. He should know the octo-process by co-ordinating it with these factors.

எண்ணிலை அறிவியல் விண்ணிலை நுட்பம்
தெண்ணிலை நிலைகலை தெளிவுறும் திறனே (526)

கலை அமைப்பு வகைகளைத் தெளிவாக அறியும் திறனானது எண்நிலை, அறிவியல், விண்நிலை ஆகியவற்றின் நுட்பங்களைப் புலப்படுத்தும்.

The efficacy in knowing clearly the varieties of artistic creations and creative orders would reveal the subtle truths related to numerical measures, science of design and spatial structure.

ஒளிமொழித் தென்றமிழ் ஒண்தமிழ்க் கலைநெறி
வெளிமொழி ஓம்முதல் தெளிவுறத் தொடங்கி
அளிமொழி கலைமொழி தலைமொழி நோக்கி
அளித்திறன் ஆற்றுறும் நெறியமைப் பியலே (527)

ஒளிமொழியாக உள்ள தமிழின் கலைநெறி வெளிப்பாடு என்பது, வெளிமொழி, அளிமொழி (இளகியநிலை), கலைமொழி, தலைமொழி ஆகியவற்றைக் குறித்து இயங்கும் இயக்கமாகத் திகழும்.

The distinct manifestation of creative order of creative language which is of the nature of luminous sound is the progressive movement directed towards manifesting state, melting state, raising state and finality.

சிற்பம் ஓவியம் இசைக்கலை யறிந்தோர்
பொற்புறும் தமிழுணர் பொருந்துவ ரன்றே (528)

சிற்பம், ஓவியம், இசை — இக்கலைகளை அறிந்தவர்கள், பொலிவும் உறுதிப்பாடும் மிகுந்த தமிழுணர்வைப் பெறுவர்.

Those who have deeply known the features of Sculpture, Dance and Music would attain supreme consciousness related to the charming and infallible creative language.

ஓம்மொழித் திறனாய் ஓம்நெறி யிலங்கி
ஓமொழி யுறுநிலை ஒளிநிலை விளக்கும்
ஓவிய மெய்க்கலை தெரிநெறிக் கலையே (529)

ஓம்-மொழிக்குரிய திறனாகவும், நெறியாகவும், ஒளிநிலையை விளக்குவதாகவும், ஓவிய மெய்க்கலை திகழும்.

The inherent effulgence of the art of drawing shines forth as the efficacy and progressive order of OM-sound and expressive of the luminous factors.

ஒளியியல் உணர்ந்தே உட்கலை ஓர்ந்தோர்
வெளியியல் முழுதறி விண்ணறி வோங்கி
எண்ணறிக் கலைதெரி யியல்திற நுணுக்கம்
திண்ணிதின் நோக்கி செழுங்கலை யியல்நெறி
உற்றறித் திறனால் ஓங்குறும் மெய்த்திறன்
தெற்றென் றுணர்வார் சீர்நிலைக் கலையே (530)

ஒளி இயலின் உட்கலைகளை உணர்ந்தவர்கள், விண்-அறிவும் எண்கலை நுணுக்கமும் வாய்க்கப் பெற்று, கலையின் மெய்த்திறத்தையும் நெறியையும் தெளிவாக உணரவல்லவர்.

Those who know the interior dynamic factors of light energy would gain knowledge related to outer space and numerical measures and understand clearly the efficacy and order of creative patterns.

சீரே தெரிநிலை சிற்றவை ஓர்ந்து
நேருறும் எண்ணியல் நிலைக்கலை மூலம்
எண்கலை ஐந்நெறி எண்ணெண் ணியலும்
நுண்கலை மூலம் நுவல்நெறி விளங்கி
ஐம்பொருள் ஐந்தியல் செம்மைத் தொன்னெறி
எண்ணெறி யியல நோக்குறுந் திறத்தால்
விண்ணெறி விளங்கும் வகைமுறை யானே (531)

அனைத்திலும் உள்ள சிறப்புநிலையைத் தெரிவிக்கும் சிற்றவை என்பதை நன்கு உணர்ந்து, எண்-இயல், எண்கலை, ஐந்நெறி, 64 கலைகளை உள்ளடக்கிய மூலம், ஐம்பொருள், ஐந்தியல் முதலானவற்றையும் உணர்ந்து, வகைப்பட இயங்கும் விண்-நெறித் திறத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

Microbode is of the nature of revealing the excelling state of all the existents. One should know this truth and understand the aspect and unit pertaining to number and fivefold order, nature of primal existence which includes in itself 64 squares, fivefold substance, fivefold aspect - and understand the efficacy of space-order that functions in different patterns.

அகம்புறம் தெளிந்து அகப்புறம் ஓர்ந்து
அகத்துள் உணர்நிலை ஐங்கலை ஆற்றல்
ஐங்குடி யியல்நிலை நெறிமுறைத் தெளிந்தே

செங்குடி நுட்பம் சீர்நிலை தேற்றம்
விளங்குறும் ஆற்றல் கலைநெறி கூட்டும் (532)

கலைநெறியானது அகநிலையையும் புறநிலையையும் உணரச் செய்து உள்நிலைகளான ஐங்கலை, ஐங்குடி, செங்குடி ஆகியவற்றின் நுட்பமான ஆற்றலைத் தெளிவாக உணரச் செய்யும்.

The creative order is of the nature of enabling us to understand the interior state and exterior state and understand the efficacy of varied aspects of inner state such as five creative orders, five zones, central zone etc.

பொருண்மை சுட்டும் மெய்ந்நிலைக் கிளவி
தெருண்மை யுணர்த்தும் சீர்நிலைக் கிளவி
ஒளிநிலை உணர்த்தி ஒண்பொருள் கூட்டி
வெளிநிலை யியற்கலைத் தெற்றெனத் தோற்றும்
ஒளிஒலி நிலைத்திறன் ஒருங்குணர்த் தும்மே (533)

பொருண்மையை உணர்த்தும் கிளவி, தெளிவு நிலையை உணர்த்தும் கிளவி — இவ்விரண்டும் ஒளிநிலை வகைகளை உணர்த்தும்; ஒளிமயமான வஸ்துவையும் வெளிநிலை இயல்பையும் புலப்படுத்தும் ஒளி-ஒலி இணைப்புத் திறத்தைப் புலப்படுத்தும்.

The articulated word indicative of objectness and the word indicative of the fully manifested state — these two reveal the varieties of luminous states; reveal the nature of luminous Vastu and the nature of spatial points and reveal the unitive force between light and sound.

பொருளறி யியல்தெரித் தெருண்மை யோர்ந்தே
பொருளிற் பெருநெறிப் பெரும்பொரு ளாக்கம்
நுண்பொருள் பருப்பொருள் விழுப்பொருள் செம்பொருள்
எண் பொருள் கலைப்பொருள் மொழிப்பொருள் இலங்கி
ஐந்தியல் மூலம் எண்ணறி வாற்றல்
ஐந்துறும் மெய்நிலைத் தெரிவுற விளக்கும் (534)

பொருளுக்குரிய தெருள்நிலையும் பெருநெறியுமே அப்பொருளின் ஆக்கநிலைகளாக வெளிப்படும். நுண்பொருள், பருப்பொருள், விழுப்பொருள், செம்பொருள், எண்பொருள்,

கலைப்பொருள், மொழிப் பொருள் — இவற்றை விளங்கச் செய்யும் ஐந்தியல் மூலத்தையும் எண்-ஆற்றலையும், ஐவகையாக உள்ள வஸ்துநிலையானது தெளிவுறப் புலப்படுத்தும்.

Only the finality and the primary process of coming into existence pertaining to a substance, manifest as its creative stages. There are different kinds of substance characterised by greatness, uniqueness, eight fold nature manifesting nature, sonic quality etc., The Primal Substance which is associated with fivefold aspect and which reveals the above mentioned features of a substance and the efficacy of number are made known by the vāstu, which itself is of five kinds.

மூலப் புள்ளி முறைமையின் ஆய்ந்து
கால நுட்பங் கருத்துற் றோர்வோர்
கலைநெறி மாண்பின் நிலைபே றறிவரே (535)

மூலப்புள்ளியை முறையாக ஆய்ந்து, காலநுட்பத்தை ஓர்பவர்கள், கலைநெறியின் நிலைபேற்றுத் தன்மையை அறிய வல்லவராவர்.

Having analysed the nature of central dot, those who sift the subtle nature of time, are capable of knowing the eternality of creative order.

உணர்வும் உழைப்பும் ஓங்குறுங் காலம்
உணர்வொளி மெய்த்திறன் நிலையியல் நெறியே (536)

உணர்வையும் உழைப்பையும் கனியவைக்கும் காலமானது உணர்வொளியாகிய மெய்த்திறத்தின் நிலையான இயக்கமாகும்.

Time, which fructifies both consciousness and relevant working is actually the uninterrupted movement of Eternal Existence which is of the nature of luminous consciousness.

காலங் கருதல் மூலம் ஓர்தல்
ஞாலத் தியல்தெரி எண்ணிலை நோக்கி
அறுபான் நான்கின் முறைமை யுணர்ந்து
உறுபொருள் உணர்த்தும் உண்மை ஒளியே (537)

காலம், மூலம், எண்-நிலை — இவற்றை உணர்ந்து 64 சதுரங்களின் இயல் முறையைத் தெளிவாக அறியும் நிலையில், உண்மை ஒளியானது உறுபொருளாகிய வஸ்துவின் பெருநிலையை உணர்த்தும்.

When one understands the manifesting order of 64 squares based on the knowledge of Time, Primal Existence and Number Pattern, the eternal light energy would reveal the greatness and immanent nature of vastu.

உண்மை மெய்ம்மை உயிர்மை ஓர்ந்து
திண்மை நுண்மை சீரறிந் தாற்றலால்
எண்ணறிக் கலைதெரி யியலுணர் நுட்பம்
விண்ணறி வாலுணர் மெய்க்கலை நிலையே (538)

விண்-ஞானத்தால் உணரப்படும் மெய்க்கலை நிலை என்பது உண்மை, மெய்மை — இவற்றின் திண்மையையும் நுண்மையையும் சிறப்பாக அறிந்து எண்-ஞான நுட்பம் வாய்க்கப் பெறும் நிலையே.

The true form of eternal creative force, to be realised through space-consciousness, is actually the state of attainment of deep knowledge related to number. This knowledge is attainable through the knowledge of gross and subtle state of existence, eternality and inspiritedness.

நிலையும் கலையும் நெறியுற் றோர்ந்தால்
உலைவில் ஊக்கம் உணர்வும் ஓங்கி
ஊழை வெல்லும் உறுவலித் திறமுறும்
கால நுட்பங் கருத்தில் இருத்தி
மூலத் திட்பம் மெய்ம்மை யறிவோர்
ஏலும் எண்ணெண் இயல்தெரி வாரே (539)

வஸ்து என்பதன் நிலையையும் கலையையும் முறைப்படி உணர்ந்தால் ஊக்கமும் உணர்வும் ஓங்கப்பெற்று ஊழையும் வெல்லும் திறம் பெறலாம். கால நுட்பத்தால் மூலத்தின் திட்ப நிலையை அறிபவர்கள், 64 இயல்களின் உட்பொருளை நன்கு அறிவர்.

If one is able to realise systematically the exact status of vastu and its inherent creative urge, he would attain

supreme consciousness and inspiration and thereby, he could conquer even the providential course of events. Those who know the manifest state of Primal Existence through the working of time, would clearly know the significant aspects of 64 creative units.

ஓமெழுத் தொளிர்கலை ஒளிகலை ஒலிநிலை
ஓமெழுத் துள்ளுறும் ஒண்பொருள் ஆக்கம்
ஓமியல் ஓமியம் ஒளிநெறித் திறனே (540)

ஓம் எழுத்தில் ஒளிரும் ஒளி, ஒலி, பொருள் வளம் (ரூப வகைகள்), — இவை அனைத்தும் ஓம் இயல், ஓம்-இயம் என்பனவற்றின் ஒளிநெறித் திறன்களாகும்.

Light, sound, multitudes of forms — all these, which are contained in OM-letter, are the effected states of luminous order pertaining to OM aspect ad its pervasive presence.

நெறியே நிலைபெறும் காலப் பொழுதியல்
குறியே நோக்கிக் குறிப்புறும் திறனால்
உணர்வொளி யோங்கி உண்மை நோக்கல்
உணர்கலை நெறியோர் ஆய்தல் மரபே (541)

தன் இயல்பிலேயே நிலைபெறும் காலத்து இயலைக் குறிகளால் நோக்கி, உணர்வொளி ஓங்கப்பெற்று, உருவ அமைப்பியலை ஆய்தலே, கலைநெறிப்பட்டோரின் மரபுநெறி.

Having observed the nature of time, which always exists in its own inherency, and gained supreme consciousness one should analyse the characteristic features of images. This is the traditional way, maintained by the followers of creative order of Vāstu.

நுணுக்கம் நுட்பம் நுவலறித் திறனும்
அணுக்கம் இயலல் நெறிமுறை ஆற்றலும்
ஒடுங்க உணரின் ஒள்ளியல் நெறியே (542)

நுணுக்கம், நுட்பம், வெளிப்படும் திறன், வெளிப்படுத்தும் திறன், அணுக்கம், நெறிமுறைப்பட்ட இயக்கம் — இவை அனைத்தும் ஒளியுறுத்தும் நெறியின் சிறப்பியல்புகளாகும்.

Moving towards perfection and finality, subtlety, self-manifesting power, creative power, being always in proximity, orderly and rhythmic functional order - all these are the unique features of the process related to the creation of forms.

அணுஅணு இயல்நிலை அகத்துள் உணர்ந்தே
அணுவுள் ளணுவும் ஆர்ப்புறும் மெய்நிலை
ஓர்ந்து நோக்கின் காலத் துறுபான்
இடம்பொருள் என்மை இயல்பெறத் தோன்றும் (543)

அணுவின் அணுஇயல்பை அகத்துள் உணர்ந்து, அணுவுள் அணு ஒலி எழுப்பும் மெய்ந்நிலையை ஆய்ந்தால், காலத்தின் பயன், இடம், பொருள் — இவற்றை எளிதாக உணரலாம்.

Having realised atom-ness of an atom, if one proceeds to analyse the process by which sub-atomic particle manifests sound waves inside the atom, he could easily realise the effect of time, space and substance.

மாநெறி மாக்கலை மாஇயல் ஓர்ந்தே
தாநெறி எண்ணெண் ணியல்தெரித் தேற்றம்
பாநெறி இசையியல் ஒளிஒலி யசைவும்
மாநெறி நுணுக்கத் தியல்நெறிக் கூராய்
ஓங்குறும் ஐந்திசை ஏழிசை யாய்த்திகழ்
ஆங்குறும் நுண்மை அறிகலைத் திறனால்
ஒளியொழி யுண்மைச் சிற்பக் கலைத்திறன்
வெளிமொழி ஒலியியல் ஒள்ளொளி நுட்பம்
கலையுற் றோர்ந்தே கணக்கியல் ஆய்ந்தே
நிலைபெறக் காண்டல் நெறியியல் நிலையே (544)

64 இயல்களின் திரள்நிலை, இசை செறிந்த ஒளி-ஒலி அசைவு, ஐந்திசை, ஏழிசை அமைவு — இவற்றின் ஒளிமயமான மொழிவடிவமே சிற்பக்கலை. இதன் வெளியொழி, ஒலிஇயல், ஒளிநுட்பம் ஆகியவற்றின் கணக்கியலை நிலைபெறக் காண்பது, வாஸ்துநெறி.

The charming Imagic form is nothing but the resplendent lingual form of the concentrated and the congragated state of 64 units, the melodious and rhythmic vibration of light and sound, emission of five fold and

seven fold musical notes. The science of vāstu is the one which aims at knowing the mathematical order pertaining to space-sound, acoustics and subtle energy of light.

ஓசை ஒலியியல் ஒளியியல் வெளியியல்
ஓமெழுத் திறலுறும் நெறிமுறைத் திறனிலை
ஆய்ந்துணர் திறத்தால் அகப்பொரு ளோர்ந்தே
ஆய்தல் நெறிமுறை எண்ணிலைக் கலையே (545)

ஒலி இயல், ஒளி இயல், வெளி இயல் — இவை ஓம் எழுத்தில் பொருந்தியுள்ளவை. இவற்றைத் திறம்பட ஆய்ந்துணர்ந்து, உட்பொருள் நிலை உணர்ந்து தெளிதலே எண்-நிலைக் கலையின் நோக்கம்.

Sound energy, Light energy, space-energy, all these are contained in OM. It is the motive of the science of number to distinctly know the inner most state based on the contents of OM.

எழுநிலை எண்கலை ஐந்தியல் அறுவகை
பழுதற உணரின் செழும்பொருள் நெறியே (546)

எழுநிலை, எண்கலை, ஐந்தியல், அறுவகை முதலான அமைப்பு நிலைகளைக் கொண்டுள்ள கலைநெறியை நன்கு உணர்ந்தால், செழும்பொருளாகிய வஸ்துவின் வெளிப்பாட்டு நெறியை உணரலாம்.

If one clearly understands the creative order associated with varied formative patterns such as sevenfold plane, eightfold unit, fivefold aspect, sixfold calculation etc., he could realise the process of manifestation assumed by Vastu.

எழுத்து சொற்பொருள் கூட்டணி யைந்தும்
வழுத்து மாப்பொருள் மெய்க்கலை யுணர்ந்தே
ஐந்தியல் நெறிக்கலை மெய்யுற் றுணர்ந்தே
செந்தமிழ்ச் சிற்பம் ஓவியங் காண்டல்
முந்துறுந் தொன்மர பியல்நெறி யியலே (547)

எழுத்து, அணி, ஐந்தியல், மெய்ப்பொருள் — இவற்றின் கலைக்கூறுகளை உணர்ந்து ஐந்தியல் நெறிக்குரிய உண்மையை

உணர்ந்து, சிற்பத்திறனையும் ஓவியத் திறனையும் காண்பது தொன்மையான மரபு நெறிப்பட்ட வாஸ்துகலை.

Having known the manifesting power of letter, decorative element, fivefold aspect, Eternal substance etc., and the principles of five fold order, the science of vāstu sets forth the efficacy of sculpture and drawing.

எண்கலை நெறியுறும் ஐந்தியல் மூலம்
விண்கலை நுட்பம் விளங்குற விளங்கி
உள்ளுறும் உட்கலை உவப்புறத் தெரிந்தே
தெள்ளுறும் விட்புலன் இயலறி வாற்றல்
நெறியுற வறிந்தே குறியுற் றாய்ந்தே
பொறிபுலன் நிலையுறப் பொருந்தக் காண்டுழி
அண்டமும் பிண்டமும் மெய்ந்நிலை ஓர்ந்துணர்
விண்டுறும் ஒளிநிலை கண்டுணர் ஆற்றலால்
அகமும் புறமும் அகப்புறத் தாற்றலும்
மிகுதிறன் மெய்வலி நிலையியல் கண்டே
உணர்வின் திறநிலை உள்ளொளி யியல்நிலை
உணர்வொளி மெய்த்திறன் ஒருநிலை கண்டே
ஓம்முதல் ஒலிநிலை ஓம்முதல் ஒளிக்கலை
ஒமுறும் நெறிமுறை ஓம்இயல் ஆக்கம்
முறையிற் கண்டுழி முறைநெறி உணர்ந்தே
அறைதரும் பொருளா லுறுநிலை யுற்றே
உற்றறி பொருளிதிறன் முற்றுறும் அணியாய்
பெற்றுறும் அகவின் னொளிநிலை மூலம்
எட்டெட் டியலுறும் நெறிகலை நிலையியல்
எட்டே இயல்தெரி எண்நிலைப் பொருளாய்
ஒன்றுறும் இயலால் நன்றுறும் திறனறி
ஒன்றிரண் டுறுதிறன் உணர்ந்துள் ளாய்ந்து
மூன்றுநான் கைந்தா றேழெட் டியல்நிலை
ஆன்றுறும் அறிநிலை ஆய்ந்தாய்ந் துணர்வின்
எட்டே எண்ணிலை எண்கலை எண்நெறி
எட்டே எண்மொழி யியல்நிலைச் சிற்பம்
சிற்ப நுட்பம் பொற்புறும் திட்பம்
உற்றறி வுணர்வுறும் ஓசை ஒலிஒளி
பெற்றுறும் மொழிநிலைக் கலைநிலை இயல்நெறி
தெற்றுறுந் தமிழொலி இழிமொலி உமிழொலி
குறிநிலைக் குமிழொலி அமிழொலி ஐந்தாய்

நெறிநிலை மாறாத் தூநெறித் தமிழ்நெறி
தமிழிசை இமிழிசை உமிழிசை குமிழிசை
அமிழிசை ஐந்திசை ஆற்றலும் ஓங்கி
ஐந்திசை ஐந்தொலி ஐந்துறும் ஒளிநிலை
ஐந்தியல் நெறிமுறை மூலமா நுட்பம்
ஒர்ந்துறும் திறத்தால் ஒமுதற் பொருளொலி
நேர்ந்துறும் விண்ணொலி வெளிமொழித் தமிழென
உண்மை காண்டுழி முதல்நிலைப் பொருள்மொழி
எண்மை ஞாலத் தியல்மொழி பொருள்முதல்
உணர்வொளிக் கலைமொழி ஓங்குறுந் திறமொழி
உணர்நிலைக் கலைத்திறன் ஓங்குறும் மெய்யுணர்
ஓங்குறும் இயலறி வாற்றல் நிலைநெறி
ஈங்குறும் ஆங்குறும் இயல்நிலை அறிந்தே
பைந்தமிழ் ஒலியே பாரொலி விண்மொழி
செந்தமிழ் மொழியே ஓம்ஒலி ஒளியென
அறிந்துணர் திறனிலை அறுபான் நான்கியல்
நெறிமுறை யாக்கம் நிலைபெற் றாய்ந்தே
ஓர்ந்துணர் நெறிநிலை ஒளிமொழிக் கலையாய்த்
தேர்ந்துணர் ஒளிக்கலை நெறிமுறை யியலே (548)

எண்கலை, ஐந்தியல், விண்கலை — இவற்றின் நுட்பம் விளங்கப் பெற்று. உள்வெளித் தொடர்பான உணர்வாற்றல் பெற்று, அண்ட நிலை, பிண்டநிலை, அக ஆற்றல், புற ஆற்றல், அகப்புற ஆற்றல், ஓம் என்பதன் ஆக்கப்பாடு — இவற்றை முறையாக உணர வேண்டும். அழுந்தி அறிதல் என்பதை அடிப்படையாகக் கொண்டு, உள்வெளியின் ஒளிமூலம் 64 இயல், எட்டு இயல், எண்நிலை, ஒன்றின் இயல், ஒன்றாகிய நிலை படிப்படியாக 2, 3 ...... 8 என வளரும் திறன் — இவற்றை நுட்பமாகக் கண்டு, அனைத்தும் எட்டு எட்டாக விளங்குவதை உணர வேண்டும். ஒலியானது ஒளித்திறன் மூலம், தமிழ் ஒலி, இமிழ்ஒலி, உமிழ்ஒலி, குமிழ்ஒலி, அமிழ்ஒலி என ஐந்தாகியும் தமிழ்இசை, இமிழ்இசை, உமிழ்இசை, குமிழ்இசை, அமிழ்இசை என ஐந்தாகியும் விளங்குகிறது என்றுணர்ந்து ஐந்தியல் நெறிமுறையானது மூலநுட்பத்தை விளக்குவது என்றும், ஓம் என்னும் முதற்பொருளே விண்ஒலி, வெளிமொழி எனவும் ஆகி, பலநிலைகளால் தமிழ் நிலையின் விண் ஆற்றல், மண்வெளி ஆற்றல் எனும் இரண்டையும் விளக்கவல்லது என்றும் உணர வேண்டும். 64 இயல்களின் ஆக்கத்தைத் தேர்ந்துணரவைப்பதும் அதுவே.

One should systematically know the subtleties of numerical pattern, fivefold aspect, space-field, inner space macrocosmic and microcosmic structure, internal and external potency, efficacy of the combined operation of internal and external potencies, creative power of OM etc. Being directed by the light of inner consciousness (space) he should observe the force of 64 units, eightfold aspect eightfold plane, singularity, increasing mode of the structural state and notice the fact that all the manifestations are in octo-pattern. Also, he should know that the primal sound becomes fivefold word - 1) the fully manifested (தமிழ்), 2) indistinct, (இமிழ்) 3) emitted (உமிழ்), 4) Converging (குமிழ்) and deeply settling (அமிழ்), and the fivefold music in the same pattern of five kinds. He should know that the functional pattern of fivefold aspect is of the nature of explaining the deep rooted state of Primal Existence. He should understand that only OM sound turns into the sound of Primal Space and the sound of outer space and makes known the nature.of space energy and earth energy, in terms of creative language.

மெய்ப்பொருள் மெய்நெறி மெய்க்கலை நிலையென
மெய்யிய லுயிரிய லொலியிய லொளியியல்
எழுத்துறுங் கலையியல் வடிவியல் ஆய்ந்தே
வழுத்துஞ் சொற்பொருள் கட்டணி உணர்ந்தே
ஐம்பொரு ளைந்திய லைங்கலை ஐந்நெறி
செய்பொருள் மெய்த்திற நிலையுற் றாய்ந்தே
சிற்ப யாத்தமிழ்ச் செயிரற வுணர்ந்தே
பொற்புறும் ஓவியம் பிறங்கு தொல்லிசை
தெற்றென் றுணர்ந்தே தெளிமுறை ஆய்ந்தே
உற்றறி நெறிமுறை உள்ளுணர் வுற்றே
அகவெளி புறவெளி இயலுறத் தேர்ந்தே
மிகும்ஒளி மிகும்ஒலி எழும்ஒலி எழும்ஒளி
வகையுற வகுத்து வளமுறக் காண்டல்
மிகையிலா நெறிநிலை எண்ணெண் கலைநெறி
ஓவியம் சிற்பம் ஒலிஒளிச் செந்தமிழ்
மேவுறும் நுண்பொருள் எண்பொருள் விளங்கி
விண்பொருள் ஆற்றல் வெளிப்பொருள் துலங்கி
கண்பொருள் ஒளிநிலை காண்டலுங் கருத்தாய்

எண்ணுள். தோன்றி எண்ணமும் உணர்வும்
விண்ணும் மண்ணும் தீநீர் காற்றும்
எண்ணுறும் எண்வகை இலங்குற் றிலங்கி
கண்ணொளி விண்ணொளி கலந்துறும் திறனே
மூலத் திறனாய் முப்பொருள் தேக்கும்
கோலங் காட்டும் குறிபொருள் நெறியாய்
காலத் தியல்நெறி முறையில் ஓர்ந்து
காலங் காண்டுழி மெய்ப்பொருள் விளங்கும்
காலச் சீர்மை கருத்துறக் கண்டே
காலம் இயலல் கடும்உழைப் பியலென
மூலப் பொருள்நிலை முன்னி ஓர்ந்தே
காலச் சீர்நெறி உழைப்புறுந் திறனாய்
அமையும் நெறியே ஐந்நெறி ஐந்தியல்
இமைநொடிக் காலத் தியல்நிலை விளக்கும்
கால நுண்பொருள் கடிதுறக் கண்டே
மூலம் இயங்கல் முப்பொருள் முக்கலை
ஓர்ந்துணர் நெறியா லொருபொருட் டிறநிலை
நேர்மொழி ஓமியல் நெறியுறும் திறமே (549)

வாஸ்துநெறிப்பட்ட ஒலிஇயல், ஒளிஇயல், எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி — இவற்றை உணர்ந்து, செம்பொருளாகிய வஸ்துவின் ஐந்நெறியை நன்குணர்ந்து சிற்பத்தமிழ், ஓவியம், அகவெளி, புறவெளி, 64 கலைநெறிப்பட்ட நுண்பொருள், எண்பொருள், விண்பொருள், வெளிப்பொருள், எண்ணம், கண்ணொளி, விண்ணொளி — முதலானவற்றின் நுட்பங்களைத் தேர்ந்து ஐம்பூதங்கள் எண்வகையாக இயங்கி முப்பொருள் நிலையைக் காட்டி நிற்பதை உணரவேண்டும். கோலக்குறிப்பு, காலச் சீர்மை முதலானவற்றை ஓர்ந்துணர வேண்டும். இவ்வாறு உணரவைப்பது ஓம்-இயல்நெறி.

Having understood the principles of sound energy, light energy, letter, work, content, structure and decorative order, all of which are related to the science of vastu, and having understood the fivefold process maintained in operation by Vastu one should systematically know the features of creative language related to sculpture, drawing, inner space, outer space, micro substance related to 64 squares, eightfold substance, field of outer space, space-structure, ideation, light source pertaining to the select

area and light source of space. He should know that the five elements, reveal through the eightfold functional order, the existential state of three fold substance. He should also know the significance of form and rhythm in time. The functional order of OM enables one realise all these.

கட்டிட நெறியே கலைநெறி மூலம்
கட்டிட நெறியே ஒளித்திறன் கூட்டும்
விட்டுறும் மெய்நிலை பார்நிலை இயற்றிறன்
நெட்டுறும் நிலையொளி நேருற வறிந்தே
காலம் ஆய்தல் இடநிலை ஆய்தல்
கோலங் கூட்டும் ஆய்முதற் பொருளே
ஆயம் முதற்பொருள் ஆய்நிலை ஆய்முறை
ஆயக் காலம் பார்நிலை ஆயல்
எண்ணிலைக் காலம் இயல்புற அறிந்தே
எண்ணால் ஓர்ந்து நெறியறித் திறனே (550)

கட்டிய நெறியே கலைநெறிக்கு மூலமாகவும் ஒளித்திறன் கூட்டுவதாகவும் விளங்குகிறது. அந்நெறிக்குரிய விட்டுறும் நிலை, பார்நிலை (storeyes) நிலையொளி (ornamentations) — இவற்றை அறிந்து, காலத்தையும் இடத்தையும் ஆய்தல், கோலத்தை உருவாக்குவதாக அமையும். ஆயம்-கணக்கிடல், ஆயக்காலத்தால் பார்நிலையையும் எண்-நிலைக் காலத்தையும் அறிதல், இவற்றை எண் அடிப்படையில் உறுதி செய்தல் — இவையே வாஸ்து நெறிக்குரிய செயல்திறம்.

The process of constructional science shines forth as the basis of creative order and it is capable of effecting luminosity., Having noticed the patterns of various sections, storeys and ornamentation pertaining to this science, one should analyse the nature of time and space. This analysis would help him in structuring a perfect form. Calculation of aya etc, ascertainment of the real form of building and of the merits of time in terms of number- these are the workings related vāstu.

நிலமனை மனைநிலம் நெறியுற் றாய்தல்
புலநெறி ஒளிநெறி பொருந்தக் காண்டலே (551)

புலநெறியும் ஒளிநெறியும் பொருந்தக் காண்பது என்பது நிலமனை, மனைநிலம் — இவற்றின் தன்மையை நெறிப்படி ஆய்தலே.

The Process of knowing the concordance between the principles related to a select area and those related to light energy is, indeed, the systematic analysis of the nature of select plot and the exact area of the building.

நிலமறிந் தோரே புலமறி அறிவர் (552)

நிலத்தின் தன்மையை வாஸ்து முறைப்படி அறிந்தவரே புலத்தை அறியும் அறிஞராகத் திகழ்வர்.

Only those who have known the nature of ground according to the science of vastu, could be the experts in knowing the nature of the select plot.

புலத்தியல் தெளிந்தே நிலமும் மனையும்
நலத்தியல் ஆய்வோர் நெறிமுதல் ஆய்வரே (553)

புலம் என்பதன் இயல்புகளைத் தெளிவுற அறிந்து, நிலம், மனை ஆகியவற்றின் நன்னிலையை ஆய்பவர், வாஸ்து நெறிக்குரிய அடிப்படை நிலையை உணர வல்லவர் ஆவர்.

Having clearly seen the characteristics of the selected ground, those who analyse the favorable features of the ground, and select area, would be able to understand the practicability of the fundamental principles of vastu

மண்ணிமைக் காலம் மாண்புறத் தெரிந்தோர்
விண்ணிமை கண்ணிமை நெறியறி வாரே (554)

மண்-இமைக் காலத்தை நன்கு அறிபவர்கள், விண்-இமை, கண்-இமை ஆகிய காலங்களின் நெறியையும் அறிய வல்லவர் ஆவர்.

Those who calculate the terrestrial time unit would be able to calculate the functional order of time aspects such as celestial time and time unit pertaining to the particular construction.

மண்ணிமைக் காலம் பார்நிலை ஆய்ந்தே
எண்ணால் ஆயம் இயல்புற வகுத்தே
எண்ணும் இயலும் நுண்ணிதின் நாடி
சீர்பெற் றுணர்ந்தோர் நேரறி பவரே (555)

மண்ணிமைக் காலநெறியால் பார்நிலையை (பூமி-நிலையை) ஆய்ந்து, ஆயம் கணித்து, எண்ணையும் இயலையும் நாடி உணர்பவரே வாஸ்து நிலையை உள்ளவாறு அறிவார்.

Having analysed the exact nature of ground through the operation of terrestrial time - unit and having calculated āya etc., those who understand the role of number and the corresponding structural aspects, could realise the significance of vāstu science.

எழுநிலைக் கலைநிலை இனிதி னறிந்தே
எழும்ஒளி யியல்நிலை எண்ணின் ஓர்ந்தோர்
பழுதிலா நெறிக்கலை பார்நிலை ஆய்ந்து
விழுமிய பொருள்நெறி வேண்டுவ அறிவரே (556)

கட்டிட அமைப்புகள் தொடர்பான கலைக்கூறுகளை நன்கு அறிந்து ஒளிநிலைகளை எண்ணியல் நெறிப்படி அறிபவர்கள், பார்நிலையை ஆய்ந்து, படைக்கப்பட்ட (உருவாக்கபட்ட) அமைப்புகளின் திறத்தால், வேண்டிய அனைத்தையும் பெறுவர்.

Having known the units of measurements related to the building structure, those who are able to specify the important segments of specific joineries, based on the science of number, would gain all the benefits as desired by them through the favourable features of their systematic creations.

கால வியல்தெரி கணக்கியல் ஆய்ந்தே
மூலம் நெறியறி முந்நெறி ஓர்ந்தே
ஐந்நெறி யியல்நிலை அகத்துள் ஆய்வோர்
செந்நெறிச் சீர்மை சிறப்புறக் காண்பரே (557)

கால இயலைப் புலப்படுத்தும் கணக்கியலை ஆய்ந்து, மூலம், முந்நெறி, ஐந்நெறி ஆகியவற்றை அகத்துணர்வால் உணரவல்லோர், செந்நெறியாகிய பிரம்மசூத்திர நெறியின் சிறப்பை உணர வல்லவராவர்.

Having examined the factors involved in mathematical order indicative of the effect and role of time, those who are skillful enough in knowing the nature of Primal Existence, three fold order and fivefold order, would be able to recognise the importance and significance of the Central Chord known as brahma-sutra.

நிலமறிந் தோரே நீர்வளம் நீரியல்
புலத்தியல் பொருந்த முறைநெறி கண்டுழி
வாழ்மனை வளர்மனை எண்ணெண் நிலையால்
ஏழ்நிலை மாடத் தியலறிந் துணர்வரே! (558)

நிலத்தின் இயல்பை வாஸ்துமரபுப்படி அறிபவர், நீர் இயல், புலத்து இயல் — இவற்றை உள்ளவாறு கண்டு, வாழ்மனையையும் வளர்மனையையும், எழும் நிலைகளையுடைய கட்டிட இயலையும் 64 சதுரக் கலைஇயலால் நன்கு உணர்வர்.

Those who know the characteristics of land according to the science of vastu, could understand the exact qualitative features of water and the select land; also they could understand the nature of built area and the left out area of that land and the favourable features of storeyed constructions, through the pattern of 64 squares.

தொலைநோக் குணர்வுற் றுள்ளுள் உணர்ந்தே
நிலைநோக் குறுநெறி நீள நினைந்தே
கலைநெறி நாடி விண்ணொளி நோக்கி
நிலைநெறி கூடி நெறியறிந் தியலாய்க்
காலங் கருதிக் காலங் காண்டல்
காலம் உணர்வோர் நெறியறி திறனே (559)

தொலைநோக்கு உணர்வு பெற்று, உள்ளத்தால் உணர்ந்து, நிலைபேற்றுத் தன்மையைக் கணக்கிட்டு, கலைநெறி, விண்-ஒளி, நிலைகள் தொடாபான நெறி — இவற்றை அறிந்து, மண்-இயல் தொடாபான காலத்தால் விண்-இயல் தொடர்பான காலத்தை அறிதலே, காலம் உணர்வோராகிய காலஞானிகளின் நெறிமுறை.

One should possess the faculty of looking at the futural point of time and space and the power of consciousness. He should ascertain the nature of its

longevity and know the creative order, light energy of outer space and the features of structural planes. Having known these, he should know the time related to outer space through the principles of terrestrial time. This is the exact process adopted by the KALA-JNANINS (knowers of time).

தாநெறிக் கலையியல் மதியுற் றறிந்தே
மாநெறிச் சீர்கலை சீரறி வுற்றே
நெறியால் கண்டுணர் நிலைக்கலை தேர்ந்தே
குறியுணர் உண்மை குறிப்பறிந் தியல்நிலை
ஆயுந் திறனறி மெய்யுணர் வுற்றே
ஏயக் காண்டல் ஒண்ணிலைத் திறனே (560)

நிலைக்குரிய கலைநெறியைத் தேர்ந்து, உரிய குறிகளால் உண்மை நிலையை அறிந்து, மெய்யுணர்வு மிகப்பெற்றுப் பொருத்தமுறக் காண்பதே, ஒளிமிகும் நிலைக்குரிய செயல்முறைத் திறனாகும்.

Having discerned the mode of time pertaining to constructional designs and known the exact state through supreme consciousness, one should pertinently observe the relevancy of all the factors involved in a construction associated with illuminative joineries.

எண்ணிலை நுட்பம் இயலறித் திறனாய்
நுண்ணறி வுற்றே நுவலரும் திறத்தியல்
எண்ணறி வியலால் விண்ணெறி நோக்குபு
எண்ணத் தியல்நெறி அகவிண் ணாய்ந்தே
நோக்குற நோக்கி நுண்பொருள் ஆய்தல்
நோக்குறுங் கலைத்திறன் எண்ணிலை யியலே (561)

எண்நெறி நுட்பத்தை அறிந்து எண் அறிவால் விண்நெறியை நோக்கி, உள்வெளி இயலை அறிந்து, நுண்பொருள் திறத்தை ஆய்ந்தறியுமாறு செய்வதே எண்ணிலை இயல்.

The science related to numerical order enables one to know the principles of role of number, space-order, nature of inner space and significantly know the potency of micro-structure.

காலப் பொழுதியல் கணக்கியல் நெறியே (562)

காலத்தையும் காலத்தின் கூறுகளையும், உள்ளவாறு காணச் செய்வதே கணக்கியல் நெறி.

The mathematical order enables one to exactly know the efficacy of time and time units.

பொழுதறி வுணர்வால் காலமா நுட்பம்
பழுதற் றுணர்ந்தே பெருஞ்செயல் புரிந்தே
விழுமிய மெய்ப்பயன் எண்ணிலை காண்நெறி
கெழுமுணர் வுறுநெறி அறிவர் செயலே (563)

கால அளவுகள் மூலம் கால நுட்பத்தை உணர்ந்து, பெரும் செயல் புரிந்து சிறந்த பயனை எண்நிலை இயலால் காண்பதே, உணர்வுமிக்க அறிஞர் செயலாகும்.

It should be the motive of expert in Vāstu science to know the subtleties of Time through its units and to derive the maximum and everlasting benefits through the employment of eightfold pattern.

ஒளிக்கதி ரியல்நெறி ஒண்மை யுணர்ந்தே
வெளிஒளித் திட்பம் விண்ணொளி நுட்பம்
உள்ளுற் றுணர்ந்தே உற்றறி திறனால்
தெள்ளுறும் சீர்நிலை செயிரறத் தெரிந்தே
மெய்யியல் நிலைநெறி கதிர்க்கலை ஓர்ந்து
ஐயமுந் திரியும் அற்றுறும் உணர்வால்
கதிரொளிக் கலைக்கதிர்க் கதிர்க்கீற் றியலும்
மதியொளித் திறனுறும் மாண்பா லறிந்தே
ஒளிக்கீற் றியலுறும் ஒளிநிலை உண்மை
வெளிஒளி யியல்நிலை உள்வெளி ஆய்ந்தே
ஓங்குறும் நிலையில் ஒளிர்பெற் றாய்ந்தே
ஆங்குறும் நெறிநிலை ஈங்குறும் திறனிலை
ஊங்குறும் நெறிமுதல் ஒருபொருள் உன்னி
தேங்குறும் ஒளிக்கீற் றியல்நிலை நுட்பம்
கதிரொளிக் கலையறிப் பேரறி வாற்றல்
கதிரியல் கதிர்க்கூற் றியலுறும் மூலம்
ஒளிக்கதிர் நிலையறி மூல நுணுக்கம்
ஒளிக்கதிர்க் கணுக்கம் கதிர்க்கீற் றொளிநிலை

உண்மை யறியும் வண்மை நோக்கி
எண்மை எண்ணிலை இயல்நெறி மூலம்
நுகர்வும் உணர்வும் நுவலுறும் தன்மை
பகர்தல் இயற்றல் காண்டல் ஆய்ந்தே
ஒளிஒலி நுட்பம் ஒளியால் அறிந்தே
ஒளிக்கீற் றொளிநிலை இயல்அறி நிலையே (564)

ஒளிநெறி இயல், வெளிஒளி, விண்ஒளி நுட்பம், ஒளிக்கீற்று இயல், வெளியின் ஒளியால் அமையும் உள்ளின் வெளி — இவற்றை ஆய்ந்து, அங்கு, இங்கு, உங்கு எனும் மூன்று நிலைகளுக்குரிய நெறி, ஒளிக்கதிரின் மூல நுணுக்கம், கதிரின் கணுக்கம் — இவற்றை ஓர்ந்து, எண்-நிலை மூலம் அமைப்புகளை உருவாக்கி நுகர்வும் ஒளியும் காணவேண்டும். ஒளிநிலையை அறிதல் என்பது ஒளியின் நுட்பத்தையும் ஒலியின் நுட்பத்தையும் அறிதலே.

One should know the science of light energy, space-light, light to segmented space (region), light-streaks and inner space. He should analyse the order pertaining to three stages - distant, near and mediatory, subtle nature of light rays, rhythmically spaced luminory spots. He should construct forms through eightfold process and thereby experience joy and gain wisdom. To know the nature of light energy is to know the subtle process of both light and sound.

எப்பொருள் எந்நிலை எந்நெறி எக்கலை
ஒப்பிலாக் காலம் உயர்வுற நோக்கினும்
மூலம் ஒன்றே முன்னுறும் நெறியால்
காலத் தியல்நெறி வகுத்தல் மரபே! (565)

எப்பொருளை, எந்நிலையில், எந்நெறியில், எக்கலையால் பன்னெடுங்காலம் ஆய்ந்தாலும், ஒன்றாகிய மூலமே முதன்மை வாய்ந்த நெறியால் காலத்தை வகுக்கும் என்பதை மரபுநெறிப்படி அறிதலே சிறப்பானது.

Whatever may be the investigations and analysis, the important deed is to know the truth that only the Primal Existence, which is one and inseparable, designs time through its own unique order.

பண்டுறுந் தமிழ்நெறி ஓவியம் சிற்பம்
கண்டுறுந் தமிழொலி ஒளிக்கலை நெறிநிலை
விண்டுறும் இன்னிசை நடத்தியல் நெறியும்
கொண்டுறும் உணர்வால் குறிப்புற் றாய்ந்தே
தண்டமி ழியல்நெறி சிற்பமா மொழியால்
தென்தமிழ் மூலம் ஓமெனும் ஒளிநிலை
மூலப் பொருள்நிலை முன்னி யுணர்ந்தே
ஞாலம் அறிந்து நற்றமிழ் நாடி
தமிழிசை ஐந்திசை ஏழிசை நுட்பம்
இமிழிசை இயம்பல் நுட்பம் தேர்ந்து
உமிழொலி அமிழொலி குமிழொலி நோக்கி
அமைவுறும் ஐந்திசைச் சிற்பம் நோக்கலும்
ஓவிய வண்ணம் வனப்பெழில் காண்டல்
மேவுறும் நடத்தியல் மென்மை வளைவியல்
பண்டுறுந் தமிழ்நெறி தென்றிசை நிலைக்கலை
தண்டமிழ் ஐந்தியல் தகைவுறச் சாற்றுமே (566)

தமிழ்நெறி, ஓவியம், சிற்பம், ஒளிக்கலை, இன்னிசை, நடம் — இவற்றை ஆய்ந்து சிற்பமொழியால் தமிழ் மூலமாகிய ஓம் எனும் ஒளிநிலையையும் அதன் முப்பொருள் நிலையையும் உணர்ந்து, ஞாலத்து இயல் அறிந்து, ஐந்திசை, ஏழிசை ஆகியவற்றின் நுட்பத்தையும், இமிழ் ஒலி முதலான ஒலிவகைகளையும் உணர்ந்து — இவற்றின் அடிப்படையில் ஐந்திசைச் சிற்பம், ஓவிய வனப்பு, நடக்கலை தொடர்பான வளைவுகள் நெளிவுகள் முதலானவற்றை உணரும் வகைமுறையை, ஐந்தியல் மரபானது சிறப்புறத் தெரிவிக்கும்.

Order pertaining to creative language, drawing, sculpture, creative rays, music, dance - one should know the features of all these and realise the luminous aspect of OM through the formal language and threefold substance formed of OM. He should understand the nature of universe, subtleties of fivefold and sevenfold music and varieties of sound patterns. Based on these the pentadic tradition would explain the effective way of knowing the features of fivefold musical form,excellence of drawing, dance and various lineaments associated with them.

எண்தமிழ் எண்ணிலை எண்ணெண் இயலால்
பண்தமிழ் ஒலியியல் பேரிசை நுட்பம்

நேரிசை சீரிசை நெறியிசை ஆய்ந்தே
தேரிசை தேர்க்கலை தேர்மொழி தேர்ந்தே
கணக்கியல் நெறிமுறை காலக் கூற்றால்
இணக்குறும் முகத்தள வெண்ணிலை உறுப்பியல்
சீர்நெறி தேர்ந்தே செம்முறை ஆய்ந்தே
தேர்நெறி விண்ணெறி நுண்ணறி வுற்றே
விண்ணும் எட்டே எண்ணும் எட்டே
திண்ணுடல் எட்டே சீரியல் எட்டென
வகுத்துறும் உண்மை உளங்கொள் நெறியால்
வகுத்துணர் நெறிமுறை எண்ணியல் கூறும் (567)

எண்தமிழ், எண்நிலை, 64 இயல் — இவற்றால் ஒலிஇயல் நுட்பத்தையும் இசைவகைகளையும் ஆராய வேண்டும். தேர்இசை, தேர்க்கலை, தேர்மொழி — இவற்றை அறிந்து, கணக்கியலாலும் காலக்கூறுகளாலும் முகத்தளவு, அதன் எண்மடங்கான உடல் அமைப்பு முதலானவற்றை ஆராய்ந்தறிய வேண்டும். தேர்நெறி உணர்ந்து, விண், எண், உடல் — இவையெல்லாம் எட்டே என்பதை உணரும் நெறிமுறையை எண்ணியல் விளக்கும்.

One should understand the subtleties and melodious patterns of sound energy, through eightfold creative language, the harmonious element, eightfold plane of existence and 64 units. Having known the unit, expression etc., related to cosmic chariot, he should know the measurement of face, and the structural form of the whole body which is eight times the length of face. The science of number states that space, numerical systems and body/ form — all these are in folds of eight.

கண்டுணர் கலைநெறி கேட்டுணர் கலைத்திறன்
விண்டுணர் ஓம்நெறி வெளியுணர் ஓசை
இயல்நெறி ஐந்தா யிசைநெறி யைந்தாய்
முயல்கூற் றைந்தாய் முன்னிய முன்னி
ஐந்தின் ஆற்றல் எண்ணிலை கலையென
முந்துசெந் தமிழ்க்கலைச் சிற்பம் சாற்றுமே (568)

கலைநெறியைக் கண்டுணர்ந்தும் கலைத்திறனைக் கேட்டுணர்ந்தும் ஓம்நெறி, ஐந்தியல்நெறி, ஐந்திசை நெறி, ஐவகை முயல்வு என உள்ள ஐம்பகுப்பை உணரச்செய்து, எண்கலை யையும் எண்நிலையையும் சிற்பக்கலை விளக்கும்.

Having directly seen the creative order and having evidently heard from the elders/experiencers, the principles of creative power, the expert in sculptural art directs us realise the principle of OM-process, fivefold order, fivefold musical order, fivefold exertion and thereby enables us know the eightfold creative process and eightfold state.

உள்ளும் புறமும் ஒருங்குணர் நெறியால்
விள்ளுங் கலைநெறி மெய்யியல் கூர்ந்து
அகமும் புறமும் அகப்புற மெய்க்கலை
மிகுநிலை வீரம் ஆண்மை வண்மை
உண்மை தெருண்மை உற்றறி நோக்கே
திண்மை கட்டும் பண்பியல் நெறியே (569)

உள்ளும் புறமும் ஒருங்குறக் கண்டு, அகம், புறம் அகப்புறம் — இவைகளின் இயல்பை உணர்ந்து, வீரம் ஆண்மை முதலான இயல்புகளைப் பெறுவதையே பண்பியல் நெறி விளக்கும்.

Having seen both the internal and external aspect and realised the features of three states - interior, exterior and the peripheral form of the interior, one should attain the qualities such as bravery, sturdiness etc., The cultural perspect is of the nature of expressing these.

பண்பியல் உணரின் உண்மை முகிழ்க்கும் (570)

பண்பியலை உணரும் போதுதான் உண்மை, உளத்துள் வெளிப்படும்.

Only upon the realisation of cultural perfection, the exact truth would manifest of its own accord in one's own mind.

எண்மையும் நுண்மையும் விண்மை தெரிக்கும் (571)

எளிமை, நுண்மை — ஆகிய இரண்டும் விண்ணின் தன்மையைப் புலப்படுத்தும்.

Both simplicity and subtlety would reveal the nature of space.

எட்டியல் ஐந்தியல் நெறிமுறைக் கலையே (572)

கலைநெறி முறையானது எட்டியலாகவும் ஐந்தியலாகவும் விளங்கும்.

The process of creative order manifests itself as octo-pattern and pentadic pattern.

ஐந்தியல் ஐந்நெறி மெய்நிலை ஓர்ந்தே
முந்துறும் ஒளியியல் முறைமையின் தேர்ந்தே
எண்ணொளி யியலுறும் எண்ணியல் நுணுக்கம்
விண்ணொளி மூலக் கதிர்நிலை நுணுக்கம்
உள்ளுற் றோர்ந்தே மெய்ந்நெறி ஆய்ந்தே
விள்ளுறும் கலைநிலை மூலத் தெழுநெறி
ஐங்குடி யியலின் நெறியறிந் தியலும்
தங்குறும் ஐம்பொருள் தனிநிலை யுணர்ந்தே
ஒருபொருள் ஐந்தியல் எண்ணிலை நுட்பம்
வருபொருள் தெளிநிலை நுணுக்கம் ஆயல்
உள்ளும் புறமும் உணர்ந்தினி தாய்ந்தே
உள்ளொளி மூலம் ஒளிக்கதிர் ஆயலே (573)

ஐந்தியல், ஒளிஇயல், எண்ஒளி, எண்இயல், விண்ஒளி, மூலக்கதிர்நிலை — இவற்றின் நுணுக்கத்தையும் மூலநெறி, ஐங்குடி நெறி, ஐம்பொருள்நிலை — இவற்றையும் நன்கு அறிந்து, உள்ளும் புறமும் உணர்ந்து, உள்ளொளி மூலம் ஒளிக்கதிரை ஆராய வேண்டும்.

Fivefold aspect, science of light, luminous aspect and the nature of eightfold pattern, light energy of space, potency of primal streak of light, order of Primal existence, order of fivefold belt (zone), nature of fivefold substance — having known all these and realised the interior and exterior features, one should analyse the properties of luminous rays.

கதிரொளி நிலையுறும் ஒளிக்கதிர்ப் பெருவலி
கதிரியற் கீற்றொளி காண்டல் இயலே (574)

மாநெறியாகிய வாஸ்து இயலானது ஒளிக்கதிரின் பெருவலியையும், கீற்றொளியின் கதிராற்றலையும் காணக் கூடியது.

The science of Vastu enables one to understand the potency of illuminating rays and radiant energy of the streaks of light.

மூவியல் நெறித்திறன் முன்னி யுணர்ந்தே
முப்பொருள் முந்நெறி ஆய்ந்துணர் நெறியே (575)

மூவியலாக உள்ள நெறித்திறத்தை உணர்ந்து முப்பொருளையும் முந்நெறியையும் ஆய்ந்துணர வேண்டும்.

Having understood the efficacy of the order of threefold aspect, one should analyse the nature of threefold substance and the functional way of threefold process.

பல்பொருள் தோற்றிப் பெருநிலை விளக்கி
நல்லியல் பன்முறை நெறிநிலை நாட்டினும்
தொல்லியல் வண்ணம் சொற்பொருள் உரைக்கும்
சொல்லியல் தமிழ்நெறி ஓர்வது மரபே (576)

பல்வகைப்பட்ட பொருள்களை ஆய்ந்து அவற்றின் நிலைகளையும் இயல்புகளையும் உறுதிபட விளக்கினாலும், சொற்பொருளை உணர்த்தவல்ல சொல்லியலைத் தமிழ்நெறிப்படி உணர்வதே மரபான செயலாகும்.

Even though one is able to explain with certainty the features of varied substances and their classifications, the effective and consistent traditional method is to know according the order of creative language, the significance of word-structure indicative of its relevant content.

மரபியற் கலைநெறி மாண்புறத் தெரிக்கினும்
உரத்தியல் உணர்வும் நுகர்வும் இயலாய்
காண்பன கண்டுணர் கலைநெறித் திறமும்
கேட்பன கேட்டுணர் நெறிமுறை தெரிந்து
அறிவியல் ஆக்கம் எய்துவ முறையே (577)

மரபுநெறிப்படி கலைநெறியை நன்கு அறிந்தாலும் மனவளமும் மனைவளமும் அமைய, காண்பன கண்டு, கேட்பன கேட்டு, நெறிமுறை அறிந்து, அறிவாக்கம் பெறுவதே முறை.

Even if one knows well the creative order according to the traditional way, it would be systematic and effective

to see and hear the essentials and attain supreme wisdom so as to gain prosperous residence and healthy mind.

மூலத் தெழுநிலை முதற்பொருள் ஆய்ந்தே
காலத் தியலும் கணக்கியல் நெறித்திறன்
எண்நிலை நெறியுற் றெண்ணுறும் ஆற்றல்
விண்ணெறி நுண்ணறி விளக்குறும் திறனே (578)

மூலநிலையில் எழும் முதற்பொருளின் தோற்றத்தை ஆய்ந்து காலஇயல், கணக்கியல் — இவற்றை அறியும் திறனே எண்நெறி, விண்நெறி ஆகியவற்றின் நுட்பத்தை உணருமாறு செய்யும்.

Having keenly observed the first appearance of the Primal Existence at the ultimate and basic point of space, one should know the orderly movement of time and mathematical order. This process of knowing would enable to understand the subtle principles of numerical order and spatial order.

தொல்லியல் உயிர்க்கலை உயிர்நிலை உணர்ந்தே
நல்லியல் புல்செடி கொடிமரத் தியல்நெறி
மூலமும் தோற்றமும் முறைமையின் உணர்ந்தே
கோலமும் குறிப்பும் குறிப்பின் உணர்ந்து
வித்தும் முளையும் விளைநிலை ஓர்ந்தே
முத்தும் ஒளியும் மூலத் தியலும்
கண்டுழி நிலைக்கலை கருத்தியல் ஆக்கம்
விண்டுழி உயிரினம் விதிமுறை நிலையியல்
நெல்லும் உயிரே நீரும் உயிரே
புல்லும் கல்லும் பெருநிலை உயிரே
செடிகொடி மரநிலை சீருயிர் ஓர்ந்தே
படிமிசை உயிரினம் உயிர்க்கரு மூலம்
உள்ளூற் றோரின் ஓவியம் சிற்பம்
தெள்ளுறுந் தமிழ்க்கலை தெளிமுறை தெரிந்தே
உயிர்நெறி உயிர்க்குறி உயிர்க்கலை உயிரியல்
உயிரினத் தோற்றம் மூல மெய்ப்பொருள்
திண்ணிதின் ஓர்ந்து செப்புவ கலைநிலை
நுண்ணிதின் உயிர்நெறி நுவலுங் காலை
உயிர்ப்பொருள் ஒன்றே ஒளிப்பொருள் ஒன்றே
உயிரும் ஒளியும் ஒன்றென் றுணர்ந்தே

மாற்றமும் ஏற்றமும் கண்டறி யாவுயிர்
ஆற்றல் சிறந்தே அமைவுறும் நல்லுயிர்
தொல்லுயிர் நல்லுயிர் ஒளியுயிர்த் தன்மை
வெல்லுயிர் வீறுயிர் வெளியுயிர் உண்மை
எங்கும் விளங்கும் உயிர்த்திறன் அறிந்தோர்
பொங்கு செந்தமிழ்ப் பெருநிலை அறிவரே (579)

உயிர்வகைகளின் தன்மையை நாடி, மூலம் தோற்றம் கொள்வதை உணர்ந்து, வித்து-முளை-விளைநிலம்; பிந்து, ஒளி, மூலஇயல் — இவற்றை ஆய்ந்து, நெல், நீர், புல், கல் முதலான அனைத்தும் உயிரே என உணர வேண்டும். உயிர்க்கருவின் மூலநிலையை ஓர்ந்தால் ஓவியம், சிற்பம் முதலானவை மூலப்பொருளின் உயிர்க்கலையே என அறியலாம். உயிர்ப்பொருள், ஒளிப்பொருள் — இரண்டும் ஒன்றே. உயிரும் ஒளியும் ஒன்றே என உணர்ந்து, உயிர்வகைகள் அனைத்தும் ஒளிச்சிதறல்களே என உணர வேண்டும். எங்கும் விளங்கும் உயிர்த்திறன் அறிந்தோர், தமிழின் பெருநிலையை உணர்வர்.

One should understand the innumerable kinds of souls and manifestation of Primal Existence in various forms. He should contemplate on the triples - seed, sprout, land; dot , light, primal manifestation. The seeds of plants, water, grass, stone etc are indeed, inspirited existents. If one analyses the originating state of foetus, he could know that the sculptural and drawing creations are truly the ensouled manifestation of the Primal Substance itself. The inspiriting source, the luminous substance - these two are one and the same. Soul is the same thing as light. All the varieties of souls are the reflections and refractions of luminous substance itself. Those who realise the energetic presence of all pervasing soul could understand the greatness of the creative language.

உயிர்க்கரு மூலம் வித்தும் முளையும்
செயிரறத் தெரிந்தோர் சீர்சால் அறிவரே! (580)

உயிர்க்கரு, மூலம்; வித்து, முளை — இவற்றைத் தெளிவுற அறிந்தவர்களே, அறிவிற்பெரியோர்.

Only those who distinctly know the nature of inspiriting foetus, point of origin, seed, and sprout, could be the great men, excelling in supreme wisdom.

வித்தும் முளையும் முளையுள் ளுயிரும்
நத்தி யறிந்தோர் நெறிநிலை அறிவரே! (581)

வித்து, முளை, முளையின் உயிர் — இவற்றை உள்ளவாறு அறிவோர், வாஸ்துநெறியின் உயிர்நிலையை அறிவர்.

Those who exactly know the features of seed, sprout, and the soul of the sprout, could realise the exact life thread of the science of Vāstu.

உயிரெழுத் தாற்றலும் மெய்யெழுத் தியலும்
உயிரியல் மெய்யியல் நெறிமுறைக் கலைநெறி
ஓர்ந்துணர் அறிவால் ஞாலம் நோக்கின்
தேர்ந்துணர் உயிர்நெறி சீர்த்த நோக்கால்
ஆண்பெண் ஒன்றே பெண்ஆண் திறமுறும்
ஆண்பெண் திறமுறும் அறிநிலை உணர்வால்
உயிரினம் ஒன்றே உயிரியல் மூலம்
உயிரியல் கலைதெரி மூலம் உணர்ந்தே
உள்ளொளித் திறனிலை உற்றறி உணர்வால்
தெள்ளுயிர் சீர்நிலை நெறியுற் றாய்வரே (582)

உயிர்எழுத்து, மெய்யெழுத்து — இவற்றை ஆழ்ந்துணரும் அறிவால் ஞால நிலையை அறிந்து ஆண்-பெண்-இணக்கத் திறத்தையும் அறிந்து, உயிரினம் ஒன்றே எனும் உண்மையை உணரவேண்டும். இதனை உணர்ந்தோர் உயிரியல் மூலத்தையும் உள்ளொளித் திறத்தையும், நெறிப்பட அறிவர்.

With the deep knowledge of vowels and consonants, one should understand the structural pattern of the universe and the union between male and female. He should realise that all the souls belong to one and the same source. Those who realise this, could systematically know the originating point of the souls and the working of inner consciousness.

உயிரியல் எண்ணிலைக் கலைநெறி மூலம்
செயிரறத் தேர்ந்தோர் நெறியுறத் தெரிவரே (583)

எண்-நிலைக் கலைமூலம் உயிரியலை உணர்ந்தோராலேயே நெறிமுறைப்படி ஆராய இயலும்.

Only for the persons who have realised the nature of souls through eightfold creative order, it could be possible to analyse all the systems systematically.

கல்லும் புல்லும் கலையறி வூட்டும் (584)

தெளிந்த உணர்வுடையார்க்குக் கல்லும் புல்லும் கூட கலையறிவைக் கொடுக்கும்.

To the persons endowed with settled and clear consciousness even the stone and grass would grant creative knowledge and skill.

நெல்லும் எள்ளும் நிலையறி வூட்டும் (585)

அவர்களுக்கு நெல்லும் எள்ளும் கூட (நிலையான அளவியல் தொடர்பான) அறிவைக் கொடுக்கும்.

To them, even the seeds of paddy, sesame etc., would grant perfect and ever-relevant knowledge (related to number and measure)

உண்ணோக் கியலே விண்ணோக் குணர்த்தும் (586)

உள்வெளியை நோக்கும் திறமே விண்-வெளியை நோக்கும் ஆற்றலைக் கொடுக்கும்.

Only the potency, capable of looking at the inner space could grant the capacity to penetrate into the space-fields.

உயிர்மெய் யுணரின் உட்பொருள் தேற்றம்
மெய்யுயிர்க் கலைநிலை மூலப் பொருளே (587)

உயிர்-மெய் — இவற்றின் இயல்பினை உள்ளவாறு உணர்ந்தால் மூலப்பொருளைப் பற்றிய தெளிவு உண்டாகும். மெய்யோடு கூடிய உயிர் தொடர்பான கலை அனைத்தும் மூலப் பொருளுக்கு உரியவையே.

Upon the consistent realisation of the nature of the inspiriting source and the inspirited substance, there would occur distinct knowledge concerned with Primal Substance. All the creations related to the inspiriting source associated with the inspirited substance do belong to the category of Primal Substance only.

செங்கதிர் ஒளியியல் சீருறத் தேர்ந்தே
பொங்கொளிப் பேரியல் பொருந்த உணர்ந்தே
ஒளிஒலி யியல்நிலை உற்றறி மதியால்
தெளிவுறத் தேர்ந்தே சீரொலி ஆயல்
ஒளிநிலைக் கலையுணர் உற்றுறும் திறனே (588)

சூரிய ஒளியின் ஆற்றலைத் தேர்ந்தால், பேரொளியின் இயல்பை நன்கு உணரலாம். ஒலி இயலை ஆயும் அறிவுத் திறனே, ஒளி இயலையும் கலையையும் அறியும் திறனாகும்.

If one could know the potency of solar light, he could evidently realise the potential nature of the great and primal effulgence. It is the efficacy of analysing the sound energy that turns into the efficacy of knowing the nature and creative order of light energy.

எண்ணியல் நெறியால் எண்கலைத் திறனெறி
நுண்ணிதின் ஓர்ந்தே நுவலரும் மூலம்
புள்ளித் தோற்றம் பொருந்த உணர்ந்தே
தெள்ளுங் காலந் தெரிந்துணர் நிலையால்
காலத் தாணியல் கருத்தறி வுற்றே
மூலத் தாண்நிலை உற்றறி திறத்தால்
உண்மை உணர்ந்தே உள்ளொளி ஓங்குபு
எண்மை நுண்மை இயலறி வாற்றல்
காலத் தாண்கலை கருத்துற் றுணரின்
கால இயக்கம் சீலத் திறமும்
கோல மாநெறி குறிப்பி னுணர்ந்தே
மூலத் தாண்நிலை முன்னி யுணர்ந்தே
மூலத் தாற்றல் நிலையறி திறனே (589)

எண்கலைத் திறன், மூலம், புள்ளித் தோற்றம், காலத்தாண், மூலத்தாண், எட்டாக அமையும் தன்மை, நுட்பமாக அமையும்

தன்மை — இவற்றை உணர்ந்து, காலத்தூண் தொடர்பான இயக்கம், சீலம், கோலநெறி ஆகியவற்றை உணர்ந்தால், மூலத்தூணின் நிலையான ஆற்றலை அறிய முடியும்.

Eightfold creative energy, primal state, emergence of dot, Time pillar, Primal Pillar, octo process, converging process - having known all these, if one understands the significance of vibrations related to time-pillar, rhythm, manifesting order of form etc, he could know the inexhaustible potency of the Primal pillar.

ஒருங்குணர் ஆற்றல் ஒள்ளிதின் உற்றே
மருங்குறும் எண்ணிலை நுட்பம் தேர்ந்தே
கருத்துறி னைந்தொழில் கலைநெறி நோக்கி
ஒருநிலை யுற்றுணர் உட்கலை தேர்ந்தே
கருநிலை மூலம் காண்டலும் நெறியே (590)

ஒருங்கிணைத்துக் காணும் பயிற்சியால் எண்-நிலை, ஐந்தொழில், உட்கலை — இவற்றைத் தேர்ந்து, கருநிலையின் மூலத்தைக் காணக்கூடியது வாஸ்து நெறி.

The science of Vāstu is capable of seeing and establishing the originating point of foetus-state based on the ascertained knowledge related to octo-pattern, fivefold function and internal working, this knowledge being attained through the process of co-ordination.

நெறியறி மக்கள் நிலையுணர் வுற்றே
குறியுறுந் திறனுறக் குறிப்பறி வுற்றே
மூலத் தெண்ணிலை முன்னி யோர்ந்து
காலங் கருதல் நெறிமுறை யியலே (591)

நிலைகளாலும் குறிகளாலும் மூலத்தின் எண்நிலையை அறிந்து காலத்தைக் கணித்தலே வாஸ்துநெறியின் முறைமை.

Having known the eightfold state of the primal point through varied structural forms and characteristic marks, to calculate the rhythmic order of time is the exact process maintained in the science of Vāstu.

எட்டெட் டியல்தெரி கால நுணுக்கம்
எட்டியல் நெறியால் இயைபின் நோக்கி
நாற்புறத் தியனிலை ஐந்நிலை யோர்ந்து
மேற்றுறுந் தெளிநிலை ஐயைந் தியல்பே (592)

64 சதுரஇயல் தெரிவிக்கும் காலநுணுக்கத்தை எட்டியல் நெறியால் பொருத்தமுற நோக்கி நாற்புற அமைப்புக்குரிய ஐவகை நிலைகளையும் உணர்ந்தால் அடுத்து அமையும் 25 இயலையும் தெளிவாக அறியலாம்.

The subtle function of time (in a select area) is indicated by 64 squares. One should consistently observe this subtle function through the order of eightfold aspect and know the fivefold stages of the four cornered structure. Upon this he could evidently know the formation of 25 aspects.

ஒருநிலை உள்ளம் உள்ளுறும் உணர்வே
கருநிலை மூலம் காண்டல் இயலும் (593)

ஒருநிலைப்பட்ட உள்ளத்தில் எழும் உணர்வே கருநிலையின் மூலத்தைக் காண வல்லது.

Only the consciousness that arises in the centre-oriented inner space is capable of seeing the originating point of structural foetus.

கருநிலை யியல்நெறிக் கணக்கறிந் தெண்ணும்
திருநிலைப் பேரியல் ஒளிநிலை உன்னி
பிண்டத் தியல்நிலை பெருங்கலை உணர்வோர்
அண்டத் தியல்நிலை மூலமென் றுணர்ந்து
அண்டமும் பிண்டமும் மெய்நிலைக் குறியியல்
கொண்டிலங் குறுநிலை ஒளிவெளி அறிவரே (594)

கருநிலை தொடர்பான கணக்கினை அறிந்து, ஒளிநிலை மூலம் பிண்ட அமைப்புக்குரிய கலைகள் உணர்வோர், அண்டத்து அமைப்பின் மூலநிலை இது என உணர்ந்து, அண்ட-பிண்ட இணைப்பை நிர்ணயிக்கும் ஒளிவெளியை உணர்வர்.

Having made the calculations related to the structural foetus, those who know the formative limbs/parts, of the intended structure through light-source, could understand the basic structure of macrocosm and realise the copresence of light and space that determines the concordance between macrocosm and microcosm.

முப்பொருள் முந்நெறி முக்கலை உணரின்
செப்பரும் மூலத் தியல்நிலை நுட்பம்
ஒப்புறத் தெரிந்தே உண்மை உணர்வொளி
எய்ப்புறுந் திறனால் எய்தலு மாகி
ஒளிஒலி யியல்நிலை ஓங்குறும் ஆற்றல்
வெளிஒலிக் கலைநிலை அறிதலும் எளிதே (595)

முப்பொருள், முந்நெறி, முக்கலை — இவற்றை உணர்வதன் வாயிலாக மூலத்தின் நுட்பத்தை நன்கு அறிந்து, ஒளி-ஒலி இணைப்பால் ஓங்கும் ஆற்றலையும் வெளி ஒலிக் கலைநிலையையும் எளிதாக அறியலாம்.

Through the realisation of threefold substance, threefold order and threefold emergence, one should know the subtle principles of the Primal Energy. Only then, he could observe the potency exerted by the union of light and sound and the emergence of space sound.

செம்பொருள் மெய்ப்பொருள் சீர்நிலை தெரிந்தே
ஐம்பொருள் நுட்பம் அகத்துணர் வுற்றே
நெறிமுறைக் கலைத்திறன் நீள நினைந்தே
அறிகலை யியல்தெரி ஆற்றல் பொருந்தி
குறிப்பின் உணர்ந்தே குறிப்பின் உணர்த்தல்
ஐந்தியற் கலையின் மெய்நிலை என்றே
செந்தமி ழியற்கலை செப்புறும் உண்மை (596)

மெய்ப்பொருள் (வஸ்து), ஐம்பொருள் (வாஸ்து) — இவற்றின் நுட்பம் அறிந்து, கலை என்பதன் இயலையும் திறத்தையும் உணரும் ஆற்றல் பெற்று, குறியால் உணர்ந்து குறிப்பினை உணர்த்தல் என்பதே ஐந்தியலுக்குரிய மெய்ந்நெறி முறை.

Based on the knowledge of the subtle principles of the single and unique existence (vastu) and the fivefold existence (vāstu) and on the efficacy of knowing the functional mode of creative energy, the system of fivefold energetic aspect would reveal the relevant characteristic marks.

ஒருபொருள் ஒளிப்பொருள் ஓங்குறும் பொருளும்
வருபொருள் இயற்பொருள் எண்பொருள் நிலையும்
தெள்ளத் தெளிந்தே திண்ணிதின் உணரின்
விள்ளுறும் ஒலியே பெருநிலை மூலம்
ஒளியால் பல்பொருள் உயிர்ப்பொருள் நுண்மை
வெளியா லறிந்தே உள்ளுற் றுணர்ந்தே
தெளிகலை இயற்கலை இயல்நெறி சேர்ந்துறும்
ஒளிமொழி யியல்நிலை உரைநெறி முறையே (597)

ஒருபொருள், ஒளிப்பொருள், வருபொருள் என்ற வகையில் எண்பொருள் நிலையைத் தெளிவாக உணர்ந்தால், ஒலி, மூலம், ஒளி ஆகியவற்றின் நுண்மைகளை அறிந்து இயற்கலையின் நெறிமுறை பொருந்தும் வண்ணம் அமைப்பை உருவாக்கலாம் என்பது ஒளிமொழிஇயல் உரைக்கும் நெறிமுறையாகும்.

If one understands clearly the exact mode of eightfold substance in terms of single substance, luminous substance and proliferating substance, he could know the subtle principles of sound energy, Primal energy and light energy and create charming structure consistent to the natural order. This is the practical truth enunciated by the science of luminous word-structure.

தொழிலியல் நெறிக்கலை தொன்மை துலக்குப்
எழிலும் வனப்பும் இயற்றிறன் ஆய்ந்தே
ஓவியம் புனைதிறன் ஒளிமுதல் செழுங்கலை
மேவுறும் சிற்பம் நல்லியல் காலம்
ஒளியால் நிலையுறும் ஒலியலை ஓசை
தெளிவுறும் இசைநிலை செவியுறுங் காலம்
தேர்ந்துகள் பொழுதின் எட்டுறும் ஒருகூர்
நேர்நிலைக் காலம் நிலைபொழு தியலெனா

தெளிவுணர் வுற்றே சிறுபொழு தியலும்
ஒளியுணர் வோங்கிப் பெரும்பொழு தறிந்தே
ஒலியியல் ஓசை ஒளியியல் இசைநிலை
களியுறக் கூர்ந்தே கலைநிலை ஆய்ந்தே
காலங் கண்டுணர் கருத்தறி வுற்றே
மூலப் பொருண்மை முன்னுவ நாடி
நாடுறுங் கால நுண்மை யறிந்தே
தேடுறுங் குறித்திறன் செயல்நிலை உணர்வு
உழைப்பியல் நெறியே தொழிலியல் மூலம்
உழைப்புறும் பெரும்பயன் தொழிலியல் நெறியே (598)

கலைக்குரிய தொன்மையையும் வனப்பையும் ஆய்ந்து ஓவியம், சிற்பம், காலம், ஒளியின் ஒலிஅலை, இசைக்காலம் ஆகியவற்றை அறிய வேண்டும். எட்டு தேர்த்துகள் பொழுது ஒரு தேர்நிலைக் காலம் என்ற முறையில் தொடங்கும் கால அளவுகளை அறிந்து, காலத்தின் வகைகளை அறிந்து, காலத்திற்கு மூலத்தை நாடி, குறிகள் தொடர்பான உணர்வுத் திறத்தைப் பெற்று உழைப்பியல் நெறியை உணர வேண்டும்.

Having analysed the continuity of consummate beauty in the creative order, one should know about drawing, sculpture, time, sound waves pertaining to light energy, time pertaining to music etc. Having known the units and varieties of time commencing from car dust, and the source of time, he should attain the knowledge related to specific marks and the orderliness of working pattern.

தொழிலியல் ஆக்கம் பொருளுறுந் தெரிநிலை
ஒழிவிலா துழைப்புறும் பெருநெறி ஆற்றல்
செழுங்கலை வண்மை திறமுறுந் திறனாய்
காலக் கலையைக் கூடித்தின் உணர்ந்து
காலம் காட்டும் உண்மை யறிந்தே
சிறுபொழு தாற்றல் செவ்வி தெரிந்து
உறுபொழு தியல்நிலை உண்மை நோக்கி
பெரும்பொழு தாற்றல் பெட்புற் றுணர்ந்தே
வரும்பொழு தியலுங் கால மாநெறி
கணக்கிய லுணர்ந்தே கணக்கியல் வகுத்தே

கணக்கியல் மாறாக் கால மாநெறி
நெறியுற் றாய்ந்தே நீள நினைந்தே
குறியுறுந் திறமுணர் குறிப்பின் நின்று
காலச் செயலே கருத்துணர் வாற்றெறி
மூலமும் பொருளும் முன்னி யுணர்ந்தே
நெறிமுறை இயற்றல் அறிவோர் திறனே (599)

தொழில் ஆக்கத்திற்குரிய உழைப்பு, கலைவளம், திறன் — இவற்றைப் பெற்று, காலத்தின் கலைகள், வகைகள், ஆற்றல் — இவற்றை உணர்ந்து கணக்கியல் மாறாத கால நெறியை ஆழ நினைந்து, குறிப்புக் கோலத்தால் காலச் செயலைத் தெரிந்து, மூல நிலையையும் பொருள்நிலையையும் உணர்ந்து, உருவ அமைப்பை உருவாக்குதலே, அறிவோர் திறன்.

It is the creative order maintained by the experts in Vāstu to create a structure through the knowledge of relevant working pattern, relevant materials, principles of time and time order, the working of time expressed through various forms of marks, originating source and the exact features of the structure (to be created)

தாளம் காட்டும் தனிஅள வோர்ந்து
நீள நினைந்து எண்தா ளத்தால்
அளவியல் முறைதெரி நிலையியல் ஆய்ந்தே
உளவியல் முறையா லுற்றறி திறனால்
எட்டி னியல்நிலை நெறிமுறை ஓர்தல்
எட்டும் எட்டின் விரிவும் இயம்புமே (600)

தாளம் காட்டும் அளவுநிலை ஓர்ந்து, எண்தாள நெறிப்பட்ட அளவியல் முறையை ஆய்ந்து யுக்தியாலும் அனுபவத்தாலும் எட்டின் நெறிமுறைகளை உணரும் வகையை எட்டின் இயலும் எட்டின் விரிவு-இயலும் எடுத்துக்கூறும்.

The science related to eightfold energy and its expansive process would show the way of realising the functional pattern of eight, through the knowledge based on the beat regulated by eight time-units and through application and experience.

அளவியற் கலைநெறி ஆழ வுணர்ந்தே
உளவியற் கலைநிலை உண்மை தெரிந்தே
எண்ணுறுந் திறனிலை நெறிமுறை யோங்கி
விண்ணொளி மூலப் பெருநிலை ஓர்ந்து
பருநிலை நுண்ணியல் வகுத்தியல் நெறியால்
ஒருநிலைக் கலையியல் உற்றறித் திறனாய்
எண்ணெண் ணியலுறும் நுண்கலை ஒளிர
எண்கணக் கியலுறும் நெறிநிலைத் திறனுற்
றோர்ந்தொளிர் ஒண்மை ஒளிநிலைக் கலையே (601)

அளவியல் முறையை உணர்ந்து, அதனை முறைப்படிப் பயன்படுத்தும் திறன் பெற்று, விண்-ஒளியின் மூலநிலையை அறிந்து, ஒரு குறிப்பிட்ட அமைப்புக்குரிய பருமை நிலையையும் நுண்மை நிலையையும் வகுத்துக் கண்டு, 64 இயலின் ஆற்றல் வெளிப்படும் வகையில் எண்களை ஆளும் திறம் பெற்று, ஒண்மை பொருந்துமாறு செய்யவேண்டும். ஒளிநிலைக்கலை இவ்வாறு செய்ய வழிவகுக்கிறது.

Having deeply studied the system of measurement and being skilfull enough in putting it into practice one should know the basic and primal energy operating at the central square. Based on the layout, he should predetermine the completed structural form and its basic design and he should have the power of employing the numerical measures so as to infuse the subtle force of 64 squares and aim at bringing out the radiant structure. The science of light - energy enables him to do all these.

எழுத்திய லெண்ணியல் நெறித்திறன் உன்னி
வழுத்து மெய்ந்நெறி வளர்கலை மாநெறி
அறுபான் நான்கின் அருங்கலை நுட்பம்
உறுமுறை இயல்தெரி உண்மைப் பொருளறித்
திறமுறு மைந்நெறி செந்நெறி ஓர்ந்தே
ஒளிநிலைக் கலைநிலை உணர்த்துவ தியல்பே (602)

எழுத்தியலையும் எண்ணியலையும் உணர்ந்து, புனிதநெறி, மனிதநெறி, 64-இயலின் நுட்பம், — இவற்றை அறிந்து, ஐந்நெறி இயலையும் செந்நெறி இயலையும் ஓர்ந்து ஒளிநிலையின் ஆற்றலை உணர்த்த வேண்டும்.

Having a deep knowledge on the science of letters and numbers and the technique of manduka mandala and paramasayika mandala and of the 64 squares and having systematically studied the fivefold order and the science of Vastu, one should expound the efficacy of luminous point of the intended structure.

மூலத் தெழுநிலை மூலம் உணர்ந்தே
கோலமுங் குறிப்புங் குறிப்புற் றுன்னி
கால விரைவியல் கருத்துற் றோர்ந்து
ஞாலத் தியலும் விண்ணெறிச் சீர்மையும்
உன்னி உன்னி உள்ளுற் றாய்ந்து
துன்னும் பேரியல் தூநெறி நோக்கி
ஐங்குடி யியலுறும் அருநிலை மூலம்
செங்குடி பைங்குடி திருநிலை ஓர்ந்து
எண்ணுற் றாய்வுறும் மெய்நிலை தெளிந்தே
நண்ணுவ நாடி நிலைநெறி ஆய்தல்
எண்ணிலை இயல்நெறி முறைக்கலை மரபே (603)

மூலப்புள்ளியை ஒட்டியே மூலம், கோலம், காலவிரைவு இயல் (சிறிய அளவுக் கூறுகள்) ஞாலநெறி, விண்ணெறி - ஆகிய இவற்றையும் பஞ்சபதம், அவற்றுள் இன்னது அமைக்கவேண்டும் எனும் உணர்வு — இவற்றையும் எண்நிலைக்கு ஏற்றவகையில் ஆராய வேண்டும்.

The Primal source, Form, fast cyclic movements of Time (small units), movement of earth and space, formation of five belts and ascertaining of the proper allocation - all these should be analysed in accordance with the eightfold order of manifestation.

தொன்மை முதுகலை எண்ணியல் மரபாய்
பன்மை ஒருமை பெருநெறி ஓர்ந்தே
எண்மை நுண்மை இயல்புற் றாய்ந்தே
திண்மை இயற்கலை சீர்நிலைத் திறனாய்
மொழியும் எண்ணும் முன்னுவ நோக்கி
மொழிக்கலைத் திறநிலை எண்ணிய மூலம்
எண்ணிய லளவிய லெழுத்திய லாய்ந்தே
எண்கலை நிலைத்திறன் எண்ணெண் நிலையியல்
ஐந்தெழுத் தியல்நிலை ஆக்க நுட்பமும்

ஐந்தைந் தியல்நெறி நோக்க நுணுக்கமும்
நுண்ணிதின் நோக்கிப் பண்டுறும் எண்ணியல்
எண்ணியல் எட்டால் எண்ணே நிலையாய்
உண்மை உணர்ந்தே உறுபயன் உரைத்தல்
எண்ணியல் கலைதெரி இயல்நெறி மரபே (604)

தொன்மையான எண்-நிலை மரபுப்படி பன்மை-ஒருமை; எண்மை-நுண்மை; திண்மை-சீர்நிலை; மொழி, எண் — ஆகியவற்றை அறியவேண்டும். எண்ணியல், அளவியல், எழுத்தியல், எட்டுவகை நிலை, 64-இயல், ஐந்தெழுத்து ஆக்கம், 25-நெறி, — இவை எட்டின் அடிப்படையில் பல்வகையாகக் கணிக்கப்பட்டு உரைக்கப்பட வேண்டும்.

Based on the age-old traditional way centered on the octo-pattern, one should perceive the pairing stages such as diversity-unity; eightfold state-singularity; sturdiness-fragile, and language and number. The science of number, measure, letter, eightfold stage, 64 squares, casual force of five letters, nature of 25 aspects — all these should be multifariously ascertained based on the science of octo-pattern and their effects should be expounded.

முக்கூ றைந்தியல் நாற்புறத் தியலாய்
முக்கூ றியல்நெறி மும்மூன் றாக்கம்
எட்டின் பிறழ்வால் மும்மூன் றியல்நெறி
விட்டுறும் நெறிநிலை எண்கலை நுட்பம்
எண்கலை வகுக்கும் எண்ணொண் ணியலே
திண்ணெழுத் தியலெழுத் தாுறுசீ ரெழுத்தும்
நண்ணும் வல்லின மெல்லின மிடையினம்
எண்ணும் ஐந்தெழுத் தியல்பிரி வுற்றே
ஐயுயிர் பிரிப்பே அகலப் பிரிப்பே
மெய்யுயிர் நோக்கம் மிகுமொலி யாக்கம்
கண்டுண ருண்மை கருத்துற நோக்கி
எண்ணும் எழுத்தும் அறுபான் நான்கே (605)

முக்கூற்று வெளிப்பாடே, ஐந்தியல் வாய்ந்த நாற்புறத்து இயலாகிறது; நவநிலைப்பட்ட ஆக்கமாகிறது. எட்டின் பிறழ்வே நவநெறி. எண்கலை நுட்பமே விட்டு விட்டு அமையும் நெறியாகிறது. 64-இயலே பல்வகை எழுத்துக்களாக மாற்றம் கொள்கிறது. 64 இயலே எண்ணும் எழுத்தும்.

It is the three-pronged emerging process that assumes a four-sided form associated with five a features. and consequently effected as ninefold state. The order of nine is nothing but the modification of eight. The subtlety of octo-pattern sets the leaping process in operation. Only the technique of 64 squares is responsible for the emergence of letters, grouped and classified in different ways. Actually, numbers and letters are nothing but the modified form of 64 squared mandala.

அறுபான் நான்கே மொழிமுதல் மூலம்
அறுபான் நான்கே எண்கலை யாக்கம் (606)

மொழிமுதல் மூலமாகவும் எண்கலை ஆக்கமாகவும் விளங்குவது அறுபான் நான்கே. (64 இயலே).

Only the sixty-four squared mandala shines forth as the basic source of Primal Letters (OM) and of the creative aspects of octo-process.

உறுமுறை நுட்பம் உணர்கலைத் திட்பம்
பெறுமுறை அறிந்தே பெட்பின் நோக்குபு
தொன்மொழி ஐயொலி தீந்தமி ழாகி
நன்மொழி ஐயிசை நற்றமி ழாகி
இன்மொழி ஐயியல் இன்றமி ழாகி
தென்மொழி ஐங்கலைச் செந்தமி ழாகி
மென்மொழி ஐந்தியல் தென்றமி ழாகி
ஐயைந் தைந்தா யைந்தமி ழாகி
ஐந்நிலை ஐந்நெறி நுட்பமும் ஆயல்
எண்ணிலைக் கலையென் றியல்நிலை யோர்ந்தோர்
நுண்ணிதி னாய்ந்து நுட்ப முணர்ந்தோர்
அறுபான் நான்கின் பெறுமுறைத் திறத்தால்
உறுமுறை இயல்மொழி எண்ணியல் நோக்கிப்
பன்மொழி படைக்கும் மெய்த்திறத் தெண்ணியல்
தொன்மை நோக்கி ஆய்தல்மா நெறியே (607)

ஒலிவகைகள் முறையாக வெளிப்படும் நுட்பத்தை உணர்க. ஒலிவகைகளே மொழி தொடர்பான ஐந்து ஐந்து பகுப்புகளாக ஆகிறது. இப்பகுப்புகளின் ஆய்வும் எண் நிலைக் கலை தொடர்பானதே. 64— இயல் திறத்தால் மொழி இயலையும் எண்

இயலையும் உணர்வோர், பன்மொழி படைக்கும் மெய்த்திறம் உணர்வர்.

One should realise the subtle process of the emergence of varieties of sound energy. Only these varieties modify themselves as the pentadic classifications related to language. Even the analysis of these varieties is related to the octo-pattern. Those who understand the nature of language and number through the technique of 64 squares would be able to gain the efficacy of creating manifold language systems.

மாநெறி ஒன்றே எண்ணியல் மூலம் (608)

எண் - இயலின் மூலமாகத் திகழ்வது, வாஸ்து மாநெறியே.

Only the technique of Vastu shines forth as the basic source for the operative mechanism of number.

மாநெறி தருங்கலை மொழிக்கலை மூலம் (609)

வாஸ்து நெறிப்பட்ட கலையே மொழிக்கலைக்குரிய மூல அமைப்பாக விளங்குகிறது.

Only the creative faculty effected by the technique of Vastu shines forth as the basic structural source for the science of language.

மாநெறி இயல்நிலை சிற்றவை ஆக்கம் (610)

வாஸ்து நெறியின் இயல்பான மூலநிலையை உள்ளடக்கியதே சிற்றவையின் ஆக்கநிலை.

The manifesting power of microbode contains in itself the basic structural pattern inherently related to the technique of vastu.

மாநெறி நுட்பம் மயலறத் தெரிந்தோர்
மயல்நெறி நீங்கி மயனெறி ஓங்கி
மயன்கலை ஆயும் மதியுணர் வுறுவரே (611)

இந்த மாநெறி நுட்பத்தை நன்கு உணர்ந்தவர்கள், மயக்க நெறியினின்று நீங்கி, மயன்நெறித் தொடர்பான உணர்வு

மிகப்பெற்று, மயன் கலையை ஆராயவல்ல அறிவுத் திறம் பெறுவர்.

Those who know well the basic principle of Vastu would dissociate themselves from the deluding ways and become endowed with abundant consciousness related to Mayonic order and could gain the intellectual power of analysing the Mayonic art.

அகத்தியல் அகத்திணை மெய்ந்நெறி ஆய்ந்தே
அகத்துறும் மெய்யுண ரைம்பொரு ளுண்மை
மிகுந்துறும் நிலைக்கலை நெறிமுறை யோர்ந்தே
அகவெளி யுறுமொளி ஒலியியல் தெரிந்தே
விண்கலை நுட்பம் எண்கலை யியற்கலை
கண்ணுற் றோர்ந்தே கருத்துறத் தேர்ந்தே
எழுத்துறும் ஒலியியல் ஒளியியல் ஆற்றல்
பழுத்துறும் நெறிதரும் நிறைமொழி மறையொலி
ஓசை ஒலிக்கலை ஓங்குற வோங்கி
மாசறத் தெரிக்கும் மறையொலி நிறைமொழி
ஐந்தெழுத் தியல்நெறி ஐந்நெறித் திறனால்
முந்துறும் செந்தமிழ் மொழிஒலித் திறனே (612)

நம் உள்ளத்துள் நிகழும் ஒழுங்கு முறைக்குட்பட்ட நிகழ்ச்சிகளைக் கருத்தூன்றி உணர்ந்து, ஐம்பொருள் உண்மையை உணர்தலே அனைத்திற்கும் அடிப்படை. அகவொளித் தொடர்பான ஒளி, ஒலி, விண்நெறி, எண்நெறி, நிறைமொழி, மறைமொழி முதலான பலவற்றையும் ஆழ்ந்துணர்வதால் ஐந்தெழுத்து ஒலிகளின் ஆற்றலையும் ஐந்நெறித் திறத்தையும் அறியலாம்.

The basic for all the creative activities is the realisation of the truth about the fivefold substance, being well oriented by meticulous observations on the happenings that take place in one's own inner space. Only through the exact cognition of varied factors such as light, sound, space design, octo-process, all-pervading sound, latent sound etc., all related to inner space, one could know the efficacy of the sound of five letters and that of fivefold process.

அறுபான் நான்கின் அகத்துணர் மெய்க்கலை
உறுமுறை எழுத்திய லொளியியற் றிறனிலை
எழுத்துறும் ஒலியே இயல்நிலை நெறிமுறை
முழுமை நிறையொலி இயவுள் ளுணர்வாய்
உட்கலைப் பெருவெளி உயர்ந்துமேல் நோக்கி
எட்கலை நிறைமுறை எண்ணுற வாய்ந்து
கருவெளி நுட்பம் கருத்துற நோக்கிப்
பெருவெளிச் சிற்றலை பெட்புற் றாய்ந்தே
உண்மை ஐங்குறில் ஒளிபெறக் கண்டே
எண்ணத் துணர்வா லெழுத்தெலாம் ஆய்ந்தே
உயிரீ றாறாய் உவப்புறக் கண்டே
செயிரறத் திருநெறி எழுத்தொலி நுட்பம்
முயற்சியின் நிறைஒலி முன்னுவ முன்னி
அயரா துழைப்பின் அகவெளி யுள்ஒளி
அகவின் ஒளிதரும் ஆற்றல் கூர்ந்து
மிகுகலை நுட்பம் மேவுறத் தெரிந்தே
ஒளிஒலி யியற்கலை ஓங்குறும் உணர்வால்
வெளிமொழி ஓம்கலை யியல்நெறி விளக்கி
மொழிக்கலை நுணுக்கம் முயன்றினி தாய்ந்தே
மொழிமுதற் பொருளாம் எண்ணிலை தெரிந்தே
அறுபான் நான்கியல் எண்ணும் எழுத்தும்
உறுவகைத் திறமென உய்ந்துணர் மொழியே (613)

அறுபத்து நான்கு சதுரங்களில் அடங்கியுள்ள நிறையொலியும் நிறையொளியும் தெய்வநிலை தொடர்பான உணர்வுதரும். உட்பெருவெளி, எண் முறை, கருவெளி, பெருவெளிச் சிற்றலை, ஐங்குறில் ஒளி, 12 உயிர் ஒலி நுட்பம், — இவற்றை அறிந்து அகத்துணர்வாற்றல் மிகப்பெற வேண்டும். ஓம்-நுணுக்கம், மொழிக்கலை நுணுக்கம், மொழிமுதற்பொருளின் எண்வகை நிலை — இவற்றை நன்கு அறிந்தால் 64 இயலே எண்ணும் எழுத்துமாகப் பொருந்துகிறது என உணரலாம்.

It is the potency of all pervading sound and light contained within the range of 64 squares that effects divine consciousness. The inner space, octo-process, foetus-space, microbode of expansive outer space luminosity of five short letters, subtle aspects of 12 vowels - having known all these, one should strengthen the power of inner consciousness. If the subtlety of OM, subtlety of language

and the eight stages of Primal Letter are clearly known by one, he could understand that only the inherent potency of 64 squares assumes the forms of number and language.

காலமும் பொருளும் கருத்துற நோக்கிக்
காலமும் இடமுங் கணக்கிய லாற்றெரி
காலமும் உணர்வும் கணக்கிட் டுணர்ந்தே
காலங் காண்ப தியல்நெறி மரபே (614)

பெரும் காலம், இடம், கணக்கியலால் கணிக்கப்படும் காலம், உணர்வு — இவற்றின் அடிப்படையில் காலத்தின் ஆற்றலை உணர வேண்டும். இதுவே மரபு.

One should know the inherent efficacy of Time (unlimited) based on the nature of undivided Time, place, measurable Time (limited), and consciousness. This is the traditional way.

இயல்நெறி ஐந்தியல் ஐந்நெறி செந்நெறி
இயற்கை நெறிமுறை எழுகதிர் வண்ணம்
ஒளிநிலை நோக்கால் ஒலியுற நோக்கி
எளிமை நிலையுறும் கலைஎழில் ஓவியம்
புனைநிலை ஓவியம் புனையா ஓவியம்
வினையியல் நிலைதெரி வகையெழில் ஓவியம்
சித்திரக் குறியின் சீர்நிலை தெரிக்கும்
மெய்த்திறக் கலைவனப் பெழிலுறும் ஓவியம்
வடிவு காண்டலுங் குடியா யிலங்கும்
அடிமுடி இடைநிலை அழகுறும் வடிவம்
வளைவியல் தெரிநிலைக் கலைநிலை ஓவியம்
இளமை வளமை எழிலுறும் வீரம்
உளத்துணர் குறிப்புறும் முகநிலைத் தோற்றம்
வளவிழி நோக்கும் புருவனன் னுதலும்
வீரக் கழற்கால் வெற்றித் திண்தோள்
ஈரத் தியலுறும் பெருவரை யகலம்
ஐவிரல் கைவிரல் ஐவிர லடியிணை
ஐவிரல் இலங்கும் இருநிலைப் பேரியல்
செவ்வாய் கருங்கண் சீரிய லுடலியல்
ஒவ்வும் முறுவல் உருவுருத் தோற்றம்
ஓவிய நூல்தெரி நிலையிய லாய்ந்து
ஓவியத் தியலுறும் ஒள்ளொளி கூர்ந்து

:

ஓவியம் உயர்நிலை உயிர்க்கலைத் தோற்றம்
ஓவியங் காட்டும் உயிரொளி ஆய்தல்
ஓவிய நல்லியல் உரைபெறு நெறியே (615)

ஏழ்வகை வண்ண ஒளியால் ஒலிநிலையையும் காணவேண்டும். புனையா ஓவியம் முதலான ஓவிய வகைகளையும், முழுமை வடிவம், இளமை, வளமை, வீரம் முதலானவற்றைப் புலப்படுத்தும் முகத்தோற்றம், விழி, புருவம், தோள் முதலான பொலிவார்ந்த உறுப்புகளுடன் கூடிய உருவ அமைப்பு — இவற்றையும் ஓவியநூல் வழியே உணர்க. ஓவியம், உயிர்க்கலைத் தோற்றமே. எனவே ஓவியம் காட்டும் உயிரொளியை ஆய்க.

Through the luminosity of colourful rays, one should know, even the presence of sound. He should analyse the features of varied drawings. Through the study of scripture dealing with drawings, he should understand the charming features of a complete form/image, facial expression indicating youthfulness, prettiness, valour, etc, and the structured form associated with essential parts/limbs such as eyes, eye-brows, shoulders etc. Drawing is actually the exact appearance of ensouled form. Therefore, one should analyse the animating energy as expressed by the drawing.

ஓவம் ஓவியல் ஓவியம் ஓய்கலை
ஓவியத் தெழில்நிலை உணர்வுறுந் திறனாய்
ஓமெழுத் தொளியும் ஓமெழுத் தொலியும்
ஓமெழுத் தாருவும் எழிலுறும் வடிவும்
ஓமுறக் கண்டே ஓங்குற நோக்குபு
ஓமியல் ஓமியம் ஒருபொருள் நிலையாய்
ஓய்கலை நெறிமுதற் பொருளென நிறைந்தே
ஓவிய மாக்கலை ஒளிமுதற் பெருங்கலை
ஓவிய வண்ணம் எழுநிலை வண்ணம்
எழுநிலை வண்ணம் எழுகதிர் நிலையுறும்
எழும்ஒளி ஏர்நிலைப் பெருங்கலை வண்ணம்
செங்கதிர்ச் செவ்வொளி செவ்விச் சீர்நிலை
பொங்கொளி நோக்கிப் புகுமொளி ஆய்ந்தே
ஒளிஒளி மூலம் உயிரொளி நோக்கி
வெளிஒலிக் கோலம் மேவுறும் மெய்யொளி

கண்ட கோலம் கருத்தி லிருத்திப்
பண்ணும் நெறிமுறைப் பெருங்கலை வண்ணம்
இயல்நெறி மெய்க்கலை எழுதரும் மெய்க்கலை
மயலறும் மெய்க்கலை ஓவிய மெய்நெறி
உள்ளுற வோர்ந்தே உணர்வின் ஆய்ந்தே
ஓவியத் தொழிலை ஒளிபெற வரைந்தே
ஓவிய உயிரொளி இயல்புறத் தோன்றினும்
மெய்க்கலை நுட்பம் மெய்யுணர் வுற்று
மெய்புறத் தெளிதல் ஓவிய இயலே (616)

ஓம்-கலையே ஓ-இயல்; ஓவியம். ஓம் எழுத்தின் ஒளி, ஒலி, நிறம், வடிவு — இவற்றை உணரவைப்பது ஓமியம். ஓவிய ஒளியால் வண்ண வகைகளையும் ஒளிவகைகளையும் நன்கு கண்டு, பொங்கும் ஒளி, புகும் ஒளி என்னும் இரண்டையும் ஆயவேண்டும். ஓவிய நெறியே ஒளிக்கோலத்தைக் காட்டி மெய்ந்நெறியைக் காட்டுவது. ஓவியத்தை உயிரொளி அமையுமாறு வரைக.

The inherent characteristic of Drawing is actually the radiant energy of OM. The specific Drawing (OMIYAM) is one which reveals all the essential features of OM. Having perceived the significant varieties of colours and light as expressed by Drawing, one should analyse the inherent light and the incident light of it. The technique of Drawing is capable of revealing the nature of eternal order through luminous form. The Drawing should be effected so as to embody the real life-light.

ஓவியக் கலைநெறி யுள்ளுற் றோர்ந்தே
ஓவிய நிலைநெறி அசையா நெறியாய்
ஓவியம் போன்றே அமர்ந்துறும் வரைவால்
ஓவியம் தீட்டும் நெறிக்கலை ஆக்கம்
கண்நெறி நோக்கிக் கைநெறி நோக்கி
விண்நெறி இயன்று மண்நெறி முயன்று
இயல்நெறி ஓவிய மெய்க்கலை நெறியே (617)

ஓவியக் கலை நெறியானது, ஓவியம் போன்றே அசையாமல் அமர்ந்து வரையும் வரைவு நெறிக்கலையின் ஆக்கம். இது கண்நெறி, கைநெறி, விண்நெறி, மண்நெறி ஆகியவைகளால் முழுமைபெறுவது.

Keeping in total identity with the proposed form and being in a motionless state like a drawing one should portray that form according to the codified order. This is the exact technique of Drawing. This gets completeness and perfection through various expressions of eyes, hands, lines identified with space and earth and so forth.

எண்கலை எண்திறன் எண்ணிலை எண்ணியல்
எண்முறை வகுத்தியல் நெறிமுறை யோர்ந்தே
எட்டிய லைந்துறும் ஐந்தியல் நெறிக்கலை
எட்டுறும் நாற்புறத் தியல்நிலை வெளிநிலை
கலைநிலை கருத்துறக் கருதுறும் எண்ணிலை
கலைத்திறன் உண்மை எண்மையுங் காண்டுழி
எட்டும் ஏழும் ஐந்துமூன் றொன்றும்
எட்டுறும் நிலைக்கலை நெறிமுறை ஓர்ந்தே
எட்டினெட் டெட்டென திட்ப மாக்கலை
சுட்டுறும் எண்ணியல் ஐந்து நுட்பமும்
எண்ணே எண்நிலை எண்நெறி நுணுக்கம்
எண்நிலை ஐந்தென் றியைபுற் றோர்ந்தே
எண்ணென் ணியலால் மொழிநிலைக் கலைநெறி
எண்ணென் ணுணர்வால் எண்ணுறும் கணக்கியல்
ஞாலக் கணக்கியல் எட்டே யாகி
மூலங் குறிக்கும் மெய்யியல் குறிக்கும்
எட்டின் ஆற்றல் நிறைவுறும் நெறியென்
றெட்டா தியல்நெறி எட்டெட் டியலே (618)

எட்டு எட்டாக அமைந்துள்ள அமைப்பு முறைகள், நெறிகள், எட்டின் தன்மை கொண்ட நாற்புறத்து இயல், எண்ணப்படும் நிலை - முதலானவற்றை ஓர்ந்து, எண் வகைகளாகப் பெருகும் 64 இயல், மொழிநிலை, கணக்கியல் — இவற்றை உணர வேண்டும். ஞாலக் கணக்கியல் எட்டே. மூலம் குறிக்கும் எட்டின் ஆற்றலே நிறைவு தரும் நெறி.

Having studied the constructional features which are invariably in eightfold pattern, their process, four-sided form consisting of the qualities of octo-pattern, the state of being reckoned, etc., one should understand the technique of 64 squares, which amplify in eight ways, language system, mathematical system and so forth. Even

the mathematical order pertaining to the universe is eightfold. The functional efficacy of octo-process, indicative of the Basic structure, is indeed the one which bestows completeness and perfection.

அருங்கலை யெண்ணியல் பெருங்கலை நுட்பம்
வருங்கலை மூலம் அறுகலை யாக்கம்
மூலமும் பொருளும் முறைமையிற் றெரித்தே
காலமும் இடமும் நிலையுறக் காண்டலும்
ஐந்தியல் நெறியால் ஐந்நெறிப் பொருளும்
முந்துறுங் கலைத்திறன் முந்நெறி நோக்கமும்
சித்திரம் ஓவியம் சிற்ப மாக்கலை
மெய்த்திறப் பொருள்தெரிந் தமிழ்க்கலை யோர்ந்தே
ஐந்தியல் நெறியால் எண்ணெண் கலைத்திறன்
ஐந்தெழுத் தியலே நெறிமுறை மூலம்
எட்டியல் நிலைக்கலை இயைபுறத் தெரிந்தே
முட்டறும் நிலைமொழி ஐந்தெழுத் தியலால்
செறிவுறச் செறித்தே நிலையியல் நோக்குபு
குறியுறும் ஐந்நிலை மெய்க்குறி தேர்ந்தே
அஇ உஎ ஒநிலை ஐந்தும்
அம்முறை இயலால் நடுவண் ஒநிலை
நோக்குபு நோக்கி நுணுக்குறும் நுணுக்கம்
ஆக்குறும் இயற்கலை நெறிமுறைப் பொருளாய்
ஐங்குறில் எழுத்தின் பொங்குறுந் திறனொலி
இங்குறும் எண்ணெண் கலைநிலை மூலம்
எண்ணுறு மூலத் தியல்நிலை யாகி
விண்ணுறும் ஒளிக்கலை வெளிமொழித் தமிழாய்
நண்ணுறும் அறுபான் நான்கிறுங் கலையாய்
எண்ணுறும் நிலைக்கலை யீதெனத் தேர்ந்தே
எண்மொழி வருமொழி இன்றமி ழென்றே
எண்மொழி மூலத் தெழுதமி ழாய்ந்தே
ஒண்டமி ழொளிநிலை ஒலிநிலைக் கலையும்
தண்டமி ழியல்தெரித் தாளக் கலையும்
கண்டுண ராற்றல் கேட்டுணர் தெளிவும்
கொண்டுணர் குறிப்புங் குறிப்பின் நோக்கி
நிலைபெற் றுணர்ந்தே நீளு நினைந்து
கலையுறு முணர்வால் கருத்துறும் மதியால்
உயிரீ றாறின் ஒண்மை தெரிந்தே
செயிரறத் தெரிக்கும் ஏழ்நெறி யோர்ந்து

ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்
ஆநெறி யாற்றல் தாநெறித் தேற்றம்
மாநெறிக் கலையின் மெய்ந்நிலை யோர்ந்தே
பாநெறிக் யாற்றலுங் சொற்பொருள் தேற்றமும்
ஓங்குற வோங்கி உணர்வுறு முளத்தால்
ஓம்மொழி முதலென மெய்ப்பொருள் தேர்ந்தே
தேமொழித் தெளிதிறன் திருநிலை யோர்ந்தே
மொழியியற் கலையின் முன்னுறும் நெறிநிலை
மொழிக்கலை இயலாய் முன்னுவ தேர்ந்தே
ஓம்மொழி யோங்கலை யோம்நெறி யோம்மறை
ஓம்முதற் பொருளறி ஒளிநிலைத் திறனாய்
மொழிமுதற் கூறாய் ஓம்முதற் கண்டே
மொழியிய லாயுறும் முறைநெறி யியலே (619)

மூலநிலையையும் பொருளின் தன்மையையும் முறைப்படி அறிந்து காலத்தையும் இடத்தையும் நல்வகையில் காண வேண்டும். பொருளின் ஐந்நெறி, 64 கலைத்திறன், ஐந்தெழுத்து (அ, இ, உ, எ, ஒ) அமைவு, நடுவே 'ஒ' அமைய, மற்றைய நான்கெழுத்துக்களும் நான்கு திசைகளில் அமைய விளங்கும் நாற்புறம். இவற்றில் பொருந்தும் ஒலி ஆற்றல், எண்வகையாகப் பொருந்தும் மூலத்து இயல், தமிழ் ஒலி ஆற்றல், தாளக்கலை, 12 உயிரெழுத்துகளின் ஒளி ஆற்றல் — ஆகிய இவற்றையும், சொற்பொருள், பா அமைப்பு, ஓம்மொழி ஆற்றல் ஆகியவற்றையும் முறைப்படி உணர வேண்டும். இவை மொழிஇயல் முறைக்கு உரியவையே.

Having systematically known the nature of Primal state (Brahma Sthana) and that of the material, one should identify proper time and place in a perfect way. The fivefold process of the material, formation of 64 squares, method of identifying the five short letters with the four-sided mandala, the sound-potency of that four-sided frame, the nature of Primal Substance which is present there in eight ways, potency of creative sound, musical beats, light energy of 12 vowels, word and its content, composition of verse according to metre, potency of OM-letter- all these should be systematically known. All these belong to the science of language.

காலப் பொழுதியல் கணிப்புறக் கணித்தே
மூலப் பொருள்நிலை முன்னுவ தோர்ந்தே
கோலக் குறிப்பின் நிலைநெறி நாடிச்
சீலச் செந்நெறிச் செய்முறைத் திறனால்
ஞாலந் தெரிந்து நண்ணுவ தோர்ந்து
கோலக் கூர்நெறிக் குறிப்பி னுணர்ந்து
காலக் கூர்எண் கடிநிலை யாய்ந்து
காலங் காட்டும் பொழுதியல் தேர்ந்து
அணுவுள் அணுநிலை யருகுற் றாய்ந்து
கணுக்குள் இயல்தெரிக் கால நுணுக்கமும்
தேர்த்துகட் பொழுதும் சீர்நிலை யாக்கமும்
நேர்நிலைப் பொழுதியல் இம்மி நுணுக்கமும்
முதற்பொரு ளாய்ந்து தலைப்பொருள் நோக்கி
முதற்பொரு ளியல்நிலை முறைமையிற் றேர்ந்தே
எட்டியற் கூர்நிலைக் கால மாநிலை
எட்டியல் நேர்நிலைக் காலக் கூர்நெறி
எட்டெட் டியலறி நிலையையு மோர்ந்தே
எட்டுறும் பொழுதின் ஏற்ற மாயியல்
கைவிரற் பொழுதெனக் கண்டுறு மாற்றலால்
ஐவிரல் நிலையறி யாற்றலு மோர்ந்தே
எள்நிலைக் காலம் அளவறி மெய்யியல்
தெள்ளறி வுற்றுச் சீர்சால் நோக்கியல்
விள்ளறி நோக்கம் விளக்கந் தேர்ந்தே
ஒள்ளுறும் ஒளிநிலை அளவைக் கணக்கியல்
தெள்ளு மாத்தமிழ் எண்ணெண் கலைத்திறன்
நெறிமுறைக் கணக்கியல் நிலைபெற வோர்ந்தே
குறிமுறை ஐந்நிலை எட்டெட் டியல்திறன்
எண்ணள வியல்நிலை மூல மாமெனக்
கொண்டுறுங் கணிப்பும் குறியுறும் நெறியே (620)

கால இயல், மூலப்பொருள் நிலை, கோலக்குறிப்பு, சீலநெறி — இவற்றால் ஞாலத்தை அறிய வேண்டும். காலத்தின் எண்வகைச் சிறப்புநிலை, அணுவுள் அணுநிலை, கணுக்குள் இருக்கும் காலநுணுக்கம், தேர்த்துகள், இம்மி முதலாக உள்ள எட்டியல் காலநிலை, எட்டியல் நேர்நிலை — இவற்றை உணர வேண்டும். கைவிரல் பொழுது, ஐவிரல் நிலை, எள்நிலைக் காலம், ஒளிநிலைக் கணக்கு, 64 இயல், குறிமுறை உடைய ஐந்நிலை — இவற்றை மூலமாகக் கொண்டு கணிப்புநெறியானது சிறக்கும்.

One should know the nature of universe through the nature of Time, nature if Primal Substance, nature of intended Form, rhythm etc. The eight specific states of time, the state of minute atom within an atom, the subtlety of time contained in a particular joint of a structure, the eightfold nature of Time comprising the minute time-measures such as chariot-dust,etc, the eight states of the central thread, — all these should be known systematically. The science of measure excells based on the smaller units of time, calculations related to the planets, 64 squares and the fivefold state with relevant indications.

காலை மாத்திரை இயல்தெரி யளவால்
கோல மாயியல் நல்லொலி யோசை
இரண்டே யளவை நெடிலியற் றன்மை
திரண்டுறும் மாத்திரை ஓசை யளவென
முரணுறா நெறிக்கலை முந்து முதற்கலை
அரணுறுந் திறனாய் ஐவகை இயல்நிலை
மெய்வகைத் திறத்தின் உண்மை யோர்ந்தே
உய்வகை உயிர்க்கலை உயிர்ப்பொருள் நாடி
உயிரெழுத் தியல்நிலை உயிர்ப்புறு மாற்றல்
உயிரொளி உடலொளி உயிர்ப்புறத் தேர்ந்தே
எழுத்தியல் மாநெறி இன்றமிழ்க் கலைநெறி
எழுத்தியல் சிற்பம் எண்ணெறி ஓர்ந்தே
வல்லின மெல்லினம் இடையின மார்ப்பொலி
தொல்லியல் கலைநெறிச் சொற்பொருள் முறைநெறித்
தொல்லெழுத் தியல்நெறி எழுத்துறு மோசை
சொல்லொலி இயலொலி சொற்கலை மூலம்
பொருளொளி முற்றும் பொருண்மைத் தெருண்மை
மருண்மை தவிர்த்தே மெல்லொலி கூட்டொலி
ஒலிமுதற் பொருளா மொளிமுத லுருவாய்
ஒலியிசைத் திறனாய் ஓம்முதல் நெறிக்கலை
நாடுவ நாடி நலமுற வாய்ந்தே
கூடுவ கூட்டி எட்டின் பிறழ்நிலை
தேடுறும் ஒன்பா னியல்நிலை யறிந்தே
நாடுறும் நற்கலை மெய்ப்பொருள் திறத்தால்
எட்டின் கலைநிலை விரிநிலை யொன்பான்
விட்டுறுங் கலைநிலை மெய்ந்நிலை யோர்ந்தே
விட்டிசை விளங்கிசை ஓங்கிசை பாங்கிசை

தெட்டுறும் உயிர்ப்பொருள் சீரொலி யாய்ந்தே
ஒலியிசை முதற்பொருள் உன்னுவ உன்னி
நலியா மாத்திரை அளவிய லாய்ந்தே
கணக்கியல் மாறாக் கலைநெறி யுற்றே
கணக்கின் அளவியல் காலமுந் தேர்ந்தே
ஒலிஒளி இயல்நிலை உள்ளுறத் தேர்ந்தே
ஒலியிசை யோசை நுணுக்க மாய்ந்தே
எழுத்தியற் சீரசை நேரசை நேரிசை
வழுத்து மாவொலி நுணுக்க மாய்ந்தே
உயிரெழுத் தியல்திறன் மெய்யெழுத் தியல்நிலை
உயிர்மெய் யாக்கம் மெய்க்கலை மூலம்
செயிரற நோக்கிச் செந்தமி ழியற்கலை
மயலறத் தெறிந்தே நுண்ணுணர் வாற்றலால்
ஒலியொளித் திறனுற நெறிமுறை யாய்தல்
ஒலிமிகும் எழுத்தியல் இயல்நெறித் திறனே (621)

காலமாத்திரையின் அளவால் கோல அமைப்பு சிறக்கும். குறில், நெடில் எழுத்துவகை, உயிர்க்கலை, உயிர்ப்பொருள், உயிர்ப்புறும் ஆற்றல், உயிரொளி, உடலொளி என்பனவற்றின் அடிப்படையில் எழுத்தியலை அறிக. இதுவே எழுத்தியற் சிற்பம், எழுத்துக்களின் ஒலிவகை, பொருள், ஓம்நெறி, எட்டின் பிறழ்நிலை, ஒன்பான் இயல், ஓசைவகை, ஒலிஒளிக் கணக்கியல் முதலானவற்றின் அடிப்படையில் உயிர்மெய்யாக்கத்தைக் காண்க. எழுத்தியல் திறம் என்பது ஒலி-ஒளித்திறத்தை உள்ளடக்கியதே.

The beautiful structure of form is effected and embellished by the time-measures. One should know the aspects of and significant features of letters based on phonemes, and on the inspiriting factors, luminous energy of soul and body. The form which reveals all the features of letter is known as the orthographic image, associated with eightfold order. He should know the varieties of sound-patterns, words and their contents, their relation to OM; also, he should know the fruitful effects of the unification of soul with the body, based on the variations and modifications assumed by manduka pada and on the nature of paramasayika pada, mathematical order related to sound and light. The letter-potency includes both light energy and sound energy.

புள்ளித் திறனறி பொருந்து மாக்கலை
புள்ளிக் கூட்டுறும் ஐந்திய லாக்கம்
தெள்ளுறுங் கலைநிலைச் சீரியற் செந்நெறி
விள்ளுறுங் கால விரைவுறுந் திறத்தால்
ஞாலத் தியலும் விண்ணின் கலையும்
மூலக் குறிப்பால் மூதறி வுற்றே
ஒளியா லறிந்து வெளிமுறை தேர்ந்து
களியுறுங் கணக்கியல் காண்பதும் நெறியே (622)

புள்ளித் திறத்தாலும் புள்ளிக் கூட்டாலும் ஐந்தியல் ஆக்கம் பெறும். அதன் தொடர்பான காலச் சுழல், ஞால இயல், விண் இயல், மூலக்குறிப்பு — இவற்றால் வெளியின் அமைப்புத் திறத்தை உணரச் செய்வதே கணக்கியல் நெறி.

Based on the efficacy of single dot and that of compound dot (to be identified at each level of creation), the fivefold process would get strengthened. The cyclic movement of time as indicated by dot nature of earth and space, the structure as indicated by the position of the central dot — based on these, the manifesting order of space should be analysed. This is the traditional approach.

அகவின் ணொளியால் அறிதரும் ஆற்றல்
அகமும் புறமும் நெறிமுறை யோர்ந்தே
அகவெளிப் புறவெளி மிகுமொளி இயலொளி
அகத்துறு முணர்வா லறிகலை மெய்த்திறன்
நாற்புறத் தியலுறு நன்னெறி நோக்கி
நாற்புறத் தியலா லைந்தியந் கலையால்
எட்டியல் நெறிமுறை எட்டெட் டியற்றிறன்
எட்டின் கலைநிலை யியன்று நோக்குபு
முட்டறுந் திறத்தால் முயன்று நோக்குபு
ஒளிநிலை யொளிக்கலை ஓங்குறும் மெய்த்திறன்
வெளிநிலை மெய்த்திறன் விண்மொழி யாற்றல்
எளிமை இனிமை இயல்புறக் கண்டே
ஒளிமொழித் தமிழென் றுரைத்தல் மரபே (623)

அகவின் ஒளியால் அகநிலை அமைப்பையும் புறநிலை அமைப்பையும் அவற்றின் ஒளித்திறத்தையும் உணர்க. நாற்புறத்து இயல், அதன் ஐந்தியல், எண்நெறிமுறை, 64 திறன்

ஆகியவற்றையும் விண்மொழி ஆற்றலையும் ஒளி-வெளித் திறத்தையும் தமிழால் உரைக்க. இது மரபு நெறி.

Though the power of inner consciousness, one should understand the structural pattern of interior and exterior built field and their light energies. The features of four sided frame, its fivefold aspect, octave order, 64 squares present in it, activising sound infused in it, luminous state of space (selected) having known all these, he should expound these principles with befitting words.

நிலமும் புலமும் நெறிமுறை நோக்கி
நிலைத்தியல் மனையியல் குறிமுறை யாய்ந்து
மனையியல் மாணியல் மெய்ப்பொருள் தேர்ந்து
நினைவுறு முணர்வால் நெறிமுறைத் தேற்றம்
மனையிய லுண்மை நிலத்தியல் வண்மை
மனைநிலத் தன்மை நிலமனை யாற்றல்
புலமுறத் தேர்ந்தே பொருள்நெறி யுணர்ந்து
வலமிடத் தாற்றல் வகையுற விளக்கி
எண்டிசை நிலைக்கலை இயல்புறத் தேர்ந்தே
கொண்டுறு மெண்குறிப் பியல்நெறி யாற்றல்
எண்டிசை நோக்கி யியல்நிலை யறிந்து
மண்டிய பார்நிலை யியல்நிலை தேர்ந்தே
விண்டுறு மியல்நெறி விளக்குமா நெறியே (624)

நிலத்தியல், புலத்தியல், மனைஇயல், குறிமுறை — இவற்றைத் தேர்ந்து மனைநிலத் தன்மை, நிலமனை ஆற்றல், வல இட ஆற்றல், எண்திசைநிலை, முதலானவற்றையும் தேர்ந்து, பார்நிலையையும் உணர்ந்து, வாஸ்து நெறியானது ஐந்திறத்தை விரித்துரைக்கும்.

The nature of ground in general, nature of select area, nature of the plot fit for construction, various factors indicative of the auspicious and the inauspicious effects, the grandeur of the intended structure, features of the square area on right and left sides, position of eight directions, number-identity- having known all these, the vastu tradition expatiates the principles of construction.

ஒளிமுதற் பொருளாய் நிலைக்கலை யாய்ந்தே
வெளிமொழி யியல்நிலை ஒலித்திற னோர்ந்தே
களிமொழி நுட்பங் கணக்கியல் தெரித்தே
வெளிஒளித் திறனிலை மெய்யிய லோர்ந்தே
நுட்பங் காண்டலும் திட்பம் பொருத்தலும்
ஒட்புறுங் கலைதெரி ஒள்ளிய நுணுக்கமே (625)

ஒளிமுதற் பொருளின் நிலைகளையும் வெளிமொழியின் ஒலித் திறத்தையும் வெளி-ஒளித் திறத்தையும் நுட்பமாகக் கண்டு, உறுதிபட உரைத்தலே ஒளி இயல் நுணுக்கமாகும்.

The Primal substance which is of the nature of resplendent luminosity, its various states, potency of the activising sound, potency of luminous space (selected)., having understood the subtleties of all these aspects, to install strength and stability in the proposed construction is the exact way of tradition, very much intent on the science of light.

ஒளியறி வுற்றே எழுத்தியல் நாடி
வெளியறி வுற்றே எண்கலை யாய்ந்து
ஒளிவெளி யறிவா லெண்ணிலை தேர்ந்தே
ஒளியுணர் மூலம் உட்கலை நுட்பம்
களிமொழி இசைநிலை ஐந்திசைத் தெரிவும்
ஒளிமொழி ஏழிசை உணர்வா லறிந்தே
ஒலியிசை நுட்பம் இசைக்கலை மெய்த்திறன்
ஒலிஒளி யலைநிலை மெய்யுறத் தேர்ந்தே
ஒளிமுதல் நிலையென் றுன்னுறுந் திறத்தால்
மெய்யியல் மெய்க்கலை நுண்ணிதி னோர்ந்தே
உய்வகை நெறிக்கலை உணர்தல் வழக்கே (626)

எழுத்தியல், எண்கலை, எண்வகை நிலை, உட்கலை, களிமொழியின் ஐந்திசை, ஒளிமொழியின் ஏழிசை, ஒலி இசை நுட்பம், ஒலி-ஒளி அலைகளின் திறன், ஒளிமுதல் நிலை — ஆகியவற்றை ஓர்ந்து, உய்வகை நெறியை உணர்வதே வாஸ்து மரபு.

The inherent potency of letters eightfold emergence eightfold state, inner expressions, fivefold melody pertaining to sound, that emerges from blissful consciousness

sevenfold melody pertaining to luminous word, subtleties of music, efficacy of sound and light waves, the emerging phase of light-energy — having analysed all these. One should understand the process of gradual and successive construction.

எண்டிசை எண்கூ றியல்புற வறிந்தே
எண்முறை எண்ணிலை நெறியுறத் தேர்ந்தே
விண்பார் இடநிலை விளங்குற வறிந்தே
நுண்ணுறும் நுணுக்கம் நுவலறத் தெரித்தே
எட்டி னியல்தெரி நிலைதெரி மூலம்
எட்டுறும் மாக்கலை குறிமுறைத் திறனாய்
எண்ணெண் கலைத்திறன் மேவுறும் ஆற்றல்
விண்ணெறி விளங்கி எண்ணெறி துலங்கி
நுண்ணறி வாற்றல் நுவலுபு நுவன்று
எண்ணிய லாய்நிலை எண்முறை மரபே (627)

எண்திசை, எண்கூறு, எண்நிலை, விண், நிலப்பரப்பு, எட்டின் மூலநிலை, 64-இன் ஆற்றல், விண்-நெறி, எண்-நெறி — இவற்றின் அடிப்படையின் எண் இயலை ஆய்வதே வாஸ்து மரபு.

Directions, spatial divisions, processes - all of which are eightfold, select space, select ground, area of the ground, the emerging point of eightfold pattern, dynamics of 64 squares, process associated with each square, number pattern-based on these the science of number should be understood. This is the approach maintained by the vastu tradition.

குறுக்கல் நீட்டல் குறிமுறை கிளத்தல்
குறுமை நெடுமைக் கோட்டுருக் குறிநிலை
வரிவியல் வடிவியல் வகையுறத் தேர்ந்தே
தெரிவிய லாய்நிலை மாநெறிக் கலையே (628)

வாஸ்து நெறியானது, குறுக்குதல், நீட்டுதல், குறிமுறை, கோட்டுரு, வரி-இயல், வடிவியல் — இவற்றை வகைப்பட அறிந்து உணர்த்தவல்லது.

Having elaborately known the technique of shortening lengthening, marking the points, making curved from and

sketch form and the features of structures the vastu tradition is capable of imparting the scientific principles behind them.

உள்ளத் துணரும் உருவிய லாய்ந்தே
விள்ளு மாமொழி நிலையறி வுற்றே
தெள்ளும் வடிவியல் சீர்நிலைத் திறத்தால்
ஒள்ளிய மாக்கலை உரைத்தலும் நெறியே (629)

வாஸ்து நெறிக்கலையானது, உள்ளத்துணர்வால் உருவியலை ஆய்ந்து அதனை மொழி நிலையாலும் வடிவ இயலாலும் அமைப்புத்திறத்தாலும் உணர்த்தும்.

Having analysed the features of constructs mainly based on inner consciousness, the vastu tradition imports the scientific and technical principles behind the constructions, through the science of language-pattern and the fully evolved forms.

ஈறா றாயிரு மியல்பி னறிந்து
மாறாச் செந்நெறி மெய்க்கலை யோர்ந்து
மூவர் றியல்நிலை மெல்லிய லாக்கும்
மூவாக் கலைநிலை முகிழ்பொரு ளாய்ந்தே
உயர்க்கலை மெய்யியல் உயிரியற் றிறனறி
உயிர்ப்பொரு ளாய்தல் மொழிநிலைக் கலையே (630)

12 இயல்நிலை, செந்நெறி, 18 இயல்நிலை, அழியாத படைப்புக்குரிய திறத்தால் வெளிப்படும் பொருள், உயிர்க்கலை, மெய்க்கலை முதலானவற்றை ஆய்ந்து உரைப்பது மொழி நிலைக்கலை.

The science of creative language is of the nature of expounding the characteristics of 12 aspects (vowels) eternality effected by the central thread, 18 aspects (consonants) and the characteristics of embodying things and the embodied things.

ஒளியியல் மூலம் ஓங்குறும் உணர்வால்
வெளியியற் கலைதெரி நெறியியல் நோக்கிக்
கலைத்திற மாண்பால் எண்ணெண் நிலையியல்
நிலைத்திறம் நெறிமறை ஒருங்குறுந் தன்மை

ஓவியஞ் சிற்பம் ஒண்டலி ழேழிசை
மேவுறும் இயல்நிலை அறுபான் நான்கியல்
மூலத் திறனாய் முன்னி யோர்ந்தே
காலமும் இடமும் கணிப்புறக் கணித்தே
ஒன்றுறும் ஒன்றில் ஒன்றிரண் டெனுநிலை
ஒன்றுற் றியலாய் ஓங்குறுந் திறனே (631)

வெளியின் தன்மையையும் படைப்புநெறியையும் உணர்வால் கண்டு, 64 இயல், இது ஒவ்வொரு அமைப்பிலும் பொருந்தும் முறை, ஓவியம், சிற்பம், இசை, காலம், இடம் — இவற்றை முறைப்படி கணித்து இவை ஒன்றுக்கு ஒன்று, முதல் கால் காலாக ஓங்கி ஒன்றுக்கு இரண்டு என ஓங்கும் திறத்தை உணர்க.

Through the power of inner consciousness, one should know the nature of space, and its creative order and systematically ascertain the dynamics of 64 squares, its appropriate identity with each structure, drawing, sculpture, music, time, place etc., Having know these he should observe that thee correspondence between them gets established in five successive increase as 1 : 1 ; 1 : 1 ¼ .... upon 1 : 2

மூலப் புள்ளிச் சுழலும் நுண்பொருள்
கால விரைவின் கணக்கிய லறிந்தே
இம்மிப் பொழுதும் இயல்நிலை யோர்ந்து
செம்மைப் பொழுதியற் கால மறிந்து
ஒளியா லுணரும் ஒண்கலை நுட்பம்
வெளியால் நோக்கும் எண்கலைத் திட்பம்
ஓர்ந்துணர் நெறியால் எண்ணெழுத் தியற்கலை
நேர்ந்துறும் நிலைக்கதிர்க் கலைக்கதி ரொளியியல்
ஒளிநிலை ஒளித்திறன் ஒளியிய லாய்ந்தே
ஒளியுள் ளொளியாய் ஓங்குறுந் திறனாய்
ஒளிநிலை மூலத் தெழுதரும் கலையாய்
வெளிஒளி இயல்நிலை விளக்கம் ஆய்ந்தே
அகவெளிப் புறவெளி நுட்பந் தேர்ந்தே
மிகுஒளிக் கலைநிலை யாண்புறுந் திறத்தால்
ஓவியங் காண்டல் சிற்பம் படைத்தல்
மேவு நல்லிசை இசைத்திறன் காணல்
செந்தமி ழைந்தியல் முந்துறும் மரபாய்

வந்துறும் பல்கலைத் தொழில்நிலை யாயல்
தொழிற்கலை மொழியியல் தொழிலியல் எழிலியல்
விழியியல் வெளியியல் விண்ணியற் கலையென
எண்ணியற் கலையால் எழில்பெற நோக்கிக்
கண்ணுற் றொளிதருங் கதிர்நலம் ஆய்ந்தே
விண்ணுறும் ஒளிக்கதிர் நிலைநலம் தேர்ந்தே
எண்ணுறும் இசைநிலை ஓவியக் கூறொளி
ஓவிய மூலம் ஒளிதருஞ் சிற்பம்
மேவுறும் ஐந்திசை மிசையிலா நெறியால்
ஐந்தெழுத் தியலா லமைந்துறுஞ் செந்தமிழ்
ஐந்தியற் கலையாய்க் நெறிதரு மாற்றல்
அறிவியற் கலையாய்க் குறிநெறித் திறனாய்
நெறியினின் றுணர்ந்து மியல்தரு மாற்றல்
ஓதற் கெளிதாய் உணர்வொளி யாற்றல்
ஓதரும் பொருள்நிலை உணர்த்து மெய்ப்பொருள்
மெய்யியற் கலைதெரி மெய்ந்நெறி கண்டாங்
குய்வகை யுணர்ந்தே உய்த்துணர் நெறியாய்
காண்டல் செத்தமிழ்க் கலைநிலை யொளியென
ஆண்டுறும் ஒளிநிலை ஈண்டுறுங் கலைநிலை
வேண்டிய நோக்கி விரைவின் எய்தல்
ஈண்டுறுந் திறத்தால் அகவொளித் திறனால்
உயர்வின் முகிழ்க்கும் ஒளிநிலைப் பெருங்கலை
உணர்வுறும் மாத்தமிழ் ஒளிநிலை உரைக்கும் (632)

மூலப்புள்ளியில் சுழலும் நுண்பொருளால் காலவிரைவின் கணக்கு ஏற்படுகிறது. இம்மிப்பொழுது, செம்மைப்பொழுது, எண்கலை, எண்-எழுத்து இயல், ஒளிவகைகள் — இவற்றை ஆய்ந்து அகவெளி நுட்பம் புறவெளி நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் ஓவியம், சிற்பம், இசை முதலானவற்றின் ஆற்றலை உணர்க. மொழிஇயல், வெளிஇயல், விழிஇயல் முதலானவற்றால் அமைப்பின் தோற்றச் சிறப்பை உணர்க. ஒளிநிலையையும் இசைநிலையையும் உணர்ந்து, மெய்ப் பொருளின் வெளிப்பாட்டுமுறையை உணர்ந்து, மூலநிலையில் உள்ள ஒளியே, வெளிப்பட்டு விளங்கும் பொருளிலும் உள்ளது என உணர்ந்து விரும்பிய அமைப்பை உருவாக்குதலே உறுதியான செயல்முறை.

Due to the gyration of the minutest substance occurring within the central dot, there emerges the time

measure. Based on the knowledge of different time units and divisions, eightfold pattern, science of number and letter, nature of various luminous sources space and light aspects of the Primal Existence, subtleties of inner and outer space, one should ascertain the features of drawing, sculpture, music etc. He should realise the significant appearance of form through various features such as eye proportioned limbs etc. Having known the luminous and melodious aspects, the manifesting order of primal existence, and realised that the same light energy which is at the basic source, inseparably presents even in the created structure, one should bring into effect the intended structure. This is the infallible process of creative activity.

நேர்க்கோட் டியலே நிலைநெறி யுணர்த்தும் (633)

நேர்க்கோட்டு இயலானது உருவ அமைப்புக்குரிய நிலைகளையும் நெறிமுறையையும் உணர்த்தும்.

The dynamics of central thread is capable of revealing the exact stages and order of manifestation related to a structural form

தேர்க்கலை மொழியே காலமா நுட்பம்
சீர்பெற நல்குந் திறனிலை யாய்ந்து
நேர்க்கோட் டியல்நெறித் தேர்க்கலைத் திறனும்
ஒன்று நோக்கியே உணர்வுறு மாற்றல்
நன்றுறும் மூல நுட்பத் திறனறி
உணர்வாற் றிகழும் ஒருபெருங் கலைத்திறன்
உணர்வின் நோக்கித் திருவினைச் செயலால்
கோட்டின் மூலம் குறுநிலை நோக்கிக்
கோட்டியல் நெறிநிலை நேர்க்கோட் டியலாய்
அண்டமும் பிண்டமும் அமைவுறக் காட்டி
விண்ணொளி மண்திறன் வியப்புறத் தெரித்தே
நோக்குறுங் கோட்டியல் நுணுக்க மாய்ந்தே
ஆக்குறுந் தேர்க்கலை அமைப்பிய லார்ந்தே
நேர்த்தேர் நிலையியல் நெறிபெறத் தேர்ந்து
தேர்நோ ராக்கம் சீர்பெறக் குறித்தே
சீரின் நுட்பம் தேரின் திட்பம்
நேர்க்கோட் டியல்நெறி நிலையுற் றாய்ந்தே

ஐந்நிலை காண்டல் மெய்ந்நெறி கூட்டும்
ஐங்கலை யியல்தெரி மெய்ப்பொரு ளோர்ந்தே
கோட்டின் ஆக்கம் குறிக்கும் பொருளியல்
கோட்டமில் உளத்தால் குறிப்புற் றாய்ந்தே
நாட்டமு மாய்வும் நவையறத் தெரித்தே
கோட்டுருத் தேர்நிலைக் குறித்திய லாய்ந்தே
நோக்கி நோக்கி நுண்ணுணர் வாற்றெரி
ஆக்குறுங் கலைநிலை எழுத்தியற் சிற்பமே (634)

காலமா நுட்பத்தை உணர்த்துவதே தேர்க்கலை. தேர்க்கலைத் திறத்தையும் கோட்டியல் நெறியையும் உணர்ந்து அண்ட-பிண்ட இணைப்பையும் விண்நிலை-மண்நிலை இணைப்பையும் பொருத்தமுறக் காட்டித் தேர்க்கலை அமைப்பை உறுதிபடக் காட்ட வேண்டும். நேர்த்தேர்நிலை, தேர்நேர் ஆக்கம் — இரண்டையும் கண்டு, நேர்க்கோட்டுத் திறத்தால் ஐந்நிலைகளையும் காட்ட வேண்டும். கோட்டுருத் தேர்நிலையைப் பல கோணங்களால் உறுதிசெய்து உருவாக்குவதே எழுத்தியல் சிற்ப ஆற்றல்.

The construct-pattern of chariot is of the nature of revealing the subtleties of Time. One should show in an assertive way the structural form of chariot, having known the significant features of chariot-structure and the dynamics of lines and having effected the correspondence between macrocosm and microcosm and between space and earth through various parts, designs carvings and fittings. There are two aspects: 1) Constructional process of chariot, and 2) direct, cumulative and aggregate form of chariot. Having perceived these aspects, he should exhibit the fivefold stage through various parts of the chariot. Having ascertained the exact appearance of chariot-sketch from varied angles, he should construct the chariot. This is the efficacy associated with the orthographic image.

மூல மாநெறி முன்னெறித் திறனும்
கால மாவியல் கருத்துறுங் கலையும்
அறுபான் நான்கின் அமைவுறு மியலாய்
உறுமுறை யெண்ணிலை ஓங்குறுந் தெரிநிலை
புறவியல் நிகழ்நிலை உள்ளியல் தோற்றும்
புறநிலை யகநிலை ஆய்ந்துணர் மதியால்

அகத்துட் புறநிலை ஆய்ந்துணர் மதியால்
மிகுதிற னாற்றல் மெய்வலி கூடும்
அகத்துள் ளுணரும் பெருங்கலை யுணர்ந்தே
அகத்தை நோக்கி அணுநிலைப் பெருநிலை
நுணுக்குற நுணுக்கி நோக்குபு மெய்த்திறன்
கணுக்கமும் இணுக்கமும் கறையிலா நிலைநெறி
தோன்றக் கண்டே தூநெறி துலங்கி
என்றுறும் புறத்தியல் அகத்துணர் காட்டும்
அகவொளி யாற்ற லருங்கலை மாத்திறன்
அகவொளி நுட்பம் மெய்த்திறப் பொருட்கலை
அகவின் னோக்கால் புறவின் னாய்ந்தே
அகத்துணர் நெகிழ்கலை முகிழ்வொலி கூட்டின்
காண்டுறக் காண்டல் கலைதரும் நெறியாய்
ஈண்டுறும் எண்ணெண் கலைத்திறன் நெறிமுறை
இயலுறும் பான்மைக் கால விரைவியல்
மயலற நோக்கி மதியொளி யாற்றல்
பெருக்கியுஞ் சுருக்கியும் பேரறி வுற்றே
சுருக்கத் தியல்நிலைத் தொன்மை யுணர்ந்தே
புள்ளியுட் புள்ளி பொருந்த வுணர்ந்தே
புள்ளிக் கூற்றியல் மெய்க்கலைத் திறனாய்
புள்ளியு ளறுபான் நான்கியல் கண்டே
தெள்ளுறுஞ் சீர்மதிச் செறிவுறு முணர்வால்
கண்டு தெளிந்து கணக்கிய லாக்கம்
விண்டுறும் நெறியால் விளக்கம் ஆய்ந்தே
புள்ளியு ளறுபான் நான்கியல் பொருத்தி
தெள்ளுறுங் கோலம் வடிவியல் நெறிமுறை
நாற்புறத் தியல்நிலை அறுபான் நான்கும்
ஆற்றுறும் ஆற்றல் காலத் தாற்றல்
காலச் சுழலைக் கணிக்கும் ஆற்றல்
கால விரைவியல் வரைவியல் நெறியியல்
கோல நுட்பங் குறித்தறி வுளத்தால்
சீலச் செம்மை தேர்ந்தன ராகி
ஞாலமும் விண்ணும் நவையற வுணர்ந்தே
ஐயைந் தைந்திய லாக்கங் கூர்ந்தே
மெய்யுறும் புள்ளியல் அறுபான் நான்கியல்
விரிவும் விளக்கமும் நெறியுறத் தேர்ந்தே
தெரிநிலைக் கணக்கால் தெற்றெனத் தெளிந்தே
சிற்றவை மூலம் உற்றுறுங் காலந்
தெற்றுறுந் தெளிவால் சீர்மை செப்புமே (635)

முந்நெறியும் கால இயலும் பொருந்த விளங்குவது 64 இயல். புறஇயல், அகஇயல், அகத்துள் புறஇயல் — இவற்றையும், அணுநிலையின் பெருநிலையையும் கணுக்கம், இணுக்கம் ஆகியவற்றையும் உணர்ந்து, 64 சதுரங்களில் கால விரைவைக் காண வேண்டும். காலத்தின் பெருக்க நிலையையும் சுருக்க நிலையையும் காண வேண்டும். காலச் சுருக்கமே புள்ளியுட் புள்ளி, புள்ளியுள் 64 இயலும் பொருந்தும். காலச் சுழலைக் கணிக்கும் ஆற்றலே, ஆற்றல்களுள் பெரியது; இதுவே கோல நுட்பத்திற்கும் சீலத்திற்கும் காரணம். இவை அனைத்துமே சிற்றவையின் திறத்தால் அமைபவை.

The dynamics of 64 squares, is associated with threefold emergence and the working of time. Having realised the nature of exterior space, interior space and the exterior part of the interior space, the magnified position of atomic state, time factor related to the joineries and to the sub-joineries, the expert should perceive the swiftness of time present in all the 64 squares. The magnified state and the minimised state of time should be known. The most interior of the control dot is indicative of the most condensed state of time. Even within the dot, there is the presence and role of 64 squares. The greater efficacy is the power of measuring the speedy cycles of time. It is the time cycle that is responsible for the subtleties of Form and Rhythm. All these are effected by the energy of microbode.

செழுங்கதி ரியலொளி எழுநிலை யாய்ந்தே
விழுநிலை இயல்தெரி யாற்றலு மோர்ந்தே
பழுதிலா யுணர்வால் பேரறி வுற்றே
விழுப்பொருள் நிலைக்கதிர்க் கதிரொளி நோக்கி
ஒளிக்கதி ராற்றல் கலைக்கதி ரியல்திறன்
வெளியொளி நுணுக்கம் நெறியியற் கலையாய்
ஒளியின் மூலம் ஓங்குறுந் திறனிலை
ஒளியியற் பெருங்கலை நுண்கலை நுணுக்கம்
செழுங்கதிர் வண்ணம் எழுநிலைக் கதிர்நிலை
விழுமம் நோக்கி மெய்த்திறக் கணிநிலை
இயல்பி னோர்ந்து எண்ணுறத் தேர்ந்தே
மயலறு ஓவியமோ மாக்கலை நுட்பம்

கதிரொளி யாற்றல் கணக்கியல் நிலைதெரி
கதிர்நிலை இயலால் கீற்றொளி யாக்கம்
அகத்தி னுணர்ந்தே அகப்புறம் விரித்தே
மிகுநிலை காண்டல் சீரறி வாற்றல்
பேரறி வுற்றே பெருங்கலை யொளியியல்
நேரறி நுட்பம் நிலைநெறி நவிலும் (636)

சூரிய ஒளிக்கதிர் எழும்நிலை, விழும்நிலை — ஆகியவற்றையும் கதிர் வகைகளையும் நுட்பமாகக் கண்டு, இவை தொடர்பான கணக்குகளைச் செய்து, இவற்றின் அடிப்படையில் நிலைபேற்றுக்குரிய நிலையை அறிவதே அறிவாற்றல். இதனை நுட்பமான வாஸ்துநெறி விளக்கும்.

Having identified exactly the points which denote the rising and setting phases of sun and meticulously observed the position of luminaries and made relevant calculations, the expert should know the state of longevity based on these observations and calculations. The subtle science of vastu explains these principles.

நவிலு மாநெறி நிலையியல் தேர்ந்தே
நவிலல் ஓம்கலை ஓம்மொழி யறிந்தே
நுவலரு மாற்றல் நுண்ணிதிற் றேர்ந்தே
நுவல்மொழி விண்மொழி விண்கலைத் திறனாய்
எண்கலை இயலால் விண்ணளந் தறிதல்
நுண்கலைத் திறனுறும் நெறிநிலை யாய்ந்தே
ஒமுறும் நிலைக்கலை ஒளியிய லாக்கம்
ஒமுறுந் திறனாய் மூல மெய்ப்பொருள்
ஓமிய லைந்தா யொளிர்திற னுற்றே
ஓம்நெறி யியலு மாக்கமுந் தேர்ந்தே
காலப் பொருள்நிலை கணித்துறக் கணித்தே
மூலம் வலமிடம் மெய்ந்நிலை யோர்ந்தே
விரைவி னாற்றல் காலத் திறனென
விரைவுறும் நிலைக்கலை வையமும் விண்ணும்
உணர்த்திக் காட்டும் மெய்ந்நெறி முறையால்
உணர்வொளி யுணர்த்தும் ஒளிநிலைத் திறனே (637)

64 இயலின் ஒளித்திறனானது, மூலநிலை, வலம், இடம், காலம் ஆகியவற்றின் மூலம் வையத்தையும் விண்ணையும் உணர்த்தும். அதுவே ஓம் தொடர்பான அனைத்து

ஆற்றல்களையும் கால நிலையையும், பொருள் நிலையையும், நெறிமுறைகளையும் கணித்துக் காட்டுவது.

The light energy of manduka mandala is indicative of the exact identity of earth and space through the presence of Primal Source, features of the squares of right and left sides and nature of time. It is capable of revealing all the energetic aspect of OM-sound and their functional modes and the nature of select time and material.

நெடிதினி னைந்து கடிதி னுணர்ந்து
படிமிசை விண்மிசைப் பேரொளி கூர்ந்து
குடிநிலை யைந்துங் குறிப்பி னோர்ந்தே
கடிதுறுங் காலம் மெய்க்கனல் தேர்ந்தே
அகத்துணர் நாடி மூலத் தியல்நிலை
மிகுமொளி காண்டல் மெய்யிற் பொருந்தி
இயல்நிலை யாற்றல் திறனமைத் தெளிவும்
மயலற நோக்கி மதியொளித் திறனால்
கணிதமும் நுட்பச் செயல்நிலை யாற்றல்
நுணுக்கம் நோக்கி மயலறத் தெரிவோர்
உண்மை யாக்க மொளிர்தருங் கலையாய்
எண்மைப் பயன்தெரி யியல்நிலைத் திறனே (638)

நெடிய நிலைக்குரிய ஐந்துநிலைகளையும் கண்டு, பூமிப்பரப்பு, விண் இவற்றின் ஒளித்திறம் உணர்ந்து ஐந்து குடிநிலை கண்டு காலத்திற்குரிய கனல்நிலை தேர்ந்து கணித நுட்பத்தால் மூல இயலை அறிபவர்கள், பல்வகைப் பயன் பெறுவர்.

Having evidently seen the five developmental stages of taller constructions and perceived the light energy of both earth and space fields, and having ascertained the formation of five belts and the mature time fit for the relevant functions, those who understand the significant nature of Primal Source would derive all the benefits of eightfold pattern.

எண்மை நுண்மை பெருந்திற னாக்கம்
விண்மை யுணர்த்துங் கலைதெரி நிலையே
அகத்துணர் வறிந்தோர் மெய்க்கலை யோர்ந்தே

அகவெளிப் புறவெளி அகப்புற வியலாய்
கண்டுணா ராற்றல் கலைதருந் திறனறி
விண்டுணர் நிலையும் வெளியியற் றிறனும்
எண்ணிலைக் கலைநிலை மெய்ப்பொருள் திறனே (639)

எண்வகை நிலை உடைய மெய்ப்பொருளே எண்வகை ஆக்கப்பாடு உடையது. விண்ணின் தன்மையை உணர்த்துவதாகவும், அகவெளி, புறவெளி, அகப்புறவெளி ஆகியவற்றை உணர்த்துவதாகவும் மெய்ப்பொருள் விளங்கும்.

The Primal Source (as limited to the select area), which is associated with eightfold state, is indicative of the cumulative effect of eight stages, of the nature of select space and that of internal built space, left-out space and the outer belt of the built space.

ஓங்குறு முணர்வே தேங்குறுங் கலையாம்
ஐந்திய லருங்கலைப் பெருங்கலை நுட்பம்
ஐவகை யியல்தெரி நெறிமுறை யோர்ந்தே
மெய்த்திறப் பொருள்நிலை முகிழ்நிலைத் தன்மை
மெய்யுணர் திறனால் முற்றுறு முணர்வால்
மெய்க்கலை யொளிநிலை முழுநிலை யாய்ந்தே
உய்வகைக் திறனு மொளிமதி யாற்றலும்
ஆக்குறுந் திறனா லைந்திய லைந்நெறி
நோக்குறும் மூலப் பொருள்நிலை நோக்கி
மெய்த்திறங் காண்டல் எண்ணிலைக் கலைநிலை
மெய்ப்பொருள் நெறியே எண்ணெண் கலைத்திறன்
முற்றுற வுணர்ந்தே தெற்றெனத் தெளிதல்
உற்றுறு முணர்வின் நெறிதரும் ஆற்றலே (640)

மெய்ப்பொருள் ஐந்தியலாக வெளிப்படும் நிலையையும் ஒளிநிலையையும் ஆய்ந்து, அது ஐந்நெறிகளாக விரிவுபடும் முறையையும் உணர்ந்து மெய்த்திறம் காணவேண்டும். 64 கலைத்திறன் மெய்ப்பொருள் நெறியைப் புலப்படுத்துவதே.

Having known through inner consciousness the accumulated creative factors of select area, the fivefold emerging process of the Primal Source in that area assumed by the Primal source, the expert should ascertain the total effect of the construction. The technique of 64 squares reveals the emerging order of the Primal Source.

ஆற்றல் நிலைநெறி அருங்கலை யியலும்
தோற்றுந் திறனும் தேற்றமுந் தெளிவும்
மாற்றிலாக் கணக்கியல் மாநெறி யொன்றே
ஏற்றுறுந் திறனிலை எண்ணிலைக் கூற்றாய்
ஐந்தியல் நெறிக்கலை மெய்யுற விளம்பி
முந்துறுந் தொல்கலை நெறிவிளக் கும்மே (641)

வாஸ்து நெறியானது, ஆற்றலை வெளிப்படுத்தும் திறன், முழுமையான வடிவ அமைப்பு, மாறுபாடு அடையாத கணக்கியல், சிறப்பான நிலை, எண்நிலைக் கூறுகள், ஐந்தியல் நெறி — ஆகிய இவற்றை உறுதிப்படக் கூறும்.

The tradition of Vastu is of the nature of revealing the exact features of creative energy, its manifest state in the form of structure, unchangeable calculations, charming and supreme appearance, eightfold factor, fivefold order and so forth.

எண்ணெறி நுட்ப மியைபுறக் கண்டே
எண்ணின் றிறனறி மெய்க்கலை யியலும்
விண்கலை மூலம் மெய்ப்பொரு ளாய்ந்துணர்
விண்கதி ரொளியியல் மெய்யுறுந் திறனாய்
ஒளிநிலைக் கதிரியல் உணர்ந்துறு மாற்றல்
ஒளியியல் வண்ண மோங்குறும் மெய்க்கலை
ஒளியுணர் திறனா யொளிப்பொருள் மூலம்
ஒளிக்கலை யியற்கலை யொலிக்கலை யிசைக்கலை
தெளிவுற் றோர்ந்தே சீரறி வுற்றே
ஒளிமொழி யிசைக்கலை மெய்ந்நெறி நுட்பம்
தெளிவுறக் காண்டல் சீர்த்தகு நெறியாய்க்
கலைநெறி நுணுக்கம் அறுபான் நான்கியல்
நிலைநெறி யியலாய் நெறிமுறை யோர்ந்தே
மொழிநிலைக் கலைநிலை முட்டறத் தேர்ந்தே
மொழியி னியலொளி ஒலிநிலை யார்ந்தே
ஒளிஒலித் திறனிலை உணர்வா லறிந்தே
வெளிநிலைத் திறனிலை உண்மை யாயலும்
கலைமொழி மாந்தர் கருத்தறிந் தியலும்
நிலைமொழி யாற்றல் நெறிப்படக் கிளந்தே
தலைமொழி யியல்தெரித் தன்னிலை சாற்றுமே (642)

சிறப்புடை நெறி என்பது எண்-நெறி நுட்பம், விண் கலையின் மூலநிலை, மெய்ப்பொருள் தொடர்பான நுட்பங்கள்,

விண்கதிரின் திறன், ஒளி தொடர்பான ஆற்றல் வகைகள், ஒலி தொடர்பான வெளிப்பாட்டு நிலைகள் ஆகியவற்றைத் தெளிவாக உணரும் நெறியே. 64 இயல், மொழியின் ஒளிநிலையும் ஒலிநிலையும் ஆகிய இவற்றின் திறத்தை உணர்ந்து வெளியின் திறத்தை நெறிப்பட உணர்த்துவதே தலைமைச் சிறப்புவாய்ந்த மொழியின் தனித்திறம்.

The exalted course in the filed of vastu is one which enables one realise the subtlety of octo-process, the creative aspects of space (identified with Primal Substance) radiant energy of space light, energies of various luminous sources and the acoustical properties. It is the efficacy of predominant and unique language to systematically reveal the effective features of 64 squares, light and sound potency of articulated words and the emerging order of space-field.

குறிநிலை குறித்தே குறிப்பி னுணர்ந்தே
நெறிநிலை யியல்நெறி நீள நினைந்தே
அறிகலை யியல்நெறி அமைவுற் றாய்ந்தே
பொறிபுல னிலைதெரிப் பொற்புறு மியக்கம்
நிலையுறக் கண்டுழி நிலையுறு முணர்வால்
கலைநெறி நின்றே அகவின் னொளியால்
நோக்குபு நோக்கி நுணுக்குற வாய்ந்தே
ஆக்குறு மியலா லண்டம் பிண்டம்
கண்டு தெளிந்தே கலைபல வோர்ந்தே
மண்டுறு மைங்குடி மாக்கலை யாய்ந்தே
அனலும் புனலும் கால்வெளி ஞாலம்
நினைவுற் றுணர்ந்தே நெறியி னினைந்தே
ஐம்பொரு ளைங்கலை மெய்யுற நோக்கிச்
செம்பொருட் செந்நெறிச் சீர்நிலைக் கலையால்
ஐந்தியற் சிற்பம் ஐந்திசைச் சிற்பம்
முந்துறும் நிலைக்கலை நெறிமுத லோர்ந்தே
வந்துறுந் தமிழ்மர பியல்நெறி யாற்றல்
தந்த ம . க்கலை மெய்க்கலை மூலம்
செந்தமி ழியல்தெரிச் சிற்ப மாநெறி
முந்துறு மோவியம் முறைமையிற் றெரிந்தே
வந்த மாநெறி எண்ணெண் கலையே (643)

கலைநெறிப்படி நின்று, அகவின் ஒளியால் அண்ட-பிண்ட நிலைகள், ஐங்குடி நிலை, தீ, நீர், காற்று, வெளி, ஞாலம் ஆகியவற்றின் தன்மைகளை அறிந்து, வாஸ்து நெறிப்படி ஐந்தியற் சிற்பத்தையும் ஐந்திசைச் சிற்பத்தையும் ஓர்ந்து, இந்த வாஸ்து நெறியின் 64 இயல் உணர்த்தும் சிற்பநெறியையும் ஓவிய நெறியையும் உணர வேண்டும்.

Being well established in the path of creative science, the expert in vastu should carefully understand the following:- the varied phases of macrocosmic and microcosmic structure, formation of five belts, characteristic features of five gross elements, image in respect of fivefold order, image in respect of fivefold music, and the principles of sculptural and drawing course as revealed by the formation of 64 squares.

நொடிப்பொழு தியல்நெறி நுணுக்க மோர்ந்தே
நொடிநொடிக் காலஞ் சிறுநொடிப் பொழுதே
பொழுதியற் காலம் மெய்க்கலை யுணர்வால்
பழுதற் றுணர்வால் பான்மை நோக்குபு
ஐயைந் தியல்தெரி நெறிச்சுழ லாய்ந்தே
முந்துறுங் கால விரைவிய லோர்ந்தே
நாற்புறத் தியல்தெறி நிலைவளை வாயுறும்
ஆற்றல் விரைவின் நிலைக்கலை யோர்ந்தே
மூலம் மூலை விளிம்புறுத் திறனெறிக்
கோலச் சுழல்நிலைச் சீலச் செந்நெறி
குறிப்பி னுணர்ந்தே கணக்கியல் வினையியல்
அறிகலைத் திறத்தா லறிந்துறும் மெய்க்கலை
உறுபொழு தியலா லுற்றறி யுணர்வால்
குறுநிலைப் புள்ளிக் குறிப்பி னியங்கித்
தெரிநிலை யியல்தெரி யைந்நிலை யாக்கம்
விரிநிலை எண்ணெண் கலைத்திற நோக்கம்
எட்டின் மாற்றம் ஒன்பான் தேற்றம்
எட்டுறும் பிறழ்வென எட்டின் பிறழ்வாழ்
எண்ணிலை மாற்றம் வளைவியல் நெறியாய்
தெண்ணிலைக் கலைநிலைச் சிற்றவை மூலம்
ஆடற் காலநிலை அறிநிலை மெய்ம்மை
ஆடலா னியல்நிலைக் கணக்கிய லாற்றல்
நெறியா லுணர்ந்து நினைவுற நினைந்தே

குறியுற நோக்கிக் கூர்ந்தமா மதியால்
ஆய்ந்துறு மாற்ற லகவுணர் வொன்றே
ஆய்முறைக் கலைநிலை தெரித்த லியல்பே (644)

காலநுணுக்கத்தின் ஆற்றலை உணர்ந்து, 25 இயல் புலப்படுத்தும் சுழல்நெறியை உணர்ந்து, நாற்புறத்தின் எல்லைக்குள் வெளிப்படும் மூலம், கோலத்தின் அசைவு, சீலம் இவற்றைக் குறிப்பால் உணர்ந்து, புள்ளி, ஐந்நிலை ஆக்கம், 64 இயலின் வெளிப்பாடு, எட்டின் மாற்றம், ஒன்பதன் அமைப்பு, எட்டின் பிறழ்வு, சிற்றலை, ஆடலான் தொடர்பான கணக்கியல் ஆகியவற்றை நன்கு அறிய வேண்டும்.

Having known the creative subtleties of Time, the cyclic process as revealed by 25 aspects, one should know about the Primal Substances, confined and manifested within the four-sided frame spiralling movement, infused within the structures and rhythm as effected by the four sided frame. He should also know about the creative function, the central dot, effects of fivefold emergence, emergence of 64 squares, modification and leaping assumed by eight, navapada (nava-tala order), microbode and the mathematical order related to Nataraja.

அறுபான் நான்கு மெழுத்தாக வுற்றே
உறுமுறைக் கலைதெரி யுண்மை யோர்ந்தே
பேரிய லெண்ணெண் கலைதெரி நோக்காய்
சீரியல் முறையுறுஞ் செந்நெறி கிளக்குபு
தொன்மைப் பண்பும் மென்மை யியல்பும்
வண்மை யாக்கமு மிடையின மாண்பும்
இனங்குறித் தியலு மொளிநிலை யோசை
ஒளிநிலைக் கலைத்திற னொளியா லுணர்ந்தே
வெளிமொழி ஒய்நிலை விளங்குற விளங்கி
எண்ணெண் கலைநிலை எண்மொழி யாற்றல்
எண்மொழித் தமிழா யிலங்குமா நெறியாய்
எண்திற மூலம் எழுத்தியல் நோக்கி
எண்கலைத் திறனெறி மெய்யிய லோர்ந்தே
கோடும் வரியும் கோடுறும் வளைவும்
நாடும் புள்ளியல் நீட்டல் குறுக்கல்
மேல்வளை வியற்றல் கீழ்வளை வாக்கம்

கோல்நெறிக் கோடே கிளைநிலைக் கோடே
இருநிலை வளைவே ஒருநிலை வளைவே
இருநிலை மேல்நிலை இருநிலைக் கீழ்நிலை
வலமுறு மிருநிலை இடமுறு மிருநிலை
வலமிடம் இருநிலை ஒருநிலை நெறியாய்
மேல்கீ ழாக்கம் இடையிடைத் தோற்றம்
மேல்கீழ் வளைவிய விடையிடைப் பரப்பியல்
மேலியற் புள்ளி மெய்ந்நிலை யோர்ந்து
மேலிய லாக்கம் மெல்லினத் தன்மை
வளைவும் நெளிவும் நீட்டுங் குறுக்கமும்
அளைவிலா தாக்கம் நெறிமுறை யோர்ந்தே
நெட்டெழுத் தியல்நிலை நெடுந்தமி ழாக்கம்
நெட்டெழுத் தியற்கலை நெறிமுறை நோக்கம்
நெடிதின் நோக்கமும் நெடுங்கணக் கியலாய்
கடிதி னாக்கங் குறுங்கணக் கியலாய்
ஆயும் ஆய்முறை ஆய்நெறி யாயம்
ஆய மூலமும் மெய்க்கணக் கியலும்
ஏயுமா றியல்தெரிச் சிற்பமுந் தமிழும்
ஏயுமா றியலால் மண்ணும் விண்ணும்
ஏய நோக்கின் மனைநிலம் நிலமனை
ஆய நோக்கின் ஆயங் கூறும்
மெய்ப்பொருள் ஓர்ந்துழி எண்ணெழுத் தியற்கலை
மெய்த்தகு திறனும் மெய்ப்புற நோக்கி
மெய்யுணர் கலையாய் மெய்யியல் விரித்தே
மெய்யியல் முயற்சி ஓசை மூலம்
உய்த்துணர்ந் தாக்கம் நிலைபெறக் கண்டுழி
மெய்யுணர் சிற்பம் மெய்க்கலைத் தமிழ்நிலை
எழுத்தியற் சிற்பம் எண்ணுறுஞ் சிற்பம்
வழுத்து மாக்கலை எழுத்திய லுருவெலாம்
சிற்ப மாக்கலை மூல நிலையெனச்
சிற்பச் செந்தமிழ்ச் செந்நெறித் திருநெறி
உற்றறி யுணர்வால் சிற்றவை நோக்கின்
தெற்றெனத் தெளிதல் செந்தமிழ் வளைவியல்
எட்டியற் கோட்டுரு நோர்க்கோட் டாக்கம்
எட்டுறும் நிலைக்கலை வளைவியல் ஓமென
நெறிமுறை யோர்ந்து நிலைக்கலை யாய்ந்து
குறிமுறை யாற்றலால் குறிநிலை வழக்கே (645)

64 இயல் மண்டலம் எழுத்தமைவு பொருந்தியது. பேரியல், சீரியல் செந்நெறி, மென்மை, வன்மை இடையின மாண்பு தெரிவிப்பது; ஒளிவகை ஓசைவகை - இயல்பு தெரிவிப்பது. 64 இயல் வாய்ந்த எண்மொழி ஆற்றல், எண்திறம், எழுத்தியல் — இவற்றை உணர்ந்து, புள்ளி, புள்ளியின் ஆக்கநிலைகளான கோடு, வரி, வளைவு, நீளம், குறுக்கம், மேல்வளைவு, கீழ்வளைவு, கிளைநிலைக் கோடு, இருநிலை வளைவு, ஒருநிலை வளைவு, இருநிலை மேல்நிலை, இருநிலைக் கீழ்நிலை, வல-இருநிலை, இட-இருநிலை, வலம்-இட இருநிலை, மேல்கீழ் வளைவு முதலான வரிவகைகளை அறிந்து நெடுங்கணக்கு, குறுங்கணக்கு, ஆயமூலம், மண், விண், மனைநிலம், நிலமனை முதலான சிறப்புக் கூறுகளை உணர வேண்டும். எழுத்தியலும் சிற்பம்; எண்ணியலும் சிற்பமே. எழுத்தியல் உருவெலாம் சிற்பக்கலையே. சிற்றவையே எட்டியற் கோட்டுருவையும் வளைவியலையும் நேர்க்கோட்டியலையும் உணர்த்துகிறது. எட்டு நிலைகள் உடைய வளைவியலே ஓம்.

The frame of 64 squares is fully imputed with the force of letters. It reveals the significance of structure with maximum measure and minimum measure; reveals the significance of three categories of sound-energy-harsh, soft and the mediatory; and reveals the manifesting power of sound and light aspects. Based on the knowledge of these and of the science of language, the expert should study the features and structural effects of varied patterns of lines and curves, different stages of structures, the mode of increasing reckoning and that of decreasing reckoning, āyā-calculation, features of select ground and plot and so forth. All the numbers and letters are indeed, well defined images. The scripture dealing with sculpture reveals these principles. The structure of microbode reveals the significant features of eightfold order, eightfold sketch-form, eightfold curves, eightfold straight lines etc. OM is indeed the encompassing curved form assumed by the eightfold state.

மூலக் கனலை முன்னி யறிந்தே
கோலப் பைங்குடி செங்குடி யாய்ந்தே
ஐங்குடி நிலையுங் கலைநிலை தேர்ந்தே

பொங்குறு முணர்வா லோங்குறு மாற்றல்
ஓம்ஒலி யாகி ஓம்ஒளி யாகி
ஓமிசை யோங்கலை ஓம்மொழித் திறனாய்
விண்மொழித் தமிழ்நிலை எண்மொழித் தமிழ்நிலை
விண்வெளி மொழிநிலை ஓம்ஒலி யிசையாய்
கண்டுறு மாற்றல் கலைநிலைத் தெரிவாய்
விண்டுறும் மூலக் கலைநிலை யாய்ந்தே
மூலம் மூலத் தியல்நிலை யாய்ந்து
கோல வானி னோசையுந் தேர்ந்து
வானிய லொலியுந் தானிய லொலியும்
வான்கலை மொழியென விண்வெளி தேர்ந்தே
அகவிண் ணகவெளி மெய்ந்நிலை யுணர்ந்து
மிகுமொளி மூலக் கனல்நிலை தேர்ந்து
உற்று நோக்கி னுள்ளுறும் நெறிவிண்
தெற்றெனத் தெரியின் சீர்நிலை புறவிண்
இருவிண் ணோசைப் பெருநிலை யொலியாய்
ஒருநிலை ஓம்ஒலி ஓம்ஒளி யியலாய்
ஓசை மொழியா யொலிஒளித் திறனாய்
மாசறத் தெரிக்கும் இயல்நெறி முறையே (646)

மூலக் கனலின் தனி ஆற்றலை உணர்க: பைங்குடி நிலை, ஐங்குடி நிலை — இவற்றை அறிந்து, 6 மூலக்கலையே ஓம் என்பதன் திறங்களாக வெளிப்படுவதை அறிந்து, வான்-இயல் ஒலி, தான்-இயல் ஒலி, அகவெளி — இவற்றையும் உள்ளுறும் விண், புறவிண் இவற்றையும் உணரவேண்டும். இவை ஓம்-ஒலி, ஓம்-ஒளி ஆகியவற்றின் திறங்களைப் புலப்படுத்துபவை.

One should know the matchless energy of Primal Fiery Source. Consequently he should know about five zones and five belts. The different energy aspects of OM are revealed and manifested by the Primal Creative force, inherent in that Fiery-Source. He should know about the manifested sound, self-manifesting sound, designs of inner space and outer space and various aspects of Om sounds and Om light.

எட்டெட் டியலாய் நெறிமுறை யோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எண்ணியல் வழக்காய்
அணுவுள் ளணுவா யெட்டுறும் நிலைநெறி

அணுவுள் எணுமுதல் கைவிர லளவை
ஈறா யியம்பும் ஐயள வியளோ
நேர்முறை யாக்கம் இம்மியும் எள்ளும்
நிலைபெறுந் திறனே கைவிரல் நோக்கம்
எட்டின் இயலா வையள வியன்றே
நுட்பந் தெரிந்தே நுவலுவ கணக்கே (647)

கணக்கியலானது 64 இயல், எண், நிலை இவற்றை உள்ளடக்கியதாக பரமாணு தொடங்கி, எட்டு எட்டாகப் பெருகி, இம்மி, எள் என வளர்ந்து அங்குலம் வரையில் அமைவதான ஐந்நிலை அளவைத் தெரிவிக்கும்.

The mathematical order, which is inclusive of the features of 64 squares and eightfold pattern and stage makes known the table of space-time measurement which begins from paramanu and increases by eight in five stages upto one angula

தாளமும் முகமும் தகைவுறக் கண்டே
நீளமும் அகலமும் நெடிதி னினைந்து
கோளங் குறுக்கங் குறிப்பி னோர்ந்து
காலமும் பொழுதுங் கணக்கி னோர்ந்து
கலமுங் கணக்கும் ஒன்றெனத் தேர்ந்து
சீலங் செப்புந் தாளம் முகமும்
செவ்விதி னோர்ந்து சீர்மை யுணரின்
ஒவ்வுங் கலைநிலைக் காலக் கணக்கே (648)

தாளம்-முகம்; நீளம்-அகலம்; கோலம்-குறுக்கம் — என உள்ள இணக்கங்களை அறிந்து காலமும் கணக்கும் ஒன்றே என உணர வேண்டும். தாளமும் முகமுமே சீலத்தைத் தெரிவிப்பது.

Having known the inseparable correspondence between tala and face, between length and breadth and between height and thickness" One should understand that both time and mathematical order are one and the same. Basically rhythm is expressed both by tala and face.

வளைவுறும் நெறியே வளப்பெழில் கூட்டி
வளைவியல் நெறிக்கலை மெய்க்கலை யழகியல்

அளைவுறுந் திறத்தால் சுழற்கலை நெறியாய்
உளைவுறு மியற்றிறன் ஒருநெறி முறையாய்
வளைவிய லாக்கம் அழகியற் கலையாய்
நெறிமுறை யோர்தல் நெறியோர் திறனே (649)

வளைவியல் நெறி, வளைவியல் கலை, சுழல் அமைப்பு — இவை வளைவியலின் ஆக்கமாகவும் அழகியற் கலைக்கு உரியவையாகவும் விளங்கும்.

The formation of curves and cyclic patterns is effected by the suitable techniques of curves and these belong to the aesthetic aspect of the structures.

அயரா துழைப்பின் அருங்கலை யோங்கும் (650)

விதிமுறை வழுவாமல் முறைப்படிச் செய்யின் படைப்பியற் கலை சிறப்புற ஓங்கும்.

If things are created by the orderly workings, not giving room for any violation of the rules, the science of creation would always flourish with all excellences.

மயல்நெறி நீக்கின் மயன்கலைத் தெளிவே (651)

மயக்க அறிவு தரும் நெறியை நீங்கி நிற்கும் அளவிற்கு மயன் கலையைப் பற்றிய தெளிவு உண்டாகும்.

To the extent one keeps himself away from the deluding and misleading path, clear and quintessent knowledge of the principles of Mayonic order would be effected.

மயநெறி யாற்றல் அயன்நெறி நீக்கும் (652)

மயன் நெறியால் அமையும் ஆற்றலானது பிரம்மனின் படைப்பு நெறியை (மீண்டும் பிறவி எடுக்கும் நிலையை) நீக்கி வைக்கும்.

The efficacy brought into effect by the Mayonic order would put an end to the endless creation of Brahma.

அயல்நெறி தவிர்த்தோர் மயனெறி யாய்வர் (653)

வாஸ்து நெறிக்குப் பொருந்தாத மற்றைய நெறிகளைத் தவிர்ப்பவர்களே, மயன் நெறியை நன்கு உணர்ந்து பயன்படுத்துவர்.

Only those who keep themselves away from the erroneous courses which are in disagreement with the tradition of Vastu, would clearly understand the Mayonic order and would successfully apply it to the art of creation.

மயனெறி யொளியே எண்ணெண் கலைத்திறன்
மயனெறி யாற்றல் மாநெறி யாற்றல்
மயனெறிச் செம்மைச் சிற்றவை மெய்ம்மை
மயனெறி யோர்ந்தே மெய்யியல் நோக்கி
பலகலை தேர்ந்தே பன்மொழி யாய்ந்தே
நிலவும் ஒளிக்கலை எண்ணெண் திறனே (654)

மயன் நெறிக்குரிய ஒளிநிலை, 64 கலைத்திறன், ஆற்றல், அது புலப்படுத்தும் சிற்றவை — இவற்றின் நுட்பங்களை உணர்ந்து பல்வேறு கலைநெறிகளையும் மொழி அமைப்புகளையும் ஆராய்ந்தால், 64-இயல் திறத்தால் ஒளிப்பொலிவை நிலைநிறுத்த முடியும்.

Having understood the Mayonic order and various aspects such as luminous source, 64 squares, cosmic energy and microbode as revealed by the Mayonic order, those who analyse varied patterns of creations and language - structures, could bring into effect the everlasting luminous creation.

மயனெறி யொன்றே மூவாக் கலைநிலை (655)

என்றும் அழியாத படைப்பு நெறிக்கு உரியது மயன்நெறி ஒன்று மட்டுமே.

The only course which essentially belongs to the indestructible creative order is the Mayonic order.

விண்மண் ணார்ந்தல் எண்ணிலைக் கலைநெறி (656)

எண்வகை நிலைகளை உள்ளடக்கிய படைப்புநெறி விண்ணின் ஆற்றலையும் மண்ணின் ஆற்றலையும் ஆய்ந்து அறிவதால் சிறப்புறும்.

The creative order involving eight stages of development attains supreme state through its deep analysis on the energetic creative force of both space and earth.

உற்றறி யுணர்வே பெற்றவா லறிவாய்
சொற்றிறம் பொருள்திறம் தெற்றெனத் தேர்ந்தே
இற்றுறு மாற்றல் இலங்குறுந் தேற்றம்
கற்றுறும் கலைநிலைக் கருத்துறும் மூலம்
ஓர்ந்துறு மாற்ற லொளியுணர் கலையால்
தேர்ந்துறும் நெறித்திறன் சீரறி நிலையே (657)

அனுபவத்தால் பெறும் உணர்வையே சிறந்த அறிவாகப் பெற்று சொல்திறத்தையும் பொருள் திறத்தையும் தேர்ந்து, தேய்வுறும்நிலை, வளர்ந்து பொலிவுறும் நிலை முதலான பல கூறுகளையும் மூலநிலையால் உணர வேண்டும்.

Having gained supreme intellectual virility through the perfecting experiences and observations, one should analyse the potency of word and that of the corresponding content-form and ascertain through the position of the basic emerging source, varied aspects such as the state of decaying and that of growing associated with the structural forms.

எப்பொருள் எக்கலை எங்குறும் பொருளும்
ஒப்புற நோக்கி னுணர்வுக் கரிதாய்
உணர்வுத் திறனா லோங்குறுந் தன்மை
உணர்வொளி யியலாய் நெறிமுறை கண்டே
அறுபான் நான்கே பெருநிலை மூலம்
உறுகலைத் திறனே உற்றறி யுணர்வால்
பல்பொருள் செழுமும் அறுபான் நான்கே
தொல்கலைத் தொன்னெறி துலங்க விளக்கி
கலைநெறி மூலம் கணக்கிய லியக்கி
நிலைநெறித் தன்மை நெடிதுறக் காட்டி
பல்கலை இயல்விரிப் பரப்புறுந் திறனாய்த்
தொல்கலை மூலத் தெண்ணியல் நோக்காய்
விரிந்து விளங்கும் விண்ணிலைச் சிற்றவை
புரிந்து நோக்கின் எண்ணிலைச் சிற்றவை
உணர்வி னாய்ந்து ஒளியாற் கண்டே
உணர்கலைச் செழுந்தமிழ்ச் சிற்பமெண் கலையே (658)

எவ்விடத்தில் இருந்தாலும் எந்தப்பொருளாக இருந்தாலும் அதனது சிறப்புக் கூறுகளை முறைப்படி உணர வேண்டும். பெருநிலைக்கு மூலமாகவும் பல பொருள் நலமும் பொருந்துவதாகவும் விளங்குவது 64 இயல். இதற்குரிய கணக்கு நெறியால் நிலைகளின் தன்மையை அறுதியிட்டு, அவற்றில் இடம்பெறத் தகுந்த அமைப்புக் கூறுகளையும் பொருத்தி, விரிந்து விளங்கும் விண்-நிலைச் சிற்றவையையும் எண்-நிலைச் சிற்றவையையும் நன்கு காண வேண்டும். சிற்பத்தின் எண்கலை இவ்வுண்மைகளை விளக்கும்.

In whichever place may be a material (fit for structuring), one should ascertain its salient features in a systematic way. The mandala of 64 squares being associated with multifarious source-wealth of materials exist as the very basis energiser for the exalted state and greatness of a structure. One should ascertain the exact nature of the structural form through the calculations pertaining to the 64 squares and identify the relevant members of the structure. He should also realise the nature of microbode pertaining to the extensive spatial order and that of the microbode pertaining to the numerical operation. The technique of measures, pertaining to sculpture would reveal all these principles.

> கலைதெரி நுட்பங் கணக்கியல் முறையால்
> நிலையுறும் நெறியியல் நெடிதுறுந் திறனிலை
> உள்ளி யுள்ளி யுணர்வுறுந் திறத்தால்
> தெள்ளு மைந்திய லைங்கலைச் சீர்நெறி
> விள்ளுறுங் கலைநிலை மெய்த்தக லாற்றல்
> தெள்ளு மாக்கலை யியல்பினிற் றேர்ந்தே
> உணர்வொளி யாற்றல் ஓங்குறும் நெறிமுறை
> உணர்வே விழியாய் மெய்க்கலை நோக்கிப்
> புலமுறுந் திறத்தியல் பொருந்தக் காண்டுழி
> நலமுறு மெண்ணெண் கலைநிலை நவிலுமே (659)

நலம் பொருந்தும் வகையில் எண்ணெண் கலையானது கலை நுட்பங்களைப் புலப்படுத்தும்; கணக்கியல் நெறியால் வடிவ அமைப்புகளுக்குரிய நெறி, அவற்றின் நிலைபேற்றுத் தன்மை, ஐந்தியலையும், ஐங்கலையையும் உள்ளடக்கிய வகையில் நல்ல

படைப்புகளை உருவாக்கல் முதலானவற்றைப் புலப்படுத்தும். இது புலப்படுத்தும் உண்மைகளை உணர்வாகிய விழிகொண்டு காண வேண்டும்.

Through the mathematical order which reveals the subtleties of time, the science of 64 squares sets forth appropriate directions for the pleasing constructions in view of their longevity; sets forth the processes of auspicious creations so as to incorporate fivefold aspect and fivefold proportion and so forth. One should assimilate these principles through his eye of consciousness.

எண்ணியற் கலைதெரித் தியலைந் தைந்தியல்
விண்ணியல் முறைதெரி விளக்க மோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எட்டெட் டியலாய்
எட்டின் நிலைதெரி யியல்நிலை மூலம்
பொருள்நிலை யாக்கம் பொருளியல் நெறியால்
தெருளியல் கலைதெரிச் சிற்றவை நோக்கி
எண்ணெண் நாற்புறத் தெண்ணியற் கலையால்
திண்ணமு முறுதியுஞ் சீரறி வோங்கி
நுண்ணிதின் உணர்கலை மெய்க்கலை நாட்டம்
விண்ணறித் திறனுறும் மெய்யுணர் நுட்பம்
கால விரைவியல் சுழல்நிலை கருதி
மூலப் பொருள்நிலை முயன்றினி தோர்ந்தே
எண்கலை நுணுக்க மியல்பினிற் றேர்நிலை
ஒண்ணெறி ஒள்ளிய லொட்ப மாய்ந்தே
அறுபான் நான்கு மமைவிறும் மெய்க்கலை
உறுநிலை வியலா லோங்குறும் மொலிக்கலை
ஒலிநிலைத் திறனிற லோசை யாற்றல்
ஒலியியற் கூற்றின் மெய்க்லை நுட்பம்
தெரிந்துண ருண்மை ஒலிஒளித் திறனாய்
விரிநிலை மூலத் தெழுநிலைக் கலையாய்
எண்ணெண் கலைதெரி யியலுமா நெறியே (660)

25 இயலமைப்பையும் விண்முறை வெளிப்பாட்டு நிலையையும் ஓர்ந்து, எண் முறையாகப் பொருந்தும் 64 இயலால் பொருள் தொடர்பான அமைப்பு நிலையைக் காண வேண்டும். தெளிவான முறையில் கலைக் கூறுகளை வெளிப்படுத்தும் சிற்றவை நிலையாலும் 64 இயல் பொருந்தும் நாற்புறத்துக்குரிய எண்கலையாலும் திண்மையும் உறுதியும் பொருந்துமாறு

வடிவங்களை அமைக்க வேண்டும். கால விரைவு, காலச் சுழல், மூலப்பொருள்நிலை — இவற்றையும் எண்கலை நுணுக்கம் வாய்ந்த தேர்நிலையையும் அறிய வேண்டும். 64 இயலும் பொருந்தும் மெய்க்கலை எனவும் ஒலிக்கலை எனவும் விளங்கி ஒலி நுட்பத்தையும் ஒலி-ஒளித் திறத்தையும் விரிந்த பரப்பை உடைய மூல நிலையில் எழும் நிலைகளின் சிறப்பையும் வாஸ்து நெறி 64 இயலால் விளக்கும்.

Having analysed the features of 25 aspects and the animating presence of space-energy in different squares, one should observe the constructional feature involving the role of 64 squares in eightfold way. He should construct the forms so as to be strong and sturdy through the identical existence of microbode expressive of distinct decorative forces and that of eightfold function pertinent to the four-sided frame of 64 squares. He should analyse the surface of time and its gyration, position of primal source and the structural features of chariot associated with eightfold decorative member. Shining forth as the perennial science of 64 squares and as the science of sound energy, the Vastu tradition explains the efficacious role of sound and light energies, acoustical subtleties and appreciable features of constructions that are raised from the extensive primal space-segment.

மூாநெறிப் பண்பே தாநெறி ஆக்கம் (661)

தூய நெறிக்கு உரியனவாக அமையும் பயன்மிக்க ஆக்கப்பாடுகள், வாஸ்து நெறியின் முறைப்பாடு மிக்க செயல் திறத்தால் அமைபவையே.

The fruitful products pertaining to the divine order are mainly based on the efficacious functional systems and patterns of Vastu Science.

தவளை மாநெறி மூலமெய்க் கலையே (662)

மண்டுக வாஸ்து மண்டல நெறி, விளக்கிக் கூறுதற்கரிய நுட்பங்களை உடையது.

The supreme technique of manduka-mandala has innumerable subtleties that cannot be expressed through words.

தவளை மாநெறி மூலமெய்க் கலையே (663)

மண்டுக பத நெறியானது மிகவும் அடிப்படையான படைப்பியல் தொடர்பான விஞ்ஞான வித்தை ஆகும்.

The technique of manduka pada mandala is indeed, the exalted scientific order pertaining to the most fundamental and eternal creative activity.

ஒளிமதி யாற்றல் கலைநெறி நல்கும் (664)

ஒளி நலம் மிக்க உணர்வாற்றலானது படைப்புக்குரிய நெறிமுறைகளை உணர்த்தும்.

The effulgent conscious force is capable of revealing the technical process pertaining to the creative activity.

எழுத்தியல் மூலம் இயைபுறத் தெரிந்தே
வழுத்து மாநெறி வளர்கலை எண்ணியல்
நெறிநல் குறியும் நிலையுற் றோர்ந்தே
குறிநிலைக் குறிப்பின் குறித்திறன் ஆய்ந்துணர்
மதியா லுளத்துணர் வோங்கும் நிலையியல்
மதிஒளி யியல்நிலை உணர்வார் கூற்றே (665)

அக உணர்வு செழிக்கப் பெற்றோரின் கூற்றுகள் - எழுத்தியலுக்குரிய மூலநிலையைப் பொருத்தமுறக் கண்டு, எண்ணியல் நெறிப்படி கட்டிடங்களுக்குரிய பகுதிகளைக் கணித்து, ஆயக்கணிப்புக்குரிய குறிகளைப் பயன்படுத்தி கட்டிடங்களை / வடிவங்களை அமைப்பதற்குரிய வழிமுறைகளை உணர்த்தும்.

The statements, enunciated by the experts in Vastu science, whose power of consciousness gets refined and strengthened by the science of Vastu, would enable one to see the basic structural patterns of letters (and words),and to identify the relevant parts of the constructions based on numerical calculations: they impart the effective ways

of creating the forms by making use of the benificient results of āyādi calculations.

எட்டின் நிலைகலை இயல்புறும் நிலையொளி
எட்டின் முறைதெரி விண்ணிய லாக்கம்
விண்ணெறி விண்ணொளி விண்கலை தெரிந்தே
எண்ணெறி எண்ணொளி எண்கலை யியலால்
மூலப் பொருள்நிலை முயலுறத் தெரிந்தே
கால மியல்நிலை கடிதி னோக்கி
நெடிதுற நினைந்தே நிலைபெறு முணர்வால்
படியுறும் விண்மண் எண்கலை யுணர்த்துமே (666)

எட்டின் நிலையால் இயல்பாக அமையும் ஒளித்திறத்தையும் எட்டின் முறையால் அமையும் விண்-இயல் ஆக்கத்தையும் கண்டு, விண்-நெறித் தொடர்பான கணிப்புகளாலும் எண்-நெறித் தொடர்பான கணிப்புகளாலும் மூலப்பொருளுக்கும் உருவ அமைப்புக்கும் உரிய இணக்கம் கண்டு, காலத்தின் செயற்பாட்டைத் துல்லியமாகக் கண்டு விண்-மண் இணக்கத்தை உருவாக்கும் முறையை எண்கலை உணர்த்தும்.

Having observed the structural parts endowed with luminosity effected through the role of eightfold state, and the effective presence of space-energy formed by eightfold order, and having ascertained the inseparable identity between the Primal Source and the Structural form through varied calculations related to space-order and numerical order, having meticulously calculated the workings of Time in terms of building measurements, —the science of numerical order sets forth the directions for establishing the identity between earth and space in the select area.

செந்நெறி மெய்க்கலை சீர்சால் மாநெறி
மெய்ந்நெறி எண்ணே எண்ணிலைக் கலையால்
ஓங்குறும் ஒட்பத் தொளிதரும் இயல்நிலை
தேங்குறும் பேருணர் வுறுநிலைக் கலையே (667)

மெய்க்கலை தொடர்பான செந்நெறி எனவும் மாநெறி எனவும் விளங்கும் வாஸ்து நெறி எண்கலையாலும் எண்-நிலைக் கலையாலும் ஒளிமிக்க வடிவ அமைப்புகளை உருவாக்கும் முறைக்கேற்ற பேருணர்வைச் செறிவுறக் கொடுக்கும்.

The tradition of Vastu which shines forth as the science of central chord (Brahma Sutra) related to eternal creation and as the matchless path, is capable of bestowing the highest and perfect dynamism of consciousness so as to create resplendent structures through numerical order and eightfold developmental state.

கலைநெறி உணர்வே நிலைநெறி யுணர்த்தி
தலைமொழி மெய்யியல் நிலையியல் சாற்றும் (668)

உருவப் படைப்பு தொடர்பான நெறியைப்பற்றிய உணர்வே சிறப்புடைய நிலைகளுக்கான பல்வேறு உறுப்புகளையும் அவற்றின் இயல்பையும் உணர்த்தும்.

The inner consciousness concerned with creative process and skill is capable of revealing the various members and their features relevant to the constructions of unique and appreciable appearance.

ஓங்கொளி யுள்ளத் தகநிலை யாய்வோர்
தேங்கொளி விண்ணில் தீதறக் கண்டே
விண்கலை எண்கலை விளங்கக் கண்டுணர்
நுண்கலைச் சிற்பம் நற்றமிழ் தெரிவரே (669)

ஒளிமிக்க அகநிலையை ஆய்வோரே, விண் இயலை முழுமையாகக் கண்டு, விண்கலை மூலமாகவும் எண்கலை மூலமாகவும் சிற்பத்தின் நுட்பக் கூறுகளை உணர்வர்.

Those who train their effulgent inner-state would be able to realise the science of space in its totality and to understand the subtle factors related to the constructions formed through the creative force of space and numerical order.

எண்பொருள் இலங்குறும் நுண்பொருள் காண்டுழி
விண்பொருள் ஒளிநிலை விளங்குற ஆய்ந்தே
தெரிநிலை யியற்பொருள் தெள்ளிதின் விளங்கும்
விரிநிலைக் கலைநிலை அறுபான் நான்கும்
ஓங்குறும் நெறித்திறன் உள்ளு ளுணர்ந்தே
தேங்குறும் ஒளிப்பொரு ளொலிப்பொருள் தேர்ந்துழி
மெய்நிலை மெய்ப்பொருள் மெய்யுணர் வோங்கி

மெய்யியல் நிலைபெறும் விரிநிலை ஆற்றல்
பொருந்தக் கண்டே பெருக்கலும் சுருக்கலும்
ஒருநிலை ஆற்றல் விரிவுறும் திறனே (670)

எண்பொருள் உள்ளடக்கிய நுண்பொருள், விண்பொருள் — இவற்றை ஆய்ந்து, விரியும் கலைநிலை உடைய 64 இயல் ஒவ்வொரு படைப்பிலும் அமையும் நெறிமுறையை உணர வேண்டும். ஒளிப்பொருள், ஒலிப்பொருள், மெய்ப்பொருள் தொடர்பான உணர்வு ஓங்கப்பெற்று, மெய்ப்பொருளியல் நிலபெற்றிருக்கும் மண்டலத்தின் விரிநிலை ஆற்றலானது படைக்கப்படும் உருவ அமைப்பின் நிலைக்கு ஏற்றவாறு பெருகியும் சுருங்கியும் அமையும் முறையை உணர வேண்டும்.

Having analysed the characteristic features of minute substance and the substance effected by space-source, one should observe the regulative order by which the frame of 64 squares, which is of the nature of expanding to any extent, gets rooted in each and every creation. With his consciousness related to luminous and sonic substance and eternal substance, being strengthened and perfected, he should observe the order in which the extensive power of 64 squares get rooted in an amplified or minimised way according to the nature of the construction, being designed and created.

அஇ உஎ ஒக்குறில் ஐந்தும்
ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்
ஈரா றுயிர்நிலை எண்ணித் தேர்ந்தே
மூவா றுறும்மெய் முன்னி யுணர்ந்தே
உயிர்மெய் நிலைக்கலை மெய்யுயிர் எழுத்தாய்
செயிரற நோக்கித் திருவுறக் காண்டல்
எழுத்தியல் நுட்ப மெழுங்கலைத் திட்பம்
எழுத்துறும் நெறிநிலை குறிநிலை வரைவே (671)

12 உயிரெழுத்துகள், 18 மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் ஆற்றலையும் அமைப்பையும் நன்குணர்ந்து, உயிர்த் தோற்றத்துடன் விளங்கும் வடிவ அமைப்புகள் அனைத்தும் இவ்வெழுத்துமயமே எனத் தனிப்பொலிவு அமையக் காண வேண்டும். திண்மையான வடிவ அமைப்பு எழுத்துக் குறிகளாகிய வரைவு முறையை உடையது.

Having recognised the energising potencies of 12 vowels and 18 consonants and their actual structural significance, one should visualise all the constructions/creations as to have been fashioned of all the letters only. All the constructions/creations are invested with the structural implications of letters.

ஒளிநிலை எழுத்தி னொலிநிலை உணரின்
ஒளிமொழித் திட்ப முணரப் படுமே (672)

ஒலியாற்றல் மிக்க எழுத்துக்களை அவற்றின் ஒளிநிலைத் திறத்துடன் இணைத்துக் காணும்போதுதான் ஒளிமொழியின் திடமான ஆற்றலை உணரலாம்.

(Corresponding to microbode), there is luminous word which energises and activises everything in the world. Only when one is able to realise letter associated with sound-energy in terms of its luminous aspect, the exact nature and strong force of the luminous word could be understood.

ஒளியிய லொளிநிலை ஒளிவெளி யாய்ந்தே
ஒளிநெறி மூலம் மெய்ப்பொருள் தேர்ந்தே
ஓம்கலை ஓம்நெறி ஓமியல் திறனால்
ஓமியம் ஓமியல் ஒருநெறி தேர்ந்தே
உருவம் வடிவம் நிலைஎழு கலைநெறி
திருநிலை எண்ணிலைக் கலையால் நோக்கி
எண்ணெண் கலைத்திறன் இயல்புற் றாய்ந்து
ஒருநிலை மூலம் பெருநிலைக் கலையாய்
திருநிலைக் கோலஞ் சீலந் தெரிந்தே
எண்ணெறி இயலாற் கலைநெறித் திறமுற
விண்ணெறி நோக்கி வெளிப்படக் கிளக்குபு
எண்ணின் நெறிகலை எழுத்தியல் முறையாய்
எண்முறை இயல்தெரி எட்டின் பிறழ்நிலை
ஓம்ஒளி மெய்க்கலை ஒளிநிலை தேர்ந்தே
ஓம்ஒலி யியல்நிலை உணர்தல் முறையே (673)

ஒளிவெளி, ஒளிநெறி மூலம் மெய்ப்பொருளைத் தேர்ந்து ஓம்-இயம், ஓம்-இயல் இரண்டின் ஒருநெறிப்பட்ட தன்மை கண்டு, எண்நிலைக் கலையால் உருவத்தையும் வடிவத்தையும் உணர்ந்து

64 இயல்களும் எழுத்தியல் முறையால் விளங்குவதை அறிந்து மூலம், கோலம், சில நிலகளைத் தெரிந்து, எண்முறை இயக்கத்தைப் புலப்படுத்தும் எட்டின் பிறழ்நிலையால் ஓம் என்பதன் ஆற்றல் கூறுகளை உணர்தலே முறையான செயல்.

Through the luminous space and the operative way of light energy one should realise the creative power and phase of the Primal Substance and observe the simultaneous and the co-ordinated actions of OM and its constituents, and study the features of Form and structures through the science of numerical order. Having understood the fact that the frame of 64 squares presents itself in the orthographic designs and known the significance of Primal space, Form and Rhythm, he should understand the operative states of Om through the modification assumed by the dynamism of 8 units.

நெறிநிலை யுறுகலை நிலையிற் றேர்ந்தே
நெறிகலை நுட்ப முணர்திறன் ஓர்ந்தே
ஐந்திய லைந்நெறிச் செந்நெறி யாக்கம்
முந்துறுஞ் சிற்பச் செந்தமி ழிசைநெறி
ஓவிய நுணுக்கம் ஒருங்குறந் தேர்ந்து
மேவுறும் பெருங்கலை நுட்பத் தியன்றே
எண்ணெறி யியன்றே யியல்புறத் தெரிந்தே
எண்ணெண் ணியல்கலை யுட்திறத் தியல்நெறி
நெறியுற் றோர்ந்தே நிலைபெற் றாய்ந்தே
குறியுற் றியல்நெறிக் குறிப்புறத் தேர்ந்தே
சிற்பச் செந்தமிழ்ச் சீரிசை நுட்பம்
பொற்புற் றாய்தல் நெறிமுறை வழக்கே (674)

நெறிப்பட்டு அமையும் நிலை, ஐந்தியலையும் ஐந்நெறியையும் கொண்ட செந்நெறி ஆக்கம், சிற்பம், இசைநெறி, ஓவிய நுணுக்கம், எண்நெறிப்பட்ட 64 இயலின் திறன் — இவற்றைக் குறிப்புறத் தேர்ந்து சிற்பத் தமிழையும் இசை நுட்பத்தையும் ஆய்தல் நெறிமுறை வழக்கு.

Having understood the basic principles related to the rhythmic structures, the operative process related to the fivefold style and order, sculpture, music and the art of drawing - and the self-expressing efficacy of 64 squares

operative in eight ways, — one should analyse the self-expressive language in terms of sculpture and the subtle principles of musicology.

எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி (675)

அளவைநெறியும் எட்டின் நெறியுமே, 8, 8 இயல், 8 X 8 இயல் என அமைகின்றன.

Only the system of measurement and the functional pattern of eightfold stage are effected in terms of 8, 8 orders and 64 squares.

எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கும் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே (676)

எட்டு பரமாணு ஒரு தேர்த்துகள், எட்டு தேர்த்துகள் ஒரு இம்மி, எட்டு இம்மி ஒரு எள், எட்டு எள் ஒரு நெல், எட்டு நெல் ஒரு விரல் — என அமையும் அளவை முறையின் அடிப்படையில் உருவம் வெளிப்படும் முறையை மயன்நெறி கூறும்.

| | | |
|---|---|---|
| 8 paramanus | = | 1 chariot-dust |
| 8 chariot-dust | = | 1 immi (grain) |
| 8 immis | = | 1 sesame seed |
| 8 sesame seed | = | 1 paddy grain |
| 8 paddy grain | = | 1 angula |

— having based on this system, the Mayonic order expounds the principles of the emergence of Forms and Creation of structures.

உணர்வறிந் தியல லொருநெறிக் கலையென
உணர்வா லறிந்தே ஒளிநெறிக் கண்டே
உணர்வின் தெரிக்கும் அகவின் னோர்ந்தே

உணர்கெழும் நெறிநிலைக் கலையென் றோர்ந்தே
எண்ணெண் ணியல்திற னினிதின் நோக்கி
எண்ணியல் நாற்புறத் தியல்நிலைச் சூழல்
மூலை மூலம் நாற்புறத் தியல்நெறி
மூலை விளிம்பே மெய்நெறி நோக்கி
ஐந்நிலை யியல்நிலை விரைவி னாற்றல்
செந்நெறிக் கால மாவிரை வாம்நெறி
காலத் தியல்நெறி கணக்கின் ஓர்ந்து
மூலப் பேரியல் முன்னியுள் நோக்கி
எட்டின் பிறழ்நிலை இனிதி னோர்ந்து
எட்டுறும் நெறிநிலை ஒன்பான் நிலைநெறி
ஒளிக்கலை யுணர்திறன் ஒருங்கு நோக்கி
வெளிக்கலை வெளிமொழி ஓர்தல்மா நெறியே (677)

தனித்துவம் வாய்ந்த ஒளிநெறியாக விளங்குவதை உணர்வால் அகவிண்ணை அறிவதன் மூலம் காணவேண்டும். எண்-இயல் நாற்புறச் சூழலில் 64 இயல் திறத்தைக் கண்டு, மூலம், மூலை, மூலை விளிம்பு, கால விரைவு, காலநெறி — இவற்றைக் கணக்கியலால் கணித்து மூலப் பேரியலையும் எட்டின் பிறழ் நிலையையும் ஒன்பான் நிலைநெறியையும் ஒளிக்கலையையும் வெளிக்கலையையும் ஓர்ந்துரைப்பதே வாஸ்துநெறி.

Having identified and studied the formation of inner space (of a building), which presents itself in the unique form of luminous stream and having exactly identified the range of 64 squares within the four-sided frame and studied the features of corners, space-segments adjacent to the corners, swift movement and functional way of Time factor through relevant calculations, one should analyse the unitary way of the Primal Source, modifications and variations of 8-unit dynamism, perpetuality of 9-unit dynamism, creative force of light energy, space and space-syllable. The science of Vastu sets forth the principles of all these.

ஐந்தியல் மெய்ந்நெறி அருங்கலை யுணர்வால்
ஐந்திசைச் சிற்பம் ஓவிய மாக்கலை
முந்துறும் உணர்வின் மெய்ப்பொருள் தெரிந்தே
வந்துறும் இயல்நெறி அறுபான் நான்கின்
மூலம் கண்டே வலமிடச் சுழல்நெறி
கால விரைவியல் கருத்துற நோக்கி

எட்டின் பிறழ்நிலை என்றுணர் வுற்றே
விட்டுறும் நெறிக்கலை ஆடலான் நெறிநிலை
சிற்றவைத் திருநிலை பெருநிலைக் கலையாய்
உற்றறி மாண்பால் ஒருநிலை நோக்கி
உளத்து ளுணர்நிலை உற்றுள் ளோங்கி
களமா மறுபா னான்கி னைந்தில்
அஇ உஎ ஒநிலை யாய்ந்து
அஇ உஎ நாற்புறம் நிலைத்தே
ஓர்ந்துணர் கூர்நெறி ஒள்ளியல் உணர்ந்தே
ஒநிலை மூலம் ஒம்கலை யாற்றல்
அஇ உஎ ஒநிலை ஐந்தே
அருங்கலை மூலம் பெருங்கலை நுட்பம்
நுண்ணிதி நுவன்று நுவலுறுந் திறத்தால்
எண்கலை ஐந்திய லியம்புமா நெறியே (678)

ஐந்தியல் தொடர்பான கலையுணர்வால் ஐந்திசைச் சிற்பத்தையும் ஓவியக்கலையையும் இவை வெளிப்படுத்தும் மெய்ப்பொருளையும் அறிக; 64 இயலின் மூல அமைப்பைக் கண்டு, வலம்-இடச் சுழல்நெறி, கால விரைவியல் — இவற்றை அறிந்து எட்டின் பிறழ்நிலையாகிய ஆடலான் நெறியே சிற்றவை நிலை எனத் தெளிக. 64 சதுர அமைப்பாகிய களத்தில் 5 இடம் குறித்து, நாற்புறத்தும் நடுவிடத்தும் அ, இ, உ, எ, ஒ என உள்ள எழுத்துக்களின் இணக்கம் காண்க. இவற்றுக்கான நெறிமுறையை எண்கலை நெறி எனவும் ஐங்கலை நெறி எனவும் உள்ள மாநெறி விளக்கும்.

Through the consciousness rooted in the knowledge of fivefold pattern, one should study the features of musical sculpture and drawing and the eternal substance as expressed by them. Having observed the basic originating space of 64 squares, spin and gyration from right to left and the swiftness of time, he should understand that the texture of microbode is actually the spin of Nataraja, who denotes the modificatory movement of 8 unit dynamism. He should locate five places within the frame of 64 squares and identify five vowels with those places. The science of Vastu, which shines forth as the eightfold order and fivefold order, expounds the details of these occurrences.

அறுவகை நிலைகலை ஆக்கமுள் ளோர்ந்தே
உறுவகைப் பயன்தெரி ஒளிநிலை தெரிந்தே

பெறுபய னைந்திய லெண்ணிலை யாக்கம்
உறுநிலை மூலத் தெழுநிலை நோக்கி
ஐங்குடி யியலறிச் செங்குடி பைங்குடி
ஐங்கூர்க் கருங்குடி வெண்குடி யாகி
கோல நீலம் குறிக்கு மாக்குடி
மூலத் தியலால் முயன்றினி தோர்ந்தே
ஐவணத் தியல்பும் ஐங்குடி மாண்பும்
ஐந்நெறி மூலம் செந்நெறி யாய்ந்தே
அறுவகைத் திறநிலை இயல்நிலை உன்னி
உறுநிலை ஆறில் மெய்நிலைச் சேயொளி
தாயொளி தீயொளி சேயொளி நோக்கிச்
சேயொளி யியல்நிலை முன்றுறுஞ் சுடரொளி
நோக்குபு நோக்கி நுணுக்குற் றெண்ணி
ஆக்குறு மியலா லறுபா னான்கில்
பெருவெளி மூலப் பெருங்கலை ஆர்ந்து
தருவெளி ஐந்நிலைக் கருத்துறத் தேர்ந்து
சிற்றலை எண்ணெண் கலைநிலை தேர்ந்து
உற்றுறும் மெய்க்கலை உண்மை யுணர்ந்தே
பன்மொழி படைக்கும் மென்மொழித் தமிழொலி
நன்மொழி நற்றமிழ்ச் சிற்பமா மொழியொலி (679)

அறுவகைப்பட்ட நிலைகளின் அமைப்பு, அவற்றின் பயன், ஒளிநிலை, ஐந்தியல், எண்-நிலை ஆகியவற்றை உணர்ந்து, மூல அமைப்பின் அடிப்படையில் ஐங்குடி அமைப்பைக் காண வேண்டும். செங்குடி, பைங்குடி, கருங்குடி, வெண்குடி, நீலக்குடி என ஐவண்ணம் பொருந்திய ஐங்குடி அமைப்பியலை உணர வேண்டும். அறுவகை முறையையும் சேயொளி, தாயொளி, தீயொளி பொருந்தும் முறையையும் சேயொளி பொருந்தும் முற்றத்தையும் காண வேண்டும். 64 சதுர அமைப்பில் பெருவெளி, ஐந்நிலை, சிற்றலையின் 64 இயல், மென்மொழி, தென்மொழி முதலான ஒலிவகைகள் ஆகியவற்றைக் கண்டு ஐம்பொருள் ஆற்றலை அகத்தே பொருந்துமாறு செய்ய வேண்டும். இவற்றுக்கான நெறிமுறைகளை எழுத்தின் ஒலியையும் ஒளியையும் அறிந்து மாநெறி விளக்கிக் கூறும்.

Construction of edifices/ buildings in six ways, their auspicious effects, their energising light source, five aspects, eight-stages — having known all these, one should observe the formation of five belts (zones). He should know

about the brahma pada, daivika pada, mānusa pada, paisaca pada and raksasa pada each one associated with its relevant light-streak (ie, colour). Having observed the presence of three basic radiant energies in the relevant portions of the buildings designed in six ways, the facade associated with the central radiant energy, the presence of extensive space, five stages, 64 aspects of microbode, different sound energies within the frame of the mandala, he should infuse the energy of fivefold Primal Substance into the interior space. Having known the sound and light aspects of letters, the science of Vastu explains all these details.

ஒருநிலைப் பெருங்கலை இருகூற் றியலாய்
வருநிலை முத்திறன் மூவின மாய்த்திகழ்
அறுபா னான்கின் அருந்தமிழ்க் கற்றியல்
உறுநெறி மூல முற்றறி வோர்ந்தே
ஒண்கலைத் திறத்தி னுள்றுவ உள்ளி
எண்கலை எட்டெட் டியல்நெறி ஆய்ந்தே
எழுத்தொலி எழுத்தொளி சிற்ப நல்லிசை
வழுத்தும் பைந்தமி ழோவிய வண்ணம்
ஓவியச் சித்திரச் சிற்ப மாத்தமிழ்
வேவுறு மாற்றலால் நிலைபெற் றோர்ந்தே
சித்திர மேவியஞ் சிற்பச் செந்தமிழ்
மெய்த்தக்க வோங்கு மெண்ணிய லாக்கம்
ஐயைந் தியல்நெறி ஆக்க மாநெறி
ஐந்நெறி ஐந்திய லருங்கலை நுட்பம்
ஓசை யொலித்திற மூலமா நுட்பம்
மாசறத் தெரிக்கும் மொழியியற் கலையாய்
மெய்யுற் றியல்நெறி உயிர்நெறித் திறனிலை
மெய்க்கலை நுண்ணுணர் வுற்றுறும் திறனாய்
உள்ளி உள்ளி உணர்வொலித் திறனால்
தெள்ளு மாத்தமி ழைந்தொலி யியல்நிலை
விள்ளு செந்தமிழ் ஐந்திசை கண்டே
உள்ளும் மூவின வொலியியல் காண்டல்
நெறிமுறை அறுபான் நான்கியல் மரபே (680)

ஒன்றாக உள்ளதே இருகூறாகி, முத்திறமாகவும் மூவினமாகவும் இயக்கம் கொள்ளும் முறைமை, எண்கலை,

எழுத்தொலி, எழுத்தொளி, சிற்ப இசை, ஓவியச் சித்திரம், சித்திர ஓவியம், எண்ணியல் ஆக்கம், 25 இயல் ஆக்கம், பல நுட்பங்களை உணர்த்தும் மொழி இயற்கலை, மெய்யியல் நெறி, உயிரியல் நெறி, ஐந்தொலி, ஐந்திசை, மூவின ஒலி — இவற்றை அறிவதும் 64 இயலைப் பற்றிய ஆய்வுக்கு உட்பட்டதே.

The functional pattern of the Great one, having become twofold, threefold potency and three fold group, eight stages of creation, sound and light aspects of letter, music (rhythmic lines) of sculpture, sketch form, fully effected form, output of eightfold order and 25 aspects, science of language indicative of the innumerable subtleties, features of embodying substance and those of embodied ones, five sounds, five musical notes and sounds grouped into three modes — the detailed study of these, indeed, belongs to the science of 64 squares.

விண்மண் ணியல்நிலை வெளிநிலைக் கலைத்திறன்
எண்கலை நுட்பம் எளிதி னுணர்ந்தே
எண்ணிய லெண்திற னெண்மொழி யாக்கம்
திண்ணிதி னுணர்ந்தே சீரறி வுற்றே
நேர்மை சீர்மை நிலபெற் றுணர்ந்தே
ஓர்ந்துறு மாற்ற லொளிபெறும் நிலையால்
அகவிண் ணியக்கம் அறிந்துணர் ஆற்றல்
மிகுகலைத் திறனாய் மெய்யறி வுணர்த்தி
எண்ணிலை ஐந்தியல் நுண்ணெறி கூட்டும்
விண்ணொளி நோக்கல் வீரத் தியலாய்
பொறிபுல னியனிலை பொற்புறத் தெரிந்தே
நெறிநிலை கலைநிலை முறைமையி னுணர்ந்தே
அறிகலை உண்மை ஆக்கஞ் செறிந்தே
ஒளித்திற நுட்பம் ஒலித்திற நுட்பம்
ஒளியெண் கலையி லோங்குபு ஓங்கி
ஓங்குறும் ஓம்மொழி ஓம்கலை ஓம்இசை
ஓங்குறும் ஓம்ஒலி உயிரொளி ஓம்ஒளி
ஆங்குறும் ஈங்குறும் அமைவுற் றறிந்தே
ஊங்குறுந் திறனிலை உள்ளி உள்ளி
அறுபான் நான்கின் நிலைநெறி யாய்ந்தே
உறுமுறைமி யற்கலை உன்னுவ துள்ளி
எண்ணெண் ணியலின் மூல நுட்பம்

எண்ணியல் நாற்புறத் தியல்நெறி விளக்கம்
நோக்குறும் நோக்காய் நுட்ப முதற்றாய்
ஆக்குறும் கலைநிலை அறுபான் நான்கே (681)

விண்நிலை, மண்நிலை, வெளிநிலை, எண்கலை நுட்பம், எண்மொழி ஆக்கம், கிழக்கு-மேற்காக உள்ள வரிசைகளின் இயல், வடக்கு தெற்காக உள்ள வரிசைகளின் இயல், அகவிண் இயக்கம், எண்நிலை, ஐந்தியல், விண்-ஒளி, ஒளித்திற நுட்பம், ஒலித்திற நுட்பம், ஓம்-மொழி தொடர்பான உட்பொருள்கள், ஆங்கு, ஈங்கு, ஊங்கு என உள்ள இடநிலைகள் — இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு எண்ணியல் நாற்புறத்தையும் 64 இயலையும் நுட்பமாக உணர வேண்டும்.

Factors pertaining to the enclosed space, ground, outer space, minute numerical calculations and their benificient results, fruitful identity of eightfold letter, features of east-west and north-south rows; functional dynamism of central space, eight stages of construction, fivefold aspect, subtle aspects of light and sound energies, appendages identical with the aspects of OM, three different linear positions (near, far and the middle) — having taken into account all these, the expert should understand the subtle features of four-sided frame and those of 64 squares.

எழுநிலை எழும்ஒலி எழுங்கலை எழும்ஒளி
எழும்உண ரைந்நிலை யியல்பிற் றெரிந்தே
எழுகலை யுணர்வொளி எழுநெறி யாற்றல்
எழுஞ்சுட ராக்கம் எண்ணிலை ஆயல்
எண்எணண் கலைத்திறன் நுண்ணிதின் உணர்ந்தே
எண்ணத் துணர்வே இயல்நெறி இலங்கி
எழுச்சி எழுதல் உணர்நிலை முதலாய்
எழுங்கலை நெறிதரும் செழுங்கயல மொய்ப்பொருள்
உள்ளு ளுணர்ந்தே உறுபயன் தெரிந்தல்
விள்ளுங் கலைத்திறன் மெய்யுணர் வுற்றே
மூலப் புள்ளி முயலுறுந் திறனிலை
காலங் குறித்தே கணக்கியல் நோக்கம்
மூலத் தியலால் வலமிடச் சுழல்நெறி
கால மாவிசை விரைவியல் குறிக்கும்
செம்பொரு ளுண்மை ச்சீருறத் தெரிந்தே

செம்மை மாநெறி செறிநிலை யோர்த்தே
நிலைநெறி ஆற்றல் நெறிப்பட நிறீஇ
கலைநெறி மெய்ம்மொழி கருத்துற் றோர்ந்தே
தலைமொழிச் செந்நெறி தன்னிலை யுணர்ந்தே
நிலைமொழி வருமொழி மொழியியல் கூர்ந்தே
எழுமுணர் வொன்றே மொழிக்கலை ஆற்றல்
எழுந்திறன் நெறிநிலை எண்கலை உணர்த்தும்
எழுமொளி எழுமொலி எழுமுணர் வாய்ந்தே
விழுமிய தமிழ்மொழி மூலத் தியலே (682)

தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தொடர்பான ஒலிஒளி ஆற்றல்களையும், திறத்தையும், கயல்நிலைக் குறிகளால் நுட்பமாகக் காண வேண்டும். மூலப்புள்ளி, வலமிடச் சுழல்நெறி, காலவிசை, செந்நெறிக் கோட்டால் செறியும் நிலை — ஆகியவற்றைப் பற்றிய ஆய்வு ஒருவகை. மொழி-ஒலி தொடர்பான உண்மைகளை, வடிவத்தின் பின்னணியின் ஆய்தல் மற்றொருவகை. இருவகை ஆய்வு முறைகளையும் தமிழ் மூலமாகிய வாஸ்துநெறி விளக்கும்.

Through the accurate marking of fish-marks in a prescribed way, one should ascertain the aural and luminous aspects and other energetic aspects of the select ground. There are two different ways of analysing the process of construction. One is concerned with central dot, rotatory force from right to left and the unchangeable position ascertained by the central line. And another one is related to the analysis of lingual principles against the background of constructs/images. The science of Vastu explains these two ways.

எழுத்தி னியல்தெரி நிலைகலை யாக்கம்
முழுக்கலை மாநெறி எண்ணெறி யியல்பின்
விழுமிய பருப்பொருள் கருப்பொருள் ளோர்ந்து
செழுநிலை யுரிப்பொருள் சீர்நிலை தெரிந்தே
மூல முப்பொரு ளியல்நிலைத் திறத்தால்
காலமும் இடமுங் கருத்துறத் தேர்ந்தே
குறிப்புறுந் திறனிலைக் குறிப்புறுங் குறிப்பின்
குறிநிலை யியற்கலை கூர்நிலைத் தெளிவாய்
உன்னி உன்னி உள்ளுற் றாய்தல்

முன்றுறும் முனைப்பால் முயல்நெறி நோக்கி
ஆக்குறும் மெய்க்லை அறிவியல் எண்ணியல்
மூலமும் காலமும் முன்னிலை நோக்கி
மூலப் பொருளியல் மெய்ந்நெறி யியலால்
ஒன்றுறும் உணர்வே ஒன்றினின் றொன்றாய்
ஒன்றே நிலைகலை ஒன்றே மூலம்
ஒன்றுறும் நெறிமுதல் பொருளுற் றோர்ந்தே
தென்திசை தென்மொழி தென்தமிழ்க் கலைநிலை
எழுத்திய லாக்க மிலங்குறுந் தூநெறி
எழுத்துறும் வடிவம் நேர்க்கோட் டியல்நிலை
வளைநிலை இடைநிலைப் புள்ளி எழுத்தாய்
விளங்கும் நேரொலி ஓம்நிலைக் கலையால்
ஓமெழுத் துறுநிலை வடிவம் விளங்கி
ஓமுதற் பொருள்நிலை யுள்ளுறும் ஆற்றல்
நிலைகலை நெறியால் நற்றமி ழாய்ந்தே
கலைமொழி தமிழெனக் கழறல் வழக்கே (683)

ஓர் இடத்திற்குரிய பருப்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், மூலப்பொருள், காலம், குறிநிலைக் குறிப்புகள், முற்றத்துறும் முனைப்பு, முயல்நெறி, தென்திசைச் சிறப்புக் கூறுகள், எழுத்தியல் ஆக்கம், கோட்டு வகைகள், புள்ளிநிலைகள் ஆகிய இவற்றை ஓம்-எழுத்தின் வடிவப் பின்னணியல் உணர வேண்டும்.

The expert in Vastu should observe the following in terms of the structural features of Om-sound: - gross and concrete substance, foetus-substance, basic rhythmic measure of it, primal substance, time, marks, features of frontal area, upward force, specific features of the direction of South, letter-identity, and the significance of various lines and dots.

ஒளிப்பொருள் மூலத் தியல்வெளி யாய்ந்தே
வெளிப்பொருள் ஒளிநிலை விரைவுற நோக்கி
ஒளிமொழி ஓசை ஒலியியல் கருதி
வெளிமொழி ஓம்நிலை விளங்கக் கருதி
கருத்துறும் ஓம்உரு ஓமியல் ஆற்றல்
பொருந்த நோக்குழி எட்டுறுங் கலைநிலை
எண்ணெண் ணியலா லியலுற நோக்கி

எண்ணு மெழுத்து மியைபின் ஆய்ந்து
பண்ணு மொலியும் நெறிமுறை கூர்ந்து
கண்ணுங் கருத்து மொன்றுறும் ஆற்றால்
நுண்ணறி துணர்ந்து நோக்குபு நோக்கி
ஆணிற் பெண்ணும் பெண்ணி லாணும்
காண்நிலை உயிர்நெறி ஒன்றென் றோர்ந்து
கருநிலை இயல்நிலை கருத்துற் றாய்ந்து
ஒருநிலை பிண்டம் அண்டம் உன்னி
வருநிலை அண்டம் பிண்டமும் நிலைநெறி
பெருநிலை யியலால் பெட்புற நோக்கி
அறுபான் நான்குறும் ஆற்றல் மூலம்
உறுநெறிக் கலைஒளி உண்மை விளம்பி
மூல முதலா யாறும் நோக்கிக்
கோலத் தெழிலக விண்ணெறி நோக்கி
குறிப்பி னுணர்ந்து குறிப்பி னாய்தல்
நெறிமுதற் கலைநெறி எண்ணெறி வழக்கே (684)

ஒளிப்பொருளின் வெளிநிலை, வெளிப்பொருளின் ஒளிநிலை ஒளிமொழியின் ஓசைத்திறம், ஓம்-தொடர்பான கூறுகள், எண்-எழுத்து - பண்நிலை ஆய்வு, ஆணில் பெண் கூறும் பெண்ணில் ஆண் கூறும் கண்டு, படைப்பியல் தொடர்பான உண்மை — இவற்றை 64 இயல் அடிப்படையில் உணர வேண்டும். உயிர்நெறி ஒன்றெனத் தெளிந்து கருநிலை, ஒருநிலைக்குரிய பிண்ட-அண்ட இணைப்பு, வருநிலைக்குரிய அண்ட-பிண்ட இணைப்பு, கோலத்தின் அகவிண் — இவற்றையும் 64 இயலின் ஆற்றலால் உணர வேண்டும்.

Space-aspect of light stream, luminous aspect of space field, aural features of luminous syllable, various aspects of Om, number, letter, observations on rhythmic measure equalised with melody, basic principles of creation, observation of male-constituents in female structure and that of female constituents in male structure - one should know all these through the systematic study of 64 squares. Through the same source, he should understand the nature of foetus-substance, microcosmic-macrocosmic identity in the pedestal, macrocosmic-microcosmic identity in the upper structure and the inner space of FORM.

பொருண்மை சுட்டல் பொருளறி மெய்க்கலை
தெருண்மை நோக்கல் சீரறி வாற்றல்
மருண்மை தவிர்த்தல் மாக்கலை நெறியாய்த்
தெருளுறுஞ் சிற்ப மோவியஞ் செந்தமிழ்
இசைநிலை ஒலிநிலை ஒளிநிலைக் கலையால்
நசையற நோக்கி நாடுவ நாடி
எண்ணிலை யியல்மொழி யைந்தியல் மொழியாய்த்
தெண்ணிலை நெறிக்கலை சீரறி வுற்றே
மொழிக்கலை யுணர்ந்தே முன்னறி வுற்றே
மெய்முதற் பொருள்நிலை முன்னி யுணர்ந்தே
கலைமொழி யியல்மொழி கருத்துற் றாய்ந்தே
நிலைமொழி நெறியால் நீள நினைந்தே
கடிதி னோக்கிக் கருப்பொரு ளாய்ந்து
நெடிதி னுணர்ந்து நெறிக்கலை நுட்பம்
ஓங்குற வோக்கி வுணர்வுறுத் திறத்தால்
தேங்குறுஞ் சீர்நிலை தெள்ளுற் றாய்ந்தே
அயரா துழைக்கு மரும்பெரு மாற்றலும்
மயலறு மதியும் மதிஒளி நுட்பமும்
செயிரறப் பெற்றே செந்நெறி நிலைத்திறன்
உயிர்ப்பு முணர்வு மொளிநிலைப் பெருக்கம்
நன்றுறும் ஒளிநிலை மூலத் தியல்நெறி
ஒன்றுற் றோர்ந்தே உண்மை காண்டுழி
மெய்ப்பொருள் நிலைகலை மெய்யிய லுணர்ந்தே
மெய்நிலை செப்பல் கலைமொழி வழக்கே (685)

பொருண்மையைக் குறித்தல், பொருளை அறியச் செய்யும் மெய்க்கலையைத் தெளிவுறுத்தல், சிற்பம், ஓவியம், இசை, ஒலி, ஒளி, எண்நிலை, ஐந்தியல், கலைமொழி, நிலைமொழி — முதலானவற்றால் கருப்பொருளை ஆய்ந்து அதன் நுட்பங்களை உணர்தல், உயிர்ப்பு, உணர்வு, ஒளி அடைவு — இவை அமையும் முறையைக் கூறல் — இவை அனைத்தும் கலைமொழியின் செயற்பாடுகள்.

Denotation of objectness, imparting the method of knowing the exact nature of material, sculpture, drawing, music, sound, light, understanding of the foetus-substance by analysing it through numerical calculation, fivefold development, energising syllables, root-syllable, exposition of the formation of animating source, consciousness

(rhythm of the building) and luminosity - all these are effected by the science of energising sound-energy.

எண்கலை யியலால் விண்கலை ஓர்ந்தே
எண்ணெறி ஆற்றல் இயைபுறக் கண்டே
உடலியல் எட்டியல் ஒருங்குற் றாய்ந்து
உடலிய லெண்ணிலை உறுநிலை ஐங்குடில்
தெள்ளுற் றெறிநிலை சீர்நெறி நோக்கி
விள்ளுறும் மொழியியல் எண்ணிலை உடலியல்
உறுப்பியல் எண்ணள வியல்நிலை நுணுக்கம்
உறுநிலை உள்ளொளி உள்விசைச் சுழலல்
எண்ணிலை எண்ணி எண்முகத் தீர்ப்பியல்
உண்முக நோக்கால் விண்முதற் கண்டே
விண்கலத் தியல்நிலை வெளிநிலை விசைநிலை
தெண்ணிலைத் தெருட்கலை நெறிமுறை ஓர்ந்தே
ஆழித் திறனும் உருளை ஆக்கமும்
மேழி யாக்கலை தேர்க்கலை நுட்பமும்
ஒருங்குறத் தேர்ந்தே விண்கலத் தியல்நெறி
பெருக்கம் சுருக்கமும் பெட்புற் றாய்ந்தே
விசையின் விரைவும் ஆற்றலும் கருதி
விசைநிலைச் சுருக்கல் பெருக்க லோர்ந்து
விண்கலம் எண்ணிலை எண்ணெறி ஆற்றலால்
எண்ணரிய நெறியால் லியம்ப லறிவியல்
முண்மை தெளிந்தே எட்டின் ஆக்கம்
திண்ணம் அகவிண் ணொளிதரும் ஆற்றலாய்
விண்கலத் தியலல் விசைநிலைச் சுழலல்
எண்கலை நுட்ப மியம்பா நெறியே (686)

விண்கலையை ஓர்ந்தும், எண்நெறி ஆற்றல், உடலியல் எட்டியல், உடலின் ஐங்குடி நிலை, மொழிஇயல், உறுப்பியல், எண்ணளவின் நுணுக்கம், உள்விசைச் சுழற்சி, எண்முகத்து ஈர்ப்பியல் — ஆகியவற்றை உணர்ந்தும், வெளிநிலை, விசைநிலை — இவற்றை உணர்ந்தும் விண்கலை அமைப்பை மேற்கொள்ள வேண்டும். ஆழி, உருளை. மேழி — இவற்றை அங்கங்களாக உடைய தேரின் அமைப்பு நுட்பம் உணர்ந்து, விண்கலத்து விசையின் விரைவு, விசைநிலைச் சுருக்கம், விசைநிலைப் பெருக்கம், விசைநிலைச் சுழற்சி — ஆகிய இவற்றை உணர்ந்து எண்-நெறி ஆற்றலாலும் எட்டின் ஆக்கத்தாலும் விண்கலம் உருவாக்கும் முறையை வாஸ்துமாநெறி கூறும்.

Having known the science of built space, efficacy of numerical order, feature of built-structure, eightfold order, five zones of built structure, lingual feature, lineaments of limbs, subtle principles of numerical measure, rotations effected by interior force, eight directional pulls, outer space, speed-force — the expert should undertake the process of constructing space-vehicle (aero-plane). Based on the subtle principles of chariot design associated with essential parts such as whell, hub, axle, harnessing beam etc, the speed of space-vehicle, the reduction and increase of speed; speedy rotations — the science of Vastu sets forth the directions for constructing the space-vehicle by employing the numerical order and dynamic variations of eight (8).

ஒண்மை எண்மை நுண்மைத் திறனெறி
விண்ணியற் றிறந்தெரி வீர யாக்கலை
நுண்ணறி வுற்றே நுவலுறுந் திறத்தால்
எண்கலை யியல்நெறிக் கலைநெறி முறையால்
விசைநிலைக் கலையும் விண்முகத் தெரியும்
விசைநிலைச் சுழல்நிலை மேல்நிலை கீழ்நிலை
இடையிடை நெறிதரும் நிலைபெருஞ் சீர்நெறி
நடைநிலை விரைவும் விண்ணிலை விளைவும்
குறிப்பின் நோக்கிக் கூர்நிலை ஆய்ந்து
குறிநெறி அகவின் னொளிநிலை ஆற்றலால்
கீழியல் உருளை கெழுநிலை ஆற்றலால்
ஏழியல் பால்நிலை நடைநிலைச் சென்றே
விண்ணி லெழுப்பும் விசைநிலை முடுக்கி
எண்ணரின் முடுக்கம் இயல்புறத் தேர்ந்தே
எண்முகக் காந்தத் தியல்நிலை நோக்கி
எண்நெறி எரிநிலை ஈர்ப்புறுந் திறனால்
காற்று யெரியும் விசையில் கணக்கியல்
ஆற்றுறுந் திறனால் மெய்நிலைக் குறிப்பால்
உள்ளுரு உள்ளி விரைவின் ஓர்ந்து
துன்னல் குறிப்பின் தூநெறி நோக்கி
யன்னு யாவிசை விண்ணெழும் பியல்நிலை
பன்னு யாக்கலை விண்கலை நெறியாய்க்
கலைநெறித் திறயெனக் கருத்திற் கருதி
நிலைநெறி அறுபான் நாள்கா லாய்ந்தே

விண்கலத் தியல்நெறி எண்கலை நுணுக்கம்
எண்ணிலை எண்ணுறும் நெறிக்கணக் கியலே (687)

எண்கலை நெறி முறையால் விசைநிலைக் கலை, விண் முகத்து எரி, விசைநிலையின் சுழற்சி, மேல் அமைப்பு, கீழ் அமைப்பு, இடை அமைப்பு, நடைநிலை (Run way) க்குரிய விரைவு, விண்நிலை எழுச்சி, கீழ்இயல் உருளையின் ஆற்றல், நடைநிலையில் சென்று விண்ணில் எழும்பக்கூடிய விசைநிலையை முடுக்கும் நிலை, எண்ணின் முடுக்கம், எண்முகக் காந்தத்து இயல்நிலை, எரிநிலை, ஈர்ப்புத் திறன், காற்று, விசை ஆகியவற்றின் கணக்கீடு, — இவற்றைக் கருத்திற் கொண்டு, விசையால் விண்ணில் எழும்பும் நிலையை 64 இயலால் ஆராய்ந்து உணர வேண்டும்.

The technique of speed, knowable through numerical order, the fiery force of space-field, velocity of rotation, upper structure, lower structure, middle structure, runway meant for speedy advance, rising in space, the efficacy of lower wheels, the mechanism of increasing the speed so as to take the vehicle into space, numerical increase, eight-pronged pull exerted by the magnetic field, fuel-source, gravitational pull, calculation of the speed of wind and speed of the vehicle - keeping all these points in view, the expert should realise the position of rising into the space through the mechanism of 64 squares.

நிலையுங் கலையும் நெறியும் குறியும்
நிலைமுதற் பொருளும் நெறிவுற் றோர்ந்தே
நெறிநிலைக் குறியுங் குறிநிலை நெறியும்
அறிவிய லாக்க மைந்தியல் மொழியும்
கல்லுஞ் சொல்லுங் கலையும் பொருளும்
நெல்லும் எள்ளும் அளவியல் நெறியும்
செடிகொடி மரநிலைச் சீர்நெறி உயர்நிலை
வடிவுறும் பொருளியல் வரைவுறும் பொருளும்
உணர்வின் நோக்கி மெய்நிலை தெரித்தே
உணர்வியல் உணர்வொளி உணர்நிலைக் கும்மே (688)

நெறிகளையும் குறிகளையும் உள்ளடக்கிய ஐந்தியல் மொழி, கல், சொல், படைப்பிற்குரிய பொருள், நெல்-எள் அளவியல் நெறி, செடி, கொடி, மரம் முதலானவற்றின் தன்மைகள், வடிவுறும்

பொருள், வரைவுறும் பொருள் — இவற்றை உணர்வொளியால் அறிய வேண்டும்.

The fivefold lingual form associated with particular order and symbols, stony substance, sonic substance, material selected for construction, system of measurement involving the unit of paddy grain, sesame seed etc, features of plants and trees, substance meant of structure and substance meant for sketch - all these should be known through one's own power of consciousness.

தெளிவுற் றாய்ந்து சீர்நிலை நாடி
ஒளிநிலை யியலால் ஓங்குறும் ஆற்றலால்
உயிர்ப்பிய லுயிர்ப்பொரு ளுயிர்ப்பு முயிர்நில
உயிர்க்குல முன்னி ஒருநிலை நோக்கே
ஆக்கும் உயிரெலாம் ஒளிஒலி யியலே
உயிருளம் உயிர்நெறி உயிர்க்கலை உயிர்மொழி
உயிரிசை ஐந்தும் உயிருணர் வொன்றி
உள்ளுவ உள்ளி ஓங்குறும் நெறியால்
தெள்ளு மாக்கலைச் சிற்பச் செந்தமிழ்
ஓவியச் சித்திரம் ஒருநெறித் தன்மையால்
மேவுறும் தன்மை மெய்நிலை அறிந்தே
சித்திர மோவியம் சிற்பச் செந்தமிழ்
மெய்த்தக நெறிநிலை மெய்யுற் றுணர்ந்தே
உள்ளொளி எண்ணிலை உயிரிய லாய்ந்தே
தெள்ளு மாத்தமி ழெண்கலை நெறியே (689)

சிறப்பான நிலையைக் கருத்திற் கொண்டு, ஒளிநிலை நாடி, உயிர்ப்பியல், உயிர்ப்பொருள், உயிர்க்குலம் — இவற்றை அறிய வேண்டும். உயிரனைத்தும் ஒலி-ஒளி இயலே; உயிர்த்தன்மை உடைய உளம், நெறி, கலை, மொழி, இசை ஆகிய ஐந்தும் ஒருமுகப்பட வேண்டும். சிற்பத்தாலும் ஓவியத்தாலும் மெய்ந்நிலை அறிந்து எண்கலை நெறியால் உயிரியலை ஆய வேண்டும்.

Keeping in view the state of excellence, and the state of luminosity, one should know the nature of living things, mode of life and the world of beings. All the souls are of the nature of sound and light energies. Inspiriting consciousness, order, process of creation, lingual aspect, rhythmic aspect - all these five should be co-ordinated to

arrive at one-pointedness. One should investigate the nature of life through the systematic study of sculpture, d.awing and eightfold order.

மூலக் கருப்பொருள் பல்பொருள் விழுப்பொருள்
காலத் திறனறி யிடநிலை ஓர்ந்தே
கோலக் குறிப்பின் நிலையுணர் நெறிக்கலை
கால விளைவிய லளவியல் வளர்நிலை
காலப் பெழுதியல் கடிநிலை ஆய்ந்தே
கோல விண்ணிலை நாட்பொழு தியல்நிலை
மூல மாப்பொருள் முறைமையி னுணர்ந்தே
ஞாலம் விண்ணும் ஒளிநிலை யியல்தெரி
கூற்றுறும் நெறிநிலை குறிப்பி னோர்ந்தே
தேற்றுறும் அகவிண் ணொளிரும் இயலாய்
ஒன்றுறும் முறைதெரி உணர்வின் ஆக்கம்
நன்றுறும் ஐந்நெறி செந்நெறி நிலைத்திறன்
உளத்துணர் வுற்றே உள்ளொளி நோக்கிக்
களமுங் காலமுங் கருத்துற் றுணர்ந்து
கால நுட்பங் கணக்கிய லாய்ந்து
கால மியற்றும் நெறிநிலை நுட்பம்
மூலப் பொருளியல் காலத் தெருளியல்
சீலமுங் கோலமுந் தெரிவுறத் தெரிந்தே
ஞாலம் படைத்த லைந்தொழி லாக்கம்
கோலத் தறுபான் நானிலங் குறிப்பால்
எண்முறை எண்ணி இயல்நிலை ஆய்ந்து
விண்ணொளி அகஒளி மேவுதல் முறையே! (690)

கருப்பொருள, விழுப்பொருள், காலத்திறன், இடத்திறன், கோலக் குறிப்பு, அளவியல் நெறி, விண்நிலை, நாட்பொழுது நிலை, மூலப்பொருள் கூறுபடும் நெறி, அகவிண் அனைத்திலும் ஒன்றும் முறை, செந்நெறிக் கோட்டின் ஐந்நெறி, ஒவ்வொரு நிலையிலும் காலம், களம் ஆகியவற்றின் பங்கு — இவற்றை உணர்ந்தால் 64 இயல் பரப்பில் விண்ஒளியும் அகஒளியும் பொருந்தும் முறையை அறியலாம்.

The foetus substance, substance in its state of excellence, the working of time, characteristics of select area, message of Form, system of measurement, space-field, nature of time as indicated by planet and stars, the proliferating process assumed by the Primal Substance,

the process by which the inner space gets identified with each substance, the five functions assumed by the central line, the role of time and space in each state of emergence — if one understands all these, he could know the process by which space-light and conscious-light get identified in the frame of 64 squares.

கலைநெறி கலைமொழி கலைஇயல் கருதி
நிலைநெறி நிலைமொழி நிலைஇயல் நோக்கித்
தலைமொழி யுற்றே தன்னிலை நெறியால்
கலைத்திறன் நிலையிய லெண்ணெறி ஆற்றல்
அறுபான் நான்கின் நிலையிய லோர்ந்தே
உறுகலை நிலைநெறி உள்ளுறு முணர்வின்
தெரிநிலை அகவிண் சீருறத் தெரிந்தே
விரிநிலை இயக்கம் மெய்க்கலை உண்மை
ஐந்தியல் நிலையுற் றியல்நெறி நாற்புறம்
வந்துறும் நடுவண் புள்ளித் திறனாய்
மெய்யியற் கலையின் நிலைநெறி யோங்கி
ஐவகை யியல்தெரி ஆறியல் மூலம்
ஐங்குடி நுட்பம் அகமுணர் திறத்தால்
பொங்கொளி உணர்வொளி புகும்ஒளி பேரொளி
தங்கொளி ஐந்தின் தன்னிலை ஓர்ந்தோர்
அகவொளி புறவெளி இயல்பின் ஆய்ந்து
மிகுமொளி ஒலியியல் ஓசை நுட்பம்
புகும்ஒளி எண்ணிலைக் கலைநிலை நிறீஇ
வகுத்துறும் ஆற்றல் ஒளிக்கலை நுட்பம்
எண்ணெண் ணியலா லயில்முறை யியைந்தே
விண்ணொளி மூலத் தெழுதரும் ஆற்றல்
கண்ணொளிக். கதிர்நலம் காண்டல் மாநெறி (691)

அமைப்புக்குரிய நெறிகளாலும் மொழி இணக்கத்தாலும் 64-இன் நிலைஇயலை அறிய வேண்டும். அகவிண் விரிவடையும் நெறி, புள்ளியின் திறன் நெறிப்படி ஓங்கும் முறை, ஐவகை இயல், ஆறுஇயல் பொருந்திய மூலம், ஐங்குடி நுட்பம், பொங்கொளி, உணர்வொளி, புகும்ஒளி, பேரொளி, தங்கொளி எனப்படும் ஐவகை ஒளி — இவற்றை உணர்வோர் அகவொளி நுட்பத்தையும் புறவெளி நுட்பத்தையும் ஒளி-ஒலி நுட்பத்தையும் நன்கு அறிவர்.

One should know the technique of the frame of 64 squares through the constructional process and identity

of letters. The process of the expansion of inner space, the process by which the central dot gives rise systematically to elevation and height, fivefold aspect Primal Substance associated with six features, the subtle formation of five belts, five kinds of luminous streams — one who understands all these would be able to know the subtlety of both inner space and outer space and that of sound and light aspects.

என்னும் கலைநெறி மெய்யியல் வழக்காய்
உன்னுவ தோர்ந்தே உணர்நிலைக் காண்டுழி
மன்னு மாக்கலை நெறிமுறை வழக்கே (692)

என்னும் நெறியாலும், மெய்ப்பொருள் வெளிப்பாட்டு முறையை உணர்த்தும் நெறியாலும் வாஸ்து நெறியானது பெரும் வழக்கத்திற்கு உட்படுகிறது.

The science and technique of Vastu comes into application through the employment of numerical order and through the process of revealing the emerging pattern of Primal Substance.

மூலக் கனல்தெரி மெய்மை ஆற்றலால்
மூலப் புள்ளி மாநெறி தெரிந்தே
மூலம் முற்றும் முழுமை அறிந்தே
மூலத் தியல்நிலை எண்ணெண் கலையால்
கால வியல்தெரிக் கலைநிலை நுணுக்கம்
காலக் கணிநிலை முறைதையி னோர்ந்து
மூலப் புள்ளி யியல்நிலை ஆற்றல்
மூல துண்பொருள் மேவுறுங் கலைநெறி
எண்ணெண் கலைத்திறன் இயல்நிலை ஆற்றல்
எண்ணே எட்டே நெறிமுறை விளங்கி
விண்ணே ஒளியே வியனிலை நோக்கி
விண்ணொளி இயலொளி கணிநிலை ஆய்ந்தே
கோளக் குறிப்பின் கூர்நிலை ஆய்ந்தே
நீளம் அகலம் நெடுமை குறுமை
எண்ணிலைக் கணிநெறி இயல்புற் றோர்ந்து
தெண்ணிலை மையம் வையமுந் தேர்ந்து
அறுபான் நான்கியல் இருகூற் றியல்நெறி
உறுமூன் றியலாய் ஐயைந் தியற்கலை

உற்றறி வுற்றே உறுநெறி தேர்ந்தே
சிற்றறி வியலும் பேரறி வாற்றலும்
நுணுக்கம் கணுக்கம் குறுக்கம் இயல்நிலை
துணுக்கமும் கால்அரை முக்கால் அரைச்கால்
காணிமா காணி கணிநிலை இயலின்
காணிக் கூர்நிலை கலைநிலை ஒட்பம்
ஒன்றே இரண்டே மூன்று நான்கே
நன்றுறும் ஐந்து மாறே ழெட்டே
எட்டே ஏழே ஐந்துமுன் றொன்றே
எட்டுறு மியல்நிலை நெறிமுறை கூர்ந்து
அளவை ஆற்றல் அறிவுறத் தெரிநிலை
அளவிய லொன்றுறு மாக்கமு மாய்ந்து
கலைநிலை நெறிமுதற் கருத்தென் றோர்ந்து
நிலைநெறி இயக்கம் நினைப்பி னுணர்ந்தே
எண்ணு மெழுத்து மியல்தெரி வுற்றே
விண்ணும் மண்ணும் வெளிப்பட வுணர்ந்தே
உள்நிலை இயக்கும் உறுமுறைக் கணிநிலை
தெளிநெறித் தேர்ந்து எண்ணிலை மூலம்
நுண்ணிதின் முயன்று மூலமுங் கணிநிலை
எண்ணெறி ஆற்றல் எண்ணொளி மூலம்
கண்டுணர் நுட்பம் கருத்துணர் திட்பம்
விண்டுண ரியல்நெறி விளக்க மாநெறி (693)

மூலக்கனல், மூலப்புள்ளியின் இயக்க ஆற்றல், மூல முழுமை, அகவின் ஒளி, புறவின் ஒளி, நீளம், அகலம், நெடுமை, குறுமை, வையம், மையம், 64 இயலின் இருவகைச் செயற்பாடு, மூன்றியல், 25 இயல், நுணுக்கம், கணுக்கம், குறுக்கம், துணுக்கம், கால், அரைக்கால், காணி என உள்ள அளவுகளின் கணிநிலை, ஒன்று முதல் எட்டு வரை வளர்ந்து எட்டு முதல் ஒன்று வரை குறுகும் முறை, — இவற்றை முறைப்படி உணர்ந்து எண்ணாலும், எழுத்தாலும் விண்ணையும் மண்ணையும் இணைக்க வேண்டும்.

The primal fiery source, functional aspect of central dot, the completeness (all-encompassing state) of Primal Source, the luminosity of inner and outer space, length, breadth, lengthy state, shortened state, cosmic structure, central space, the twofold functional process of 64 squares, three modes, 25 aspects, subtlety, segment, thickness, fragment, the system of measurement involving decreasing

numbers, process of increasing from 1 to 8 and of decreasing from 8 to 1 - having systematically known these, one should unite both earth and space through the energetic aspects of numbers and letters.

மாநெறி ஒன்றே மெய்க்கலை மரபியல்
மாநெறி இயலே எண்ணிலை கூட்டி
தூநெறி எழுத்தியல் ஒலியியல் ஒளியியல்
பாநெறி சித்திர ஓவியஞ் சிற்பம்
ஐந்நெறி அருங்கலை அணியியல் திட்பம்
செந்நெறி ஓம்நிலை ஓம்நெறி விளக்கித்
தொன்நெறி அகவின் னொளிநிலை துலக்கிப்
பன்னெறி காணா நன்னெறி இலங்க
மன்னெறி மயன்நெறி மயல்தபுச் சீர்நெறி
தென்நெறி தமிழ்நெறி சீர்வாழ் நெறியாய்
எண்ணியல் நெறிக்கலை மொழிக்கலை யியல்நெறி
விண்ணொலி காட்டித் தொன்னிலை விளக்கும்
அறுபான் நான்கியல் மூல மாப்பொருள்!
உறுமுறை அறிதல் உண்மைத் தெளிவே
எட்டொரு மாவெண் காணியெண் ணளவியல்
எட்டியல் காணி இயல்முக் காணி
விட்டள வியற்கலை அரைக்கால் காலே
தெட்டுறும் காலரை முக்கா லுணர்ந்து
விதிமுறைத் திறனெறி விரிவுற் றாய்ந்தே
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுமுறை ஆய்தல் மாநெறி யியலே (694)

வாஸ்து மாநெறியே எண்-நிலை பொருந்திய எழுத்தியல், ஒலி இயல், ஒளி இயல், சித்திரம், ஓவியம், சிற்பம், ஐந்நெறி, ஓம்-திறம், அகவின் ஆகியவற்றையும் மா, காணி, முக்காணி என உள்ள நெடுங்கணக்கியலையும் குறுங்கணக்கியலையும் விளக்குவதாக உள்ளது.

It is the science of Vastu that is capable of expounding the subtle principles of eightfold orthography, science of sound and light, sculpture, drawing, sketch form, fivefold order, aspects of OM-syllable, inner space and the increasing and decreasing process of reckoning and so forth.

எட்டின் இயல்தெரி எண்ணெறி அளவே
எட்டின் நெறிக்கூர் விண்ணொளி அளவே
எட்டின் இயலும் பார்நெறி அளவே
எட்டின் நெறிமுறை அறுபான் நான்காய்
எட்டின் ஆக்கம் எழுத்தின் கலைநிலை
எட்டின் பிறழ்வே ஓம்நிலைக் கலைநெறி
எட்டுறும் எண்ணே எண்ணிலை இயக்கம்
எட்டியல் திண்மை எட்டுறும் நுண்மை
எட்டுறும் வண்மை பன்மொழி யாக்கம்
எட்டுறும் நிலைநெறி ஐந்திசை யாக்கம்
எட்டுறும் கலைநெறி ஏழிசைக் கலையாய்
எட்டுறும் உறுப்பியல் முகத்தளவியலாய்
எட்டுறுங் கையள வியல்நெறித் தன்மை
அணுதேர்த் துகளும் இம்மி எள்ளாய்
அணுகுதல் கைவிரல் எட்டெட் டெட்டாய்
கண்டுறும் நுட்பம் கணிநிலை நுட்பம்
விண்டுறும் நுட்பம் காலமா நுட்பம்
உணர்நிலை அறுபான் நான்கியல் விரிவால்
புணர்நிலை மூச்சுங் காற்றும் எண்ணெண்
நுட்பம தறிந்தே ஒட்பமுற் றாய்ந்தே
திட்பத் தியலுணர் சீர்நெறி யாண்டும்
எட்டின் இயலறி எண்கூர் மாந்தர்
நுட்ப மறிந்தே நுண்ணுணர் வோரே (695)

எண்ஒளி, விண்ஒளி, பார்நெறி அளவு — இவை எட்டின் நெறியே. எழுத்தின் நிலையும் எட்டின் ஆக்கமே. எட்டின் பிறழ்வே ஓம்நிலைக்கலை. திண்மை, நுண்மை, மொழியாக்கம் — அனைத்தும் எட்டால் அமைபவையே. எட்டின் நெறியாலேயே ஐந்திசை ஏழிசையாகிறது. எட்டு வகை உறுப்பியல் முகத்தளவு இயலே. எட்டணு தேர்த்துகள் எனப் பெருகும் அயவியலும் எட்டே. கணிநிலை நுட்பம் கால நுட்பம், 64 இயல் விரிவு, மூச்சு, காற்று — அனைத்தும் எட்டின் திறத்தால் விளக்கம் பெறுபவையே.

The luminous aspects of number, space, earth, etc- all these are in the mode of eight. Only through the role of 8, the system of letters becomes operative. The modification of 8 results in the emergence of OM-aspects. The gross and subtle features, operative process of letters-

etc, are due to the mode of 8. Only through th: role of 8, fivefold music evolves into sevenfold music. The face-measure leads to the measure of eightfold limb. 1 1e system of measurement involving paramanu, chariot-dust etc, is due to 8. The minute system of measurement, minute state of time, the expansion of 64 squares, breathing process, wind — all these are effected only by the dynamism of 8.

எண்கலை நுண்ணியல் இயல்நெறி மெய்ம்மை
எண்கலைத் திறமும் ஐந்தியல் நுட்பம்
எண்ணுணர் நுட்பம் எழுத்தியல் ஒட்பம்
விண்ணுணர் நெறிக்லை முறைநிலை வெளியியல்
எண்ணெண் ணாக்கம் நாற்புறத் தியல்நிலை
சுழலுறும் ஆற்றல் ஐந்நிலைத் தெரிநிலை
சுழல்நிலை விரைவியல் நுட்ப மாநெறி
அண்டத் தியலொளி அண்ட நுணுக்கம்
அண்ட மாக்கலை விண்கூர் திறனிலை
விண்ணெறி விண்மொழி வியனிலை தெரித்தே
விண்ட மாக்கலை ஒலிஒளி யியல்தெரி
பண்டுறுந் திறனுறும் பார்நிலைக் கலைநிலை
பாரிடம் ஆயும் பெருங்கலை நுட்பம்
பாரியல் பார்நெறி நிலத்தியல் வண்ணம்
நிலமறிப் பெருங்கலை நிலமறி நுட்பம்
நிலத்திய லறிநிலை நெறிநிலைக் கலையியல்
நிலத்தியல் மூலம் நெறிகணி நிலையால்
புலத்துற் றோங்கி எண்நிலை மூலம்
ஆறே பத்தே பத்தா றாக்கம் ௫
ஆயுறும் அ' 'யம் அருங்கலைப் பாரியல்
பாரியல் கணக்கியல் பண்புற் றாய்ந்தே
சீரியல் திறனுற் றோர்ந்துறும் மதித்திறன்
நிலத்தியல் நீரியல் நிலத்துறும் நீரியல்
நிலமனை வாழ்மனை வளர்மனை ஆழ்மனை
ஒளிமனைப் பெருமனை சிறுமனை யியலாய்
வெளிநிலைக் கலைதிக ழோங்கு மாமனை
அரண்மனை முரண்மனை ஆயம் ஆய்தலும்
திண்டுறும் இயல்மனை தேற்றம் தெளிதலும்
பாழ்மனை வீழ்மனை தேய்மனை நுணுக்கம்
ஏழ்மனை ஐமனை இயல்தெரிக் குறுக்கம்

மனையிய லாக்கம் மாண்புற் றுணர்ந்தே
வினையியற் கலைநெறி விளங்க வுணர்ந்தே
விட்டிடம் வெற்றிடம் தெற்றிடம் சீரிடம்
எட்டிடம் தெட்டிடம் காவிடம் கலையிடம்
நீரிடம் நிலையிடம் முகப்பிடம் வடிவிடம்
ஓரிடம் ஒளியிடம் உண்கலைப் படைப்பிடம்
இல்முன் வாயில் இயல்புறத் தேர்ந்தே
தொல்நெறிக் கட்டிடக் கலையியல் நுணக்கம்
மனைநிலைக் கலையும் நிலமனை நுட்பமும்
வினையியல் கட்டிடக் கலைநெறித் திட்பமும்
மேவுறக் கண்டோர் தாவில் தன்மை
ஆவலா லுணர்வோர் அண்டத் தியலைக்
கண்டு தெளியும் கலையின் ஆவலாய்
பண்டுறும் மெய்க்கலை நெறியுணர் வாரே (696)

நாற்புறத்து இயலின் கால விரைவியல், அண்டத் தொடர்பான உண்மைகள் முதலானவற்றை உணர்ந்து நிலத்தின் தன்மைகளை அறியும் நுட்பம், 6, 10, 16 என உள்ள ஆயக் கணக்கியல், நிலத்துறும் நீர்இயல், நிலமனை, வாழ்மனை, வளர்மனை, ஆழ்மனை, ஒளிமனை, பெருமனை, சிறுமனை, அரண்மனை, முரண்மனை (கொத்தளம்) — ஆகிய இவற்றின் ஆயக்கணக்கு, பாழ்மனை, வீழ்மனை, தேய்மனை, ஏழ்மனை. ஐமனை என உள்ள மனை அமைப்புகள். விட்டிடம், வெற்றிடம், கலையிடம், நீரிடம், உண்கலைப் படைப்பிடம் முதலான மனைப்பகுதிகள், முன்றில், வாயில் — ஆகிய இவற்றை அறிந்து கட்டிட நுணுக்கத்தையும் நிலமனை நுட்பத்தையும் உணர்வோர் அண்டத்து இயலைத் தெளிவாக உணரவல்லவராவர்.

The subtle process of knowing the nature of ground through the knowledge of speedy gyration of time effected in the four-sided frame, and of the principle of macrocosm, ayadi calculation in the mode of 6, 10 and 16 and in relation to various kinds of buildings and built areas, built areas that are inauspicious, various portions of the house such as verandah, portico, kitchen, study-room etc - Having known all these, those who understand the subtle principles related to building construction and selected plots would evidently know the truths of macrocosmic structure.

கட்டிடக் கலையியல் நல்லியல் நுட்பம்
கட்டிடத் தொல்லியல் பல்லியல் கணக்கியல்
கட்டிட மெழுநிலை வாயில்நன் முகப்பும்
கட்டிடம் நிலத்தியல் நீர்நிலைத் திறனிலை
முப்புல ஆயம் முறைநிலை ஆயம்
தெட்டுறும் ஆயம் சீர்நிலை யியலாய்
ஆயம் அறிகலை அரும்பொருள் நுட்பம்
எண்நிலை எண்ணெண் இயல்நிலை பெருக்கி
எண்முறை எண்ணால் இரண்டு பத்தேழ்
திண்ணம் கண்டுணர் சீர்நிலை ஆய்ந்தே
எண்ணோ டொன்றாய் ஒன்பதும் நோக்கி
நெறிமுறை நிலைபெறும் ஆக்கம் ஆழ்ந்தே
குறுநிலை ஆறே பத்துபத் தாறாய்
நோக்குறும் நிலையும் நுண்ணுற நோக்கி
ஆக்குறும் ஆயப் பெருங்கலை ஆய்தல்
கணக்கிய லுணர்ந்துங் கணக்கு மாநெறி
பிணக்கற வுணர்ந்தே பெருங்கலை யியற்றல்
கட்டிட நிலைதெரி கலைவல் லாரின்
எட்டிய லறிநிலை இயலறி நுட்பம்
பண்டுறும் பாரியல் பெருங்கலை ஓர்ந்து
விண்டுறுங் கட்டிட மெய்நெறி யுணர்ந்தே
பொருளுணர் நிலைகலை வாழ்நாள் முதலாய்
நிறைநிலைப் புகழ்நெறி மகப்பே றியலும்
நெறியுற் றோர்தல் அறிவர்மா நெறியே (697)

கட்டிடம் எழும் நிலத்தியல், நீர்நிலைத்திறன், வாயில், முகப்பு, முப்புல ஆயம், அடுக்குநிலை ஆயம், 27 மீன்களின் தொடர்பான நிலை, 9 என உள்ள அம்சம், 6, 10, 16 என உள்ள ஆயக் கணக்கு — இவற்றைப் பற்றிய உணர்வால் நிலையான ஆக்கம் காண வேண்டும். ஆயப்பெருங்கலை ஆய்வே பொருள், வாழ்நாள், நிறைநிலை, புகழ், மகப்பேறு, முதலான பேறுகளைத் தரும்.

One should ascertain the state of longevity through the knowledge gained by the study of the features of ground meant for construction, watery source, portico, facade, ayadi calculation related to threefold structure and multistoryed structure, positions as denoted by 27 stars, nine kinds of 'amsas' and āyādi in the mode of 6, 10 and

16. It is the meticulous analysis of āyādi calculation that yields auspicious benifits such as wealth, long life, plentitude, fame, blessedness with good children, etc.

மெய்க்கலை உணர்வா லெண்ணெண் நிலைத்திறன்
மெய்முதற் பொருளாம் நிலையுறும் நெறிக்கலை
உள்ளுற் றுணர்ந்தே ஒருபொருள் நாடி
விள்ளுறும் நிலைக்கலை விண்ணெறி மூலம்
அண்டம் ஆய்கலை அருங்கலை நெறியாய்
அண்டம் நோக்கல் பெருங்கலை உணர்வே
அண்ட மாக்கலை அறிவியல் நுட்பம்
அண்டத் தியல்நிலை அறிவுறும் ஆற்றல்
எண்ணிலைக் கலையா லியற்புற் றாய்தல்
எண்ணமு முணர்வி னினைபும் நோக்கி
சிற்றலை இயல்தெரிச் சீர்நிலை ஓர்ந்து
உற்றறி நுட்பம் ஒருகலை நெறியாய்ப்
பெற்றுறும் ஆறு ஆநிலத் தியல்நெறி
மூலம் முதலாய் முன்னரிய ஆறும்
காலச் சீர்நிலை கருத்துற நோக்கி
அகலின் ணாய்நிலை அண்டத் துள்ளொளிர்
மிகவொளி வெளியியல் மெய்நிலை கூட்டும்
மூலக் கலையால் மெய்நிலைத் திறத்தால்
கோலச் செங்குடி பைங்குடி நோக்கி
ஐங்குடி யியலுறும் ஆநிலம் ஆறும்
அங்குறும் முச்சுடர் அறுசுடர் நோக்கி
அகலின் ணாற்றலால் அண்ட மாக்கலை
அகத்துணர் வுற்றே நெறியுற் றாய்தல்
ஒளிக்கலை நெறியுறும் உயிரியல் செந்நெறி
வெளிக்கலைக் குறியுறும் உயிரியல் மாநெறி
அண்ட மாய்அறி கலைதெரி மக்களே (698)

கட்டிடத் தொடர்பான நெறிமுறைகளாலும், விண் நெறியாலும் அண்ட-இயலை அறியலாம். அண்டத்தியல் தொடர்பான அறிவால் சிற்றலை நிலையை அறிய வேண்டும். ஆறுவகை நிலம், மூலம் முதலானவை, காலச் சீர்நிலை, அகலின் அமைப்பு — இவற்றால் அண்ட வெளி இயலை அமைப்பு நிலையிலும் இணைக்க வேண்டும். செங்குடி முதலான ஐங்குடி அமைப்புமுறை, ஆறு நிலம், அங்கே பொருந்தும் சுடர் வகைகள், ஒளிக்கலையும் வெளிக்கலையும் உடைய உயிர்இயல் நெறி — இவற்றை அண்டத்து இயல் அறியும் அறிஞர் நன்கு உணர்வர்.

One could understand the nature of macrocosmic structure through the knowledge related to constructional processes and to the science o built space. He should understand the nature of microbode through the study of macrocosmic structure. He should unify the features of macrocosmic structure with the constructions through the knowledge about six kinds of built areas, primal substance, etc, the rhythmic movement of time, formation of inner space and so forth. Those who know the features of macrocosm would evidently and clearly understand the formation of five belts, six kinds of built areas, various luminous energies that are present in them, mode of living entity associated with light and space aspects.

எண்டிசை மூலத் தென்றிசை மக்கள்
அண்ட நுணுக்கமும் பிண்டத் தியலும்
கொண்டுணர் குறிப்பின் கூர்த்த மாமதி
விண்டுணர் அறிவோர் மெய்த்தக வாற்றல்
கொண்டுணர் தென்றிசை தென்புலச் சீரோர்
சீரோர் சீரறி சீர்மைச் செந்நெறி
நேரோர் நெறியால் நிலைபெற நோக்குபு
அண்ட முணர்ந்தும் அறிவறி வாய்தல்
மண்டுபே றறிவன் மாக்கலை உணர்வே
விண்ட மாக்கலை விள்ளுநற் றமிழ்க்கலை
பண்டுறுங் கோள்நிலை கோளம் ஞாலம்
அண்டம் வானம் விண்ணடு விண்ணிலை
மண்டும் வெளிப்புற ஒளிநிலை ஆற்றல்
வானம் வானத் தொலியிடை ஓசை
வான மூலமும் வகையுற் யாற்ந்தே
விண்ணி ளியல்நெறி விண்ணொளக் கலைநெறி
விண்கதி ரொளிநிலை வெளிநிலை ஒளியிடை
ஒளியுறு மொலியு மொலியுறு மொலியும்
ஒளியிடை நுட்பம் ஒலியிடை நுட்பம்
ஒளிஒலி மூலக் கருநிலை நுட்பம்
ஒளிஒலி ஓசை ஒலியியல் ஆற்றல்
கருநிலை மூலக் காற்றியல் ஆற்றல்
பெருநிலை காலக் கணிநிலை தேற்றம்
கொண்டுணர் குறிப்பால் விண்டுற நோக்கின்
அண்டம் ஆற்தல் அறிவர் கலையே (699)

எண்திசை, எண்திசைக்கு மூலமாகிய தென்திசை, தென்புலம், அண்ட நுணுக்கம், பிண்ட நுணுக்கம், கோள்நிலை, ஞாலம், விண்-நடு, வெளிப்புறத்து ஒளிநிலை, ஒலி-ஒளி இணக்கம், கருநிலை நுட்பம். கருநிலைக்குரிய காற்றின் ஆற்றல், காலக் கணிப்பு — ஆகிய இயவற்றால் அண்ட நெறியை ஆய்தலே அறிவர் செயல்.

It is the methodic approach of the knowers of Vastu science to analyse the macrocosmic functional order through the study of eight directional features, the specific nature of the direction of South which serves as the basic direction for all other directions, south zone, subtle features of macrocosm and those of microcosm, positions of planets, universe, the exact centre of central space, luminous aspects of boundary row of the frame, union of sound and light aspects, the subtlety of foetus-point, its airy force, ascertainment of time-measure etc.

கலைநிலை நெறியா லறுபான் நான்கின்
நிலைநெறி எண்ணெண் ணியல்நிலை நோக்கி
ஐந்தியல் மூலம் பெரும்பொரு ளுணர்ந்தே
ஐந்நெறி செந்நெறி மூலத் தியலால்
ஆறு ஆநிலை முச்சுடர் அறுசுடர்
வேறு வேற்றியல் நிலைதெரி இருசுடர்
செங்குடி பைங்குடி சீர்நிலை அறிந்தே
ஐங்குடி மெய்ந்நிலை உண்மை யோர்ந்தே
மூலத் தெழுகலை முறையை யோர்ந்தே
காலத் தியற்கலை கணக்கிய லாய்ந்தே
நொடிநொடி இமைநிலை நுட்பந் தேர்ந்தே
கொடிநிலைத் தேர்க்கலைக் கால முணர்ந்தே
காலத் தியல்தெரி மெய்ந்நெறி நுணுக்கம்
கருத்துற் றாய்ந்தே உண்மை இயலால்
பெருநிலை நுண்ணிலை இயற்கலை திட்பம்
உள்ளூற் றுணர்ந்து ஒருபயன் நோக்கித்
தெள்ளூறும் சீர்நிலைக் கலைநிலைத் திறனால்
மெய்யியல் நுட்பம் உணர்வுற் றோர்ந்து
உய்முறைக் காண்டல் அறுபான் நான்கின்
மெய்த்திறக் கலைநிலை ஒளிநிலைக் கூறென
உய்த்துணர் நெறியால் உண்மை விளங்கும் (700)

64 சதுரங்களில் 64 நிலைகள் உண்டு. இவற்றுடன் தொடர்புடையனவாக உள்ள ஆறு ஆநிலை, முச்சுடர், அறுசுடர், இருசுடர், செங்குடி முதலான ஐங்குடி அமைப்பு — இவற்றை உணர்ந்தும், மூலத்தின் எழுச்சியை முறைப்படிக் கணித்தும், கொடிநிலையாலும் தேர்க்கலையாலும் கால நுணுக்கத்தைக் கணக்கிட்டும் வடிவம் உருவாகும் முறையை அறிய வேண்டும்.

There are 64 space-points in the whole range of 64 squares. In relation to these there are six kinds of areas-fit for construction, threefold, sixfold and twofold luminous streams present in them and formation of five zones. Having understood all these and systematically calculated the towering of primal source, and calculated the subtle role of time through the units of chariot-flag and chariot-parts, one should know the constructional process of FORM.

எண்கலை நுட்பம் இயல்புற் றாய்ந்தே
விண்கலை இயல்நெறி விளக்க மாநெறி
நுண்கலை உணர்வால் மூலப் புள்ளி
விண்தெரிச் சீர்நிலை உள்விண் நோக்கி
ஒளிஒலிக் கூர்நிலை ஒலிஇய லாய்ந்து
வெளிவெளித் திறனிலை மெய்ம்மை இயலாய்
அணுத்திற னாக்க மாய்வுறும் முறைநிலை
அணுஅணுக் கூறியல் அணுக்கதிர் இயக்கம்
அணுஒலி அணுஒளி அணுநிலை அறிந்தே
அணுத்திரள் நிலைத்திறன் இயல்புறுந் திறத்தால்
ஒருநிலைக் கலைநிலை இருநிலை மூச்சே
வருநிலைக் காற்றியல் வகையுற் றாய்ந்தே
அகவின் னோக்கி ஒளிநிலைத் தெளிகலை
மிகும்ஒளி ஒலிநிலை உற்றறி திறத்தால்
எட்டெட் டியல்நிலை இனிதுற் றோர்ந்தே
முட்டறும் மெய்நிலை உணர்வுறுந் திறத்தால்
கலைநிலை நெறிமுறை கருத்தறி இயக்கம்
நிலைமுறை ஆய்ந்து நெறிகுறி இயற்கலை
உலைவிலா முயற்சி உயர்வுறுந் திறனெறி
நிலைஎழும் மெய்த்திறன் எண்ணெறித் திறத்தின்
உற்றறிச் சீர்நெறி உள்ளு ளுணர்ந்தே
தெற்றென உணர்தல் மாநெறி இயலாய்

அறுபான் நான்கின் ஆக்கமா மூலம்
உறுநிலைக் கலையியல் உண்மை வழக்கே (701)

ஐந்தியல் மூலம் அறிவியல் மெய்க்கலை
ஐந்துறும் திறனே எண்ணியல் திறனிலை
மூலப் புள்ளி முன்னிய நல்கும்
காலக் கலைநிலை கணக்கியல் கூட்டும்
இமைப்பொழு தியல்நிலை எண்ணுற் றெண்ணி
இமையா நோக்கின் உணர்வுற் றோங்கி
உள்ளுள் ளாயும் ஒருபெருங் கலைத்திறன்
விள்ளுறும் பொருள்நிலை ஒளியியல் நோக்கிக்
கால யாத்திறன் கண்டுணர் திறமும்
மூல மெய்நெறி விண்டுணர் ஆற்றலும்
முப்பொருள் முந்நெறி செப்புறும் இயல்நிலை
மெய்ப்பொருள் உணர்கலை எண்ணியல் தெரிந்தே
திட்பமும் நுட்பமும் செறிவுற் றாய்ந்தே
ஒட்பத் தியல்நிலை ஒளிநிலைக் கலையியல்
ஒளியுணர் வொன்றே உறுமியல் நிலைநெறி
வெளியுணர் நிலைகலை கலைத்திறன் ஆக்கும்
எண்ணிலை எண்முறை எண்கலை எண்டிறன்
எண்ணிய லைந்தும் இயைபுற் றோர்ந்து
விண்ணுறும் ஆக்கம் நெறிமுறைத் திறனாய்
எண்ணி னியன்று முயன்றுறும் மூலம்
கண்ணொளிக் கலைநிலை கருத்துற் றோர்ந்து
விண்ணொளி ஒலியியல் தன்மை நிறீஇ
ஒளிஒலி நுட்பம் ஓங்குற் றுணர்ந்தே
வெளிஒளி நிலைதெரி அறிநிலை யியலே
உணர்வுறுந் திறநிலை உள்ளுள் ளார்ந்தே
உணர்வா லறிகலை உணர்வா லுறுநிலை
உணர்வின் ஓர்தல் ஒளிநிலைக் காண்டல்
உணர்வெழும் ஆற்றல் ஒளியியல் தேற்றம்
உணர்வே ஒளியே மூலப் பொருளே
உணர்வின் திறத்தால் மெய்ப்பொருள் நாடி
அகவின் னோக்கல் ஐந்நிலை தெரிந்து
அகவின் னொளியா லைந்தியல் தேர்ந்து
அகவின் நுட்பம் புறவின் திட்பம்
அகத்தொளி ராற்றல் அகமும் புறமும்
மிகுத்துறும் மெய்நிலை தேற்ற முணர்ந்து
அறிவியல் நிலைதெரி யியல்நிலைக் கூற்றே (702)

குறியியல் நெறியியல் குறித்தறிப் புலமாய்
ஒன்றுறு யொன்றில் லொன்றி னோர்ந்தே
ஒன்றிரண் டொன்றில் ஒன்றுறும் ஒன்றே
ஒன்றிய ஒன்றால் ஒருகலை யாக்கம்
தென்கலை தென்னிலை தென்மொழி தென்னியல்
தென்புலம் தென்நிலம் தென்றிசை மூலம்
எண்டிசை இயல்நிலை தென்றிசைக் கலைநிலை
எண்டிசை எண்ணிலை தென்றிசை ஒன்பான்
எண்டிசை எட்டே தென்றிசை பிறழ்நிலை
எண்டிசை மெய்ப்பயன் தென்றிசை யியலெனு
நுட்பந் தேர்ந்தே திட்ப முணர்ந்தே
பெட்புறும் முணர்வின் பெருங்கலை ஆயல்
மெய்நெறிக் கலைநிலை அறுபான் நான்கின்
உய்வகைத் திறனெறி உண்மை யியலே (703)

எழுநிலை யாடம் எழுகலைத் திறனிலை
எழுமுணர் வோங்கும் எழுநிலைக் கலைநிலை
எழுமுறை எழுநெறி எழுந்திறன் உணர்ந்தே
எழுநா டித்திறன் இயல்புற் றுணர்ந்தே
அடிநிலைப் பார்நிலை ஆழிடம் வளரிடம்
கடிநிலை இல்நிலைக் கணக்கியல் தெரிந்து
நீர்நிலை நிலத்தியல் புலத்தியல் நுணுக்கம்
சீர்நிலை முற்றம் விட்டிடம் வெற்றிடம்
காவிடம் கலையிடம் கவினுறக் கண்டே
ஆவிடம் வாயில் கருநிலை இல்நிலை
மூல முப்புறம் புறத்தியல் நெறிநிலை
கோல மடுக்கும் இடையிடை அருக்கே
மிடுக்கு அடுக்கும் மெய்நிலை வட்டம்
இடுக்குறும் காற்றியல் இடைநிலை வளைநிலை
வளைநிலை வட்டம் நாற்புறத தியல்நிலை
வளைவுறும் மாடம் அழகுறும் கூடம்
விரிதரை இயல்நிலை மேலிடை அடுக்கும்
விரிநிலை வில்நிலை வேல்நிலை வடிவுறும்
புரிநிலை செங்கதிர் வடிவுறும் நிலைகலை
தெரிநிலை மலர்நிலை கலைநிலை யியல்வெளி
மூன்றுமூன் றியல்நிலை முழுநிலை அளவியல்
மூன்றிய லிடைநிலை முழுதுறத் தேர்ந்தே
ஒன்றுறு மெழிற்கலை நிலைபெறுந் திறநிலை
ஒன்றுறும் வாயில் முகப்புறும் திருநிலை

கட்டிடக் கலைநிலை கலைநெறி நுணுக்கம்
கட்டிட மமைகலை கணக்கியல் நெறியே (704)

கட்டிட மாக்கலை கணக்கியல் அறிந்தே
எட்டுறும் நிலைதெரி யியல்பிற் றேர்ந்தே
ஆறுபத் தியல்பத் தாறுத் தேர்ந்தே
கூறு மாஇயல் குறிப்பி னுணர்ந்தே
பார்நிலை நுட்பம் மண்ணியல் திட்பம்
சேர்நிலை திருநிலை இல்நிலை அமைப்பியல்
வாயில் முகப்பும் வெளிநிலை உள்நிலை
ஆவிடம் காவிடம் நீரிடம் சேரிடம்
அமைவுற் றாய்ந்தே தென்றிசை வாயில்
அமைவுறும் நிலைதெரி யியல்கலை நேர்மை
ஒன்பது நுணுக்கம் ஒண்ணிதின் தேர்ந்தே
ஒன்பது மூன்றின் பெருக்குறும் நிலைநெறி
ஆயத் தியலா லறிவுறத் தேர்ந்தே
ஆயம் ஆறு பத்துபத் தாறும்
ஆறுறும் நிலைதெரி அளவிய லோர்ந்தே
கூறுகூ றியலின் குறிப்புணர் கலையால்
வேறுவே றியலின் விளக்க மாய்ந்தே
வாழ்மனை வளர்மனை திருமனை பெருமனை
ஆழ்மனை அகல்மனை இயல்பிற் றேர்ந்தே
மனைநிலத் தியல்நெறி மாண்புறத் தேர்ந்தே
மனையியல் நிலமனை நெறிமுறை உய்ந்தே
நிலத்தியல் நீரியல் நெறியுற் றாய்ந்தே
புலத்தியல் அறிதல் பெருங்கலைத் திறனே (705)

கட்டிடக் கலையே கலைதெரி நுட்பம்
கட்டிடக் கணக்கியல் நூலியல் கோல்நெறி
கட்டிட நெறிமுறை கல்மண் ணாய்வியல்
ஆழத் தகலம் நீள முயரம்
ஆழத் தியல்நிலை அடுக்கடுக் கியல்நிலை
அடிக்கலை ஆழம் மேற்கலை யடுக்கே
முடிநிலை முகப்பே மெய்க்கலைத் தேற்றம்
அடுக்கும் இடுக்கும் அமைவுறத் தெரிந்தே
முடுக்கும் இடுக்கும் முடிவுற் றாங்கே
முன்புறத் தெழில்நிலை பின்புறத் தாக்கம்

தென்புற வாயில் சீர்நிலைக் குடபுலம்
நன்றினி தாய்ந்தே எட்டோன் பதுநிலை
தென்றிசை யியலைய்ச் சீர்பெற வமைத்தே
நீர்நிலை மூலை ஆவிடம் மூலை
ஓர்நிலை மூலை எழில்பெற வமைத்து
தீஎரி யிடமும் திருநிலை இடமும்
தீதறும் பள்ளித் திருவிடம் உணர்விடம்
இடநிலை முழுதும் இயல்நெறி ஆய்ந்து
குடபுலத் தியல்நெறி தென்றிசைக் கலைநெறி
வடபால் கீழ்பால் வகையுறும் அளவால்
ஆக்குறும் நெறிமுறை அளவினி தாய்ந்தே
நோக்குறும் கட்டிட நெறிமுறை யியலே (706)

கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி
கட்டிட மெய்த்திரு கலைநெறி ஆய்ந்தே
எட்டுறும் விண்ணின் இயல்நிலை ஓர்ந்தே
பார்விழிக் கலைநிலை பண்புறுங் காலம்
சீர்நெறிக் காலம் திருவுறத் தேர்ந்தே
வளர்நிலை இயல்கலை வகையுறுந் திறத்தால்
உளமுறும் உணர்வின் ஓங்குறும் மெய்க்கலை
அடிநிலை அடிக்கலை ஆழத் திறனிலை
முடிநிலை முடித்திறன் முந்நிலை இயல்தெரி
கட்டிடக் கலைநிலை கணக்கியல் ஆய்நது
தெட்டியல் சீர்நிலை மூலப் பொருள்நிலை
வடிவுறும் கட்டிட வனப்பியல் தெரிந்தே
குடியியல் கூரியல் மாடம் கூடம்
நெடிதியல் அகலம் குறுக்கம் நெடுமை
வடிவுறும் மேல்வளை வியல்நிலை கீழ்நிலை
கீழ்வளை வியலும் இடைவளை வியல்நெறி
கீழ்மேல் வளைவியல் மேற்புற வளைவியல்
வளைவியல் மேல்நிலை அடுக்கடுக் கியலும்
உளைவிலா நெடுநிலைபட பேரியல் மாடம்
கரிமுகத் தியல்நிலை கவினிலை மாடம்
விரிநிலை மலர்நிலை எட்டி ரிதழ்நிலை
தெரிநிலை கூடத் தெழில்நிலை மாடம்
எழுநிலை மாடம் எழுகலைக் கூடம்
எழுதாத் திறனிலை ஓவிய எழில்நிலை
வண்ண ஓவியம் விசையுறும் புறச்சுவர்

திண்ண மாக்கலை செங்கதிர் வடிவியல்
கதிர்வடி வியலுறும் கவினுறும் புறமாய்
மதிவடி வியலுறும் உள்நிலைக் கூடம்
வேயா மாடம் வீயாக் கூடம்
தோயா நிலையுறும் உருநிலை மாடம்
நீர்நிலை இயலிடம் ஆவிடம் பொழிலிடம்
தேர்நிலை இயற்கலை செப்பும் பேரிடம்
உறைவிடம் உண்டி நிலையுறும் சீரிடம்
மறைவிடம் திருநிலை வைப்பியல் சீரிடம்
பதினா றிடமும் எழுநிலை மாடம்
மதிநிலை வண்ணம் ஓவியம் புறஞ்சுவர்
கதிரொளி வண்ணம் ஓவிய ஒளிக்கலை
விதிமுறை வகுக்கும் மெய்நிலைப் புறஞ்சுவர்
முழுமதி தோன்றும் பெருநிலை மாடம்
எழுங்கலை யியலுறும் எழுநிலைப் பேரியல்
அடிநிலைக் கலைநிலை ஆறும் பத்தும்
முடிநிலை எட்டிரு நிலையுங் கூறும்
ஒன்பது மாக்கலை மூவொன் பதுநிலை
தென்றிசை வாயில் சீர்நிலை சிறக்கும்
குடபுலத் தியல்நிலை குறிக்கும் நேரியல்
வடபுலம் கீழ்ப்புலம் வகுக்கும் நிலையில்
எண்ணிலை எண்ணியல் கணக்கூற் றியலால்
திண்ணிலை கட்டிட சீர்நிலை இயலே (707)

ஓவியக் கலைதெரி மெய்நிலை வண்ணம்
ஓவிய வனப்பும் எழிற்கலை மூலம்
கதிரொளி யிலங்கும் எழுநிலை வண்ணம்
கதிரியல் ஓங்கும் ஐவண நிலையும்
ஓர்ந்துறும் ஆற்றல் உருநிலை நோக்கித்
தேர்ந்துறும் வடிவம் வனப்புறும் எழில்நிலை
கண்டுறுந் திறத்தால் கருத்துறும் ஆற்றல்
விண்டுறுந் திறத்தால் தீட்டு மாநெறி
வரைவிய ற்ற லோவியப் புனைவே
வரைநிலை தீட்டல் வகையுறத் தேர்ந்தே
உணர்வுங் கருத்தும் ஒருவழி நின்றே
உணர்நிலை நோக்கின் கைவழி கையியல்
கண்ணுங் கருத்தும் கலைநிலை மூலம்
எண்ணம் கைவினை எழுதியல் ஆற்றல்

தெரிநிலைக் கலையால் சீரும் விளக்கும்
புரிநிலை ஆற்றல் புனையா ஓவியம்
ஓவிய உணர்வே சிற்பக் குறிப்பே
ஓவியக் கலைநிலை சிற்ப மாநெறி
நெறிமுறை யுவந்து குறிமுறை நோக்கி
அறிகலை ஆற்றல் அமைவுறப் பொருந்தி
பொறிபுலன் நிலையுறும் பொன்றுறும் உணர்வால்
நெறியுறு முளத்தொளிர் நிலையுருத் தீட்டல்
ஓவியம் கலையின் உயிர்நிலை நெறியென
ஓவியத் தியல்நெறி ஒளிபெற் றாய்வரே (708)

வண்ண மாடம் வனப்பமை கூடம்
வண்ணத் தியலும் மெய்ம்மை வடிவியல்
வண்ணக் கலைநிலை வடிவுறும் ஓவியம்
எண்ணத் துருநிலை எழில்நிலை வனப்பே
உயிருண ரோவியம் உயிர்க்கலை ஓவியம்
உயிரொளி ஓவியம் ஒளியுயிர் ஓவியம்
ஓவிய உருநிலை சிற்ப மாநெறி
சித்திர மோவியஞ் சிறப் பாக்கலை
மெய்த்திறக் கலையொளி மேவும் ஓவியம்
ஓவிய வண்ணத் தியல்தரும்ஆற்றல்
மேவுறுஞ் சிற்பம் பேரொலி கூட்டும்
ஒளிக்கலை ஓவியம் ஒலிக்கலைச் சிற்பம்
வெளிஒளிச் சிற்பம் இயல்நிலைச் சித்திரம்
சித்திர மோவியம் சீருணர்த் திருநெறி
மெய்த்தக வாற்றல் மிளிர்கலைச் சிற்பம்
ஓவிய உருநிலை உள்ளுணர் கருநிலை
ஓவிய வடிவம் புறத்தியல் மெய்நிலை
சிற்ப மைந்திசை ஐந்தியல் சீரியல்
சிற்ப மாநெறி இயல்நிலைக் கலையே (709)

முப்பொருள் முக்கலை முந்நெறி முத்திறன்
செப்பரும் பொருள்நிலை சீருறத் தேர்ந்தே
பருப்பொருள் விழுப்பொருள் உரிப்பொருள் நெறிநிலை
கருப்பொருள் செம்பொருள் கணக்கியல் நெறியே (710)

**(701 - 710)**

மூலப்புள்ளியின் விண்திறன், அணுவின் பல்வேறு கூறுகள், அவற்றின் செயற்பாட்டு முறைகள், அணுத்திறள் அமையும் முறை, மூச்சுக் காற்றுக்கும் கால்நதிற்கும் உள்ள இணக்கம், எண்தொடர்பான ஐந்நெறிகள், அகவின்-புறவின் இணக்கம், தென்திசைச் சிறப்பு, எண்திசை ஆற்றல், எண்திசை எட்டின் திறத்தையும் தென்திசை எட்டின் பிறழ்வுத்திறத்தையும் குறிக்கும் நுட்பம் — இவற்றை முறைப்படி உணர வேண்டும்.

வடிவம் எழும் முறை, மண்டலத்தின் எழுவகை நாடிகள், ஆழிடம், வளரிடம், முற்றம், வாயில், கலைஇடம், கருநிலை முதலான மனைக்கூறுகள், ஒன்பதில் நடுவே உள்ள மூன்று சதுரங்களால் வாயில் அமையும் நெறி — இவற்றைக் கணக்கியல் நெறியால் உணரவேண்டும். ஒன்பது அம்சம், 27 மீன்நிலை, ஆயாதி — இவற்றால் மனைக்கூறுகளின் அமைப்புமுறையை ஆய்ந்து, நூல்நெறியாலும் கோல்நெறியாலும் அமையும் கட்டிடக் கணக்கியலால் கட்டிடத்தின் நீளம், அகலம், உயரம் முதலானவற்றையும், எட்டின் நிலை எண்திசை ஒன்பதன் நிலை தென்திசை என்னும் நுட்பத்தையும் உணர்ந்து மனையின் நாற்றிசைகளுக்கும் உரிய அமைப்புகளைக் கணக்கிட வேண்டும்.

கட்டிடக்கலையே கணக்கியல் உச்சி. முப்பொருள், முந்நெறி, முக்கலை, பருப்பொருள், கருப்பொருள் முதலான அனைத்தும் கணக்கியல் நெறிக்கு உட்பட்டவையே. வாஸ்து விழித்தெழும் காலத்தால் நற்பேற்றுக்குரிய அமைப்புமுறைகளைக் கணித்து, கட்டிடத்தின் வாயில், இடைநிலை, உச்சி, சாளரம், மாடம் முதலான பகுதிகளையும், மாடவகைகளையும் கூடவகைகளையும், புறச் சுவர் அகச் சுவர் அமைப்பையும், ஆயாதிக் கணக்கையும் கணக்கியலால் உறுதி செய்ய வேண்டும். ஓவிய அமைப்புக்குரிய வண்ணவகைகளையும் தீட்டும் நெறிவகைகளையும், உணர்ந்து, உயிர்ப்பும் ஒளியும் உடைய ஓவிய வகைகளையும் உணர்ந்து கட்டிட அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

The space-energy contained in the central dot, aspects of atomic structure and their functional modes, the formation of atomic clusters, co-ordination between one's breathing process and the time-flux, fivefold order related 8-unit dynamism, identity between inner space

and outer-space, uniqueness of South, efficacy of eight directions, the subtle truth which states that eight directions signify the energetic process of eight and the South signifies the variations and modifications assumed by eight - all these should be systematically known.

The process of manifestation of form, the seven channels of the mandala, foundation place, vacant place, built place, central courtyard, portico, study-place, foetus-place and such other parts of a house, entrance to be constructed in any one of the middle three squares of the nine-squared row - all these should be known through mathematical calculations. Nine amsas, position of 27 stars, āyādi - based on these one should analyse the constructional process through the system of rope-measures and rod-measures and he should know that the dynamic stars of eight denotes eight directions and that of nine denotes, specifically the direction of South and calculate the relevant measures related to the four sides of the built area.

The zenithal state of mathematical order is nothing but the science of building. Threefold substance, threefold order, threefold creative process, concrete substance, foetus - substance and all others are subject to the impeccable mathematical order. One should calculate the auspicious and beneficial constructional processes through the particular Time in which Vastu emerges from dormant state. He should ascertain the exact proportions and appropriate portions of a house, various kinds of super structure and hall, various structures of enclosing walls and āyādi calculations through appropriate mathematical orders. Having studied the principles related to the application of colours and drawings and having furnished with pleasing interior designs of sketches and drawings, he should construct the buildings.

உணர்வின் திறமே மெய்க்கலை யாக்கும் (711)

கலைமொழி கண்டுணர் கருத்தறி வுறறே
நிலைமொழி மூலம் நெறிமுறைப் பொருள்தெரி
தலைமொழி தனிமொழி தன்னிலை யாய்ந்துணர்
நிலைநெறி யாற்றல் நெடிது நினைந்தே
சிற்பம் ஓவியம் சித்திரம் கண்ட
பொற்புறும் ஒளிமொழி விண்மொழிச் செந்தமிழ்
கலைத்தொழில் மரபே கவினுறும் நெறியாய்
நிலைத்தொழில் மொழிக்கலை கலைமொழிச் செம்மை
எண்ணல் இயற்றல் எண்முறை யாற்றல்
எண்கலை எண்மொழி எண்நிலை ஓர்தல்
எண்ணுறுந் தனித்திறன் இயல்மொழி நிலைத்திறன்
விண்ணுறுந் கலைத்திறன் வெளிஒளி நோக்கி
சிற்ப மாமொழி செந்தமி ழிசைமொழி
பொற்புறு மோவியஞ் சித்திரம் மாக்கலை
பொருந்த நோக்கி மெய்வினை யாற்றல்
ஒருமொழி ஒளிமொழி உண்மை யுணர்ந்தே
வருமொழி நிலைமொழி வகையுணர்ந் தாய்ந்தே
மூல மாமொழி கால முணர்மொழி
மூலத் திறமொழி மெய்மொழிச் செம்மொழி
உணர்வா லுறுமொழி ஒளியால் திகழ்மொழி
உணர்கலைப் பெருக்கும் சீர்மொழி செழுமொழி
சிற்ப மோவியஞ் சித்திரக் குறியால்
சிற்றவை எண்ணிலை சீரியல் கணக்கியல்
அறுபான் நான்கியல் எட்டின் பிறழ்வால்
உறுபயன் நிலைதரும் ஓம்கலை தரும்மொழி
ஐந்தியல் நெறிதரும் அருங்கலை யுறுமொழி
ஐந்திசை ஏழிசைச் சிற்ப மாமொழி
வந்துறு மோவிய மெய்யுணர் தரும்மொழி
முந்து சித்தரக் குறிநிலை யியன்மொழி
தண்டமி ழைந்தியல் தகைவுறக் கண்டே
பண்டுறும் நெறிக்கலை பாரிய லாய்ந்தே
விண்ட மாக்கலை வெளியியற் கலையென
பண்டுறும் மரபியல் பகர்நெறிக் கலையே (712)

ஒளியா லுணரும் மெய்க்கலைச் செந்நெறி
வெளிமொழி ஓம்நிலை ஓம்கலை ஓம்மறை

தெளிவுறத் தேர்ந்தே செந்நெறி யாற்றலால்
ஒளிக்கலை ஒலிக்கலை நிலைநெறி தேர்ந்தே
மூலத் திறத்தியல் முன்னி யுணர்ந்தே
காலப் பெருநிலை கணிப்பின் ஆய்ந்தே
செவ்வி யியல்நிலை தெரிமுறை ஓர்ந்தே
ஒளிநிலைத் திறனா லுணர்வுறும் மெய்நெறி
வெளிநிலை யியற்கலை விளம்பற் பாற்றே (713)

மாடத் தியல்நிலை எழுநிலைக் கலையாய்
மாடமாக் கூடம் வண்ணத் தியற்கலை
எழுநிலை மாடக் கலைநிலை தேற்றம்
செழுங்கலை வண்ணத் தியல்தரும் ஓவியம்
ஓவிய மாடம் சித்திரக் கூடம்
ஓவிய உணர்வுறும் மெய்நிலைத் திறனிலை
கட்டிடக் கலைநெறி கணக்கிய லோர்ந்தே
கட்டிடம் ஒளித்திறன் நெறிமுறை யிலங்கி
எட்டியல் எண்கலை விதிமுறைத் திறனிலை
எட்ட ரியலும் பத்தும் ஆறும்
ஒன்ப திற்றியல் மூவொன் பதுநிலை
நன்றுற் றுறுநிலை நெறிமுறைக் குறியாய்
தொன்றுறும் மாநெறி உண்மை யுணர்ந்தே
அளவியல் நுட்பம் ஒருங்குற் றாய்ந்தே
மெய்க்கலை நிலையுறும் திறநெறி கணக்கியல்
உய்த்துணர் முறையியல் ஓங்குற் றுணர்ந்தே
கலைநிலை யியல்தெரிக் கணக்கியல் முறையே (714)

மூலப் பொருளியல் முந்நெறி முப்பொருள்
கால மியல்நெறி கலைநெறி தேர்ந்தே
எண்ணெண் ணியல்நெறி கலைநிலை நுணுக்கம்
எண்ணியல் முறைத்திறன் ஒழுங்குறும் ஆக்கம்
ஒன்றிரண் டியல்நெறி உண்மை உணர்ந்தே
ஒன்றே ஒன்றின் இரண்டுறு மொன்றாய்
நன்றுறும் நிலைகலை நெறிமுறை யுணர்ந்தே
எட்டியல் மெய்நிலை இயற்கலை நோக்கித்
தெட்டுறும் சீரியல் நெறிதிறத் தியலே (715)

ஒன்றுமூன் றொன்றாய் முந்நெறி யியல்திறன்
நன்றுறும் மைந்தியல் மூலயா நெறியாம் (716)

ஐந்தியல் நெறிமுறைக் கலைத்திற னோர்ந்தே
முந்துறுந் சிற்ப மோவிய நுட்பம்
ஐந்துறும் நிலைகலை எட்டெட் டியல்திறன்
வந்துறும் மூலப் பொருள்நிலை ஆக்கம்
மெய்க்கலை நுட்பத் தியல்தெரி எண்ணிலை
ஐவகை யியல்தெரி நுண்ணிதி னோர்ந்து
செய்வகை செய்வினைத் திறனறி மூலம்
உய்த்துணர் பெருநெறி உட்கலை யோர்ந்தே
ஐங்குடி பைங்குடி செங்குடி நுட்பம்
தங்குறும் கருங்குடி வெண்குடி திட்பம்
அங்குறும் சிறுகுடி நுட்பந் தேர்ந்தே
பொங்கு மாயியல் மூலக் கலைநிலை
முற்றுற வோர்ந்தே முழுநிலைக் கலைநிலை
தெற்றுறும் ஆற்றலால் இருநிலை நோக்கி
அகவின் னிலைதெரி மெய்க்கலை யியல்நெறி
மிகுத்துணர் வாற்றல் விண்ணொளி நோக்குபு
நீர்நிலம் கனல்மண் விண்ணொளி நோக்கித்
தேர்க்கலை ஆக்கம் செறிவுறத் தோந்து
ஒருநிலை எண்ணிலை உவப்புற நோக்கிப்
பெருநிலை எண்முகத் தீர்ப்பியல் ஆய்ந்து
வருநிலை உண்முகக் கலைநிலை திசைநிலை
திருநிலை ஐயைந் தியல்நிலைச் சுழலால்
விசைநிலைக் கணக்கறி விரைவியல் நோக்கித்
திசைநிலை ஆக்கம் தென்திசை இயலறி
மூலப் பொருள்நிலை முயன்றினி தாய்ந்தே
கால விசைநிலைக் கணக்கிய லோர்ந்தே
உழைப்புறும் உணர்வும் உறுதியும் ஆண்மையும்
இழைநிலை இய்மித் துளிநிலை மாறா
நெறிமுறை யுணர்வும் குறிமுறை நோக்கும்
அறிகலைச் செயல்நிலை புலனெறி ஆற்றலும்
ஓங்குற வோங்கு மொருநிலை ஆற்றலாய்
தேங்குறுந் திருநிலைச் சீல உணர்வால்
விண்ணிலை மண்ணிலை விரிதரைப் பெருவெளி
உண்ணியல் வெளிநிலை உவப்புற் றாய்ந்தே
கணக்கியல் நெறிநிலை கலையியல் நெறியாய்
கணக்கியல் எட்டியல் எட்டுறும் நிலைதெரி
எண்முகத் தீர்ப்பியல் விண்கலை விசைநெறி
உண்ணெறி யாற்றல் ஓங்குபு ஓங்கி
துண்ணென் றுணர்ந்து சுழலு மாநெறி

விண்ணிலை யுணர்த்தும் மெய்க்கலை நிலைத்திறன்
கலைநிலை யியலாய் விண்கலை ஆயல்
நிலைநெறி விண்கலை மூலந் தெரிதல்
உன்முகத் தியல்தெரி ஒருநிலை ஆற்றல்
விண்முகத் தொளிநிலை விண்கலை இயலே (717)

ஓவியக் கலைநிலை ஒளிதிகழ் நிலைநெறி
ஓவிய உருவத்திறன் வடிவெழில் வனப்பும்
கருத்துணர் வுற்றே திருநிலைப் பெருநெறி
உருவுறும் மெய்க்கலை உள்ளுணர் வுற்றே
கைவினைத் திறநெறி கண்ணுறும் நோக்கியல்
ஐவினைத் திறனிலை செய்முறை நுட்பம்
உள்ளும் உணர்வும் ஒருங்குறக் கண்டே
விள்ளும் வடிவியல் வியனிலை ஆய்ந்தே
முந்நெறி ஆக்கத் துணர்நிலை மூலம்
செந்நெறி மெய்ப்பொருள் சீர்நெறித் திறத்தால்
தொன்னெறி ஆய்ந்துணர் உயிரொளித் திறத்தால்
முந்நூல் மெய்க்கலை ஓவியக் கலையே (718)

சிற்ப யாநெறி சீரியல் நெறிக்கலை
தெற்றுறும் எண்ணியல் எண்ணென் திறனிலை
கற்ற யாக்கலை கருத்துணர் நெறியும்
உற்ற அளவியல் நூலுணர் மெய்யியல்
சொற்றுறுந் திறத்தா லையைந் தியல்நெறி
பெற்றுறும் மூலத் திறத்தியல் எண்ணிலை
கலைநிலை நெறியுணர் கணக்கிய லாய்ந்தே
நிலையறி வுற்றுணர் நெறிக்கலை மூலம்
மூலப் புள்ளி மெய்யுணர் வாற்றல்
மூலம் அறிந்தே மூலங் காண்டல்
மூலப் பெயர்நிலை பெயரியல் ஆக்கம்
மூல மியலல் இயங்கல் இயக்கம்
காலத் திண்ணெறி கலைநிலை இயலால்
கால நுட்பங் கடுகி ஓர்ந்தே
கால ஊழிக் காலத் திமைநிலை
கால நொடியியல் கருத்துற் றோர்ந்தே
காலத் தியல்நெறி கணக்கியல் மூலம்
மூல யாநெறி முன்னி ஓர்ந்தே

ஐந்தியல் சிற்பம் ஐந்திசைச் சிற்பம்
முந்துறுஞ் சிற்ப நெறியி னோர்ந்து
எட்டே எட்டியல் எண்ணெண் கலைத்திறன்
எட்டுறும் மூலத் தியல்நெறி யாய்ந்தே
முகடுறும் உண்மை முன்னித் தெரிந்தே
அகத்துணர் வோங்கி அறிவறி நெறியால்
எட்டியல் மூலம் எண்கலை ஆற்றல்
எட்டுறும் நிலைத்திறன் இயலணி தேர்ந்தே
மூலம் பொருந்தி மெய்யியற் கலையால்
கோலங் குறிக்கும் சிற்பம் ஆயல்
ஞாலம் மூலம் நடுநிலை நண்ணி
சீலத் தியலால் செறியு மாக்கலை
நாற்புறத் தியல்நிலை நடுவண் இயல்நிலை
ஆற்றல் விரைவே சுழல்நிலை ஐந்தாய்
ஐந்தைந் தியல்நிலை அழகுறும் நெறியே (719)

முந்துறும் ஆடல் ஆடலான் நெறிக்கலை
சிற்ப மெண்ணிலை சீருறும் நெறியறி
முற்றுங் கலைதெரி முறைதெரி யியலே (720)

64 இயல்வாய்ந்த எட்டின் பிறழ்வாலேயே ஓம்-கலை வெளிப்படுகிறது. ஓம்-கலையின் விளைவே சிற்பம், ஓவியம், சித்திரம், கட்டிடம், இசை, ஒளி, மொழிவகை முதலான அனைத்தும். வெளி மொழி எனப்படும் ஓம் என்பதன் ஒலி ஆற்றலாலும் ஒளி ஆற்றலாலுமே மூலத்திறத்தையும், செந்நெறி அமைப்பையும், மூலத்தின் வெளிப்பாட்டு முறைகளையும் உணரமுடியும். எழுநிலைமாடம், ஓவியமாடம் முதலானவற்றின் அமைப்புமுறைக்குரிய நெறிகளைப் பல்வேறு ஆயாதி கணக்குகளால் உறுதி செய்து அவற்றின் நிலைபேற்றுத் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

மூலப்பொருள் முந்நெறிப்பட்டும் காலநெறிப்பட்டும் 1-2-1; 1-3-1 என்பன முதலாக உள்ள அளவு முறைகளால் அமைந்து பல்வேறு கட்டிடங்களாக உருக்கொள்ளும் முறையை வாஸ்து நெறி விளக்குகிறது. வாஸ்து நெறியே 64 இயலால் அமையும் ஐங்குடி அமைப்பையும், மனைப்பரப்புக்குரிய ஐம்பெரும் பூத நிலைகளையும் தேர்நிலை ஆக்கத்தையும், எண்முகத்து ஈர்ப்பாற்றலையும், தென்திசைக்கும் காலநெறிக்கும் உள்ள

தொடர்பையும், விண்நிலை-மண்நிலை இணக்கத்தையும் நெறிப்பட விளக்குகிறது.

வடிவியல், வியன்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஓவியக்கலையானது உருவுறும் மெய்க்கலையையும், கைவினை, கண்ஒளி, ஐவினைத்திறன் முதலானவற்றின் மூலம் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது.

நாற்புறம், நாற்புற நடுவண் உள்ள மூலப்புள்ளி, மூலப்புள்ளியின் ஆற்றல், விரைவு, சுழல்நிலை, 25 இயல், 64 இயல், காலத்தின் கூறுகள் ஆகியவற்றாலேயே ஐந்திசைச் சிற்பங்களும், கோலங்களும் வெளிப்பட்டு ஞாலத்தை அழகு செய்கின்றன. ஆடலானின் ஆடல்வகை அனைத்தும் மூலப்புள்ளியின் எண்-நிலையால் வெளிப்படுபவையே.

Only through the modificatory process of the frame of 64 squares, the form of OM manifests. Sculpture, drawing, sketch-form, architecture, music, luminous objects, various groups of languages — all these are effected by OM-form. Only through the sound energy and light energy of the space-word known as OM, the manifesting and functional process of the Primal Space could be realised. The architect, being guided by these factors, should ascertain the longevity and other benificient features of various kinds of buildings, after thoroughly examined them through āyādi calculations.

The science of Vastu explains the process by which the Primal Space gets structured into buildings of various designs, being modified through threefold and fivefold ways and being subject to rhythmic measures occurring in many modes such as 1-2-1, 1-3-1 etc. It is this science that explains systematically the formation of fivefold zone, the creative effect of five gross elements as seen in the built area, eight-pronged directional gravitation, relation between the direction of south and the movement of Time, the concordance between earth and space, etc, through the mechanism of 64 squares.

The art of drawing reveals the enduring characteristics of imagic form, based on the science of image and that of space-field, reveals the expressive feelings through hand-gestures, feature of eye and fivefold energetic aspect.

Only through the mechanism of four-sided frame, the central dot and its energetic existence, its swiftness, gyration, 25 aspects, 64 aspects, time divisions etc, the musical sculptures and forms emerge out and beautify the entire range of universal field. Only through the eight variant stages of central dot, all the patterns of cosmic Dance of Nataraja are effected.

ஒளியியல் நெறிக்கலை வெளியியற் றிறனுறும்
ஒளிக்கலை ஒலியியல் ஒளியொளி யுணர்ந்தே
அகவொளி மூலம் புறவொளி யாய்ந்து
மிகும்ஒளி புகும்ஒளி நேரொலி ஆய்ந்தே
ஒளியால் எழும்திறன் ஒலிநிலைத் திறனாய்
ஒளியே மூலம் ஒளியே ஆக்கம்
ஒளியே நுட்பம் ஒளியே திட்பம்
திட்பம் நுட்பம் செறிந்துணர் ஒளியால்
முட்டறும் ஒலிநிலை ஓசை உருவாய்
எழுத்தியல் ஆக்கம் வரியியற் கோடே
வழுத்தும் கோடே நேர்க்கோட் டியல்நெறி
கோட்டுறும் ஒளியியல் எழுத்தியல் நெறியாய்க்
கோட்டுறுங் குறியொலி எழுத்தியல் ஓசை
எழுத்தியல் ஒலிநிலை ஒளிக்கலை மூலம்
வழுத்து யாவின் முறைநெறி தேர்ந்தே
எண்ணெண் ணியலறி கலைநெறி மூலம்
விண்ணொளி விண்ணொலி மிகுநிலை நோக்கி
ஓசை ஒலித்திறன் ஒளிக்கலை மூலம்
யாசறந் தெரிக்கும் ஒளிக்கலை யாக்கம்
எழுத்தியல் சிற்பம் எழுத்துறும் மெய்க்கலை
எழுத்திய லொளிநிலை ஒளியியல் நிலையாய்
குறிகுறி நிலையியல் வரைவிய லெழுத்தாய்
குறிஎழுத் துறுநிலை எழுத்தியல் சிற்பமாய்
நெறியறி முறையால் மரபியல் வகையால்
அறிகலை ஒளியென வரைவதும் வழக்கே (721)

கருத்தும் வடிவுங் கலையுங் கண்டுழி
பொருந்த மாக்கலை மாநெறி தாநெறி
மொழியியல் கருத்தும் மாயியல் வடிவும்
பழுதிலாச் சிற்பம் பகரறும் ஒளிநிலை
வடிவுங் கருத்தும் இயல்நெறி மரபும்
நெடிதி னோக்கி கடிதி னுணர்ந்து
இசைக்கலை மொழிக்கலை சிற்பம் ஓவியம்
நசையறும் நடக்கலை ஒலிநிலை மெய்யியல்
நுண்ணிதின் நோக்கிச் சீர்நெறிப் பொருளாய்
சீரறி வுற்று நேரறி திறனாய்
பேரறி வாற்றல் பெரிதின் நோக்குழி
உயிரொளிக் கருத்தும் உணர்வொளி வடிவம்
செயிரறத் தெரிக்கும் இயல்நிலைச் செயல்திறம்
உற்றுணர் மதியால் உள்ளுற வாய்ந்தே
கற்ற கலைமதி பெற்ற நுண்மதி
தெற்றென் னுணர்ந்து காலங் குறுக்கி
முற்றுறும் காலம் முடுக்கும் நுணுக்கும்
உழைப்பும் உணர்வும் ஒருங்கு காண்டல்
பிழையிலா நெறியியல் சிற்பமா நெறியே
வெளிநிலை ஒளிக்கலை களியியல் வளியியல்
அளித்திறன் ஆய்நிலை முழுதும் ஓர்ந்தே
துணிநிலை இம்மி சிறுநிலைக் கூற்றும்
விரிவும் விளிப்பும் விறுவிறுப் பார்ந்து
நாற்புறத் தியல்நிலை நண்ணி ஓர்ந்தே
ஏற்றுறுங் காலம் விரைவியற் காலம்
நசையறும் நோக்கால் சிறுபொழு தியல்நிலை
உளத்துணர் வோங்கி யுள்ளுறும் ஆற்றல்
களமும் காலம் பொருளும் கூட்டும்
நிலைநெறித் திறனாய்க் கலைநெறிச் செயலாய்
தலைநெறி உழைப்பாய் மலைநெறி நோக்காய்
நோக்குற நோக்கி நுண்ணுணர் வுற்றே
ஆக்குறும் மெய்க்கலை அளவியல் திறனாய்
உட்கலைத் திட்பம் உயரிக்கலை நுட்பம்
பெட்புறும் ஆக்கத் தெண்ணில் நிலையாய்
ஒள்ளியல் கலைநெறி ஒண்ணிலை ஆக்கம்
தெள்ளுறுஞ் சீர்நிலை சீரறி வுற்றே
எண்ணியல் ஆக்கம் எண்ணெண் கலைநிலை
உண்ணோக் கியலே விண்ணோக் கியலாய்

நெறியா யுறுநிலை நிலையென் னுன்னி
அறிகலை ஆய்நெறி வெளியியற் றிறனே

நினைப்புறும் நினைப்பால் நெறிநிலை முன்னி
கனைத்தெழு மார்ப்புங் கருத்துணர் வோங்கி
விளையும் உணர்வும் விளைவும் நோக்கி
முளைப்பும் ஊக்கமும் முன்னுவ தாய்ந்தே
காலங் கருதிக் கருத்துணர் வுற்று
மூலத் திறன்வலி ஐங்குடி யாய்ந்தே
கோலங் குறிக்கும் ஆறுறும் ஆறிலம்
ஆறுறு மியல்நிலை யைங்குடிச் செயல்நிலை
ஆறுறுங் கலைநிலை எண்ணெண் இயல்திறன்
வீறுறும் ஆற்றலாய் விளைவுறும் உணர்வால்
கூறுகூற் றியலும் குறிப்புறந் திறனால்
மாறிலா எண்ணெண் ணியல்நிலை நோக்கி
எற்றுறும் காற்றியல் எண்ணெண் ணியல்நெறி
குடிநிலை ஐந்தும் குறித்துணர் மூலம்
நெடிநிலை குறுநிலை இடைநிலைத் தேர்ந்தே
ஒன்றுறும் உணர்வா லொன்றி னிரண்டாய்
ஒன்றிரண் டாக்கம் உறுபயன் நோக்கித்
தொல்லுயிர் நல்லுயிர் படைநிலை யாக்கம்
பல்லுயிர்த் திறன்நெறி பெருநெறி யாய்ந்தே
உயிர்க்குலம் உயிர்நெறி உயிரினம் உயிர்ப்பே
உயிரியல் உயிரொளி உயிர்முறை யாய்நதே
செயிரறும் உண்மை திருநெறிப் பொதுநிலை
உயிருறும் ஆற்றல் ஒளிநிலை நோக்கி
உணர்வின் நிலைகலை நெறிநிலை ஆய்ந்து
கலைநிலை நெறிமுறை கணக்கியல் தேர்ந்தே
நிலைநெறி ஆற்றல் நாடுவ தோர்ந்தே
ஆற்றுறும் ஆற்றல் ஐந்தியல் நெறியால்
ஆற்றுறும் ஐங்குடி அறுநிலை யியலே (723)

வினைமுதற் பொருளாய் வெளியியல் ஓர்ந்தே
நினைவுறும் நெறியுறும் நெறிக்கலை மூலம்
மனைநிலம் புலத்தியல் நிலமனை தேர்ந்தே
மனையள வியல்நிலை மெய்க்கலை யுணர்வால்
கருத்தும் வடிவும் கணக்கும் ஓர்ந்து
திருநிலை வாழ்விடம் வளர்மனை செழுமனை

நிலத்திய லாற்றல் நெறிமுறை யோர்ந்து
நலந்தரும் புலநிலை நண்ணிய திறத்தால்
குடபுலம் வடவுலங் குறித்தியல் நோக்கி
நடமுறும் திறனிலை தென்திசை ஆய்ந்தே
கீழ்பால் நிலைநெறி கிளக்குபு நெறியால்
வாழியற் கலையால் வகுத்துதும் நெறியால்
மூவொன் பதுநிலை மூன்றுபத் தறிந்தும்
மூவா றியல்நிலை முற்றுறும் ஆற்றல்
ஆயங் கணக்கிய லெண்ணிலை நெறியால்
ஆயந் நெரிந்தே அருங்கலை வகையால்
ஆறே பத்தே பத்தா றியலாய்
நூறே இயல்தெரி நூல்நிலை நுணுக்கம்
கோல்நிலை நூல்நிலை குறிப்பின் ஆர்ந்து
கோல்நிலை சிற்றூர் சீரூர் பேரூர்
கோல்நிலை மறுகு மாடமுங் கூர்ந்து
கோல்நிலை அளவியல் குறிக்குங் கணக்கே (724)

ஐந்துறும் நிலைநெறி அறுவகை ஆறிலம்
முந்துறும் முறைக்கலை இயைபுற் றோர்ந்தே
வந்துறும் கலைவளர் நெறிக்கலை யியலால்
தந்த மாக்கலை தனித்திறன் நோக்கி
எண்ணியல் எண்ணொன் கலைத்திறன் ஆக்கம்
தெண்ணிலை மூலத் தெழுநிலை சீர்த்திறன்
மூலக் கனல்நிலை முன்னிய நெறியால்
காலத் தியல்நெறி கணக்கிய லாய்ந்தே
உள்ளுறும் விண்ஒளி உள்ளுற் றோர்ந்தே
தெரிந்துறும் அறுவகை ஆறிலம் ஆய்ந்தே
விண்ணுறுங் காற்று மூச்சுறும் நிலையால்
தெரிந்துறும் மெய்க்கலை சீர்நிலைத் திறத்தால்
செங்குடி பைங்குடி சிறுகுடி பெருங்குடி
நுண்குடி கருங்குடி குடிநிலை மூலம்
ஐங்குடி யியலால் அறுநிலை யாகித்
தங்குறும் ஆறு ஆநிலத் தியல்நெறி
நுணுக்கம் ஆய்ந்தே நுவல்நிலை யோர்ந்து
கணுநிலை ஆறு ஆநிலத் தாய்ந்தே
உடலொளி உயிரொளி உயிர்ப்புற் றாய்ந்தே
அடலொளி நேரொளி ஆய்கலைத் திறனாய்
ஒளிநிலை மூலம் ஒளிநிலை தேர்ந்து

வெளிவளி யியல்நிலை மெய்நெறி ஓர்ந்து
ஒளிக்கலை யியலா லுள்ளியல் தெரிநிலை
ஒளிநிலை மூலத் தியல்நிலைப் பொருளே (725)

எண்கலை எட்டியல் எண்முறை எண்நிலை
எண்திறன் எண்ணெறி இயல்புற் றாய்ந்தே
எண்ணெண் ணியல்தெரி நெறிமுறை ஆக்கம்
எண்ணொளி விண்ணொளி கண்ணொளித் திறனால்
எண்ணுறுந் திறனிலை யியற்கலை ஓர்நெறி
தெண்ணிலை கலைநிலை சீரறி வுற்றே
மையமும் வையமும் உள்ளுற் றோர்ந்தே
ஐயமி லாக்கம் அறிகலை நிலையென
எட்டெட் டியல்தெரி நிலைகலை யாக்கம்
எட்டுமெட் டியலுறும் கணக்கிய லுண்மை
நெறியுற் றோர்ந்தே நிலைபெற் றாய்ந்தே
அறிநிலை ஆக்க மெண்ணியல் எழுத்தியல்
ஐந்தெழுத் தாலுறும் நெறிமுறை யியலால்
முந்துறுங் கலைநெறி முறைநெறி நோக்கே
அகவின் நோக்குறும் ஆற்ற லறிந்தே
மிகுமொளி யியற்திறன் மூலந் தெரிந்தே
ஒன்றிரண் டியல்நிலை உற்றுறும் ஆற்றல்
தென்றிசை தென்னிலை தென்மொழி நோக்கி
நன்றுறும் நெறியால் நவிலுறுங் கலைநிலை
ஒளிநிலைத் திறத்தியல் உறறு நோக்குழி
தெளிவுறும் ஐந்திய லெண்நிலை நெறியால்
எண்ணியல் மூலங் கலைதெரி யியல்நிலை
எண்ணியல் மூலப் பெரும்பொருள் திறனாய்
நன்றுறும் மெய்க்கலை அறுபான் நான்கியல்
விண்ணொளி ஒளிநிலை மெய்யியல் திறனே (726)

மூலத் தியலெழுங் கனலொளி கூர்ந்தே
மூல யாநெறி இயல்பி னாய்ந்தே
மூல மூலமும் முந்நெறி யாக்கமும்
கால யாவிசை கணக்கிய லாய்ந்து
விசைநிலை தெரிக்கலை விண்ணிலை ஓர்ந்தே
திசைநிலை தென்றிசை இயற்கலை நுணுகி
இயற்றிற னியல்நிலை இனிதி னோர்ந்து
மயலறும் உணர்வால் அகவின் னோக்கி

நோக்குறும் நிலைக்கலை மெய்ந்நெறி ஓர்ந்தே
ஆற்றுறும் அறுபான் நான்கியல் ஆய்நிலை
நாற்புறத் தியல்நிலை புள்ளி கூர்ந்து
தேற்றமுந் தோற்றமும் சீர்நிலைத் திறனாய்
யாற்றங் கூட்டும் விசைநிலை ஓர்ந்தே
அறுபான் நான்கின் எண்ணிலைத் திறனிலை
உறுமுறை யையைந் தியல்நிலை வுற்றே
ஒன்ணிதின் ஆய்ந்தே நுண்ணறி வுற்றே
எண்ணெறி யியக்கம் நன்னு மாநெறி
நுண்கலை நுட்பம் நுவலுறும் ஆற்றலால்
எண்கலை யியற்கலை என்னுறுந் திறனால்
விண்ணியல் மாக்கலை நெறிமுறை யோர்ந்து
உண்ணோக் கியலுறும் ஒளிநிலைக் கலைத்திறன்
என்னியல் நிலைதெரி யியல்நெறி கூற்றாய்
நுண்ணெறி நுட்பம் நுவல்கலை இயலே (727)

கட்டிடச் சீர்நிலை நெறிக்கலை யோர்ந்து
கட்டிடம் புறச்சுவர் புறமதில் ஆக்கம்
நீட்டல் குறுக்கல் நிலைவளை வியற்றல்
மாடம் கூடம் விரிதரை சுற்றிடம்
வெற்றிடம் விட்டிடம் காவிடம் கலைவெளி
தெற்றுறு சுற்றிடம் இடநிலை ஆய்ந்து
வடகீழ் நிலையறி வகுத்தறிக் கணக்கியல்
குடபுலத் தியல்நெறி கூர்நெறிக் கணக்கும்
தென்றிசை வாயில் சீர்முகப் பாய்ந்தே
நன்றுறும் ஒன்பான் நெறிநிலை நன்னி
மூன்றில் விரிதரை இருபுற விரிவிடம்
பின்னில் நிலைசெடி கொடியலர் வளரிடம்
நீர்நிலை விரிதரை சூழிடம் ஆய்ந்து
ஏர்நிலை இயலகம் எண்ணிலைக் கணக்கியல்
மாடம் அமைப்புறும் மாண்நிலை கூடம்
கூடம் இயல்நிலை குறிப்புறக் கண்டே
கீழ்மேற் றிசையுற நீளம் கண்டே
வாழ்ந்தன் வடதிசை அகலம் ஆர்த்தே
வாழ்மனை வளர்மனை நல்மனை தொல்மனை
ஆழ்கலை நிலைதெரி அருங்கலைக் கணக்கியல்
கட்டிட நூல்தெரி யியல்நிலை அமைப்பாய்
கட்டிடக் கலைநிலை கணக்கியல் கூறுமே

எழுதரும் ஓவியம் புனைநிலை ஓவியம்
பழுதறும் சித்திரம் புனையா ஓவியம்
பரண்நிலை மேல்நோக் கமர்ந்திருந் தெழுதரும்
அரண்நிலை வானிலை எழுநிலை ஓவியம்
ஊர்ப்புறச் சுவர்நிலை உயரெழில் அரண்மனை
நேர்ப்புறச் சுவர்நிலை நெறிதரும் ஓவியம்
ஒளிநிலை யுயிர்திகழ் வனப்புறும் ஓவியம்
வெளிநிலை வண்ணத் தியல்கலை ஓவியம்
விழிநிலை விளக்கி வீரத் தியல்நிலை
எழில்நிலை வண்ணம் வடிவுறும ஓவியம்
வீரக் குறிப்பும் வீரமா நோக்கும்
வீரத் தோற்றம் வீரத் தேற்றம்
வீரக் கடைநிலை மெய்யிற் தோற்றம்
வீர வாள்நிலை தோளெழில் தோற்றம்
இளமுகத் தெழிலுறும் வளமுறும் சேயிழை
வளநிலை நன்னுதல் சேல்விழி வாள்விழி
செவ்வரி படர்நிலைச் சீர்விழி வாழ்விழி
செல்வி யறியும் ஏற்றல் மாநோக்கு
எட்டியல் எழுதரும் பாடலான் உருநிலை
கூட்டுறும் மெய்க்கலை தீட்டுறும் ஓவியம்
ஓவிய வண்ணம் ஒளிர்தரு மாக்கலை
ஓவிய இயற்கலை நுணுக்க நுண்ணறிவால்
கண்விழி நோக்கும் கைவினை ஆற்றலும்
என்றுணர் விசைநிலை இயல்புறுங் காலமும்
செக்கர் வானச் செங்கதிர் தோற்றம்
சொக்கெழில் முழுமதி தோற்றமும் வானமும்
பன்மலர் மலரும் குன்றத் தெழிலும்
நன்மலர் மலர்ந்துறும் நீர்வீழ் அருவி
வேழத் தெழில்நிலை விரைவுறும் விலங்கும்
ஆழும் மாக்கடல் செங்கதிர் தோற்றம்
விளைவுறும் நீர்நிலை காட்டுறும் எழில்நிலை
விளைவயல் மலர்க்கா புள்ளின வண்ணம்
ஆழ்மனை பாழ்மனை வாழ்மனை ஏழ்நிலம்
தாழ்வுறும் மலைச்சரி வுறும்நிலை தோற்றம்
சிற்றூர் சீரூர் பேரூர் நடுவண்
உற்றுறும் பெருவெளி ஆநிரைக் கவின்நிலை
ஆவும் கன்றும் அன்புறும் நிலைத்திறன்
காவுறும் நீர்நிலை கலைநிலை ஓவியம்
உள்நோக் குறுற்றும் அறிவின் உருவும்

விண்ணோக் குறுசீர் நெறிகலை ஓவியம்
ஓவியக் கலைநெறி உணர்ந்து மாநெறி
ஓவியச் செந்நூல் நெறிபடக் கிளக்கும் (728)

வண்ண ஓவியக் கண்ணொளி நோக்கல்
எண்ணம் உணர்வே எழுச்சி மலர்ச்சி
திண்ணம் கூட்டும் சிற்ப மாக்கலை
நண்ணுஞ் சித்திரம் ஓவியச் சிற்பம்
பண்டுறு நெறிமுறை பார்முறை கிளக்குபு
கண்டுறும் வனப்பும் வடிவெழில் தோற்றம்
விண்டுறும் ஓவியம் நிலைக்கலைச் சிற்பம்
அண்டுறும் சித்திர நெறிக்கூர் ஆக்கம்
ஓவியக் கலைமுதல் ஒலிமுதல் நெறியாய்
மேவுறும் சித்திரக் கூறியல் நுட்பம்
ஓவிலா துஞற்றும் ஒருபெரும் உழைப்புறும்
மேவுறுஞ் சிற்பம் மெய்க்கலை ஒளியே
ஒளியும் ஒலியும் வெளியும் ஒளியும்
ஒளிநிலை ஆற்றலால் மேவுறுஞ் சிற்பம்
தெளிமொழி விளக்கும் களிமுகத் தோவியம்
வெளிமொழி விளக்கும் சிற்பமா வடிவம்
சித்திரம் ஓவியம் சிற்ப மாநெறி
மெய்த்தக வுறுநிலை விளக்கு மாற்றலால்
ஓவிய நுண்மை உருவெழில் திண்மை
ஓவியச் செந்நூல் உரைக்கலை விளம்பும் (729)

எட்டு மைந்தும் இயல்நிலை யாகி
எண்கலை நிலைத்திறன் ஐந்தியல் நெறியாய்
எண்முறை யாக்கம் ஐந்தெழுத் தியலாய்
எண்ணுணர் நிலைதெரி ஐம்புலன் நெறிநிலை
எண்ணில் எட்டில் ஐந்தெண் மூலம்
எண்ணுறுந் திறத்துறும் ஐம்பொருள் நெறியாய்
எண்ணியல் ஆக்கத் தைந்தியல் கூறும்
எண்முறை வினையில் செய்வினை யாக்கம்
எண்ணிலை உருவுறும் ஐந்துறும் செயலாய்
எண்ணிலை உடற்திறம் ஐம்பொறி ஐம்புலன்
எண்பே ராயம் ஐம்பொருள் குழூநிலை
எண்கூர் ஆக்கம் ஐந்தியல் நெறியாய்
எண்ணெண் கலைத்திறன் ஐயைந் தியலாய்

எட்டும் ஐந்தும் இயல்பின் னோங்கி
எட்டுறு மைந்துறும் நெறிகலை யாகி
எட்டு மைந்தும் வெளி ஒளியாகி
எட்டு மைந்தும் சிற்பமா நெறியாய்
எட்டு மைந்தும் ஒளித்தமிழ் கூறும்
வரைவியல் மூலம் வரிக்கோட் டியல்நெறி
வரைவும் தீட்டலும் எழுதலும் குறித்தலும்
வரைநிலை மெய்க்கலை உருநிலை ஆக்கமும்
வரைவியல் நிலைநெறி வகையுறத் தெரிந்தே
கோடும் குறுக்கும் புள்ளி நிலையலும்
கோட்டுரு நீட்டுரு தீட்டுரு இயலும்
கோட்டியல் நெறிக்கலை வளைக்கோட் டியலும்
கோட்டுரு நிலையறி நேர்க்கோட் டாக்கம்
நேர்க்கோட் டியல்நெறி நிலைமேல் வரைவியல்
கூர்க்கோட் டியற்கீழ்க் குறுநிலை வளைவியல்
கோட்டின் மேல்வளை இடைவளை கீழ்வளை
கோட்டுறும் நேரியல் சீரியல் ஓர்ந்தே
கோட்டு யாக்கலை வரிவடி வியல்நெறி
நீட்டுறும் நேர்க்கலை நெடிதுறும் நிலைநெறி
ஏட்டுறும் எழுத்தியல் வண்மை நிலைக்கலை
பாட்டுறும் ஒலித்திறன் ஓசை யளவியல்
காட்டுறுங் கோட்டுரு எண்ணுரு தாளம்
தீட்டுறுங் கலைநிலை நெறிநிலை ஓர்ந்து
கோடும் குறுக்கும் நீளம் அகலம்
நாடும் புள்ளி கோட்டியல் ஆக்கம்
வளைவன் நிலைதெரி வளமுற வழங்கல்
வரையியல் நிலைதெரி கோட்டியல் வழக்கே
புள்ளிக் கலைநிலை பொருந்த வுணர்ந்தே
விண்ணும் மெய்க்கலை மூலத் தியல்நிலை
மூலம் நாற்புறத் தியல்நெறி கலைநிலை
மூலப் புள்ளி முன்னிலை யாக்கம்
மூலப் புள்ளி காலங் கூட்டும்
மூலப் புள்ளி விசைநிலை யாக்கம்
மூலத் தியலால் நாற்புற மோர்ந்தே
மூலத் தைந்தியல் நெறிவரும் ஆற்றல்
மூலங் கண்டுழி ஞால மரபியல்
மூலத் தோற்றம் சீலங் கூட்டும்
மூலத் தோற்றம் கால மெய்ந்நிலை
மூலத் தியலால் கோலங் குறித்தே

ஐவினை ஐந்தியல் அகத்துணர் நெறியால்
மெய்வினை செய்வினை மேவத் தெரிந்தே
அகத்துணர் உறுநிலை புறநிலைக் கலையால்
மிகுத்துறும் கலைத்திறன் மெய்நெறித் தேற்றம்
ஒன்றென் றுணர்ந்து ஒருநெறி மாநெறி
நன்றாம் அறுபான் நான்கியல் ஆக்கம்
பொன்றாப் பெருநெறி பேரறி திறத்தால்
என்றும் யாண்டும் இலங்க நோக்கும்
மன்றுறுந் தூநெறி மாநெறி வழக்கே (730)

வரி, கோடு முதலானவற்றின் வகைகள், ஆற்றல், ஒளிவகைகள், எழுத்தியலின் ஒலி-ஒளித்திறன் ஆகியவற்றை வாஸ்து நெறியால் உணர வேண்டும். மொழியால் புலனாகும் கருத்தும் சிற்ப-வடிவம் வெளிப்படுத்தும் ஒளிநிலையும் ஒன்றே. சிற்பம், ஓவியம், நடம், இசை ஆகியவை ஒருநெறிப்பட்டவையே. உண்-நோக்கு இயலும் விண்-நோக்கு இயலும் ஒருங்கே 64-இயலில் அமையும். காலத்தின் பலநிலைப்பட்ட செயற்பாடு களையும், அவற்றுக்கேற்ற இடத்தின் அமைப்பு முறைகளையும் 64-இயலால் உணர வேண்டும்.

ஐங்குடிநிலை, அறுநிலை, உயிர்க்குலத் தொடர்பான உண்மைகள் ஆகியவற்றையும், கட்டடத்திற்குரிய மனை தொடர்பான ஆயக் கணக்கியலையும், (27, 30, 18 எனவும், 6, 10, 16 எனவும் அமைந்துள்ள கணக்கு), நடம் பொருந்தும் தென்திசைச் சிறப்பையும் கோல்நிலை அளவால் அமையும் சிற்றூர், பேரூர் முதலானவற்றின் அமைப்பையும் மயன்நெறி விளக்கும்.

மூலக்கனலின் ஆற்றல், அறுவகை நிலை, ஐங்குடி அமைப்பு, 64-இன் மையத்தில் வையத்தின் அமைப்பு, ஐந்தெழுத்து அமைவு, அகவிண் அமைப்பு — இவற்றையும் காலக்கணக்கின் விசைநிலையைக் காட்டும் தென்திசை நிலையையும் மயன் நெறியால் அறிய வேண்டும்.

புறச்சுவர், விரிதரை, சுற்றிடம் முதலான மனை அமைப்புகளை ஒன்பான் நெறியால் (பரமசாயி மண்டலத்தால்) அமைத்து, பல்வேறு அங்கங்களையும் அழகுபட அமைத்து ஓவிய, சிற்ப உருவங்களால் அலங்கரிக்க வேண்டும். ஓவியச் செந்நூல் உணர்த்தும் சிற்பவகை, ஒளிஒலி ஆற்றல், ஓவியம் முதலான கருத்துக்களை நன்கு உணர வேண்டும். கோடுகளின்

ஆக்கநிலை, தாளவகை — இவற்றை உணர்ந்து மூலப்புள்ளி காலத்தைக் காட்டுவது எனவும், மூலத்தோற்றம் சீலத்தை உணர்த்துவது எனவும் அறிய வேண்டும்.

One should know about the varieties of lines, curves, their creative efficacy, varieties of luminous points, sound and light aspects of orthography etc, through the science of Vastu. The message expressed through a language and the luminous state expressed by sculptural form are one and the same, Sculpture, Drawing, Dance and Music, belong to one and the same branch of science. Within the field of 64 squares the creative of role of both inner consciousness and inner space is in its full swing. One should know the varied operations of Time and the corresponding formal features of select space through the science of 64 squares.

The Mayonic order explains the nature of fivefold zone, sixfold stage, the essential truths related to the living beings, the varied process of āyādi calculations related to buildings, the uniqueness of South in which the Cosmic Dance settles itself, the planning of towns and villages which are measured in terms of rod/and so forth.

The forcible energy of primal fire, six places of energy, five zones, the existence of universe at the centre of the frame of 64 squares, identity of five letters, formation of inner space (of the frame) - all these and the specific characteristic of South indicative of the swiftness of the movement of Time should be known through Mayonic order.

Having designed the essential parts of house such as the outer enclosure wall, floor, verandah based on the paramasāyi mandala, and having designed all other important portions, one should beautify them with relevant sculptures and drawings. He should understand the principles related to sculptural varieties, efficacy of sound and light, drawing etc, as revealed by the scripture dealing with the art of drawing. Through the study and observation

of the features of lines and rhythmic beats, he should know that the Central dot is indicative of Time and the Form emerging at the centre is indicative of rhythm.

நெடிது நினைத்தலும் கடிதி லுணர்தலும்
கடிதுணர் காலக் குறிப்பறி வாற்றலாய்
படிநிலை விண்ணிலை ஒளிநிலைக் கலையியல்
கடிநிலைக் காலம் கால மாநெறி
துடிப்புறும் உணர்வுறும் தூய மாக்கலை
நடிப்புறும் இயற்கலை கால மாநெறி
நெறிவினை நிலைக்கலை மெய்ம்மை தேற்றமும்
அறிகலை உணர்வினின் ஐந்நெறி சேர்நெறி
காலம் உணர்நிலை கால மூலமும்
காலமா நெறியாய்க் களிப்புறுங் குறிநிலை
காலங் காண்டல் மூலத் தெழுநிலை
காலம் நோக்கல் கலைநிலை நோக்கல்
கால விசைநிலை கருவினை புரிநிலை
கால மாயியல் கருத்திற் கருதி
காலத் திண்நெறி கடும்உழைப் பியல்நெறி
ஞாலமும் விண்ணும் நன்னிலை யியலால்
காலப் பொழுதியவ் கடிதி னோர்ந்தே
காலம் முயற்சி காலம் ஆய்நிலை
காலம் உழைப்பெனக் கடிதி னோர்ந்து
காலங் கருதிக் கடுவினை புரிவோர்
காலம் உழைப்பெனக் கருத்துணர்ந் தறிவரே (731)

மெய்நெறி மெய்ப்பொருள் மெய்க்கலை யுணர்வால்
மெய்யியல் நிலைதெரி பொருண்மை யியலறி
நோக்க நுண்மதி விண்மதி எண்மதி
நோக்குறும் நிலைதெரி உள்ளுணர் நோக்கால்
அகவின் ணொளிநிலை உணர்வின் ஆய்ந்து
அகத்துணர் இயல்நிலை மெய்நிலை ஓர்ந்தே
கலைநிலை நுண்ணறி யியல்நிலை உண்மை
நிலைநெறி ஐந்தியல் எண்ணெண் கலைதெரி
ஐந்துறும் உண்மை இயல்நெறி யோர்ந்து
முந்துறும் மரபியல் கலைத்தொழில் உன்னி
உழைப்புறும் உணர்வும் ஓங்குறும் ஆற்றலும்
இழையும் இம்மியும் துளியும் ஓர்ந்தே
கால மெய்த்திறன் கடுகி யோர்ந்தே

கோலங் குறிக்கும் குறிப்பியல் நெறியால்
ஒளிநிலை மெய்மொழி ஓங்குறுந் திறனால்
தெளிகலை ஐந்நெறி சீர்நெறி யாய்ந்து
நுட்பமும் திட்பமும் நுணுகி யாய்ந்தே
பெட்புற் றெழுதரும் பேருணர் - வாக்கம்
கண்டுணர் கலைநெறி கேட்டுணர் நிலைநெறி
விண்டுணர் தலைநெறி விளம்பல்மா நெறியே (732)

மாநெறி ஒன்றே தூநெறி வகுத்து
தூநெறி யியலின் தொன்மைய தாக்கி
நெறிமுதற் பொருள்நிலை நிலையுற் றாய்ந்தே
அறிகலை உணர்வின் ஆக்கல் குறிக்கும் (733)

ஒலிநிலை கலைத்திறன் மெய்ம்மொழி யாக்கம்
ஒலியியல் நிலைதெரி ஒலியிசை ஆக்கம்
ஒளிக்கலை நிலைமுறை ஒன்றிரண் டாயுறும்
வெளிநிலை வெளிமொழி ஓமுறுங் கலைநிலை
மெய்ம்மைப் பொருள்தெரி நுண்மை விளக்கம்
எய்துறும் நிலைநெறி என்னெண் ஆக்கம்
மூலத் தெழுதரும் முதலொலி யிசையாய்
சீலத் தியலால் ஒன்றிரண் டைந்தாய்
ஏழிசை யாய்நிலை வாழிசை வளநிசை
ஆழிசை தாழிசை இசைநிலை யோங்கி
எண்ணான் கிசையுறும் மெய்த்திறத் திசைநிலை
எண்நிலை ஆறா றிசைநிலை யாகி
எண்நிலை ஏழு பத்திரண் டிசையாய்
எண்நிலை காலம் தாளங் கருதி
மூன்றுபத் திரண்டே ஒன்றுபத் தாறே
ஏன்றுறும் எழு பத்திரண் டிசையாய்
இசைநிலை நுணுக்கம் எழிலுற் றோர்ந்தே
நசையில் எடுத்தல் படுத்தல் நலித்தல்
விரிவுறும் நூற்றிரு பத்தெண் நிலைதெரி
விரிதலை ஏழிசைச் செந்நெறி விளக்கும் (734)

எண்ணியல் நிலையே இயற்கலை நெறியாய்
எண்முறை எண்கலை எண்ணெழுத் தியலாய்
எண்குறி எண்நிலை எண்ணற வுற்றே

எண்திறன் நோக்குழி எண்ணெண் ணியலாய்
எண்ணுறும் ஆக்கம் விண்ணுறும் நோக்கட
விண்கலை வெளித்திறன் விண்ணியல் நிலைத்திறன்
நெறியுற நோக்கி நிலையுறும் உணர்வால்
அறிகலை இயல்திறன் அறிநிலை உணர்வால்
எட்டியல் நிலைதெரி ஐந்தியல் மூலம்
எட்டுறும் மூலம் நாற்புறத் தியல்நெறி
காலம் வடிவம் செயல்நிலை யுன்னி
மூலம் ஒளிநிலை ஒலிநிலை ஓர்ந்து
சீலம் கோலம் தேர்ந்துறும் உணர்நிலை
ஞாலம் படைத்தல் நற்றிற வாற்றல்
ஐந்தொழில் இயற்றும் ஐந்நெறி ஐங்கலை
வந்துறும் மூலக் கனலஒலி யியலாய்
தந்த நலஒளி நல்ஒலி யியலாய்
முந்துறும் ஒளிநிலை ஒலிநிலை ஒளிநிலை
இயற்றிறன் ஆய்ந்தே எழுத்தொலி பொருட்டிறன்
மயலற லறிந்தே மயனெறி யுணர்ந்தே
ஒளிக்கலை நூற்றிறன் ஓங்குறும் உணர்வால்
வெளிக்கலை ஓமொழி பொழுதுற் றாய்ந்தே
உட்கலைத் திறத்துணர் எண்கலைத் திறனெறி
பெட்புறும் திறநிலைப் பொருந்தக் கண்டே
அகவின் னோக்கொளி அறுநிலை அறுநிலம்
அகத்துணர் இயல்நெறி மூலத் தெழுங்கலை
ஒன்றி உணர்ந்தே உருநிலை நோக்கி
நன்றுறும் ஒளிநிலை ஒலிநிலை தேர்ந்தே
பொன்றாக் கலைநிலை பொருந்து மெய்நிலை
தென்றிசை தென்கலை தென்னியல் தென்நிலம்
தென்மொழி மூலம் முதல்நிலைப் பொருளாய்
நன்றுறும் ஆக்கம் அறுபான் நான்கியல்
ஒன்றின் றிறநிலை உள்ளுதல் நெறியே (735)

கலைநிலை நோக்கல் காலத் தியலே
நிலைநெறி ஆற்றல் நெறிமுதற் பொருளாய்
தலைக்கலை தனிமுதல் தமிழ்முதற் பொருளாய்
நிலையியல் ஐந்துறும் என்னிலை ஓர்ந்து
நிலையுணர் வுற்றே நெறியுறு மாக்கலை
குறிநெறி யாக்கம் குறிப்புற் றுணர்ந்தே
நெறிநிலை தன்னில நிலைபெ றாய்ந்தே

'வென் றுறும் கலையியல் ஒலிக்கலை எண்கலை
நன் றுறும் திறனிலை நவையற வுணர்ந்தே
மூலம் கண்டே மூலம் ஆய்தல்
மூலப் பெருந்திறன் முன்னி யோர்ந்தே
கால மாவலி விசைநிலை யோர்ந்தே
காலத் தாணியல் கலைநிலை யோர்ந்தே
மூலத் தாண்நிலை முன்னிய நெறியியல்
காலத் தாண்பல வாயுணர் நிலைநெறி
சீலங் கோலம் செம்மையின் னோர்ந்தே
மூலத் தாணியல் நூற்கலை யறிந்தே
மூலப் பொருள்நிலை மெய்நிலை யார்ந்தே
மூலம் இயங்கல் முப்பொருள் இயக்கம்
மூலம் இயக்கம் காலயா விசையே
மூலம் காலம் விளைநிலை யுன்னி
கால மாவிசை கடிதின் உணர்ந்தே
மூலத் தியல்நெறி ஆநிலத் தாறும்
மூல மாப்பொருள் முக்கனல் ஒளிநிலை
மூல முதலாய் முளைத்தெழும் ஆறும்
மூல மாக்கனல் இயல்நிலை தெரிந்தே
மூல மூலமும் மூலத் தாண்நிலை
காலத் தாணியல் கலையுறக் கண்டே
காலங் கருதி கருதிக் கருத்தின்
கருத்துறும உணர்வால் கலைபல நோக்கி
கருத்துணர் கலைநெறி நிலைநெறி யியலால்
நாளும் இரவும் நன்னிலை ஆய்ந்து
கோளம் கோள்நிலை குறுநிலை ஓர்ந்து
அறுபான் நான்கியல் ஒளிநிலை இயலே
உறுநிலைக் காலம் உழைப்பின் றோர்ந்து
உறுநிலை யுணர்வுற் றறிநிலை யாய்ந்து
பெறுநிலை இயற்கலை எண்ணிலைக் கலையே (736)

ஐந்திசை ஏழிசை செந்தமி ழிசைக்கலை
முந்துறும் சிற்பம் ஓவிய மரபியல்
வந்த தொல்கலை வளரிசை நோக்கி
செந்தமிழ்ச் சிற்பம் சீரியல் ஐந்திசை
இசைநிலைக் கலைநிலை எண்ணியல் திறத்தால்
வசைதீர் மொழிநிலை ஒலியியல் ஆற்றல்
இசைக்கலை ஒலிநிலை ஒளிநிலை இயலறி

இசைஒலி இசைநெறி முறைநெறி யாய்ந்தே
ஒன்றிரண் டைந்திசை ஏழிசை நுட்பம்
நன்றுறும் மூலத் தெழுமிசை காலம்
காலம் தாளம் கருத்துற் றொன்றல்
மூலத் தெழுநிலை முறையின் ஓர்ந்து
ஒன்றல் உணர்தல் ஒன்றிய நிலையுறல்
நன்றுறும் உணர்நிலை ஒளிநிலை தோற்றி
ஒளிநிலை தோற்றுறும் ஒலிநிலை எழுப்பி
வெளிநிலை ஒலிக்கலை விரைவுறும் நல்ஒலி
இசைநிலை மூலம் எழுநிலைக் காலம்
இசைமுறை எண்ணிலை இயலறி வார்ந்தே
ஓம்ஒளி ஓம்ஒலி ஓம்கலை ஓம்நெறி
ஓம்இயல் இசைநிலை ஒளிநிலைக் கலையே (737)

கலைமதி உணர்வால் நிலைமதி யுற்றே
தலைமதித் திறனுறும் தன்னியல் ஓர்ந்தே
கால மூலங் கருத்திற் கொண்டே
காலத் தியலறி நுண்ணறி வாற்றல்
கால நுணுக்கமும் உழைப்பியல் ஆற்றலும்
மூல மாக்கலை முந்நெறித் திறனும்
காலமு மிடமும் பொருளறி நிலையும்
கால விரைவியல் கருதுங் கணக்கியல்
எண்ணெண் கலையால் இயலுறத் தேர்ந்தே
நுண்ணியல் அறிநிலை கலைநிலை உளத்தால்
மாசறத் தெரிக்கும் எண்ணியல் எழுத்தியல்
மாநெறி இயலால் தாநெறி யோர்ந்தே
பாநெறிப் பாவியல் எழுத்தியல் ஓர்ந்தே
கலைநெறி எண்ணியல் காற்றியல் ஒலியியல்
நிலைநெறி ஒளியியல் நெறியுற விளக்கி
ஒலியும் ஒளியும் ஒளிருற் றோங்கும்
ஒளிநிலை மொழிக்கலை உருநிலை உன்னி
எழுத்தியல் ஒலியியல் இயல்நிலை ஐந்தியல்
வழுத்தியல் கலையுறும் வளர்நெறி மாநெறி
நுண்ணிதி னோர்ந்து நுவலரும் திறத்தால்
எண்கலைக் கலைமதி இயற்றுவ திறனே (738)

ஆறிலம் ஆறும் அகத்துணர் வோர்ந்தே
தாறிலப் பெருவெளி ஒளிநிலைக் கலையாய்
மாறிலப் பெருநிலை பெருங்கலை நோக்குழி
ஐந்நிலம் இடநிலைப் பொருள்நிலை ஆய்ந்துழி
அறுவகைப் பொழுதும் ஐந்திய லாக்கமும்
உறுவகைக் கலைத்திறன் உற்றுறு மாக்கமும்
பெறுவகை பெற்றே பெட்புறப் பேணி
தெறுவகைத் திறத்தால் சீருற நோக்குபு
உள்ளூறும் வையம் விண்ணிலை ஓர்ந்தே
தெள்ளூறும் புறநிலை விண்மண் ணாய்ந்து
கலைநிலை எண்ணெண் கணக்கிய லாற்றல்
நிலைநெறி மூலம் நெறியுறுங் கணக்காய்
உள்ளுவ துள்ளி ஓங்குறும் ஆற்றல்
தெள்ளு மாநெறி சீர்சால் ஆற்றல்
அறுபான் நான்கியல் அருங்கலைத் திறத்தியல்
உறுமுறை நோக்கி உணர்வுறும் தெளிநிலை
மூலங் காட்டி முன்னிலை நோக்கும்
காலங் காட்டும் கணக்கியல் நெறியாய்
இலங்குவ இலங்கி இயல்பே இயக்கும்
துலங்கு மாநெறிச் சிற்றவை யியலே (739)

உற்றறி உணர்வுறும் ஓங்குறும் மெய்நெறி
பெற்றுறும் நெறிகலை தெற்றுறும் குறியியல்
மெய்ப்பொருள் தெரிநிலை விளங்குறு மாக்கலை
மெய்யியல் நுணுக்கம் எண்கலை நிலையியல்
ஐங்கலை ஐந்நெறி ஐயியல் ஐந்திணை
ஐம்மறை செம்மறை நெறிமுறை யோர்ந்தே
கலைநிலைக் கட்டடி நிலைக்கலை ஓர்ந்து
நிலைநெறி ஓவியம் சிற்பமும் ஆய்ந்து
தலைமறை ஓம்நெறி தன்னிலை யுணர்ந்தே
நிலையியல் மாறா நெறியுணர் வுற்றே
எண்கலை எண்திறன் இயலுணர் வோங்கி
திண்கலை நுண்கலைச் சீரியல் தெரித்தே
விண்மொழி எண்மொழி விளிநிலை தேர்ந்தே
பண்ணொலி பாவொலி நெறிமுறை நோக்கி
உற்றுறும் மூலத் தெழுங்கள லாற்றல்
பெற்றுறும் நிறையொலி ஒளிக்கடிலத் தேற்றம்
அகவின் ணிலையே புறவின் ணெறியே

அகத்துணர் நெறிக்கலை புறத்துணர் பொறித்திறன்
அகமும் புறமும் ஆய்ந்துணர் நெறியால்
மிகுத்துணர் ஒளிக்கலை முற்று மாநெறி
சீரியல் எண்ணெண் நெறிக்கலை முறையால்
தேரியல் ஒளிநிலை சீருற வாய்ந்தே
அறுபான் நான்கின் கணக்கியல் ஒளிநிலை
உறுநிலை நெறிக்கலை உரைக்குமா நெறியே (740)

காலம் காண்டல் என்பது மூலத்து எழும் நிலையையும் காலத்தால் எழும் பல்வேறுபட்ட தோற்றங்களையும் உணர்தலே. காலத்துடிப்பும் உணர்வின் துடிப்பும் இணக்கம் கொண்டவை.

ஓம் என்பதன் ஒளிக்கலையாலும் ஒலி ஆக்கத்தாலும் 64 இயலின் ஆக்கத்தாலும் இசையின் வெளிப்பாடு நிகழ்கிறது. மூலத்தில் எழும் முதலிசை, 1, 2, 5, 7 என வளர்ந்து பின்னர் 32, 36, 72, எண்நிலைத்தாளம் என ஆகிறது. ஏழிசை மூலம் 128 நிலைகளை விளக்குகிறது.

மூலக் கனலால் எழும் ஒலிவகைகளால் மயன்நெறியை உணர வேண்டும். ஒளி நூலாகிய பிரம்ம நூலின் திறன், அகவிண், ஆறு ஆதாரங்கள் அவற்றோடு தொடர்புடைய உருநிலை, ஒளிநிலை, ஒலிநிலை ஆகியவற்றை உணர வேண்டும்.

மூலத்திறத்தாலும் காலவிசையாலும் அமையும் காலத் தூண், சிலம், கோலம் ஆகியவற்றையும், மூலத்தூண் பிரம்ம நூலின் கலைகளையும் புலப்படுத்தும். காலத்தூணால் கால வகைகளையும் கோள் நிலைகளையும் அறியலாம். ஆறு ஆதாரங்களையும் மூலக்கனலையும் உடையது மூலத்தூண். மூலக்கலையே கால மூலத்தையும் கால நுணுக்கத்தையும், காற்றியலையும் புலப்படுத்துகிறது.

அகத்துணர்வால் ஆறு ஆதாரங்களையும் மேலே உள்ள தூநிலப் பெருவெளியையும் அறிய வேண்டும்; சிற்றவையை உணர வேண்டும்.

64 இயலின் ஒளிக்கோடானது (பிரம்மநூல்) ஓம் இயலையும் தேர் இயலையும், அகப்புற விண்திறன்களையும் புலப்படுத்தும்.

To Consider the role of Time is to visualise the exact structure rising at the centre and realise the varied structural expressions brought about by Time. The vibrations of Time is in total concordance with that of inner consciousness.

Melodious notes are manifested through lumionous and sound aspect of OM, and through the pattern of 64 squares associated with OM. The initial phases of first musical note, grows in the mode of 1, 2, 5, 7 and then gets variegated into 32, 36, 72 and so forth. The musical beat of eight counts is effected by it. It brings out 128 varieties through the interplay of seven notes.

The Mayonic order, should be understood through the obsevations of sounds emitted internally by the Primal Fire. Through the Mayonic order, one should know about the efficacy of luminous thread (brahma sutra), inner space, six centres of energy, form,, light and sound related to the six centres etc.

The Time-Beam, effected by the Primal Space and the swiftness of Time is indicative of rhythm and form. The Primal Beam, rising as a coloumn at the centre is expressive of the creative potencies of luminous thread. Through the Time-Beam, one could know the effects of different time-divisions and the position of planets. The Primal-Beam is associated with six energy-centres and the Primal Fire. The basic creative Force functioning at the centre is indicative of the point of origin of time and the associated identical movement of wind (breath in one's own body) as far as a particular creation is concerned.

Through the power of inner consciousness one should know about six centres of energy, the pure and extensive space above the crest (known as dvadasanta) and the Microbode (present at the centre of heart-space and of dvadasanta)

The luminous thread of 64 squares would reveal the essential characteristics of OM, cosmic chariot and the inner and outer spaces.

அரண்நிலை அகழி நீர்நிலை விரிதரை
திரண்டுறும் பெரும்படை வேல்வில் வாள்கூர்
ஏந்துறும் வீரர் கோட்டுறும் கோட்டை
வேந்துறும் இருக்கை வியன்நிலை விரிவிடம்
எழில்நிலை ஓவியம் எண்ணுறும் நிலைகலை
எழுதரு மாக்கலை வரைவுறும் மெய்க்கலை
ஓவிய நுண்கலை ஒளிதரும் பெருங்கலை
ஓவியத் திண்கலை எழிலுறும் வண்ணம்
வேயுறும் சிற்பம் மிளிர்தரும் சித்திரம்
பாவியல் ஆக்கம் பண்புறும் சீரியல்
ஓவம் ஓவியம் ஓவியல் நிலைகூர்
மூவிரு வகைநவில் முன்னிலை நுட்பம்
திட்பமும் நுட்பமும் செறிவுறும் சிற்பம்
பெட்புறும் இசைநடம் பெருங்கலை ஆக்கம்
ஒட்பத் திட்பம் ஒளிநிலை நுட்பம்
எட்டியல் கலைதெரி மூலநுண் ணியலால்
முட்டறு மொழிக்கலை ஒளிக்கலை ஓம்மொழி
எட்டெட் டியல்நிலை எண்ணுறு மாக்கலை
மூலம் அறிந்து காலம் ஓர்ந்து
கோலக் குறிப்பின் சீலம் உணர்ந்தே
ஞால யாநிலை விண்ணிலை நோக்குழி
மூல மெய்யியல் உணர்வுறும் நெறிக்கலை
அறுபான் நான்கியல் ஆக்கத் துறுநிலை
உறுநிலை சிற்றவை ஓங்குறுங் கலையே (741)

காலமுங் களமுங் கருத்தி னோர்ந்து
மூலங் காணும் முயற்சி உழைப்பால்
உள்ளகம் நோக்கி அசவின் னொளிநிலை
தெள்ளுறும் உணர்வால் சீரறி வோங்கி
எள்ளா வியல்முதல் அளவிய லோர்ந்து
விள்ளுறும் நெல்லள விரலள வோர்ந்து
எட்டெட் டியலள வியலறி வாற்றல்
எட்டுறும் நிலைதெரி கால யாஇயல்
நுணுக்கம் தேர்ந்து நுவலறி வுற்றே

க்னுக்கம் கண்டுழி கலைநிலை மூலம்
உற்றுறும் எண்ணியல் காலத் தளவை
தெற்றுறும் முந்நெறி ஐந்நெறிச் சீரியல்
ஐயைந் தியல்கலை மூலமா நுணுக்கம்
வந்துறும் ஆக்கம் மெய்யியற் பொருளாய்
சீரறி வுற்றே திகழ்நிலை யோங்கிப்
பேரறி வுறுநிலைப் பெருநிலை யாக்கம்
நூலறி நுட்பம் திட்ப மாக்கலை
உள்ளுணர் வியலறி ஒருங்குறும் பெருங்கலை
தெள்ளுறும் நிலைகலை சீர்சால் எண்ணியல்
மூலம் காண்டல் பெருநெறி வழக்கே (742)

மூலம் கண்டே முன்னிய தோர்ந்தே
காலப் பொருள்நிலை கடிதி னுணர்ந்து
கோலமுங் குறிப்பும் குறிப்புற் றுணர்ந்து
ஞாலம் காண்டல் மெய்நிலை யியலாய்
சீரியல் எண்ணிலை எண்ணியல் வழக்கே
காலமுங் கால நுட்பமும் நோக்கி
காலத் தியற்பொருள் கடிதி னுணர்ந்து
கால அளவை யியல்தெரி நுட்பம்
காலக் கூற்றின் பொருள்தெரி திட்பம்
ஒட்பத் தியலாய் ஒன்பான் நெறியே
பெட்புற நோக்கி பெருநிலை யாய்ந்து
எட்டியல் எண்ணெண் கலைக்கூர் நோக்கி
எட்டியல் நாற்புறத் தியல்நெறி ஐந்தின்
மூலப் புள்ளி விரைவுறும் சுழல்நிலை
காலங் கூட்டும் மெய்நிலை ஆக்கம்
கலைநிலை நெறிமுறை கணக்கியல் கூர்ந்து
நிலைநெறி கலையியல் நெடுங்கணக் கியலாய்
அறுபான் நான்கின் ஐயைந் தியல்நெறி
உறுமுறை நோக்கி உணர்வுறும் கலைத்திறன்
வையம் இயல்தெரி அளவியல் ஆக்கம்
மையம் நுட்பம் மாக்கலை இயலால்
உள்நிலை நோக்கிப் புறநிலை ஆய்ந்து
தெள்ளுறும் சீர்நெறி மெய்நிலைக் கலையால்
எட்டெட் டியல்தெரி நெறிமுறை யாக்கம்
விட்டுறும் நிலைமுறை விரிநிலை யோங்கி
தெட்டுறும் எண்ணியல் கலைநெறி மரபே (743)

காலம் மூன்றும் கருத்தறி வுற்று
காலம் இடம்பொருள் வரிநிலை ஆய்ந்து
நோக்கமும் குறிப்பின் நுண்ணிதின் தேர்ந்து
ஆக்கமுங் கேடும் அறிமுறை ஆய்ந்து
கண்டுணர் தெளிவும் கேட்டுணர் ஆய்வும்
விண்டுணர் மொழித்திறன் வெளிநிலை இயலால்
இன்சொல் இன்மொழி நன்பொருள் இயம்பலும்
இன்முகம் குறிபறி நிலைநெறி யியலல்
கலைப்பொருள் உண்மை மரபியல் வண்மை
நிலையுணர் வுற்றும் உள்ளமும் ஓங்கி
நாடும் மொழியும் இருவிழி யென்றே
நாடுறும் உளத்துணர் நெறிநிலை யோங்கி
அறிவர் பொருளர் வறியவர் ஆண்பெண்
குறியர் நீளர் உருநிலை நோக்கா
உளநிலை நோக்கி அன்புறும் உணர்வும்
வேந்தன் மக்கள் என்றுணர் நிலையும்
வேந்தும் மக்களும் ஒன்றுணர் நெறியும்
வேந்தன் வேட்ப நடுநிலை உண்மை
வேந்தன் நிலைநெறி நாட்டின் கலைநெறி
அறத்திறன் மாறா நெறியுரை யாற்றும்
அறநெறி யியலே அமைச்சியல் நெறியே (744)

உணர்வும் உள்ளமும ஒருநிலை யுற்றே
உணர்விறின் றெழுதரும் மெய்த்திறன் நோக்கி
தறுகண் ஆண்மை காலமும் இடமும்
உறுநிலைப் பொருளும் மெய்யறி விலங்கி
நெறிமுறை ஐம்பொறி ஐம்புலன் நிலையியல்
குறிமுறை மாறாக் கூர்மதித் திறத்தால்
செயலுறும் சீர்நெறி வீரமா யியலாய்
முன்னவன் முன்னறி முயன்றினி தாய்ந்தே
நன்னெறி யியல்தெரி நவையிலா வீரம்
கண்டுணர் வாழிவியல் கேட்டுணர் தெளிவும்
பண்டுணர் மரபும் விண்டுணர் இயலும்
நன்றுறும் நெறியால் நிலையுற் றாய்ந்து
தென்றிசை நிலமர பியலெனப் படுமே (745)

குடிபடை யமைச்சியல் குறிப்பன ஓர்ந்தே
நெடிதியல் நோக்கம் நீள நினைந்தே

நொடிநொடிக் காலம் நுண்மை யோர்ந்து
குடிகுறி யியலாய் ஐங்குடி செய்குடி
கருங்குடி வண்குடி பெருங்குடி ஆக்கம்
ஒருங்குறும் திறமுறும் உள்நிலை ஆர்ந்தே
புறத்தியல் குடிபடை அமைச்சியல் நோக்கம்
அறத்திறன் மாறா ஐங்குடித் திறமுற
ஐம்பே ராயம் எண்பொருங் குழுநிலை
செம்பொருள் ஐந்தியல் எண்ணெண் ணியலே (746)

குடிநிலை அறிந்தோர் கூர்மதி நெறியால்
நெடிதுணர் ஆக்கம் நெறிநிலை யியலும்
படிமிசை ஆறியல் அறுநிலை யோர்ந்தே
குடிமுறை ஆக்கம் ஐந்தியல் நெறிமுறை
அடிமுதல் முடிநிலை ஆய்ந்துணர் நெறித்திறன்
கடிதின் நோக்கிக் கால விரைவியல்
கனலெழும் நிலையியல் கருத்துற் றோர்ந்தே
அனல்பொறி ஐந்தியல் ஐந்துறும் ஆக்கம்
மூலத் தியலெழும் முக்கலை முச்சுடர்
மூல மாநெறி முயன்றுறும் முயற்சி
கால விசைநிலை கணங்கணம் ஆய்ந்தே
கால மாஇயல் நெறிமுறைத் தேர்ந்து
உற்றறி திறனால் உணர்கலை ஆய்ந்தே
தெற்றுறும் இயல்தெரிச் சீரறி வுற்றே
நுணுக்கம் நொடிநொடி இமைநிலை ஆர்ந்து
கணுக்கம் இம்மி துளிபொது தாய்ந்து
எள்ளள வாக்கம் நெல்வள வுற்றே
தெள்ளள வியல்நெறி விரலுறும் அளவை
எண்ணியல் நிலைதெரி குடிநிலைக் காற்றியல்
காற்றுறும் வளிநிலை கடிதின் நோக்கி
ஆற்றல் ஆய்ந்து ஆற்றல் திறனுறும்
தேற்றுறும் மெய்ம்மை சீலத் திறனாய்
ஏற்ற யாக்குடி ஐங்குடி யியலே (747)

ஐங்குடி ஐய்பொறி ஐம்புலன் ஐந்நெறி
தங்குறும் மெய்ம்மை தகவுற் றோர்ந்தே
எண்ணிலை உறுப்பியல் எண்ணள வுடற்றின்
தெள்ளிய எண்ணி ஒளியுறும் அறுநிலை

ஒளிநிலை அறுநிலை உணர்திற னாகி
வெளிஒளி வளிநிலை அளிகலை ஐந்தாய்
எட்டியல் ஆக்கம் இயல்பின் அறுபான்
தெட்டுறும் ஐம்பொருள் குழுநிலை ஆக்கம்
நெட்டுறும் நிலையறி எண்பே ராயம்
எட்டின் இயலும் ஐந்தின் இயலும்
உள்ளர அறுமுறை ஓங்குறும் ஓங்கல்
தெள்ளர அறுமுறை நாடும் மொழியும்
தெள்ளிதின் னோர்ந்து சீர்சால் அமைச்சியல்
வந்துறும் எண்ப ராயமும் நோக்கி
ஐம்பொருள் குழுவும் சீருறுப் பியலாய்
செம்பொருள் விழுப்பொருள் சீர்ப்பொருள் ஆக்குறும்
நேரிதின் ஆய்ந்து நுண்ணிதின் ஓர்ந்து
சீரிதின் தெளிந்து செவ்விதின் நோக்கி
உள்ளும் புறமும் ஓரரும் அறுநெறி
துள்ளல் மயன்நெறி தமிழ்நெறி யியலே (748)

கால நுணுக்கம் கட்டிடக் கலைத்திறன்
கால விரைவியல் கடிதின் ஓர்ந்தே
காலங் கூட்டலும் காலஞ் சேர்த்தலும்
மூலம் நோக்கலும் முன்னி யுணர்ந்தே
உடற்கட் டுணர்ந்தே உறுதிறன் நோக்கி
அடற்கட் டுணர்ந்தே ஆற்றல் பெருக்கி
கட்டுறும் இயல்நிலை கட்டிடத் தியல்நெறி
எட்டுறும் திறத்தால் உடலடல் கட்டிடம்
ஒன்பது வாயில் என்னலை யளவாய்
நன்றுறும் நிலைநெறி மெய்நெறி யோர்ந்தே
கட்டிடக் கலையே கணக்கியல் ஆற்றலாய்
எட்டியல் நெறியால் இயல்பின் ஆய்ந்தே
விட்டிடம் வெற்றிடம் கலையிடம் சீரிடம்
தெட்டிடம் உணவிடம் சீர்நிலை யறிந்தே
முன்றில வாயில் முகப்பே நோக்கி
தென்திசை வாயில் தென்னிலைக் கலைநெறி
தென்றற் காற்றுறும் நெறிநிலை வாயில்
நன்றுறும் முறைநெறி குடபுலத் தியல்நெறி
ஒன்றுறும் கீழ்பால் உயர்நிலை நோக்கி
நன்றியல் வடபால் நெறிமுறை யோர்ந்து
எண்திசை யியல்நிலை எண்கணக் கியலாய்

விண்டுறும் கூடம் மாடம் நோக்கி
உள்ளுறும் வெள்ளி வியாழ மாடமும்
தெள்ளுறும் எண்ணிலை எண்ணில் ஆற்றல்
விள்ளுறும் வேயா மாடத் தெண்ணிலை
தாமரை மாடம் தனிநிலை மாடம்
பூமலர்க் கூடம் பதினா றிதழ்நிலை
மாமணி மாடம் தாமணித் திரள்நிலை
மாக்கலைக் கூடம் எழுநிலை மாடம்
எட்டுறும் திறனெறி ஒன்பதின் ஓங்கி
நெட்டுறும் நிலைதெரி நெட்டியல் நீளம்
தெட்டுறும் வளைநிலை சீர்சால் கலைநிலை
ஒட்டியும் ஒட்டா ஒன்றுறும் திறமுறும்
எட்டுறும் புறமதிற் சுவர்நிலை யியற்றிறன்
விட்டுறும் சுடுமண் சுவர்திறன் நெறிநிலை
எண்ணிதின் ஓர்ந்து இயலாற் றாய்ந்தே
நுண்ணிதின் நோக்கி நுவலுறும் திறத்தால்
உடற்கட் டாய்ந்து அடற்கட் டாய்ந்து
இடக்கட் டிடநிலை எண்ணியல் கலையால்
கட்டிடக் கலைநிலை எட்டியல் ஐந்தியல்
கட்டிட கலைநிலை மாநெறி ஆற்றலே (749)

கட்டிடக் கலையே கணக்கறி யியற்கலை
கட்டிடக் கலைநெறி எண்ணிலை மெய்ந்நெறி
எட்டுறும் ஆக்கம் இயல்தெரித் திறத்தால்
நெட்டுறும் நெடுநிலைப் பெருநிலை வாயில்
குறுநிலை வாயில் கவின்நிலை வாயில்
உறுநிலை ஒன்பதின் மூன்றுறும் திறனிலை
அறுவகை அளவே நூல்நிலை இயற்கலை
பெறுவகைத் திறனுறும் வாயில் முகப்பே
நல்லியல் மூன்றின் ஒருநிலை ஆக்கம்
தொல்லியல் நீளம் அகலம் நோக்கி
உயரம் உற்றுறும் உறுபெறு நிலையால்
மயல்விலா மதியால் மயக்கற நோக்கி
சுற்றுறும் மேல்வளை வியல்நிலை சுற்று
பெற்றுறும் இடைநிலை இடையிடை யடுக்கே
இடுக்கும் மிடுக்கும் காற்றுறும் இடுக்கும்
வடுவிலாப் பெருங்கண் சிறுகண் அமைநிலை
சிறுகண் ணியல்தெரி சீர்நிலை பதித்தும்

உறுமுறைப் பெருங்கண் ணியல்தெரி பதித்தும்
திறச்சுவர் மதில்நிலை பொருந்த நோக்கி
புறச்சுவர் ஆக்கம் பொருந்து வளைவியல்
நீர்நிலை சேர்நிலம் கூரியல் நிலபுலம்
ஏர்நிலை இடைநிலை இடநிலை அறிந்தே
ஓரிடம் மேல்நிலை ஐந்துகூற் றியலும்
சேரிடம் இடைநிலை ஏழுகூற் றியலும்
நேரிடம் நிலையாய் மூன்றுகூற் றியலும்
பாரிடம் விரிதரைப் பரப்பும் நோக்கி
அடிநிலைக் கலைநிலை ஆயம் ஆய்நிலை
அடிநிலைக் கணக்கியல் கருத்தின் ஓர்ந்து
தொடுநிலை வண்ணத் தோவியல் கூட்டும்
விடுநிலை வனப்பெழில் வண்ணத் தோவியம்
அருநிலை மேல்வளை வியல்நெறி ஆர்ந்து
விடுத்தலும் சேர்த்தலும் அளவையற் றோர்ந்து
பெருக்கல் சுருக்கல் பெருநிலை நோக்கி
கருநிலை விரிதரைப் பரப்பியல் ஓர்ந்து
திருநிலைச் சீரிடம் ஒருநிலைப் பேரிடம்
வருநிலை கலையிடம் வளர்கலை அமர்நிலை
அமைவுற் றமர்ந்துறும் அணியுறும் இடமும்
அமைகலை ஆடி அணிநிலை ஆய்ந்து
மூன்றுமூன் றியலுறும் மூன்றியல் ஆடி
ஒன்றுறும் உருத்தே ரிரண்டியல் ஆடி
மாடமும் கூடமும் மெய்நிலை நோக்கி
கூடமா டத்தியல் குறிப்பியல் வண்ணம்
மணிவிளக் குறுமிடம் மாவியல் விரிதரை
அணிவிளக் குறுமிடம் அகவிழி தளைநிலை
திருவிளக் குறுமிடம் சீர்சால் இடமும்
ஒருவிளக் குறுமிடம் உயர்வுறும் விரிதரை
திருவுற் றாய்ந்து திருமனை வாழ்மனை
உருவுற் றிலங்கும் ஓவிய நிலையெழில்
கருவுற் றிலங்கும் கலைஇயல் வண்ணம்
பருநிலை மரத்தியல் பதிநிலை மேல்நிலை
ஒருநிலை நீளம் அகலம் உயரம்
விருகலை எண்கலை எண்ணியல் நோக்கி
ஆயம் நோக்கி அடிக்கலை நோக்கி
வேயா மாடம் வீயாத் தூண்நிலை
உருக்கலை ஒளிரும் ஒளிக்கலைத் தூண்நெறி
திருநிலைப் பெருங்கலை சீர்மரத் தியலும்

ஒருங்குற் றாய்ந்து உணர்வின் தேர்ந்து
பெருநிலைக் காட்டகம் வளர்மரம் ஆய்ந்து
மரத்தியல் தூண்நிலை மாக்கலை நெறியால்
உரமும் உயரம் அகலமும் நோக்கி
சுற்றுறும் வளைவும் தெற்றுறும் வடிவம்
தெற்றுறும் மேல்நிலை சிறுநிலை வளைவும்
சிறுநிலை வளைவுறும் பெருங்கலை நெறியும்
உறுகலை கட்டிடச் செந்நூல் விதிமுறை
நெறியாய் ஆய்ந்து நிலைபெற நோக்கி
நெறிநிலை எண்ணியல் மாநெறி வழக்கே (750)

கோட்டை, அதன் அங்கங்கள், அரசன் இருக்கை, ஓவியவகை, வண்ணவகை, சிற்பம், சித்திரம், இசை, நடம், ஓம்இயல் — இவற்றை 64 இயலால் அறிக. இதனை உடைய சிற்றவையால் கோலத்தின் சீலத்தை உணர்க.

அனைத்தையும் சமமாகக் காணும் உணர்வும், அறநெறி மாறாத் திறனும் அமைச்சியலுக்கு வேண்டும்.

எண்வகை உறுப்பியல், எண்வகை அளவுடைய உடல் திறன், உடலின் அறுநிலம் — இவற்றையும்,

குடிநிலை, படைநிலை, அமைச்சியல், ஐம்பெருங்குழு, எண்பேராயம், நாடு, நகர, கிராம அமைப்பு வகைகள், நாடு, மொழி ஆகிய இவற்றையும் மயன்நெறித் தமிழ் உரைக்கும்.

கணக்கியலும் கால நுணுக்கமுமே கட்டிடக்கலைத் திறன். உடல்கட்டின் உறுதிநிலையை ஒத்துக் கட்டிடத்தை உருவாக்க வேண்டும். வாயில், அங்கணம், மாடவகைகள், சுவர்வகைகள் முதலானவற்றை உடல் அமைப்பியலை ஒட்டியே கட்டிட நெறியால் அமைக்க வேண்டும்.

வாயில் அமைப்பு வகைகள், நீள-அகல-உயர இணக்கம், சாளர வகைகள், பல்வேறு நிலைகளில் அமையக்கூடிய வளைவு வகைகள், இடைநிலைகள், அலங்கார ஆக்கங்கள், தூண் வகைகள், மரங்களின் இயல்பு, மரத்தூண் வகைகள் முதலான வற்றைக் கட்டிடச் செந்நூல் விளக்கிக் கூறும்.

Forts and their constituent parts, residence of king, classifications of drawings and colours, scul›ture, sketch-forms, music, dance, aspects of OM- all these should be known through the science of 64 squares. Through the science of Microbode ingrained with in the frames of 64 squares, one should know Form and Rhythm.

To the effective ministerial execution, equal vision, strict allegiance to the path of order and justice, and other such faculties are essentially needed.

The Mayonic order, expressed in Tamil, explains the nature of civilian standards, military standards, ministerial function, the great body consisting of five members and the great body consisting of eight members, various plannings of cities, towns and villages, characteristics of a praiseworthy country and language and so forth.

The efficacy of building construction is mainly based on the mathematical order and Time-measures. The buildings should be constructed in an exact similitude of a well-designed human body.

All the parts of residential buildings should be built in such a way as to symbolise the corresponding limbs of a human body.

The scripture dealing with the principles of architecture, (as written by Maya) purports to explain the process of the construction of gateways and entrances, correspondence between length-breadth and height. varieties of windows, intermediary structures, ornamental structures, various kinds of pillars, characteristics of timber, varieties of wooden pillars and so forth.

கலைதெரி யியலால் கணக்கியல் நுண்மை
நிலைதெரிக் நெறிக்கலை நெறிப்பட நிறீஇ
ஒன்றின் மூன்றின் உறுநிலை ஆய்ந்தே
ஒன்றின் இரண்டின் வருநிலை நோக்கி
ஒன்றின் ஐந்தின் நெறிநிலை கண்டே

;,ன்றுறும் நெறிநிலை நவையறக் காண்டல்
அளவை யியல்நெறி மரபியல் வழக்கே (751)

கலைநெறி எண்ணெறி கழறு மாநெறி
நிலைநெறி நிலையியல் நெறிமுறை ஆய்ந்தே
எண்ணெண் கலைத்திறன் எழிலுற் றோர்ந்தே
விண்மொழி விண்கலை வெளிநிலை உணர்ந்து
வான்கலை வான்மறை வான்நெறி ஓர்ந்தே
வானியல் ஓசை ஒளிநிலை மருங்கின்
தானுறும் நிலையுணர் வியல்நெறி ஓங்கி
ஒளிநெறிக் கலைத்திகழ் இயல்நிலைத் திறனாய்
வெளிஒளித் திறல்கூர் நுண்ணிலை மூலம்
அறிவியல் நெறிமுறை ஆக்கம் தேர்ந்தே
குறியறித் திறனும் நெறியுறு முறையும்
எண்ணிலை யியலால் இலங்கு மாநெறி
விள்ளுறும் நெறிமுறை விளங்கக் காண்டுழி
எண்கலை நிலைத்திறன் ஒருங்குறும் ஆற்றல்
திண்ணிய நெறிமுறை சீரியல் நோக்கிக்
கலையியல் கண்டே கருத்துறும் தொன்னிலை
நிலையியல் ஓங்குறும் நெறியியல் கூற்றே (752)

அகத்துறும் மெய்யுணர் வோங்குறும் ஆற்றல்
மிகுத்தொளி யியற்றிறன் அகவிண் கலைத்திறன்
உணர்வுறும் திறன்மிகும் உள்ளொளி யோர்ந்து
உணர்கலை ஒளிஒலி மெய்த்திறன் ஆய்ந்தே
எட்டும் ஐந்தும் நெறிமுறை யியலால்
எட்டியல் நாற்புறத் தியல்நெறி ஐந்துறும்
இயல்நெறி விரைவுறும் காலச் சுழலியல்
முயன்றினி தாயும் முப்பொருள் தேர்ந்து
எட்டுறும் திறத்தியல் எண்ணெண் கலைத்திறன்
முட்டறும் முறைநெறி மெய்க்கலை யியலால்
ஐந்து மைந்தியல் நெறிநிலை ஓர்ந்து
முந்துறும் மூலம் பெருநிலைத் திறத்தால்
வந்ததொல் மரபியல் வழிவகை யாய்ந்தே
எண்ணெண் ணிலையியல் இயல்பினின் றுணுகி
நுண்ணிய லாக்கம் நுவலருந் தேக்கம்
ஒளிஒலி யியல்நிலை ஓர்ந்துறும் திறத்தால்

வெளிக்கலை நிலைநெறி இரண்டிரண் டியல்கூர்
ஆறறி வகைநிலை அருங்கலைக் கூர்தெரி
ஆற்றல் நெறிநிலை மெய்ம்முறை உணர்ந்தே
திருநிலை உணர்கலை அறுபான் நான்கியல்
ஒருநிலை முந்நெறி செந்நெறி நோக்கி
அளவியல் நிலைகூர் ஆக்கமும் கலையில்
உளவியல் நுட்பம் ஒருங்குறும் நெறியே (753)

நிலைமொழி நேர்மொழி நெறிமொழித் திறனால்
தலைமொழி கலைமொழி தன்னிலை ஆய்ந்தே
மொழியில் நுட்பம் மூலத் தாய்ந்தே
மொழிக்கலை உயரித்திறன் முன்னிலை நோக்கி
அஇ உஎ ஒநிலை ஐந்தும்
ஆஈ ஊஏ, ஐஓ ஔநெடில்
உயிரீ றாறாய் ஓங்குறும் திறனிலை
ஒயிரறத் தேர்ந்தே ஓம்நிலை முதற்கலை
முதலுறும் ஓம்எழுத் தியனிலை யாய்ந்து
முதற்பொருள் முதற்கலை முதன்நெறி மூலம்
ஒருங்குற் றியல்நெறி உள்ளுறும் திறத்தால்
மருங்கின் எழுதரும் யாவொலி ஓசை
சீருறும் ஓம்நெறி செந்தமிழ் விண்ணொலி
நேருறும் திருமறை பெருமறை நிறைமொழி
உண்மையும் வண்மையும் உவப்புற் றாய்ந்தே
நுண்மையும எண்மையும் எட்டியல் மூலமும்
எட்டின் விரிவும் இயல்புற நோக்கி
எட்டெட் டியல்நெறி மூலத் திறத்தால்
ஓம்நிலை கலைமொழி உயிரீ றாறும்
ஓம்நெறி மரபால் உரைக்குமா நெறியா (754)

மூலப் பொருள்நிலை முன்னுந் திறத்தால்
காலங் குறுக்கலும் நீட்டலும் ஓர்ந்தே
காலம் வகுத்தே உணர்வின் றிறத்தால்
காலம் நோக்கி இயல்நிலை தெரிந்தே
காலத் தனுநிலை மெய்நிலை யாக்கம்
மூலப் பொருள்நிலை மெய்நிலை தேர்ந்தே
கோலங் குறிக்கும் குறிப்புறும் திறநிலை
கால மூலமும் மூல காலமும்

மூலத் தியல்நெறி முப்பொரு ளாக்கம்
செம்பொருள் செழும்பொருள் பருப்பொருள் உரிப்பொருள்
செம்மைச் சீருறும் விழுப்பொருள் நுண்பொருள்
கலைபொருள் கண்டுறும் நிலையறி வாற்றல்
நிலைப்பொருள் நோக்கும் தலையறி வாற்றல்
உணர்வின் நோக்குழி ஒருபொரு ளியலாய்
கணந்தொறும் நோக்கி காலத் தியல்நிலை
மெய்நிலை இயலறி எண்ணெண் ணியலே (755)

எட்டுறும் கலைதெரி மூலப் பொருளியல்
எட்டெட் டியல்தெரு உண்மை. யறிந்தே
விண்கலை யொளிரும் எண்கலை மெய்நிலை
தெண்ணிலை சீர்நெறிச் சீரறி வோங்கி
பண்டுறும் நெறித்திறன் பகர்நிலை நோக்கி
விண்டுறும் கலைநிலை நெறிமுறை யோர்ந்து
ஐந்தியல் ஐந்நெறி அருங்கலைத் திறனாய்
முந்துறும் மரபியல் அறுபான் நான்கியல்
சீர்நிலை எண்ணி சீரறி வுற்று
நேர்நிலை மூலம் நிகர்த்தல் நெறியே (756)

தண்டமிழ்த் தனிநெறி ஓம்கலை ஓம்மொழி
ஒண்டமிழ்த் திருநெறி அறுபான் நான்கியல்
வண்டமிழ்க் கலைநெறி சிற்ப மாக்கலை
எண்தமிழ் இயல்நெறி ஓவிய மெய்நெறி
விண்தமிழ் ஒளிநெறி ஓம்மறை இயற்கலை
எண்ணெண் கலைநிலை இயற்றமிழ்க் கலைச்சீர்
எண்ணெண் நாற்புறத் தியல்சீர் இன்றமிழ்
ஐந்தியல் நாற்புற மூலம் மென்றமிழ்
முந்துறும் இயல்நிலை யைந்துஞ் செந்தமிழ்
பாரியல் காலமாத் தோன்றல் கணக்கியல்
பாரியல் வினக்கும் பைந்தமிழ் எழுத்தியல்
தேரியல் கலைநெறி தெள்ளு மாத்தமிழ்
சீரியல் நெறிமுறை விண்கலம் மரக்கலம்
கணக்கியல் வகுக்கும் கலைத்தமிழ் நிலைக்கலை
பிணக்கிலாக் கட்டிடப் பெருங்கலை நிலைத்தமிழ்
மனைநிலம் மாண்தமிழ் நிலமனை நெறித்தமிழ்
கனைப்புறும் தண்டமிழ் தமிழியல் நூற்றமிழ்

தென்தமிழ் விளக்கும் வானியல் கணிதம்
மென்றமிழ் விளக்கும் மூலிகை யியல்நூல்
ஓம்மொழி மூலமாய் அறுபான் நான்கியல்
தேமொழி சீர்மொழி எட்டெட் டியலே (757)

மூல மாத்தமிழ் அகவின் னொறித்தமிழ்
காலத் தோன்றல் கணக்கியல் நோக்கி
ஓம்கலை ஓம்ஒளி ஓம்ஒலி ஓம்மறை
ஓம்நெறி ஓம்இயல் ஒருபொருள் ஓங்கி
ஓங்குறும் மெய்க்கலை உள்ளகத் தோர்ந்தே
ஓமியல் ஓவியம் ஓம்கலை நிலைநெறி
கவினியல் நிலையுறும் கலைத்திறன் ஆய்ந்து
புவியியல் விண்ணியல் பொருந்து மாற்றல்
நெறியுற் றோர்ந்து நிலைபெற் றாய்ந்து
குறிபெறுந் திறத்தால் குறிப்பின் ஆய்முறை
நிலையுறும் எண்ணெண் இயல்தெரி வழக்காய்
கலையுறும் மூலம் காண்டல் நெறியே (758)

மூலத் தியல்நெறி முப்பொருள் ஆய்ந்தே
காலமும் இடமும் கருத்துற் றுணர்ந்தே
நெறிமுதற் றிறத்தியல் நிலையுற் றாய்ந்தே
அறிகலை மூலம் காலமும் உன்னி
ஒன்றிரண் டுறுநெறி ஒன்றுறும் ஒன்றாய்
ஒன்றென் றியல்நிலை ஒளிக்கலை ஆக்கம்
நன்றுறும் ஐந்தியல் ஐந்நெறி யியலாய்
தொன்மைப் பெருநெறி அறுபான் நான்கியல்
மயனெறி யாக்கம் மெய்ம்மை யுணர்நிலை
மயன்தமிழ் எண்ணெண் அறுபான் நான்கியல்
மாநெறி தமிழ்க்கலை சிற்றவைப் பெருவளி
தூநெறி இயற்கலைத் தோற்றமும் தேற்றமும்
எண்ணியற் கலைநிலை இயல்பினி லாய்ந்தே
பண்டுறும் பொருள்நிலைத் திறனிலை யோர்ந்தே
விண்டுறும் தெருளியல் அருங்கலைத் திறனெறி
கண் [illegible] ர் நெறியியல் கேட்டுணர் இயற்றிறன்
தண் [illegible] ழ்க் கலைநெறிச் சீரியல் நெறியே (759)

சீரியல் நேரியல் தேரியல் ஓர்ந்தே
பாரியல் மூலப் பொருள்நிலை ஆர்ந்தே

ஏரியல் வண்ணம் மெய்க்கலைத் திறத்தால்
கூரியல் கலையியல் குறிப்புற் றியல்நெறி
எண்கலை மூலம் ஐங்கலை நிலைத்திறன்
விண்கலை விண்ணெறி விண்ணிலை விண்ணியல்
எண்ணுறுந் திறத்தியல் நெறிமுறைக் கலையால்
எண்கூர் மூலம் இயலியல் நோக்கி
விண்ணெறி முறையால் வியனிலை ஆய்ந்தே
பாரியல் விண்ணியல் காலந் தேர்ந்து
நேரியல் நிலைத்திறன் நவிலல் மரபே (760)

அளவியல் மரபுப்படி நிர்ணயிக்க வேண்டிய பல்வேறு அமைப்புகளுக்கான அளவுக்கூறுகள், அளவு இணக்கம் இரண்டிரண்டாக அதிகரிக்கும் முறை,

நிலைமொழி, நேர்மொழி முதலான மொழிவகை நுட்பங்கள், உயிரெழுத்தியல், ஓம்இயல் — இவற்றை மயன் நெறியால் உணர்ந்தறிக.

12 உயிரெழுத்துகளும் ஓம் என்பதன் கலைகளே என 64 இயல் உணர்த்தும்.

காலமூலம், மூலகாலம், பருப்பொருள் முதலான பொருள்வகைகள், ஆகியவற்றை உணர்த்தி 64 இயலானது கணம் தொறும் காலத்தின் மெய்ந்நிலையைப் புலப்படுத்தும்.

64 இயலால் தெண்ணிலையையும் ஐந்தியலையும் ஐந்நெறியையும் கண்டு, நேர்நிலைக் கட்டிடம் மூலத்தை நிகர்ப்பது என உணர வேண்டும்.

காலமாத் தோன்றலின் இயல்பையும், தமிழ்நெறியே ஓம்மொழி என்பதையும் 64 இயல், சிற்ப-ஓவிய நெறிகள் முதலான அனைத்தும் தமிழின் ஒளிநெறியே என்பதையும், தமிழ் வகைகளையும், விண்கலம், மரக்கலம், கட்டிடம், நிலமனை, மனைஇயல் முதலானவற்றுக்குரிய கணக்கியலையும், வானியலையும் மயன்நெறி எடுத்துக் கூறும்.

காலமாத் தோன்றலின் கணக்கியலே ஓம்-மொழியின் ஆற்றல்களையும், புவிஇயலையும் விண்இயலையும் புலப்படுத்தும்.

மயன் தமிழ்க்குரிய 64 இயலே ஒளிக்கலை ஆக்கத்தையும் சிற்றவைப் பெருவெளியையும், தேரியலையும், பார்இயலையும், இவற்றால் பொருந்தும் செவ்விய அமைப்பையும் விளக்கிக்காட்டும்.

The exact measures applicable to various parts of buildings, ascertained based on the system of measurement, rhythmic correspondence between the measures, its process of increasing in the mode of two by two, subtleties of languages and vowels and OM-sound — these should be known through the Mayonic order.

The science of 64 squares reveals the truth that all the vowels are the aspects of OM only; it reveals the subtleties of the originating source of time, time as manifested by the primal space, various kind of substance such as concrete, subtle, foctus etc, and the exact nature of time which is under continuous flux. Through the science of 64 squares one should know the features of fivefold aspect and order, and those of the direction of South, which is called the 'settled direction'.

The Mayonic order expatiates upon the nature of Kāla-purusa, of OM sound synonymous with Tamil order, of 64 squares, sculptural and drawing patterns all being refined by the Tamil order, various kinds of Tamil expressions, mathematical orders pertaining to space-craft, ship-building, plot, built space, science of space and so forth.

The mathematical order, pertaining to Kala Purusa, is indicative of the geographical factors and subtleties of space.

The science of 64 squares, as designed by the Mayonic order explains the creative energies of luminous rays, extensive space of microbode, features of cosmic chariot and those of bio-sphere and those of well-designed forms effected by them.

எண்கலை மூலத் தியலறி வுற்றே
விண்கலை மூலம் காண்டல் திறனாய்
எண்ணியல் நிலைநெறி இயல்திறன் ஆய்ந்தே
விண்ணியல் கோள்நெறி மீள்நெறி நேக்கி
தண்டமிழ்க் குறிநிலை தணியியல் கணக்கியல்
விண்தமிழ் நெறிமுறை கோள்நிலை கோளம்
எட்டெட் டியலால் இயல்புற் றோர்ந்து
நெட்டுறும் நெறிகணக் கியல்பியல் நவிலும் (761)

மூலம் காலம் ஞாலம் ஓர்ந்து
மூல மாநெறி முன்னிய நெறியால்
மூல எண்ணியல் மூல மாத்தமிழ்
மூலத் தியல்நிலை முன்னி யறிந்தே
ஓம்நிலை தமிழ்க்கலை ஒளிக்கலை தமிழில்
ஓம்நெறி தமிழ்ஒளி தமிழ்ஒலி ஓர்ந்து
ஓமியல் ஓமியம் ஒருநெறி தெளிந்தே
ஓமியல் ஒன்பான் ஒருங்கூர் ஆக்கம்
தேமொழி ஒலித்தமிழ் தீந்தமிழ் நெறியால்
யாமொழி ஒலியிசை பைந்தமிழ் ஒலிநிலை
மூலத் தோற்றம் உணர்வின் எழுகலை
மூல ஒலியியல் உயிரொளி நிலைகலை
சிற்றவைச் சீரியல் தெற்றென உணர்ந்தே
முற்றுறும் பேரறி உற்றுற் றுணர்ந்தே
ஒலிநிலைத் தீந்தமிழ் ஒளிநெறிச் செந்தமிழ்
ஒலியியல் ஓசை ஆக்கமும் நோக்கி
முதல்நிலை இருநிலை மூன்றுறும் பெருநிலை
முதற்கலை ஒலியிசை ஒலியியல் ஓங்கி
நான்குறும் ஐந்து அறுநிலை யாற்றல்
என்றுறும் ஒலியியல் இயல்பின் ஒலிக்கும்
நுட்பம் உணர்ந்தே நுண்ணறி உற்றே
பெட்புறுந் தமிழியல் மூல மாத்தமிழ்
ஓம்கலை மூலம் உணர்தல் நெறியென
ஓமுறும் ஆற்றல் உணர்தல் நெறியே (762)

புலனொருங் குறுநிலை பெருநிலை வீரம்
புலனிலை யுணர்தல் மெய்ந்நெறி ஆய்தல்
புலநெறி யாற்றல் பொற்புறுந் திறத்தால்
நலமுறும் சிற்றவைச் சீரியல் உணர்தல்
தலைநெறி அறுபான் நான்கியல் கணக்கே

நிலைநெறி மூலத் தமிழ்நெறி மரபாய்
அகவிண் ணொளிநிலை ஆர்ந்துறும் கணக்காய்
அகவின் ஒலிநிலை நேர்ந்துறும் எழுத்தாய்
இயங்கு மாநெறி இயல்வன னோர்ந்து
வயங்குசீர் பெருநெறி உண்மை தேர்ந்தே
நன்மொழிக் கணக்கியல் தென்மொழிக் கலையியல்
தென்னியல் சுழலல் சீர்நிலை ஓர்ந்தே
எட்டின் பிறழ்நிலை இயங்குறுங் காலை
நெட்டுறும் தென்திசை நிலையென் றாய்ந்து
தென்புலம் தென்மொழி தென்கலை ஓம்நெறி
நன்னெறி ஓம்எழும் தியல்நிலை ஆய்ந்து
தென்றமிழ் முதலெழுத் தியல்நெறிக் கலைச்சீர்
நன்றுறும் ஓம்எழுத் துறுநெறி யியலே (763)

காலமும் பொழுதும் கணக்கறி யியலாய்
மூலமும் ஆற்றலும் மூவியல் நோக்கி
மெய்ப்பொருள் நிலைதெரி யியலியல் தேர்ந்தே
மெய்நிலை யியல்தெரி நெறிப்பொருள் ஆய்ந்தே
கால நுண்ணியல் கணக்கியல் விரிநிலை
காலப் போரியல் கருதுறுங் கருத்தால்
கால மாஇயல் மாநெறித் திறனிலை
எட்டெட் டுறுநிலை யியல்புற் றோர்ந்தே
எட்டுறும் நிலைநெறி யுள்ளுற் றியல்நெறி
மூல மாநெறி முந்நெறி யியலால்
ஞாலந் தெரிந்து நண்ணு மாஇயல்
கால விரைவியல் கணக்குறும் ஆற்றல்
காலத் திண்நிலை நுண்நிலை கணக்கியல்
எண்நிலை இயலால் இமைநொடிப் போதுறும்
விண்ணெறி மூலத் திண்ணியல் நுட்பம்
எண்ணெறி இயற்கலை எழுத்தியல் திட்பம்
நுண்ணெறி மாக்கலை மாநெறி ஓர்ந்து
காலங் கருதி கடிதின் நோக்கி
கால விரைவியல் ஆற்றல் உணர்ந்தே
காலங் காண்டலும் காலங் கருதலும்
கால மெய்ப்பொருள் கணித்துறக் காண்டலும்
காலங் கருதிக் கருத்துற் றாய்ந்தே
கால மூலம் இயலறி நுட்பம்
மூலம் உணர்ந்து அறுபான் நான்கியல்
மூலம் ஆய்தல் மாநெறி வழக்கே

நூல்பல கற்பினும் நுண்பொருள் உணரினும்
நூல்கோல் எண்ணிலை எண்ணியல் எண்ணி
காலத் தளவைக் கருத்துறக் கண்டே
ஞால மூலம் நண்ணித் தெரிந்தே
விண்ணளந் தறியும் விதிமுறை அறியுனும்
பண்ணளந் தறியுப் பாமுறை தெரியினும்
ஓவியம் சிற்பம் சித்திரம் ஒண்டமிழ்
மேவுறும் கலைநிலை முற்றுறத் தெரிந்தே
ஆவலும் உணர்வும் அறிகலை மூலம்
மேவப் பொருந்துறும் மெய்யுணர் வோங்கிக்
கலைநிலை ஆற்றல் கண்ணெறி நோக்கினும்
நிலைநெறி நோக்கி நெறிகுறி அறியினும்
அறுபான் நான்கிற் மெய்நிலை மூலப்
உறுபொருள் அறிந்தே சிற்றிவை எண்ணியல்
ஐந்து மைந்தியல் மெய்நிலை நுட்பம்
முந்துறத் தெரிந்தே மூதறி வோங்கக்
கலைநெறி நுட்பம் காணாக் கருத்தால்
நிலைநெறி ஓங்கி நெறிமுறை வழக்கே (765)

சித்திறம் ஓவியம் சிற்பம் செந்தமிழ்
மெய்த்தக வுறுநிலை உணர்வின் ஆய்ந்தே
பொருளறி மெய்ம்மை பொருந்த வுணரினும்
தெருநெறி வாற்றல் சீருற மேவினும்
அகவின் னோக்கி அகத்தொளி யுணர்வால்
மிகுகலை காணார் மெய்ந்நெறி யோரார் (766)

உணர்வுறும் செந்நெறி ஓங்குறும் ஆற்றல்
உணர்கலைத் தெளிவால் ஊழ்நிலை ஆய்ந்தே
காலங் காண்டலும் கணக்கியல் ஆய்தலும்
மூலம் உணர்த்தும் மெய்நிலை ஓர்ந்தே
முப்பொருள் முந்நெறி முக்கலை மூவியல்
செப்புறும் சீர்நெறி சீரறி வுற்றே
ஓங்குறும் நிலைக்கலை உண்மை யறிந்தோர்
தனிநிலை யுற்றே பெருநெறி ஆற்றலாய்
நனியுணர் வோங்கி நிலைநெறி ஆய்ந்தே
இடம்பொருள் காலம் என்னு மாற்றலால்
இடநிலை யாற்றல் இயல்நிலை யோங்கி

உண்மைத் தெருநிலை உறுகலை விளக்கி
எண்மை யாற்றலால் எண்ணிய எய்தி
காண்டுறும் காலத் தியல்நிலை நோக்கி
வேண்டும் மெய்ப்பயன் முழுநிலை கண்டே (767)

நுட்ப யாமதி நுண்ணறி வாற்றலால்
பெட்புற் றோர்ந்து வினையியல் ஆற்றலால்
நிறைபய னெய்தி நெறிநிலை யாற்றலால்
நிறைமதி யொளிநிலை நெறியுகழ்க் கலைநிலை
விரமும் உணர்வும் குறிநிலை நோக்கி
விரத் தியல்நிலைக் காலங் கருதி
செய்முறை யறிந்தே செய்கலை நோக்கி
செய்திற னுற்றலால் உய்தி பெற்றுறும்
உணர்வால் மெய்ப்பயு னோங்குறுந் திறனிலை
உணர்கலை யாற்ற லோங்குறும் நெறியே (768)

செந்தமிழ்க் கலைநெறி தமிழிய லொளிநெறி
வந்ததொல் மரபுறும் செங்கதிர்த் தாநெறி
முந்துமெய்ப் பொருள் நெறித் தமிழ்மயன் சீர்நெறி
வந்துறுங் கலைமொழி வண்டமிழ் வளநெறி
நெறிமுதற் பொருளியல் நிலைபெற் றோர்ந்தே
குறிமுத லாக்கம் கலைமொழி யோர்ந்து
தண்டமிழ் மயன்நெறி ஓம்நெறிக் கலைச்சீர்
வண்டமி ழைம்மறைச் செம்மறை மும்மறை
ஒம்மறை முதற்சீர் ஒருங்குற் றோங்கி
ஓம்முத லெழுத்தாய் ஒளிஒலி யியர்சீர்
எட்டின் நிலைதெரி யியற்றிற னோங்கி
எட்டுறும் பிறழ்நிலை இயல்நிலை தேர்ந்தே
அமிழொலி இமிழொலி குமிழொலித் தமிழொலி
உமிழொலி ஓமியல் ஓங்குறுஞ் செந்தமிழ்
நிலைக்கலை யாற்றல் நெறிமுதற் கலைநிலை
கலைநெறி யறுபான் நான்கிய லாற்றலால்
எட்டுறும் நிலைதெரி யெண்ணிலை மூலம்
எட்டெட் டியல்தெரி மூல மாக்கலை
ஒளிமுதற் பொருள்நிலை ஒளிநிலைக் கலைநிலை
ஒளியிய லாற்றல் ஒளியியல் நோக்கம்
அகவின் னிலைக்கலை யைந்நிலை நெறிதரும்

மிகுமொளிக் கலைதெரி மெய்ப்பொருள் நெறிநிலை
வகுத்துறு மாற்றல் ஐயைந் தியலல்
தொகுத்துறுஞ் சுழல்நிலைப் படுத்துறும் பெருங்கலை
மையப் புள்ளி மாநெறி நுட்பம்
வையங் கூட்டும் இயல்நெறி யோர்ந்து
தண்டமிழ் முதற்கலை ஓம்நிலைக் கலைநிலை
வண்டமிழ் வளநிலைக் காலமா விரைவியல்
ஒளிநிலைக் கீற்றொளி ஓங்குறும் ஒளிநிலை
வெளிநிலை யியல்தெரி மெய்ந்நிலை யாக்கம்
மெய்ப்பொரு ளியல்தெரி நுணுக்க மாக்கலை
மெய்யியல் மெய்ந்நிலை மெய்க்கலை இயங்குபு
அணுவணுத் திரளொலி அலையொலி யோசை
கலைநிலைக் கலையொலிக் கீற்றொளி நோக்கி
ஒழுறும் நிலையியல் ஒலிநிலை யொளிக்கலை
ஒழுறுங் கலைத்திறன் ஒண்டமி ழாக்கம்
எண்ணிலைக் கலைநிலை இயல்புற் றோர்ந்தே
எண்முறை யாக்கம் மெய்யுணர் பொருளறி
நிலமுறை யாக்கம் நெறியுறத் தேர்ந்தே
கலைமுறை தெரிந்தே கழறல் மெய்நெறி
ஒன்பான் நிலையியல் ஓம்நெறி யாக்கம்
நன்றுறும் எட்டின் பிறழ்நிலை நிலைக்கலை
தென்றமி ழியலெனத் தெளிந்துறும் மூலம்
ஒன்றுறும் ஒளிக்கலை இயலென் றோர்ந்தே
நெறித்திறன் நோக்கி நிலைத்திற னுய்தல்
குறித்திறன் நெறியியல் குறிப்பிற் றெரிந்தே
இயல்நெறி திறத்தால் எண்ணிலை நோக்கி
இயங்கல் இயக்கம் எண்ணுற நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறும் ஆற்றல்
உறுநிலைக் கலைநெறி யுணர்த்துமா நெறியே (769)

மாநெறி யொன்றே மாயியல் வகுக்கும்
மொநெறிக் கலைத்திறன் மெய்ப்பொருள் மூலம்
தாநெறிக் கலையியல் திட்பமும் நுட்பமும்
பாநெறி மெய்யியல் பகிர்ந்துறு மாற்றல்
மீநெறி நுட்பம் மெய்யிய லோர்ந்தே
மாநெறி யியலியல் திட்பங் கூர்ந்தே
எண்ணியல் மூலத் தெழுதரு மாற்றல்
விண்ணியல் விண்கலை விரிநிலை நோக்கி

எண்ணெறி மூலம் எழுத்திய லாய்ந்தே
விண்ணெறி நோக்கி வியனிலை யாக்கம்
கண்ணுறும் நிலையொளி கணக்கியல் நிலைக்கலை
எண்ணுறும் இயற்றிறன் நெறிமுறைத் திகழ்ந்தே
விண்கலை நெறிமுறை விளங்குங் கலைநெறி
எண்கலை யியற்றமிழ் நெறியியல் நாளும்
எண்கலை நுண்டமிழ் விண்கலை விளக்கும்
மாக்கலை யியல்தெரி மாநெறி நுணுக்கம்
ஆக்கமும் அவைநிலை நோக்கமுங் கூர்ந்தே
ஏக்கற் றிலங்கும் எண்ணியற் கலைநெறி
நோக்குறும் உணர்நிலை மெய்ப்பொருள் காண்டல்
எண்ணெண் ணியல்தெரிப் பொருள்நிலை மூலம்
நுண்கலை நுண்ணிலை நுண்பொருட் காலம்
விண்ணிலை விண்ணியல் விண்ணெழிற் கோலம்
பண்ணியற் பண்முறைப் பண்ணெறிச் சீலம்
மண்ணியல் மாக்கலை மண்திற ஞாலம்
எண்ணிய லாக்கம் நிலைக்கலை மூலம்
தெள்ளிதின் ஓர்ந்தே சீர்நெறி யாய்ந்தே
ஒள்ளிய மாநெறி யுணர்நிலை கூறும் (770)

64 இயலானது - எண்கலை, விண்கலைகளின் மூலவெளி, கோள்நெறி, மீன்நெறி, எண்ணியல் ஆகியவற்றையும் காலவிரைவியல், மூல ஆற்றல், காலத்தின் தூல-சூக்கும நிலைகள், எண்நெறி, எழுத்தியல் நுட்பம் ஆகியவற்றையும் புலப்படுத்தும்.

மூலம் முதலான ஐந்து, சிற்றவை, தமிழ் ஒலிவகைகள் ஆகியவற்றின் மூலம் ஓம் எழுத்தின் ஆற்றலை உணர்தலே முறை. சிற்றவை ஞானம், அகவின் ஒளி தொடர்பான கணக்கு, தென்நிலைச் சுழற்சி, எட்டின் பிறழ்நிலை இயக்கம் கொண்டு தென்திசையில் நிலைபெறல், — இவை ஓம் எழுத்தின் நெறியே.

பல்துறை அறிவுவளம் இருப்பினும் சிற்றவை மூலம் 64 இயல், 25 இயல், 5 இயல் இவற்றை உணர்வதே உயர்ந்த ஞானம். அகவின் உணர்ந்தும் காலம் நோக்கியும் செயல்படாதவர்கள் மெய்ந்நெறி இயலை உணர முடியாமல், பயன் இழப்பர்.

தமிழ் மயன் நெறியே ஒளிநெறி ; செங்கதிர்த்தூநெறி; ஓம்நெறி ; ஐம்மறை நுட்பம் ; செம்மறை நுட்பம் ; மும்மறை

நுட்பம் ; எட்டின்நிலையையும் எட்டின் பிறழ்நிலையையும் 64 இயலையும் உள்ளடக்கிய மையப்புள்ளி விஞ்ஞானம் ; தமிழ் மயன் நெறியே சீற்றொளி, அணுவின் அணுத்திரள் ஒலி, ஒன்பான் நிலையியல், ஓம் நெறியின் ஆக்கம், அது இயங்கி இயக்கும் முறை, முதலான பல நுட்பங்களையும் தெளிவுபடுத்திக் கூறும்.

The science of 64 squares would reveal the subtleties of primal space effected by eightfold process and the constituent square, planetorial movement, stellar space, numerical order, swiftness of time, the basic source of manifestation, subtle and gross states of time, octo-pattern, orthography, etc.

It is systematic to realise the true nature of OM-letter through the study of five aspects (mulam. etc), microbode, various kinds of articulated letters etc. The knowledge related to microbode, mathematical calculation related to luminosity of inner space, rotation occurring in the direction of South, the settling of the variant stage of 8-unit dynamism in the direction of South — all these belong to OM-process.

Even though a person is endowed with the knowledge potential of varied branches of arts and sciences, the exalted stage of supreme knowledge is the clear understanding of 64 aspects, 25 aspects and five aspects through the science of microbode. Those who do not systematise their works based on inner space and time-factor, would not achieve the desired result, being unable to know the nature of eternal order.

The order designed by Tamil Mayan is, indeed, the order of luminous thread; pure order of sun; order of OM; subtlety of five vedas; subtlety of Vastu Veda; of three Vedas; science of central squaric dot which is inclusive of eight, variant of eight and 64 squares. It is the order capable of revealing the subtleties of luminous rays, sound particles of atomic structure, mechanism of Om-process in the field of 81 squares, self-spin of OM and its power of setting others into motion and so forth.

கட்டிடச் செந்நெறிக் கலைநெறி யுணர்ந்தே
கட்டிடக் கணக்கியல் கலைமுறை வகுத்தே
கட்டிடத் தியல்நெறி மூலம் ஆய்ந்தே
கட்டிட மாயியற் கலைநிலை நோக்கம்
கட்டிடக் காலக் கணக்கியல் தேர்ந்தே
கட்டிட நிலத்தியல் புலத்தியல் நோக்கி
கட்டிட நீர்நிலை நேர்நிலை யாய்ந்து
கட்டிட மனைநிலம் நிலமனை யியலாய்
விட்டிடம் வேற்றிடம் வேறிடம் மாறிடம்
தெட்டிடம் சிற்றிடம் சீரிடம் நேரிடம்
நிலைநிறைக் கலைத்திறன் நேறிப்பட நவிலல்
கலைநிறை யெண்ணியல் கருத்துற் றோர்ந்தே
அடிநிலைக் கலைநிலைக் காலம் ஆய்ந்தே
முடிநிலைத் திறனெறி முன்னிய தோர்ந்தே
படிநிலை இயல்தெரிப் பான்மை யாக்கம்
கடிநிலை மூலத் தியல்தரும் நுண்மை
கடியியல் நோக்கிக் கணக்கிய லாய்ந்து
வடிகலை யியல்தெரி வளமுற் றோர்ந்தே
நொடிநொடி யிமைக்கலை நுண்ணிதி னாய்ந்தே
ஒடிவும் விடிவும் ஓர்ந்துண ராற்றல்
அடியும் முடியும் அமைநிலை நோக்கிக்
குடியுங் கூறும் கூர்நிலை யாய்ந்து
நொடிதுண் ணியல்தெரி நுணுக்க மாக்கலை
காலத் தியல்தெரி நுணுக்கம் ஓர்ந்து
மூலத் தடிநிலை யியல்பின் ஆய்ந்து
அடிநிலை யிடையிடை யகழ்வுற் றாய்ந்தே
அடிநிலை நிலத்தியல் புலத்திய லோர்ந்து
எண்ணள வியல்தெரி நுண்ணிலை நுணுக்கம்
விண்ணள வோர்ந்தே எழுநிலை மாடம்
இடையிடை யடுக்குறுஞ் சுற்றுறு மடுக்கும்
இடையடுக் கியல்நிலைக் கண்பல விரிந்தும்
இடைவெளி இடைநடு எழுகண் ணோக்கி
நடைநிலைப் புறமும் நவிலுறு மகமும்
அகப்புறத் திடையியல் யேல்கீ ழாக்கம்
மிகுத்துறும் விரிபரப் பியல்நிலை நோக்கம்
நுண்ணிதி னாய்ந்து நுணுக்கம் ஓர்ந்து
எண்ணுறு மியல்நிலைக் கணக்கிய லுச்சியே (771)

எட்டெட் டியலே இயலுறுஞ் செந்தமிழ்
தெட்டுறு மையைந் தியலநிலைச் சீர்நெறி
உணர்வுறுந் திறனெறி மெய்க்கலை மெய்ப்பொருள்
உணர்நிலை மாக்கலை இயல்தெரித் திறனாய்
கலைநிலை யோர்ந்து கணக்கியல் நெறியால்
நிலைநெறி யியற்றிறன் ஆக்கங் காண்டுழி
உள்ளியல் வெளியியல் உண்மை மாநெறி
தெள்ளுறும் நிலைநெறிச் சீரறி நுட்பம்
மெய்க்கலை யறுபான் நான்கியல் நிலையாய்
மெய்யுணர் வுறுநிலை யெண்ணிலை யாக்கம்
காலரைக் கால்நிலை யரைநிலை முக்கால்
நாலரை யியல்நிலை நெறிமுறை யோர்ந்தே
ஒன்றிரண் டுறுநிலை மூன்றுநான் கைந்தாய்
நன்றுறு மாறே ழெட்டுறும் நிலையும்
உணர்நிலை யறிவால் உன்னுவ உன்னி
உணர்வின் மெய்த்திறம் மெய்க்கலை நாடிக்
கலையறித் திறனுறும் எண்ணிலை யாய்ந்தே
எண்முறை யியற்றிறன் எளிதில் நாடி
விண்ணெறி நிலைக்கலை வியனுறு யாற்றலால்
கண்கலைக் கவின்நிலைக் கருத்துற் றாய்ந்து
திண்ணிலை நுண்ணிலைச் சீர்பெற் றிலங்கி
உள்ளுறும் மெய்க்கலை உணர்வழி யாற்றலால்
தெள்ளுறும் சீர்சால் நெறியுறு மாக்கலை
கலைநெறி யொன்றிரண் டியலுறும் நெறியால்
நிலைநெறி யறுபான் நான்கியல் நவிலுமே (772)

உணர்வுங் கலையும் வீரமும் ஆண்மையும்
உணர்நிலைத் தெளிவும் சொன்னிலை வாய்மையும்
மெய்யியல் மெய்ம்மையும் பொருண்மையும் நெறியும்
பொய்யறு குறிக்கோள் நெறிமுதற் பொருளும்
கலைக்குடிப் பண்பும் நிலைக்குடி யன்பும்
தலைக்குடி வீரமுமட றுகண் ஆண்மையும்
உளமொருங் குறுநிலை மெய்ந்நிலைத் திறனும்
களமுங் காலமும் பொருளுங் கருதிச்
செய்முறைச் செய்ந்நிலை சீர்த்தக வோர்ந்தே
மெய்ந்நிலை இயற்றல் அறிவர் கடனே (773)

குன்றா வுணர்வுங் குறைவறு மதியும்
வென்றிகொள் உள்ளமும் நெறியறி திறமும்

குறிக்கொள் நோக்கமும் விரியறி வாற்றலும்
குறிப்புறுங் குறிப்பின் குறிநிலை யியலும்
அறிதலும் ஆய்தலும் நெறிநிலை நோக்கிக்
குறிதருஞ் செந்நெறிக் குறிப்புற் றோர்ந்து
சிற்றவைச் சீர்நிலைச் செறிவுற் றோர்ந்து
உற்றுறும் மூதறி யுணர்வின் நோக்குபு
ஐந்தியல் நிலைக்கலை யைந்துறு மாற்றலாய்
ஐந்துமைந் திறத்தெரி மெய்க்கலை யாக்கம்
எண்கல யெண்ணிலை எண்முறை யெண்ணெறி
எண்ணியற் கலைத்திறன் நுண்ணறி வுற்றே
கணக்கியல் நெறியே கலைநெறித் திறனெனக்
கணக்கியல் காண்டல் நெறிமுறை வழக்கே (774)

காலம் நல்கும் பேரறி வாற்றல்
காலம் மல்கும் பேருணர் நிலைக்கலை
கால் மல்கும் சீரறி கலைநிலை
காலம் மல்கும் நுண்ணுணர் நெறிக்கலை
கால நுட்பங் கடிதின் நோக்கி
மூல யாப்பொருள் முன்னுணர் வாலறி
நெறிமுறைக் கலைத்திறன் நீள நினைந்தே
குறிமுறைக் குறிப்பொருள் குறிப்பின் ஆய்ந்தே
கால விரைவியல் மெய்ப்பொருள் நுணுகிக்
காலஞ் சுழலல் கணக்கின் ஆய்ந்தே
எண்ணெண் கலைத்திறன் இயல்பிற் றெரிந்தே
நுண்ணறி வியலால் நுணுக்கங் கண்டே
விண்கலை யியற்றிறன் விரிநலை நோக்கி
எண்ணெண் கலைத்திறன் திட்பம் ஓர்ந்தே
நுணுக்கம் இயல்நிலை நெறிமுறை திகழ்ந்து
அணுக்கம் அணுவணு இயல்நிலைத் திறனெறி
ஒன்றி னின்றொன் றுருநிலை காண்டல்
நன்றுறும் நெறித்திறன் நாடுவ நாடி
நுட்பமுந் திட்பமும் நுவல்முறை யாய்ந்தே
ஒட்பமும் ஒருநிலை யுணர்வும் ஓங்குறும்
ஒம்கலைத் திறனுறும் எட்டின் பிறழ்நிலை
ஒம்நெறி மூலத் தியல்நிலை யாற்றலாய்
காலமா நுட்பம் கணக்கியல் நெறியாய்
காலங் காண்டல் யாநெறி யியலே

தொன்மொழி தொன்னிலை தொன்மர பியல்நெறி
நன்மொழி யியற்கலை தூய மாநெறி

ஒருகலை நிலைத்திறன் ஒள்ளிதின் ஓர்ந்தே
வருகலை நிலைக்கலை வெளிக்கலை நெறிதிகழ்
முந்நெறி மூவியல் முறைமையிற் றிகழ்ந்தே
செந்நெறி எண்திகழ் சீரொளித் திறனிலை
எண்ணெண் ணியல்தெரித் தியலுறும் உணர்வியல்
நுண்கலை நுணுக்கம் நுவலுறும் திறத்தால்
ஐந்தியல் ஐந்நெறி ஆக்கமுற் றோர்ந்தே
ஐந்துறும் நிலைநெரி மெய்ந்நிலைக் கலையியல்
வந்ததொல் மரபியல் வகுத்துறும் நெறிக்கலை
முந்து மாக்கலை முதனிலை யியற்றிறன்
நுண்ணிதின் ஓர்ந்து நுவலரும் சீர்க்கலை
எண்ணுறும் எண்ணியல் இயல்றெி யுற்றே
விண்கலை விண்மொழி விண்ணியல் நெறியால்
எண்கலை இலங்கல் இலங்கு மைந்நெறி
மூலப் பொருள்நிடில முன்னி யோர்ந்தே
காலத் தியல்நிலை கருத்துணர் வுற்றே
குறிப்பின் நோக்கி நெறிநிலை யியலால்
குறித்துறும் செய்நெறி குறிப்பின் ஆய்ந்தே
குறிநிலை மூலப் பெருநிலை நோக்கி
நெறிநிலை யியல்தெரி நிலைத்திறன் ஆய்தல்
உறுநெறி ஐந்தியல் எண்ணெண் கலைத்திறன்
அறுபான் நான்கின் உற்றுறும் திறனாய்
எண்ணிலை மூலத் தெழுநிலை யியற்றிறன்
தெண்ணிலைச் சிற்றவை சீர்நெறி தெறிக்கும்
நெறியுணர்ந் தாற்றலால் நிலைபெற நோக்குழி
அறிவுணர் கலைதிகழ் ஆற்றுமா நெறியே (776)

நாற்புறத் தியல்நிலை எண்ணெண் கணக்கியல்
தோற்றுறும் சிற்றவை மூல மையியல்
காத் திறத்தின் கணக்கியல் நுட்பம்
மூலப் பொருள்நிலை முன்னி யோர்ந்தே
ஐந்தும் எட்டும் நிலைதெரி யியலால்
முந்து செந்தமிழ்ச் சிற்றவை யாற்றல்
எண்ணிலை எண்கலை எண்ணெறி எண்ணியல்
எண்முறை ஐந்தென் றியல்திறன் நோக்கி
மாநெறித் திட்பம் மாஇயல் நுட்பம்
தாநெறி ஒட்பம் தாய மாக்கலை
ஒளிநிலைக் கலைநெறி ஓங்குறும் ஆற்றல்
வெளிநிலை நாற்புறத் தியல்நெறி மூலம்
வளியியல் அறிநிலை களிக்கலை வெளியென

ஒளிநிலை மூலம் உள்நிலை ஆய்ந்தே
தெளிவுறுந் திறத்தால் மூன்றுறும் நெறிக்கலை
உற்றறி மதிநிலை ஓர்ந்துணர் செயல்கலை
தெற்றுறும் சீரறி வுற்றுறும் மெய்நிலை
அகமும் புறமும் அறிநிலை இயற்கலை
அகவெளி புறவெளி நிலையியல் ஓர்ந்தே
நிலையும் கலையும் நெறியால் நோக்கி
கலைத்திறன் காண்டல் கணக்கியல் நெறியாய்
ஒன்றுறும் மெய்க்கலை மெய்யியல் திறத்தால்
நோக்கமும் குறியும் நெறியும் உணர்ந்தே
உண்மை யியல்தெரி உற்றுறும் திறனெறி
வண்மைக் கலைநிலை வண்நிலைச் சிற்றவை
எண்ணெண் கணக்கியல் எண்ணிலை முறையியல்
விண்திறன் அறுபான் நான்கியல் வழக்கே (777)

எண்கலை நுட்பம் எண்ணியல் திட்பம்
எண்முறை ஒட்பம் எண்ணெறி நுட்பம்
ஒருங்குற் றோர்ந்தே எண்ணிலை மூலம்
பெருநிலைக் கலைத்திறன் பெருக்கம் ஆய்ந்தே
ஒருநிலை இருகலை முந்நெறி நாற்புறம்
வருகலை ஐந்திறன் வளர்நெறி தெரிந்தே
கால விரைவியல் கணக்கின் ஓர்ந்தே
கோலத் திறத்தியல் மாநெறி நுட்பம்
உணர்நிலக் கலையால் ஒருங்குறும் ஆற்றல்
உணர்கலை அகவின் னொளிநிலைக் கூர்ந்தே
புறவின் னோர்ந்தே பெருந்நிலை யாய்ந்து
திறமுறும் எட்டியல் நிலைக்கலை ஆர்ந்தே
எட்டெட் டியல்தெரி ஐந்தியல் நுணுக்கம்
எட்டியல் நாற்புறத் தியல்நிலை ஐங்குறி
புள்ளி மூலத் தியல்நெறி நோக்கி
தெள்ளுறங் கலைநிலை ஐயைந் தியலால்
அறுபான் நான்கும் வகைபெற நோக்குழி
உறுமுறை கலைநிலை ஓங்குறும் திண்மை
நுண்மைத் திறனறி வண்மை ஓர்ந்தே
எண்மையும் விண்மையும் இயலுற் றாய்ந்தே
விண்ணொளி நிலைநெறி அகவின் னாற்றல்
எண்ணுற் றாய்ந்தே இலங்கு மாநெறி
கணக்கியல் நோக்கிக் கலையியல் ஆய்ந்தே
கணக்கின் நுட்பம் கருதுதல் மரபே (778)

எழுத்தியல் நுட்பம் வழுத்து மாநெறி
பழுதில் அறுபான் நான்குறும் நாற்புறம்
ஐந்தியல் நுணுக்கம் அகமுற் றோர்ந்தே
முந்து செந்தமிழ் முறைநெறி ஆய்நிலை
எட்டின் பிறழ்நிலை ஓம்நெறி யோர்ந்து
தெட்டுறும் ஓம்எழுத் திறனிலை யாற்றலால்
மொழிமுத லெழுத்தாய் ஒலியியல் ஓசை
எழுத்துறும் இயல்நிலை இயல்பினி னோர்ந்தே
உயிர்க்குறில் உயிர்நெடில் ஐந்து மேழுமாய்
செயிரற நோக்கி மொழியியல் கண்டே
மூவகை யினமும் மெய்யுயிர் நிலைத்திறன்
பாவகை யியலும் ஓசை ஒளியியல்
அளவை யாத்திரை காலக் கணியியல்
அளவை நெடிதியல் நெடிதுறும் கோட்டியல்
கோட்டியல் வரிவியல் ஒலியியல் ஒளியியல்
நீட்டியல் பெருக்கியல் நிலையியல் கலையியல்
இயல்நிலை மொழியியல் இனிதி னுணர்ந்தே
மயன்நெறிச் சிற்றவை அறுபான் நான்கியல்
இயல்முறை ஐந்தையும் எண்கலைத் தியத்தால்
தண்டமிழ்க் கணக்கியல் செந்தமிழ்ச் சிற்றவை
வண்டமிழ் மயன்நெறி அளவியல் ஆய்ந்தே
மொழியியல் நுட்பம் மூலம் ஆய்ந்தே
எழுநிலை எண்ணிலை ஆய்தலமா நெறியே (779)

கட்டிடக் கலைதெரி கணக்கியல் நுட்பம்
கட்டிட நிலையியல் நெறிதரும் மூலம்
கட்டிட ஆயம் அடிநிலைக் கலைநிலை
கட்டிடப் பாரியல் கணக்கியல் தேர்ந்தே
எட்டேட் டியல்தெரி நிலைக்கலை ஆற்றல்
எட்டுறும் எண்ணே கணக்கியல் நெறியாய்
விண்ணெறி விளக்கும் கால விரைவியல்
எண்ணெறி மூலத் தியலால் ஆய்ந்தே
நெறிமுறை யாறே பத்துபத் தாறே
நெறிநிலை ஒன்பதும் குறிநிலை நோக்கி
அறிகலை மூவொன் பதுநிலை ஆய்ந்தே
நாளும் கோளும் நவையில் பொழுதும்
கோளுறும் விண்மீன் குறித்துறும் நிலையும்
பாரியல் நிலையும் பான்மையும் நோக்கி

சீரியல் நல்லியல் தொல்லியல் நிலைநெறி
நேருறக் கண்டே நிலையுற் றாய்ந்தே
பாருறும் தன்மை பண்பின் ஓர்தல்
கட்டிடத் தியல்நிலை அடிக்கலைக் கணக்கியல்
கட்டிட மூலம் நெறிதரு நிலையால்
அறிமுறை ஆய்ந்தே நெறியுற் றோர்ந்தே
நெறிநிலை யியலால் உணர்தலும் வழக்கே (780

கட்டிடஇயல், காலஇயல், நிலத்தியல், புலத்தியல், மனை நிலம், நிலமனை, மனை உறுப்புகள், அடிநிலை, முடிநிலை, படிநிலை, அடிநிலை அகழ்வு முதலான அனைத்தும் கணக்கியலின் உணர்நிலையால் சிறப்புறுபவை.

64 இயலானது உள்இயல், வெளிஇயல், 1/8 முதல் 2 வரை அதிகரிக்கும் அளவு இணக்கம், செந்நெறிக் குறிப்பு, சிற்றவைச் சீர்நிலை, 25 இயல், எண்நிலை முதலானவற்றின் நுட்பங்களைப் புலப்படுத்தும்.

குடி இயலையும், உணர்வுச் செம்மையையும், காலம், இடம், பொருள் ஆகியவற்றையும் ஓர்ந்து செயற்படல் அறிவோர்கடன்.

கால நுட்பம், காலச் சுழற்சி, 64 கலைத்திறன், ஓம்கலைத் திறன், எட்டின் பிறழ்நிலை, எட்டால் அமையும் மூலத்திறன், — இவற்றைச் சிற்றவையின் நுட்ப நெறி புலப்படுத்தும்.

சிற்றவையின் ஆற்றலே நாற்புறத்து இயல், கலைத்திறன், ஐந்தியல், எண்நிலை, எண்கலை நுட்பம், ஐந்திறன் வளர்நெறி, விண்வகை, எண்மை, விண்மை, புள்ளி மூலப் பெருமை ஆகியவற்றைப் புலப்படுத்தும்.

மயன்நெறித் தமிழே, எட்டின் பிறழ்நிலையாம் ஓம்நெறி, எழுத்து ஒலி ஆற்றல், எழுத்தொளி, எழுத்துக் காலம், கோடு வகைகள், நீட்டியல், பெருக்கியல், கட்டிடத் தொடர்பான நில இயல் ஆகிய கணக்குகள், கோள் நாள்மீன் ஆகியவற்றின் ஒளித்திறக் கணக்கு, நவையற்ற நற்பொழுது முதலானவற்றைப் புலப்படுத்தும்.

The architectural science, science of Time, science of ground and that of select area, built space, non-built space of the select area, various parts of residential

building, foundation, final, settled ground floor, method of laying foundation — all these attributed with supreme harmony through mathematical order.

The science of 64 squares reveals the subtle principles of inner space, outer space, correspondence between the measures and its mode of increase from 1/8 through 2, position of luminous thread, supreme form of microbode, 25 aspects, eightfold state etc.

It is incumbent on the part of practitioners to systematise their work based on the nature of civilian standard, perfect mind, time, place, material and so forth.

The subtle process of microbode reveals the minute unit of time, gyration of time, mechanism of 64 squares, OM-process, variant of eightfold state, primal space effected by eight, etc.

It is the subtle energy of microbode that makes known the operative process of four state, subtlety of numerical order, process of elevation assumed by fivefold, aspect, space-fields, quality of eight and that of space greatness of minute central dot etc.

It is the Mayonic order, designed in Tamil, that reveals the process of OM, principles of number and letter, time-unit of letter, varieties lines and their specific features, lengthening, process of amplification, nature of ground, āyadi calculations, calculations related to the position of planets and stars, auspicious time factors and so forth.

காலப் பொழுதே கணக்கியல் நெறியால்
மூலத் திறனுறும் புள்ளியின் ஆக்கம்
உழைப்பியல் நெறியால் உள்ளுரு உன்னி
உழைப்புறும் உணர்வால் நெறியுற் றாய்ந்தே
உண்முக நோக்கும் உணர்நிலைக் கலையால்
விண்முகத் தியலும் மெய்நெறித் திறத்தியல்
எண்முகத் தீர்ப்பியல் இயைபுற் றோர்ந்தே

விண்கலத் தியல்நிலை விசையியல் ஆக்கம்
உருளை நிலையியல் இடையிடை வெளிநிலை
ஆக்குறும் நிலையியல் அறிவுற் றார்ந்தே
நோக்குறும் நிலைதெரி நுண்ணுணர் மதியால்
பொறிபுலன் நிலையுறும் வலவனின் நிலையியல்
நெறியுறும் விசைநிலை விண்நிலை கலையும்
எண்ணெண் கலையியல் இயலுற் றோர்ந்தே
எண்ணியல் அகவின் ணொளிதரும் இயலால்
கால விரைவியல் கணக்கியல் ஓர்ந்தே
கோலத் தெட்டின் குறிப்பியல் கணிநிலை
ஓர்ந்துணர் மதியால் உள்விண் ஆய்நிலை
தேர்ந்துணர் விண்கலச் செந்நூல் செப்பும்
முறைநெறி யோர்ந்தே முந்நெறி யாக்கும்
அறையியல் ஆறுபான் நான்கியல் வழக்கே (781)

நீரியல் நீர்நிலை நீர்கலை நுணுக்கம்
நீர்வாழ் உயிர்த்திறன் நெடிதுறு நோக்கி
நீர்இயல் நெறிக்கலை நிலைமுறை தேர்ந்தே
நீர்வலி நிலைவலி நிலத்தியல் முறைதெரி
கலைநிலை யாற்றலால் கார்த்திறம் உணர்த்தும்
நிலையியல் மண்ணியல் ஆர்நிலைத் தோற்றம்
தேற்றம் ஏற்றம் மாற்றம் ஆற்றல்
வேற்றுறும் நிலைநெறி நிலத்தியல் நீரியல்
புலத்தியல் மண்ணியலட பொருந்த நோக்கி
நிலத்தியல் நீர்நெறி நீரியல் ஆய்ந்தே
கலையியல் கணியியல் கருத்துற் றோர்ந்தே
மலையியல் கடலியல் காட்டியல் நுணுக்கம்
கோளியல் மீனியல் கோளத் தியலும்
நாளியல் பொழுதியலட நல்லியல் ஆக்கமும்
சிறுபொழு தாக்கம் பெரும்பொழு தேற்றம்
உறுபொழு தியலறி நீரியல் மாற்றம்
கருவுயிர்த் தொகையுறும் நீரியல் ஆக்கம்
உருவுயிர்த் தொகையுறும் நிலத்தியல் நோக்கம்
நீர்முதல் வளிநிலை வெளிநிலை நிலத்தியல்
சீர்முதல் விண்நிலை தீயியல் ஆய்ந்தே
நீர்க்கலை யியலும் நிலக்கலைத் தெளியும்
தேர்நிலை நுட்பம் செப்புவ தியல்பே (782)

இயற்கை இயலல் இயல்நிலை வானியல்
வியனிலை மாமழை நீரியல் வளநிலை
மலர்பூஞ் செடியும் மலர்க்கொடி மலர்மரம்
அலர்விரி நிலைமலர் அணியுறும் நிலந்திகழ்
பச்சிலை மூலிகை பயன்தரும் தழையியல்
உச்சி மாநிலை ஓங்கு பெருமரம்
தழைநிலை தழைத்து தளிர்க்கொடி முல்லை
தழைநிலை நன்னிலம் முல்லை மாநிலம் (783)

நீர்வீழ் அருவி நெடிதுயல் வெற்பும்
கார்தீண் டுச்சி கவின்வரை எழிலும்
வண்ணப் புள்ளினம் வடிவுகொள் விலங்கும்
எண்ணத் தியலா யியலுறும் பல்லுயிர்
மலர்விரை கமழும் மலையிட நடுவண்
புலர்பொழு தியல்கூட் டுறுநிலை யாக்கும்
பன்மலர் வண்ணம் செறிந்து காட்டும்
நன்மலர் குறிஞ்சி நீள்நிலத் தியலே (784)

நீர்வளத் தியலால் நெறிதரு நிலவளம்
ஏர்வளம் பயிர்வளம் உயிர்வளம் ஆக்கும்
கார்வளம் கெழுமும் கவினுறுந் தோற்றம்
தேர்வளப் பொழிலும் சீர்நிலை மஞ்ஞை
சீர்நிலை தாமரை குவளை நறுமலர்
நேர்நிலை அணியியல் நிகழும் மருதம்
பொற்புறும் நிலத்தியல் பொங்குறும் வளமும்
கற்புறும் மக்கள் கவினிய நிலமே (785)

விரிநிலைத் தழ்குருசெய் ஆழ்கடல் பரப்பும்
புரிநிலைக் கலைநிலை அறிவியல் நோக்கமும்
கலைநிலைக் கதிர்நெறி கதிரொளி கதிர்க்கலை
நிலைநெறி பொழுதுறும் நெறிநிலை ஆழம்
உணர்வின் ஆற்றல் உயிர்க்கலை அறிந்தே
உணர்திற மதியால் உழைப்புறும் திறமும்
ஆழ மாக்கடல் உயித்தொகை யாய்ந்து
ஆழத் தெளிவும் அகழ்நிலை ஆய்வும்

கொண்டுறும் மக்கள் குடிப்பிறப் பாய்ந்தே
தொண்டுறுங் கடல்சார் நெய்தல்மா நிலமே (786)

முல்லையுங் குறிஞ்சியும் முறைமை மாறி
ஒல்லையில் இருநிலம் திருநிலை ஆழ்ந்தும்
தொல்லை வேறுவே றிருநிலை யாறி
வல்லை கடுமை கோடை வெயில்நிலை
புல்செடி கொடிநிலை மாற்றமும் வீழ்ச்சியும்
நல்மரம் அற்றுறும் நீர்நிலை யற்றுறும்
நிலத்தியல் நீரியல் நெறிமுறை சாரா
நிலமுறும் பாலை நெறிமுறை நிலமே (787)

நிலத்தியல் புலத்தியல் மனையியல் ஓர்ந்து
நிலத்துறும் நீரியல் மெய்யியல் தேர்ந்து
நாடுறும் நாட்டமும் நவிலரும் நல்வளம்
தேடுறும் தேட்டமும் செப்பரும் கலைவளம்
நீர்வளம் நிலவளம் நெடிதுறுங் குடிவளம்
ஏர்வளம் இயல்வளம் எண்ணித் தேர்ந்தே
தொல்வளம் கெழுமும் தூயசெந் தமிழின்
பல்வளத் தைந்தியல் எண்ணியல் நாடி
எழுநிலை எழுகலை எழுமுறை எழியல்
எழுமுணர் கலைத்திறன் ஏமெழு நாடுறும்
நிலவளத் திறனிலை நெடிதின் ஆய்ந்தே
கலைவளம் சொற்பொருள் கவினிலை மாக்கலை
பொருள்வளம் பொருள்நிலை தொழிற்கலை நோக்கி
தெருளுளம் சீர்நிலை சீரறி வுற்றே
மெய்யியல் மெய்க்கலை நிலையுற் றாய்தல்
மெய்யுணர் கலைத்திறன் மேலோர் நெறியே (788)

ஒளிஒலித் திறனிலை ஓங்குற வாய்ந்தே
வெளியியல் விண்ணியல் விரிநிலை உணர்ந்தே
தெளிநிலைக் கலைத்திறன் சீரியல் நோக்கல்
ஒளிஒலி யியற்றிறன் ஓங்குறும் நேர்நிலை
ஒள்ளிய நுண்கலை நுணுக்கம் ஓர்ந்துழி
தெள்ளுறும் உணர்நிலை சீருறஞ் செயலால்
கலைநிலை அறுபான் நான்கியல் ஓர்ந்தே
நிலைநெறி எண்ணியல் நவிலல்மா நெறியே (789)

எள்ளள வளவை இயன்றினி தாய்ந்து
விள்ளுறும் கால நுணுக்கந் தேர்ந்து
சிற்றவை நிலைதெரிச் சீருறும் உணர்வால்
உற்றுறும் மெய்யுணர் வியல்நிலை ஓர்ந்தே
நாற்புறத் தியல்நெறி தன்னிலை கூர்ந்தே
ஏற்றுறும் இடைஒளி புள்ளியும் ஆய்ந்து
ஐந்தியல் நெறியென் றறைதரு மாற்றல்
முந்துறும் கால விரைவியல் ஆற்றலால்
ஞாலஞ் சுழலல் காலஞ் சுழலல்
கோலங் கூட்டும் சீலம் நாட்டும்
ஞாலத் திண்ணெறி நுண்ணெறி யாந்தே
மூலக் கனலால் முன்னி யோர்ந்தே
அகவின் நிலைதெரி மெய்க்கலை யியற்றிறன்
மிகுமொளி புகுமொளி விண்ணொளி நுண்ணொளி
ஒளிநிலைக் கலைநிலை ஒலிநிலை நோக்கி
வெளிமொழி ஓம்கலை ஓம்மொழி ஓம்இசை
தெற்றெனத் தேர்ந்து செந்தமிழ்க் கலைநிலை
முற்ற வுணர்ந்தே மூதறி வுற்றே
சிற்றவை எண்ணியல் தெள்ளிதின் ஆய்ந்தே
ஒன்றொன் றுறுநிலை எண்ணியல் திறத்தால்
மெய்க்கலைத் திறனெறி மெய்யியல் புறநிலை
உய்த்துணர் உயிர்க்கலை ஒளிநிலை ஒலியாய்
அகமும் புறமும் உணர்நிலை தேர்ந்தே
மிகுகலை யுணர்வும் புகுநெறிக் கலையும்
வகுத்துறும் எண்ணியல் வகைகலைத் திறனும்
வகுத்துறும் உணர்வால் உற்றமா நெறியே (790)

மூலப்புள்ளி, வெளியின் திறமனைத்தும் பொருந்தப்பெற்றது. இப்புள்ளி இயலால், விண்கலச் செந்நூலானது விண்கல அமைப்பு, விசைஇயல், உருளை அமைப்பு, வலவன் தகுதி, வலவன் அமர்விடம், விண்நிலை, காலவிரைவு முதலானவற்றை விளக்கிக் கூறும்; காலக்கணக்காலும் 64 இயலாலும் இவற்றைப் புலப்படுத்தும்.

நீர் இயல், நீர்வாழ் உயிரியல், மண்ணியல், புலத்தியல், மலை இயல், கடலியல், காட்டியல், கோள்நிலை, மீன்நிலை, கால இயல், நீர் இயலின் மாற்றம், நீரியலின் உயிர்த்தொகை, நிலத்தியலின் உயிர்த்தொகை, உருஉயிர்த்தொகை, வளி இயல்

தீ இயல், தேர்க்கலை நுட்பம், முல்லை முதலான ஐந்நிலங்களின் இயல்பு, ஏழ்நெறி, நாற்பத்தொன்பது நாட்டமைப்பு, ஒளி-ஒலி இணக்க முறை, ஞாலச் சுழற்சி, கோல அமைப்பு, சில வெளிப்பாடு, மூலக்கனலால் உருவாகும் ஒளிவகைகள், ஓம்இயல், சிற்றலை இயல் — இவை முதலானவற்றை மயன் தமிழ் விளக்கிக் கூறும்.

The primal-central squaric dot is associated with all the energies of space-fields. The treatise dealing with the construction of space-craft, explains through the science and technique of central. dot, time-measures and 64 squares, various features of the air-craft, such as the structural pattern, speed-control, wheels, fitness of pilot, exact position of the pilot, fly-course in the sky, swiftness of time etc.

The treatise of Maya, addresses itself to explain the following: nature of water, nature of living beings of water-region, nature of ground and select area, nature of mountain, ocean, forest, planets, stars, Time, periodical changes occurring in oceans, classification of living organisms, embodied things, nature of wind, fire, subtleties of Cosmic Chariot, nature of five kinds of regions such as mullai, kurinji, etc, sevenfold mandala, nature of 49 countries, correspondence between sound-and light, rotation of eight, structure of form, rhythmic manifestation, luminous objects effected by the Primal fire, OM-process, microbode and so forth.

எழுத்தறி மூலம் எண்ணறி காலம்
முழுநிலை ஒலியால் செழுநிலை ஒளியியல்
எழுமுணர் முயற்சி இயைநிலைக் கூட்டி
விழும்ஒலி நிலைக்கலை மெய்நெறி யாக்கும்
ஐந்தெழுத் துறுநிலை அகத்துறும் உணர்வால்
வந்துறும் நெறிமர பியல்நிலை வகுத்தே
இடையுறும் நிலைக்கலை நாற்புறத் தெழுநிலை
நடையுறுங் காலத் தியல்தரும் சுழல்நிலை
ஐயைந் தைந்தாய் அணியுறும் நிலைத்திறன்

உய்நிலைக் கலைத்திறன் அறுநிலத் தியல்நிலை
அதி உள ஒநிலை ஆய்ந்தே
அந்நிலை முந்நிலை செந்நெறி தேர்ந்தே
தொன்னெறி மாறாத் தூநெறி யாக்கும்
தென்னெறி தென்கலை தென்மொழி யியற்றிறன்
மன்னுறும் உயிரெழுத் தியல்நிலை ஒலிநிலை
பன்னுறும் சிலம்பம் பகர்நிலை யாக்கும்
உன்னுறும் ஓவியம் மெய்க்கலை யுணர்ந்தே
தொன்மை நெறியால் ஓயெழுத் தோவியம்
ஓம்கலை சிற்பம் ஓம்மொழி ஓந்தமிழ்
ஓம்இசை தமிழிசை இமிழிசை அமிழிசை
குமிழிசை உமிழிசை கூர்மதி யாய்ந்து
தமிழியல் ஐந்திறம் ஐந்தியல் தன்மை
எழுத்திறல் நுட்பம் ஒளியுயில் உணர்வே
எழுத்தொலி எழுத்தொளி உருவுறும் நிலையே (791)

எழுத்தியல் இலங்கி எண்ணெறி துலங்கி
வழுத்து மாநெறி வளர்கலை விளங்கி
முழுத்தமிழ் முந்நெறி செந்நெறி ஐந்நெறி
விழுமிய ஐம்மறை செம்மறை மும்மறை
ஓயெழுத் தியல்கலை ஒளிதரும் ஆற்றல்
ஓமுறும் முதல்நிலை எழுத்தியல் நோக்கி
விண்மொழி எண்மொழி வியனிலை யுணர்ந்தே
தென்மொழி தண்டமிழ் செந்தமிழ்க் கலைநிலை
மூல யாத்தமிழ் முந்நெறி முத்தமிழ்
சீல மாயியல் எட்டின் பிறழ்நிலை
கோலம் ஓம்குறி ஓம்நெறி யாய்ந்தே
ஞாலத தியல்நிலை நன்கினி தோர்ந்தே
மூலம் அகவெளி புறவெளி யியலாய்
காலத் தின்மையும் நுண்மையும் கருதி
ஒலிநிலை யாற்றல் ஒலிநிலைத் தேற்றம்
ஒலியியல் ஒளியியல் உற்றுறும் நாட்டம்
நிலைமொழி தலைமொழி நேரிய தமிழாய்
தலைமொழி உண்மை தனிக்கலை நிலையென
சிற்றவை விளக்கும் அறுபான் நான்கியல்
தெற்றனத் தேர்ந்தே செந்தமிழ் நிலையியல்
உற்றுறும் உணர்வே ஒளிநிலைக் கலையென
தெற்றுறும் மாநெறி சீர்நிலை வழக்கே (792)

மூலப் பொருளும் காலத் தியலும்
மூல மூலமுங் கால மூலமும்
மூலத் தியலால் முன்னி யோர்ந்தே
மூலத் தைந்தியல் நாற்புறத் தைந்தியல்
ஐயைந் தியலுறும் அருங்கலை நோக்கி
ஐநெறி ஐயியல் செந்நெறி நிலையியல்
எண்ணிலை யியலால் எண்கலை நெறியால்
எண்ணெண் கலையுறும் இயற்றிறன் நோக்குழி
உறுபயன் அகவின் ணொளியுள் ளொளிநிலை
பெறுநிலை ஒலிஒளி மெய்ப்பயன் கருதி
தென்றிசைச் சுழலல் சுழல்பணி யாக்கம்
நன்றுறும் எட்டில் பிறழ்நிலை நோக்குறும்
பிறழ்ந்தே உறழ்ந்தே பெருநிலை யாடி
உறழ்நிலை மூலம் ஒருபொருள் கூட்டும்
மூலம் தெரிந்தே மூலம் நோக்குழி
காலம் இயற்றும் கடுவினை யியலும்
அருவினைப் பயன்தெரி ஆக்கமும் நோக்கமும்
சுடுவினை படுவினை பெருவினை யியலால்
தெற்றெனத் தெரிந்தே தீதுதீர் இயலால்
உற்றுறும் தன்மை ஒருபொருள் இயலாய்
மூவியல் முந்நெறி முப்பொருள் ஓர்ந்தே
மூவியல் அறுபான் நான்கியல் உணர்ந்தே
மூலம் காலம் முயல்நிலை அறிதல்
ஞாலம் அறிவோர் நன்னெறி யியலே (793)

பெருஞ்செயல் புரியினும் பேருணர் வுறினும்
அருஞ்செயல் ஆற்றினும் அறிவுறும் முயற்சி
குன்றா தாண்மை குறைவுற வோங்கி
என்றும் பயனுறும் திருவினை யியற்றல்
நன்றுறப் புரியினும் பெரும்பகை சூழும்
அன்றே நீங்கும் அரும்புகழ் ஓங்கும்
நெறிமுறை மாறா நினைப்பின் ஓங்கிக்
குறிமுறை தவறாக் குறிப்பின் ஆய்ந்தே
வீழ்ச்சியை யாற்றும் வீரமும் ஓங்கி
சூழ்ச்சியை மாற்றும் தூமதி பெருகி
விழிப்புணர் வுற்றே பெருமதி யாற்றல்

விழிநிலை நோக்கும் உணர்நிலை வீரம்
ஈரத் துள்ளம் எண்ணிய முடித்தல்
ஆரமும் முத்தும் மணியும் அறியும்
அறிவோர் திறனிலை அகமுற் றாய்ந்து
செறிமதி யியலாய் சீர்நிலை நோக்கி
முழுப்பயன் எண்ணி விழுமிய செயலாய்
பழுதற வியற்றிப் பாங்குறப் புரிதல்
அருஞ்செயல் கலைதெரி ஆன்றவிர் உணர்வோர்
பெருஞ்செயல் ஆற்றல் பெருநெறித் திறனே (794)

உட்கலை நோக்கி உள்ளுற் றுணர்ந்தே
எட்டியல் ஐந்தியல் இனிதுற் றாய்ந்தே
எட்டெட் டியலும் நெறிநிலை குறித்தே
எட்டுறும் கலைநிலை மூவியல் கலைத்திறன்
ஒன்றுறுந் திறத்தால் ஈரிரண் டாய்ந்தே
ஒன்றியல் மூவியல் ஐந்தியல் நுணுகி
உள்ளமும் உணர்வும் ஒருவழிக் கண்டே
விள்ளு மாஇயல் விரைவுற் றுணர்ந்தே
அண்டமும் பிண்டமும் ஆய்ந்துணர் மதியால்
கொண்டுறும் மெய்க்கடில குறிப்பின் திறமாய்
ஒன்றுணர் நிலைகலை ஒன்றிய ஆற்றல்
தென்றமி ழியற்கலைச் சீருற் றுணர்ந்தே
நோக்குபு நோக்கி நுவல்நிலை ஆய்ந்தே
ஆக்குறும் திறனெறி அணிகலை யியலும்
அறுபான் நான்கியல் எண்ணியல் கலைத்திறன்
உறுநெறி யியலுறும் உண்மை யுணர்ந்தே
விண்ணியல் மண்ணியல் வெளியியல் நோக்கி
எண்ணியற் கலையா லகவின் னொளிநிலை
மூலம் உணர்ந்து முழுப்பொருள் தெரிந்தே
கால மூலமும் கடிதின் உணர்ந்தே
நுட்ப மாக்கலை நுண்ணறி வியலாற்
கட்புல னோக்கிக் கருத்துறும் கலைநிலை
எண்ணெண் ணியல்தெரி நெறிமுறைக் கலையால்
எண்ணெறி நுட்பம் இயம்பலும் பெறுமே (795)

அகப்பொரு ளுணர்வும் அகப்பொரு ளாற்றலும்
அகத்தின் அன்பின் ஐந்திணை நோக்கி

உள்ளுறும் அன்பும் புணர்வு புணர்ந்துழி
தெள்ளுறும் அன்பியல் சீரியல் நோக்கி
அறிவும் ஆற்றலும் ஆண்மையும் வீரமும்
நெறியுங் குறியும் நினைவுறும் ஆற்றலும்
செயல்முறைத் திறனும் சீர்நிலைக் கூடும்
மயனெறி ஆற்றலால் மதித்தெளி வுற்றே
எண்ணிலை எண்ணெறி எண்முறை எண்சீர்
எண்ணுறும் மாநெறி எண்ணெண் ணியலால்
ஐந்துறுங் கலைநிலை ஆற்றலும் நெறிமுறை
வந்துறும் எண்ணிலை மூலமும் ஆய்ந்தே
நினைவுறும் நெறிக்கலை நினைவிற் றிகழ்ந்தே
நினைநிலை யியற்றிறன் நெறிமுறை நோக்கிக்
காலமும் இடமும் பொருளும் கணித்தே
மூலமும் திறமும் முயன்றினி தாய்ந்தே
கோலக் குறிப்பின் குறிநிலை நோக்கி
உயிரொளி உணர்வொளி உள்ளுறும் திறனால்
செயிரற நோக்கி உடலொளி யுற்றே
நோக்குறும் நோக்கம் நுண்ணுணர் மதிநிலை
ஆக்குறும் மாக்கலை நெறிநிலை யாய்வால்
உடலொளி உயிரொளி உணர்வொளிக் கலையால்
அடலொளி நோக்கி அறியவும் படுமே (796)

ஐந்திணை அன்பே அகப்பொருள் . மூலம்
ஐந்நெறி ஐம்மறை ஐங்கலை நிலையால்
நெறிமுறை யோர்ந்தே நிலைக்கலை நோக்கிக்
குறிமுறை யாற்றலால் குறித்துறும் குறிப்பால்
குறிப்பறிந் தியலும் கூர்மதி நோக்கி
அருங்கலை நுட்பம் பெருங்கலைத் திட்பம்
பெருநெறி யியற்றிறன் திருநெறிச் சிற்றவை
நோக்குவ நோக்கி நுவலுவ நுவன்றே
ஆக்குறுங் கலைத்திறன் ஐயியல் ஒளிநெறி
ஒளித்தமிழ் ஒலித்தமிழ் எண்தமிழ் இயலால்
வெளிக்கலை விண்ணொளி வியனெறிக் கலைத்திறன்
எட்டெட் டியல்நெறி இலங்குறும் ஆற்றல்
நுட்ப மாக்கலை மாநெறி மூலம்
ஒன்றுறுந் திறனிலை ஒளியியல் நெறியாய்
நன்றுறுங் கலைநெறி நாடலும் எண்கூர்
எண்ணிலை எண்ணியல் எண்முறை எண்ணெறி

விண்ணிலை முப்பொருள் முக்கலை முந்நெறி
ஐந்நெறி யியலால் ஐம்மறை யோர்ந்தே
செந்நெறி சீர்நெறி செந்தமிழ்க் கலையியல்
சிற்பச் செந்தமிழ் சிற்றவை எண்தமிழ்
பொற்புற் றாய்தல் பெருநெறி மரபே (797)

தண்டமிழ் இயலே தனிப்பெருங் கலைத்திறன்
வண்டமிழ் மொழியியல் வளங்கெழும் மொழியியல்
ஒண்டமிழ் மூலத் தொளிநிலை ஆற்றலாய்
எண்டமிழ் எண்ணிலை இயலுவ நோக்கி
அண்டமும் பிண்டமும் ஆய்ந்தறி நுட்பம்
அண்டம் அளக்கும் அருந்தமிழ் மொழிக்கலை
கோளமும் கோளும் குறித்தறி நெறியால்
நாளும் காலமும் நவையற நோக்கிக்
காலம் உழைப்பாய்க காலமே உணர்வாய்
கால மூலமும் மூல காலமும்
குறிப்புற் றாய்ந்து கூர்மதி யியலாய்
நெறிமுறைச் சிற்றவை நீள்நிலை யாய்ந்தே
பெருவெளி யுறுநெறி முருகுறும் பேரொளி
ஒருவெளி அகவிண் ணொளிதரும் முருகொளி
அறுசுடர்ப் பேரொளி அறுநிலத் தியல்நிலை
உறுநெறி முருகுறும் ஒழுறும் ஒளிக்கலை
ஓம்நெறி ஓம்உரு ஓம்ஒளி ஓம்ஒலி
ஓம்இயல் ஓம்கலை ஓம்மறை யியலாய்
தண்டமிழ் மூலம் தனித்தமிழ்க் காலம்
எண்டமிழ் அளவை விரைவியல் சுழல்நெறி
ஐயைந் தியலால் அமைவுறும் ஆற்றல்
மெய்யுணர் மேனிலை முருகுறும் பேரொளி
அகவொளி அகலொளி அமைவுறக் கண்டே
மிகுமொளித் திறனால் மென்றமிழ் உணர்ந்தே
இன்றமிழ்க் கலைநெறி இயல்புற் றாய்ந்தே
தென்றமிழ்ச் சிற்றவை முருகுறும் இயலே

முருகே மூலப் பேரொளி சீரொளி
முறுகுறும் பெருவெளி சிற்றவை ஆய்ந்தே
திருவுறும் எண்ணெண் ணியலுறும் சீர்நிலை
உருவுறும் பேரழ கொளிநிலை நோக்கி
மூலக் கனலால் மூட்டும் அனற்பொறி

காலங் காட்டுங் கணிநிலைக் கனலொளி
ஒளிநிலை ஆறும் ஒழுறும் ஒலியும்
வெளிநிலை அகவின் ணொளியுற நோக்கின்
செழுந்தமிழ் மெய்ப்பொருள் சீர்நெறி திருநெறி
எழுந்தமிழ் கலைத்தமிழ் சிற்ப மாத்தமிழ்
சிற்றவைப் பெருவெளி திருநெறித தீந்தமிழ்
பெற்றுறுங் கலைநிலை பைந்தமிழ் பூந்தமிழ்
உணர்வின் ஓங்கி ஒளியின் நோக்கி
உணர்நிலைக் கலையால் ஓசையு மாய்ந்தே
ஒளிஒலி யியற்றிறன் உள்ளத் தோர்ந்தே
வெளிஒளிக் கலையால் விண்ணெறி யாய்ந்தே
ஓம்மறை ஓம்நெறி உணர்வின் நோக்கி
ஓம்கலை யியல்தெரி செந்தமிழ் மெய்க்கலை
தென்கலை தென்மொழி தென்னிசைச் சிற்பம்
தென்றல் தென்புலம் தென்றமிழ் ஓவியம்
தென்னிலை சீர்நெறி திருநெறிக் கட்டிடம்
தென்னியல் கலையால் செறிதரும் செந்தமிழ்
தென்றிசை மொழியால் இயல்தரும் தமிழிசை
மன்றுறும் ஆடலான் மாநெறி நோக்கி
ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி நோக்கி
வத்துறும் மூலத் தமிழியல் நெறியே (799)

எட்டே எண்ணிலை இயல்தரும் ஆக்கம்
நெட்டுறும் நிலைகலை நெறிமுறை நோக்கி
விண்கலம் விண்ணூர் வியநெறி ஓர்ந்தே
விண்ணறி யறிவால் எண்ணறி வுற்றே
கணக்கியல் நெறியாய் எண்முகத் தீர்ப்பியல்
கணக்கியல் இயல்நிலை வானமா வூர்தி
விசைநிலைக் கணக்கியல் கதிரொளி யியலாய்
விசைநிலை கடவும் மெய்நிலை யாய்ந்தே
அண்ட மாவெளி யியலுறும் வானம்
அண்ட மாவின் ணொளிக்கலை நோக்கி
எட்டிரண் டியலுறும் நெறிமுறை ஆர்ந்தே
எட்டெட் டியலுறும் மெய்க்லை மூலம்
பொறிபுலன் உன்னும் நெறியுளங் கொண்டோன்
குறியறி வுற்றோர் குறிப்புணர் கலையோன்
நெறிமுறை யாறா நிலையிய லுற்றோன்
அறிவன் வலவன் பொறியியல் ஆள்வோன்

விசைநிலைப் பெருவழி மேல்கீழ் யியல்நிலை
விசைக்கலை நுட்பம் கதிரொளித் திறனால்
கண்டுணர் மெய்யறி வுற்றே நிலையியல்
எண்ணியல் முறையால் விண்ணியல் ஆயும்
ஒண்கலை நுட்பம் எண்கலைத் திட்பம்
விண்கலை நுட்பம் விளக்குமா நெறியே (800)

விழும் ஒலி, ஐந்தெழுத்து அமைவு, ஓம் நெறி, அமிழ்ஒலி முதலான தமிழொலி வகைகள், — இவற்றின் அடிப்படையில் எழுத்தொலியும் எழுத்தொளியும் வடிவங்களில் பொருந்தும் முறையை உணர வேண்டும்.

சிற்றவையின் 64 இயலானது எழுத்தியல், ஐந்நெறி, முந்நெறி, எட்டின் பிறழ்ச்சி, ஓம்இயல், மொழிவகை, ஒலிவகை, நாற்புறத்து இயல், அகவிண்-புறவிண் இணக்கம், தென்திசைச் சுழற்சி முதலானவற்றைப் புலப்படுத்தும்.

அகவின் ஐவகைச் சீலத்தால் ஐவகை நெறிப்பட்டு இயங்குவதை உணர்ந்து உடலொளி, உயிரொளி, உணர்வொளி ஆகியவற்றின் ஆக்கத்தை உணர வேண்டும்.

சிற்றவையின் எண்தமிழ்நிலை, தமிழ்இயல், அண்ட-பிண்ட இயல், சிற்றவை நிலையில் அமையும் அறுசுடர்ப் பேரொளி, அறுநிலத்து இயல், ஓம் என்பதன் நெறி, உரு, ஒளி, ஒலி, இயல், கலை ஆகியவற்றையும் புலப்படுத்தும்.

முருகு என்பதே மூலப்பேரொளி; முருகு, பெருவெளிக்குரிய சிற்றவை மூலம் வெளிப்படுவது. மூலக்கனலால் வீறுகொண்டு எழும் அனற்பொறி உடலின் ஆறு ஒளிநிலைகளையும் ஓம் திறத்தையும், ஆடலானுக்குரிய மாநெறியானது புலப்படுத்தும்.

கதிரொளித் திறனால் அமையும் விண்கல நுட்பமானது விண்ணூர் நெறி, எண்முகத்து ஈர்ப்பியல், விசைநிலைக் கணக்கியல் விசைகடவும் வலவன் நிலை, பொறிஇயல் ஆள்வோன் நிலை முதலானவற்றைப் புலப்படுத்தும்.

Sounds coming down from unseen source, formation and distribution of five letters (of vowels), OM-process, varieties of Tamil expressions — based on these one should understand the technique by which the sound and light factors of letters are unified with created forms.

The techniques of 64 squares of microbode reveals the emergence of letters, fivefold order, threefold order, modification of eight, OM-process, varieties of languages and sounds, features of four-sided frame, correspondence between inner space and outer space, revolution sustained by the South and so forth.

Having realised the functional process of inner space subject to the fivefold rhythm and order, one should observe the emerging pattern of luminosity in body, soul and consciousness.

The eightfold state of microbode would reveal the innate nature of creative language, nature of macrocosm and microcosm, six effulgent sparks of microbode, nature of six energy-centres, order, form, light, sound, quality and force of OM etc.

The Primal Brilliancy of Primal luminous source is known as 'murugu'; murugu manifests itself out into the space from the microbode ; this is the scintillating fire-spark, forcibly shot up by the Primal fire. The great path of Nataraja reveals the characteristics of six energy-centres and the potency of Om as related to them.

The space-craft designed with solar energy, is of the nature of revealing the fly-course, eight-pronged gravitation, calculations of speed, position of pilot, position of mechanical engineer and so forth.

வாழ்வியற் கலையே மெய்க்கலை நுட்பம் (801)

ஆழ்மதி யுணர்கலை ஊழினை வெல்லும் (802)

ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே (803)

ஏழ்வணத் தியல்பே ஐவணப் பெருக்காம் (804)

திருநெறிச் சிற்றவைப் பேரொளி முருகே
ஒருநெறிப் பெருவெளி எண்ணென் கலையாய்
மன்றே வெளியே மாவின் ஒளியாய்
தென்றமிழ் ஒளியாய்த் திகழுறும் கலையாய்
உயிர்ப்பே ரொளியாய் உணர்வுறும் ஒலியாய்
செயிரற விளங்கும் சிற்றவை நெறியே (805)

கற்றமாக் கலையும் உற்றபே ரறிவும்
சிற்றவை மூலத் தியலுறும் உணர்வே (806)

உள்ளுணர் வோங்கி உயிரொளி நாடி
தெள்ளு மாத்தமிழ் இசைநிலை யறிந்தே
விள்ளுபே ரறிவால் ஓம்ஒளி நாடி
தெள்ளிசை ஓமிசை ஓம்ஒளி கூடி
அகவின் னொளியியல் ஐம்புலத் தாய்வோர்
மிகுபே ரறிவால் மென்றமிழ் உணர்வரே (807)

எண்தமிழ் எண்ணியல் எண்கலை நுட்பம்
எண்ணுற் றோர்ந்தே கணக்கியல் மூலம்
விண்கலை விண்தமிழ் நெறிமுறை நாடி
பண்டமிழ் பயில்தரும் வண்டமிழ் ஆயின்
மூல மாத்தமிழ் ஞாலத் தியலும்
மூல மாப்பொருள் ஐம்பெருங் குடியும்
மூல மாக்கலை அறுசுடர் ஒளியும்
மூல மாஇயல் அண்டமும் பிண்டமும்
மூல மாநெறி ஓம்ஒளி யியலால்
மூலங் கண்டே செந்தமிழ் உணர்ந்தே
ஞாலம் ஆளும் நற்றமிழ் மூலம்
காலங் காண்டும் கவினுறும் ஆடி
உயிர்க்குல முதன்மொழி ஒண்டமிழ் வண்டமிழ்
செயிறறுஞ் செந்தமிழ் தீந்தமிழ் ஐந்தியல்
நலனுற விளக்கும் மொழியியல் நவிலும்
புலமும் குறியும் பொருந்த உணரின்
மொழிக்கலை நுட்பம் மெய்யுணர் வாரே (808)

கலைநெறி நுட்பம் நிலையுணர் வோங்கும்
நிலையதி யாற்றல் நெயியில் கூட்டும் (809)

தென்றமிழ் ஐந்தியல் பண்டுறும் மாத்தமிழ்
தென்றிசை எண்டிசை மூலமென் றோர்ந்தே
தென்மொழி பன்மொழி மூலமென் றாய்ந்தே
நன்மொழி உயிர்குல முதன்மொழி தமிழென
தென்றமிழ் ஓம்ஒளி ஓம்ஒலி அறிந்தோர்
நன்றுறம் உணர்வால் நவிலுவ தியல்பே (810)

ஐந்திசையே ஏழிசையாகிறது. ஐவகை வண்ணங்களே ஏழ்வகை வண்ணங்களாகின்றன.

இவற்றைப் பிறப்பிக்கும் சிற்றவையின் பேரொளியே 'முருகு' என்பது. மன்று, வெளி, விண்ஒளி, உயிர்ப்பேரொளி, உணர்வொளி, உணர்வொளி, உணர்வொலி எனச் சிற்றவையின் வெளிப்பாட்டு நெறி விளங்கும்.

சிற்றவையைப் பற்றிய அனுபவ உணர்வே சிறப்புமிக்க கலை ஞானமாகும்.

உயிரொளி நிலையையும் இசை-நிலை நுணுக்கத்தையும் உணர்ந்து ஓம் தொடர்பான உண்மைகளை உணர்வோரே தமிழை உணர்வர். இத் தமிழைப்பற்றிய ஆய்வே மூலத் தொடர்பான ஐம்பெருங்குழு, அறுசுடர் ஒளி, அண்ட பிண்ட இணக்கம் — இவற்றை அறியவைக்கும்.

தமிழ் ஒளி-ஒலி ஞானமும் தமிழ் ஐந்தியல் ஞானமும் முயன்று பெற வேண்டும். எண்திசைக்கும் மூலம் தென்திசையே. தென்திசை மொழியே உயிர்க்குல முதன்மொழி.

The fivefold music evolves into sevenfold music; The fivefold basic colour evolves into sevenfold colour. These evolutions are brought about by the microbode whose effulgent luminous beam is known as murugu. The manifesting process of microbode results in the emergence of field for cosmic dance, space, space-light, effulgent light of soul and consciousness, sound energy of consciousness etc.

Only the experiential knowledge related to microbode is considered to be the most supreme knowledge.

Only those who realise the nature of animating luminous source and the subtlety of music and thereby realise the truths of OM-sound, could know the exact nature of creative lingual source. Analysis of this language would enable one know the formation of great unit consisting of five constituents, six light-sources, identity of macrocosm and microcosm, etc.

By all means, one should gain the knowledge related to the sound and light sources of Tamil and its five aspects. The basic and primal direction is South for all the eight directions. The language pertaining to this South direction is considered to be the first-evolved language of living beings.

எழுவகை யுயிரும் எழுநிலைக் கலையும்
வழுவறும் உணர்வறும் வளமதி நிலையும்
விழுமிய செழும்பொருள் எழும்பொருள் எண்பொருள்
கெழுமிய மாப்பொருள் கலைப்பொருள் பருப்பொருள்
விரிப்பொருள் நுண்பொருள் உரிப்பொருள் நோக்கி
விரிவுறும் மதியால் நன்கினி தாய்ந்தே
உயிரொளி நாடி உணர்வொளி கூடி
செயிரறுங் கலையால் உடலொளி யாய்ந்தே
ஒளிஒளிக் கலைத்திறன் மதியொளி யாற்றலால்
வெளியுற நோக்கி வீறுற் றெழுதரும்
கலைத்திறன் நுட்பம் அறிவியல் கலைத்தமிழ்
நிலைத்திறன் அறிவியல் பொறியியல் நிலையியல்
அருளியல் நாடுறும் தெருளியல் மதியும்
பொருளியற் கலையும் மெய்ப்பொருள் நோக்கமும
உளத்தினி தோர்ந்தே உள்ளூற் றாய்ந்தே
களமும் காலமும் கணித்தினி தாய்ந்தே
மூல முழுப்பொருள் முற்றுற நோக்கி
கோலக் குறிப்பும் குறித்துறும் இயல்பால்
சிற்றவை மாநெறி சீர்மா இயலால்
உற்றறி உணர்வால் உணர்த்துவ தியல்பாய்
தூநெறி மாநெறி துலங்கிக் காட்டும்
மாநெறி யியலால் வழுத்தல் மரபே (811)

மூலமும் பொருளும் நெடிதின் நினைந்தே
அறிவுற் றாயல் அண்டமும் பிண்டமும்
நெறியுறும் திறத்தால் நிலைபெறும் கணக்கியல்
அறிவுற் றாய்ந்தே ஐந்தியல் நோக்கி
செந்தமிழ் இசைநிலை நடத்துறும் திறத்தால்
பைந்தமிழ்க் கலைநிலைப் பரப்பியல் ஓர்ந்தே
குமரி யாநிலம் நெடுங்கலை ஆக்கம்
அமர்நிலைப் பேரியல் வெற்புறும் திறனாய்
பல்துளி யாற்றுப் பெருமலை திறனிலைப்
புக்குறும் நிலைத்திறன் ஏழேழ் நிலமும்
ஏழேழு நாடென இயம்புறும் காலை
நால்வகை நிலமும் நன்னெறி விளக்கி
நூல்வகைத் திறனாய் பால்வகை விளக்கி
ஆக்கமும் நிறையும் வாழ்வியற் கலையும்
நோக்கமும் குறியும் பெரும்பொருள் ஈட்டலும்
அறநிலை ஒப்பலும் மறநிலை காத்தலும்
திறநிலை வளர்த்தலும் சிற்பம் ஓவியம்
கட்டிடம் மனைநிலம் நிலமனை யாக்கமும்
எட்டுறும் திறத்தால் எண்ணெண் கலைத்திறன்
எட்டே எண்ணியல் எண்கலை மூலமாய்
எட்டுறும் எட்டெட் டியல்நெறி ஆற்றலும்
கருத்துறும் நோக்கால் கலைநிலை ஆய்ந்தே
பெறுநிலை நுட்பம் பெட்புற் றோர்ந்தே
மாநெறி இயலே யாக்கணக் கியலென
தூநெறி யாற்றல் திருநெறி உணர்ந்தே
பாநெறிப் பண்பியல் பகர்கலைத் திறனும்
மீநெறிக் கணக்கியல் கட்டிடக் கலையும்
ஒன்றென் றுன்னி நன்றுற வாய்தல்
தென்தமிழ்ச் சிற்பச் சீரியோர் கடனே (812)

மூலத் திறத்தால் முப்பொருள் ஆய்ந்தே
காலத் திறத்தால் எண்கணக் கியலும்
கோலக் குறிப்பும் குறிநெறி மதியால்
காலமா வியலும் கலையியல் திறனும்
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுங்கணக் கியலும் அருங்கணக் கியலும்
விடுங்கணக் கியலும் வெளிநிலை நோக்கும்
தொடுநிலை யாக்குமும் தூநெறி நோக்கும்

எட்டிரண் டியலாய் இயலும் மாக்கலை
எட்டெட் டியல்நெறி நுணுக்கம் ஓர்ந்தே
அறுபான் நான்கியல் நாற்புறத் தியல்நெறி
உறுநிலை ஐயைந் தியல்நெறக் கணக்கே (813)

எட்டின் பிறழ்நிலை ஒமெனத் தேர்ந்தே
எட்டின் பிறழ்நிலை இயல்நிலை ஒன்பான்
ஆடலான் கலைத்திறன் ஐவகை மாத்திறன்
ஆடலான் நெறித்திறன் குறுநிலை யாக்கமும்
ஆடலான் ஒளிநிலை வெளிநிலை நோக்கி
ஆடலான் உருத்திறன் ஆடலும் கலைநிலை
ஆடலான் கலையே அண்டமும் பிண்டமும்
ஆடலான் நெறிநிலை வெளிநிலை ஒளிநிலை
ஆடலான் இயக்கம் விண்ணும் மண்ணும்
ஆடலான் முயக்கம் உடலும் உயிரும்
ஆடலான் திறமே உள்ளமும் உணர்வும்
ஆடலான் செயலே ஊக்கமும் உணர்வும்
நாடரும் கலைத்திறன் ஆடலான் நெறியால்
தேடுறும் மூலத் திறன்நிலை நோக்கி
உற்றறி நோக்கால் உணர்வறித் திறனால்
கற்றறிக் கலையால் கேட்டறி நுட்பம்
முற்றும் அறிதல் மூதறி வாற்றலால்
தெற்றெனத் தெரிந்தே செந்தமிழ் ஆய்தல்
கட்டிடக் கலைநிலை கணித்தமிழ் நெறிநிலை
சிற்பத் தமிழ்நிலை ஓவிய ஒளிநிலை
சித்திரக் குறியாய் சிற்பமா நெறியாய்
மெய்த்தக வுற்ற திருநெறிக் கலையாய்
உள்ளுள் ளுணர்ந்தே ஒளித்தமிழ் ஆய்தல்
விள்ளுபே ரறிஞர் மேலோர் திறனே (814)

ஒளிக்கலை நுட்பம் கலையியல் திட்பம்
வெளிக்கலை மூலம் வியநிலை ஆக்கம்
அளிநிலை அசைநிலை ஒலியியல் திறனாய்
களிமொழித் தமிழாய் கலையியல் திறனாய்
மாத்திரை யளவில் மாத்திரை நோக்கி
மாத்திரை மூலம் கணக்கியல் நோக்கி
ஓரள வாக்கம் உணர்கலை நோக்கம்

கூரள வியலால் கூர்மையும் நுட்பமும்
ஒளிவெளி வியலால் ஓங்குறும் நுட்பம்
வெளிஒளி நிலைக்கலை மெய்ந்நிலை திட்பம்
ஓங்குறும் திறத்தால் ஓங்கலை ஓம்நெறி
பாங்குறும் திறத்தால் பைந்தமிழ் இயல்நிலை
தேங்குறும் அசைநிலை சீரசை நேரசை
தேரசை சீரிசை நேரிசை இயலாய்
ஓரசை ஈரசை கணக்கியில் உன்னி
கூரசை நுட்பம் குறித்துறும் ஒலியியல்
நேரசை மூலம் நிரையசைக் காலம்
காலமும் இடமும் பொருளும் கணித்தே
காலமா யியலும் செந்நெறிக் காலமும்
காலங் கருதி கணக்குற நோக்கின்
காலமே படைக்கும் காலமே அளிக்கும்
காலமே அழிக்கும் காலமே மறைக்கும்
காலமே துடைக்கும் கணிப்பியல் ஓர்ந்தே
காலத் தருமை கருத்துற் றோர்ந்தே
காலம் நொடிநொடி இமைப்பொழு தாய்ந்தே
கைநொடிப் பொழுதும் கண்ணிமைப் பொழுதும்
மெய்ந்நிலைக் கலையாய் மெய்ப்பொருள் உணர்த்தும்
கால நுட்பம் கருத்தி லோர்ந்து
காலங் கருதி மூலம் மாய்ந்து
கோலங் குறித்தே சீலச் செயலாய்
ஞாலங் கருதி உழைப்புறும் உணர்வால்
உன்னி உன்னி மெய்ந்நிலை யாய்தல்
பன்னுசெந் தமிழ்நெறி பயனிலை முடிவே

காலமே எவைக்கும் கனிப்பயன் நல்கும்
காலமே கணிக்கும் காலமே கூட்டும்
காலமே பெருநிலை பெருவழி நல்கும்
காலமே அருளியல் திருநிலை வகுக்கும்
காலமே பொருளியல் பயன்நெறி நோக்கும்
காலமே தெருளியல் சீர்நிலை வகுக்கும்
காலமே மருளியல் மயலறப் போக்கும்
மயன்நெறி ஒன்றே மதிநெறி கூட்டும்
மயன்நெறி காண்போர் மயல்நெறி நீங்கி
மதிஒளித் திறனாய் ஒளிமதி நோக்கி
மதிஅறி வுற்றே மாணுமறும் திறத்தால்

ஒளிக்கலை நுட்பம் உணர்வுற் றாய்ந்தே
ஒளிபெற நோக்கி உள்ளொளி காணல்
அகவின் புறவின் அருங்கலை யாய்தல்
அகத்துணர் திறனால் அறிவியற் கலைநிலை
நோக்குறும் திறத்தால் நுணுக்கமுற் றாய்ந்தே
ஆக்குறும் கலைநிலை அறிவியல் அறிவரே (816)

உழைப்பே மூலம் உணர்வே காலம்
களைப்பிலா மெய்ந்நெறி கலைத்திறன் நல்கும்
உடலுழைப் பாய்ந்து உணர்வுறத் தேர்ந்து
அடலுறும் அறிவால் நெறியுழைப் புற்றே
நிலைபெற நோக்கல் கலைதரும் பயனாய்
கலைமொழி யியலாய் தலைமொழித் திறனாய்
நிலைமொழி அறிவியல் நெடுங்கணக் கியலாய்
மலைவற ஓர்ந்தே மதியுற் றாய்தல்
எண்ணுறும் திறத்தால் எண்ணுணர் வோங்கியும்
எண்ணுறும் திறத்தால் விண்ணுணர் வோங்கியும்
எண்ணுறும் திறத்தால் கண்ணுணர் வோங்கிவும்
எண்ணுறும் திறத்தால் பண்ணுணர் நாடியும்
நாட்டமும் மூலமும் நாடுறும் திறத்தால்
வேட்ட மாக்கலை மெய்ப்பொருள் ஓர்ந்தே
பொருள்நிலை மூலம் பொருள்நிலைக் காலம்
மருள்நிலை நீங்கி பொருள்நிலை ஆயல்
திருநெறிப் பெருவழி விண்ணிலை ஆய்ந்தே
ஒருநெறிக் கலைத்திறன் உள்ளுறும் திறத்தால்
ஒளிநிலைக் கலைநிலை நட்பம தாய்தல்
ஒளிநிலை கண்டோர் உரைக்குமா நெறியே

புள்ளிக் கோடே பொருந்தும் மையம்
புள்ளிக் கலையே மூல மாயியல்
புள்ளி அறிந்தோர் தெள்ளுபே றறிஞர்
புள்ளி யியலல் நெறிநிலைக் கலையே
புள்ளியல் ஆக்கம் நெடுவரிக் கோடே
புள்ளி மூலத் தியலறி வாற்றல்
தெள்ளுறும் கலைத்திறன் சீர்பெற் றுணர்வரே (818)

கோட்டுரு வாக்கம் குறைவற நோக்கி
நீட்டுரு கோட்டுரு நெடிதுரு நினைந்தே
கோட்டுரு வரியியல் புள்ளிமாக் கலைத்திறன்
தீட்டுறும் குறியே சித்திரக் குறியாய்
நீட்டுறும் நெறியியல் நிலைபெறல் ஓங்கி
சித்திரக் குறியே சீர்மெய் மாநெறி
சித்திர நெறியே மெய்க்கலை யியல்நெறி
சித்திரம் ஓவியம் சிற்பம் கட்டிடம்
சித்திர மூலமே வரைநிலை கோலம்
தீட்டலும் எழுதலும் வரைதலும் குறித்தலும்
நாட்டுறப் பொறித்தலும் கல்லிற் செதுக்கலும்
ஏட்டில் எழுதலும் எண்ணிலைக் காண்டலும்
நாட்டுறும் கலைத்திறன் நற்றிற மூலமாய்
எழுத்தே வரிவியல் ஒளியியல் ஒலியியல்
எழுத்தே வடிவியல் கலையியல் நேரியல்
எழுத்தியல் சிற்பம் இசையியல் சிற்பம்
வழுத்து மாக்கலை வகைபெற நோக்கி
முழுமதி யாற்றல் முக்கலைத் திறனாய்
செழும்பொருள் சீர்ப்பொருள் பெரும்பொருள் உரிப்பொருள்
முழுப்பொருள் மெய்ந்நிலை கலைத்திறன் ஆய்ந்தே
பொருளெலாம் நல்கும் பைந்தமிழ்த் திறநிலை
பொருளெலாங் கூட்டும் நீட்டுரு நெட்டுரு
திருவுற வமைத்தே செந்தமிழ் வரைதல்
வருங்கலைக் கணக்கும் மொழிநிலை இயலும்
திருவுற் றறிவோர் • பெருமதித் திறத்தால்
கருத்துறக் காண்டல் கலைநிலை யியலே (819)

இசைக்கலை நுணுக்கம் இயற்றமிழ் ஆக்கம்
இசைநிலை இயக்கம் ஏழிசை நுணுக்கம்
கைக்கிளை விளரி துத்தம் மூலமாய்
மெய்குரல் இசையாய் இசைநிலை ஓங்கி
அருந்திறல் நிலைக்கலை பெருந்திறல் வலியாய்
வருங்கலை உணர்வும் பெருநிலை நோக்கமும்
உணர்வின் ஆய்ந்தே உள்ளகத் தெண்ணி
உணர்கலை நிலையால் மெய்ப்பொருள் தெரிந்தே
ஏழிசை நுட்பம் வாழிசைத் திட்பம்
தாழிசை நுணுக்கம் ஆழிசைக் கலைத்திறன்
வளரிசை யியலும் தளரிசை முரண்நிலை

வளர்கலைத் திட்பம் வண்டமிழ் இசைத்திறன்
எடுத்தல் படுத்தல் நலித்தல் மூன்றும்
அடுத்தே ஆய்தல் அருந்தமிழ் இசையாய்
அருந்தமிழ் ஐந்திசை சிற்ப மாக்கலை
பெருந்தமிழ் ஏழிசை பேரருள் இசையால்
இசைநிலை நுட்பம் இயற்கலைச் சிற்பம்
நசையற நோக்கி நண்ணுவ நண்ணி
பயன்தரு நோக்கல் பெருங்கலை அறிதல்
நயனுறத் தெரிந்தோர் நன்னெறி இயலே (820)

சிற்றவை இயலால் எழுவகை உயிர், எழுவகை நிலை, பொருள்வகை, உடலொளி, உணர்வொளி, மூலமுழுப்பொருள் கோலமாக வெளிப்படும் முறை — இவற்றை அறியலாம்.

தமிழ்ச் சிற்ப நெறியோரோகிய சீரிய அறிஞர், அண்டமும் பிண்டமும் நிலைபெறும் கணக்கியலையும், ஐந்தியலையும், இசைவகை நடவகைகளையும் ஓர்ந்து வெளிப்படுத்துவர். பாநெறிக் கலையும் கட்டிடக் கலையும் ஒன்றெனக் கூறுவர்.

குமரி மாநிலம், பேரியல் வெற்பு (மகேந்திர மலைமூ, பஃறுளியாறு, ஏழ்பெரும் நிலம், ஏழெழுநாடு — இவை பல்கலை வளமும் வாழ்வும் பெற்றுச் சிறந்திருப்பவை.

நெடுங்கணக்கு முதலான கணக்கியல் வகைகள், முப்பொருள், காலம், எட்டின் பிறழ்நிலையாகிய ஓம், — இவற்றை நெறிப்படி உணர வேண்டும்.

ஆடலான் தொடர்பான ஒளிநிலையையும் வெளிநிலையையும் ஆடலான் உருநிலையையும் நன்குணர்ந்தால் ஆடலான் உருவே அண்டமும் பிண்டமுழ் எனவும், ஆடலான் இயக்கமே விண்ணும் மண்ணும் எனவும் ஆடலான் முயக்கமே உடலும் உயிரும் எனவும் தெளிவாகப் புலனாகும்.

தமிழ்நெறித் திறத்தைக் காலக் கணக்கின் அளவியல்படி உணர்ந்தால் காலமே படைக்கும்; காலமே அளிக்கும்; காலமே அழிக்கும்; காலமே மறைக்கும்; காலமே துடைக்கும்; காலமே எவைக்கும் உரிய பயன்களைக் கனிய வைக்கும்; காலமே கணிக்கும்; கூட்டும்; பெருவழி நல்கும்; திருநிலை வகுக்கும் என நன்கு புலனாகும்.

புள்ளி மையம், புள்ளியியல் ஆக்கம், கோட்டுரு, நீட்டுரு ஆகியவற்றையும் எழுத்தியலையும் வடிவியலையும் எழுத்தியற் சிற்பம் உணர்த்தும்; இசை நுணுக்கத்தையும் இசை நெறிகளையும் இசையியல் சிற்பம் உணர்த்தும்.

Through microbode, one could know about the sevenfold living being, sevenfold state, varieties of materials, resplendent state of body, soul and consciousness, the Primal Space, and its process of manifesting into worldly forms.

Those experts, well trained in the sculptural art, analyse the mathematical order by which the macrocosmic and microcosmic movement is maintained and regulated, five aspects, varieties of music and dance and expound the essential themes related to them. They maintain that the process of composing a song and that of constructing a building is one and the same. The continent of Kumari, Mahendra mountain, Fortynine countries, Pahruli river — all these are in abounding prosperity.

The luminous aspect, space-field meant for cosmic function, form - if one realise all these related to Nataraja, he could obviously know that the form of Nataraja is both macrocosm and microcosm, that His dancing movement results in the emergence of earth and space and the upward force balanced by Him gives rise to body and soul.

If the functional order of creative language is analysed based on time-measure, one could understand that only the Time creates; only the Time maintains; it destroys; it conceals; it sets right the discordant and improportionate aspects and effects purity; it fructifies the relevant fruits; it ascertains; it assimilates; provides an effective and great path; it manifests a supreme and sacred state.

The graphic sculpture reveals the efficacy of central dot and its effects, curved form, linear form, letter form, imaginary form etc. The musical sculpture reveals the subtleties of music and the technique of music.

அகத்துணர் நோக்கி அருங்கலை நோக்கம்
அகத்துணர் இன்பே அரியபே ரின்பம்
அகத்தின் தூய்மை ஆற்றலின் சீர்மை
அகத்தால் நோக்கின் மிகுமொழி கூடும்
அகவியல் ஆற்றல் புறவியல் தேற்றம்
அகக்கலை நுட்பம் புறக்கலைத் திட்பம்
அகமே மூலம் புறமே காலம்
அகவியல் கண்டே புறவியல் நாடி
அகத்துணர் ஆற்றலால் புறச்செயல் புரிதல்
அகநிலை அறிந்தோர் மெய்க்கலை யியலே (821)

உள்ளத் தாற்றல் ஊக்கமும் உணர்வும்
உன்னுதல் பெருநிலை ஓங்கல் பெருங்கலை
உள்ள மூலமே உணர்வின் பெருந்திறன்
உள்ளங் காண்டல் ஒருநிலைத் திறனாய்
விள்ளு மாக்கலை விண்கலை யியலும்
தெள்ளுறக் கண்டே சீர்நிலை நோக்கி
அகஒளி ஆற்றலால் புறவொளி நோக்கி
அகத்துள் தெறிநிலை குறிநிலை ஆய்ந்தே
உள்ளத் தூய்மை ஒருங்குற் றாய்ந்தே
தெள்ளுங் கலைநிலை எண்கணக் கியலாய்
எண்ணொண் ணியல்தெரி நிலைக்கலை யாற்றல்
விண்ணும் காட்டும் வெளிநிலை கூட்டும்
மண்ணும் காட்டும் மாக்கலை யாகி
விண்தமிழ் இயல்நிலை கலைத்திறன் கூட்டி
எண்தமிழ் இயல்நிலை எளிதின் நாட்டி
பண்தமிழ் ஒலித்திறன் ஒலியியல் அசையியல்
விண்தமிழ் கலைநிலை வளநிரைத் தெரிந்து
எண்ணும் எழுத்தும் இயல்புறக் காட்டி
கண்ணும் கருத்தும் கலைநிலை தோற்றி
பண்ணும் ஒலியும் பாங்குற் றுணர
விண்ணும் மண்ணும் ஒலியியல் ஓசை
அசைநிலை யாக்கம் ஒலியியல் தேக்கம்
நசையறக் காட்டும் மாநெறி வழக்கே (822)

காண்டல் கருதல் கலைத்திறன் நோக்கல்
வேண்டல் நாடல் வினைத்திறன் இயற்றல்

தாண்டல் துலக்கல் தொல்பயன் நாடல்
காண்தரு பொருள்நிலை கலைநிலை இயலாய்
அகத்துணர் ஒன்றே அரும்பொருள் நெறியாய்
அகமே கலைபயில் நெறிநிலைக் கூடம்
அகத்துணர் கலையால் விண்கலை கூடும்
அகத்துணர் நெறியல் எண்கலை நாடும்
அகத்துணர் மூலம் குறிப்பறிந் தாயல்
அகக்கலை நுட்பம் பெருங்கணக் கியலால்
அகக்கலைத் திட்பம் நெடுங்கணக் குணர்த்தி
அகக்கலை யாற்றல் குறுங்கணக் குணர்த்தும்
அகக்கலை யியலாய் மெய்ந்நிலை யறிவோர்
அகத்துணர் வோங்கி ஐந்நெறி யாய்வரே (823)

வீரமும் கலையும் வெற்றியும் ஆற்றலும்
ஈரமும் உணர்வும் இயல்நிலைக் கருத்தும்
உணர்வறி வாற்றலும் உள்நிலை ஓங்கலும்
உணர்நிலைத் திறனால் ஞாலம் தேர்தலும்
காலக் குறிப்பால் கடுவினை யாற்றலும்
கால நெறியால் படுவினை தேர்தலும்
கால நுணுக்கம் உழைப்பியல் தேர்ந்தே
காலத் தியல்தெரி நுட்ப மாக்கலை
சிறுபொழு தறிந்து பெரும்பொழு தாய்ந்து
ஒருபொழு தியல்நிலை உள்ளூற நோக்கி
கணம்கணம் அய்ந்து கால விரைவியல்
கணமும் காட்டும் காலப் பொழுதியல்
பொழுதறி நுட்பம் பேரறி வாற்றல்
உழைப்புணர் ஆற்றல் மெய்யியற் கலையாய்
களைப்பிலா துழைக்கும் கலைநிலை ஓர்ந்தே
காலங் கருதி கருத்தற நோக்கி
மூலங் கருதி முப்பொழு தாய்ந்து
கோலங் குறிக்கும் குறிநிலை தேர்ந்து
ஞாலம் தெரிதல் அறிவோர் திறனே (824)

எண்தெரிக் கலையே விண்ணியல் நுட்பம்
எண்ணுணர் கலையே விண்ணுணர் நெறியாம்
எண்ணறி வாற்றல் நுண்ணறி வியலாய்
பண்ணறித் திறனாய்ப் பைந்தமிழ்க் கலையாய்

நன்னுறு சிற்பம் ஓவியம் உணர்த்தி
பண்டுறும் கட்டிடக் கலைநிலை யியலாய்
விண்டுறும் கணக்கியல் விரைவியல் ஆய்ந்தே
ஆறும் பத்தும் பத்தா றியலாய்க்
கூறும் கணக்கியல் குறிப்பின் ஓர்ந்தே
மூவொன் பான்நிலை மூவியல் ஆய்ந்தே
நாவியல் நவிலல் நன்முறை தேர்ந்தே
ஆயம் கூட்டும் அமைநிலை ஆய்நதே
சீயம் வேழம் தெரிநிலை தேர்ந்தே
எண்கலை இயல்நெறி நுண்கலை மூலம்
விண்கலை யாற்றலால் மண்கலைத் திட்பம்
பண்கலை யாற்றலும் பாங்குறத் தெரிந்தே
கண்ணொளி காட்டும் விண்ணொளி நோக்கி
எண்ணொளி எழுத்தொளி இயைபுறக் கண்டே (825)

ஒளிக்கலைத் திறணிலை உள்ளுற் றாய்த்தே
ஒளிவெளி யியல்நிலை நுட்பம் தேர்ந்தே
அண்டமும் பிண்டமும் அமைவுறக் காட்டி
விண்கலை நுட்பம் மண்கலைத் திட்பம்
எண்கலை யாற்றலால் இனிதின் நாடி
தண்டமிழ் ஒளிநெறி சாற்றல்மா நெறியே (826)

மாநெறி ஒன்றே மாக்கலை வகுக்கும்
தாநெறி ஒன்றே பெருங்கலை தொகுக்கும்
பாநெறி ஒன்றே பெருங்கலை பரப்பும்
மாநெறி யியலாய் மாக்கலை நுட்பம்
எண்ணெண் கலைதெரி நுண்ணியல் ஆக்கம்
எண்ணியல் விண்ணியல் இலங்குயாக் கலையால்
கண்க்கியல் நுட்பம் காலத் திட்பம்
பிணக்கிலா வகையால் பெருந்திறன் நோக்கி
ஐயைந் தியல்நெறி நுட்பமாக் கலையாய்
ஐநெறி ஐங்கலை மெய்க்கலைத் திறனாய்
செந்நெறிப் பொருளால் சீர்கலை ஆய்ந்தே
தொன்னெறி மரபின் கணக்கியல் தேர்ந்தே
பன்னெறி மூலம் பாரியல் காலம்
நன்னெறி வகுக்கும் நற்றமிழ்க் கணக்கியல்
கணக்கியல் ஒன்றே காலம் வகுக்கும் (827)

கணக்கியல் நுட்பம் கருத்துறத் தேர்ந்து
காலத் தருமை கணந்தொறும் எண்ணி
மூலம் நாடி முக்கலைத் தேர்தல்
கோலம் குறித்தே குறிப்பின் ஆற்றல்
சீலம் தெரிந்தே செய்நெறி நோக்கி
உழைப்பின் திறனை உன்னி உன்னி
கழைப்பிலா துழைப்பின் காலம் கூட்டும் (828)

காலமும் மூலமும் கடிதின் உணர்த்தும்
மூல யாப்பொருள் முதுகலைச் சிற்பம்
சிற்பம் தெரிந்தோர் சிற்றவை யாய்வோர்
சிற்றவை தெரிந்தோர் முற்ற உணர்ந்தோர்
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுபயன் தெரிப்போர் உண்மை காண்பரே (829)

எண்முறை இயலாய் எண்ணிலைக் கலையாய்
ஒண்ணெறித் திறனாய் ஒளிநிலை நோக்கி
விண்ணும் மண்ணும் விளங்கக் கண்டே
விண்ணொளி நோக்கி வியனொளி ஆய்ந்து
அகஒளி நோக்கி அறிவொளி ஆய்தல்
மிகுமொளித் திறத்தால் புகுமொளிக் காண்டல்
காண்டல் கருதல் கலைநிலைத் திறனாய்
ஈண்டு பேரறிவால் இயல்பின் ஓர்ந்து
மாக்கலைச் சிற்பம் ஒளிநிலை நோக்கி
மாநிலை சிற்றவை எண்ணியல் கருதி
சிற்றவை எண்ணியல் கணக்கியல் மூலம்
சிற்றவை எழுத்தியல் மொழியியல் மூலம்
சிற்றவை மூலம் உயிரியல் காலம்
சிற்றவை காலம் திறத்தியல் ஆய்ந்தே
சிற்றவை நாடல் உற்றபே ரறிவால்
உற்ற மாக்கலை அறிவர்மா நெறியே (830)

அகமே மூலம்; புறமே காலம். அகக்கலை நுட்பநிலை; புறக்கலை திட்பநிலை என உணர்ந்து மயன்நெறியால் விண்வகை, வெளிவகை, மண்வகை தமிழ்வகை, எண்வகை முதலானவற்றை அறிய வேண்டும்.

அகத்துணர்வே எல்லாக் கலைநுட்பங்களையும் கணித நுட்பங்களையும் நன்கு உணரச் செய்யும்.

சிற்பம், ஓவியம், ஆயாதி வகைகள், ஆயம் கூட்டும் நற்பேறு மிக்க நிலை முதலானவற்றை அறிந்து, சீயம், வேழம் ஆகியவற்றை வடிவமாக்கும் அளவியலையும் அண்டபிண்ட அமைவுக்கேற்ற கணக்கியலையும் ஒளிநெறியாகிய வாஸ்துநெறி விளக்கும்.

சிற்ப ஞானம் சிற்றவை ஞானத்தையும் சிற்றவை ஞானம் முழுதுணர் திறமான முற்றறிவுத் திறத்தையும் கொடுக்கும். 64 இயலின் அமைப்பு முறையையும், பயன்படு நிலைகளையும் உணர வல்லவரே உண்மை நிலையை அறிய முடியும்.

சிற்றவைக்குரிய எண்ணியலே கணக்கியலுக்கு அடிப்படை; அதன் எழுத்தியலே மொழி இயலுக்கு அடிப்படை; அதன் நுண்வெளியே உயிர்ப்போடு கூடிய காலத்தை வகுக்கும்.

The inner aspect is indicative of Primal space and the outer aspect is indicative of Time factor. The inner-state is indicative of subtle nature and the outer state is indicative of gross and sturdy nature. Keeping this point in view, one should understand the varied aspects of built space and select space, of the ground, Tamil and eightfold stage.

The luminous path known as Vāstu science details the aspects of sculture, drawing, various process of āyādi calculation and the auspicious and favorable results effected by such calculation. Based on these it explains the system of measurement for the creation of the forms of lion, elephant, etc and the system of mathematical order applicable to the macrocosmic and microcosmic structures.

The knowledge of sculpture leads to the knowledge of microbode and the knowledge of microbode leads to the attainment of all-knowing power. Only those who exactly know the formative features of 64 squares and their fruitful operations, could realise the possibilities of longevity and eternality.

The numerical aspect of microbode is the basis for mathematical order; its aspect of letters is the basis for language; its minute space sets the Time in the functional net work.

உள்ளமும் வாக்கும் ஒருவழி நோக்காய்
விள்ளும் உணர்வும் விளங்குறும் ஆற்றலும்
எண்ணமும் எழுச்சியும் இயல்புறும் ஆற்றலும்
திண்ணமும் வலிமையும் சீர்மையும் நேர்மையும்
ஆக்கம் கருதி அருவினை நாடலும்
நோக்கம் கருதி நுண்ணுணர் இயல்நிலை
எண்ணிலைக் கலையால் உள்ளகம் நோக்கி
எண்ணியல் ஆற்றல் மூலப் பொருள்நிலை
அகவெளி மொழிநிலை ஓங்கலை இயலாய்
அகத்துணர் வோங்கி ஞாலம் காண்டல்
அகத்துணர் வியலும் புறநிலை யியலும்
அகத்துணர் வியலும் புறநிலைச் செயலாய்
அகத்துறும் நிலைக்கலை அருங்கலை மூலம்
அகமே ஞாலம் அகமே விண்ணாய்
அகமே உயிரொளி மெய்ந்நிலை ஓர்ந்தே
அகத்துறும் மாற்றம் மிகுத்துற நோக்கி
பகுத்துறும் திறனெறி பெருநிலை இயலாய்
வகுத்துறும் மெய்க்கலை வகையுற அறிந்தே
தொகுத்துச் செயல்புரி தூய்மை மாந்தர்
காலம் கண்டே காலம் நோக்கிச்
காலம் முடுக்கிக் காலம் வென்றே
ஞாலம் ஆள்வர் நற்றமிழ் நெறியால்
கோலக் குறிப்பின் மயன்நெறி காண்பரே (831)

மூலப் பொருளை முன்னி உணர்ந்தே
மூலம் நோக்கி முப்பொருள் ஆய்ந்தே
கால விரைவியல் கணக்கின் ஓர்ந்தே
காலம் கடுகி கடுவினை முடுகி
கடுவினை உழைப்பால் அடுவினை தேர்ந்தே
படுவினைத் திறனால் கடுவினை நீக்கி
தொடுவினை இயற்றி முடிவினை நோக்கி
கடுவினை இயற்றி ஆக்கமும் கூர்ந்து
செய்வினை உழைப்பே சீர்சல் நெறியென

கைவினை நுட்பம் கருத்தியல் திட்பம்
ஐவினை ஐங்கலை ஐநெறி ஐமுறை
உய்வினை உணர்த்தலும் உறுபொருள் நோக்கி
அறிவியற் லையே ஆக்கும் நிலையும்
குறுநெறிக் கலையாய் கூர்த்த மதியுறும்
தொழிலியல் கலைத்திறன் சீர்நெறி நோக்கி
எழிலியல் வண்ணம் ஓவியம் சிற்பம்
பயிலியல் கலையாய் பயிலலும் நோக்கி
முயலல் முன்னல் முடிவினைக் காணல்
அயர்விலா உழைப்பால் அருங்கலை நுட்பம்
மயர்வறக் கண்டே மதியொளி நோக்கி
ஒளிமதித் திறனால் ஒள்ளியல் இயலாய்
வெளியியல் கலையாய் விண்கலை ஆக்கம்
அளிநிலைக் கலைத்திறன் அறுபான் நான்கியல்
ஒளிவெளி நோக்கி வயங்குறு மாற்றல்
களிகொளக் கூர்ந்தே கலைநிலை யுணர்ந்து
ஒளிக்கலை மூலம் உள்ளகம் நோக்கி
மூலத் தெழுங்கனல் முக்கனல் ஒளியின்
கால . விரைவியல் நாற்புறத் தைந்தியல்
எட்டின் பிறழ்வே இயல்நிலை யாற்றல்
எட்டே எண்ணிலை எண்ணெறி யாக்கம்
எட்டுறும் நிலைக்கலை இயல்புறத் தேர்ந்தே (832)

எட்டெட் டியலாய் விளங்கு மாநெறி
ஓசை ஒலிமுதல் ஒளிநிலைக் கலையாய்
மாசறத் தெரிக்கும் யாக்கலை இயல்நெறி
எழுத்தியல் எண்ணியல் இயற்கலை ஒலியியல்
வழுத்து மைந்தியல் வளர்கலைச் செந்தமிழ்
பழுத்தமு தறிவால் பாங்குற் றுணர்ந்தே
விழுப்புறும் நுட்பம் பருப்பொருள் திட்பம்
பருப்பொருள் மூலம் கணக்குற் றாய்ந்தே
அரும்பொருள் செய்பொருள் அறிநிலை உன்னி
உன்னுறும் திறத்தால் ஓங்கரும் கலைத்தேர்
பன்னரும் திறத்தால் பகர்நிலை விளக்கம் (833)

முன்னுறும் மூலம் அகவின் ஒளிநிலை
துன்னுறும் கலைத்திறன் சீர்நெறிக் கலையியல்

எண்கலத் திறன்நிலை இயல்நிலை ஆற்றல்
விண்கலை ஒளிரும் தென்றமிழ் மொழியியல்
நுண்கலை நுணுக்கம் நுவலரும் சீர்த்தி
பண்கலை ஏழிசை வாழிசை வளரிசை
நேரிசை சீரிசை நிலையிசை கலையிசை
தேரிசை தமிழிசை தொல்லிசை நல்லிசை
இசைமுதல் நுட்பம் இனிதுற வாய்ந்தே
நசையறும் அசைநிலை அசைவொலி இயல்திறன்
நுட்பம் கண்டே நுண்பொருள் ஆய்ந்தே
திட்ப யாநெறி சீர்நிலை உணர்ந்தே
மொழியியல் மூலம் ஒலியியல் காலம்
மொழிக்கலை நுணுக்கம் மெய்ப்பொருள் திட்பம்
மொழிமுதற் கலைநெறி விழியியல் நிலைநெறி
மொழிமுதல் கூர்மை முழுதும் நோக்கி
மொழிப்பயன் ஆக்கம் விழிப்பயன் நோக்கம்
முழுமுதற் பொருளாய் மூவகை இயலும்
ஐவகை யியல்தெரி செய்வகைப் பொருளும்
கைவகை ஆற்றலும் கண்வகை நோக்கமும்
கருத்துணர் ஆற்றலும் கலைநிலை நாடிப்
பொருந்துவ நோக்கி புலனெறிக் கண்டே (834)

உழைப்புறும் திறத்தால் காலங் கருதி
இமைஇமைக் காலம் இம்மியும் முடிவும்
காலத் தருமை அறிநிலை நோக்கால்
காலம் விரைந்து மெய்ப்பயன் நல்கும்
காலமும் இடமும் பொருளும் நோக்கி
மூலத் திறத்தால் முயற்சியும் உழைப்பும்
செய்நிலை செய்பொருள் தெறிநிலை ஓர்ந்தே
மெய்யுணர் வுற்றே உழைப்பியல் திறத்தால்
சிற்ப யாக்கலை ஓவியப் பெருந்திறன்
பொற்புறும் சித்திரம் பொருந்தக் கண்டே
கலைநிலை ஒளிக்கலை கணக்கியல் நிலையாய்
நிலைநெறி எண்ணியல் நெறியுற் றாய்ந்தே
ஓங்குறும் திறத்தால் பாங்குறும் கலைத்திறன்
ஓங்கியல் ஒலித்திறன் உள்ளுணர் நெறித்திறன்
ஆங்குறும் மூலம் ஈங்குறும் காலம்
ஊங்குறும் ஞாலம் ஒளிமுதற் கண்டே (835)

நெற்பொருள் ஆய்ந்து நிலைப்பொருள் தேர்ந்து
குறிப்பொருள் நோக்கிக் குறிநலை கலையாய்
அறிகலை இயல்நெறி ஆற்றலும் உணர்வும்
அறிவுற் றாய்ந்தே மெய்க்கலை தேர்ந்து
எழுத்தியல் மூலத் தெண்ணிலை ஆய்ந்து
வகுக்கு மாநெறி அறுபாள் நான்கியல்
செந்தமிழ்ச் சீர்நெறி செழுங்கலைத் திறனாய்
முத்துறும் செந்தமிழ் மெய்க்கலை மூலம்
ஓங்கலை ஓம்நெறி ஓம்ஒளி ஓம்ஒலி
ஓம்குறி ஓம்நெறி உற்றினி தோர்ந்தே
மொழிமுதல் மூலம் ஓமெனத் தேர்ந்தே
மொழிக்கலை விண்மொழி எண்மொழி ஒமென
ஓம்மறை ஓம்நெறி ஓமியம் ஓவியம்
ஓமியல் பொருளாய் ஓவியம் சிற்பம்
ஓவிய மூலம் சிற்பமாக் காலம்
தேவியற் கலையாய்ச் செந்தமிழ் நெறிக்கலை
செந்தமிழ் ஓவியம் நெறித்திகழ் சிற்பம்
வந்த மாக்கலை தொல்மர பியலாய்
மயன்நெறி நோக்கும் மாண்கலைத் தமிழ்நிலை
மயன்கலை அறிவியல் விண்கலைத் தமிழே (836)

செழுந்தமிழ்க் கலைத்திறன் சீர்சால் ஐந்தியல்
எழுமுணர்க் கலைநிலை இயல்புற நோக்கி
ஐயியல் நிலையால் உணர்நிலை ஆக்கம்
மெய்க்கலை மூலப் பொருள்நிலை தேக்கம்
எழுத்தும் சொல்லும் பொருள்கட் டணியும்
வழுத்துமைந் தியலாய் வகையுறு மைந்தியல்
மொழியியல் நுட்பம் முன்னுறும் திட்பம்
மொழிக்கலை யாக்கம் மூலமா முதலாய்
தென்புலம் தென்றமிழ் தென்றல்மா நெறியாய்
இயற்றமிழ்க் கலைநிலை இசைநிலை கலைத்தமிழ்
மயலற நோக்கி மதியுணர் வுற்றே
அகப்பொருள் புறப்பொருள் ஆய்ந்துறும் உணர்வால்
அகப்பொருள் மூலம் அகவின் ஒளிநிலை
நேருற நோக்கி நிலையுறக் கண்டே
சீருறத் தேர்ந்தே திகழியல் கண்டே
ஏருறும் இயல்நிலை எண்ணிலைக் கலையாய்
மொழிநிலை மூலம் முப்பொருள் ஆக்கம்
மொழிநிலை கலையே மெய்ப்பொருள் இயலாய்
சிற்பமும் சீர்சால் திருநெறி கலைநெறி

ஒப்பிலாத் தவளை மாநெறி இயலாய்
சிற்றவைச் செழுங்கலை செழுந்தமிழ்ப் பொருளாய்
உற்றபே ரறிவால் ஒங்குறும் நுட்பம்
தமிழ்க்கலை யியலென தமிழ்நிலைப் பேரியல்
தமிழ்த்திறத் தாக்கம் தன்நிலைக் கலையாய்
உள்ளொளி நோக்கி உணர்வியல் ஆய்ந்தே
தெள்ளொளிச் சீரொளி பேரொளி ஈறாய்
உள்ளுதற் கரிய வீறோளி ஈரொளி
ஒள்ளொளி ஒளிஒலி ஒளிமுதல் கலையாம்
ஒளியே மூலம் ஒளியே காலம்
ஒளிமுதல் காலம் இடம்பொருள் ஆற்றல்
ஒளிநிலை ஆய்ந்தே ஒலியியல் தேர்ந்தே
ஒளிஒலி இயற்றிறள் நுட்பம் தாய்ந்தே
வெளிஒளிக் கலைநிலை விண்ணிலை மண்ணிலை
வெளிநிலை வானிலை விசும்பியல் ஆய்ந்தே
ஒளிக்கதிர் கதிரியல் கதிர்க்கலை தேர்ந்தே
கதிரொளி கதிரியல கதிரலை கதிர்நிலை
கதிருறும் ஆற்றல் கலைநிலை அறிவியல்
ஒளிக்கதிர் நுட்பம் ஒளிக்கதிர் திட்பம்
ஒளிஒலி மூலத் தியல்நிலை ஆய்ந்தே
ஒளிக்கலை இயலால் பெருங்கலை நுட்பம்
ஒளியியல் நெறியாய் உரைக்குமா நெறியே (837)

எண்கலை நுணுக்கம் இயற்கலை விளக்கம்
விண்கலை யியற்றிறன் வெளிக்கலை மூலம்
எண்ணியல் எண்ணெண் திண்ணிய நெறியியல்
விண்ணியல் கலைநிலை விளக்கமும் தேர்ந்தே
ஒளிக்கலை மூலம் ஒலியியற் கலையாய்
வெளிஒளித் திறனியல் விண்கலை நுட்பம்
எண்முறை யியலய் எண்ணுறுந் திறனிலை
விண்முறை நிலைநெறி வெளிஒளி வளிநிலை
நேர்முறை நிலைமுறை நெடிதுற நோக்கி
காரியல் கலையியல் கணக்கின் ஓர்ந்தே
நெடிது நோக்கலும் கடிதின் உணர்தலும்
படிநிலை ஆக்கம் பணிநின்ல யாய்தலும்
ஓர்தல் உணர்தல் ஒருவழித் திறத்தால்
நேர்கலை நிலைத்திறன் நிலையியல் எண்ணி
அறுபான் நான்கின் மெய்க்கலை தேர்ந்து
உறுநிலை நாற்புறத் தைந்தியல் தேர்ந்து

மூலப் புள்ளி மையம் ஆய்ந்து
கால விரைவியல் கணக்கியல் தேர்ந்து
எண்ணெண் கலைநிலை இயல்புற ஆய்ந்து
என்னிலை மூலம் நெறிமுறை தேர்ந்து
மூலமும் காலமும் முறைமையின் ஆய்ந்தே
கோலமும் சீலமும் குறிப்பின் நோக்கி
காலம் படைத்தல் நற்றிற மாமென
மூலத் துணர்வால் மயனெறி மொழியுமே (838)

சிற்பம் ஓவியம் சித்திரம் தேர்க்குறி
பொற்புறு மெய்க்கலை பொருந்துறும் ஆய்வால்
குறிநிலை ஆய்ந்து நெறிநிலைத் திறத்தால்
அறிகலை இயலுறும் ஆக்கம் ஓர்ந்து
நெறியுறும் திறத்தால் நிலையியல் நாடி
குறியும் நெறியும் குறிக்கும் முறைமையால்
சீர்குறி நேர்குறி சித்திரக் குறியும்
கார்க்குறி விழிக்குறி கைக்குறி மெய்க்குறி
குறிநிலை முற்றும் குறிப்புற் றாய்ந்து
குறிப்பின் ஓர்ந்து நெறிநிலை யாய்ந்து
எண்முறை ஆக்கம் இனிதின் நாடி
விண்கலை இயலால் விளக்கம் தேர்ந்து
ஐந்தும் ஐந்தியல் சிற்றவை நாடி
ஐந்தியல் நாற்புறத் தியல்நிலை தேர்ந்து
காலமும் மூலமும் கடிதின் உன்னி
காலக் கணக்கியல் மூலப் பொருளும்
கால மாநெறி இயல்நெறித் திறனும்
கால விரைவியல் நுட்பமும் ஆய்ந்து
காலங் கருதி கருத்தின் நோக்கி
மூலப் பொருள்நிலை முன்னி முன்னி
மூலமும் இயலும் முக்கலை ஆய்ந்து
மூல மாப்பொருள் முப்பொருள் தேர்ந்து
நெடிதின் உணர்தலும் கடிதின் ஆய்தலும்
படிநெறி நோக்கி மெய்நிலை அறிதலும்
குடிநிலைக் கலைதிகழ் கூர்த்தமா மதியால்
குடியியல் சீர்நெறி நேர்நிலை மாக்கலை
கலைமுழு தியல்நெறி கணக்கின் ஓர்ந்து
நிலைமுழு தைந்தியல் நெறிமுறைத் திறத்தால்
உற்றுணர் வொங்கிக் கற்ற மாக்கலை
தெற்றென் றுணர்ந்து சீர்நெறி நோக்கி

உள்ளும் புறமும் ஒன்றென் றுணர்ந்து
விள்ளும் சீர்மதித் திறனியல் நோக்கி
தெள்ளு மாத்தமிழ் சீரறி வுற்றே
விளளுறும் பேரறி வியனிலை தேர்ந்தே
பேரறி வியலால் சீரறி வாக்கம்
நேரறித் திறனும் நிமைதிக் கலையும்
ஒளிமதித் திறனுற உள்ளுற் றாய்ந்தே
வெளிஒலி இயலால் விண்கலை நெறியால்
கணிகொளும் மெய்க்கலை கணக்கில் தேர்ந்து
அளியுறும் ஐந்தியல் எண்ணிலை நோக்கி
எட்டெட் டியலால் நெறிமுறைக் கருதி
எட்டும் ஐந்தும் இயல்புற நோக்கிச்
சிற்பம் ஓவியம் செந்தமிழ் மாநெறி
பொற்புறும் சிற்றவை புனிதமா நெறியால்
உள்ளுறும் உணர்வால் ஓங்கிய திறனும்
தெள்ளுறும் சீர்க்கலை நுட்பமும் மதியும்
அகத்துணர் வுற்றே அருங்கலை யாய்ந்து
வகுத்தும் பகுத்தும் தொகுத்தும் நோக்கி
மிகுத்தும் கூறும் மெய்க்கலை மெய்ப்பொருள்
வகுத்தே விளம்பல் மயனெறி இயலே (839)

காலக் கணக்கியல் மூலங் கருதி
கால மூலம் கருத்தின் ஓர்ந்து
காலத் தியல்நெறி ஆக்கத் திறத்தால்
காலமும் பொருளும் இடமும் நோக்கி
எண்வகைத் திறமும் ஐவகை யியலும்
விண்வகை நோக்கமும் வெளிவகைத் திறனும்
உள்ளுற் றோர்ந்தே ஒருமொழித் திறனால்
தெள்ளுறும் சீர்கலை நோக்கமும் குறியும்
ஒன்றும் மூன்றும் ஐந்தும் ஏழும்
நன்றும் எட்டும் நலமுறக் கண்டே
எண்ணே எண்ணியல் எண்கலை நுணுக்கம்
எண்ணுறும் மூலம் இயல்புறும் மொழியாய்
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுமுறை ஆய்ந்து விடுங்கணக் கியலும்
தொடுங்கணக் கியல்நெறி தொன்மை ஆய்ந்தே
அடுதலும் விடுதலும் அமைவுற நோக்கி
நெறியும் குறியும் நிலையின் ஆய்ந்து
அறிகுறி அறிகலை அகத்துணர் வுற்று

நிலைமுறை தேர்ந்து கலைமொழித் திறனால்
தலைமொழி அளவை தினிநிலைக் கலையாய்
மலைவற ஓர்ந்தே மதித்தெளி உற்று
உலையா முயற்சி உழைப்புறும் திறனால்
கலையுறும் உணர்வால் கைவினை நோக்கி
நிலையுறும் தொழிற்கலை நவிலல் இயல்பே (840)

அகமே ஞாலமும் காலமும்; பகுத்தும் வகுத்தும் தொகுத்தும் காலம் கண்டு செயல்புரிவோர் ஞாலத்தையும் ஆள்வார்; மயன் நெறி காண்பர்.

கால விரைவியலையும் நாற்புத்தியலையும் மூலத்தெழும் கனல் ஒளியே உணர்த்தும். அதனால் அமையும் தேரின் கலை நுட்பங்கள், பருப்பொருள் முதலான பொருள் வகைகளையும், பகர்தற்கரிய நிலையையும் விளக்கும்.

மொழிமுதலாகிய ஓம் தமிழ் வகைகளையும் இசை வகைகளையும் நடக்கலைக்குரிய கைவகை, கண்வகை ஆகியவற்றையும், காலம், இடம், சிற்பம் ஓவியம் தொடர்பான நுட்பங்களையும் வெளிப்படுத்தும்.

தவளைமாநெறி எழுத்து முதலான ஐந்து, மூலம் முதலான ஐந்து, மொழிஇயல், அகவின் ஒளி, சிற்பம், சிற்றவைத் திறன், கதிர் இயல் முதலானவற்றைப் புலப்படுத்தவல்லது.

உருவம், கட்டிடம், உடல் — இவை தொடர்பான ஒத்த கூறுகளையும், சிற்றவை மூலம் புலப்படச் செய்வது மயன்நெறி.

Only the inner space evolves into Time and Universe. Those who perform their deeds, by means of grouping, classification, assimilation etc, of the available data and by considering the favorable aspects of Time and place could regulate the whole world. They could easily understand the principles of Mayonic order.

The effulgence of Primal Fire itself would reveal the nature of swiftness of time and that of four-sided frame. The various artistic features formed of these time and frame cosmic chariot would reveal the nature of various substances and inexpressible state.

OM-sound which is the initiating factor of language reveals the varieties of Tamil, of music, of Dance, of hand-gestures and expressive books of eyes, subtleties of time,. place, sculpture and drawing etc.

Only the technique of manduka mandala is capable of revealing the features of letter, word, content, composition and ornamentation and of mulam, time, rhythm, form and the world, of language, inner space, sculpture, microbode, potency of solar rays and so forth.

The Mayonic order would benefit one with the efficacy of creating the universe itself through the knowledge of central dot of inner space, the central dot of surrounding spaces, time-measures, rhythm and form.

Through the science of microbode, the Mayonic order makes known the symmetrical features related to form, building and the human body.

சிற்ப மாக்கலை செந்நெறி மெய்நெறி
சிற்ப மாயியல் சிற்ப மாவொளி
பொற்புறும் கலைநிலை பொருந்த வுணர்ந்தே
விற்பனத் திறத்தால் முப்பொருள் நோக்கி
கற்றும் கேட்டும் உணர்ந்தும் ஆய்ந்தும்
சொற்பொருள் மெய்நிலை தொல்பொருள் ஆய்ந்தும்
உணர்வின் நோக்குழி மெய்க்கலை தேர்ந்தே
உணர்நிலை இயல்கலை கலைத்திற மதியால்
மெய்ப்பொருள் மெய்ந்நிலை மெய்யறி வுற்றே
ஐவினை செவ்வினை கைவினைத் திறனும்
உய்வினை நோக்குழி மெய்க்கலை தேர்ந்தே
மெய்த்திறன் ஆக்கம் நிலைகலை நோக்கி
சிற்றவைச் சீரியல் அறுபான் நான்கியல்
உற்றுணர் கலையால் வருபயன் நோக்கி
எட்டும் ஐந்தும் இயல்நெறி நிலையால்
சுட்டு யாக்கலை மாஇயல் மாநெறி
செய்முறை செய்வினை செய்நிலை செய்கலை
மெய்நிலைப் பொருளால் சிற்றவை தேர்ந்து
சிற்றவை மூலச் செழுங்கலை யாய்ந்து
தெற்றறி நுட்பம் தேர்ந்துணர் திட்பம்

உற்றறி பொருள்நிலை உளத்துணர் ஆற்றலால்
தெற்றுறும் நிலைபொருள் சீரறி வுற்றே
அறிவியல் கலைத்திறன் அரும்பொருள் ஆய்தல்
நெறிமுறை சிற்றவை மாநெறி இயலே (841)

மாநெறி வொன்றே மாக்கலை மூலம்
மாநெறி யாயியல் மெய்க்கலைக் காலம்
மாநெறி நிலைப்பணி எண்ணென் கலைத்திறன்
மாநெறி இயலே கணக்கியல் ஆற்றல்
மாநெறி ஆடலான் கலைநிலை யாற்றல்
மாநெறி செந்தமிழ் நெடுங்கணக் கியலே
மாநெறி .துநெறி குறுங்கணக் கியலே
மாநெறி ஆயம் நிலைபொருள் தேர்தல்
மாநெறி இயலால் எழுத்தியல் மூலம்
மாநெறி செந்நெறி ஐநெறி மூலம்
மாநெறி இயலால் ஐந்தியல் நுட்பம்
மாநெறி வொன்றே எண்ணிலை மெய்த்திறன்
மாநெறி நோக்கே எண்கலை எண்ணியல்
மாநெறி திறனால் எண்முறை ஆய்ந்தே
மாநெறி யாற்றலும் பழுதறும் விளக்கம்
தாநெறி தொன்மையும் சொற்பொருள் உண்மையும்
வண்மையும் உண்மையும் வளர்நிலை ஆற்றலும்
எண்மையும் நுண்மையும் இயல்பிற் றேர்ந்தே
நுண்கலை நுணுக்கம் திட்பமும் ஆய்ந்தே
எண்கலை கணக்கியல் இயல்நெறி ஆற்றலால்
விண்ணெறி நோக்கி விளம்புமா நெறியால்
எண்ணெறி இயலல் அறுபான் நான்கே (842)

முக்கலை முப்பொருள் முழுதுணர் திறத்தால்
முக்கலை மூலம் மெய்யுணர் நிலையாய்
ஐந்தியல் ஐந்திசை ஐங்கலை ஐந்நெறி
வந்துறும் மூல ஒளியியல் ஆய்ந்து
காலம் கணக்கும் கோல மாநெறி
மூலமும் பொருளும் முன்னி உணர்ந்தே
எட்டெட் டியலால் நிலைநெறி யாற்றல்
எட்டுறும் கலைநிலை எண்முறை ஓர்ந்தே
நாற்புறத் திறல்நிலை நண்ணிய தோர்ந்தே

தேற்றமும் மாற்றமும் ஏற்றமும் தெரிந்தே
ஆற்றலால் அறிந்தே அகத்துணர் வுற்றே
வேற்றுறும் நிலைகலை எண்முத் திறமும்
மூலத் துடிப்பும் காலத் துடிப்பும்
மூல உணர்வால் மூன்றுறும் மெய்க்கலை
மூல இயல்நெறி நிலைகலை யாற்றல்
மூல முதலாய் முளைத்த ஆறு
கோல மாநிலம் குறித்துறும் பொருளால்
ஐங்குடில் நிலைத்திறன் அகத்துணர் வோங்கிச்
செங்குடில் பைங்குடில் கருங்குடில் வெண்குடில்
ஆங்குறும் திறனும் ஈங்குறும் நிலையும்
ஓங்குறும் கலைத்திறன் ஒளிநிலை ஓர்ந்தே
ஒளிஒலி யியல்நிலை ஓங்குறும் திறத்தால்
வெளிஒளி நிலையால் விளக்கமுற் றாய்ந்தே
கண்ணொளிக் கலையொளிக் கருத்துறும் ஆற்றலால்
விண்ணொளி வியனொளி மேவுறும் திறனால்
எண்ணியல் நிலைத்திறன் விண்ணியல் கலைத்திறன்
எண்ணுறும் திறனிலை இயல்புறத் தேர்ந்தே
ஒருகலை இருநிலை முந்நெறி நாற்புறம்
வருகலை ஐந்தியல் அறுவகை எழுநிலை
எண்கலை மூலத் தியல்நெறி யாற்றல்
எண்ணிலைத் திறனால் இயக்கு மாநெறி
ஓமுறும் பொருள்கலை ஒளியுறும் ஒலியசை
ஓம்மறை ஓம்இயல் ஓம்கலை நெறியால்
மெய்ப்பொருள் நிலைநெறி இயல்கலை ஆற்றல்
மெய்யுணர் திறனால் ஐந்தியல் ஓர்ந்தே
உற்றுணர் திறத்தால் உள்ளொளி நோக்கி
கற்றுணர் மாநெறி கருதரும் கலையும்
நோக்குறும் நோக்கே நுணுக்குறும் ஆற்றல்
நோக்குறும் நுட்பம் மெய்ந்நிலை இயலால்
அகவின் நோக்கே அறிகலை ஆற்றல்
அகத்துணர் திறனே மெய்க்கலை மூலம்
உன்னுவ உன்னி உணர்நிலை ஆய்ந்தே
பன்னுவ பன்னி பகரரும் பொருளாய்
மூலச் செழுமறை முக்கலை யியலாய்
காலம் உணர்த்தும் கால மாநெறி
காலம் கருதி கருத்தில் உன்னி
காலம் நோக்கலும் கலைநிலை இயலே (843)

எண்ணுறும் உணர்வால் இயல்நெறிக் கலையும்
நண்ணுறும் சிற்றலை நயமுறத் தெரிந்தே
கண்ணொளித் திறனால் விண்ணொளி ஆய்ந்து
எண்ணொளி இயலாய் எண்ணிலை நோக்கி
அறுபான் நான்கியல் சிற்றலை மாநெறி
உறுகலை யியல்நெறி ஓங்குறும் கணக்கியல்
ஏழிசை வாழிசை இயங்கிசை நல்லிசை
தாழிசை வளரிசை சீரிசை நேரிசை
இசைநிலை மூலம் எண்கலை நோக்கி
நசையறும் உணர்வால் நாடும் பொருளும்
முந்நெறி முக்கலை மூலமும் தேர்ந்தே
செந்நெறி சீர்நெறி தேர்நெறி ஆய்ந்தே
தேர்க்கலை பொழுதியல் சீருற நோக்கி
ஏர்க்கலை நிலையியல் இனிதின் ஆய்ந்தே
போர்க்கலைக் காலம் புனிதமா நெறியும்
நேர்க்கோட் டியலாய் நிலையுறும் திறமும்
ஒளிமொழி யியல்நெறி உள்ளுணர் நிலைகலை
வெளியொளித் திறனால் மேவுறும் மாக்கலை
நுண்கலை நுட்பம் நுவலு மாநெறி
எண்கலை இயலல் இயம்பும் சீர்மை
எண்ணுறும் திறத்தால் உணர்நிலை ஓங்கி
எண்கலை இயலால் ஆயல்மா நெறியே (844)

மொழியே மூலம் மொழிக்கலை யியலாய்
மொழிநிலை ஐந்தியல் ஒளியியல் திறனால்
ஒளியியல் நுட்பம் விண்மொழி வெளிமொழி
மொழிக்கலை யியலாய் முன்னுவ முன்னி
ஆன்றசெந் தமிழ்மொழி அருங்கணக் கியலும்
ஒன்றுறும் நிலைகலை எண்கலை நுட்பமும்
ஒருங்குற நோக்கி உள்ளுணர் வுற்றே
நெருங்குபே ரறிவால் நிலைமுறை நாடி
கருத்தும்கலையும் கருத்துற் றோர்ந்தே
வருநிலை காலம் வகைநிலை யியலாய்
ஐந்துறும் பொருள்நிலை செம்பொருள் உயிர்ப்பாய்
ஐந்தியற் கலையாய் நெறிமுறை நோக்கி
வந்ததொல் மரபியல் வகுத்துணர் நோக்கமும்
ஆக்கமும் உணர்வும் ஐங்கலை நிலையாய்

நோக்குற நோக்கி நுணுகி உணர்ந்தே
செந்தமிழ்க் கலைநிலை சீர்நெறித் திருநெறி
பைந்தமிழ்க் கலைநெறி பழகுறுந் திறத்தால்
முந்துசெந் தமிழ்நிலை முக்கலை முப்பொருள்
வந்த மாநெறி மெய்க்கலை யியலாய்
எழுத்தியல் சொல்லியல் பொருளியல் கட்டியல்
பழுத்துறும் அணியியல் பாங்குறத் தேர்ந்தே
மொழிக்கலை மூலத் தியல்நெறி ஆற்றலால்
மொழிமுதல் பொருள்நிலை மொழியுமா நெறியே (845)

அசைநிலைக் கலைநிலை நசைதீர் ஒலியும்
அசையொலி அலையசை அசைஅசை ஒலியியல்
ஒலிநிலை நோக்கி ஓசை உணர்ந்தே
ஒலியியற் பொருள்நிலை உணர்வுறுந் திறத்தால்
கலைநிலை முழுதும் கணக்கியல் ஆய்ந்தே
நிலைநெறி யியல்தெரி எண்ணியல் மூலம்
மூலம் காலம் முறைமையிற் றேர்ந்தே
கோலப் பொருள்நிலை குறிப்பின் ஓர்ந்தே
எட்டெட் டியல்நிலை எண்ணிலைக் குறிநிலை
எட்டே யியலாய் ஐந்நெறி கூர்ந்தே
மெய்ப்பொருள் தெரிநிலை விளக்கமும் நுணுகி
மெய்யியல் மூலம் அணுஅணு ஆய்ந்தே
ஒருநிலை இருகலை முந்நெறி நாற்புறம்
திருவுறும் ஐந்தியல் திருநெறி நோக்கி
ஐயைந் தியலும் ஆற்றலும் விரைவும்
ஐங்கலை ஐந்நெறி அமைவுறத் தெரிந்தே
நுட்பமும் திட்பமும் நெறிக்கலை நுணுக்கம்
எட்டுறும் திறனிலை விளக்கங் கண்டே
நிலையும் கலையும் நெறியாற் றோர்ந்தே
மலைவற வோர்ந்து மயநெறி நுட்பம்
ஒலிஒளி மூலம் ஒளிஒலி யாய்ந்து
கலைத்திறன் நோக்கிக் கணக்கியல் நுட்பம்
கருத்துற் றோர்ந்தே உள்ளுறும் நிலைநெறி
பெருநிலைக் கலைநிலை அறுபான் நான்கியல்
சிற்றவை மூலத் தெரிநிலை இயற்றிறன்
உற்ற கால விரைவியல் அசைநிலை
ஓங்குற உணர்ந்தே உள்ளுள் இலங்கும்
தேங்கு மாநெறி சீர்நிலை இயலே (846)

உண்மையும் ஊக்கமும் உளமை வெல்லும்
நுண்மையும் எண்மையும் நெறிமுறை கூட்டும்
காலத் தியலும் கணக்கியல் தேர்ச்சி
கால மாநெறி கணக்கியல் ஆய்ந்தே
ஒன்றுறும் நிலைகலை உள்ளுறும் நுட்பம்
நன்றுறும் சிற்றவை நாற்புறத் தியல்நெறி
மூலப் புள்ளி மையம் உணர்ந்தே
மூலமும் காலமும் முறைமையிற் றேர்ந்தே
எண்ணுறுந் திறனிலை இயல்பின் ஆய்ந்தே
விண்கலை விண்ணொளி லியனிலைத் திறத்தால்
கலைநெறி நோக்கிக் கலையியல் கண்டே
நிலைநெறி அறிகலை நவிலலும் வழக்கே (847)

எழுத்துறும் வடிவம் இயல்பின் நோக்கி
வழுத்து மாநெறி யியற்கலை ஆய்ந்தே
வல்லினம் மெல்லினம் இடையினக் கூறாய்
தொல்நிலை இருகூ றாக்கமு வினமாய்
ஐங்கலை ஐந்நெறி நிலைமா றாமல்
அங்குறும் மூலத் தியல்நெறி நோக்கி
அஇ உஎ ஒநிலை நோக்கி
அஇ அந்நெறி அம்முறை ஆய்ந்தே
உஎ மெய்நெறி உட்பொருள் தேர்ந்தே
ஒநிலை மூலம் உறுபொருள் கண்டே
உயிர்எழுத் தியல்நெறி உயிர்த்திறன் நோக்கி
உயிர்நெறி உணர்வொளி யியற்கலை ஆய்ந்தே
உயிர்மெய் எழுத்தியல் நெறித்திறன் ஆய்ந்தே
எழுத்தியல் நுட்பம் மொழியியல் திட்பம்
பழுத்த மூதறிஞர் பகர்நிலை நோக்கி
முந்துசெந் தமிழ்க்கலை முந்நெறி யாய்ந்து
வந்ததொல் லியல்நெறி விளம்பல்மா நெறியே (848)

தமிழியல் நுட்பம் ஐந்தியல் திட்பம்
தமிழ்க்கலை மூலம் சிற்றவை நுட்பம்
தமிழ்நெறி ஒளிநெறி மயன்நெறிக் கலையால்
தமிழ்நிலை யியல்வடி வுறும்நேர்க் கோட்டியல்
தமிழியற் சிற்பம் ஓவியம் கட்டிடம்
தமிழ்நெறி நுட்பம் தன்னிலை ஆய்ந்தே

ஐந்தியல் ஐந்திசை ஐந்நிலை ஓர்ந்தே
முந்துறும் செந்தமிழ் சிற்பம் ஓவியம்
கட்டிட வைந்தியல் தனித்தமிழ் ஐந்தியல்
எட்டியல் நிலையால் இயல்புற் றாய்ந்தே
ஒண்கலை நுட்பம் ஓங்குறும் கலைநெறி
எண்கலைத் திட்பம் எண்முறை எண்நெறி
நுண்ணறி வுற்றே விண்ணறி வார்ந்தே
எண்ணறி வியற்கலை இயலுமா நெறியாய்
நோக்குற நோக்கி நுவலுவ நுவன்றே
ஆக்குறும் மெய்நெறி பொருள்நெறி யியலால்
தமிழ்நெறி ஒளிநெறி தனிநெறி நோக்கி
தமிழ்மயன் நெறிக்கலை சாற்றல்மா நெறியே (849)

ஐந்திற நுணுக்கம் மயக்கலை நுட்பம்
ஐந்திற யியல்நெறி செந்தமிழ்த் திறனெறி
ஐந்தியல் கலைநிலை அகத்துணர் வுற்றே
வந்துறு மாநெறி யியலல்மா நெறியே (850)

சிற்பவகைகள், சொற்பொருள்கள், முதலான அனைத்தையும் சிற்றவையின் மூலக்கலையே வெளிப்படுத்துகிறது.

மூலத்துடிப்பு, காலத்துடிப்பு, மூலம் முதலான ஆறு நிலைகள், உடலின் ஐங்குடி நிலை, ஓம் இயல் — இவற்றை மூலமறையாகிய பிரணவ வேதம் விளக்கும்.

சிற்றவை நெறி, இசைநெறி, செந்நெறி, தேர்நெறி, நேர்க் கோட்டியல் — இவை அனைத்தும் புனிதமாநெறி எனப்படும்.

மயன் நுட்பமே, ஐந்தியல் வகைகளையும், அணுவின் அணு நிலைகளையும், 64 இயலையும், மொழி வகைகளையும், சிற்றவை நாற்புறத்து இயலையும், மூலப்புள்ளியையும் மையப்புள்ளியையும் தெளிவாகப் புலப்படுத்தும்; எழுத்து உருவங்களையும், 2, 3, 5, 6, 8 எனப் பிரிந்து அமையும் வகைகளையும், ஐந்துயிர் எழுத்து நாற்புறத்தில் அமையும் முறையையும், சிற்பம் முதலான அனைத்தின் நுட்பங்களையும் விளக்கவல்லது.

The varieties of sculpture, words and their contents — all these are brought into existence by the Primal space of microbode only.

The basic scripture known as Pranava Veda explains the efficacy of primal throb, vibrations of Time, six energy-centres, five zones of human body, aspects of OM and so forth.

The technique of microbode, of music, of the central thread, of cosmic chariot, of the horizontal line, etc — all these belongs to the order of unmanifest Vastu.

It is only the subtle techniques of Mayonic order that explains the fivefold aspects, subtle atomic states of an atom, 64 squares, various languages, four-sided form of microbode, central dot of inner space, central dot of surrounding spaces, forms of letters and their modes of classification, formation of five letters within the square frame and the subtleties of sculpture etc.

நுணுக்கம் நோக்கல் அணுத்திறன் ஆக்கம் (851)

ஐம்புலம் ஐந்நெறி ஐங்கலை யியல்தெரி
ஓம்பொருள் விழுப்பொருள் சீர்மை மாநெறி
செழுநிலை வளமுறும் நிலத்தியல் நீரியல்
விழுப்பொருள் நிலைக்கலை எரியியல் கூர்ந்தே
பருப்பொருள் ஆக்கம் பார்நிலை ஐம்பொருள்
கருப்பொருள் மூலம் ஐங்குடில் ஐந்நிலை
பொருளுறும் திறத்தால் மெய்ப்பொருள் நோக்கித்
தெருளியல் நிலைதெரிச் சீர்த்தமா மதியால்
ஆய்முறை ஆய்கலை அறிவியல் நெறிக்கலை
ஆய்தலும் உணர்தலும் அறிவியல் நெறியே (852)

முயற்சி காலம் முப்பொருள் கூட்டும்
முயற்சி மூலம் நெறிப்பொருள் ஆக்கும்
முயற்சி தீவினை முறியடித் தியலும்
முயற்சி நல்வினை ஆக்கம் கூட்டும்
முயற்சி நெறியால் முன்னிய தோர்ந்தே
முயலல் முயலல் முன்னுறு நெறியாய்
அயர்விலா துழைக்கும் அறிவியல் ஆக்கம்

முயற்சி யொன்றே மெய்ப்பயன் கூட்டும்
உணர்வில ரேனும் முயற்சி யொன்றால்
உணர்நெறி கலைநெறி எய்துவர் உண்மை
எத்தகு வினைக்கும் இயலுறு முயற்சி
நத்துறும் நெறியால் நற்பயன் கூட்டும்
முயற்சி யொன்றே வீரம் நல்கும்
முயற்சித் திறனே ஆண்மை கூட்டும்
முயற்சி வலியே ஐம்புல வலிமை
முயற்சி யுற்றோர் மயல்நெறி யுழலார்
முயற்சி யியலால் மயன்நெறி கண்டே
உயர்ச்சி ஆக்கம் உறுபொருள் பெற்றே
இயற்கை யாள்வலி செயற்கை யறிவலி
செயற்கை நோக்கி இயற்கை யாய்ந்தே
மயலறும் உளத்தால் மதிநிலை வுற்றே
ஆள்வினைத் திறனுறும் அறிவுறும் முயற்சி
சூள்நிலை வாள்நிலை நூல்நிலை தேர்ந்தே
கோள்நிலை மாற்றி காலம் வென்றே
நாள்நிலை வெற்றி நண்ணும் பெற்றி
உற்ற மாந்தராய் வாழ்வியல் நோக்கிக்
கற்றபே ரறிஞர் கலைத்திறன் தெரிந்தே
முயற்சி உழைப்பு மெய்ப்பயன் கூட
முயலல் மாந்தர் முதல்நெறி யியலாய்
காலமும் இடமும் பொருளும் ஆய்ந்து
காலங் கணித்தே உழைப்புறும் முயற்சி
நண்ணிய கூட்டும் நன்னிலை முயற்சி
நண்ணிய கூட்டும் இயல்நிலை முயற்சி
உற்றுறும் அறிவால் முயற்சி நாடல்
வெற்றி காண்டல் பெருநெறி யியல்பே

கண்ணுங் கருத்தும் கலைநெறி யாகி
எண்ணும் எழுத்தும் இயல்நெறித் திறனாய்
பண்ணும் ஒலியும் பாநெறி நோக்கல்
விண்ணும் மண்ணும் எண்ணியல் நெறியால்
நிலையுற நாடி நெறியுற நோக்கிக்
கலையுற் றாய்ந்தே கணக்கியல் கண்டே
வெளிநிலை யியல்நெறி வியனெறி நோக்கி
ஒளிநெறி யாற்றல் ஒங்குறும் நீர்மை
ஓர்த்துணர் நெறியால் ஒருகலைத் திறநெறி

தேர்ந்துணர் திருநெறி பெருநெறி ஆக்கம்
நுட்ப யாக்கலை நுவல்நெறி யியற்றிறன்
திட்ப மூலமும் செறிகலைத் தேக்கமும்
ஐந்தியல் நெறியால் அறிவுற் றாய்ந்தே
வந்துறும் மூல மாநெறிக் கலையியல்
எண்முறை யியற்றிறன் எண்ணெறிக் கலைத்திறன்
விண்முறை வெளிநிறை வான்நெறிக் கலையாய்
ஓம்மொழி ஓம்ஒளி ஓம்ஒலி ஓம்மறை
ஓம்நெறி யோர்ந்தே ஒளித்தமிழ் ஆக்கம்
கருத்துற் றியலும் கணக்கியல் மாநெறி
விருப்புறும் மெய்நிலை யியலலும் உயிர்நிலைக்
கலைத்திறன் நோக்கிக் கலைநெறி யாய்ந்தே
நிலைத்திற மதியால் நவிலு மாநெறி
நுட்பக் கலையாய் நுவலுவ தோர்ந்தே
பெட்புறும் சீர்நெறி புகல்மர யியலே (854)

உறுதியும் முயற்சியும் உழைப்பும் உணர்வும்
அறுதியிட் டிறைநிலை ஆக்க முடிபெனாஅ
எண்ணமும் எழுச்சியும் இயல்பிறப் பென்றே
எண்ணுறுங் கலைநிலை நெயியியல் ஆய்ந்தே
உள்ளக் கிளர்ச்சி உற்றுணர் மலர்ச்சி
உள்ளல் உன்னல் ஓங்கிக் கருதல்
நீள நினைதல் நெடிதின் ஆய்தல்
நீளமும் அகமும் நெறியுற் றாய்தல்
கடிதின் உணர்தலும் நெடிதின் நோக்கலும்
படிநிலை யுன்னிப் பாங்குற் றாய்தல்
அசைவிலா முயற்சி நசையறு வீரம்
வசையிலா பெரும்புகழ் வளைவியல் கூட்டும்
திறமும் அறமும் செயலும் முன்னி
மறமும் இயலும் உணர்வும் பெற்றே
வாளும் சூளும் வகையுற் றாய்ந்தே
சூளும் உழைப்பும் திருவுற நோக்கி
நாள்நிலை நீக்கி நவையறுஞ் செயலால்
கோள்நிலைக் காலம் குறித்துறா தாக்கம்
எண்முறை எண்ணி இயல்புறும் மெய்வினை
திண்ணம் உணர்ந்து செய்முறை செய்வோர்
காலமும் வாழ்வியல் வளமுங் கருதி
ஞாலம் ஆள்நெறி காண்டல்மா நெறியே (855)

உள்ளுறும் உணர்வே உறுகலை உணர்வால்
தெள்ளுறும் நிலைகலைச் சிற்றவை நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுநிலை நாற்புறத் தியலைந் தியல்நெறி
கணக்கியல் மாநெறி கலைநெறித் தேர்நிலை
பிணக்கறும் தூநெறி பெருநெறி தேர்ந்தே
பெருவளி யியலும் கருவெளித் திறனும்
உருவெளி ஆக்கம் ஒளிநிலை தேர்ந்தே
உள்ளுறுங் கலையியல் உணர்நிலை நோக்கி
தெள்ளு மாத்தமிழ் சீரியல் திறனிலை
மொழியியல் நோக்கி முட்டறுந் திறத்தால்
மொழிக்கலை நுணுக்கம் முன்னிய தோர்ந்தே
செழுங்கலை யியல்நெறி சீர்நெறி தேர்ந்தே
சீரறி வோங்கிச் செந்நெறி உணர்வால்
நேரறி வுற்றே நிலைமுறை நோக்கிக்
கூரறி வுணர்வால் கலைநிலை யாய்ந்தே
பேரறி வியற்றிறன் பெட்புற் றுணர்ந்தே
ஒருகலை நிலைநெறி உள்ளுமோ ரியலால்
வருகலைத் திறனியல் வளமுற் றாய்ந்தே
பெருகலை நிலைமுறை பிறங்கக் கண்டே
இருநிலை முந்நெறி நாற்புறத் தைந்தியல்
வருமுறை நெறியியல் வளர்நிலை நோக்கி
உள்ளம் உன்னல் ஓங்குறும் நெறியால்
தெள்ளுறும் நிலையறி சீர்த்தமா மதியால்
நிலையறி உண்மை நேரறி வுற்றுக்
கலையறி நிலையே கருதல்மா நெறியே (856)

ஆழ்நிலை உணர்வால் அகன்றபே ரறிவால்
வாழ்நிலை யுன்னி வளநெறி நோக்கி
ஊழ்நிலை மாற்றும் உறுதியுங் கொண்டே
ஏழ்நிலை இயலறி நுண்ணிய மதியும்
கலைத்திற நெறியும் கருதும் ஆற்றலும்
நிலைத்திறப் பணியியல் நெறியுறும் நுண்மையும்
எண்மை யியலால் இயற்கலை உணர்ந்தே
கலைநிலை நுட்பம் கருத்துற் றோர்ந்தே
நிலைநெறி யியற்றிறன் நெறியுறுந் திட்பம்
ஒன்றுமூன் றைந்தியல் ஏழோ டெட்டும்
நன்றுறும் திறனாய் எண்ணியல் ஐந்தே

நோக்குறும் மூலப் பொருள்நிலை நாடி
ஆக்குறும் கலைத்திறன் அறிவியல் நெறியாய்
எண்முறை எண்ணியல் எண்கலை நோக்கி
விண்முறை விண்ணியல் விளக்கமுற் றாய்ந்தே
கலைதெரி நுணுக்கம் கணக்கியல் மூலம்
நிலைதெரிச் சிற்றவை நேர்முறை யியலால்
உற்ற மாநெறி ஒருங்குறும் மெய்க்கலை
கற்றுணர் கலையும் கலைத்திற நோக்கும்
கேட்டுணர் திறனும் கிளர்ச்சியும் எழுச்சியும்
நாட்டமும் நாடி நவிலல்மா நெறியாய்
அறுபான் நான்கியல் அறைமுறை தேர்ந்தே
ஒருநெறிக் கலைத்திறன் உற்றபே ரறிவால்
செந்நெறி செய்நெறி சீர்முறை நோக்கி
மெய்நெறி திருநெறி வருநெறி யியலால்
ஒன்றின் ஆக்கம் இரண்டுறும் யியலாய்
நன்றுறும் மூன்றாய் நாற்புறத் தியல்நெறி
ஐந்துறும் ஐங்கலை ஐந்நெறி ஐம்மறை
வந்ததொல் மயன்நெறி தமிழ்நெறி வழக்கே (857)

எண்கூர் ஆக்கம் இயல்நெறி நோக்கம்
விண்கூர் நிலைகலை வெளிநெறித் தேக்கம்
எண்கலை யியலால் இயம்பு மாக்கலை
தண்டமிழ் ஐந்தியல் நெடுங்கணக் கியலாய்
கணக்கியல் தேர்ந்தே கலைநிலை ஓர்ந்து
பண்ணியல் ஒலிநிலை அசைநிலை யார்ந்தே
பண்ணெறி ஏழிசை ஐந்திசைக் குறித்தே
நுண்ணியல் மதியால் நுவலரும் திறத்தால்
எண்ணு மாக்கலை இசைநிலை யாய்ந்து
வாழிசை வளரிசை வயங்கிசை இயங்கிசை
தாழிசை தளரிசை சாரிசை நேரிசை
எடுத்தல் படுத்தல் நலித்தலும் கூர்ந்தே
தொடுநிலைச் சூழிசை தொல்லிசை நல்லிசை
குழலிசை யாழிசை குறிப்புறத் தேர்ந்தே
பழகிசை பண்பிசை பாங்குற் றாய்ந்தே
வைகறை இசையிசை வகைவுறக் கிளந்தே
வைகலும் இசையிசை மெய்யுணர் வுற்றே
இருள்பொழு திசையிசை ஏழிசை நுட்பம்
கருநிலை கைக்கிளை விளரி துத்தம்

பொருள்நிலை ஓர்ந்தே மூலமும் நோக்கி
மூலத் தெழும்ஒலி ஓங்குரல் ஒலியாய்
காலம் கனியிசை காலம் கணியிசை
இசைநிலை நுட்பம் நிலையிய லார்ந்தே
இசைக்கலை மூலம் அளவை நுட்பம்
தாளமும் முகமும் ஒருநிலை யளவை
தாள்நிலை ஒன்றும் தனிநிலைக் காலம்
காலத் தியலும் அளவைக் கூறும்
கால மூலமும் கணிப்பியல் கண்டே
கருத்துறும் இயலால் நெறிமுறை ஓர்ந்தே
திருநெறி மாநெறி செப்பல் வழக்கே (858)

வீரமும் உணர்வும் வெற்றியின் ஆக்கம்
ஈரமும் பண்பும் உளத்தியல் பாங்கே (859)

உந்துபே ரறிவும் உன்னுசீ ரறிவும்
முந்துகூ ரறிவும் மெய்க்கலை யறிவும்
செந்தமிழ் தெளிந்துணர் சீர்நிலை யறிவும்
ஆறறி வுற்றே ஐந்நெறி இயல்மதி
கூறுகூ றாந்திறன் குறித்தறி மதியாயல்
நிலையுழைப் போங்கி நெறியுணர் திறனாய்
கலைத்திற மதியால் கருதும் மாநெறி
அகவின் ணோக்கி அறுநிலத் தையியல்
மிகுமொளி புகுமொளி ஒளித்திறன் நுட்பம்
கணக்கியல் கண்டே கலைநிலை நோக்கிக்
கணக்கியல் மாறா நெறிமுறை தேர்ந்தே
எட்டேட் டியலால் அகவொன் ணொளிநிலை
எட்டுறும் இயலால் சீர்நெறி மூலம்
மூலப் புள்ளி மையம் நோக்கி
மூலத் தியல்கலை மொய்ம்புற் றாய்ந்தே
மூலம் விளக்கும் மெய்ந்நெறி யியற்கலை
மூலம் காட்டும் மெய்ப்பொருள் ஆக்கம்
கோலங் குறிக்கும் குறிப்பின் ஆய்ந்தே
கால விரைவியல் கடிதின் நோக்கி
ஆறுபே ரறிவால் அமைவுற் றாய்ந்தே
கூறுமா நெறிமுறை சீருணர் வுற்றே

மயன்நெறியாகிய அறிவியல் நெறி, பருப்பொருள் முதலான பொருள் வகைகளையும், நிலத்தியல், நீரியல், செயல்முறைத் திறம், ஆள்வலித் திறன், விண்ணியல், மண்ணியல், வெளிநெறி, வியன்நெறி, ஓம்நெறி, கருவெளித் திறன், உருநிலைத்திறன், ஒளிநிலை, ஊழ்நிலையை மாற்றும் உறுதிச் செயல்வகை, ஒவ்வொன்றிலும் உள்ள எண்கூற்று அமைவு, இசைவகை, இசைபாடும் முறை, வைகல் முதலான பொழுதுகளுக்கேற்ற பண்வகைகள், — இவை முதலானவற்றை நெறிப்படி உணர்த்தும்.

மூலத்து எழும் ஒலியே இசைக்கலைக்குரிய அளவை நுட்பங்களையும், தாள வகைகளையும் ஒழுங்குபடுத்துகிறது. தாளமும் முகமும் ஒருநிலை அளவினவே. தாள நிலையும் கால அளவினைக் காட்டுவதே.

வீரம் முதலான உணர்வு வகைகளையும், அறுநிலத்து ஐந்தியலையும் 64 இயல், மூலப்புள்ளி, மையப்புள்ளி — ஆகியவற்றின் மூலம் மயன்நெறி விளக்கும்.

The scientific process of Mayonic order systematically explains the following:

Varieties of materials, nature of ground and water, methodology of action, co-ordinated and regulated execution, nature of space and earth, outer space and extensive space field, OM-process, efficacy of foetus-space, of imagic form, its luminosity, unfailing activity that could regulate even the providential course, the eightfold state of each existent, various musical expressions, technique of singing, varieties of melodies pertaining to each division of day and night, and so forth.

It is the sound that erupts from the Primal Space that regulates the subtle measures of melodious notes and time-beats. The measure of face equals the measure of one beat. Even the measure of feet denotes the time-beat.

The Mayonic science explains the varieties of inner feelings, five aspects of six energy centres through the technique of 64 squares, central dot of inner space and that of surrounding spaces.

துடிப்புணர் வோங்கி தூயமா நிலையறி
வெடிப்புணர் வோங்கி வினையியல் ஆய்ந்தே
உணர்வின் மெய்த்திறம் உழைப்புறும் காலம்
உணர்கலைக் காலம் செய்முறை ஆக்கம்
காலமும் மூலமும் கூடிதின் நோக்கி
காலக் கணக்கியல் கருதுமா நெறியால்
உணர்வுறும் ஆற்றல் உழைப்பியல் திறனிலை
உணர்நிலைக் கலைநெறி உன்னியல் மதிநிலை
ஆறுபே றறிவால் ஐவகைத் திறமுறும்
கூறுகூ றியலும் குறித்துறுந் திறனே
வாழியல் கலையால் வளமுற வகுத்து4ஒதிறமுறும்
ஆழ்மதி அகல்மதி கூர்மதி ஆய்ந்தே
உன்னல் உள்ளல் கருதல் நோக்கி
முன்னல் துன்னி முன்னியாங் குணர்தலும்
அறுவகை யறிவால் ஐங்குடி நிலையும்
உறுவகைத் திறனால் விண்ணொளி நோக்கி
எண்வகை யியல்தெரி கலைநிலை யாக்கம்
விண்வகை முதலாய் விளங்குற நோக்கி
இடமும் பொருளும் காலமும் ஆய்ந்து
இடத்துறுந் தன்மை இயல்புற் றாய்ந்தே
ஒளிப்பொருள் ஒலிப்பொருள் ஓங்குற் றுணர்ந்தே
வெளிநிலை யியலால் மெய்யறி வார்ந்தே
உணர்வால் ஒளியும் அறிவால் இயலும்
உணர்கலைத் திறனால் உழைப்பியல் நாடி
உழைத்துழைத் துண்மை நாடுறும் இயலால்
உழைநிலை நுட்பம் உணர்த்தல்மா நெறியே (861)

ஏழிசை இன்னிசை நிலையிசை நேரிசை
வாழிசை வளரிசை கலையிசைச் சீரிசை
ஐந்திசை நுட்பம் ஏழிசைத் திட்பம்
முந்துறும் அசைநிலை ஒலியியல் தேர்ந்தே
இசைக்கலை நுட்பம் இன்றமிழ் இயலாய்
வசையறும் ஒலிநிலை மூலம் ஆய்ந்தே
ஓம்ஒலி ஒளியியல் ஒலியலை ஒலியிசை
ஆமுறும் குரலிசை ஓங்கிசை தேங்கிசை
கைக்கிளை விளரி துத்தம் கருதி
மெய்க்கலை நேரிசை குழலிசை யாழிசை
ஆழிசை 'சூழிசை ஓங்கிசை ஆற்றல்

தாழிசை தனியிசை தன்னெறி நோக்கி
சூழிசை தொல்லிசைப் பொருந்தியல் நோக்கி
ஏழிசை நல்லிசை ஐந்திசைச் சிற்பம்
நுட்ப யாக்கலை நுணுக்குறும் நுணுக்கம்
திட்பமும் நுட்பமும் நெறிவுற் றாய்ந்தே
தாளங் காட்டும் காலம் ஓர்ந்து
தாள யாஇயல் நிலையுறும் நெறிகலை
மூலந் தெரிந்தே கால முணர்ந்தே
கால மாஇயல் கருத்துற் றோர்ந்தே
எடுத்தல் படுத்தல் நலித்தலும் நுணுகி
விடுநெறி நிலையிசை ஏற்றிசை யாய்த்தே
இசைக்கலை நுணுக்கம் இன்றமிழ் ஆய்ந்தே
இசையுறும் ஏழிசை நூலியல் நெறியே (862)

நடக்கலை ஆக்கம் நற்றமிழ்க் கலைநெறி
நடக்கலை அறிவியல் அருளியல் நிலைநெறி
நடமே கால அசைநிலை இசைநிலை
நடமே இடம்பொருள் காலமும் கூட்டும்
நடக்கலை அறிந்தார் இன்றமிழ்த் தெரிவராய்
நடக்கலை நுட்பம் நண்ணிய தோர்ந்தே
உறுப்பியல் கலையியல் இசையியல் தாளம்
உறுநிலை உடலியல் மாறா வண்ணம்
நொடியும் நொசிப்பும் நோக்கும் விழியும்
ஒடிவும் அசைவும் உருள்நிலை விழியும்
சேல்விழி கயல்விழி வாள்விழி நேர்விழி
வேல்விழி குறுவிழி விரிவிழி பிறழ்விழி
தாள்நிலை ஒன்றல் தாள்நிலைப் பிரிதல்
தாள்மேல் விரிந்து கீழ்த்தாள் குவிதல்
தாள்விரி நிலைநெறி இடைநிலை அசைதல்
தாள்கடி கூடல் தாள்முனை விரிதல்
தாள்முனை மாற்றம் தாள்கடி தேற்றம்
தாள்விரல் ஐந்தும் ஓசை யாக்கம்
தாள்விரல் ஐந்தும் மேல்நிலை வீசல்
கைவிரல் மாற்றம் கலைநிலை தேற்றம்
கைவிரல் மூன்றிரண் டியல்நிலை காண்டல்
இடைவளை தேற்றம் இருநிலைத் தோற்றம்
இடையிடைப் புருவ நெறிவுறுந் திறத்தால்
முன்னுற நடத்தல் பின்னுற நடத்தல்

முன்னிலை தாவல் பின்னிலை தேற்றம்
வரிநெடுங் கண்விழி வகையுற விழித்தல்
தெரிநிலை நடக்கலை திறமுறும் விளக்கம்
பெருநடச் செந்நூல் நெறிமுறை யியலாய்
பெருநடச் செந்நூல் பகருமா இயலே (863)

மொழியியல் நுட்பம் மொழிக்கலை மூலம்
மொழியியல் திட்பம் மொழிமுறை நெறியால்
எழுத்தே சொற்பொருள் கட்டணி யைந்தும்
வழுத்து மாநெறி வண்டமிழ்த் தாநெறி
பழுத்தழு தறிஞர் பாங்குற் றுணரும்
எழுத்தியல் நுட்பம் நேர்க்கோட் டியல்நெறி
நேர்க்கோட் டியலும் நிலைக்கோட் டியலும்
நேர்க்கோட் டியல்நிலை புள்ளிமா இயலும்
நேர்க்கோட் டியல்நிலை மேல்வளை கீழ்இயல்
நேர்க்கோட் டுறும்நிலை கீழ்வளை குரல்நீள்
புள்ளிக் குறியாய்க் கோடுறும் கோட்டியல்
விள்ளுறும் வளைநிலை நடுவுறும் புள்ளி
அமுதல் ஔநிலை உயிர்பன் னீராய்
கமுதல் னநிலை மெய்யியல் ஆகி
வல்மெல் லிடையினம் மூவின ஓசை
தொல்நெறி மொழியியல் சொற்பொருள் உணர்த்தி
எழுத்தியல் சொல்லியல் பொருளியல் கட்டியல்
வழுத்தும் அணியியல் வகைகிளர் ஐந்தாய்
மொழிநிலை நுணுக்கம் மென்றமிழ் இன்றமிழ்
மொழியியல் நோக்கி மூன்றுறும் மெய்க்கலை
மொழிஒளி மொழியாய் மொழிஒலித் திறனாய்
எழிலியல் தொழிலியல் பயிலியல் விளக்கும்
மொழியியல் பெயர்வினை வகுத்துறுந் திறனிலை
மொழிக்கலை நுணுக்கம் ஒருமொழி பெருமொழி
நுட்பங் கண்டே நுவல்கலை யியற்றியல்
திட்பம் செய்யும் சீரியல் ஆய்ந்தே
மொழிக்கலை வளமுறும் மொழியியல் நுட்பம்
மொழியியல் மொழியும் ஐந்தியல் நெறியே (864)

அருளியல் அறிவியல் கலையியல் நிலையியல்
தெருளியல் பொருளியல் இசையியல் நோக்கி

செந்தமிழ்க் கலைநெறி மயன்தமிழ் ஒளிநெறி
வந்துறும் மாநெறி தூநெறி பாநெறி
மையம் புள்ளி மூலம் நிலையியல்
வையம் ஞாலம் வகையுறும் விளக்கம்
நூலும் கோலும் நுட்ப மாக்கலை
வேலும் வாளும் வில்லும் காட்டும்
வீரத் திண்மை ஈரமா நுண்மை
வீரத் தியல்நெறி விளக்கமும் தேர்ந்தே
உள்ளுறும் உணர்வால் உன்னுவ உன்னி
தெள்ளு மாத்தமிழ்ச் சீர்க்கலை நெறியாய்
ஓம்கலை ஓம்நெறி ஓம்மறை ஓம்ஒளி
ஓம்ஒலி யியல்நெறி செழுங்கலை யாய்ந்து
பைந்தமிழ் நிலைத்திறன் பார்நிலை அறிவியல்
ஐந்தமிழ்க் கலைத்திறன் ஐங்கலை ஐந்நெறி
இயல்புற் றாய்ந்தே எண்ணிலை தேர்ந்தே
மயலறுத் திகலறுத் தொளிநிலை நல்கும்
மயன்நெறி ஒளித்தமிழ் அறுசுடர் ஒளிக்லை
மயத்தமிழ் மாத்தமிழ் இயல்நிலை நுணுக்கம்
ஐந்தியல் நுட்பம் அருங்கலைத் திட்பம்
செந்தமிழ் இயல்நெறி திருநெறி பெருநெறி
உற்ற யாக்கலை உணர்நிலைத் திறனாய்ச்
சிற்றவை யியல்தெரிச் சீர்நிலைக் கலையே (865)

ஆடலான் நிலைகலை அருளியல் மூலம்
ஆடலான் நெறிக்கலை ஐந்தெழுத் தியல்நெறி
ஐவகை நிலைக்கலை மெய்த்திறன் நோக்கி
மெய்ப்பொருள் ஒளிநிலை அறுசுடர் கலையே
திருநெறி ஓம்நெறி சீர்நெறி நேர்நெறி
ஒருநெறி முருகுறும் ஒளிநெறி ஓம்மறை
விண்ணின் றிழிதரும் பேரொளி அறுசுடர்
எண்கலை ஆடலான் அகத்தொளிர் இயலொளி
ஐந்நிலம் ஐந்திணை ஐந்தொழில் ஐந்நெறி
ஐந்துறும் மூலச் செந்தமிழ்ப் பெருநெறி
முற்றுற வோர்ந்தே பெருவெளி ஆடலான்
தெற்றுற் றுணர்ந்தே இயல்நெறித் தீந்தமிழ்
ஒளிநிலைக் கலையால் ஓங்குற வகுத்த
வெளிமொழி விண்மொழி ஒண்மொழி யியலாய்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்

வறியமாப் பாலை ஐந்நிலப் பகுப்பும்
நிலத்திறை நிலத்தியல் நிலப்பொருள் நெடுநிலை
புலத்தியல் கருப்பொருள் பருப்பொருள் உரிப்பொருள்
இயல்நிலை முழுதும் மொழியியல் கூறும்
மயன்நெறி ஆடலான் அருள்திறத் தியலால்
மயன்கலை மயன்தமிழ் ஐந்திறத் தாக்கம்
வியனொளி விண்ணொளி நெறிகலை முதலாய்
மயன்வகு நெறித்தமிழ் மாத்தமிழ்க் கலையே (866)

உள்ளக் கிளர்ச்சி எழுச்சி மலர்ச்சி
உள்ளல் உன்னல் ஓங்கிக் கருதல்
நெடிதின் நினைந்தே கடிதின் உணர்தல்
படிநெறி நோக்கிப் பார்நிலை ஆயல்
குடிநிலை நோக்கிக் கூர்த்தமா மதியால்
விடிவும் முடிவும் வியநிலை நோக்கிக்
கருங்குடி வெண்குடிச் செங்குடிப் பைங்குடி
அருங்குடி நோக்கி ஐங்குடி நுட்பம்
கருநிலை மூலத் தியனிலை ஆய்தல்
ஒருநிலை யியலால் உள்ளகப் பெருவெளி
அகவின் ஆற்றல் அகவெளித் தேற்றம்
மிகுநெறி நோக்கி மெய்நிலை உணர்தல்
உணர்நெறி மூலம் உணர்கலை அறிந்து
உணர்வே ஆற்றல் உயிர்க்கலை நிலையாய்
உணர்வே பேரொளி உள்நிலை நோக்கி
உணர்ந்துறும் மெய்க்கலை மெய்ப்பொருள் நாடி
அகத்துறும் வையம் புறத்துறும் ஞாலம்
மிகுத்த பேரொளியால் வகுத்துறும் மாற்றம்
கலையே யியலால் கருத்துறும் திறனால்
தலைநெறி கலைநெறி தனிநெறித் தன்னெறி
ஐந்தொழில் ஐங்கலை தொழிலியற் கலையாய்
ஐந்துறும் எழிலியல் ஒளியியல் நோக்கி
வண்ணமும் எண்ணமும் வகையுற நோக்கித்
திண்ணமும் முயற்சியும் செறிவுற் றோங்கி
உள்ளத் துணர்வே ஒருபெரும் மூலம்
உள்ளல் அகவொளி மூலமா நெறியே (867)

தண்டமிழ் ஐந்தியல் தனிநெறிக் கலையியல்
வண்டமிழ் நுட்பம் வாழ்வியற் கலைநிலை

ஆழ்மதி யியலால் அறிகலை யுணர்ந்தே
வாழ்மதி நோக்கி வாழிவியல் நெறியால்
தண்டமிழ் யியற்றிறன் திருநெறி மூலம்
ஒண்டமிழ்க் கலைநிலை மெய்ப்பொருள் நெறியாய்
அருளியல் பொருளியல் மெய்ப்பொருள் நூல்நிலை
தெருளியல் கலைத்திறன் காலமா நூல்நிலை
வீரமா நிலைத்திறன் காலமா நூல்நிலை
வீரமா நிலைத்திறன் விளக்குநன் னூலும்
வீரக் கலையியல் போர்நெறிச் சீர்நெறி
தேர்க்கலை நுட்பம் திருநெறித் திட்பம்
ஏர்க்கலை எண்ணியல் ஒளியியல் நூல்நெறி
ஒளிக்கலை ஒலிக்கலை ஓம்கலை நூல்நெறி
வெளிக்கலை வானியல் கணித நூல்நெறி
சிற்பம் ஓவியம் சித்திரத் தூநெறி
பொற்புறுங் கட்டிடம் மனைநிலப் பெருநூல்
நிலமனைத் திருநூல் ஏழிசைச் செந்நூல்
புலனறிப் பெருநட நூல்நெறி யியலும்
எண்ணியல் நெறியால் இயற்றும் விண்கலம்
எண்ணிலை மரக்கலத் தியல்நெறி நூல்நெறி
மூலிகைச் செந்நிலை மெய்நிலை நாடியல்
காலம் வகுக்கும் பேரியல் நூல்நெறி
திருநெறி பெருநெறி பெருவெளி மன்றின்
ஒருநெறி உணர்நெறி மெய்க்கூர் திருநெறி
உள்ளுற் றோர்ந்தே உறுநிலை ஆயும்
தெள்ளுமாத் தமிழ்நெறி சீர்நெறி ஐந்தியல்
கோட்டியல் உருநிலை நிலையியல் புள்ளி
ஏட்டியல் பாட்டியல் இயல்நெறிக் கலைத்திறன்
தமிழியல் நுட்பம் நானிலைத் தியல்நெறி
தமிழியல் மெய்ப்பொருள் மொழியியல் நூல்நெறி
பன்னெறி யியலால் பாங்குற வமைத்தே
தொன்னெறி தென்றமிழ்த் தூநெறி திருநெறி
மயன்நெறி ஒளிநெறி தமிழ்நெறி கண்டே
மயலறு முளத்தால் அயர்விலா உழைப்பால்
கண்டுறுங் கலைநெறி ஒளிநெறி வெளிநெறி
விண்டுறும் மொழிநெறி இசைநெறி நடத்தியல்
ஆடலான் கலையாய் அருளியல் நெறியாய்
நாடுறும் நிலையில் ஒளியா லுணர்வோர்
நாடுறும் அகவொளி புறவொளி கண்டே
தேடுறும் செந்தமிழ் இயற்கலை காண்பர்.

ஒளிமொழித் தமிழே விண்மொழித் தமிழே
வெளிமொழித் தமிழென ஓம்ஒலி உணர்த்தும்
நுட்பம் கண்டே நுண்ணுணர் வோங்கிப்
பெட்புறும் அறிவால் பெருங்கலை நாடி
தண்டமிழ் ஐந்தியல் தகைவுற நோக்கல்
வண்டமிழ் மயன்நெறி விளம்பல் வழக்கே (868)

காலரை முக்கால் ஒன்றென் றுணர்நிலை
மூலங் குறிக்கும் ஓரெண் ணிலையியல்
எண்முறை யியற்றிறன் இனிதுறத் தேர்ந்தே
விண்முறை ஒளிநெறி தமிழ்நெறி மயன்நெறி
உணர்கலை யியலால் ஓங்கும் மெய்க்கலை
உணர்வொளி அறிவொளி கலையொளி நோக்கிக்
கால நுட்பமும் கருத்துறும் ஆற்றலும்
காலமா வலிமை கணியியல் ஆய்ந்தே
உயிரியல் நுட்பம் உணர்கலை ஆற்றல்
செயிரறும் உயிரொளி உடலொளி நோக்கித்
தமிழொளிச் சிற்பம் இசைக்கலைச் சிற்பம்
இமிழொலி உயிரொலி ஒளியியல் தேர்ந்தே
குமிழொலி அமிழொலி மூலந் தேர்ந்தே
தமிழொலி மெல்லியல் ஓசை நுணுகி
தமிழ்மொழித் தன்னிலை தனிநெறி நோக்கி
மூல முதன்மொழி மெய்ம்மைத் தமிழ்மொழி
காலம் வகுக்கும் கணித்தமிழ் நெறியே
வேலும் வாளும் வில்லும் நோக்கிக்
கோலும் நூலும் குறித்துணர் நெறியால்
நாளும் கோளும் நவையில வாகி
சூளுரை யாற்றல் சொற்பொருள் கண்டே
எண்ணள வியல்நெறி எழுத்தள வுறுநெறி
உண்ணெறி நோக்கி உண்முகம் கண்டே
அகவெளி யாற்றலால் அகத்தொளி நோக்கிப்
புகும்ஒளி ஒளியியல் மேவுறுந் திறனாய்
ஆழி வாழுயிர் அறிகலை யறிந்தே
ஊழிக் காலத் தொருநிலை கணித்தே
முக்கலை முந்நெறி முப்பொருள் மூவியல்
அக்கலை ஒளியியல் ஒலியியல் ஆய்ந்தே
அறிவியல் அருளியல் குறியுற நோக்கி
அறிகலை ஐங்கலை செந்நெறி மூலம்

எண்ணெண் கலைத்திறன் நுண்ணிய மதியால்
விண்ணெறித் திறத்தால் விளங்க வோர்ந்தே
எண்ணெறி கலைத்திறன் இயல்புறும் திறனாய்
நுண்ணறி வாற்றல் நுவலரும் கலைச்சீர்
நோக்குபு நோக்கி நாடுவ நாடி
ஆக்குறும் மெய்ப்பயன் ஐம்பொருள் நிலையால்
உற்றுணர் கலையால் உறுபயன் கண்டே
தெள்ளுணர் அறிவியல் சீர்த்தமா மதியால்
கலைநில நோக்கின் கருத்துறும் செந்நெறி
நிலைநெறிக் கலைமுறை நெறிப்பட நிறீஇ
ஓங்குறும் ஓமிசை ஓமியம் ஓவியம்
பாங்குறும் சித்திரம் சிற்ப மாக்கலை
தேங்குறும் மெய்யொளி ஒளிஒலி யிசைநிலை
ஆங்குறும் அண்டம் பிண்டம் தேர்ந்தே
ஊங்குறும் ஒளிஒலி ஒருநிலை நோக்கித்
தாங்குறும் மேல்கீழ் இயல்நிலை நாடி
குறிப்பின் குறித்தே குறிநிலை ஆற்றலால்
நெறிகலை இயற்றிறன் நெறிப்பட நினைந்தே
காலரை முக்கால் ஒன்றென் றுணர்நிலை
கால மாநிலை கலையுறும் மாநெறி
உறுப்பியல் அளவை காலரை யோர்ந்தே
அறுவகை நிலையும் ஐவகைத் திறனும்
பொருந்த நோக்கிப் பெருங்கலை அறிதல்
ஒருமதி உணர்வோர் உரைத்தல்மா நெறியே (869)

குறிநிலை நோக்கி நெறிநிலை ஆய்ந்தே
அறிகலை யியலால் ஐம்புலன் ஐம்பொறி
சீர்நெறி நோக்கிச் சீரறி வுற்றே
தேர்நெறி ஆய்ந்தே பேரறி வோங்கி
நேர்நெறி ஆற்றலால் கூரறி வுணர்வால்
ஓர்நெறி நுட்பம் ஓங்குறுங் கலைநிலை
இயலுறும் ஒளிமதி மயலற வோர்ந்து
செயலுறும் ஆக்கச் சீர்நெறி யோர்ந்து
ஊக்கமும் உணர்வும் ஒருங்குறும் உழைப்பால்
நோக்கமும் நுண்மதி மாறா யியல்பால்
தேக்கமும் தெளிவும் செறிவுற ஆய்ந்தே
ஆக்கங் கூட்டும் அறிவியல் மெய்க்கலை
கலைநிலை கணிநிலை காலந் தேர்ந்தே

நிலைநெறி எண்ணிலை நெறிப்படத் தேர்ந்தே
எண்மூ வியல்நெறி எண்கலை நோக்கி
உண்முகங் கண்டே விண்முகம் நோக்கி
அகவின் புறவின் ணொளிநிலைக் கலைத்திறன்
அகத்துணர் வொன்றே மிகுபே ரறிவால்
ஊழை வெல்லும் உறுதியும் நல்கி
பாழை நீக்கும் பண்புயர் வோங்கி
ஆழ்மதி அறிமதி அகல்மதி யியலாய்
வாழ்மதிக் கலைத்திறன் வளர்க்குமா நெறியே. (870)

துடிப்புணர்வு தூய்மை நிலைக்கும் வெடிப்புணர்வு வினைவகைக்கும் உரியது.

மயன்நெறிக்குரிய ஏழிசை நூல் ஐந்திசை நுட்பம், கைக்கிளை முதலான இசைவகை ஏழு, ஐந்திசைச் சிற்பம், தாளவகை, காலவகை முதலானவற்றை விளக்குவது.

மயன்நெறிக்குரிய பெருநடச் செந்நூல் உறுப்பியல், இசை இயல், தாளவகை, நின்றநிலை மாறாமல் நொடிப்பு, நொசிப்பு முதலானவற்றை வெளிப்படுத்தும் முறை, விழி அசைவு, தாள்வைக்கும் வகை, தாளின் அடிநிலை வைப்பு, தாளின் முனைநிலைவைப்பு, தாள்விரல் அசைவு, கைவிரல் அசைவு, புருவஅசைவு, நடைவகை முதலானவற்றை வெளிப்படுத்தும்.

மயன் தமிழ் ஒளிநெறியானது நேர்க்கோட்டியல், நிலைக் கோட்டியல், புள்ளி வகை, வளைவு வகை, எழுத்து வகை, ஓம் வகை, அறுசுடர் முதலானவற்றின் நுட்பங்களைப் புலப்படுத்தும்.

ஆடலான்நிலை, ஐந்தெழுத்து அமைவோடு கூடியது. எண் கலை உடைய ஆடலானின் அக ஒளியே அறுசுடர்ப் பேரொளியாக வெளிப்படுகிறது.

Throbbing consciousness is for pure expressions and exploding consciousness is for systematic actions.

The Mayonic treatise dealing with sevenfold music explains the subtleties of fivefold music, seven musical notes, musical sculpture, varieties of time-beats and of time divisions and so forth.

The Mayonic work on the Great Dance, explains the features of limbs, musicology, varieties of time-beats, various movements of body without change in position, expressive looks of eyes, modes of placing the feet, of placing the heel and the front-feet, movements of the fingures of feet and of hands, knitting of eye-brows, varieties of steps and so forth.

The Mayonic work on luminous thread explains the characteristics of horizontal lines, vertical lines, dots, curves, letters, varieties of OM, six luminous sparks and so forth.

The posture assumed by Nataraja is identical with five letters. It is the inner vital radiance of Nataraja that flashes out as the effulgent six scintillating sparks.

உயிர்க்கலை உயிர்நெறி உயிர்க்குறி உயிர்நிலை
உயிரியல் கருவுயில் இயலியல் நெறியும்
கருநிலை மூலக் கலையியல் ஆற்றல்
உருநிலை கோலத் திறத்தொளி தேற்றம்
உயிரியல் ஆய்தல் ஒருபெருங் கலையாய்
உயிரியல் உடலியல் உறுப்பியல் நோக்கி
எண்வகை யளவாய் இயலுறும் நெறிநிலை
விண்வகை ஒளிக்கலை மூலமா நெறியால்
கண்ணொளி நுட்பம் கலையுணர் திறனாய்
எண்ணொளி யியலொளி நெறிமுறை யாய்ந்தே
தொன்மையும் சிறப்பும் தொகைநிலை கருதி
பன்மையும் தனிமையும் பாங்குற் றாய்ந்தே
தொல்லுயிர் நல்லுயிர் தோற்றமும் தேர்ந்து
பல்லுயிர் வளர்நிலை வாழ்நிலை ஒளிநிலை
வகையுறத் தேர்ந்தே வளர்கலை நுட்பம்
மிகையற நோக்கி மீக்கொளும் திட்பம்
உயரிநெறி ஆண்பெண் ஒன்றியல் ஆற்றல்
உயிர்த்திறன் ஆண்பெண் ஒன்றுறும் நெறியாய்
நோக்கமும் இயலும் நொடிநொடி ஆய்ந்து
நோக்குறும் மேல்நோக் கியனிலை நோக்கி
உண்மை உணர்ந்து வண்மை யியம்பி
எண்மை காண்டல் இயல்நெறி யாயல்

விண்மை விண்ணெறி விண்ணொளி யியலாய்
எண்கலை எண்முறைச் சிற்றவை நெறியே (871)

ஒன்றே இரண்டே மூன்றுநான் கைந்தே
நன்றுறும் ஆறே ழெட்டுறும் திறனாய்
எண்ணே எட்டே எண்முறை எண்கலை
விண்ணும் எட்டே மண்ணும் எட்டே
உயிர்க்கலை எட்டே உடலொளி எட்டே
செயிரறும் உயிரெலாம் பொருளெலாம் எட்டே
எப்பொருள் எந்நிலை எக்கலை நோக்குறும்
செப்பரும் எண்ணியல் எண்முறை நெறியாய்
ஒப்பிலாக் கலைநெறி சிற்றவை நிலைநெறி
முப்பொருள் முக்கலை முந்நெறி யோங்கி
ஐந்நெறி அறுவகை யியல்நெறி நோக்கி
மெய்ந்நெறி பொருள்நெறி அருள்நெறி யியலாய்
எண்வகை யாய்ந்தோர் விண்வகை யாய்வர்
பண்வகை யாய்ந்தோர் பாவகை காண்பார்
கண்வகை கண்டோர் கலைவகை அறிவர்
மண்வகை தெரிந்தோர் புனல்வகை தெரியர்
உள்வகை யறிந்தோர் வெளிவகை உணர்வர்
உளிவகை உணர்ந்தோர் ஒளிவகை காண்பரால்
உண்மை யுணர்ந்தே ஒருநிலை தேர்ந்தே
நுண்மையும் எண்மையும் நுவலு மாக்கலை
வண்மையும் மென்மையும் வளம்பெற நோக்கி
தன்மைத் தனிநிலை சார்நிலை யியலால்
சிற்பம் ஓவியம் கட்டிடம் ஆயம்
பொற்புறும் நெடுங்கணக் கியல்நெறி மூலம்
கலைநெறித் திறமும் கணக்கியல் நெறியும்
நிலைநெறி அறுபான் நான்கியல் வழக்கே (872)

கணக்கியல் மூலம் கலைநிலை யுன்னி
கணக்கியல் காலம் நோக்குபு நோக்கி
கணக்கியல் ஆற்றல் கருத்துறும் தேற்றம்
பிணக்கறும் அறுபான் நான்கியல் பெருநெறி
அண்டமும் பிண்டமும் அமைவுற் றாய்ந்து
கொண்டுணர் பெருங்கலை கூர்மதித் திறத்தால்
விண்டுணர் நெறிக்கலை வெளியியல் அணுத்திறன்

கண்டுணர் கலைநெறி கூரணு நேரணு
சிற்றணு செறியணு திருநிலை யணுத்திறன்
உற்றுறும் பேரணு அணுக்கலை நெறியால்
அணுஅணுத் திரள்நெறி ஆய்முறை ஆய்ந்தே
அணுஅணுக் கலைநெறிக் கலைத்திறன் மூலம்
நடுவுறும் திறநிலை நண்ணும் திறனெறி
நடுநிலை மையம் புள்ளி யோர்ந்தே
ஒருநிலைக் கணக்கியல் ஐந்துறும் திறங்கூர்
வருநிலை மெய்க்கலை அறிவுற் றோர்ந்தே
கணக்கியல் எண்ணிலை கலைநிலை யியலாய்க்
கணக்குங் கலையும் அளவும் நோக்கி
அளவியல் நிலைதெரி அறுவகைத் திறனும்
அளவுறும் நுட்பம் அருங்கலை நுண்ணியல்
எண்ணிலை யியலால் இயங்கு மாநெறி
நண்ணுறும் மூலத் தியல்நெறி யாற்றல்
தொன்மை யாக்கலை தாநெறி யாய்ந்தே
தென்கலைச் சிற்றவை மாநெறி நுட்பம்
தென்றமிழ்ச் சிற்பம் எண்ணெண் ணியலே (873)

காலமும் விரைவும் கணக்குறுந் திறத்தால்
கால நுட்பம் கணித்தினி தாய்ந்தே
நொடிநொடி இமைப்பியல் இம்மியும் கருதி
கடிதுறும் கால விரைவியல் ஆக்கம்
தேர்த்துகள் பொழுதும் ஏர்க்கலை நொடியும்
சீர்க்கலை நுண்மை திருநெறி ஆய்ந்தே
காலத் தியல்நெறி கணித்துறும் நுட்பம்
மூலத் திருநெறி முன்னுறும் ஆற்றல்
எண்ணியல் ஐந்நெறி இயல்புற நோக்கி
விண்ணிமைக் காலம் வியம்புற் றோர்ந்து
பண்ணிமைக் காலம் பாங்குற நோக்கி
எண்ணிமைக் காலம் இயல்புற் றாய்ந்து
மண்ணிமைக் காலம் மயலறத் தெரிந்தே
கண்ணிமைக் காலங் கருதி யுணர்ந்தே
காலச் சுழல்நிலை அறுபான் நான்கியல்
மூலம் ஐயைந் தியல்நெறி நோக்கி
சிற்றவை எண்ணிலை எட்டெட் டியலாய்
உற்ற யாநெறி ஓங்குறுந் திறநிலை
எண்ணெண் ணியல்தெரி கலையியல் ஆக்கம்

விண்கலை நுண்கலை வியனுறத் தெரிந்தே
எண்கலை யியலால் எண்முறைத் தெரிந்தே
நுண்கலை நுட்பம் நுவலு மாக்கலை
காலத் தியல்தெரி கணக்கியல் உன்னி
மூலமும் பொருளும் அறிதல்மா நெறியே (874)

அகத்துணர் வோங்கி அறிகலை நுணுக்கம்
மிகுத்துறுந் திறனால் மிகுமதி நுட்பம்
உற்றுறுங் கலையியல் ஒருங்குற நோக்கித்
தெற்றுறும் விண்ணிலை விண்ணெறி யியற்றிறன்
ஆடலான் கலைநிலை அருளியல் அறிவியல்
நாடரும் மெய்க்கலை நண்ணுமெய்ப் பொருளியல்
ஒளியால் அறிந்துணர் ஒள்ளியல் நெறியியல்
வெளியாற் கண்டுணர் விண்நிலை வான்பொருள்
அகவின் அகவெளி அகவான் நோக்கி
அகத்துணர் மெய்க்கலை ஐங்குடில் அறுநிலம்
அகவெளி யியற்பொருள் வான்பொருள் சேயொளி
அகத்துறும் நுட்பம் புறத்துறும் திட்பம்
வான்பொருள் ஆடலான் வையமெய்க் கலைநிலை
வான்நிலம் நீர்அனல் வளியியல் அறிந்தே
அண்டமும் பிண்டமும் குறிநிலை இயலாய்
எண்டிசை மூலத் தென்றிசைக் குறியியல்
ஒளிவெளி யியலால் வோங்குறும் ஒம்உரு
வெளிஒளி நிலைக்கலை விளக்கும் விண்ணெறி
எண்ணெறி யியலாய் நுண்ணெறி வுற்றே
எண்கலை எண்முகம் தாள மாக்கலை
நுண்ணுணர் வுற்றே நுட்பமும் ஆய்ந்தே
எண்ணுணர் கலைநெறி விண்கலைத் திருநெறி
பெருவெளி யியற்றிறன் பெருநிலை யாக்கம்
ஒருவெளி வான்வெளி உள்ளொளி அகவெளி
நோக்குற நோக்கி அகத்துணர் வோங்கி
ஆக்குறுங் கலைநெறி எண்ணெண் ணியலே (875)

அம்மையும் அப்பனும் சேயு மாய்த்திகழ்
செம்மைத் திருநிலை ஆட லான்உரு
அருளும் அன்பும் அறிவும் விளக்கும்
தெருளும் கூட்டி மருளும் போக்கும்

தென்முக நோக்கும் விண்முக நோக்காய்
தென்றிசைத் தென்னியல் தென்கலை தென்றல்
எண்ணெண் ணியலால் சிற்றவை நிலைதெரி
எண்ணெண் கணக்கியல் பெருவெளி மன்றே
ஆடலான் ஒளிதிகழ் கலைநிலை யியலாய்
ஆடலான் உருநிலை ஆயிரத் தெண்ணிலை
கலையுரு வாயுறும் கணக்கியல் ஆக்கம்
நிலையுரு வொளிநிலை வானியல் நோக்கம்
அருளியல் உருவம் அறிவியல் வடிவம்
தெருளியல் படிமம் சீர்நிலை நோக்கி
ஒளியா லுறுநிலை ஒளியுரு நிலையே
ஒளியா லுறும்உரு ஓம்ஒளி யுருவே
ஒளியா லுறும்ஒலி ஓம்ஒலி நிலையாய்
ஒளிநிலை மூலம் வெளிநிலை யியலாய்
வான்பொரு ளாயுறும் பேரொளி தாயொளி
வான்கலை உணர்த்தும் சேயொளி கலைநெறி
மூவொளி கூட்டும் பேரியல் தன்மை
மூவியல் முக்கலை முந்நெறி நோக்கி
ஆடலான் கலைநெறி தமிழ்நிலைத் திருநெறி
ஆடலான் நிலைநெறி வான்பொருள் இயலே (876)

மதியொளி நோக்கி ஒளிமதி யாய்ந்தே
விதிமுறை மாற்றி ஊழினை வெல்லும்
கால நுட்பமும் காலமா நெறியும்
மூலப்பொருளால் முன்னி யோர்ந்தே
காற்றும் மூச்சும் கணக்கியல் நெறியும்
ஆற்றலும் அறிவும் அருங்கணக் கியலும்
எண்ணொளி இயலொளி எழிலொளிச் சீரொளி
விண்ணொளி வீறொளி வியனொளி பேரொளி
கூரொளி குவியொளி கவினொளி காரொளி
நேரொளி நிலையொளி நீடொளி நோக்கி
ஒளிக்கலை யியல்நெறி ஒளிநெறித் திறனாய்
வெளிக்கலை விண்ணெறி ஒளியலை நோக்கி
சிற்றவைச் சீரலை நுண்ணலை எண்ணலை
பெற்றுறும் பேரலை கூரலை குவியலை
அலையலை நிலையலை ஒலியசை யாக்கம்
நிலையுற நோக்கி நெறியொளி ஒளிமதி
மதியொளித் திறனால் மன்னியல் நோக்கி

விதிமுறை ஆற்றல் கால நுட்பமும்
கணக்கியல் நிலைதெரிக் கலையியல் நுட்பம்
கணக்குறும் நெறித்திறன் எண்கலை நுட்பம்
விண்முறை வெளிநெறி வியன்நெறி யாய்ந்தே
நுண்ணெறி வுற்று விண்ணெறி யோர்ந்தே
எண்ணறிக் கலைத்திறன் இயலுவ கருதி
எண்முறை ஒளிக்கலை ஒளிமதி யாய்ந்து
மதியொளி நோக்கி மாக்கலை மாநெறி
விதிமுறை மாற்றலும் காலத் திறனே (877)

எண்கலை நுட்பம் இயற்றிறன் நோக்கி
எண்கலை விண்மொழி வெளிநிலை வெளியியல்
ஒளிநிலை யாக்கம் ஒலிநிலைத் தேற்றம்
ஒளிக்கலை மூலம் ஒளிவெளி யாற்றல்
உணர்முறை உணர்ந்து கலைத்திறன் நோக்கி
உணர்கலை யாற்றல் உன்னுவ உன்னி
ஒளியும் ஒலியும் வெளியும் வளியும்
அளியியல் கலையியல் களியியல் கருதி
நோக்குறும் ஆற்றல் மெய்நிலை மாநெறி
ஆக்குறும் கலைத்திறன் அறிகலை இயல்நெறி
அணுத்திரள் அணுக்கலை அணுக்கூர் ஆக்கம்
அணுஅணு நேரணு கூரணு சீரணு
அணுக்கலை யியலால் அண்டமும் ஆக்கும்
அணுக்கலை யியலால் பிண்டமும் கூட்டும்
பருநிலை மூலம் பெருநெறி நோக்கி
ஒருநெறி உன்னி ஐங்கண் ஆக்கம்
கருநெறி யியலால் குய்யம் மேலாய்
பருநெறி யியலாய் ஐங்கண் நிலையுறும்
மெய்நிலை நோக்கி உய்நிலை ஆய்ந்து
செய்நிலைக் கருதி இயல்வினைத் திறனால்
நுட்பங் கருதி நுணுக்கம் ஆய்ந்து
நுட்பம் ஆய்தல் ஒளிநிலைக் கலையே (878)

உயிர்க்கலை உயிர்நெறி உயிரினம் உயிர்நிலை
செயிரற நோக்கிச் சீர்நெறி யாய்ந்து
பயிர்க்கலை செடிகொடி மரநிலை உயிர்நிலை
உயிரினம் புள்ளினம் விலங்கினம் உன்னி

நிலம்வாழ் உயிரும் நீர்வாழ் உயிரும்
நிலபுலத் தியல்நெறி நீருள் ளுயிரும்
பெருவெளி யியலும் பெருவெளி இயலு்
பெருங்கலை நுண்திறன் அருங்கலைத் திறனும்
கருக்கலைக் கருநிலை கருதுறும் நுட்பமும்
உருநிலை உயிர்நிலை உயிரொளி உடலொளித்
திருநிலை மதியால் செந்நெறி யாய்ந்து
திருநிலை யாக்கம் செய்முறை யாய்ந்து
கலையுறும் நுட்பம் கருத்தினி தோர்ந்து
நிலையுறு மதியால் அண்டமும் பிண்டமும்
நோக்குமா மதியால் நுண்கலை ஆய்ந்து
ஆக்குமாத் திறனால் எண்கலைத் தேர்ந்து
செய்முறைத் திறனால் விண்கலை நுட்பம்
ஐவினை இயற்றிறன் ஐங்கலை ஐந்நெறி
செய்வினைச் சீர்வினைத் திருவினைப் பெருவினை
உய்வினை யாற்றல் ஒளியுற நோக்கி
உயிர்க்குல நெறிமுறை உயிரொளித் திறனால்
உயிர்நெறி ஆய்ந்து உரைத்தல்மா நெறியாய்
ஒன்றே உயிரினம் என்றென் றுன்னி
ஒன்றே ஒளிக்கலை உரைக்கும் உண்மையே (879)

செங்கதிர்க் கலைத்திறன் செவ்வொளிச் சீரொளி
பைங்கதிர் ஒளித்திறன் பாரொளி விண்ணொளி
தங்குறும் பேரொளி தனியுறும் நேரொளி
அங்குறும் சீரொளி இங்குறும் கூரொளி
உங்குறும் பேரொளி ஒளிஒலி இயலாய்
திங்கள் பேரொளி மீனொளி வானொளி
அண்டப் பேரொளி எழுகதிர் வண்ணம்
அண்ட மாயியல் பிண்ட மாநெறி
கண்டுறும் கதிரொளி விண்டுறும் மதியொளி
கண்டுறும் விண்ணொளி ஒளிநிலை யியலாய்
பெருவெளி நிலயொளி பேரொளித் திறனும்
கருவெளி நிலையொளி கலையொளி நுட்பம்
ஒளிமுதல் மூலமும் வெளிநிலைக் கோலமும்
ஒளிவின் ணாக்கம் உற்றுணர்ந் தாய்ந்து
ஒளியே நிலைக்கலை ஒளியே இடைநிலை
ஒளிநிலைக் காலம் உணர்முறை நோக்கி
அறிவியல் கலைத்திறன் அண்டமும் ஆக்கும்

அறிவியல் நெறித்திறன் இயல்நெறிக் கூட்டும்
நுட்பமும் திட்பமும் மாசற வுணர்ந்தே
பெட்புற் றாய்ந்தே பெருமதி நோக்கி
கட்புலத் திறனால் கருத்துணர் வுற்றே
பெட்புறும் இயல்தெரி நுட்பமாக் கலையும்
அறிவா லறிந்து உணர்வுற் றாய்ந்து
நெறியாற் றெரிதல் ஒளிநிலைக் கலையே (880)

உயிரியல், உடலியல், உறுப்பியல் — அனைத்தும் எண்வகையே. விண், மண், உயிர்க்கலை, உடலொளி, ஞாலப் பொருள்கள் — அனைத்தும் எட்டு எட்டாகவே விளங்குபவை. அறிதிறன் அனைத்தும் ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாக இருப்பவை. 64 இயலால் அமையும் சிற்பம், அணுக்களின் வகைகள் அனைத்தையும் புலப்படுத்த வல்லது. சிற்றவையே கால அளவைகளையும் கால வகைகளையும் வெளிப்படுத்துகிறது.

பிரணவடிவம் ஆடலான் வடிவமே.

அம்மையும் அப்பனும் சேயுமாகத் திகழும் வடிவம், அருள், அன்பு, அறிவு ஆகிய மூன்றையும் புலப்படுத்தும்.

ஆடலான் உருவம் ஆயிரத்து எட்டும் ஓம்-என்பதன் ஒளிநிலைகளே.

பேரொளி, தாயொளி, சேயொளி மூன்றும் பொருந்திய வடிவம் அம்மையப்பன் சேயுரு.

சிற்றவை வெளிப்படுத்தும் அலைவகைகளே காற்றும் மூச்சும்.

மூலாதார அமைப்பு, ஒரு நெறிப்பட்ட ஐந்து இடங்களுக்கும் ஆக்கம் தருவதாக விளங்கும்.

Souls, bodies, limbs — all these are in eightfold groups. Space, earth, qualities of souls, energies of bodies - worldly objects- all these are in eightfold group only. The knowledge of each branch is corroborative and helpful to the knowledge of other branches. The sculpture effected by the technique of microbode is capable of revealing all

the varieties of atoms. It is the microbode that vibrates into time-measures and time divisions.

The form of OM is the form of Nataraja himself.

The form constituted of the image of father, mother and child in between is indicative of compassion, love and knowledge.

All the one thousand and eight forms of Nataraja are, in reality, the luminous aspects of OM only.

The image of Somaskanda is the one in which the Supreme light source, nourishing light source, and blissful light source are present.

Winds, inbreath, outbreath — all these are indeed the waves emitted by the microbode.

The structure of muladhara cakra vitalises the five places existing above, in one and the some central channel.

அண்டம் ஆழி அணிகிளர் வெற்பும்
மண்டும் பெருநிலம் வளைநிலை யாறும்
செடிகொடி மரநிலை சீருயிர் பேருயிர்
இடியுறும் மின்னல் பெருமின் னொளியியல்
மின்னொளி யியல்நிலை தன்னொளிக் கலைநிலை
தென்றல் வளிநிலை தென்றிசை யியல்நெறி
நாற்புறத் தியல்நிலை நன்னிலை ஞாலம்
நாற்புறத் தெண்ணிலை தொன்னிலைக் கோளம்
கல்மண் பெருமணல் நுண்மணல் சிறுகல்
வல்நிலைப் பாறைச் செம்மண் கருமண்
மண்ணியல் ஆய்வும் விண்ணியல் ஆய்வும்
எண்ணியற் கலையும் நுண்ணியல் நுட்பமும்
எரியுறும் வளிநிலை வளியுறும் எரிநிலை
தெரிநிலை அனல்புனல் கனலெரி யாக்கம்
நீர்நிலம் விண்வளி எரிநிலை ஐந்தும்
தேர்நிலை உண்மை செங்கதிர் தண்கதிர்

விண்மீன் விண்ணொளி விண்ணொலி விண்ணியல்
அண்டமும் பிண்டமும் ஆருயிர் சீருயிர்
நேருயிர் நிலையுயிர் நெறியுயிர் குற்றுயிர்
காருயிர் கணியுயிர் உயிரினக் கூட்டம்
புள்ளினத் துயிரும் விலங்கினத் துயிரும்
உள்ளூறும் மக்கள் உயிரும் நோக்கி
பல்வகைப் பேருயிர் சீருயிர் அறியுயிர்
தொல்லுயிர் நல்லுயிர் நுட்பங் கருதி
உயிர்நெறி யாய்ந்து உணர்நெறி நோக்கி
மயல்நெறி நீங்கல் மயனெறி மரபே (881)

வீரமும் உணர்வும் சூளுரை யாற்றலும்
ஈரமும் நெறியும் இயற்கலை யுணர்தலும்
வாள்வலி வில்வலி வேல்வலி நோக்கலும்
தோள்வலி சூள்வலி நாள்வலி யாற்றலும்
ஆள்வினைத் திறனாய் நாள்உழைப் பியற்றலும்
ஆள்வினைத் திறனால் இரவுறும் உணர்வும்
காலமும் இடமும் பொருளும் நோக்கி
மூலமும் முயற்சியும் முன்னுறும் வினையும்
நேருணர் வுற்றே நிலையுணர் வோங்கிச்
சீருணர் வுற்றே செயல்முறை யோங்கி
உழைப்பே உயர்வின் உறுநிலை யாற்றல்
கழைப்பே தாழ்வின் சிறுநிலை யாற்றல்
உன்னி உன்னி உள்ள வலிமையும்
உள்ளூறும் ஆற்றலால் உணர்கலை நெறியால்
தெள்ளூறும் மொழியியல் நுட்பம் தேர்ந்தே
ஒள்ளிய ஒளிக்கலை நெறிக்கலை யாய்ந்தே
காலமா நுட்பம் கருதிக் கருதி
காலங் கணித்தே செயல்நெறி யாற்றல்
காலம் மூலம் கோலமும் சீலமும்
ஞாலமுங் கருதி நன்னெறி தொன்னெறி
பன்னெறி கண்டே புன்னெறி நீக்கி
மன்னெறி நிலையியல் மதியுறப் படைத்தல்
வீர மாக்கலை வீர மாநெறி
வீரத் துணிவும் வென்றியும் நோக்கி
துணிவே உழைப்பே வீரமுற் றிலங்கல்
கணியுறும் காலம் இயல்தரும் வலியே (882)

ஊழை வெல்லும் உறுதியும் உண்மையும்
ஆழ்மதி உணர்வும் அகலுறும் உணர்வும்
பாழ்மதி நீக்கி வாழ்மதி தேக்கி
வீழ்மதி மாய்த்து வளர்மதி நோக்கி
குறுமதி யழித்தே பெருமதி வளர்த்தே
உறுமதி பெருக்கி உற்றுறும் உணர்வால்
மதிஒளி ஆற்றல் மாண்புறத் தெரிந்தே
மதிநிலை யுணர்வும் உணர்மதி யாற்றலும்
கலைமதி யொளியும் நிலைமதி யறிந்தே
தலைமதித் திறனும் தனிமதி நுட்பமும்
நிலையுளம் நெறிமுறை நேர்பெற் றிலங்கி
கலையுளம் வீரமும் உணர்வும் இலங்கி
காலமும் மூலமும் கணக்கின் ஆய்ந்தே
மூலப் பொருள்நிலை இடநிலை தேர்ந்தே
உழைப்பியல் நெறித்திறன் உன்னுவ உன்னி
உழைப்புறும் உண்மை ஊழினை வெல்லும்
முயற்சி பெருந்திறல் நல்குவ தியலாய்
அயர்வினை நீக்கி ஆற்றலும் ஆண்மையும்
செயிரறும் மதியும் தீதுதீர் செயலும்
மயலற நோக்கி மயன்நெறி ஓர்ந்து
அயன்நெறி யாற்றும் ஆற்றலும் ஆண்மையும்
செயலால் காண்டல் சீரொளிக் கலைநிலை
நுட்பம் என்றே நுண்ணிதின் உணர்ந்தே
பெட்புற் றாய்தல் அறிவோர் நெறியே (883)

கால மறிந்தே இடமு முணர்ந்தே
மூலம் உணர்ந்தே முன்னிய நாடி
உழைப்புறும் திறனும் அறிவுறும் முயற்சியும்
இறையும் பிறழா நெறிநிலை நோக்கமும்
குறிப்பால் உன்னி குறிப்புற நோக்கிப்
நெறியியல் தன்மை நிலைபெற் றுணர்ந்தே
பொருள்வர வறிந்தே பொருளியல் நோக்கி
பொருட்கலை பொன்னியல் நிலத்தியல் கூர்ந்து
பொருள்நெறி யாய்வே மெய்ப்பொருள் நெறிநிலை
பொருளியல் மெய்ப்பொருள் இயல்நெறி கூட்டும்
தெருளியல் மதியால் சீருணர் வுற்றே
மருளியல் சேரா மாண்புறும் மதியால்
உள்ளுள் ளுணர்வால் உறுகலைத் திறமும்

தெள்ளுறும் சீர்சால் சீர்நெறி யாய்ந்தே
காலமும் காலக் கூறியல் ஆக்கமும்
மூலமும் மூலப் பேறியல் நோக்கமும்
இடம்பொருள் எண்ணி எண்முறை யியலால்
இடத்துறும் ஆக்கம் எண்ணுறும் நோக்கும்
அயரா உழைப்பும் மயர்வறு நோக்கும்
உயர்வுறும் உணர்வும் உட்கலை யியலும்
நோக்குபு நோக்கி நுணுகுவ அணுகி
ஆக்குறும் கலைத்திறன் பொருளியல் நெறிநிலை
பொருளியல் நூலே பொருளுறப் புகலும்
பொருட்கலை கூறும் பெரும்பொருள் மரபாய்
பொருளியல் நாடிப் பொருளியல் ஆய்தல்
தெருளியல மதியோர் சீரறி நுட்பமே (884)

எண்ணமும் முணர்வும் இயங்குறும் ஆற்றல்
எண்ணியல் நிலைகலை நெறிமுறை யோர்ந்து
தண்டமிழ்ச் சிற்றவை தனிநிலைக் கணக்கியல்
ஒண்டமிழ் ஓம்கலை ஓம்நெறி ஓம்மறை
ஒலியுறும் ஒலியும் ஒளியுறும் ஒலியும்
ஒலிஒளி நிலைக்கலை ஒளிஒலி யியலாய்
ஓசை யியற்றிறன் மாத்திசை அளவியல்
ஓசை குறில்நெடில் ஓங்குறும் திறனாய்
அளவியல் நெறியிசை குறியிசை மொழிக்கலை
வளமுறும் மொழித்திறன் கணக்கியல் நெறியாய்
எண்ணெண் கலைத்திறன் இயல்புற நோக்கி
நுண்ணறி வுற்றே நுவலருங் கலைத்திறன்
சிற்றவை யியல்தெரி சீர்நிலை நோக்கும்
முற்றும் காணும் முக்கலை முந்நெறி
தெற்றுறும் செயல்நிலை சீருற் றாய்ந்தே
ஒளிக்கலை நுட்பம் ஓங்குறுந் திட்பம்
வெளியொளி அகவெளி யொளிநிலை ஆய்வால்
எண்ணமும் உணர்வும் எழுச்சி யுறுநிலை
விண்கலை யியல்நெறி விளக்கமுற் றாய்ந்தே
நோக்குறும் நிலைகலை நுண்மதித் திறனால்
ஆக்குறும் அறுபான் நான்கியல் நெறியியல்
நோக்கம் கருதல் நிலையுற் றுணர்தலும்
தேக்கு மாநெறிச் சிற்றவை யியலே (885)

சிற்றவை சிற்பம் உற்றுறும் ஒளியே (886)

ஒளியுணர் நிலையால் வெளியுணர் வோங்கி
அளியுணர் நிலைகலை ஆக்கமுங் கருதி
வளியுணர் திறத்தால் வண்மை உணர்ந்தே
களிநிலை யியற்கலை கருத்துற் றாய்ந்தே
வெளியுணர் திறத்தால் விளம்பல்மா நெறியே (887)

அறிவியற் கலையும் அருளியல் நெறியும்
பொறியியல் நெறியும் தெருளியற் குறியும்
நெறிமுறை தொழிற்கலை பொருளியல் நுட்பமும்
குறிமுறை யுழைப்புறும் குறியுணர் வோர்க்கே (888)

எண்ணம் எழுச்சி கிளர்ச்சி மலர்ச்சி
திண்ணம் உணர்வே சீரறி வுற்றே
அகநோக் குணர்வுறும் ஆண்மையும் ஆற்றலும்
மிகுநோக் கொளிநலம் மெய்யியற் றிறனே (889)

காலமுங் கணக்கும் கலையும் தொழிலும்
மூலமும் பொருளும் முந்நெறி யாற்றலும்
ஐம்பொருள் செம்பொருள் செழும்பொருள் நோக்கி
ஐம்மறை மூலம் ஆய்தல்மா நெறியே (890)

ஐங்கலை நெறியே அருந்தமிழ் நெறியாய்
ஐவினை யியலுறும் அறிவியற் கலையாய்
தொழிலியல் எழிலியல் தாநெறி யோங்கி
தொழிற்கலைப் பயிலியல் மெய்ம்முறை யறிந்தே
உணர்வின் ஆற்றலா லுழைப்புறும் மெய்ந்நெறி (891)

செந்தமிழ் ஐந்திறச் சீர்சால் செந்நெறி
முந்துறுங் கலைநெறித் தீந்தமிழ்ச் சிற்றவை
எண்ணியற் கலையுணர் வியல்நெறித் திறனால்
எண்கலைத் திறனெறி விண்கலை மொழியியல்
ஒளித்தமிழ்க் குறிநிலை வெளித்தமிழ் நெறிநிலை
ஒளிவெளி நுட்பம் ஓங்குறும் மதியுணர்
திறனெறிச் சீர்மைத் திருநிலைத் திறத்தால்
அறமுறும் அவையோர் அகமகிழ் வுணர்வால்
வாழ்த்துறும் மொழியால் வேந்தன் மகிழ்ந்தே

வாழ்த்துறும் உரைமொழி வளமுறக் கேட்டே
அழகுறுந் தீந்தமிழ்க் கழகச் சான்றோர்
பழுகு மாத்தமிழ்ப் பேருரை புகழ
அவைக்களங் கண்டே அகமகிழ்ந் தின்பால்
நவையறுஞ் சிற்ப நற்றமி ழோவியம்
ஐந்திற நூற்பா முந்துறுந் திறத்தால்
வந்தசெந் தமிழொளி ஆடலான் அருளால்
அகமகிழ்ந் தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்
மூலவைந் தியலால் முறைமையிற் றெரிந்தே
கால மியக்கும் ஆடலான் அருளால்
ஐந்தியற் செந்தமி ழழகுற வியற்றினன்
செந்தமிழ்ச் சான்றோர் சீரவை சேர்ந்தே
எட்டெழுத் தியற்றமிழ் ஐந்திறம் அளித்தனன்
நாட்டுணர் வோங்கும் நறுந்தமி ழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றளித்தனன்
திருவுறும் ஆடலான் அருள்நிலை சிறந்தே
ஆன்றவிந் தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே
அயல்நெறி சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே (892)

அண்ட அமைப்பு, பூமிப் பரப்பு, அதில் உள்ள வெற்பு, ஆறு முதலானவை, மின்னொளி இயல், மண்ணியல் (பெருமணல், நுண்மணல்), எரியுறும் வளிநிலை, வளியுறும் எரிநிலை, உணர்வுவகை, ஆள்வினைவகை, விதிமுறைகளை வழுவாது கடைப்பிடிக்கும் நோக்கத்துடன் உருவ ஆக்கம், சிற்றவை இயல் — இவை முதலானவற்றை விளக்கும் மயன்நெறி, அயன்நெறிக் குரிய செயல்வகைகளை செய்யக்கூடிய ஆற்றலையும் ஆண்மையையும் வழங்கும்.

சிற்பத்தே பொருந்தும் ஒளி, சிற்றவையால் அமைவதே.

சிற்றவை நெறியால் ஐம்மறைகளுக்கும் உரிய மூலத்தை அறிய வேண்டும்.

ஆடலான் அருளால், அவையோர் மகிழ, வேந்தன் மகிழ்ந்து கேட்க, கழகச் சான்றோர் புகழ, ஐந்திற நூற்பாவை அளித்தேன்.

பன்னிரு செந்நூல்களின் பிழிவாக, கலம் இயக்கும் ஆடலான் அருளால் ஐந்தியல் தமிழை இருகை குவித்து அளித்தேன்.

சான்றோர் மகிழ்ந்து ஏற்று வாழ்த்துவீர்களாக !

The structural pattern of macrocosm, the vast extense of earth, natural resources such as mountains, rivers of the earth, science of lightning, nature of soil and sand, force of wind associated with fire, force of fire associated with wind, varieties of feelings, systematic execution, structuring the forms in strict adherence to the rules without giving place for violation, science of microbode — all these are explained by the Mayonic order. This order would yield such an efficacy and power of systematic execution as to the perform all the deeds undertaken by the Creator Lord.

The luminous aspect present in a sculpture is, indeed, effected by the microbode.

Through the science of microbode, one should know the very basic and fundamental principle of the five Vedas.

In the assembly of scholars and in the presence of the King, instilling happiness in the minds of scholars and to the cheerful listening of the king, inspiring laudation from the assembly, I present this work named 'Aintiram', as guided by the compassionate grace of Nataraja.

As directed by the grace of Nataraja, who is the wielder of Time, with folded hands, I present this Tamil work Aintiram as the quintessence of 12 great Tamil works (written by me).

Let the scholars accept this work cheerfully and bless me.

✣ ✣ ✣ ✣ ✣